# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பதிமூன்று

## (VOLUME THIRTEEN)

**1954 - 1955**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, பிப்ரவரி, 2023
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/30.05.2025

# புரிந்துகொள்ளல்

(UNDERSTANDING)

மனித மனமானது புரிந்துகொள்ளும் நோக்கத்தில் செயல்படுகிறது. ஒருவர் புரிந்துகொள்ள நினைக்கிறார், ஆனால் தனக்குப் புரியாதபோது அந்த விஷயங்களை மிகத் தீவிரமாக உணர்கிறார். மேல்நிலையை எய்திய துறவி ஒருவர், பிரபஞ்சம் செயல்படும் முறையைப் புரிந்துகொள்கிறார் என்று கூறப்படுகிறது. இருப்பினும் அவர், பரிபூரண நிலையை எய்தும் வரை, கடவுளின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள மாட்டார்; அதாவது, அவர் கடவுளுடன் ஐக்கியமாகி, 'ஷிவாத்மா'வாக (SHIVATMA) மாறுவது வரை, மனப்படிவங்களின் இருளான அந்த நிழல்களில் அலைகிறார். சொல்லப்போனால், உண்மையில் ஒருவர் வனாந்தரத்திலோ அல்லது கற்பனையின் பிரமையிலோ தொலைந்து போகிறார் என்பதை அறியாமல், அறியாமை எனும் இருளில் தவிக்கிறார். தான் தொலைந்துவிட்டதை உணரும் போதுதான் ஒருவர் தேடத் தொடங்குகிறார், அவர் தன் மனதில் தொலைந்து போகாமல் காப்பாற்றப்படுகிறார், ஏனெனில் உலகம் என்பது அவருடைய மனதின் ஒளிப்படமே தவிர வேறொன்றுமில்லை - அது ஒரு மாபெரும் குழப்பமாகத் தோன்றுகிறது. அதன் ஆதாரம் ஆதிகால குளறுபடியே தவிர வேறொன்றுமில்லை.

இந்த வாழ்க்கை வரலாறு, அன்பையும் உண்மைப்பொருளையும் அடையாளப்படுத்துகிறது. அன்பு என்பது மெஹர் பாபாவின் ஒருமித்த உருவின் குறியீடாக அமைகிறது. அவதார புருஷராக அவர் செய்த, வெளிப்படுத்திய அல்லது அறிவித்ததன் உருவில் உண்மைப்பொருள் அடையாளப்படுத்தப்பட்டது. ஆனால் மனித மனதைப் பொறுத்தவரை, அதை இம்மியளவு கூட புரிந்து கொள்ள முடியாது. கருத்துக்கள், வார்த்தைகள், வாக்கியங்கள் போன்றவற்றின் மேற்பரப்பில் மனம் அலைபாய்கிறது. இதயம் மலர்ந்து 'அனைத்து புரிதலையும் கடந்து செல்லும்' ஒன்றை உணரும் போதுதான், உண்மைப்பொருள் அறிந்து கொள்ளப்படுகிறது. ஆனால், அப்போது அந்த அனுபவத்தை விவரிக்க வார்த்தைகள் இல்லை. இறை உணர்தலின் செயல்முறை என்பது, புரிந்து கொள்வதன் செயல்முறை அல்ல, ஆனால் ஒருவரை அவருடைய புரிதலுக்கு அப்பால் அழைத்துச் செல்லும் ஒரு செயல்முறை என்பதை அவர் கண்டுகொள்கிறார். எனவே, ஒருவரின் விமோச்சனம், சரணாகதி ஒன்றில்தான் உள்ளது. மனதிற்கு அப்பாற்பட்ட, புரிந்து கொள்ள முடியாத ஒன்றிற்கு, என்ன வலி எடுத்தாலும், எந்த விலை கொடுத்தேனும் சரணடைவது ஒன்றுதான் இன்றியமையாதது; இறுதியில், மனதைக் கூட தியாகம் செய்ய வேண்டும். மனதின் சாம்ராஜ்யத்தை கடக்க, ஒருவர் அனைத்து புரிதலுக்கும் அப்பால், முன்பு புரிந்துகொண்ட அனைத்தையும் கடந்து செல்ல வேண்டும். இதுதான் தியாகம். இதுதான் அன்பின் சக்தி.

1954 முதல் 1956 வரை உள்ளடங்கும், உங்கள் கைகளில் தவழும் இந்த வரலாற்றுத் தொகுப்பில், முழுக்க முழுக்க பல முக்கிய கருப்பொருட்கள் அடங்கியுள்ளன:

- முதன்மையானது, அவதார புருஷர் தமது அன்பை அனைத்து தரப்பு மக்களுக்கும் தரிசனங்களின் வடிவில் வழங்குவது;
- இறை-பைத்தியம் அல்லது இறை-போதையால் ஆட்கொள்ளப்பட்ட மஸ்துகள், எவ்வளவுதான் தெளிவற்றவர்களாக அல்லது மறைக்கப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் மீதான அளப்பரிய அன்பு;
- காட்கே மஹாராஜ், விஷன்தாஸ், கம்மு பாபா, கிர்பால் ஸிங் போன்ற பொது துறவிகள் மீதான அவரது அதீத அன்பு;
- பாசாங்குத்தனம், 'ஆன்மீகப் போலித்தோற்றம்' மற்றும் 'முறைசாரா வழிபாட்டுத் தலைவர்'களுக்கு எதிரான அவரது தொடர்ச்சியான எச்சரிக்கைகள்;
- உலகில் அவர் வந்ததற்கான அவரது வாய்மொழி அறிவிப்புகள், பிரகடனங்கள்;
- ஏகாந்தவாசத்தில் அவர் புரியும் ஆன்மீக உள்பணி - இரகசிய பணி, அமைதியாகச் செய்யப்படும் பணி.

ஏகாந்தவாசத்தில் மேற்கொள்ளும் பணி அவர் மனிதகுலம் மற்றும் பிரபஞ்சத்தில் வாழும் அனைத்து உயிரினங்களுக்காகவும் செய்யும் இன்றியமையாத பணி. எந்த ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும் 'ஏகாந்தவாசத்தில் செய்யப்படும் பணி' என்றால் என்ன என்பதும் அல்லது காலம், இடம், உடல்கள் ஆகியவற்றின் முழு நோக்கத்தில் அதன் பரிமாணமும் தெரியாது.

மெஹர் பாபாவின் வார்த்தைகளில் (1954 நவம்பர் 20)

**"நான் சொல்வதை நம்புவதும், புரிந்துகொள்வதும் எவருக்கும் மிகவும் கடினம், ஏனெனில் எனது வார்த்தைகளில் பொதிந்துள்ள அர்த்தத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியாது. எனது இறுதிப் பிரகடனத்தைப் புரிந்து கொள்ளாமல் இருப்பது எனது நெருங்கிய மண்டலிக்குக் கூட இயல்பானது. ஆனால் கூட்டங்களின் போது நான் மெஹராபாத்தில் பேசிய அனைத்தையும் நீங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஏனெனில் நான் கூறுவது அனைத்தும் உண்மை; அவை கடவுளின் வார்த்தைகள், மேலும் கூறப்பட்ட அனைத்தும் நான் விவரித்த விதத்தில் துல்லியமாக நடக்க வேண்டும்.**

**"உலகின் நான்கில் மூன்று பாகம் அழிவை சந்திக்கும்" என்று மெஹராபாத்தில் நான் அறிவித்த நாளிலிருந்து…**

- **ஒரு விசித்திரமான நோய் என் உடலைத் தாக்கும்,**
- **நான் அவமானத்தை சந்திப்பேன்,**

- **நான் எனது மௌனத்தைக் கலைத்து, வார்த்தைகளின் வார்த்தையான, ஒரே இறை வார்த்தையை மொழிவேன்; அதில் எனது மகிமை அடங்கியிருக்கும் என்றும்,**
- **இறுதியாக, எனது நட்பைப் புண்படுத்தி துரோகமாக விமர்சிக்கும்போது என் உடலைக் கைவிடுவேன்; என் அன்பர்களும் பிற அனைவரும் எனது வார்த்தைகளை வெவ்வேறு வழிகளில் விளக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.**

**"எனது வார்த்தைகளை ஒருவர் நினைக்கும், உணரும் விதத்தில் விளக்குவதற்கு ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உள்ளது. ஆனால் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன்; நான் ஒரு விஷயத்தைச் சொல்லும்போதெல்லாம், நான் இயல்பாகவே எனது சொந்த 'மொழி'யைப் பயன்படுத்துகிறேன், மேலும் நான் சொல்வதெல்லாம் 'உண்மை'. ஆனால் எனது 'மொழி' என்பது, நான் சொல்வதின் அடிப்படை அர்த்தத்தை எவராலும் புரிந்து கொள்ளவோ அல்லது கிரகிக்கவோ முடியாது. எனவே, நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பும் போது, நான் உங்கள் மொழியையும் ஒரே நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், நான் எனது 'மொழி'யை மட்டும் பயன்படுத்துவதானால் உங்களுக்கு எதுவும் புரியாது."**

மெஹர் பாபாவின் இறுதிப் பிரகடனத்தின் முழுப் பரிமாணத்தையும் விவரிக்க, அறிவுபூர்வமாக முயற்சிப்பது பொருள் விளக்கத்தின் எல்லைக்குள் அடங்கும். பொருள் விளக்கம் என்பது கனவுகளின் அடையாளத்தின் மொழி. மேலும் கனவுகள் மனதின் உணர்வுப்பூர்வமான பிரதிபலிப்பு அல்ல, ஆனால் ஓர் உணர்வற்ற முற்கணிப்பு அல்லது யூகம் - அது எதிர்காலத்தைப் பற்றிய ஆய்வில் ஈடுபடும். ஆழ் மன உணர்வு நிலையில் இருக்கும் துறவி அல்லது தீர்க்கதரிசி மட்டுமே இத்தகைய பொருள் விளக்கங்களை வழங்க முடியும். ஒரு பரிபூரண குருநாதர் மட்டுமே இந்தக் கனவுகளின் அடையாளத்தை புரிந்து கொள்ள முடியும், அது 'கனவுக்குள் கனவு' என்று அழைக்கப்படுகிறது - எதிர்காலத்தில் நடக்க இருப்பதாக அல்லது ஏற்கனவே நடந்ததாக அடையாளப்படுத்தக் கூடியவை. எண்ணற்ற பிரபஞ்சங்களை அழித்து மீண்டும் உருவாக்குவது, எண்ணற்ற வடிவங்களை அழித்து மீண்டும் உருவாக்குவது, எண்ணற்ற அடையாளங்களை அழித்து மீண்டும் உருவாக்குவது, பிரபஞ்சம் எனும் மாயைக்குள் எண்ணற்ற உடல்களின் முடிவிலா ஆசைகளின் கனவுகள் அனைத்தும் 'தெய்வீக கனவு' என்று அழைக்கப்படுகிறது. மெஹர் பாபா ஏகாந்தவாசத்தில் செய்யும் பணி மிகவும் மர்மமானது.

அவரது வார்த்தைகளில் (1955 ஏப்ரல் 10)

**"1955 மார்ச் 22 முதல் கிட்டத்தட்ட ஒரு வாரம் குல்தாபாத்தில் இருந்தேன். அங்கே இரவும் பகலும் நான் எனது பணியில் மிகத் தீவிரமாக மூழ்கியிருந்தேன். என்னுடைய ஆன்மீகப் பணியின் தீவிரத்தன்மை, எனது பௌதீக உடல் மற்றும் மனதில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியது. எனது**

**இறுதிப் பிரகடனத்தில் நான் அறிவித்தவை அனைத்தும் ஒரே தொடர்வரிசையில், அதே தீவிரத்தன்மையுடன், ஆனால் கால அவகாசத்தில் குறிப்பிட்ட மாற்றத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் முடிவு செய்தேன்; எனவே, காலக்கெடுவில் ஏற்படும் மாற்றத்துடன், தீவிரத்தன்மை, நோக்கம், வடிவம் மற்றும் தொடர் நிகழ்வுகளின் அளவு ஆகியவை எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல், விதிக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும்.**

**“இதற்கிடையில், மனிதகுலம் என் இறுதி முடிவின்படி, கடவுளால் நிர்ணயித்ததற்கு இணங்க, நடக்கவிருக்கும் அனைத்திற்கும் சாட்சியாகக் இருக்க வேண்டும். மனிதன், கடவுளை மேலும் மேலும் நேசிக்க வேண்டிய நேரம் இது. அவன் கடவுளுக்காக வாழட்டும், கடவுளுக்காக சாகட்டும். அவனது எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் அனைத்திலும் கடவுள் மீதான அன்பு மட்டுமே மேலோங்க வேண்டும்.”**

பல ஆண்டுகள் கடந்துவிட்டன. நிகழ்வுகள் தொடர்ந்து வரிசையாக வெளிப்படும் போது, அவர் அறிவித்த அனைத்தின் முக்கியத்துவமும் அர்த்தமும் புரிந்து கொள்ளப்படுகின்றன, ஏனெனில் நாம் அதை வெவ்வேறு நிலைகளில் காண்கிறோம். அவரது இறுதிப் பிரகடனம், விளக்கம், உறுதிப்பாடு, முடிவு ஆகியவற்றை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும், அதன் ஆழத்தை சிந்திக்க வேண்டும். அவர் அறிவித்தது நடக்கவில்லையா? நாம் அவருடைய சாட்சிகளாக இருக்கிறோம் அல்லவா?

**லாறன்ஸ் ரைட்டர்**

# நிகழ்வுகளின் காலவரிசை

| | |
|---|---|
| 1954 | • செப்டம்பர் 26, அஹமதுநகர் குஷ்ரு குவார்டர்ஸில் 'தரிசனம்' |
| 1954 | • செப்டம்பர் 29 -30, மெஹராபாத் சிறப்புக் கூட்டம், மெஹர் பாபாவின் இறுதிப் பிரகடனம் (FINAL DECLARATION) |
| 1954 | • அக்டோபர் 5, மெஹராஸாத்திலிருந்து சத்தாரா வருகை<br>• அக்டோபர் 7, எழுத்துப்பலகை பயன்படுத்துவதைக் கைவிடல் |
| 1954 | • அக்டோபர் 16-22, மஸ்த் பயணம் - கோலாப்பூர், பெல்காவ்ம், மைசூர்<br>• நவம்பர் 6 - 7, பண்டர்பூர் தரிசனம் - சத்தாரா வருகை |
| 1954 | • நவம்பர் 8 , இறுதிப் பிரகடனம் - விளக்கம், உறுதிப்பாடு & தீர்மானம்<br>• நவம்பர் 20, சுற்றறிக்கை வெளியீடு |
| 1955 | • 1954 டிசம்பர் 1 - 1955 ஜனவரி 10, நாற்பது நாட்கள் சிறப்புப் பணி<br>• ஜனவரி 20 - 25, குல்தாபாத் ஏகாந்தவாசம் - சத்தாரா வருகை |
| 1955 | • பிப்ரவரி 11, 25, பாபாவின் 61ஆவது பிறந்தநாள் சத்தாராவில் தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது. |
| 1955 | • மார்ச் 21 - 28, குல்தாபாத் பயணம் - மஸ்த் பணி, ஏகாந்தவாசம்<br>• ஏப்ரல் 7, மஹாபலேஷ்வர் - 100 ஏழை உழைப்பாளிகளுடன் பணி |
| 1955 | • ஏப்ரல் 20 முதல் சில நாட்கள் - மெஹர் பாபாவின் சீடர்களின் வட்ட அமைப்பைப் பற்றிய விளக்கம் |
| 1955 | • ஏப்ரல் 23 - 24, ஒரு சிறிய குழுவுடன் (வெளியிலிருந்து அழைக்கப்பட்ட அன்பர்கள்) சந்திப்பு - சுற்றறிக்கை வெளியீடு |
| 1955 | • மே 1 - ஜூலை 31, சிறப்பு ஏகாந்தவாசம், உலகளாவிய ஆன்மீகப் பணி, மஹாபலேஷ்வர் பயணம், மஸ்த் தொடர்பு, உபவாசம். |
| 1955 | • ஆகஸ்ட் 13 - 15, மும்பை, ஆஷியானாவில் தரிசன நிகழ்ச்சி, சத்தாரா வருகை.<br>• செப்டம்பர் 16, மெஹராபாத்தில் ஒரு மாத 'சகவாச நிகழ்ச்சி' குறித்த சந்திப்பு |
| 1955 | • அக்டோபர் 14 -16, பாபா சத்தாராவிலிருந்து பூனா, கணேஷ்கிந்த் தோட்டம், பிந்த்ரா ஹவுஸ், மெஹராஸாத் வருகை |

**1955**
- நவம்பர் **4 - 8,** மெஹராபாத் சகவாசம் - குஜராத்தி

**1955**
- நவம்பர் **12 - 16,** மெஹராபாத் சகவாசம் - தெலுங்கு


**1955**
- நவம்பர் **20 - 24,** மெஹராபாத் சகவாசம் - ஹிந்தி

**1955**
- நவம்பர் **28 -** டிசம்பர் **2,** மெஹராபாத் சகவாசம் - மராட்டி

**1955**
- தொடரும்...


# பொருளடக்கம்

மூன்று வியத்தகு வாரங்கள் - இறுதிப் பிரகடனம் .......... 3
சத்தாரா வருகை ....................................................................... 64
பண்டர்பூர் தரிசனம் ................................................................... 83
விளக்கம், உறுதிப்பாடு & தீர்மானம் ........................................ 93
சத்தாரா ஏகாந்தவாசம் ............................................................ 122
மும்பை & சத்தாரா - தரிசனங்கள் ........................................ 164
மெஹராபாத் சகவாசம் - குஜராத்தி ..................................... 183
மெஹராபாத் சகவாசம் - தெலுங்கு ...................................... 240
மெஹராபாத் சகவாசம் - ஹிந்தி ........................................... 295
மெஹராபாத் சகவாசம் - மராட்டி ......................................... 350



அஹமதுநகர் தரிசனம், 1954 செப்டம்பர் 26

மெஹராபாத் சகவாசம், 1954, செப்டம்பர் 30



# மூன்று வியத்தகு வாரங்கள் - இறுதிப் பிரகடனம்

**(Three Incredible Weeks - Final Declaration)**

1954 செப்டம்பர் 22 புதன்கிழமை காலை 10:30 மணிக்கு, மெஹராபாத் மேல்மலையில் பாபா, மேற்கத்திய அன்பர்களைப் பார்க்க வந்தார். நடந்து வராமல், நேரடியாகக் காரில் வந்தபோது, அவர் சோர்வாக, நலிவுற்று காணப்பட்டார். பாபா, உடனடியாக மேற்கு அறைக்குச் சென்று, இவ்வாறு கூறினார்:

**இன்று விளக்கம் எதுவும் இல்லை, இங்கு வரவும் மனமில்லை. இருந்தாலும், அன்பர்களாகிய உங்களைப் பார்க்க விரும்பினேன், அதனால் நான் வர முடிவு செய்தேன். கூட்டங்களுக்கு முன், நான் மிகையாக சிந்திக்க வேண்டும். எனது சிந்தனை வெறும் சிந்தனை அல்ல; முழு சுமையும் என் மீதுதான்.**

**இரண்டு நாட்கள் சந்திப்பின் போது நீங்கள் அனைவரும் நல்ல ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அன்புள்ள வில், நான் உங்களை எனது பிரதான தேவதூதர் என்று அழைக்கிறேன்; நீங்கள் என்னிடம் அளப்பரிய அன்பும், பக்தியும் கொண்டுள்ளீர்கள், நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்; ஆனால் 'இன்று நான், மிகவும் நன்றாக இருக்கிறேன்' என்று நீங்கள் தினமும் கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.**

**அவர் ஒவ்வோர் இரவும் மிகவும் நன்றாக தூங்குவதாக வில் பேக்கெட்** (WILL BACKETT) **விளக்கினார். பிற அனைவரிடமும் பாபா, "நீங்கள் மிகவும் நன்றாக இருக்கிறீர்கள் என்று கூறுவதையும் என்னால் நம்பமுடியவில்லை" என்று கூறினார்.**

அனைவரும் சிரித்தனர், பாபா தொடர்ந்தார்:

**கடவுளின் பணியில், மாயா எப்பொழுதும் எதிர்ப்பாக இருக்கும் என்று நான் மண்டலியிடம் கூறுவது வழக்கம்; அது அவசியமும் கூட. கடவுளை உணர்ந்து கொள்வதற்கு மாயை தேவைப்படுவது போல, கடவுளின் செயலை எதிர்க்கும் மாயாவின் சக்தி, அவரது பணிக்கு ஆற்றலை வழங்குகிறது. மாயாவின் எதிர்ப்பு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, விளைவும் அவ்வளவு சிறந்ததாக இருக்கும்.**

**செப்டம்பர் 12ஆம் தேதி வெகுஜன தரிசனத்திற்கு முன்னர், அஹமதுநகரில் வரலாறு காணாத மழை பெய்தது. மழை இடைவிடாமல் பெய்ததால், தரிசனத்தைத் தள்ளி வைக்க வேண்டும் என்று ஸரோஷ் என்னிடம் கூறினார். கடவுள் விரும்புவது நடக்கும் என்றேன். காலநிலை மாறியதும், அது பாபாவின் அற்புதம் என்று பலர் நினைத்தனர். அது முற்றிலும் உண்மையல்லாதது! பணிவை வெளிப்படுத்துவதற்காக நான் இதை சொல்லவில்லை; இது உண்மை.**

**நான் மழையைப் பொருட்படுத்தவில்லை என்றேன். கடவுள் மழையை விரும்பலாம், ஆனால் கூட்டம் நடைபெறும். மழை பொழிந்தால் அவர்கள் நனைவார்கள், உடைகளை மாற்ற வேண்டியது வரும், நானும் மாற்ற வேண்டும். 29, 30ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கும் இது போன்ற கூட்டங்கள், முதலும், கடைசியுமான கூட்டங்களாக இருக்கும். இந்தக் கூட்டங்களுக்கான நாள் நெருங்கும் போது, வானத்தில் மேகங்கள் ஒன்றுதிரண்டு இறங்குவது போல், எனது தலையிலும் சுமை அதிகமாகிறது. உங்கள் உடல்நிலை நன்றாகப் பராமரிக்கப்படாவிட்டால் சுமை மேலும் அதிகமாக இருக்கும்.**

பாபா தொடர்ந்து அறிவுரைகளையும் கட்டளைகளையும் வழங்கினார்:

**நான் சில நேரங்களில், தற்செயலாக, தொடர்பின்றி பேசுவது போலத் தோன்றுவது, நான் வேறு இடத்தில் பணிபுரிவதைக் குறிக்கும்.**

**'நான் நலமாக இல்லை, நான் பசியாக இருக்கிறேன், நான் வயதாகிவிட்டேன், நான் இளமையாக இருக்கிறேன்' அல்லது 'நான் பசியாக இல்லை, நான் இந்த உணவை உண்ண மாட்டேன்' என்று நீங்கள் கூறும்போது, 'நான், நான், நான்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறீர்கள். இப்போது, இப்படி நினைத்துப் பாருங்கள்: உங்கள் கைகள் அல்லது கால்கள் துண்டிக்கப்படும்போது, உங்கள் 'நான்' அப்படியே இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்; என்ன நடந்தாலும் நீங்கள் அப்படியே இருக்கிறீர்கள். இதன் அர்த்தம் 'நான்' என்பது என் உடல் அல்ல. அப்படியானால் உடலுடன் உங்களை ஏன் அடையாளப்படுத்த வேண்டும்? இருப்பினும், நாள் முழுதும், 24 மணி நேரமும் நீங்கள் அவ்வாறே செய்கிறீர்கள். 'நான் தாகமாக இருக்கிறேன்' என்று வில் கூறுவதுண்டு. அவர் இப்போது இந்த வயதான காலத்தில், 'நான் மிகவும் நன்றாக இருக்கிறேன்' என்றும் கூறுகிறார். அது உண்மையாக இருந்தால், வில், அதே வரையறுக்கப்பட்ட தனிமனித உடல் என்று அர்த்தம்.**

**'நான்'** (அஹம், THE 'I') **எனும்போது, பொய்யும் போலியுமாக அடையாளம் கண்டுகொள்வது என்று அர்த்தம். நாம் ஏன் இதைச் செய்கிறோம்? நாம் இதைப் புரிந்து கொண்டாலும், நாம் இன்னும் அடையாளம் காண்கிறோம். ஏன்? 'நான்' என்பது உடலோ, உண்பவனோ, உடன்பாடற்றவனோ அல்ல. உணர்வும் அறிவும் வளர்ச்சியடையாததால், யுகம் யுகங்களாக பரமாத்மா** (எல்லையற்ற ஏக இறைவன்) **மாயையில் நிலைகொண்டுள்ளார். மனித உருவில் உணர்வும் அறிவும் வளர்ந்தாலும், யுகம் யுகமாகப் பழகிப்போன பழக்கவழக்கங்களால் மாயையுடன் அடையாளம் கண்டுகொள்கிறார்.**

**ஹஃபீஸ்** (HAFIZ) **கூறுகிறார்: "அறியாமையில் இருக்கும் இந்த பழங்காலப் பழக்கத்திலிருந்து வெளியே வராத வரையில், நீங்கள் ஒருபோதும் சுயத்தை எல்லையற்ற பரமாத்மாவாக உணர முடியாது."**

கடவுளுக்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை என்பது உண்மையாகவே சொல்லப்படுகிறது. இதை சிந்தித்துப் பாருங்கள். அவருக்கு ஆரம்பம் இல்லை என்றால், கடவுளுக்கு முன்னதாக என்ன இருந்தது? பதில் கடவுள். ஆரம்பம் இல்லாத இடத்தை கற்பனையால் எட்ட முடியாது. பதில் கடவுளாக மட்டுமே இருக்க முடியும். கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் என்ன இருக்கும்? கடவுள். எப்போதும் கடவுள். நித்தியத்தில் நேரம் என்று ஒன்று இல்லை என்பதே இதன் அர்த்தம். எதுவும் நடக்கவில்லை, எதுவும் நடக்காது. நேரம் என்ற காரணியே இல்லை. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் இருந்தீர்கள்; இன்று, நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், இதற்குப் பின்னரும் நீங்கள் இருப்பீர்கள். இன்று, நடந்து கொண்டிருப்பவை அனைத்தும் நடக்கவில்லை என்றாலும், இப்போது அவ்வாறு தோன்றவில்லை.

ஒருவருக்கு நித்தியத்தின் அனுபவம் இருக்கும்போது, கடவுள் உளதாயிருக்கிறார் (GOD IS) என்பதை அவர் அறிவார். கடவுள் இருந்தார், இருக்கிறார், இருப்பார் என்று சொல்வது தவறு. எல்லா நித்தியமும் இப்போது இந்தத் தருணத்தில் இருப்பது. எனவே நான் சொல்கிறேன், கடவுள் உளதாயிருக்கிறார் (GOD IS).

**மோனா** (சமீபத்தில் காலமான மால்கம் ஸ்க்லோஸின் - MALCOLM SCHLOSS மனைவி) ஒருமுறை இங்கு உங்களுடன் இருந்தார்; அவர் இப்போது உங்களுடன் இல்லை. அவர் உங்களுடன் ஒருபோதும் இங்கு இருந்ததில்லை என்று அர்த்தம்; அவர் எப்பொழுதும் நித்தியத்தில் இருந்தார். என்னால் கூட இதை வெளிப்படுத்த முடியவில்லை, ஆனால் என்னால் முடிந்தவரை விளக்க முயற்சிக்கிறேன். இது அறிவுக்கு அப்பாற்பட்டது. நேற்று நடந்தது ஒரு தற்காலிக விளைவை உருவாக்கியது; ஆனால் நேற்றைய உண்மையான நிகழ்வு நின்று விட்டது, அதாவது நேற்று எதுவும் நடக்கவில்லை. தற்காலிகமாக நடந்தது போலத் தோன்றச் செய்வது மாயையின் விளைவு. எனவே அது தொடர்கிறது; கடவுளும் மாயையும் இணையாக இயங்குகின்றனர். எல்லாம் நடக்கிறது என்று மாயை கூறுகிறது, எதுவும் நடக்கவில்லை என்று கடவுள் கூறுகிறார்.

என்ன நடந்தாலும், அத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் பொய்யான ‘நான்’ என்ற பிடியில் நீங்கள் இருக்கும்வரை, மாயை உங்களை ஆட்சி செய்கிறது. ஆனால் நீங்கள் உண்மைப்பொருளை (TRUTH) அறிந்தால், அதனுடன் உங்களை அடையாளம் கண்டுகொள்ள மாட்டீர்கள். உலகில் நாம் பார்ப்பது, கேட்பது, அனுபவிப்பது எல்லாம் கடவுள் அல்ல. உங்களால் புரிந்து கொள்ள முடிவதெல்லாம் கடவுள் அல்ல. எதை விளக்கினாலும் அது கடவுள் அல்ல. எதை வெளிப்படுத்தினாலும் அதுவும் கடவுள் அல்ல. கவிஞர் கூறுகிறார்:

அன்பன் குருநாதரிடம் கூறுகிறான்: எல்லாவற்றையும் மறக்கச் செய்யும் ஒன்றை நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தீர்கள். ‘எதற்கும்

**ஆசைப்படாதே' என்ற ஆசையை என்னுள் உருவாக்கினீர்கள். நீங்கள் எனக்கு அந்த 'ஒரே இறை வார்த்தை'யைக் கொடுத்துள்ளீர்கள், அது கூறுகிறது: 'சாதாரண வார்த்தைகளில் ஒன்றும் இல்லை'.**

**மேலும் அன்பன் கூறுகிறான்: ஓ குருநாதரே, நான் கடவுளைத் தேடிக் கொண்டிருந்தேன், அவரை இதுவென்றும் அதுவென்றும் நினைத்தேன். இப்போது, எனது கற்பனையால் கூட நிழலை உருவாக்க முடியாத ஒன்றை நீங்கள் எனக்குக் கொடுத்துள்ளீர்கள்.**

**இவை அனைத்தும் வார்த்தைகள். "சுயமாகிய இறைவன், கடவுள், அளவிறுதியற்ற தன்மை" என்று நீங்கள் கூறும்போது, அவற்றில் எந்த அர்த்தமும் இல்லை. விளக்கங்களை படித்து அல்லது கேட்டு புரிந்து கொள்ள முயல்வது, எல்லா புரிதல்களுக்கும் அப்பாற்பட்ட நமது அன்பிற்குரிய கடவுளை அவமதிப்பதாகும். ஒரே பதில் அன்பு, நேசம். நாம் கடவுளை நேசித்தால், நாம் கடவுளாக மாறுகிறோம். அதற்குப் பிறகு வேறு கேள்வி எதுவும் இல்லை. ஆனால், நாம் முழு மனதுடன், ஆழ் இதயத்திலிருந்து அவரை நேசிக்கும் போது மட்டுமே, கடவுள் நமக்காக உளதாயிருக்கிறார்.**

இசைத் தட்டுகள் ஒலிக்கப்பட்டன. அப்போது, டெக்ஸஸ் மாநிலம், கால்வெஸ்டனை சேர்ந்த டாக்டர் பெஞ்சமின் யூடோ ஹேமனுடன் (DR. BENJAMIN EUDO HAYMAN OF GALVESTON,TEXAS, AGE 64) மெஹர்ஜி வந்தார். பாபா அவரை வரவேற்றார்; அவரைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறி, நன்றாக தூங்கினீர்களா என்று கேட்டார். "**நீங்கள் இங்கே வருவதை நான் விரும்பினேன், அதனால் நீங்கள் வந்துள்ளீர்கள்.**" அவர் பெஞ்சமினை ஓய்வெடுக்கக் கூறினார், மேலும் '**எதிர்பார்த்த எதையும் தவறவிடவில்லை என்பதை அவர் உணர வேண்டும்**' என்று கூறி, "**இனி மேலும் எந்த விளக்கமும் இல்லை**" என்று பாபா முடித்தார்.

**நான் உங்களுடன் கோலி விளையாடுவேன். நான் அளப்பரிய நகைச்சுவை உணர்வும், மனித தன்மை உடையவனாகவும் இருப்பதால், ரிஷிகளும் முனிகளும் கூட என்னை எனது உண்மை நிலையில் அறிவது கடினம். நான் ஒவ்வொரு நிலையிலும் இருக்கிறேன், அந்த நிலைக்கு ஏற்ப செயல்படுகிறேன். ஒரு குழந்தையுடன் நான் ஒரு குழந்தை; உயர்ந்த புனிதர்களுடன் நான் அவர்களில் ஒருவன். என்னுடன் ஒன்றாக இருக்கும் அன்பான கடவுளுடன் கூட, நான் முற்றிலும் இயற்கையாக இருப்பது என் இயல்பு.**

**நான் இப்போது கூறியதைப் புரிந்து கொண்டால், எல்லாவற்றிற்கும் தீர்வு உங்கள் கைகளில்தான் உள்ளது. கடவுள் எல்லையில்லா நேர்மையானவர், நாம் அவரை நேர்மையான முறையில் நேசிக்காவிடில், அவரை அறிந்துகொள்ள முடியாது. புரிதலுக்கு அப்பாற்பட்டவராக இருந்தாலும், இதயம் நிறைந்த அன்பு, புரிந்துகொள்ள முடியாத கடவுளைப்**

**புரிய வைக்கும். நீங்கள் கடவுளை நேசித்தால், அவரோடு ஐக்கியமாக முடியும்; அது ஒன்றே இன்றியமையாதது. நீங்கள் கடவுளை நேசிக்க முடியும்.**

**'நாம் ஒருவரை அல்லது ஒன்றை நேசிக்கும் போதெல்லாம் நாம் உண்மையில் கடவுளை நேசிக்கவில்லையா?'** என்று மால்கம் கேட்டதற்கு பாபா பதிலளித்தார், "**ஆம், நீங்கள் கடவுளை நேசிக்கிறீர்கள் என்பது மட்டும் உங்களுக்குத் தெரியாது. கடவுள் நம் அனைவரின் மூலமாகவும் தம்மை நேசிக்கிறார்.**"

**நான் ஏழு ஏழைகளின் பாதங்களைக் கழுவி, அவர்களை வணங்கியபோது, நான் அதை முழு மனதுடன் செய்தேன். தலைவணங்கி பரிசுகளை வழங்குபவரின் பாகத்தை நான் வெறுமனே வகிக்கவில்லை: நான் அவ்வாறாக மாறினேன். அன்று நீங்கள் என்ன பார்த்தீர்கள்? இந்தத் தலைவணங்குதலும், பரிசுகளை வழங்குவதும் இந்து வழக்கப்படி, பரிபூரணமானவர்களுக்காகச் செய்வதாகும். நான், எனது செயலால் ஏழு பரிபூரணமானவர்களாக பாவித்து, அவர்களின் பக்தனாகவும் சீடனாகவும் மாறினேன். நான் அவர்களுக்குத் தலைவணங்கி பரிசுகளை வழங்கினேன். நானே எல்லாமுமாக இருந்தாலும், நான் இவை அனைத்துமாக மாறினேன்; நான் என்னவாக இருக்கிறேன் என்பதை நான் வெளிப்படுத்த வேண்டும் என்று நேர்மை கோருகிறது.**

கீழ் மெஹராபாத்தில் ஏற்பாடுகளை ஆய்வு செய்த பின்பு, பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

1954 செப்டம்பர் 23 வியாழன் அன்று காலை பாபா மெஹராபாத்திற்கு வந்ததும் பெண்டு, பாதிரி இருவரையும் அவர்களின் பணி தொடர்பாகக் கடிந்துகொண்டார். அதற்குப் பிறகு, காலை 9:30 மணியளவில், அவர் மேல்மலைக்கு நடந்து சென்று, அங்கு அவர் மேற்கத்திய அன்பர்களின் உடல்நிலை குறித்து தனது வழக்கமான வினவல்களைத் தொடர்ந்தார், "**நீங்கள் அனைவரும் 29, 30ஆம் தேதிக்குள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். இப்போதைய காலநிலையில் காற்று தொண்டைக்கு ஆகாது, சற்று வெப்பமான துணிமணிகளைப் பயன்படுத்துங்கள்.**"

அப்போது அவர் கூறியதாவது:

**இன்று முதல் அனைத்து விளக்கங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. நாளை உங்கள் அனைவரையும் கிராமத்திற்கு அழைத்துச் செல்வேன். அரன்காவ்ம் ஏழை மக்களை நான் பெரிதும் நேசிக்கிறேன். நாளை 3:45 மணிக்கு, கிராம மக்கள் ஆரத்தி நிகழ்த்த விரும்புகிறார்கள், நான் அவர்களை அனுமதித்தேன். கிராமம் முழுவதும் கிருமிகளால் நிரம்பியுள்ளது, நான் ஏழைகளில் ஏழையாக இருப்பதால், எல்லாவற்றிலும் பாதுகாப்பாக இருக்கிறேன். நான் கூறுவது போல், உண்மையில் நான் ஏழைதான்: ஒரே நேரத்தில் ஆண்டியும் அரசரும் நானே!**

இது, நான் மௌனம் தொடங்கிய நாளிலிருந்து, பணத்தைத் தொடுவதை நிறுத்தினேன் என்பதை எனக்கு நினைவூட்டுகிறது. நான் பணத்தைத் தொடுவதில்லை, ஆனால் அது வருவதும் போவதுமாக உள்ளது. கிழக்கு மற்றும் மேற்கிலிருந்து வரும் சீடர்கள் பணத்தைத் தருகிறார்கள், ஆனால் நான், மஸ்துகளுக்கும் ஏழைகளுக்கும் சிறப்பான சந்தர்ப்பங்களில் வழங்க மட்டுமே எனது கையால் பணத்தைத் தொடுகிறேன். சில நேரங்களில், நான் தானியங்களை விநியோகித்தேன். ஆனால் முக்கியமான விஷயம் என்னவெனில், பரிசை வழங்குவதற்கு முன்பு, நான் அவர்களின் கால்களைக் கழுவி தலைவணங்க வேண்டும். நான் நேற்று உங்களிடம் கூறியது போல, நான் ஒரு பாத்திரத்தில் நடிப்பது மட்டுமின்றி, அந்தப் பாத்திரமாக மாறிவிடுகிறேன். இறை பைத்தியங்களுக்கும், இறை போதையில் இருப்பவர்களுக்கும் ஒரு மஸ்த் ஆசிரமம், மருந்தகம், மருத்துவமனை, சிறுவர்களுக்கான ஆசிரமம், தொழுநோயாளிகள் அடைக்கலம் என்று பல வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்டதைப் பற்றி கேள்விப்படவோ படிக்கவோ செய்திருப்பீர்கள். நான் சிறுவர்கள், தொழுநோயாளிகள், மஸ்துகள் அனைவரையும் மேற்பார்வையிட்டேன், அவர்களின் துணிமணிகளை துவைத்தேன், அவர்களின் கழிப்பறைகளை சுத்தம் செய்தேன், ஆனால் நான் அவர்களோடு ஒன்றறக் கலந்தேன்.

இந்த கிராமத்து மக்கள் எனக்கு மிகவும் அன்பானவர்கள். அவர்கள் மண் குடிசைகளில் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள். நேற்று ஃபிராங்க் (ஈட்டன்) மற்றும் பென் (ஹேமன்) கிராமத்தை நோக்கிச் செல்வதைக் கண்டதால் நான் இதைச் சொல்கிறேன், மேலும் அவர்கள் அங்குச் செல்ல வேண்டாம் என்று நான் செய்தி அனுப்பினேன். நீங்கள் 29, 30ஆம் தேதிக்கு உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும், ஆனால் இந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள் என்று நினைத்தேன்; அவர்களை ஏன் பார்க்க அனுமதிக்கக்கூடாது? நீராடுவதற்குக் கூட இப்போதெல்லாம் எனக்கு நேரமில்லை; நான் மூன்று மாதங்களாக எனது தலைமுடியைக் கழுவவில்லை. எனக்கு நேரமும் தூக்கமும் இல்லை.

இரண்டு நாள் கூட்டத்திற்காக, இந்தியா மற்றும் பாகிஸ்தானின் அனைத்து பாகங்களிலிருந்தும், என்னை நேசிக்கும் மக்கள் வருகிறார்கள். இது எனது கடைசி சந்திப்பு, 700 வருடங்கள் கழித்து நான் திரும்பி வரும் வரை நீடிக்கும் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். எனவே, உடல் ஆரோக்கியத்துடனும், அனைத்தையும் கேட்கும் மனநிலையிலும் இருங்கள்.

உரையின் தலைப்பை மாற்றி, பாபா தொடர்ந்தார்:

மஹாராஜ், யஷ்வந்த் ராவிடம் 'மேர்வான் பரபிரம்மா' (PARABRAHMA) என்று கூறியிருந்தார், அதாவது அப்பாற்பட்ட நிலையில் இருக்கும் கடவுள் (GOD BEYOND). 'எனவே மேர்வான் சொல்வதைச் செய்யுங்கள்' என்று அவர் கூறினார். நான் கூறியது போல் ஒன்பது மாதங்கள் தூங்கவில்லை. இரவு

ஒரு மணி அல்லது இரண்டு மணி வரை மஹாராஜுடன் இருந்து, பின்னர் அருகிலமைந்த ஒரு சிறிய குடிசைக்குச் சென்றேன், யஷ்வந்த் ராவ் என்னுடன் இருந்தார். அவர் எனது கால்களை அழுத்தி, வெற்றிலைப் பொட்டலங்களைத் தயார் செய்து கொடுத்தார். நான் எதுவும் உண்ணாமல், ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை, வெற்றிலையை வழங்குமாறு கேட்டேன். நான் தூங்காததால் அவராலும் தூங்க இயலவில்லை. ஏழு ஆண்டுகளாக, இந்த மனிதர், அரிதாகவே காணக்கூடிய அன்புடன் எனக்கு சேவை செய்தார். நான் விவரித்த சூழ்நிலை நிலவியபோது, யஷ்வந்த் ராவ் என்னுடன் இருந்து, எனக்கு சேவை செய்ததால், அவர், இந்த பிராமணர்களின் இலக்காக இருந்தார். ஆனால் யஷ்வந்த் மன உறுதியுடன் இருந்து, எனக்குக் கீழ்ப்படிவதன் மூலம் மஹாராஜுக்குக் கீழ்ப்படிந்தார், அதனால் அவர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பெரும் துன்பங்களுக்கு ஆளானார். இப்போது, சூழ்நிலை மிகவும் தெளிவாக உள்ளது. அவர் பழைய நாட்களை எவருக்கும் நினைவூட்டுவதில்லை. அவர் எல்லாவற்றையும் மறந்தவர் போல், அவர்களுக்கு சோளம் (தானியம்) மற்றும் பணம் கொடுத்து உதவுகிறார். யஷ்வந்த் ராவ் இப்போது தனது இதயத்தில் மஹாராஜையும், பாபாவையும் ஒன்றாகக் கொண்டுள்ளார். அங்கு (ஸாக்கோரியில்) நீங்கள் பங்கெடுத்த சிற்றுண்டியும், குளிர்பானமும் அவருடைய உதவியால் வழங்கப்பட்டன.

நாம் அனைவரும் கடவுளைப் போல நேர்மையாகவும், அன்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டியவர்கள், மேலும் கிறிஸ்து எல்லா மகிழ்ச்சிக்கும் ஆதாரமாக இருந்தாலும், அவர் ஒருவரே மனிதகுலத்திற்காக துன்பப்படுகிறார். நீங்கள் என்னை இந்த உடலில் பார்க்கிறீர்கள், ஆனால் ஒவ்வொரு கணமும் நான் சிலுவையில் அறையப்படுகிறேன். இது பாக்கியவான்களுக்கு மட்டுமே தெரியும். எவராலும் துன்பப்பட முடியாத அளவுக்கு நான் துன்பப்படுகிறேன்; நான் அனைவரையும் நேசிப்பதால் துன்பப்படுகிறேன்.

கோதாவரி, உலகில் மிகவும் விரும்பத்தக்க நபர்களில் ஒருவராவார். மேலும், இத்தனை ஆண்டுகளாக அவர் என்ன செய்ய முயன்றார்! கோதாவரி என்னை எப்படி நேசிக்கிறார்! என்ன ஒரு புனிதமான பெண்மணி! அவர் கிருஷ்ணனின் தாயாருக்கு நிகரானவர். சில காலத்திற்கு முன்னர், ஒரு பிரபல ஜோதிடர், மஹாராஜை வணங்க வந்தார். நான் எனது மௌனத்தைக் கலைத்து கொடூரமான மரணத்தை சந்திப்பேன் என மேற்கத்திய மற்றும் பிற நாடுகளுக்கு ஏற்கனவே செய்தி அனுப்பியிருந்தேன். கோதாவரி மாயும் அந்தச் சுற்றறிக்கையைப் பார்த்து மிகுந்த மனச்சோர்வுடன் இருந்தார். நான் பிறந்த தேதி, நேரம் இரண்டும் ஜோதிடரிடம் கொடுக்கப்பட்டபோது, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்கள் எனக்கு மிகவும் கடினமாக இருக்கும் என்றார்.

இந்தத் துன்பத்திலிருந்து விடுபட, பதினைந்து நாட்கள் பாபாவிற்காக, சடங்குகளும் மந்திரங்களும் செய்ய வேண்டும் என்று இந்த ஜோதிடர் கூறினார். இது அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் செய்யப்பட்டது.

**கோயிலின் தலைமை அர்ச்சகரின் கடிதத்தில், இந்த நிகழ்ச்சி நடந்ததாகவும், அவர்கள் விருப்பத்துடனும் அன்புடனும் சடங்குகளைச் செய்து, தங்கள் வழக்கப்படி சாம்பலைப் பாதுகாத்தனர் என்றும் குறிப்பிட்டிருந்தார். அவர்களின் மிகுந்த அன்பின் காரணமாக, அவர்கள் விரும்பியதைச் செய்ய நான் இணக்கம் தெரிவித்தேன்.**

**நடக்க வேண்டிய எதையும் தடுக்க முடியாது. நான் எனது வெளிப்பாடு மற்றும் உடலைத் துறப்பதற்கு முன்னால், மௌனத்தைக் கலைக்க வேண்டும். விதிக்கப்பட்டவை விதிப்படி நடந்தாக வேண்டும். நான் விரும்பியபடி மக்கள் கடவுளை நேசித்தால், எனது பணி நிறைவேறும்.**

"(இதர விஷயங்களை விளக்குவது குறித்து) **வேறு ஏதேனும் வாக்குறுதிகள் இருந்ததா?**" என்று பாபா கேட்டார்.

மால்கம், 'இயற்கைத் தூண்டுதல்களை அடக்குதல் அல்லது கட்டுப்படுத்தல்' குறித்து விளக்குமாறு அவருக்கு நினைவூட்டினார். "**சில வார்த்தைகளில், இதைப் பற்றி நான் உங்களுக்கு விளக்குகிறேன்,**" என்று கூறி பாபா, எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்:

**மாயை என்பது ஒரு நூதன, தற்காலிக நிகழ்வு அல்லது சம்பவம்: அது தோன்றமளிப்பது போல் இல்லாத ஒன்று. இதன் அடிப்படையில் பின்வரும் வாய்மொழிகள் உருவாகி உள்ளன: 'மாயை எண்ணற்ற மாயைகளை உருவாக்குகிறது', மேலும் 'ஒவ்வொரு மாயையும் அதன் அனுபவத்தின் தடங்களை மனப்படிவங்களின் வடிவத்தில் விட்டுச்செல்கிறது' போன்றவை. உதாரணமாக, இரவில் நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள், திடீரென விழித்ததும், உங்கள் கை, படுக்கைக்கு அருகில் எதையோ தொடுகிறது, உடனே அது ஒரு தேள் என்று நினைக்கிறீர்கள். அப்போது நீங்கள், இல்லாத ஒரு தேளை உருவாக்கி, அச்சத்தால் நடுங்கி, படுக்கையிலிருந்து எழுந்து, ஒரு கழியை கையிலெடுத்து, தேள் என்று நினைத்ததை தாக்குகிறீர்கள். அதன் பின்னர், 'அது ஒரு தேள் அல்ல, வேறு ஏதோ என்று நீங்கள் பார்க்கிறீர்கள். தேள் இல்லாத போதிலும், பயந்து, படுக்கையிலிருந்து எழுந்து, தேளைத் தாக்குவது' போன்ற மனப்படிவங்கள் மனதில் பதிந்துவிடுவதால், எப்படியேனும் அந்த மனப்படிவங்களை செலவழித்தாக வேண்டும். இவ்வண்ணம் மாயை தொடர்கிறது, மனப்படிவங்கள் உருவாகி, அவை விரயமாகும் முழு நேரமும் மாயை பாதுகாக்கப்படுகிறது.**

**ஒருமுறை, கீழ் மெஹராபாத்தில், பெரிய குடியிருப்பு ஒன்று இருந்தது; அதையெல்லாம் கலைத்துவிட்டு, சில மைல்களுக்கு அப்பால், டோக்கா என்ற புதிய இடத்திற்குச் சென்றபோது, சில நபர்கள் இங்குத் தங்க வைக்கப்பட்டனர். உள்ளத்தில் நல்லவர், ஆனால் சற்று விரிசல்** (பைத்தியக்காரத்தனம்) **கொண்ட ஈரானி ஒருவர், இரவில் காவல் காக்க வேண்டியிருந்தது. 'எல்லாம் நன்றாக உள்ளது!' என்று இடைவேளையில் கூக்குரல் கொடுக்க வேண்டும்; தான் விழித்திருக்க, அதே வேளையில்**

விழித்திருப்பதை பிறருக்குக் காட்ட வேண்டும். அந்த நேரத்தில், சத்ய மாங் (SATYA MANG) என்று அழைக்கப்படும் மிகவும் பிரபலமான திருடன் ஒருவன் இருந்தான், அவன் பலரைக் கொள்ளையடித்து கொன்று வந்தான். ஒரு நாள் இரவு இந்த சத்ய மாங் இங்கிருந்து அஹமதுநகர் செல்லும் சாலையில் ஒரு மனிதனை கொள்ளையடித்தான்.

அடுத்த நாள் இரவு, இந்த அன்பான ஈரானிக்கு ஏதோ நடந்தது: வழி தவறி இங்கே அலைந்து திரிந்த ஒரு கழுதையை, சத்ய மாங் என்று நினைத்து அனைவரையும் தூக்கத்திலிருந்து எழுப்பியதும், அவர்கள் பதற்றமடைந்தனர். வயதான மண்டலியில் ஒருவர் மயங்கி விழுந்தார். எந்நேரமும் அந்த மனிதன் 'சத்ய மாங் இங்கே இருக்கிறான்!' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருந்தார். சிறிது நேரத்தில் விளக்கு ஏற்றப்பட்டதும், அங்கு எவரும் இல்லாதது தெரியவந்தது; கதவைத் திறந்து பார்த்தபோது அங்கே ஒரு கழுதை தென்பட்டது.

இந்தக் கதையைக் கேட்ட நான், பல்லாண்டுகளுக்கு முன், நான் உருவாக்கிய பிரபஞ்சம் எனும் மாயையைக் கூட இந்த மாயை மிஞ்சிவிடும் என்று நினைத்தேன்! அதற்குப் பிறகு, நான் சத்ய மாங்கை அழைத்தேன்; காவல்துறையினரும் அவனைக் கண்டு அஞ்சியதால், அவன் தனது வலிமையைப் பற்றி மிகவும் பெருமிதம் கொண்டான். அவனது அச்சுறுத்தல்களைப் புகார் செய்ய கிராம மக்கள் அஞ்சினர். "மெஹர் பாபா யார் என எனக்குத் தெரியாது; வெளியே செல்லுங்கள்" என்று அவன் எனது தூதரிடம் கூறினான், மேலும் எனது பெயரை அவமதிக்கவும் செய்தான்.

ஆனால் பின்னர் அவன் என்னிடம் வந்து, மெஹர் பாபா, தனது மார்பில் அமர்ந்திருந்ததைக் கனவில் கண்டதாகக் கூறினான். நான் வழக்கம் போல் அமர்ந்திருந்தேன்; என்னை பார்த்ததும் சத்ய மாங் சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து அழத் தொடங்கினான். அவனை எனது பக்கத்தில் அமைதியாக அமர வைத்தேன். "இன்று முதல் நீ கொள்ளையடிப்பதையும் கொலை செய்வதையும் விட்டுவிட்டு, உன் கும்பலைக் கலைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; உன் வாழ்க்கைக்காக என்னிடம் வந்தால், நான் உனக்குப் பணம் தருகிறேன்," என்று நான் சொன்னேன். அவன் உறுதியளித்தான்.

அன்று முதல் சத்ய மாங் தனது பழைய போக்கைக் கைவிட்டான். ஒருமுறை, தொய்வு ஏற்பட்டது; சில மாதங்களுக்குப் பின்னர், எவரையாவது கொள்ளையடிக்க நினைத்தான். ஒரு கந்துவட்டிக்காரர் தனது வீட்டை காலியாக விட்டுச் சென்ற வேளையில், சத்ய மாங் அதைக் கொள்ளையடிக்க ஆசைப்பட்டான். அவன் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்ததும், வாசலில் நின்றுகொண்டிருந்த பாபாவின் உருவத்தைக் கண்டான். உடனே அவன் என்னிடம் வந்து, "என்னைக் காப்பாற்றினீர்கள்" என்றான். நான் பாரசீகத்திற்குச் சென்றபோது (1929இல்) ஒரு குடும்பத்தை மட்டும் இங்கே

**தங்கவைத்து, மெஹராபாத்தை மேற்பார்வையிட அவனுக்கு அறிவுறுத்தினேன்.**

**சில சமயங்களில் என்னிடம் நிறைய பணம் இருக்கும். இதர நேரங்களில், என்னிடம் கொஞ்சம் இருக்கும் அல்லது எதுவும் இருக்காது. புதுவாழ்வில் உணவுக்காக யாசித்து, மண்டலியையும் யாசிக்க வைத்தேன். சத்ய மாங் கொள்ளையடிப்பதை நிறுத்திவிட்டான். அவன் அருகிலேயே வாழ்ந்து வந்தான், அவனும் கிராமம் கிராமமாக, உணவுக்காக அலைந்து, யாசித்து, குடும்பத்திற்கு வேண்டிய உணவைக் கொண்டு வந்தான்.**

**இது போன்ற இன்னும் பல சம்பவங்கள் நான் நிகழ்த்தும் அற்புதங்களாகக் கூறப்படுகின்றன. இப்போதும் கூட, மக்கள் என்னை எனது பௌதீக உடல் வடிவில் பார்ப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் நான் இதுவரை அற்புதம் எதுவும் நிகழ்த்தவில்லை. அவற்றைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மக்களின் அன்பும் நம்பிக்கையும்தான் அவர்களுக்கு இத்தகைய அனுபவத்தை வழங்குகின்றன.**

**நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, இந்த அவதார காலகட்டத்தில், என்னுடைய முதலும் கடைசியுமான மிகப்பெரிய அற்புதத்தை நிகழ்த்துவேன். பாபா, 'இந்த' அல்லது 'அந்த' அற்புதத்தைச் செய்தார் என்று மக்கள் கூறினால், அந்தக் கதையை, ஒரு காது வழி வாங்கி மறு காது வழி விட்டுவிடுங்கள். அற்புதங்களைப் புரிவதில் எந்த மகத்துவமும் இல்லை. எனது மகத்துவம் பிரபஞ்சத்திற்காக அனுபவிக்கும் துன்பத்தில்தான் உள்ளது, ஏனெனில் நான் அனைவரையும் நேசிக்கிறேன்.**

**இயற்கைத் தூண்டுதல்களை அடக்குவதும், கட்டுப்படுத்துவதும் உங்கள் கைகளில்தான் உள்ளது; மால்கம், நீங்களே அதை உங்களுக்காக உருவாக்குகிறீர்கள். எனவே, நாம் இப்போது கோலி விளையாடுவோம்.**

1954 செப்டம்பர் 24 வெள்ளியன்று, பாபா, மெஹராபாத்திற்குத் திரும்பிச் சென்றார், ஏற்பாடுகளுக்கான பொறுப்பாளர்களுடன் பேசிவிட்டு, காலை 10:00 மணிக்கு அவரை சந்திக்க வந்த மேற்கத்திய அன்பர்களுடன் மேல்மலைக்கு நடந்து சென்றார்.

பாபாவுடன் நடந்து செல்லும் வேளையில், அனைவரும் கிறிஸ்துவுடன் கலிலீ மலைகளின் (HILLS OF GALILEE) மீது நடப்பதாக, டார்வின் ஷாவிற்கு ஓர் அதீத உணர்வு ஏற்பட்டது; மேலும் இயேசுவின் வாசகங்களில் ஒரு பகுதி அவரது மனதில் தோன்றியது: 'நீங்கள் அனைவரும் 'ஆம், ஆம்' என்று சொல்கிறீர்களே தவிர எதுவும் செய்வதில்லை!' அந்த நேரத்தில், பாபா அவரைக் கூர்மையாக உற்று நோக்கினார்.

சந்திப்பு அறையில் பாபா இவ்வாறு எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**இன்று மேலும் விளக்கங்கள் எதுவும் இல்லை. நான் இங்கு உங்களிடம் வருவது இதுவே கடைசி நாள். இன்று நாம் ஒன்றாக**

**அருந்துவோம். இது ‘கடைசி இரவு உணவு’** (LAST SUPPER) **அல்ல, ‘கடைசி பானம்’;** (LAST DRINK) **குறைந்தபட்சம் உங்கள் மத்தியில் எவரும் என்னை விலை பேச மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன், ஆனால் எவரேனும் அந்த வேலையைச் செய்தாக வேண்டும். எனது உடலின் முடிவு கொடூரமாகவே இருக்கும்.**

**நான் ஆதிகாலத்தவன், நான் உடலைத் துறந்த பிறகு, நீங்கள் அனைவரும் என்னை மேலும் மேலும் நேசிப்பீர்கள், எனது உண்மை ரூபத்தில் நீங்கள் அனைவரும் என்னைக் காண்பீர்கள். இன்று, நான் எதையும் விளக்க மாட்டேன்; விளக்குவதற்கென என்ன இருக்கிறது?**

அதற்குப் பிறகு, டார்வினைப் பார்க்காமல், பாபா இவ்வாறு உச்சரித்தார்: **“நீங்கள் அனைவரும் ‘ஆம், ஆம்’ என்று சொல்கிறீர்களே தவிர எதுவும் செய்வதில்லை!”**

டார்வின் ஆச்சரியத்தில் யோசித்தார்: “இந்த ஜீவனை எப்படிப் புரிந்துகொள்வது?”

மீண்டும், டார்வினைப் பார்க்காமல், பாபா சலனமற்ற முகபாவத்துடன் கூறினார், **“எனது வழிகள் மிகவும் ஆழங்காண முடியாதவை, சில நேரங்களில் என்னால் கூட அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது!”**

அவரது புகைப்படங்களைக் குறிப்பிட்டு பாபா கூறினார்:

**இது பாபா அல்ல. எனது உண்மை ரூபத்தின் ஒரு சிறிய காட்சி மட்டும் இருந்தால், நீங்கள் சுயநினைவை இழந்துவிடுவீர்கள். என்னை நேசியுங்கள், நீங்கள் கடவுளை நேசிப்பீர்கள்.**

**மேலும், கடவுள் நேர்மையாக நேசிக்கப்பட வேண்டும். சிறிதளவு பாசாங்குத்தனம் அல்லது நேர்மையின்மையும் உங்களைக் கடவுளிடமிருந்து வெகு தொலைவில் வைத்திருக்கும். நமது பிரியமான கடவுள், இப்போது உங்கள் அனைவரிடமும் இருக்கிறார், நாளை நீங்கள் என்ன நினைப்பீர்கள் என்று யாருக்குத் தெரியும்? அனைத்து அறிவும் அவரே, நாம் அவரை நேர்மையாக நேசிக்கும் போது, அவர் நம்முடன் ஐக்கியமாகிறார்.**

**அன்பர்களே, உங்களுக்கு எனது கடைசி செய்தி, கடவுளை நேசியுங்கள், நான் கடவுளுடன் ஒன்றிணைந்து இருப்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.**

அதைத் தொடர்ந்து, தனிப்பட்ட நேர்காணலுக்காக, குழுவினர் கலைந்து சென்றனர்.

திரும்பி வந்ததும், பாபா ஓர் இளைஞனாக இருக்கும் புகைப்படத்தைப் பார்த்து, **“நான் அவனை மிகவும் நேசிக்கிறேன்”** என்று கூறினார்.

பாபா பழரசம் வரவழைத்து, பின்பு கூறினார்:

**ஏழைகளுக்கு சிறிதளவு உணவும் இல்லை, அஸ்ஸாம் மற்றும் பிற இடங்களில் வாழும் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர். அனைத்திலும் நான் இருக்கிறேன்; நான் கடவுளின் காரணமாக நித்திய பேரின்பத்திலும், இந்த ஆன்மாக்கள் மூலம் நித்திய துன்பத்திலும்**

இருக்கிறேன். நான் மக்களை 'உணவு-மனப்பான்மை' கொண்டவர்களாக மட்டுமல்ல, 'இறை-மனப்பான்மை' கொண்டவர்களாகவும் மாற்ற விரும்புகிறேன். அதனால்தான் இந்தக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளேன்.

நான் எல்லையற்ற மனக்கலக்கத்துடனும், அதே நேரத்தில் அளவிறுதியற்ற அமைதியுடனும் இருக்கிறேன்.

இயேசு, சர்வவல்லமையுள்ள கடவுள், தன்னை உதவியற்றவராகவும், அவமானப்படுத்தப்படவும், சிலுவையில் அறையவும் அனுமதித்தார். அவர் அனைத்தையும் அறிந்திருந்தார், ஏனெனில், நீண்ட காலத்திற்கு முன்பே அதைத் திட்டமிட்டிருந்தார்; மேலும், அனைவருக்காகவும் அவர் அதைச் செய்தார். ஆனால், சரிநுட்பமான விளைவை அடையப்பெற, அவர் உதவியற்ற தன்மையையும், துன்பத்தையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. அவர் மிகவும் சக்திவாய்ந்தவராக இருந்ததால், அவர் அவமானத்தையும் சிலுவையில் அறையப்படுவதையும் அனுபவிக்கவில்லை என்று நினைக்க வேண்டாம், இல்லையேல் அது விரும்பிய விளைவை ஏற்படுத்தியிருக்காது.

நான் கடவுளுடன் ஐக்கியமாக இருப்பதால், என் உடல் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை என்று சிலர் நினைக்கிறார்கள். சில நேரங்களில், அவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் இருக்க, நான் குளிர் அல்லது வெயிலை உணராதது போல நடந்து கொள்ள வேண்டும். யாரோ ஒருவர் கடுமையான சளியால் அவதியுற்றபோது, என் அருகில் வந்து அமர்ந்தார், 'பாபா கடவுள் என்பதால் இது அவரை பாதிக்காது' என்று நினைத்தார். ஆனால் நான் சாதாரண மனித நிலையில் இருக்கிறேன், மனிதனைப் போல நடந்து கொள்ள வேண்டும். அவருடைய சளி, ஜுரத்தைப் பார்த்து நான் எனது முகத்தைத் திரும்பிக் கொண்டால், அவர் வேதனை அடையக்கூடும் என நினைத்து, நானும் எனது மூச்சை அடக்கிக்கொண்டேன்.

முதன்முறையாக நான் லண்டனில் இருந்தபோது (1931), மழைத்தூறலும், கடுங்குளிருமாக இருந்ததால், அனைவரும் வெதுவெதுப்பான ஆடைகளை அணிந்திருந்தனர்; எனது இந்த மெல்லிய ஆடைகளில் (SADRA, சத்ரா) என்னைப் புகைப்படம் எடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்; காலநிலை எனக்கு முக்கியமில்லை என்று அவர்கள் நினைத்ததால், நான் மகிழ்ச்சியாக உணர வேண்டியிருந்தது, அதற்குப் பிறகு நான் குளிர் காக்கும் உடையைக் கொண்டுவரக் கூறினேன். மெஹராபாத் புகலிடங்கள், ஆசிரமங்கள், மருத்துவமனைகள் போன்ற செயல்பாடுகள் முழு வீச்சில் நடந்தபோது, நான் மிகவும் மெலிந்திருந்தேன் என்பது எனது மண்டலிக்குத் தெரியும்; என்னுடைய பழைய மேல் கோட்டை நிராகரித்த போது, நான் சாதாரண உடையில், அனைத்தையும் மேற்பார்வையிடவும், எல்லோருடனும் மகிழ்ச்சியாகவும், எல்லா இடங்களிலும் இருப்பதையும் கச்சிதமான உடல் நலத்துடன் செய்து வந்தேன். இப்போதும், நான் பூரண

**ஆரோக்கியமாக உணர்கிறேன், ஆனால் உங்கள் அனைவரிடமிருந்தும் சளி என்னைப் பற்றிக் கொள்ளும் என்று நினைக்கிறேன்!**

ஒரு பெரிய தட்டில் பழரசம், தனித்தனி கண்ணாடி டம்ளர்களில் நிரப்பப்பட்டு, பாபாவின் முன் வைக்கப்பட்டது. எரச்சைத் தவிர அனைத்து மண்டலியும் அறையை விட்டு வெளியே சென்றனர். மேற்கத்திய அன்பர்கள், பாபா, எரச்சுடன் தனியாக இருந்தனர். கதவு மூடப்பட்டது; முழு நிசப்தம் நிலவியது. பாபா கூறினார், "**ஒரு நிமிடம், கண்களை மூடிக்கொண்டு, நம் அனைவருள்ளும் பரமாத்மாவாக நிலைகொண்டிருக்கும் கடவுளிடம், நாம் நேர்மையாக அவரை நேசிக்க உதவுமாறு கேளுங்கள்**."

அதற்குப் பிறகு, பாபா ஒவ்வொரு டம்ளரிலிருந்தும் ஒரு வாய் அருந்தி, ஒவ்வொரு மேற்கத்திய அன்பரிடமும் பணிவுடன் வழங்கினார். "**மெதுவாக அருந்தவும்**," என்று கூறி, பாபா அனைவருக்கும் வழங்கி முடித்ததும், கதவுகள் திறக்கப்பட்டன, மண்டலி மீண்டும் உள்ளே வந்தனர், அவர்களுக்கும் ஒரு டம்ளர் பழரசம் வழங்கப்பட்டது, ஆனால் பாபா அவற்றைப் பருகவில்லை.

பாபா எழுந்து நின்று, "**இப்போது, நாம் அனைவரும் சமாதி குவிமாடத்திற்குச் செல்வோம்**" என்றார். அவர்கள் பாபாவின் (எதிர்கால) சமாதி, அவரது பெற்றோர், பெண் மண்டலியின் சமாதிகள் மற்றும் டின் கேபின் ஆகியவற்றை பார்வையிட்டனர்; பின்னர், அவர்களுடன் பாபா, ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தார். அதைத் தொடர்ந்து அவர் பணிக்கார சிறுவன் ஒருவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு மலையிலிருந்து கீழே நடந்தார்.

பாபா, மண்டலியுடன் சிறிது நேரம் உரையாடினார். மஹாபலேஷ்வரிலிருந்து ஷஹஸ்த்ரபுத்தே என்பவரும் உதவிக்கு வந்திருந்தார்; மேலும், சகனுடன் செப்டம்பர் 29, 30 கூட்டங்களில் கலந்து கொள்ளும் முழு குழுவிற்கும் தேவையான உணவையும் ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

பெண்டு மீண்டும் பாபாவிடம், மழை வராமல் பார்த்துக்கொள்ளும் விதத்தில் வாக்குறுதி அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதற்காகப் பிரார்த்தனையை மொழிந்த பைதூலுக்கு, '**மழையைத் தடுக்கும் கடமை வழங்கப்பட்டுள்ளது**' என்று பாபா பதிலளித்தார். முழு மனதுடன் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு பைதூலை மீண்டும் வற்புறுத்துவதற்காக, மெஹராஸாத் சென்றதும் அதைப் பற்றி அவருக்கு நினைவூட்டுமாறு பாபா எரச்சிற்கு அறிவுறுத்தினார்.

கிருஷ்ணாஜியைப் பற்றிய சமீபத்திய சம்பவம் ஒன்று பாபாவிடம் எடுத்துரைக்கப்பட்டது. கிருஷ்ணாஜிக்கு, அறிவுறுத்தப்பட்டதற்கு இணங்க பாவ் கல்சூரி இன்னமும் அவருக்கு சேவை செய்து கொண்டிருந்தார், மேலும் இந்தியா முழுவதும் அரிசி, சர்க்கரை போன்ற உணவுப்பொருட்களின் கடுமையான பற்றாக்குறை இருந்தபோதிலும், கிருஷ்ணாஜி ஒவ்வொரு நேர உணவிலும், அதிக அளவு சாதம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியது மட்டுமின்றி, அவர் தனது தேநீரிலும் தாராளமாக சர்க்கரையைப் பயன்படுத்தினார். பாதிரி

இதைக் குறித்து வருத்தமடைந்து, பாவ் கல்சூரியை எதிர்கொண்டார்; ஆனால் பாபா, கிருஷ்ணாஜியின் ஒவ்வொரு விருப்பத்தையும் நிறைவேற்றும்படி கட்டளையிட்டதால், அது குறித்து எதுவும் செய்ய முடியாமல் பாவ் திணறினார்.

ஒரு நாள், மண்டலி பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, கிருஷ்ணாஜி, கோஹியார் சத்தாராவாலாவை (KOHIYAR SATARAWALA) யாரோ ஒருவருக்கு அறிமுகப்படுத்தியதைக் கேட்டு, அவரைப் புகழ்பெற்ற, மும்பை இருதயநோய் நிபுணரான டாக்டர் கோஹியார் என்று தவறாகக் கருதினார். இதை கவனித்த பாவ் கல்சூரி, தனக்கு கிடைத்த வாய்ப்பெனக் கருதி, கோஹியாரிடம் தனிப்பட்ட முறையில் தனது குழப்பத்தை வெளிப்படுத்தினார். கிருஷ்ணாஜியின் வழியை மாற்ற அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்து, அதை, பாதிரி மற்றும் இதர மண்டலிக்குத் தெரிவித்தனர்.

அடுத்த நாள் கிருஷ்ணாஜி, கோஹியாரை அணுகி, “டாக்டர், உங்களை சந்தித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சமீபகாலமாக எனக்கு உடல்நிலை சரியில்லை. எனக்கு கடுமையான தலைவலியும் முழங்கால் வலியும் உள்ளது. என்னை பரிசோதனை செய்ய முடியுமா?” என வினவினார்.

கோஹியார் பதிலளித்தார், “மன்னிக்கவும். நான் இங்கே மெஹராபாத்தில் ஒரு தன்னார்வத் தொண்டனாகப் பணிபுரிய வந்துள்ளேன், உங்களைப் பரிசோதிப்பது சரியாக இருக்காது. ஆசிரமத்தில் பல மருத்துவர்கள் உள்ளனர் - டாக்டர் நீலு, டாக்டர் டான்கின், பாதிரி போன்றவர்கள், அனைவருக்கும் மருத்துவ விஷயங்களில் பொறுப்பாக உள்ளனர்.. அவர்களின் அனுமதியின்றி நான் இதில் தலையிடத் தயங்குகிறேன்.”

எனவே கிருஷ்ணாஜி, பாதிரியை அணுகியபோது, அவர் சோதனை செய்வதற்கு அனுமதிப்பது போல நடித்தார், ஆனால் இதை ஒரு தனிவகையாக மட்டுமே எடுத்துக் கொள்வதாகக் கூறினார்.

கோஹியாருக்குத் தகவல் கிடைத்ததும், அவர் கிருஷ்ணாஜியிடம், “இன்றிரவு எதுவும் உண்ணாதீர்கள், தண்ணீர் கூட அருந்த வேண்டாம். காலையில் நான் உங்களைப் பரிசோதனை செய்வேன்” என்று கூறினார்.

அன்று மாலை, பாவ், கிருஷ்ணாஜியின் உணவுத் தட்டைக் கொண்டு வந்தபோது, கிருஷ்ணாஜி அதைத் திரும்ப எடுத்துச் செல்லுமாறு கூறினார். “ஆனால் நான் உங்களுக்காக ஒரு நல்ல உணவை கொண்டு வந்துள்ளேன்,” பாவ் கூறினார்; “இதோ பாருங்கள், நீங்கள் விரும்பும் சாதம், காய்கறிகள், தாராளமாக… என்னவாயிற்று உங்களுக்கு?” கிருஷ்ணாஜி அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அன்று இரவு எதுவும் உண்ண வேண்டாம் என்று டாக்டர் கோஹியார் அறிவுறுத்தியதாகவும் பதிலளித்தார். “குறைந்த பட்சம் ஒரு கிளாஸ் பால் அருந்துங்கள்” என்று பாவ் கூறினார். ஆனால் கிருஷ்ணாஜி மறுத்துவிட்டார்.

மறுநாள் காலையில் கோஹியார், டாக்டர் டானின் ஸ்டெதஸ்கோப், இரத்த அழுத்த கருவி ஆகியவற்றை இரவல் வாங்கினார். அவருக்கு மருத்துவம் குறித்த முதல் கட்ட ஞானம் கூட கிடையாது, ஆனால் அவர் தனது பங்கை நன்றாகச் செய்தார். கிருஷ்ணாஜிக்கு ஒரு முழு நீள டம்ளர் நிரம்ப தண்ணீரை

அருந்தக் கொடுத்து, அவரை வராண்டாவில் 50 முறை மேலும் கீழும் வேகமாக நடக்குமாறு அறிவுறுத்தி, பின்னர் அவர், அவரைப் பரிசோதனை செய்வது போல நடித்தார், கிருஷ்ணாஜியை மேலும் மூன்று முறை வேகமாக நடக்கச் செய்தார்.

தொடர்ந்து மேற்கொண்ட பரிசோதனைகளுக்குப் பின்னர் (சுத்தியலால் முழங்காலைத் தட்டியும் பார்த்தார்), ஒரு புட்டி நிரம்ப சிறுநீரை சேகரிக்கவும் அறிவுறுத்தினார். கோஹியார் புட்டியை உயர்த்திப் பார்த்து கூச்சலிட்டார், "கடவுளே, இது சர்க்கரையால் நிரம்பியுள்ளது! மிகவும் மோசமானது, இது நீரிழிவு நோயாகக் கூட இருக்கலாம். அரிசி, சர்க்கரை, உருளைக்கிழங்கு உண்ணுவதை நிறுத்துமாறு நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். கூட்டம் நிறைவடைந்ததும், பூனாவில் எனது அலுவலகத்திற்கு வாருங்கள். அப்போது நான் மேலும் சோதனைகளை மேற்கொள்ள முடியும்."

இதையெல்லாம் கேட்ட பாபா, மகிழ்வதற்கு பதிலாக, பாவ் கல்சூரியைக் கடுமையாகக் கண்டித்தார்: "**இது உங்கள் வில்லத்தனம்**! **நீங்கள்தான் கோஹியாரைத் தூண்டிவிட்டீர்கள்**!"

பாபா அனைவரையும் மன்னித்தார். சில நாட்கள், அந்த சூழ்ச்சி வேலை செய்தது. 'டாக்டர் கோஹியார்' நோயைக் கண்டுபிடித்துக் கூறியதன் காரணமாக, கிருஷ்ணாஜி சர்க்கரையின் மீதான தனது ஆர்வத்தைக் கட்டுப்படுத்தினார்; அவரது நிலையை நினைத்து பயந்து, அவர் உணவுப் பொருட்களைக் கோருவதை நிறுத்தினார். ஆனால் பாகிஸ்தானிலிருந்து வந்த மினூ கராஸ் அனைத்தையும் கெடுத்துவிட்டார்! கிருஷ்ணாஜி ஆன்மீக ரீதியில் மேல்நிலையை அடைந்தவர் என்று மினூ தவறாக நம்பினார், மேலும் அவர் ஏமாற்றப்பட்டதாக அவருக்குத் தெரிவித்தார். குழப்பமடைந்த கிருஷ்ணாஜி மீண்டும் தனது பழைய உணவுமுறைக்கு திரும்பியது - பாதிரிக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

மேற்கத்திய அன்பர்கள் பாபாவுடன் தங்களுடைய புகைப்படத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென விருப்பம் தெரிவித்தனர்; எனவே அஹமதுநகரிலிருந்து பைய்யா பாண்டே அழைக்கப்பட்டார். செப்டம்பர் 24ஆம் தேதி மதியம் 2:30 மணியளவில், பாபா மேல்மலைக்குத் திரும்பி வந்த வேளையில் குழுவுடன் சில புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.

மதியம் 2:45 மணியளவில், பாபா மேற்கத்திய அன்பர்களை கீழே மண்டலி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்; மண்டலியும் அழைக்கப்பட்டனர். பாபா, விஷ்ணுவிடம் '**தசாவதாரம்**' (DASAVATAR, பத்து அவதாரங்கள்) என்ற சிறப்பு உரையை வாசிக்கச் சொன்னார். அதன் ஒரு பகுதி பின்வருமாறு:



ஜான் பாஸ் (JOHN BASS), பென் ஹேமன் (BEN HAYMAN), சார்லஸ் பர்டம் (CHARLES PURDOM),
மால்கம் ஸ்க்லோஸ் (MALCOLM SCHLOSS), ஃப்ரெட் விண்டர்ஃபெல்ட் (FRED WINTERFELDT),
ஃபிராங்க் ஹென்ட்ரிக் (FRANK HENDRICK), வில் பேக்கட் (WILL BACKETT),
பில் லெ பாஜ் (BILL LE PAGE), ஃபிரான்சிஸ் பிராபஸோன் (FRANCIS BRABAZON),
ஜான் பாலன்டீன் (JOHN BALLANTYNE), ஜோஸஃப் ஹார்ப் (JOSEPH HARB),
ஃப்ரெட் ஃப்ரே (FRED FREY), லட் டிம்ப்ஃபில் (LUD DIMPFL), டேனா ஃபீல்ட் (DANA FIELD),
ஃப்ரெட் மார்க்ஸ் (FRED MARKS), டார்வின் ஷா (DARWIN SHAW),
வில்லியம் டான்கின் - பின்னால் (WILLIAM DONKIN - BEHIND),
ஃபிலிப் டுபுயி (PHILIPPE DUPUIS), ஃப்ராங்க் ஈட்டன் (FRANK EATON)



துனியில் நெருப்பேற்றல் (LIGHTING THE DHUNI)

**இந்தக் கொடிய, பாவம் நிறைந்த கலியுகத்தில் வரவிருக்கும் கல்கி அவதாரத்தை நான் தலைவணங்குகிறேன்; அவர் யாகம் முதலான அனைத்து மதச் சடங்குகளும் இல்லாதவர்; வெள்ளைக் குதிரையில் சவாரி செய்பவர்; அனைத்தையும் அழிக்கும் தன்மையுடைய உறை வாளைக் கையில் வைத்திருப்பவர்; மேலும் இறை நம்பிக்கையற்ற துன்மார்க்கப் பேர்வழிகளின் அழிவுக்கு வழிவகுப்பவர்.**

இதை வாசித்த பின்னர், ஆந்திராவைச் சேர்ந்த 'பாபா ஸாஸ்திரி' (BABA SASTRI) என்பவர், பகவத் கீதையிலிருந்து சமஸ்கிருத மொழியில் சில ஸ்லோகங்களைப் பாடினார், அதில் கிருஷ்ணர் கூறுகிறார்: "யுகம் யுகமாக, காலங்காலமாக, அறியாமையை அழித்து, சத்தியத்தை நிலைநாட்ட, நான் மனித உருவில் வந்தேன்."

அவர் அதை முடித்ததும் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**நீங்கள் நடுக்கடலில் நீந்துவது போலவும், சுறாக்களால் தாக்கப்படுவதைப் போலவும் பேசுகிறீர்கள்! எல்லாவற்றையும் நான் படைத்துள்ளேன்; இருந்தும், எனக்கு சமஸ்கிருதம் தெரியாது. எனக்குப் புரிந்தது போல நான் தலையை அசைக்கிறேன்**" என்று நகைச்சுவையாகக் கூறினார்.

பாபா, சிதுவிடம் ஒரு கஸலைப் பாடச் சொன்னார், அதை அவர் வேறுவேறு பொருத்தமான வெளிப்பாடுகள் மற்றும் சைகைகளுடன் பாடினார். பாபா அதன் பொருளை மொழிபெயர்த்தார்:

**நேசிப்பவர் நேசிப்பதைப் பற்றி பேச முடியாது,**
**என் அன்பிற்குரியவர் என்னைப் பற்றி**
**கவலைப்படுவதாகத் தெரியவில்லை.**
**என் அன்பிற்குரியவரின் சிகை அழகால் என் இதயம்**
**ஈர்க்கப்பட்டபோது, அது மிக அருகில்**
**இருப்பதாக நான் நினைத்தேன்;**
**ஆனால் இப்போது நான், எனது வாழ்நாள் முழுவதும்**
**கால்களில் கொப்புளங்கள் வரும் வரை நடந்தேன்,**
**இன்னமும் அது என்னிடமிருந்து**
**வெகு தொலைவிலே உள்ளது.**

பாபா மேலும் கூறினார், "**பாபாவும் மிக அருகில் இருக்கிறார்;**
**இருந்தும், இன்னமும் தொலைவில் இருக்கிறார்!**"

சிது அவரது கஸலைத் தொடர்ந்தார், இது இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டது:

**'பிரிவின் உதடுகள் இறை ஐக்கியத்தின்**
**கோப்பையைத் தீண்ட முயன்றபோது,**
**நூற்றுக்கணக்கான இறைப்பிரியர்கள் எரிக்கப்பட்டனர்!'**

இந்த வரியைப் பாடியபோது, பாபா கைகளைத் தட்டினார்.

மாலை சுமார் 4:00 மணியளவில் பாபா, அரன்காவ்ம் கிராமத்து அன்பர்கள் கூடியிருந்த துனிக்கு, குழுவை அழைத்துச் சென்றார்; சிது சந்தன குச்சிகளைத் தயார் செய்து, குவியல் குவியல்களாக, நெய்யுடன் வைத்திருந்தார். பாபா துனியை ஏற்றிய வேளையில் கிராம மக்கள், ஆரத்தியை நிகழ்த்தி, அவருக்கு மாலை அணிவித்தனர். ஒரு முதியவர் மேடையில் ஏறி யானைக் கொம்பைக் கையிலேந்தி ஊதினார்.

பாடல்கள் பாடி, நடனமாடி கிராம மக்கள் பாபாவை ஊர்வலமாக கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர். 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற முழக்கம் வழி முழுவதும் எதிரொலித்தது. சாலையோரம் காத்திருந்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பாபாவிடம் விரைந்து வந்து, அவரது பாதங்களைத் தொட்டு, காலடியில் இருந்த தூசியைத் தங்கள் நெற்றியில் பூசினர்.

பாபா அரன்காவ்ம் கிராமத்தில் அனைத்து இல்லங்களுக்கும் சென்றார், அங்கு அவரது ஆரத்தியை நிகழ்த்தி, ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டது. அவர் உண்மையில் பூக்களுக்குள் முழுவதுமாகப் புதைக்கப்பட்டார்; கடுமையான பிற்பகல் வெப்பத்தையும் பொருட்படுத்தாமல் அவற்றை கழுத்திலேயே அணிந்திருந்தார். 'அன்று, பாபா கிராமவாசிகள் மீது தனது அன்பைப் பொழிந்தார்,' காலம் இவ்வாறு கருத்துரைத்தது, 'அது அவர்களின் ஒவ்வோர் அம்சங்களிலும், அவர்களின் கண்களிலும் பிரதிபலித்தது. நதிகள் ஒன்றிணைந்து, பெருங்கடலை முத்தமிட்டு, பாடி, நடனமாடியபடி தலைவணங்கியது!'

ஆண்கள் சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்கினர், பெண்கள் தங்கள் பச்சிளம் குழந்தைகளை அவரது பாதங்களில் வைத்து, பாபா அவர்களை முத்தமிடும் உயரத்திற்கு எழுப்பினர். மேற்கத்திய அன்பர்களுக்கு இது, மேலும் ஓர் அசாதாரண காட்சியாக இருந்தது. அன்று காலை பாபா அவர்களுக்கு 'கடைசி பானம்' (LAST DRINK) கொடுப்பதாகக் கூறினார், இப்போது இயேசு மீண்டும் ஒரு கலிலீய கிராமத்தின் (GALILEAN VILLAGE) வழியாக நடந்து செல்வது போலத் தோன்றியது.

அரன்காவ்ம் கிராமத்தின் நடை பாதைகள் பொதுவாக தூசி நிறைந்ததாக இருந்தது, ஆனால் மக்கள் சுற்றிலும் தண்ணீரைத் தெளித்து, குறுகிய, வளைந்து நெளிந்த பாதைகளை சுத்தமாக வைத்திருந்தனர். பாபா ஊர்வலத்தின் முன்னணியில் நடந்து கொண்டிருந்தபோது, திடீரென நின்றார். என்ன காரணம் என்பதை எவராலும் புரிந்துகொள்ள முடியாத நிலையில், பின்னால் ஒரு பெண்மணி, கையில் மாலையுடன் முன்னோக்கி ஓடி வந்ததைக் காண நேர்ந்தது. பாபாவிற்குத் தெரியாதது எதுவுமில்லை! அவருடைய கண்கள் முழுப் பிரபஞ்சத்தையும் உன்னிப்பாக ஆராயும்போது, ஓர் ஏழைப் பெண்மணியின் அன்பை மட்டும் அவர் எப்படித் தவறவிட முடியும்?

குழு, ஒரு காவல்துறையினரின் வீட்டு வளாகத்திற்குள் நுழைந்தது, அங்கு மூன்று சிறுமிகள் நடனமாடினர். பாபா சுமார் 200 கிராமத்து மக்களுக்குப் பிரசாதம் வழங்கினார், அவர்களில் பெரும்பாலோர் ஹஸ்ரத் பாபாஜான் உயர்நிலைப் பள்ளியில் பயின்றவர்கள். இந்தக் காலகட்டத்தில், அவர்களில் பலர்

கூட்டங்களுக்கு தங்கள் சேவைகளை வழங்கும் நோக்கத்தில், தத்தமது வேலைகளிலிருந்து விடுப்பு பெற்று, ஏறக்குறைய ஒரு மாதமாக மெஹராபாத்தில் பணியாற்றி வந்தனர். மண்டலியின் உணவை லாலா தயார் செய்து கொண்டிருந்தார், பாபாவின் உணவைத் தயாரிக்க பாபு காம்ப்ளே (BABU KAMBLE) நியமிக்கப்பட்டார். பாப்பு மிஸ்த்ரி (BAPU MISTRI, ஒரு தச்சர்) வெளி நடவடிக்கைகளில் கண்ணும் கருத்துமாக இருந்தார், மேலும் மாமு (MAMU), கஃபூர் (GAFOOR) போன்ற பலர் தங்களால் இயன்ற சேவைகளை வழங்கினர்.

பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில், தீண்டத்தகாதவர்களைக் குறித்து, பாபா குறிப்பிட்டார், "**இந்த ஏழைகள் பொதுவாக சமூகத்தின் இதர மக்களிடையே நடமாடுவது அனுமதிக்கப்படுவதில்லை**."

இதைப் பார்த்து ஜோஸஃப் ஹார்ப், "அவர்கள் இப்போது சமூகத்தின் சிறந்த சூழ்நிலையில் (பாபாவின் சகவாசத்தில்) நடமாடுகிறார்கள் என எனக்குத் தோன்றுகிறது!" என்றார்.

காவல்துறையினரின் வளாகத்திலிருந்து, பாபா குடும்ப குவாட்டர்ஸுக்கு வந்தார். மேற்கத்திய அன்பர்கள் மேல்மலையில் தங்கியிருந்த வேளையில், கைக்கோபாத்தின் குடும்பமும், மன்ஸாரியும், இங்குத் தற்காலிகமாக வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்திய பின்பு, ஜங்க்ளே மாஸ்டர், மற்றும் பல ஆண்டுகளாக மெஹராபாத்தில் இரவுக் காவலராக பணிபுரிந்த ஜமாதாரின் குடியிருப்புகளுக்கும் பாபா விஜயம் செய்து, அதே வளாகத்தின் அருகில் வாழ்ந்து வந்த வாலுவையும் பார்த்தார்.

மாலை 6:00 மணிக்கு பாபா மேற்கத்திய அன்பர்களை மீண்டும் மெஹராபாத்திற்கு அனுப்பிய பின்பு, சில மண்டலியுடன் அவர் கிராமத்திற்கு அருகிலமைந்த சிறிய காசநோய் சுகாதார நிலையத்திற்குச் சென்றார். அங்கு செவிலியராக பணிபுரிந்த, பாபாவின் பக்தர்களில் ஒருவரான கம்லாபாய் புஸல்கரின் (KAMLABAI PUSALKAR) அழைப்பை ஏற்று அவர் விஜயம் செய்தார். மாருதி பாட்டீலின் மகள் தாராபாய் தல்வியும் (TARABAI DALVI) அங்கு பணிபுரிந்தார். பாபா அனைத்து நோயாளிகளையும் சந்தித்தார்.

மண்டலியின் இருப்பிடத்திற்குத் திரும்பிய பிறகு, பாபா மேற்கத்திய அன்பர்களுக்கு மலேரியா நோய் தடுக்கும் வகையில், தூங்கச் செல்வதற்கு முன்னர் உட்கொள்ள இரண்டு அனாசின் (ANACIN) மற்றும் குவனீன் (QUININE) மாத்திரைகளைக் கொடுத்தார். ஒவ்வொருவரையும் தழுவி, பாபா ஏழு மணிக்கு மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

செப்டம்பர் 12ஆம் தேதி 'வாடியா பார்க்' (WADIA PARK) விழாவில் கலந்து கொள்ள முடியாத அஹமதுநகர் மற்றும் சுற்றுவட்டாரத்தில் வாழ்ந்த மக்களுக்கு தரிசனம் வழங்க பாபா முடிவு செய்திருந்தார். பென் ஹேமன், ஃபிராங்க் ஹென்ட்ரிக் இருவரும், காலதாமதமாக வந்ததால், வாடியா பார்க் நிகழ்ச்சியைத்

தவறவிட்டவர்கள் என்ற காரணத்தைப் பயன்படுத்தி, தரிசன நிகழ்ச்சியை நடத்த பாபா ஒப்புக்கொண்டார். குஷ்ரு குவார்டர்ஸில் ஒரு மேடை எழுப்பப்பட்டது; மேலும், குல்மாய் தனது இல்லத்தில் விழா நடைபெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்தார். இது 'சிறிய தரிசனம்' என்று அழைக்கப்பட்டது.

1954 செப்டம்பர் 26 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிக்காக, பாபா மதியம் 2:00 மணிக்கு அஹமதுநகர் வந்தார். ஆசிரமம் ஒன்றின் தலைவரான மலபாரைச் சேர்ந்த டாக்டர் பி. நடராஜன் (DR. P. NATARAJAN OF MALABAR), அவரை பின்பற்றும் ஜான் ஸ்பியர்ஸ் (JOHN SPIERS) என்பவருடன் கலந்துகொண்டார். ஆதியின் வளாகத்தில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து, பாபா, நடராஜனுடன் பேசிக்கொண்டிருந்தார். அவர்களின் உரையாடலின் போது பாபா குறிப்பிட்டார், "**பலர் மத்தியில் தனிமையாக இருப்பதும், தனிமையில் இருக்கும் போது பலரால் சூழப்படுவதும் எனது அனுபவம். நான் எப்பொழுதும் தனிமையாகவும், பலர் மத்தியிலும் ஒரே நேரத்தில் இருக்கிறேன்.**"

பிற்பகல் மூன்று மணிக்கு தரிசனம் தொடங்கியது. ஆண், பெண், குழந்தைகள் என தனித்தனி வரிசையாக பாபா தரிசனம் அளித்து, பிரசாதம் வழங்கத் தொடங்கிய வேளையில், ருஸ்தம் காக்காவும் அவரது மனைவி ஸில்லா காக்குவும் பாடல்களைப் பாடினர். பிற்பகல் 3:30 மணியளவில் மேற்கத்திய அன்பர்கள் வந்தபோது, பாபா அவர்களைத் தழுவி, பென் ஹேமன், ஃபிராங்க் ஹென்ட்ரிக், சார்லஸ் பர்டம் ஆகியோரை மேடையில் தமதருகில் அமர வைத்தார். டாக்டர் நடராஜன், ஸ்பியர்ஸ் ஆகியோரும் அவருக்கு அருகில் அமர்ந்தனர். பாபா, "**இந்தத் தனிப்பட்ட தொடர்புடன் எந்த விளக்கங்கள் மற்றும் சொற்பொழிவுகளை ஒப்பிட முடியாது. எல்லாவற்றிலும், எல்லோரிலும் நான் இருக்கிறேன் என்று உணர்கிறேன். பாபாவை வணங்குவதே பாபாதான்**" என்று தெரிவித்தார்.

கூடியிருந்தவர்களில் பலர் அவரை வணங்கினர். சிலர் மாலைகளை பாபாவின் கரத்தில் வைத்தனர். சிலர் பணத்தை கொண்டு வந்தாலும், அவர்கள் அதை அவரது காலடியில் விட்டுச்செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஓர் ஏழைப் பெண்மணி, பாபாவின் இடது பாதத்தில் ஒரு நாணயத்தை வைத்தபோது, பாபா சிறிது நேரம் அதை அங்கேயே விட்டுவிட, பின்னர் அவரது கால் நகர்ந்த வேளையில், நாணயம் கீழே விழுந்தது. அவர் அதை ஜல்லிக்கற்களால் மூடி, அந்த இடத்தையே வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

"**நான் அவர்கள் அனைவரையும் நேசிக்கிறேன்,**" என்று அவர் மேற்கத்திய அன்பர்களிடம் எடுத்துரைத்தார், "**பெரியவர், சிறியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வந்தர், ஏழை - அனைவரும்!**" எப்போதேனும் குனிந்து ஒரு சிறிய கல்லை எடுத்து, மேற்கத்திய அன்பர்களில் ஒருவரை நோக்கி எறிந்தார். மேலும், "**என்னை ஒருவர் யார் ஒருவராக எடுத்துக்கொண்டாலும் அவர் நானே**" என்று அவர்களிடம் கூறினார்.



**குஷ்ரு குவாட்டர்ஸ், 26 செப்டம்பர் 1954, ஃப்ரெட் மார்க்ஸ்** (**கீழ் வலது புறம்**)
(KHUSHRU QUARTERS, 26 SEPTEMBER 1954, FRED MARKS – LOWER RIGHT)

அன்று ஏறக்குறைய 7,000 பேர் கூடியிருந்தனர், ஆனால் ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா, ஸட்டா குடும்பம், வாமன் படாலே, பகீரத்-கோகிலா திவாரி, ஆதியின் சகோதரிகள் பிரோஜா, டாலி, ருஸ்தம் காக்காவின் குடும்பம், காக்கா சிஞ்சோர்கர், பண்டோபா, டாக்கே, ஆகியோருக்கு பாபா அவரது தனிப்பட்ட தொடர்பை வழங்கியதால் அங்கிருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்க நேரம் இல்லாமலாயிற்று.

மூன்று மணி நேர தரிசன நிகழ்ச்சிக்குப் பின்னர், ஆறு மணிக்கு, ஸரோஷ் மேலும் அரை மணி நேரம் நீட்டிக்குமாறு முன்வைத்த வேண்டுகோளையும் மீறி, பாபா, ஆதியின் காரின் மேல் ஏறி, வரிசையில் காத்திருந்தவர்களை நோக்கி கை அசைத்து, மெதுவாக வளாகத்திலிருந்து வெளியே சென்று, தமது இருக்கையில் அமர்ந்து மெஹராஸாத் திரும்பினார். குஷ்ரு குவார்ட்டர்ஸ், 'ஸென்டி கேட்' (ZENDI GATE) என்று அழைக்கப்படும் நகரின் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. இந்த விழாவின் போது, ஏராளமான இஸ்லாமியர்கள், பார்சிகள் மற்றும் இந்துக்களும் கலந்துகொண்டனர். மெஹர் பாபாவின் அன்பு அனைத்து மனிதகுலத்தின் மீதும் இருந்ததால், சாதி, சமய வேறுபாடின்றி அனைவரும் அதில் சமமாகப் பங்கெடுத்தனர்.

அடுத்த நாள் செப்டம்பர் 27, டாக்டர். நடராஜன், ஸ்பியர்ஸ் இருவரும் மெஹராபாத் சென்ற வேளையில், பாதிரி, ஆதி சீனியர் மற்றும் கிருஷ்ணா அவர்களுக்கு அனைத்து இடங்களையும் காண்பித்தனர். கூட்டங்கள் நிறைவடையும் வரை, பாபா மெஹராபாத்திற்கு வருவதாகத் திட்டமில்லை, ஆனால் அவர் எதிர்பாராதவிதமாக அன்று காலை வந்து, மேற்கத்திய அன்பர்களிடம் கூறினார், "**எனக்கு வேறு பல விஷயங்கள் இருப்பதால் நான் இங்கு வருவதாக இல்லை, ஆனால் பெண் மண்டலி உங்களுக்காக வழங்கிய பரிசை, நான் எனது கைகளால் உங்களுக்குக் கொடுக்கவும், நான் கையெழுத்திட்ட எனது புகைப்படங்களை உங்களுக்கு வழங்கவும் விரும்பினேன்.**"

ஜப்பானியர் ஹிட்டாக்கா கொல்கத்தாவிலிருந்து திரும்பி வந்தவரிடம், பாபா, **அன்று நள்ளிரவு முதல் 28ஆம் தேதி மாலை வரை மௌனமாக இருக்கக் கூறி, பாபாவை மட்டும் நினைவில்கொண்டு அவருடைய செய்திகளைப் படிக்குமாறும்** கட்டளையிட்டார்.

மறுநாள் பாபா, மெஹராபாத்திற்கு வருவதாகத் திட்டமில்லை, மேலும் மேற்கத்திய அன்பர்களை மீண்டும் தனித்தனியாக சந்திக்க அவருக்கு நேரம் இராது என்பதாலும், இது ஒரு வகையில் அவர்களிடமிருந்து விடைபெறுவதாகும்: "**நீங்கள் சந்திக்கும், பார்க்கும் ஒவ்வொருவருக்கும், எனது அன்பை அள்ளி வழங்குங்கள்; அதுவே, அடையப் பெறுவதற்கு உகந்த ஒரே பொருள்**" என்று அவர் கூறினார்.

ஹிட்டாக்காவிடம் பாபா கூறினார், “**ஜப்பானிலும் பிற இடங்களிலும் எனது பணியைப் பரப்புவதில், எனது முக்கியப் பணியாளர்களில் ஒருவராக நீங்கள் ஆகலாம்; ஆனால் நீங்கள் முதலில் என்னை உள்வாங்கிக் கொண்டு, என்னை நேசிக்கிறீர்கள் என்பதை உணர வேண்டும். நமக்குள் நாமே உணராததை, பிறருக்குச் சொல்வது பாசாங்குத்தனம். எனவே முதலில் இதை உணருங்கள், பின்னர் உறுதியான நம்பிக்கையுடன் பேசுங்கள்; நான் உங்களுக்கு உதவுவேன், ஏனெனில் நான் உங்களில் இருக்கிறேன். கடந்த ஏழு இரவுகளாக எனக்கு ஓய்வு இல்லை, ஆனால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.**”

பாபா தனது அன்பர்களுடன் இறுதியாக ஒரு முறை, மெஹர் ரிட்ரீட்டின் மேற்கு அறையில் அமர்ந்திருந்தபோது, ’இனிமேல் இசைக்கு எந்தத் தேவையும் இல்லை’ என்று டார்வின் ஷா பின்னர் எழுதினார். ‘இனி சொற்பொழிவுகள் அல்லது வேறு எதுவும் தேவையில்லை, ஆனால் அன்பான பாபாவை அருகில் அமர்ந்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்’ என்றதும், பாபா அவர்களை அனுமதித்தார்.

டார்வின் குருநாதருடன் இருந்த கடைசி தருணங்களை விவரித்தார்:

பாபா ஓர் அழகான மலர் போல் அமர்ந்திருந்தார். அவரிடமிருந்து அன்பின் அலைகள் பாய்ந்தன. அந்த அறை அன்பின் சரணாலயமாக மாறியது. ஜன்னல் வழியாக சுவருக்கு மேலே காற்று பெருமூச்சு விட்ட ஓசை கேட்டது. பாபா சிரித்துக்கொண்டே அதைச் சுட்டிக் காட்டினார். நாங்கள் தலையசைத்தோம். அந்த அமைதியான நேரத்தின் ஆனந்தத்தை எவரும் கலைக்க விரும்பவில்லை. நாங்கள் அமைதியாக அங்கேயே அமர்ந்தோம். பாபாவின் அழகு ஈர்க்கக் கூடியதாக இருந்தது. என்னைப் பொறுத்தவரை, அவருடைய அழகான முகத்திலிருந்து எனது கண்களை விலக்க முடியவில்லை. நான் அவரைப் பார்த்தபோது, அவரது முகத்திலிருந்து மூடு திரை விலக ஆரம்பித்தது போன்ற ஒரு சந்தர்ப்பமாக அது தோன்றியது. மிகவும் அழகாக, விவரிக்க முடியாத அளவுக்கு அற்புதமாக இருந்தது. தூய தெய்வீக அன்பாக இருந்த காதல், உலகளாவிய, வரம்பற்ற, அளவற்ற அன்பாக மாறியது. தூய, இனிமையான, அழகான, காலத்தால் அழியாத, அன்பிற்கு அப்பால் அளவிறுதியற்றது வேறு எதுவும் இல்லை. பாபா, நம்மை ஆழமாகத் தம் உள்ளத்தில் ஈர்த்துக் கொண்டிருந்தார். நாங்கள் முற்றிலும் கரைந்து போனோம். அது மிகவும் பெருமைக்குரியதாக இருந்தது.

அப்போது பாபா, அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று வெவ்வேறு நபர்களிடம் கேட்டபோது, டார்வின் பதிலளித்தார், “உங்களைத்தான் பாபா. நீங்கள் அன்பின் மொத்த ரூபம்.”

பாபா ஒவ்வொருவரையும் அரவணைத்துக் கொண்டார். ஸவக் கொத்வால், டார்வின் இருவரையும் தவிர, பிற அனைவரும் வெளியே சென்றனர், அவர்கள் நகர முடியாத அளவுக்கு திகைப்பில் ஆழ்ந்து, இறை போதையில் மூழ்கி இருந்தனர்!

பெண்டு, பாதிரி, விஷ்ணு ஆகியோருக்கு சில அறிவுரைகளை வழங்கிய பிறகு, பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டார்.

மெஹராபாத் அதன் அனைத்து மகிமையிலும் மலர்ந்தது. பெரிய பந்தல்கள் எழுப்பப்பட்டு தற்காலிக மின் இணைப்புகள் பொருத்தப்பட்டன, குளியலறைகள் மற்றும் கழிப்பறைகள் மேம்படுத்தப்பட்டன, அனைத்து சமையல் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. விருந்தினர்கள் உண்ணுவதற்காக பெண்டு மேசை, நாற்காலிகளையும் வரிசைப்படுத்தி வைத்திருந்தார். “மெஹராபாத் சொர்க்கத்தை விஞ்சியது போல் இருந்தது!” காலம் கண்டுகொண்டது. “சொர்க்கத்தில் பேரின்பம் ஒன்றுதான் நிலவுகிறது, அதே வேளையில், மெஹராபாத்தில் பேரின்பமும், தெய்வீக மகிழ்ச்சியும் கலந்திருந்தன. சொர்க்கத்தில், இறை அன்பு பாய்ந்து ஓடுவதில்லை; ஆனால் மெஹராபாத்தில், ஒவ்வோர் அணுவும் தெய்வீக மதுபானத்தால் நிரம்பி வழிந்தது. ஒப்பீட்டளவில் சொர்க்கம் எங்கே உள்ளது? சொர்க்கம் மாயையின் ஓர் அங்கமாக உருவானது; மெஹராபாத், மாய உலகைக் கடந்து செல்லும் கடவுளின் விளையாட்டு மைதானமாக இருந்தது!”

செப்டம்பர் மாத கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டவர்கள் 28ஆம் தேதி வரவிருந்தனர், மேலும் அவர்களை ரயில் மற்றும் பேருந்து நிலையங்களிலிருந்து அழைத்து வருவதற்காக பெண்டு பேருந்துகள், சரக்கு வாகனங்களை ஏற்பாடு செய்திருந்தார். இருப்பினும், பாபா தமது லீலையை வெளிப்படுத்தாமல் இல்லை; செப்டம்பர் 27ஆம் தேதி மாலை முதல், இடியும் மின்னலும் வானத்தை நிரப்பியது. அந்த மாதத்தில் அடிக்கடி மேகமூட்டமாக இருந்ததால், இந்த வானிலை மாற்றம் குறித்து ஏற்பாட்டுக் குழுவினர் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் பலத்த மழை பெய்யத் தொடங்கியது, கவனமாக ஒருங்கிணைக்கப்பட்ட அனைத்து ஏற்பாடுகளும் வீணாகிவிட்டன. எங்குப் பார்த்தாலும் சேறும் சகதியுமாக இருந்தது. குறைந்தபட்சம் பெண்டு தூங்குவதற்கு கட்டில்கள், சாப்பாட்டு மேசைகள், நாற்காலிகள் மற்றும் கூடாரங்களுக்கு மேல் தகர கூரைகளை அமைப்பதற்கான தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்தார், அதற்காக விருந்தினர்கள் அனைவரும் நன்றியுள்ளவர்களாக இருந்தனர்.

கூட்டத்திற்கான கூடாரம் பிரதான சாலையை ஒட்டி, இரயில் தண்டவாளத்திற்கு அருகில் (சில ஆண்டுகளுக்கு முன்பு சாய் தர்பார் இருந்த இடத்தில்) எழுப்பப்பட்டிருந்தது, உள்ளே 1,000 நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. கீழ் மெஹராபாத்தில் அமைந்த மண்டலியின் குடியிருப்புக்குப் பின்னால், சாப்பாட்டுக் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. செப்டம்பர் 28ஆம் தேதி பெய்த கடும் யானை மழையால் கூடாரத்திற்குள் தண்ணீர் வரத் தொடங்கியது. அரன்காவ்ம் ஊழியர்கள் வடிகால்களை வெட்டி, நீர் தேங்கிய இடத்தில் வறண்ட மண்ணைப் பரப்பி, சீர் செய்தனர். அனைத்தும் சரியாக நடந்தாலும், பொறாமையால், வருண தேவன் இந்திரன், பலத்த மழையைப் பொழிந்தான்! பைதூலின் பிரார்த்தனை பலனளிக்கவில்லை, ஏனெனில் பாபா

தனது அன்பர்களுக்கு, உலக சுகபோகங்கள் எதையும் வழங்க விரும்பவில்லை. அவர்கள் ஆன்மீக ஆனந்தத்தில் நீராட வேண்டும் என்று விரும்பினார்.

பெண்டு அவரது கால்சட்டை சுருட்டப்பட்ட நிலையில், அழைக்கப்பட்டவர்களின் வசதிக்காக, சாத்தியமான அனைத்தும் செய்யப்படுவதை பார்வையிட்டு, எங்கும் நகர்ந்தார். ரயில் நிலையத்தில், பாபாவின் 'ஜெய்' முழக்கங்கள் எதிரொலிக்க, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் - ஆந்திரா, ஹமிர்பூர், டெல்லி, டெஹ்ரா டூன், நாக்பூர், ஸாவ்னேர், மும்பை, பூனா, நாசிக், சத்தாரா, கொல்கத்தா, குருதுவாடி, ஷோலாபூர் மற்றும் நவ்ஸாரி - வருகை தந்த அன்பர்கள் அலைமோதினர். அன்றைய தினம், கிட்டத்தட்ட 950 பேர் கொட்டும் மழையில் மெஹராபாத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

வந்ததும், ஒவ்வொருவருக்கும் நுழைவு சீட்டுடன், அடையாள அட்டையும் வழங்கப்பட்டது; அது, உணவு, தங்குமிடம் இலவசம் என்றாலும், அந்த நபர் தக்ஷிணையாக (அன்புப் பரிசாக) ரூ.22 செலுத்தினார் என்பதை அடையாளப் படுத்துகிறது. 'மதம் குறித்த உண்மை' (THE TRUTH ABOUT RELIGION) என்ற தலைப்பில் மண்டலி ஒருவர் எழுதிய கட்டுரையின் நகல்களும், 'மெஹர் பாபாவின் அழைப்பு' (MEHER BABA'S CALL) என்ற செய்தியும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பாவ் கல்சூரி, பாப்பு இருவரும் சகவாசத்தில் கலந்துகொள்ளும் ஆண்கள் தூங்குவதற்கான ஏற்பாடுகளை கவனித்தனர்; ஒரே இடத்தைச் சேர்ந்த அன்பர்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டனர். பெண்டுவும், பாதிரியும் பேச முடியாமல் சோர்ந்து போயினர். டாக்டர் நீலுவுடன் அனைவரின் உடல்நிலையையும் கவனிக்க டாக்டர் கனகதண்டி நியமிக்கப்பட்டார். டாக்டர் டான் மேற்கத்திய அன்பர்களின் ஆரோக்கியத்தைக் கண்காணிக்க வேண்டும்; கஃபூரின் (GAFOOR) உதவியுடன் குளியல் நீரை சூடாக்க அலோபா; கணக்குவழக்குகளை கவனிக்க விஷ்ணு மற்றும் பால் நாத்து; நானா கேர், பாவ் கல்சூரி இருவரும் சமையலறை, கழிவறைகள் மற்றும் குளியல் அறைகள் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்தனர். வந்ததும் அனைவருக்கும் இரண்டு அனாசின் மாத்திரைகளைக் கொடுக்க வேண்டும் என்று பாபா, எரச்சிடம் சொல்லி அனுப்பியிருந்தார். அத்தகைய குறுகிய அறிவிப்பில் இவ்வளவு பெரிய அளவிலான மாத்திரைகள் வாங்குவது கடினம், ஆனால் அதுவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதிகாலை 3:00 மணி வரை மழை பெய்து கொண்டிருந்தாலும், அனைவரும் தத்தமது இடங்களை ஆக்கிரமித்தனர். இதற்குப் பிறகு, மேகங்கள் சிதறி, காலை சூரியன் உதயமாகி, மெஹராபாத் மீது மகிழ்ச்சியின் கதிர்களைப் பொழிந்தது.

1954 செப்டம்பர் 29 புதன்கிழமை அன்று காலை 7:45 மணிக்கு, மெஹர்ஜியின் பச்சை நிற ஷெவர்லே (CHEVROLET) காரில், பாபா மெஹராஸாத்திலிருந்து வருகை தந்தார். மண்டபத்தில் நுழைந்த வேளையில்,

பாபா, புன்னகைத்துக்கொண்டே டாக்டர் கனகதண்டியிடம் நாடித் துடிப்பை உணரச் சொன்னார். பாபா சமையல் அறைக்குச் சென்று முகாமைச் சுற்றி அனைத்தையும் ஆய்வு செய்தார். வழியில், அவரது காலணி சேற்றில் சிக்கியதால், அவற்றைக் கழற்றிவிட்டு, வெறுங்காலுடன் செல்ல வேண்டியிருந்தது. சுமார் 8:10 மணியளவில், பாபா, மேற்கு மற்றும் கிழக்கத்திய அன்பர்கள் கூடியிருந்த, கூட்டம் நிகழும் பந்தலுக்குள் நுழைந்தார். பாபாவின் மேல் கோட்டில் ஒரு நுழைவு அடையாள அட்டை பொருத்தப்பட்டிருந்தது. அவரும் அந்த நுழைவுத் தொகையை செலுத்தியிருந்தார்!

ஒரு தற்காலிக மேடையில் தமது இருக்கையில் அமர்ந்து, பாபா, கூட்டத்தில் அனைவருக்கும் உரை வழங்கும் விதத்தில், எழுத்துப்பலகையில் எடுத்துரைத்ததை எரச் வாசித்தார்:

**அன்பர்களே நீங்கள் அனைவரும் இங்கு அழைக்கப்பட்டு, நாம் அனைவரும் ஒன்றிணைந்த இந்த சந்திப்பு மிகவும் இன்றியமையாதது. சந்திப்பு என்றால் என்ன? சந்திப்பு என்றால் நாம் சந்திக்கிறோம். எனவே, நாம் எதையும் தொடங்குவதற்கு முன்னால், 'இறுதியாக' ஒருமுறை, ஒருவரையொருவர் தழுவி சந்திப்போம், ஏனெனில் நான் விரைவில் என் உடலைக் கைவிடப் போகிறேன். எனவே, உங்கள் முழு மனதுடன் என்னை சந்திக்கவும், ஆனால் எனது விலா எலும்புகளை நொறுக்கும் அளவுக்கு இறுக்கமாக அல்ல!**

**நேற்றிரவு, முழு நேரமும் நான் நினைத்துக்கொண்டிருந்தேன்: மழை ஏன் ஆரம்பமானது, குறிப்பாக 28ஆம் தேதி நீங்கள் அனைவரும் இங்கு வரவிருந்த அந்தத் தருணத்தில்; ஏனெனில், இந்த 28 நாட்களும் சூரியன் பிரகாசமாக இருந்ததால் நிகழ்ச்சிகள் அனைத்தும் மகிழ்ச்சியுடன் நிறைவடைந்தன. செப்டம்பர் 12ஆம் தேதி நடந்த தரிசன நிகழ்ச்சி, இங்கு வந்துள்ள மேற்கத்திய குழுவிற்கான விளக்கங்கள், ஸாக்கோரியில் எனது குருநாதர் சன்னதியில் தலை வணங்கிய நிகழ்ச்சி, மற்றும் 26ஆம் தேதி அஹமதுநகர், ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிகழ்ச்சி, அனைத்தும் மிகவும் மகிழ்ச்சிகரமாக நிறைவடைந்தது.**

**எனவே, முதன்முறையாக, 'நான் அவதார புருஷரா?' என்று என்னையே நான் கேட்டுக்கொண்டதற்கு, எனக்குக் கிடைத்த தெளிவான மற்றும் உறுதியான பதில், "ஆம், நான் ஆதிகால புருஷன், உயர்ந்தவர்களில் உயர்ந்தவன்."**

**அப்போது நான், அவதார் மெஹர் பாபாவிடம் கேட்டேன், "ஏன் இந்த மழை – உங்களை சந்திக்க வந்த அன்பர்களுக்கு ஏன் இந்த சிரமம்?"**

**அவதார் மெஹர் பாபா பதிலளித்தார்:**

**உண்மையில் உங்களை ஆழ் இதயத்திலிருந்து நேசிப்பவர்கள், தங்கள் உள்ளங்கையில் தலையை ஏந்திக்கொண்டு வருபவர்கள்; இந்த சிரமம் அவர்களுக்கு மகிழ்ச்சியின் தருணம். அன்பர்கள், நான் கடந்த கால அவதார புருஷர்களாக இருந்த ஆலயங்களில் அவர்களை வணங்க,**

**தாங்கொணா துயரங்களையும் பொருட்படுத்தாமல், நீண்ட நெடிய பயணங்களை மேற்கொள்கிறார்கள், அதற்காக சிலர் உயிரையும் துறக்கிறார்கள். எனவே, இக்காலகட்டத்தில் வாழும் அவதார புருஷர் மெஹர் பாபாவின் அழைப்பை ஏற்றுச் செல்வதில், இத்தகைய சிறியதொரு சிரமத்தை அவர்கள் தாங்கிக் கொள்ளவில்லை என்றால், தங்களை அன்பர்கள் என்று அழைப்பது பாசாங்குத்தனமாக இருக்கும்!**

**இப்போது, இறுதி முறையாக உங்கள் அனைவரையும் ஒருவரையொருவர் தழுவிய பின்பு, நாம் நமது பலவீனங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனையை மொழிவோம். அதி விரைவில், நான் மதத்தின் அனைத்து பிணைப்புகளையும் அழிக்கப் போகிறேன். மதம் நிலைத்திருக்கும், அதன் பொய்யும் போலியுமான பாசாங்குத்தனம் அழிந்துவிடும்.**

எரச் பாபாவின் எழுத்துப்பலகையை ஆங்கிலத்தில் வாசித்துக் கொண்டிருந்தார், அவருடைய வார்த்தைகளை கேஷவ் நிகம் ஹிந்தி, குடும்ப ஸாஸ்திரி தெலுங்கு, டாக்டர் தேஷ்முக் மராட்டி, புர்ஜர் மேத்தா குஜராத்தியிலும் மொழிபெயர்த்தனர். ஆனால் தேஷ்முக் மிகவும் உணர்ச்சிவசப்பட்டதால் அவரால் தொடர முடியாத நிலையில், டாக்கே அதைப் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று.

பாபா, தமது உடலைத் துறக்கப் போவதாகக் கூறியதைக் கேட்டு அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். பல ஆண்களின் கண்களில் நீர் ததும்பியது, சிலர் வெளிப்படையாகக் கண்கலங்கி அழுதனர், சிலர் திகைப்பில் ஆழ்ந்தனர். சூழ்நிலை சற்று தீவிரமாக மாறியது, அனைவரும் தத்தமது இடங்களில் முற்றிலும் அமைதியாக இருந்தனர்.

நானா கேர் குளிர் ஜுரத்தால் அவதிப்பட்டதால், அவருடைய சகோதரர் வினு, மருமகன் பால் சுபேதார் இருவரும் அவரைக் காரில் கூடாரத்திற்கு அழைத்து வந்தனர்; நானாவைக் கண்காணிக்கும் நோக்கத்தில் அவர் தனது சகோதரர் மற்றும் மருமகனுடன் மேடையில் அமர வைக்கப்பட்டார். எவரேனும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலும் அவர் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்பது பாபாவின் கட்டளை. நானாவின் உடல் வெப்பநிலை 105° டிகிரியாக இருந்தபோதிலும், அவர் கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

ஒவ்வொருவரும் பாபாவின் அரவணைப்பைப் பெற, ஒருவருக்குப் பின் ஒருவராகச் சென்றனர். ஒலிபெருக்கியின் மூலம் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன, மேலும் அவ்வப்போது கூட்டத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது: “பாபாவின் விலா எலும்பு நொறுங்கும் அளவுக்கு இறுகத் தழுவாதீர்கள்; இது எங்கள் பிரார்த்தனை! நேரத்தை மிச்சப்படுத்த, பாபாவை ஒரு பக்கமாகத் தழுவுங்கள்; பாபாவின் பாதங்களைத் தொடாதீர்கள்; அவருக்கு மாலை அணிவிக்காதீர்கள்; பழங்கள், பூக்கள் அல்லது பரிசுகள் எதையும் அவருக்கு வழங்க வேண்டாம்.”

டாக்டர் தௌலத் ஸிங் பாபாவை அணுகியபோது, அவர் உரத்த அழுகையுடன் கண்கலங்கிக் கதறினார்; கீழே விழவிருந்தவரை எரச், பாதிரி இருவரும் தாங்கிக்கொண்டனர்.

தௌலத் ஸிங் மேடையில் அமர வைக்கப்பட்டார். பாபாவின் அருகில் தோடி ஸிங் என்பவரும் மஸ்த் போல நடந்துகொண்டார். எரச் அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டு பாபாவிடம் அழைத்துச் சென்றார். எடிதா சதிராஜு (EDITHA SATHIRAJU) பாபாவின் அருகில் நின்று விசிறிக் கொண்டிருந்தார். இறை போதையில் பாபாவின் பாதங்களை எவரும் மிதித்து விடுவதைத் தடுக்க, அலோபாவும், கிருஷ்ணா நாயரும் பாபாவின் இருபுறமும் அவரது பாதங்களைத் தங்கள் கைகளால் பாதுகாத்த வண்ணம் அமர்ந்திருந்தனர்.

காலை 9:00 மணிக்கு, பாபா மீண்டும் கூறினார், "**நான் விரைவில் என் உடலைக் கைவிடப் போகிறேன், என்னைத் தழுவுவதற்கான கடைசி வாய்ப்பு இதுவே. இதைத் தவறவிடாதீர்கள். கடவுளின் விருப்பத்தால், நீங்கள் அனைவரும் என் அன்பிற்கு தகுதியானவர்களாய் இருங்கள். என்னை விலை பேசாதீர்கள்**!"

பாபாவின் வார்த்தைகள் கோஹியார், பால் டவ்லே (BAL DHAVLE) இருவரையும் குழந்தைகளைப் போல் அழ வைத்தன. தெய்வீக மதுபானம் பல்வேறு வழிகளில் அதன் விளைவைக் கொண்டிருந்தது; சிலர் கண் கலங்கினர், சிலர் திகைப்பில் ஆழ்ந்தனர், சிலர் லேசான புன்முறுவலுடன் தங்கள் வேதனையை மறைக்க முயன்றனர்.

டாக்டர் தேஷ்முக், பாபாவை இருபுறமும் தழுவியபோது பாபா அவருடைய அறிவுறுத்தலை நினைவூட்டினார். நாக்பூரிலிருந்து தேஷ்முக்குடன் வந்த மூன்று அல்லது நான்கு நபர்களும் - தேஷ்முக்கைத் தங்கள் தலைவராகப் பின்பற்றுபவர்கள் - அவ்வாறே செய்தனர். பாபா அவர்களைத் தன் இடது பக்கம் மட்டும் அணைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தினார், அதை அவர்கள் மீண்டும் செய்ய வேண்டியதிருந்தது. (வெளிப்படையாக அவர்களின் கீழ்ப்படியாமை, பாபாவின் அரவணைப்பின் விளைவை ரத்து செய்துவிட்டது.) இந்த சம்பவத்திற்குப் பிறகு, வேறு எவரும் பாபாவை இருபுறமும் தழுவ முயற்சிக்கவில்லை.

ஸாக்கோரியிலிருந்து யஷ்வந்த் ராவ், வாக் (WAGH), புரந்தரே, நஸர்வான் பரூச்சா (NASSERWAN BHARUCHA), சகனின் சகோதரர் வஸந்த் ஆகியோர் வந்திருந்தனர்.

டாக்டர் கனகதண்டியின் முறை வந்ததும், பாபா மீண்டும் அவரது நாடித்துடிப்பை உணரச் சொன்னார். அவர் அதைச் செய்து, "பரவாயில்லை, பாபா. நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்கள்" என்று அறிவித்தார்.

"**ஆனால் எனக்கு உடல்நிலை சரியில்லை. நீங்கள் உண்மையில் ஒரு மருத்துவரா**?" எனக் கேட்டு, பாபா, தமது நகைச்சுவையால் தீவிரமான சூழலை இலகுவானதாக மாற்றினார்.

பி. ஸாஸ்திரி (B. SASTRI) அவரை அணுகியபோது, பாபா, அவதார புருஷர்களின் வம்சாவளியைப் பற்றிய கீதையில் இடம்பெறும் ஸ்லோகங்களை மீண்டும் கூறும்படி கேட்டுக்கொண்டார்.

டெஹ்ரா டூனிலிருந்து வந்த மதன் அரோரா, பாபாவின் முன்னிலையில் அழுதுகொண்டே இருந்தார். **“ஏன் இந்தக் கொட்டும் மழை?”** என்று பாபா கேட்டார்.

“என்னை மன்னியுங்கள் பாபா” என்றார்.

**“என்ன நடந்தது?”**

“நேற்று இந்த சேற்றில் சுற்றிக் கொண்டிருந்தபோது, நான் நினைத்தேன்: ‘நாங்கள் இங்கு இத்தனை சிரமங்களை அனுபவிக்கிறோம்… மெஹராஸாத்தில் பாபா மிகவும் வசதியாக இருக்க வேண்டும். அவர் இங்கு வரும் வேளையில், கம்பூட்ஸை (GUMBOOTS) அணிந்து செல்வார். நம்மைப் போல வெறுங்காலுடன் நடந்தால், நாம் எப்படிக் கஷ்டப்படுகிறோம் என்பது அவருக்குத் தெரியும். காலையில் நீங்கள் இங்கே வெறுங்காலில் நடந்து வருவதைப் பார்த்ததும் என் மீது இடி விழுந்தது போல் இருந்தது, தயவுசெய்து என்னை மன்னியுங்கள்.”

கவலைப்பட வேண்டாம் என்று கூறி பாபா அவரைத் தழுவினார்.

ஃபிரெட் மார்க்ஸ் போன்ற உயரமான கிழக்கத்திய அல்லது மேற்கத்திய அன்பர் அவரிடம் வரும்போதெல்லாம், பாபா அவர்களைத் தழுவும் வேளையில் முழங்காலில் நிற்கச் செய்தார், இது பந்தலில் ஒரு சிறப்பான மகிழ்ச்சி ஆரவாரத்தை ஏற்படுத்தியது.

காடேக்கர் (GADEKAR), எட்கே (EDKE) இருவரும் (1926-27இல் மெஹர் ஆசிரமத்தில் முன்னாள் ஆசிரியர்கள்) பாபாவிடம் வந்தபோது கண்கலங்கி அழத் தொடங்கினர். பாபா அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஜப்பானியர் ஹிட்டாக்கா மௌனம் கடைப்பிடித்தார். பாபாவைத் தழுவ வந்த வேளையில், ’பாபா, தமது மௌனத்தைக் கைவிடும் வரை, அவருடைய மௌனத்தையும் நீடிக்க முடியுமா’ என்ற குறிப்பு ஒன்றைக் கொடுத்தபோது, பாபா அனுமதித்தார்.

அனைவரையும் தழுவிய பிறகு, காலை 9:30 மணியளவில், சிது, பாபாவின் கைகளைக் கழுவ உதவி, அவரது கழுத்திலிருந்த மாலைகளை அகற்றினார். கைக்கோபாத் அழைக்கப்பட்ட போது, ‘ஸெண்ட் அவெஸ்தா’ (ZEND AVAESTA) ஸொராஸ்டிரிய வேத நூலிலிருந்து ஒரு பிரார்த்தனையை மொழிந்தார். அவர் பிரார்த்தனையை நிறைவு செய்த அந்த கணத்தில், மாத்ர தத்தா ஸாஸ்திரி, (MATRA DUTTA SHASTRI) ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்று குரலெழுப்பினார். ‘ஆனால் **பிரார்த்தனை நிறைவடைந்ததும்**, **தாமே கேட்கும் வரை**, **எதையும் மொழிய வேண்டாம்**’ என்று பாபா அனைவரையும் எச்சரித்திருந்தார். இருப்பினும், அவர் ஸாஸ்திரியை மன்னித்தார். பிரார்த்தனை வேளையில் புகைப்படம் எடுக்கும் சத்தமும் வரக்கூடாது என்ற கடுமையான உத்தரவையும் பிறப்பித்திருந்தார்.

இந்தக் குறுக்கீடு காரணமாக, பாபா மீண்டும் கைகளைக் கழுவ விரும்பினார். தண்ணீர் இல்லாததை கவனித்த சிது, உடனே தண்ணீர் எடுத்துவர செல்லவிருந்தார். மாறாக, பந்தலில் சிறு குட்டையில் தேங்கிய மழை நீரை எடுத்து வருமாறு பாதிரியிடம் பாபா சைகையால் தெரிவித்தார். பாதிரி தனது உள்ளங்கையில் சிறிது நீரை எடுத்து வந்து, பாபாவின் கைகளில் ஊற்றினார். கைக்கோபாத்திடம் பிரார்த்தனையை மீண்டும் மொழியுமாறு கூறியபோது, அதை அவர் செய்தார். பிரார்த்தனை நிறைவடைந்ததும், பாபா அவரை வணங்கவே, ஏற்கனவே அறிவுறுத்தியபடி, கைக்கோபாத், 'யா அஹுரமஸ்தா!' (YA AHURAMAZDA!) என்ற இறை நாமத்தை உச்சரித்தார்.

அதன் பின்னர் அலோபா நமாஸ் செய்ததும், பாபா அவரை வணங்கவே, அவர் 'அல்லாஹ் ஹு அக்பர்!' (ALLAH HU AKBAR!) என்ற நாமத்தை உச்சரித்தார். இந்து பிரார்த்தனையாக, நீலு, விஷ்ணு இருவரும் சமஸ்கிருத மொழியில் உபாஸனி மஹாராஜ் இயற்றிய பல ஸ்லோகங்களை ஓதினர். 'ஓம் பரபிரம்ம பரமாத்மா!' (OM PARABRAHMA PARAMATMA!) என்று மொழிந்தபோது பாபா அவர்களை வணங்கினார். அதைத் தொடர்ந்து, டான் ஆங்கிலத்தில் கிறிஸ்தவ பிரார்த்தனையை வாசித்து முடித்ததும், பாபா, அவரது பாதங்களைத் தொட்ட வேளையில் டான், 'சர்வவல்லமையுள்ள கடவுளே!' (GOD ALMIGHTY!) என்ற நாமத்தை உச்சரித்தார். தௌலத் ஸிங் ஒரு சீக்கிய பிரார்த்தனையை மொழிந்து, பின்பு 'சத் ஸ்ரீ அகால்!' (SAT SHRI AKAL!) என்ற இறை நாமத்தை உச்சரித்தார்.

பிரார்த்தனைகளைத் தொடர்ந்து பாபா, கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்: **"நீங்கள் நீண்ட நேரம் நின்று சோர்வாக உணர்வதானால், நான் உங்களுக்கு அரை மணி நேரம் ஓய்வு தருகிறேன்; அதன் பின்னர், இதர பிரார்த்தனைகள் மொழியப்படும். எனது பணியில் நான் ஒருபோதும் சோர்வடைய மாட்டேன் என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். எனவே, நீங்கள் சோர்வாக இருந்தால், ஓய்வெடுத்துக் கொள்ளலாம்; ஆனால், நீங்கள் அனைவரும் விரும்பினால், நான் எனது பணியைத் தொடருவேன்."**

நிகழ்ச்சியைத் தொடர வேண்டும் என்று எல்லாத் தரப்பிலிருந்தும் குரல் எழுந்தது.

எனவே பாபா கூறினார்: **"இப்போது, அனைவரும் பக்கவாட்டிலிருந்து விலகி, மேடையின் முன் நிற்கவும். குருநாதருக்கான 'பர்வர்திகார்' பிரார்த்தனை, மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனை இரண்டிலும் முழு மனதுடன் கலந்துகொள்ளுங்கள். கடவுள் இதயத்தின் மொழிக்கு செவிமடுக்கிறார், மனதின் கட்டளைகளுக்கு செவிடாக இருக்கிறார். எனவே, உண்மையை மொழியும் வாக்குமூல பிரார்த்தனையை உங்கள் ஆழ் இதயத்திலிருந்து, முழு ஈடுபாட்டுடன் மொழிந்தால், கடவுள் அதைக் கேட்கிறார். புண்ணியம், பாவம் என்று அறியப்படுவது எல்லாம் பலம், பலவீனத்தைத் தவிர வேறொன்றுமில்லை."**

அவர் மேலும் கூறினார்: **“இங்கு இருப்பவர்களுக்காகவும், உலகத்திற்காகவும், நானும் மனம் வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனையில் பங்கேற்பேன்.”**

பாபாவின் வேண்டுகோளிற்கு இணங்க, பர்வர்திகார் பிரார்த்தனை, மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனை இரண்டும், கைக்கோபாத், ராம்ஜூ, டாக்கே, குடும்ப ஸாஸ்திரி, டான் ஆகியோரால் முறையே, குஜராத்தி, உருது, மராட்டி, தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வாசிக்கப்பட்டது. பாபா பின்னர் ஃபிரான்சிஸ் பிராபஸோனிடம் ஒலிபெருக்கியில் ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்று கூறுவதற்காக அறிவுறுத்தியதை, அங்கிருந்த அனைவராலும் உரத்த குரலில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டது.

காலை பத்து மணி ஆனது, பாபா கூறினார்: **“நீங்கள் இப்போது கலைந்து செல்லலாம். ஆனால் பதினொரு மணிக்கு சாப்பாட்டுப் பந்தலுக்கு அருகில் இருங்கள், மதிய உணவு 11:30 மணிக்கு வழங்கப்படும். நான் உங்கள் அனைவரையும் அங்கு சந்திப்பேன். மதியம் 2:00 மணி முதல் குழுக்களுடன் உரையாடுவேன், ஆனால் தனிப்பட்ட நேர்காணல் வழங்கப்படமாட்டாது. எனது பணிக்காக நான் மூன்று அல்லது நான்கு பேருடன் மட்டுமே தனிப்பட்ட பேச்சு நடத்துவேன். மழை பெய்தாலும், இல்லையென்றாலும், நாளை காலை 11:00 முதல் 11:30 வரை மற்றும் பிற்பகல் 3:30 முதல் 6:00 மணி வரை, நடைபெறும் கூட்டத்தில் கடைசியாக நான் சொல்ல வேண்டியதை துல்லியமாகச் சொல்கிறேன்.”**

மேற்கத்திய அன்பர்கள் மேல்மலைக்குச் சென்று அங்கேயே இருக்க அறிவுறுத்தப்பட்டனர்.

பாபா, மேடையிலிருந்து வெறுங்காலுடன் தமது நேர்காணல் அறைக்குச் சென்று, அங்கு வெவ்வேறு நபர்களை அழைத்து, அவர்களுடன் பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினார். என்ன நடந்தது என்பது பதிவு செய்யப்படவில்லை, ஆனால் டெல்லியைச் சேர்ந்த ஹக்குமத் ராயிடம் (HAKUMAT RAI), பாபா, **“என்னிடம் எதுவும் கேட்காதீர்கள்! நீங்கள் கேட்க விரும்புவதை நான் அறிவேன்! நீங்கள் எனக்கு மிகவும் பிரியமானவர். என்னை நேசியுங்கள், பிறரையும் என்னை நேசிக்கச் செய்யுங்கள்”** என்று குறிப்பிட்டார்.

டெஹ்ரா டூனில் இருந்த வேளையில், பாபா அவரிடம், **“எனது அழைப்பை அடையப் பெற்றதும், அனைத்தையும் விட்டுவிட்டு என்னிடம் வாருங்கள்”** என்று கூறியிருந்தார். அவர் அதைக் குறித்து பாபாவிடம் கேட்கும் ஆர்வத்தில் இருந்தார், ஆனால் பாபா அவர் கூறுவதைத் தடுத்து, அதற்கு பதிலாக, அன்பானவரின் அழைப்புக்காகக் காத்திருக்கும் ‘மூல மந்திரத்தை’ அவருக்கு வழங்கியது, அவரது பாதங்களை இறுதிவரை உறுதியாகப் பற்றிக் கொள்ள உதவியது.

பிற்பகல் 2:00 மணிக்கு, பாபா மண்டபத்திற்குத் திரும்பி வந்து ஆந்திரா குழுவை அழைத்தார். அவர் தமது ஸாக்கோரி விஜயத்தைப் பற்றி அவர்களுக்குச்

சுருக்கமாகத் தெரிவித்தார், மேலும் அங்கு எடுக்கப்பட்ட சில புகைப்படங்களை அவர்களிடம் காண்பித்தார், “**பல புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. முதலில், நான் ஸாக்கோரியில் மேர்வானாக இருந்தேன், சமீபத்தில் நான் அவதார புருஷராகச் சென்றேன். உபாஸனி மஹாராஜ் பரிபூரண நிலையை அடைந்தவர்; நான் அவதார புருஷர், கோதாவரி, யஷோதா (கிருஷ்ணரின் வளர்ப்புத் தாய்).**”

பாபா, மேலும் கூறினார், “**காலாதிகாலத்திலிருந்து நான் தனியாக இருக்கிறேன், நீங்கள் என்னை சிறிதளவு நேசித்தாலும் கூட, நான் உங்களை என்றென்றும் விடுவிப்பேன் என்று எனது தெய்வீக அதிகாரத்தின் பேரில் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். என் மீதான உங்கள் ஆர்வத்தில் நீங்கள் முற்றிலும் நேர்மையாக இருக்க வேண்டும். என் மீதான உங்கள் அன்பு எவ்வளவுதான் குறைவாக இருந்தாலும், என்னைப் பொறுத்தவரை, என்னை நேசிப்பதில் நேர்மையாக இருங்கள். அதை வெளியே காட்டிக் கொள்ளாதீர்கள்.**”

ஆந்திரா தெலுங்கு இதழான ‘வெலுகு’வின் (VELUGU) ஆசிரியர் அன்னபூர்ணையா, அவர் உயிரைத் துறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, மெஹராபாத் கூட்டத்தில் வாசிக்கும் நோக்கத்தில் பாபாவிற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதை எழுதிய அடுத்த நாளே ஜுரத்தால் தாக்கப்பட்டு, ஒரு வாரம் பாதி மயக்கத்தில் இருந்தார்; அந்த நிலையிலும் அவர் பாபாவின் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தார். அவரது மறைவுக்குப் பிறகு, பாபாவிற்கு வரைந்த அன்பால் நிறைந்த அந்தக் கடிதம் அவரது மேஜையிலிருந்து பெறப்பட்டது. குடும்ப ஸாஸ்திரி அதை பாபாவிடம் சமர்ப்பித்தார்.

பாபா இவ்வாறு கூறினார்: “அன்னபூர்ணையா என்னிடம் வந்திருக்கிறார்”

கடிதத்தின் ஒரு பகுதி (அடுத்த நாள் கூட்டத்திற்கு முன்னால் முழுமையாக வாசிக்கப்பட்டது) பின்வருமாறு:

கடவுள்களுக்கெல்லாம் கடவுளே! உமக்காகக் கோவில்களைக் கட்டியெழுப்ப என்னால் இயலவில்லை. என் இதயக் கோவிலில் நீங்கள் வீற்றிருக்கிறீர்கள். உம்மை வணங்க என்னிடம் பூக்கள் இல்லை. என் இதயத்தின் மலர் வளையத்தை உமது தாமரை பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்...

ஓ ஆதிபகவனே! என்றென்றும் உம்மை நேசிக்க, எனக்கு தைரியத்தையும் வலிமையையும் வழங்கி, நித்திய பேரின்பத்தின் சொர்க்க வாயிலை, நடுங்காத நடையுடனும், அழியாத நம்பிக்கையுடனும் வந்தடைய அருளுவீராக!

பாபா கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஒவ்வோர் ஆந்திர அன்பரும் அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டனர். வி.எல்.என். மூர்த்தி, ராமாராவ் நாயுடு இருவரும் பாபாவின் செய்திகளை தெலுங்கு மொழியில் வெளியிட, பாபாவிடம் அனுமதி கோரினர்; அதை அவர் வழங்கினார். பாபா அவர்களிடம் வலியுறுத்தி கூறினார், “**நான் உங்கள் இருவரையும்**

**ஆசீர்வதிக்கிறேன். என்னை நேசித்து, என் அன்பைப் பரவச் செய்யுங்கள். அதற்காக, உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வணக்கங்கள்.**"

மற்றுமோர் அன்பர், பாபாவின் செய்திகளையும், நோக்கத்தையும் வெளிப்படுத்தும் விதத்தில் பிரச்சாரம் செய்ய பாபாவின் ஆசியை நாடினார். அதற்கு பாபா, "**எனது அன்பை காட்டுத்தீ போல பரவச்செய்ய நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். அதை முழு மனதுடன் செய்ய வேண்டும் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். பாபா, அவதார புருஷர் இல்லை என்று நீங்கள் உணர்ந்தால், அவ்வாறு சொல்லுங்கள், ஆனால் உங்களுள் நேர்மையாக இருங்கள். நீங்கள் சொல்வதில் எல்லாம் நான் இருக்கிறேன். நீங்கள் உறுதியாக நம்புவீர்களேயானால், அதில் முழுவதுமாக மூழ்கி முன்னோக்கிச் செல்லுங்கள், எந்த சந்தேகமும் வேண்டாம்.**"

ஒருவர், பாபா முன்னிலையில் தன்னை அறிமுகப்படுத்திய போது, தனது பெயர் ஷேக் பாபுலால் (SHAIKH BABULA) என்று கூறியதும், பாபா, "**ஸூஃபிகளின் மொழியில், ஷேக் என்பதன் பொருள் கடவுளை அறிந்தவர். எனவே, கடவுளை நேசிப்பதன் மூலம் உண்மையான 'ஷேக்'காக மாறுங்கள்!**" என்று கூறினார்.

தர்மராவ் தன்னை அறிமுகப்படுத்திய வேளையில், பாபா வேடிக்கையாக நினைவு கூர்ந்தார், "**நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னரே, எனது மரணத்தை ஏற்படுத்த இருந்தவர் நீங்கள்!**" (அந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது ஆந்திர பயணத்தின் போது, பாபாவுடன் காரை ஓட்டிச்சென்ற தர்மராவ் தூங்கிவிட்டார்.)

பாபாவுடனான சந்திப்பின் போது, ஆந்திர சேவகர் ஒருவர், வேறொரு நபருடன் எரிச்சல் அடைந்தார். பாபா அவரைத் திருத்தினார், "**அமைதியாக இருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் பிறரிடம் அமைதியாக இருக்க வேண்டும் என்று உபதேசம் செய்யும் அதே வேளையில், நீங்கள் அவ்வாறு இல்லாமல் இருந்தால், அது பாசாங்குத்தனம். பாபா கடவுள், மேலும் அவர் எல்லாம் அறிந்தவர் என்றால், அவருக்கு அனைத்தும் தெரியும். அப்படியானால், உங்களின் நீண்ட நெடிய விரிவுரையால் என்ன பயன்? பாபா, பாபாவாக இல்லாமல் இருந்தால், அவருக்கு ஒன்றும் தெரியாது என்றால், உங்கள் பார்வையிலிருந்து விஷயங்களை விளக்க முயற்சி செய்வதானால் எந்த அளவுக்கு உதவியாக இருக்கும்? நான் உங்கள் அனைவருள்ளும் இருப்பதால் எனக்கு எல்லாம் தெரியும். மாணிக்யால ராவின் கோபத்தை மட்டும் என்னால் தணிவுறச் செய்ய முடியும்** (ராஜமுந்திரி கூட்டத்தில் கொதித்தெழ நேர்ந்தது); **எனவே, அமைதியாக, நிதானமாக இருங்கள். நான் உங்களை மன்னிக்கிறேன்.**"

பாஸ்கர ராஜூ தனது பஜனை மண்டலியை பாபாவிடம் அறிமுகப்படுத்திய வேளையில், அவர் ஒரு பாடலைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். அவர்கள் 'நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா' என்ற பாடலைப் பாடினர்.

பாபா, பின்னர் ஆந்திர அன்பர்களைச் செல்லுமாறு கேட்டுக்கொண்டு, அவரே எழுந்து நின்றார். கூப்பிய கரங்களுடன், அவர் அனைவருக்கும் வணக்கம் செலுத்தினார்; மேலும் சில அன்பர்கள் செல்வதற்கு முன்னர் அவரது கைகளைத் தொட்டனர்.

பிற்பகல் 2:30 மணியளவில், ஹமிர்பூர் குழு, தொடர்ந்து பெனாரஸ், ஆக்ரா, அலஹாபாத், கான்பூர், ஜான்சி (JHANSI) மற்றும் இதர வடக்குப் பாகங்களிலிருந்து அன்பர்கள் அழைக்கப்பட்டனர். பாபா அவர்களிடம், "**ஆந்திரா குழுவைப் போல் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாதீர்கள். விரைவில் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். என் அன்பர்கள் அனைவரையும் நான் அறிவேன், என்னை நேசிக்காதவர்களும் என்னுடையவர்களே. இங்கே இருப்பவர்களில் என்னை நேசிக்கும் அனைவரையும் அறிய விரும்புகிறேன்.**"

கேஷவ் சிலரை அறிமுகப்படுத்த முன்வந்தார். முதலாவதாக அவர் ஸிங் (SINGH) என்ற சிறுவனை அறிமுகப்படுத்தினார், அவர் 1953இல் பாபாவுடன் ஆந்திராவிற்கும், அதைத் தொடர்ந்து, டெஹ்ரா டூனில் பாபாவுடன் வந்திணைய தனது இல்லத்தை விட்டு ஓடி வரவும் செய்தார். '**ஸிங் இப்போது சாதாரணமாக நடந்துகொள்கிறாரா?**' என்று பாபா, கேஷவிடம் கேட்டதற்கு, இன்னும் சீரானபாடில்லை என்று பதிலளித்தார்.

"**உண்மையான அன்பு எப்படி இருக்கும் தெரியுமா?**" என பாபா, ஸிங்கிடம் வினவி, பின்பு விளக்கினார், "**உள்ளத்தில் ஒளிரும் அன்பின் சுடர், பிறர் பார்க்கும் அளவுக்குப் புகையை வெளிவிடாது. நீங்கள் என்னை நேசிக்கும் நேரத்தில், உங்களுக்குள்ளேயே எரிகிறீர்கள், இருந்தாலும் உங்கள் உதடுகளில் மலர்ந்த புன்னகையுடன் மகிழ்ச்சியாகத் தோன்றுகிறீர்கள். பிரிவின் வலியை நிதானமாக, அமைதியாகத் தாங்கிக் கொள்கிறீர்கள்; அந்த வலியால் வரும் ஆழ்ந்த மூச்சு கூட அந்த அன்பிற்கு அவமானமாகும்!**

"**உங்கள் அனைத்து கடமைகளிலும் கவனமாக இருங்கள்; உங்கள் நல்லது தீயது அனைத்தையும் எனக்கு அர்ப்பணிப்பதன் மூலம் நீங்கள் இன்னும் பாபாவை நேசிக்க முடியும். உங்கள் உடலை ஆடைகளால் மூடிக்கொண்டு, நாள் முழுவதும் நீங்கள் அணியும் ஆடையை மறந்துவிடுவது போல், உங்கள் ஆத்மாவை ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே, பாபாவின் எண்ணங்களாகிய ஆடையால் அணியுங்கள். நீங்கள் எந்த கவனமும் செலுத்தாத போதும், பாபா எப்பொழுதும் உங்களுடன் இருப்பார்.**"

தக்வான் கிராமத்தைச் சேர்ந்த அயோத்திய பிரசாத் ராத்தோர் (AYODHYA PRASAD RATHOR) என்பவரை அறிமுகப்படுத்திய கேஷவ், அவரது பயணச் செலவுகளை சமாளிக்க, மனைவியின் நகைகளை விற்று, கூட்டத்திற்கு வந்ததாகக் கூறினார். பாபா கேட்டார், "**ஏன் அப்படிச் செய்தீர்கள்? நான் அங்கே** (உங்களுடன் உங்கள் இல்லத்திலும்) **இருந்தேனே!**"

ராத்தோர் பதிலளித்தார், "வாழ்க்கையில் நகைகளை மீண்டும் பெறலாம்; ஆனால் 700 ஆண்டுகளுக்கு இது போன்ற ஓர் அரிய சந்திப்பில் கலந்துகொள்ள மற்றொரு வாய்ப்பு இருக்காது."

பகவத் பிரசாத் (BHAGWAT PRASAD) முன்னோக்கி பாபாவின் அருகில் சென்றதும், கேஷவ், "அவர் ஓய்வு பெற்ற தாசில்தார் (வருவாய் அதிகாரி), ராம பக்தர்" என்று கூறினார். "**நானே ராமன்**" என்று பாபா பதிலளித்தார்.

சுரேஷ் சந்திர நிகம் என்ற மாணவனை அவரிடம் அழைத்து, பாபா கூறினார், "**நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி, நீங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது உங்கள் அதிர்ஷ்டம் அல்லவா? இன்று முதல் ஒன்றைச் செய்யுங்கள்: அதாவது, முற்றிலும் நேர்மையாக இருங்கள், எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் பொய் பேசாமல் இருங்கள். தொண்டை துண்டிக்கப்பட்டாலும் பொய் பேசக் கூடாது!**"

நௌரங்கா கிராமத்திலிருந்து நாற்பது நபர்கள் வந்திருந்தனர். பாபா அவர்களை தன் முன் அழைத்து, பாபு ராம்பிரசாத்திடம் வலியுறுத்திக் கூறினார், "**நீங்கள் என்னைப் பற்றியும் எனது பணியைப் பற்றியும் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள், அதன்படி செயல்படுங்கள்.**" அதைத் தொடர்ந்து ராம்பிரசாத், ஒவ்வோர் அன்பரையும் தனித்தனியாக அறிமுகப்படுத்தினார், பாபா மீதான அவர்களின் அன்பு அவரின் ஆழ் இதயத்தைத் தொட்டது. அவர்களில் ஒரு சாதுவும் இருந்தார். கூட்டத்தில் கலந்து கொள்ள அவரிடம் போதிய பணம் இல்லாததால், பிற அன்பர்கள் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே அவர் நௌரங்காவை விட்டு வெளியேறி, எப்படியோ சரியான நேரத்தில் மெஹராபாத் வந்துசேர முடிந்தது.

ராமசரண் நயி (RAMACHARAN NAI) என்ற முடிதிருத்தம் செய்யும் நபரை அறிமுகப்படுத்திய போது, பாபா அவரிடம், "**எனக்கு சவரம் செய்ய முடியுமா? உங்களுடன் வேண்டிய கருவிகளை கொண்டு வந்துள்ளீர்களா?**" என்று கேட்டதற்கு...

ராமசரண் தன்னிடம் உபகரணங்கள் எதுவும் இல்லை என்றார். பாபா கூறினார், "**நான் உலகளவில் முடிதிருத்தம் செய்பவன்... நான் அனைவரின் தலைகளையும் மொட்டையடித்து வடிவமைக்கிறேன்!**"

அனைவரும் சிரித்தனர், அதற்கு பாபா, "**எனது நகைச்சுவை முடிவில்லாதது என்பதால் அதைப் பற்றி மக்களுக்குத் தெரியாது, நானே அதை அளவிட முடியாது! உலகில் என்னைப் போல் உண்மையானவன் இல்லை, அது போல பொய்யானவனும் இல்லை!**"

பழைய அன்பரான கயா பிரசாத் கரே, பாபாவின் முன் வந்ததும், அறிமுகங்களை விரைவில் நிறைவு செய்யுமாறு கேஷவிடம் கூறினார். பாபா, அவரது அளவிறுதியற்ற தன்மையைப் பற்றி குறிப்பிட்டார், "**நான் உஸ்தாத்** (USTAD - நிபுணர்). **என்னைப் போல் எவரும் பொய் சொல்வதில்லை, என்னைப் போல் எவரும் உண்மையும் பேசுவதில்லை. நான் இரண்டையும் ஒரே நேரத்தில் கொண்டவனாக இருக்கிறேன். அதனால், என்னைக் கைப்பற்ற**

**முடியாது. நான் கடவுள், அதே வேளையில் மனிதனாகத் தோற்றமளிக்கிறேன். நான் எல்லாவற்றையும் இழந்தபோதிலும், இன்னமும் எனது நகைச்சுவை உணர்வைத் தக்க வைத்துக் கொண்டேன். என்னை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை; நான், அந்த அளவுக்கு ஆழங்காண முடியாதவன்; என்னை, என்னால் கூட புரிந்து கொள்ள முடியாது! ஆனாலும், நான் ஒன்றானவன், ஆதிகாலத்தவன், அன்பினால், நேர்மையான அன்பினால் எவரும் என்னை சொந்தமாக்கிக் கொள்ள இயலும்.”**

பாபா, கயா பிரசாத்திற்கு சில விசேஷ பிரசாதத்தை வழங்கி, அந்த இடத்திலேயே சாப்பிடச் சொன்னார்.

பெனாரஸ் நகரிலிருந்து டாக்டர் நாத் வந்திருந்தார். பாபா அவரிடம் கூறினார், “**நீங்களும், டாக்டர் கரே, வயதான கயா பிரசாத் மூவரும் எனது ஒவ்வொரு தற்போக்கு விருப்பத்தையும் பூர்த்தி செய்ய, புது வாழ்வில் உங்களால் இயன்ற அனைத்தையும் செய்தீர்கள். எனக்கு ஒரு வெள்ளை குதிரை வேண்டும் என்று சொன்னேன், அது வழங்கப்பட்டது. எனக்கு ஒட்டகம் ஒன்று தேவைப்பட்டது, அதுவும் வந்தது. எனக்கு, கழுதைகள் வேண்டுமென கேட்டேன், அவை என்னிடம் கொண்டு வரப்பட்டன. அன்புள்ள நாத்தை இங்கு சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பௌதீக உடலில் நீங்கள் என்னைக் கடைசியாகப் பார்க்கிறீர்கள் என்பதால், தக்க தருணத்தில் நீங்கள் வந்தது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.**”

ஆதர்ஷ் கரே, “எனக்கு அத்தகைய அன்பு வேண்டும், அதன் மூலம் நான் உங்களை உண்மையில் பார்க்க முடியும்!” என்று பாபாவிடம் கூறியபோது...

பாபா பதிலளித்தார், “**அத்தகைய அன்பிற்கு, என் அருள் தேவை. தன்னிச்சையாக, நான் மனம் விரும்பி பொழிவது அமிர்தம் போன்றது. என்னிடம் கேட்டு வாங்குவது, வெற்று நீர் போன்றது. அதை எவரேனும் என்னிடமிருந்து வற்புறுத்தி வாங்கினால், அது விஷம். எனவே, என்னைப் பற்றிய நினைப்பைக் கொண்டிருங்கள், எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிடுங்கள், ‘பாபா, உங்கள் விருப்பம் என் விருப்பம்’ என்று கூறுங்கள்.**”

பாபா தொடர்ந்தார், “**காமம், காதல் இரண்டையும் குறித்து நான் உங்களுக்குச் சொல்கிறேன். இதில், காமத்தைக் காதலாகவும், காதலைக் காமமாகவும் கருதக்கூடிய மெல்லிய எல்லைக்கோடு ஒன்று உள்ளது; ஆனாலும், காதல் உங்களை கடவுளிடம் அழைத்துச் செல்லும் அதே வேளையில், காமம் உங்களை மாயையோடு பிணைக்கிறது. அன்பின் அடையாளம் ஒன்றே ஒன்றுதான்: அன்பு ஒருபோதும் எதையும் கேட்பதில்லை. அன்பன் அனைத்தையும் அன்பிற்குரியவருக்குக் கொடுக்கிறான். காமம் அனைத்தையும் எடுத்துக்கொள்ள விரும்புகிறது. எதையும் விரும்பாதவன் ஒருபோதும் ஏமாற்றமடைய மாட்டான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எதையும் விரும்பாதவனிடம் எல்லாம் இருக்கிறது.**”

“**நான் என் அன்பர்களின் அடிமை**” என்று ராய்ஸாஹேப் ரவீந்திர ஸிங் (RAISAHEB RAVINDRA SINGH) என்பவருக்கு பாபா நினைவூட்டினார்.

ராய்ஸாஹேப் ராமஷங்கரிடம், பாபா அன்புடன் கேலி செய்தார்: “**அவரது உள்ளம் உறுதியானது, உடல் உருளையானது மேலும் அவரது அன்பு உள்ளதிலெல்லாம் உள்ளது**!

“**ஹமிர்பூரில் நீங்கள் எனக்கு எவ்வளவு பிரமாதமான ஊறுகாய் பரிமாறினீர்கள் என்பதை நினைவில் கொள்கிறீர்களா?**” என்று பாபா, பவானி பிரசாத் நிகமை நினைவுபடுத்தினார்,

மேலும் பாலிவாலிடம், “**இங்கோட்டாவில் நீங்கள் என்ன அறுசுவை உணவை வழங்கினீர்கள்**” என்று கூறினார்.

பாபா, புக்காருக்குத் தெரிவித்தார் (அவர் குள்ளமானவர்), “**நீங்கள் எனது ஹனுமான் என்பது உங்களுக்குத் தெரியுமா?**”

“அந்த அனுபவத்தைத் தரும்போது நான் அதை அறிவேன்” என்றார் புக்கார்.

நாராயண் ஸிங் என்ற மற்றுமொரு மாணவர் பெற்றோரின் அனுமதியின்றி மெஹராபாத் வந்துள்ளார். பாபா அவரிடம், “**நீங்கள் திரும்பிச் சென்றதும், மெஹர் பாபா உங்களுக்கு அத்தகைய அன்பை வழங்கியது அவரது தவறு என்று கூறி, எனது சார்பாக உங்கள் பெற்றோரிடம் மன்னிப்புக் கோருங்கள்**” என்றார்.

ஹமிர்பூர், தக்வான் கிராமத்திலிருந்து வந்த விஷ்ணு “வாழ்க, பிரபஞ்சத்தில் சர்வ வல்லமையுள்ளவரை வாழ்த்துகிறேன்!” (ஜெய், ஜெய் ஜகத் கே சமர்த்! ‘JAI, JAI JAGAT KE SAMARTH’) என்று பாடிய பாடல் பாபாவை மகிழ்வித்தது.

ரத் நகரின் கௌரி ஷங்கர் வைத்யா (ஆயுர்வேத மருத்துவர்) பாபா முன் வந்தபோது, பாபா அவரது நாடித்துடிப்பைப் பரிசோதிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு “சரியாக உள்ளது, பாபா” என்று அவர் கூறினார்.

“**முழு உலகத்தின் நாடித்துடிப்பையும் எனது நாடித்துடிப்பு கட்டுப்படுத்துகிறது**” என்று பாபா தெரிவித்தார்.

ஸ்ரீபத் ஸஹாய் மற்றும் பிறருடன் பாபா, நகைச்சுவையாகப் பேசினார், மேலும் அவரது கேலியும் கிண்டலும் அவர்களின் வாழ்க்கையில் ஊக்கமளிப்பதாக நிரூபணமாயின. அவரது அன்பான குணங்கள் காரணமாக, அவர்கள் தன்னிச்சையாக, பாபாவையும், அவர் கூறிய அழகான சிறிய சிறிய விஷயங்களையும் நினைவு கூர்ந்தனர். உதாரணமாக, ஊறுகாய் போன்றவற்றைப் பற்றிய உரையாடல் சாதாரணமாகத் தோன்றலாம், ஆனால், பவானி பிரசாத்தைப் பொறுத்தவரை, ஊறுகாய் அல்லது சட்னியைப் பார்த்தாலோ அல்லது உண்டாலோ பாபாவை நினைவூட்டுவது போல், அவருக்கு அது, வாழ்க்கையின் ‘தாரக மந்திரமாக’ நிரூபணமானது. பாபாவின் வழிகளும் முறைகளும் அப்படித்தான் இருந்தன. அவரது இலக்கு துல்லியமானது; அவரது கருத்துக்கள், அம்புகள் போல தாக்கி, ஒருவரின் இதயத்தில் வாழ்நாள் முழுவதும் காயத்தை உருவாக்கின!

ஹமிர்பூர் குழுவிற்குப் பிறகு, டெல்லி மற்றும் டெஹ்ரா டூன் குழுக்கள் அழைக்கப்பட்டன. பிரகாஷ்வதியின் மகன் பூஷனுக்கு (BHUSHAN) பதினாறு வயது நிறைவாகவில்லை, இருந்தாலும், அவர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார். பாபா, அவரது கட்டளையை பின்பற்றுகிறாயா என்று பூஷனிடம் வினவி, பின்னர் ஆச்சரியத்துடன் கேட்டார், **"எப்பொழுதும் உங்களுக்கு ஏன் இவ்வளவு விரைவில் கோபம் வருகிறது?"**

கோபத்தைக் கட்டுப்படுத்த பாபா, பூஷனுக்கு மிக எளிய வழியை எடுத்துரைத்தார்: **"நீங்கள் ஒருவரிடம் கோபத்தை வெளிப்படுத்தப் போகும் போதெல்லாம், அந்த நபர் 'பாபா' என்பதை உடனடியாக நினைவில் கொள்ளுங்கள்! பிறகு நீங்கள் பாபா மீது கோபப்பட மாட்டீர்கள்."**

டெஹ்ரா டூன், டாக்டர் ஷர்மா வாசித்த ஒரு கவிதையை, பாபா பாராட்டினார்.

பிரம்மா தேவ் என்பவரிடம், ஒரு வாரம் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் கடைப்பிடிக்குமாறு பாபா கட்டளையிட்டார்; அதன் பின்னர், அவரது நீண்ட கால ஆஸ்துமா அவரை விட்டு விலகியது. அவர் பாபாவிடம், "உங்கள் ஆசியால், அதிசயமாக நான் ஆஸ்துமாவிலிருந்து விடுபட்டேன்" என்று கூறினார்.

பாபா அவரைத் திருத்தினார், **"இது என்னுடைய அதிசயம் அல்ல, ஆனால் உங்கள் அன்பும் நம்பிக்கையும்தான் இதற்குக் காரணம். எனது மௌனத்தைக் கலைக்கும் நேரத்தில் என்னுடைய ஒரே அதிசயம் நிகழும்."**

பிரம்மா தத் என்பவர் டெஹ்ரா டூனில் வாழும் அன்பர், சற்று தொலைவில் நின்று கொண்டிருந்தபோது, பாபா கேட்டார், **"ஹமிர்பூரிலும் ஆந்திராவிலும் நீங்கள் எப்பொழுதும் என் அருகில் இருக்கப் போட்டி போட்டுக் கொண்டிருந்தீர்கள். இப்போது நீங்கள் எப்படி அமைதியாக தூரத்தில் இருக்கிறீர்கள்?"** பிரம்மா தத் சிரித்துக்கொண்டே பாபாவின் அருகில் வந்தார்.

ஹமிர்பூர் குழுவை நோக்கி பாபா கூறினார்: **"நானே அனைவரையும் நேசிப்பவன். எவரும் என்னை நேசிப்பதில்லை. உங்கள் அனைவரின் மூலமாகவும் என் அன்பு பிரதிபலிக்கிறது. என்னை நேசிக்கும் விதத்தில் எவரேனும் என்னை நேசிப்பதானால், அவர் நிச்சயமாக நானாக மாறுவார்."**

ஹர்ஜீவன் லால் என்பவரின் மருமகன் பிஷம்பர் குப்தா (BHISHAMBAR GUPTA) டெல்லியிலிருந்து வந்திருந்தார். பிஷம்பர் - அங்குரி (ANGURI) இருவருக்கும் இடையேயான திருமணத்தைக் குறித்து ஒரு சுவாரஸ்யமான சம்பவம் இருந்தது. திருமண நாளன்று மணமகனின் தாயார் காலமாகிவிட்டார். எனவே, டெல்லியிலிருந்து ஒரு தொலைதூர தொலைபேசி மூலம், அங்குரி இந்த சம்பவத்தை பாபாவிடம் தெரிவித்தார்; அவர் விழாவைத் தொடருமாறு

அறிவுறுத்தவே, தாயாரின் உடல் தகனம் செய்யப்பட்ட பின்பு, திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பாபா, குப்தாவிடம், "**அங்குரி எனக்கு மிகவும் பிரியமானவர், மிக மிக பிரியமானவர்**" என்று குறிப்பிட்டார்.

டெஹ்ரா டூனிலிருந்து வந்த பால் கிஸனிடம் (BAL KISAN), பாபா வேடிக்கையாகக் கூறினார், "**நீங்கள் வரவில்லை என்றால், கிஷன் ஸிங் உங்களை மன்னித்திருக்க மாட்டார்**." அப்போது பாபா அவரிடம் அவரது மனைவி மெஹர் காந்தாவைப் பற்றி விசாரித்தார்.

"உங்கள் ஆசீர்வாதத்தால் அவர் நலமாக இருக்கிறார்" என்று பதிலளித்தார்.

ஹெலனிடம் பாபா, "**உங்கள் குடும்பத்தில் அனைவரும் எப்படி இருக்கிறார்கள்?**" என்று கேட்கவே, ஹெலன் பணிவுடன் பதிலளித்தார், "எல்லோரும் நலம், பாபா."

உடனே பாபா, "**அவருடைய பதிலில் ஏதோ எல்லாமும் சரியில்லை என்பது போலத் தோன்றுகிறது! எனது நட்பு எப்பொழுதும் அப்படித்தான் இருக்கும்**." ஹாஃபீஸின் கவிதையை மேற்கோள் காட்டி, பாபா விளக்கினார்: **"நான் எனது நண்பர்களை அழித்து, எதிரிகளைச் செழித்தோங்கச் செய்கிறேன். எனக்கும் எனது அன்புக்கும் இடையே வந்து, ஏன் அப்படி என்று கேட்க எவரும் துணிவதில்லை!"**

அவர் மேலும் கூறினார், "**நான் யார் ஒருவரை மிகவும் விரும்புகிறேனோ, அவர் எப்பொழுதும் பொருளாதார ரீதியாக சிதைந்தவராகவே இருப்பார், இதனால் அவர் தானாகவே தூய்மையாகி விடுவார். அத்தகைய அற்புதமான தூய்மையை அடைய, எனது கடைக்கண் பார்வை ஒன்றே போதுமானது; அப்போது அவரது அகங்காரம் போய், பாபா வருகிறார்!**"

பாபா, தோடி ஸிங்கிடம் அவருடைய நிதி சம்மந்தமான நிலைமையைப் பற்றி கேட்டபோது, அவருடைய கஷ்டங்களை எடுத்துக் கூறினார்.

"**நீங்கள் கவலைப்படுகிறீர்களா?** (தோடி ஸிங் ஆம் என்றார்.) **கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது? நித்தியத்தில், எதுவும் நடக்கவில்லை, எதுவும் நடக்காது. நடப்பதெல்லாம், இந்த நேரத்தில் இப்போது நடக்கும் - பின்னர் அது ஒன்றுமில்லை!**"

டெல்லியின் கல்லூரி முதல்வர் நிரஞ்சன் ஸிங்கிடம் திரும்பிய பாபா, "**நீங்கள் இதைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். கடவுளுக்கு ஆரம்பம் என்று ஒன்று இல்லை என்றால், அவருக்கு முன்னர் என்ன இருந்தது? பதில் கடவுள்!**

"**அதற்கும் முன்னர் என்ன இருந்தது? கடவுள் மட்டுமே!**

**“பதில் எப்பொழுதும் கடவுள்; ஆனால் மாயையைப் பொறுத்தவரை, நேரம், காரணம் மற்றும் விளைவு காரணமாக அர்த்தம் உள்ளது. ஒன்றிற்குப் பின்னால் பூஜ்ஜியம் சேர்க்கப்படும்போது, பூஜ்ஜியத்திற்கு மதிப்பு உள்ளது; நீங்கள் மேலும் அதிக பூஜ்ஜியங்களை சேர்க்கும்போது மதிப்பு அதிகரிக்கிறது. ஆனால், நீங்கள் ஒன்றுக்கு முன், கோடிக்கணக்கில், கோடானுகோடி பூஜ்ஜியங்களை போட்டாலும் கூட, அந்தப் பூஜ்ஜியங்களுக்கு மதிப்பு இல்லை. உங்களால் புரிந்து கொள்ள முடியுமா?”**

அலஹாபாத்தைச் சேர்ந்த பருமனான, உருளை போன்ற ஜி.எஸ். ஸ்ரீவஸ்தவாவை (G.S. SRIVASTAVA) நோக்கி பாபா, “**அவரிடம் கவலைகள் பல இருந்தும், அவற்றையும் மீறி அவர் மேலும் மேலும் வளர்ந்து வருவதுதான் அழகு!**” என்றார்.

வழக்கறிஞர் ஹரிசந்த் கோச்சார், டெஹ்ரா டூனில் இருந்த வேளையில், பாபாவிடம் இறை உணர்வை அடைந்த ஜீவன்முக்தாக்களைப் பற்றிய கவிதை ஒன்றை கூறி வந்தார். “**அதை நீங்கள் மறுபடியும் மொழிந்தால் உங்கள் கவலைகள் அனைத்தும் மறைந்துவிடும்.**” துரதிர்ஷ்டவசமாக, கோச்சார், ரயில் பயணத்தின் போது புத்தகத்தைத் தொலைத்துவிட்டார், அவரால் அந்த வரிகளை நினைவுகூர முடியவில்லை.

டெல்லியைச் சேர்ந்த என்.பி. மிஷ்ராவிடம் (N.P. MISHRA), “**தினமும் தூங்கும் முன்னர் என்னை நினைவில் கொள்ளுங்கள்**” என்று பாபா அறிவுறுத்தினார்.

பாபா, தோடி ஸிங்கின் மகன் கஜ்ராஜிடம் (GAJRAJ), “**நீங்கள் ஏதேனும் வேலை செய்ய வேண்டும்** (வேலையைக் கண்டுகொள்ள வேண்டும்)” என்று அறிவுறுத்தினார். கஜ்ராஜ் கீழ்ப்படிவதாக உறுதியளித்தபோது, பாபா அவரைத் தழுவினார்.

மற்றுமொரு டெல்லி அன்பரிடம், “**பாபா விரைவில் சென்றுவிடுவார், ஆனால் நான் எங்கும் இருக்கிறேன். எனவே, நீங்கள் இருக்கும் இடத்திலே இருங்கள், என்னை நேசியுங்கள், இப்போது நீங்கள் என்னை இங்கே பார்ப்பது போல் அங்கேயும் என்னைப் பாருங்கள்**” என்று கூறி, பாபா ஒரு ரோஜா இதழை உண்பதற்காகக் கொடுத்தார்.

பட்டாலாவைச் (BATALA) சேர்ந்த ஷிவ் சரண் ஸிங் (SHIV CHARAN SINGH) தனது மகன், விமானப்படைத் தளபதி ஜஸ்பீர் ஸிங்குடன் (JASBIR SINGH) கூட்டத்திற்கு வந்திருந்தார். அவர், “பாபா, மனதைக் கட்டுப்படுத்தும் வழியைக் காட்டுங்கள்” என்று கேட்டார்.

“**அதற்கு சிறந்த வழி, ஒரு நாளைக்கு நான்கு முறை என்னை முழு மனதுடன் நினைவில் வைத்துக் கொள்வது - காலை 7:00 மணிக்கு, மதியம், மாலை 5:00 மணிக்கு மற்றும் இரவில் தூங்கும் முன். இந்த நேரத்தைக் கடைப்பிடித்தால், உங்கள் மனம் மறந்துவிடும் அளவுக்கு மாறும்!**” என்றார்.

தொடர்ந்து, மும்பை, பூனா குழுக்கள் வந்தன. அவர்களில் பெரும்பாலும் பழைய அன்பர்களான ஷிண்டே, மதுசூதனன், துரேக்கர், விஷ்ணு சவான் போன்றவர்களுடன் சில புதியவர்களும் இருந்தனர். சில மாதங்களுக்கு முன்பு, பூனாவில், தூரத்திலிருந்து பாபாவைப் பார்த்த கே.கே. ராமகிருஷ்ணன் (29) என்பவரை காடேக்கர் அறிமுகப்படுத்திய போது, பாபா குறுக்கிட்டு, "**அறிமுகத்திற்கு என்ன தேவை? எனக்கு அவரைத் தெரியும், அவருக்கும் என்னைத் தெரியும்! நான் மனித உருவில் நிலைகொண்டிருக்கும் கடவுள், பல பிறவிகளுக்கு, தவம், துறவு, பிராயச்சித்தம் கடைப்பிடிப்பதால் என்னை அடைய முடியாது! அன்பினால் மட்டுமே என்னைக் கண்டுகொள்ள முடியும்!**"

கோவாஸ் வெஸுனாவிடம் (COWAS VESUNA) கடவுளை நேசிக்குமாறு பாபா அறிவுறுத்திய வேளையில், அவர் "நான் கடவுளை நேசிக்கிறேன்," என்று கூறினார்.

"**நான் சொல்வதால், நீங்கள் அவரை நேசிக்க முடியும்**" என்று பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, பாபா கூறியதன் முழு அர்த்தத்தையும் கோவாஸ் உணர்ந்தார். கடவுள் மீதான அன்பு என்பது அவரிடமிருந்து அடையப்பெறும் பரிசு. அவதார புருஷரால் ஒருமுறை ஆழ்மனதில் வேரூன்றப்பட்டால், இந்த அன்பு, அன்பரை அழிப்பது வரை மேலும் ஆழமாக வளர்கிறது. அவதார புருஷரிடமிருந்து இந்த அருளைப் பெறுபவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.

ஒரு பக்தர் தனது குழந்தைகளுக்காக, பாபாவிடமிருந்து ஒரு செய்தியை விரும்பினார். பாபா பதிலளித்தார், "**உண்மையே பேசி, சரியானதை சிந்தித்து, பிறரின் மகிழ்ச்சிக்காக செயல்படுவதன் மூலம் கடவுளை நேர்மையாக நேசிக்கவும்.**"

பாபாவை முதல் முறையாகப் பார்ப்பதாக தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒரு புதிய நபரிடம், அவர், "**என் அன்பான நண்பரே, நான் உங்களை பல ஆண்டுகளாகப் பார்க்கிறேன். எனவே நீங்கள் என்னை முதல் முறையாகப் பார்ப்பதானால் கவலைப்பட வேண்டாம்**" என்று கூறினார்.

ஜால் தஸ்தூர் உள்ளிட்ட சில மும்பை அன்பர்களை ஸொராப்ஜி ஸிகன்போரியா (SORABJI SIGANPORIA) அறிமுகப்படுத்தினார். ஜிம் மிஸ்திரி பாபாவை மகிழ்விப்பதற்காக வேடிக்கையான ஒன்றைச் சொன்னார், ஐந்தே நிமிடங்களுக்குள் நேர்காணல்கள் முடிவடைந்தன, ஏனெனில் இந்த அன்பர்களில் பெரும்பாலானோர் பழைய நண்பர்கள்.

அடுத்ததாக, மத்திய பிரதேச குழு வந்தது. ஸாவ்னேர் நகரிலிருந்து வந்த மற்றுமொரு தாசில்தார் (வருவாய் அதிகாரி) அப்துல் மஜித் கானிடம், பாபா,

**“நான் உங்களைப் பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் எவ்வளவு நேர்த்தியாக உடை அணிந்திருக்கிறீர்கள்!”** பாபா, அவர் தலையிலிருந்த தொப்பியை, தனது தலையில் வைத்து, பின்னர் அதை மஜித் கானிடம் திருப்பிக் கொடுத்து, “**இப்போது இதற்கு ஏற்றதாக இருங்கள்**” என்று கூறினார்.

போ:ஃபலி ப்ளீடர் (POPHALI PLEADER) தனது மகன்கள் ஸ்ரீராம், கஜானன் உட்பட 90 அன்பர்களை தன்னுடன் அழைத்து வந்திருந்தார். பாபா, “**அனைத்தும் எனக்குத் தெரியும் என்றும், எதையும் கூற வேண்டிய தேவையில்லை என்றும் போ:ஃபலிக்குத் தெரியும். என்னை அவர் முழுமையாக நம்புகிறார்**” என்று குறிப்பிட்டார்.

பாவ் கல்சூரியின் மனைவி ரமாவின் தந்தை மற்றும் சகோதரர்களிடம், பாபா கூறினார், “**பாவ் என்னுடன் இருக்கிறார், எனவே ரமா, மெஹர்நாத், ஷீலா மூவரையும் கவனித்துக் கொள்ளுங்கள். ரமா மிகவும் நல்லவர், நான் அவரை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவர் குழந்தைகளுடன், 12ஆம் தேதி எனது தரிசனத்திற்காக அஹமதுநகர் வந்திருந்தார். பாவ் என்னுடன் இருப்பதில் அவர் மகிழ்ச்சியாக உள்ளார்.**”

இறுதியாக, எந்தக் குறிப்பிட்ட குழுவிலும் இல்லாத அன்பர்கள் அழைக்கப்பட்டனர், அவர்களுடன் உரையாடலை நிறைவு செய்து, பாபா மாலை 6:35 மணிக்கு மெஹராஸாத் திரும்பிச் சென்றார். எங்கும் சேறு காரணமாக, அவரது கார் சேற்றில் சிக்கிக்கொண்டது, குழுவிலிருந்த பல அன்பர்கள் அதைச் சாலையில் தள்ள வேண்டியிருந்தது.

கிழக்கத்திய அன்பர்களின் ஆரோக்கியத்திற்குப் பொறுப்பாக இருந்த டாக்டர் கனகதண்டியால் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆயினும்கூட, அவர் தனது கடமையைத் தன்னலமின்றி செய்து, பாபாவின் பெயரைத் தனது உதடுகளில் உச்சரித்து, நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்கினார். ஓர் இரவு, டாக்டர் தனபதி ராவ் உடல்நலம் இல்லாத ஒருவரை அழைத்து வந்தார். கனகதண்டியிடம் ஸ்டெதஸ்கோப்பைக் (STETHOSCOPE) கேட்டபோது, அது உடைந்திருந்ததை, தனபதி அவரிடம் சுட்டிக்காட்ட, அவர் “எல்லாம் பாபாவின் ஆசீர்வாதம்” என்று பதிலளித்தார். “பாபாவின் ஆசிகள் நிச்சயம் உண்டு, ஆனால் உடைந்த ஸ்டெதஸ்கோப்பை வைத்து நோயாளிகளைப் பரிசோதிக்க அவர் கூறினாரா?” என்று கேட்டார் தனபதி.

“கவலைப்படாதீர்கள், காலையில் உங்கள் நோயாளி சரியாகிவிடுவார்.” அந்த நபர் குணமடைந்து அடுத்த நாள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

1954 செப்டம்பர் 30 வியாழன் அன்று, பாபா காலை 7:45 மணியளவில் மெஹராபாத்திற்கு வந்ததும், அவர் ஸாக்கோரி குழுவை முதலில் சந்தித்தார்.

பின்னர் அவர் கல்லூரி முதல்வர் நிரஞ்சன் ஸிங்கை அழைத்து அவரிடம் கூறினார், “**நீங்கள் என்னுடன் பத்து நாட்கள் தங்க முடியும் என்று நான் உறுதியளித்தேன், ஆனால் இப்போது, அதற்கு பதிலாக, நான் உங்களுக்கு பத்து நிமிட நேர நேர்காணலை வழங்குவேன். என்னை**

**நிச்சயமாக, ஒரே நொடியில், சற்றும் எதிர்பாராமல், கடவுள் என தெரிந்து கொள்ளும் விதத்தில், நான் உங்களை உணர வைப்பேன்!"**

பாபா அவரிடம், "**உங்களுக்கு நினைவிருக்கும், நான் வேறு ஏதேனும் வாக்குறுதியை உங்களுக்கு வழங்கினேனா?"**

"ஆமாம், எங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்வதாக அளித்த வாக்குறுதி."

"**நான் என் உடலைத் துறந்தாலும் அது நிறைவேறும்**" என்றார் பாபா.

கைக்கோபாத் அனுபவித்த பல்வேறு அனுபவங்களை நிரஞ்சன் ஸிங்கிற்கு விளக்கினாலும், பாபா, அவற்றை இவ்வாறு பார்த்தார்: "**இவை உங்களுக்கு முக்கியமானதாகத் தோன்றினாலும், அவை மாயையின் அனுபவங்கள். ஆன்மீகத் தளங்களின் அனுபவங்களும் மாயையின் அனுபவங்கள்தான்; ஆனால் இவை, மாயையிலிருந்து விடுதலை வழங்கும் உயர்வான அனுபவங்கள்.**"

"தயவுசெய்து என் மனதைக் கட்டுப்படுத்தும் முழுப் பொறுப்பையும் உங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று நிரஞ்சன் ஸிங் கெஞ்சினார்.

"**அதை என்னிடம் விட்டுவிடுங்கள்**" என்று கூறி பாபா, அவரைத் தழுவிய வேளையில் நிரஞ்சன் ஸிங், "இது என் மனைவிக்காகவா?" என்று கேட்டார்.

பாபா, "**இது உங்கள் மனைவிக்காக**" என்று கூறி இரண்டாவது முறையாக அவரைத் தழுவினார்.

காலை 8:45 மணிக்கு, பாபா தனது அன்பர்களை உடன் அழைத்துக்கொண்டு, மெஹராபாத் மேல்மலையை நோக்கி நடந்தார். பாபா நடந்த வேகத்தில் பெரியவர்கள், இளைஞர்கள் அனைவரும் பின்தங்கினர்; ஓடுவதைத் தவிர ஒருவரால் அவருடைய வேகத்தை ஈடுசெய்ய முடியவில்லை. பாதி தூரம் சென்றதும், பாபா ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து அதன் மீது சாய்ந்துகொண்டார், அனைவரும் அவருக்கு முன்பாக அமர்ந்தனர். பல புகைப்படக் கலைஞர்கள் அந்தக் கண்ணுக்கினிய காட்சிகளைப் படம் பிடித்தனர்.

மேல்மலையைச் சென்றடைந்து, பாபா நேராக தமது எதிர்கால சமாதிக்கு வெளியே அமைந்த மேடையில் நின்றார். மேற்கத்திய அன்பர்களும் வந்திணைய, அனைவரும் பாபாவை நோக்கி அமர்ந்தனர். பாபா, அவரது சமாதியைச் சுட்டிக்காட்டி கூறினார்:

**இது எனது இறுதி ஓய்விடம். 1927-28இல், நான் தொடர்ந்து ஆறு மாதங்கள் இங்கு தங்கியிருந்தேன். இங்கே நீங்கள் காணும் அகழி போன்ற நிலத்தடியில், இரவும் பகலும் ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருந்தேன். இயற்கையின் அழைப்பிற்கோ அல்லது நீராடவோ கூட நான் இந்த இடத்தை விட்டு வெளியே சென்றதில்லை, அனைத்தும் அங்கேயே நடந்தது. சில சமயங்களில், நான் என் கால்களை ஜன்னலின் நிலைவிட்டத்தின் மீது நீட்டினாலும், என் உடல் உள்ளே இருந்தது. அந்த நாட்களில் ஜன்னல்** (திரை இல்லாமல்) **திறந்தே இருந்தது; கரையான்கள் கட்டமைப்பை தின்றுவிட்டன.**

நான் அங்கு அமரும் வேளையில், என் எதிரில் பிரேம் ஆசிரம சிறுவர்கள் வெளியில் மேடையில் கூடுவது வழக்கம். அப்போதுதான் அப்துல்லா என்ற சிறுவன் அடையப்பெற்ற அனுபவத்தில் மூன்று நாட்கள் தனது சுயநினைவை இழந்தான்.

இந்த ஏகாந்தவாசத்தில், நான் ஒருபோதும் திட ஆகாரம் உண்ணவில்லை, ஆனால் ஒரு நாளைக்கு இரண்டு கப் காஃபி மட்டும் அருந்தினேன்; அதை லாஹூ என்ற ஹரிஜன சிறுவன், கீழ் மெஹராபாத்திலிருந்து கொண்டு வருவது வழக்கம். ஏகாந்தவாசம் தொடங்குவதற்கு முன்னர், எனது பெண் மண்டலியிடம், காலையிலும் மாலையிலும் இரண்டு முறை, ஒரு குடுவை நிரம்ப, லாஹூவுடன் அதை அனுப்புமாறு கூறினேன்.

ஆனால், அதற்கு பதிலாக, ஆறு மாதங்களுக்கு தினமும் பாதி குடுவை மட்டுமே எனக்குக் கிடைத்தது! ஆறு மாதங்களுக்குப் பின்னர், எனது ஏகாந்தவாசத்தை நிறைவுசெய்து, மேல்மலையிலிருந்து இறங்கி பெண் மண்டலியின் விடுதிக்குச் சென்று, எனது கட்டளைக்கு மாறாக, பாதி குடுவை காஃபி மட்டும் அனுப்பியதன் காரணம் என்ன என்று வினவினேன். தினமும் ஒரு முழுக் குடுவை அனுப்பியதாகச் சொன்னார்கள். பிறகு குட்டி லாஹூவை வரவழைத்து, அவனைத் தழுவி, எதையும் மறைக்காமல் உண்மையைச் சொல்லச் சொன்னேன். மலை ஏறும் வழியில் பாதிக் குடுவையை குடித்துவிட்டு, மீதி பாதியை என்னிடம் கொண்டுவந்ததாக அவன் ஒப்புக்கொண்டான். இவ்வாறு, ஆறு மாதங்களாக, நான் உண்மையில் தினசரி ஒரு குடுவை காஃபி மட்டுமே அருந்திக் கொண்டிருந்தேன், அதுவும் சிறுவனின் பிரசாதமாக.

கைக்குஷ்ரு பிளீடரைச் சுட்டிக்காட்டி, பாபா குறிப்பிட்டார்:

கே.ஜே. பிளீடர் என்னுடன் இருப்பதைப் பார்க்கிறீர்கள். நான் அவரை இரண்டரை வருடங்கள் ஓர் அறைக்குள் அடைத்து வைத்து, மௌனம் காக்கச் செய்து, எழுத, படிக்கக் கூடாது என்று கட்டளையிட்டேன். ஒரு நாள் அவர் தனது அறையில், நாகப்பாம்பு ஒன்று தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டார். அவரால் அறையை விட்டு வெளியே வரவோ, ஒரு வார்த்தை கூட பேசவோ முடியாத நிலை. இதனால், சில நாட்களாக நாகப்பாம்பு அங்கேயே இருந்தது. சிது, பிளீடருக்கு பால் எடுத்து வந்தபோது, அதை பார்க்க நேர்ந்தது; மண்டலிக்குத் தகவல் கொடுத்த வேளையில், அவர்களில் ஒருவர் அதைக் கொன்றார்.

பாபா மட்டுமே உண்மையானவர், உயர்ந்தவர்களில் உயர்ந்தவர், இதர அனைத்தும் மாயை என்பதை கடவுள் ஒரு நாள் அவரை (பிளீடர்) உணரச் செய்யட்டும்.

தமது மண்டலியைப் பற்றி பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:



**எனது நெருங்கிய மண்டலியில் ஒவ்வொருவரும் உண்மையான மாணிக்கக் கற்கள், அவர்கள் பல ஆண்டுகளாக என்னுடன் இருந்து வருபவர்கள், எனது ஒரே வார்த்தையில் தங்கள் உயிரைக் கொடுக்கத் தயாராக இருப்பவர்கள்.**

**இங்கிருந்து சிறிது தொலைவில் மற்றுமொரு கூண்டு அறை உள்ளது, அங்கு, சில வாரங்கள் எனது மண்டலியால் என் முகத்தைக் கூட பார்க்க முடியவில்லை. தேவைப்படும்போது, ஒரு சிறிய துவாரம் வழியாக, எழுத்துப்பலகை மூலம் அவர்களுக்கு அறிவுறுத்தி வந்தேன். இந்த அறையையும் உங்களுக்குக் காட்ட விரும்பினேன், ஆனால் இப்போது நேரம் இல்லை. இப்போது நாம் இங்கிருந்து கீழே செல்வோம், கூட்டத்தில் நான் உங்களுக்குத் தேவையான சில விஷயங்களைச் சொல்ல வேண்டும். எனவே ஒருவர் பின் ஒருவராக வரிசையில் சென்று, எனது இறுதி ஓய்விடத்தைப் பார்வையிட்டு, சந்திப்புப் பந்தலுக்குப் புறப்பட்டுச் செல்லுங்கள்.**

கதவுகள் அருகே நின்றுகொண்டிருந்த ஜான் பாஸிடம் அவற்றைத் திறக்குமாறு பாபா கூறினார். வரிசையாக ஆண்கள் உள்ளே சென்று பார்வையிட்டு, அவதார புருஷரின் இறுதி வாசஸ்தலத்தின் வாசலில் வணங்கி, பின்னர் அனைவரும் மலையில் இறங்கி நடந்தனர்.

காலை சுமார் 10:00 மணியளவில், பாபா, சந்திப்புக் கூடாரத்திற்குள் நுழைந்த வேளையில் நடவடிக்கைகள் தொடங்கின. எரச், விஷ்ணு இருவரும் ஆங்கிலத்தில் பாபாவின் எழுத்துப்பலகையை வாசிக்க, அதை கேஷவ் நிகம் ஹிந்தியிலும், தேஷ்முக் மராட்டி, குடும்ப ஸாஸ்திரி தெலுங்கு, புர்ஜர் மேத்தா குஜராத்தியிலும் மொழிபெயர்த்தனர். பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**எனது இறுதிப் பிரகடனத்தை வழங்குவதற்கு முன்னர், இதர விஷயங்களைப் பற்றி சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். கூட்டம் நிறைவடைந்ததும் நான் உடனே எழுந்து சென்றுவிடுவேன். இந்த சந்திப்பின் முழு பலனை அடையப் பெறவும், இந்த இடத்தின் சூழ்நிலையுடன் தத்தமது இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல விரும்புவோர், சந்திப்பு முடிந்தவுடன் நேரடியாக அவரவர் இடங்களுக்குப் புறப்பட வேண்டும். எவரேனும் மும்பையிலோ அல்லது வேறு இடங்களிலோ தங்க விரும்பினால், அவர்கள் குறிப்பாக பாபாவிடம் மட்டும் வரவில்லை, ஆனால், பேசி, உலாவி, விளையாடி தங்கள் சொந்த விஷயங்களில் ஈடுபடுவதற்காகவும் வந்துள்ளதாகப் பொருள்படும். எனவே அனைவரும் ஒரே நேரத்தில் வீடு திரும்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஜபல்பூரைச் சேர்ந்த முரளி காளே,** (அவரது தந்தை காளேமாமாவின் சாம்பலைக் கொண்டு) **பஞ்ச்கணிக்குச் செல்லலாமா என்று கேட்டதற்கு, அவர் வீடு திரும்ப வேண்டும் என்றும், பின்னர் அவர் தேவைப்பட்டால் பஞ்ச்கணிக்குச் செல்லலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டார். இதேபோன்ற எண்ணங்களைக் கொண்ட உங்கள் ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும்.**



அன்பர்களுக்கு பூரிகளை வழங்கும் காட்சி, மெஹராபாத், செப்டம்பர் **1954**
(DISTRIBUTING PURIS TO LOVERS, MEHERABAD, SEPTEMBER 1954)



அன்பர்களுடன் கோலி விளையாடல், மெஹராபாத், செப்டம்பர் **1954**
(PLAYING MARBLES WITH LOVERS, MEHERABAD, SEPTEMBER 1954 )

**பிரகடனத்திற்கு முன்னர், எனது குருநாதர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறுவேன். இன்றைய இரண்டு நிகழ்ச்சிகளிலும், நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவதைத் துல்லியமாக எடுத்துரைப்பேன்.**

பாபா, ஸாக்கோரியிலிருந்து வந்த ஐவரையும் முன்னால் வந்து மேடையில் அமருமாறு கேட்டுக்கொண்டார். அதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது:

**நான் என்னவாக இருக்கிறேன், நான் என்னவாக இருந்தேன், நான் என்னவாக, ஆதிகால புருஷனாக இருப்பேன் என்பதற்கு இந்த யுகத்தின் பரிபூரண குருநாதர்களான சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், பாபாஜான், தாஜுதீன் பாபா, நாராயண் மஹாராஜ் ஆகிய ஐவரே காரணம். இவர்கள்தான் எனக்கு இந்த யுகத்தின் ஐந்து குருநாதர்கள். இந்த ஐவருக்கும் நான் தலைவணங்குகிறேன்.**

தலை தாழ்த்தி பாபா அவர்களுக்கு வணக்கம் செலுத்தினார்.

இரண்டு அல்லது மூன்று முறை, பாபா, தேஷ்முக்கின் மராட்டி மொழிப்பெயர்ப்பைத் திருத்த வேண்டியிருந்தது, இந்த நேரத்தில், **"நீங்கள் தத்துவத்தில் தேர்ச்சி அடைந்து டாக்டர் பட்டம் பெற்றவர், ஆனால் நான் விரைவில் என் உடலைக் கைவிடுவேன் என்று நீங்கள் நினைப்பதால், துக்கத்தில் ஆழ்ந்துவிட்டீர்கள், உங்கள் மனம் முழுவதும் இன்று குழப்பத்தில் உள்ளது!"**

தொடர்ந்து பாபா கூறினார்:

**மஹாராஜ் மற்றும் பாபாஜான் மட்டுமே நேரடியாக முக்கிய பங்கை வகித்தனர். பாபாஜான், ஒரு வினாடியின் லட்சத்தில் ஒரு பாகத்திற்குள், நான் கடவுள் என்பதை எனக்கு உணர்த்தினார்; தொடர்ந்து ஏழு வருடங்களில், உபாஸனி மஹாராஜ் நான் அவதார புருஷர் என்ற தெய்வீக ஞானத்தை வழங்கினார். மஹாராஜ் தமது உடலை கைவிடுவதற்கு முன்பு, நாங்கள் தனிமையாக ஓரிடத்தில்** (உடல் ரீதியாக) **சந்தித்தோம். மேலும், நான் என் உடலைத் துறப்பதற்கு முன்னர், அவரை சந்திக்க வேண்டியதாக இருந்தது.**

**எனவே நான் ஸாக்கோரிக்குச் சென்று, அவருடைய சன்னதியை வணங்கி, "நான் ஆதிகால புருஷன் என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று கூறினேன். மஹாராஜ் பரிபூரணத்தின் ஒட்டுமொத்த ஆதாரம். ஸாக்கோரி ஆசிரமத்தின் தலைவராக, 'யஷோதா' என்று அழைக்கப்படும் கோதாவரி மாய் இருக்கிறார். அவர் ஒரு தனித்துவமான ஆளுமைமிக்க பெண்மணி; வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் என்னை நேசிக்கிறார், மேலும் அவர் எனக்கு மிகவும் பிரியமானவர்.**

பாபா, ஐந்து ஸாக்கோரிவாழ் அன்பர்களை அறிமுகப்படுத்தும் விதத்தில் முதலில் யஷ்வந்த் ராவை எழச் சொல்லி, **"அவர் மஹாராஜுக்கும் மேர்வானுக்கும் இடையே உள்ள இணைப்புச் சங்கிலி"** என்று கூறினார். மேலாளர் வாக் எழுந்து நின்றபோது, **"இவர் வாக், பல ஆண்டுகளாக அலுவலகப் பணிகளையும், ஸாக்கோரி ஆசிரமத்தின் அனைத்து**

ஏற்பாடுகளையும் உண்மையாகவும் நேர்மையாகவும் செய்து வருகிறார். ஸாக்கோரியின் சில முக்கிய தூண்களில் ஒருவராக இவரை அழைக்கலாம்." வஸந்த் தேஷ்முக் என்பவரைக் குறித்து பாபா கூறினார், "இதோ ஸாக்கோரியின் தலைமைப் பூசாரி. ஆனால் இவரைப் போன்ற சமய குருமார் கூட என்னை கொடூரமான மரணத்திலிருந்து காப்பாற்ற இயலாது." புரந்தரே என்பவரைக் குறித்து பாபா கூறினார், "ஸாக்கோரியில் மிகவும் நேர்மையும், உண்மையுமுள்ள சேவகர்களில் ஒருவர்." இறுதியாக, பரூச்சா எழுந்து நின்றதும், பாபா கூறினார், "இந்த வயதான பார்சி தந்தை, மஹாராஜின் பாதங்களுக்கு அருகில் அடைக்கலமாகி, கடவுளை முழு மனதுடன் நேசிக்கிறார், கடவுளுக்காக ஏங்குகிறார்." அதற்குப் பிறகு ஸாக்கோரி ஆண் அன்பர்கள் மேடையை விட்டு வெளியேறினர், பாபா தொடர்ந்தார்:

இப்போது, தயவுசெய்து கவனமாகக் கேளுங்கள்; விழிப்புடன் இருங்கள், தூங்கி விழாதீர்கள். நான் பேசுவதையும், எழுதுவதையும் நிறுத்திவிட்டதால், எனது கையெழுத்தைத் தவிர, இன்றியமையாத தருணங்களில், எனது மௌனத்தை, இத்தனை வருடங்களாக இந்த எழுத்துப்பலகையின் உதவியுடன் தொடர்ந்தேன். 1954ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் நாள் முதல், எழுத்துப்பலகையைக் கைவிடப்போகிறேன். குஸ்தாஜியைப் போல், எண்ணங்களைத் தெரிவிக்க, எனது விரல் சைகைகளால் எதையும் நான் செய்ய மாட்டேன். அக்டோபர் 7ஆம் நாள் முதல், நான் பேசவோ, எழுதவோ, எழுத்துப்பலகையைப் பயன்படுத்தவோ, விரல் சைகைகளால் தெரிவிக்கவோ மாட்டேன். நான் என்னுள்ளே ஒதுங்குவது போல் இருப்பேன். ஏனெனில், கடைசியாக, எனது மௌனத்தைக் கலைக்கும் காலம் மிக அருகாமையில் உள்ளது. 1954 அக்டோபர் 7 முதல், நான் எனது தற்போதைய நடவடிக்கைகளிலிருந்து முழுமையாக ஓய்வு பெறுகிறேன். வெகுஜன தரிசனங்கள், நிகழ்ச்சிகள், கூட்டங்கள், செய்திகள், கடிதப் பரிமாற்றங்கள் எதுவும் இருக்காது. இதைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள், அக்டோபர் 7 முதல் எனக்கு எழுத வேண்டாம், ஏனெனில் நான் கடிதப் பரிமாற்றங்களில் கவனம் செலுத்த மாட்டேன். எனினும், காட்கே மஹாராஜ் என்னை பண்டர்பூருக்கு அழைத்துச் செல்லும் போது, அவருக்கு இதைச் செய்யும் பாக்கியம் இருந்தால், நான் இந்த உடலை விரைவில் கைவிடுவதற்கு முன்னதாக அது நிகழும். எனக்கு என்ன நடக்கும் என்பதை சில வார்த்தைகளில் சரியாகவும் துல்லியமாகவும் சொல்லும்படி மண்டலி இன்று என்னிடம் கேட்டுக்கொண்டனர். எனவே நான் உங்களுக்குக் கூறுகிறேன்; அதைக் குறித்துக் கொள்ளுங்கள்.

அக்டோபர் மாதத்தில், சத்தாராவில் நான் ஓய்வு பெற்று, சாதாரண வாழ்க்கை வாழ்ந்து, உண்டு, அருந்தி, நடைப்பயிற்சி செய்வது போன்ற மற்றும் பலவற்றில் ஈடுபடுவேன். ஆனால் நான் கூறியதற்கிணங்க, அக்டோபர் 7 முதல் எழுத்துப்பலகை போன்றவற்றால் எந்த பயனும் இருக்காது. 1955 ஏப்ரல் மாத இறுதிக்குள், நான் நிச்சயமாக இந்த உடலை

**கைவிடுவேன். நவம்பர் முதல் ஏப்ரல் வரையிலான ஆறு மாதங்களில், அவதார புருஷரின் வாழ்க்கையின் மூன்று கட்டங்கள் வெளிப்படும். முதலில், மிகவும் விசித்திரமான மற்றும் தீவிரமான நோய் இந்த உடலைத் தாக்கும், இதுதான் நான் கூறிவந்த அவமானத்தின் காரணமாக இருக்கும். இரண்டாவதாக, இந்த அவமானம் முடிவுக்கு வரும் வேளையில், திடீரென எனது மௌனத்தைக் கைவிட்டு, கடவுள் மட்டுமே மொழியும் அந்த இறை வார்த்தையை நான் உச்சரிக்கும் தருணம் வரும். மூன்றாவதாக, எனது வானளாவிய புகழ் அவமானத்தின் இடத்தை ஆக்கிரமிக்கும். என்னுள் மறைந்திருக்கும் அளவிறுதியற்ற தன்மை அனைத்தும் சிதறி பிரபஞ்சம் முழுவதும் பரவும்!**

டாக்டர் டானை மேடைக்கு அழைத்து, பாபா எழுத்துப்பலகையில் தொடர்ந்து எடுத்துரைத்து, அதை டானிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டார்:

பாபா, **அணுகுண்டைக் குறித்த ஓர் உவமையைப் பயன்படுத்த விரும்புகிறார். அணுகுண்டு, அதன் அளவில் சிறியதாக இருந்தாலும், வெடிக்கும் வேளையில், மிகப்பெரிய அழிவை ஏற்படுத்துவது போல், அவர் தனது மௌனத்தைக் கலைக்கும்போது நிகழும் உலகளாவிய ஆன்மீகக் கொந்தளிப்பு, எவராலும் விவரிக்க முடியாத ஒன்றாக இருக்கும். எவரும் எதிர்பாராத நேரத்தில் அது ஒரு நொடியில் நடக்கும். திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டால், எவரும் தயாராக இல்லாத நிலையில், எவராலும் எதுவும் செய்ய முடியாத அந்த நேரத்தில், பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள அனைவரும் அதை உணர்வது போல், அவரது மௌனம் கலைவதால் விளையும் ஆன்மீகக் கொந்தளிப்பை, அனைவரும் உள்ளத்தில் உணர்வார்கள்.**

பாபா தொடர்ந்தார்:

**மேலும், நம்பமுடியாததாகத் தோன்றினாலும், நான் எங்கிருந்தாலும், எனது உலகளாவிய மகிமை எனது பௌதீக உடல் இருக்கும் இடத்திற்கு அருகில் வெளிப்படாது. நான் மகிமைப்படுத்தப்படும் நேரத்தில், உலகம் முழுவதும் வாழும் அனைவரும் அதை உணர்வார்கள், ஆனால் என்னைச் சுற்றி இருப்பவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அவ்வேளையில் அங்கு இருப்பவர்கள், பாபாவின் மீது அக்கறையற்றவர்களாகவும், உண்மையில் விரோதப் போக்கைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருப்பார்கள். உதாரணமாக, நான் அப்போது பூனாவில் இருக்கலாம், எனதருகில் மண்டலியிலிருந்து எவரும் இருக்கமாட்டார்கள்; ஆனால் விரோதக் குழுவில் 30 அல்லது 40 பேர் இருக்கலாம், அவர்கள் இந்த மகிமையையும் எழுச்சியையும் உணர மாட்டார்கள். உலகின் இதர அனைவரும் உணர்வார்கள். என்னைப் புண்படுத்தி துரோகமாக விமர்சிக்கும் கட்டத்தில் எனது மண்டலி அல்லது அன்பர்கள் எவரும் என் அருகில் இருக்க மாட்டார்கள்.**

**இருந்தாலும் நான் இறப்பை சந்திக்கப் போவதில்லை. நான் எப்பொழுதும் ஆதிகாலத்தவனாகவே இருப்பேன். கடவுள் மட்டுமே உண்மையானவர், இதர அனைத்தும் மாயை என்பதை நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.**

**நீங்கள் அனைவரும், அல்லது உங்களில் சிலரோ அல்லது குறைந்த பட்சம் உங்களில் ஒரு சிலர் என் அன்பின் செய்தியை பிறர் மத்தியில் பரப்பினால், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதும், இந்த நிகழ்வுகளைப் பற்றி துல்லியமாக, திட்டவட்டமாக கேட்பதும் மதிப்புக்குரியதாக இருக்கும்.**

**மாலை 3:00 முதல் 5:00 மணி வரை, எனது இறுதிப் பிரகடனம் நான்கு மொழிகளிலும் வாசிக்கப்படும். ஐந்து மணிக்குப் பிறகு, நீங்கள் புறப்பட்டுச் செல்லலாம், நாளை மதிய வேளைக்குள் அனைவரும் புறப்பட்டாக வேண்டும்.**

**இரவு உணவுக்குப் பின்னர், எனது ஸாக்கோரி விஜயத்தின் புகைப்படங்கள் உங்களுக்குக் காண்பிக்கப்படும். ஆனால் பாபாவைத் தழுவவோ, பாபாவிற்கு மாலை அணிவிக்கவோ, பாபாவிடம் எதையும் கேட்கவோ முயற்சிக்காதீர்கள். நீங்கள் கோலி விளையாட விரும்பினால், என்னுடன் இணையலாம்!**

காலை நேரக் கூட்டம் 11.15 மணிக்கு நிறைவடைந்ததும், சமையலறைக்குச் சென்ற பாபா, பூரி செய்வதற்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்த மாவை, பூரிகளாக உருட்டத் தொடங்கினார். அவற்றை வழக்கமாகத் தயார் செய்யும் எவராலும் அவரது வேகத்திற்கு இணையாகச் செய்ய முடியவில்லை. உணவு பரிமாறுவதில் பாபாவும் கைகொடுத்தார். சகன் சமையலுக்கான மிகச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார், அது அவருக்கு பாபாவின் அன்புப் பரிசாகும். இரவும் பகலும் அயராது உழைத்து, 1,000க்கும் மேற்பட்டோருக்கு உணவு தயார் செய்வதைக் கண்காணித்து வந்தார்.

பாபாவே தமது அன்பர்களுக்குப் பூரிகளைப் பரிமாறத் தொடங்கினார், ஒரு வரிசையிலிருந்து அடுத்த வரிசைக்கு விரைவாகச் சென்றார்.

கட்டுப்படுத்த முடியாமல் அழுதுகொண்டே, புக்கார், பாபாவிடம், “இப்போது உடலைக் கைவிடாதீர்கள். உலகிற்கு நீங்கள் அதிகமாகத் தேவைப்படுகிறீர்கள். நீங்கள் உடலைக் கைவிடுவதாக இருந்தால், முதலில் எங்களை இவ்வுலகிலிருந்து அனுப்பிய பின்பு நீங்கள் போகலாம்” என்று வேண்டினார்.

புக்காரின் உள்ளங்கையைத் தமது கையில் எடுத்து பாபா, “**நான் சத்தியம் செய்கிறேன்**” என்று கூறியதும் புக்கார் ஆறுதல் அடைந்தார். பாபா தமது உடலைக் கைவிடுவதற்கு முன்னர் அவர் உயிரைத் துறந்துவிடுவார் என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

பாபா தமது அன்பர்களிடம் சென்று, “**நீங்கள் நன்றாக சாப்பிட்டீர்களா? மேலும் எடுத்துக்கொள்ளுங்கள்!**” என்றார்.

தேஷ்முக், காடேக்கர் மேலும் சிலர் உணர்ச்சிவசப்பட்டனர். காலம் இதை இவ்வாறு பார்த்தது: “தெய்வீக மதுபானம் அழுது கொண்டிருந்தது; அது மதிய உணவில் பங்கெடுத்தது, கவலையில் கண்ணீரும் கம்பலையுமாகத் தோன்றியது, அதே வேளையில் கவலையின்றி குதூகலமாகவும், சுதந்திரமாகவும் இருந்தது!”

ஜான் பாலன்டீன் எப்படி உணர்கிறார் என்பதைக் கண்டறிய சாப்பாட்டுப் பந்தலிலிருந்து பாபா, டாக்டர் டானின் மருந்தகத்திற்குச் சென்றார். அவர் உடல்நலமின்றி மருத்துவமனையில் இருந்தார். அவரைப் பார்த்த பின்பு, பாபா மண்டபத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையில், ஒரு ஹமிர்பூர் அன்பர் அவரிடம் அழைத்து வரப்பட்டார். பாபா விரைவில் உடலைக் கைவிடுவதைக் கேள்விப்பட்ட அந்த நேரத்திலிருந்து, அவர் உண்ணுவதையும், உரையாடுவதையும் நிறுத்திவிட்டார். அவரை அருகில் அமரச் சொல்லி, பாபா தமது கைகளால் இரண்டு வாழைப்பழங்களை உண்ணச் செய்தார்.

ஒரு பெரிய குழுவை மண்டபத்திற்குள் அழைத்த பாபா அவர்களை நோக்கி ஆரஞ்சு பழங்களை வீச ஆரம்பித்தார். ஜால்பாயைத் தவிர பலர் அவற்றைப் பற்றிக்கொள்ள முடிந்தது; அவர் தரையில் விழுந்ததைத் திரும்பப் பெற்றுக் கொண்டபோது, பாபா அதை மீண்டும் அவரிடம் எறிந்தார், இந்த முறை அவர் அதைக் கச்சிதமாகப் பற்றிக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து பாபா, தமது அன்பர்களுடன் கோலி விளையாடினார். அவர்களுக்கு ஸாக்கோரி புகைப்படங்கள் காட்டப்பட்டன, பாஸ்கர ராஜு (BHASKARA RAJU), பச்சூபாய் ஜே. ஸோனி (BACHOOBHAI J. SONI), ருஸ்தம் காக்கா, மதுசூதனன், டாக்டர் அப்துர் ரஹ்மான் (கனியின் சகோதரர்) ஆகியோர் பாபாவுக்காக, பாடல்களைப் பாடினர்.

பிற்பகல் 2:40 மணிக்கு, சந்திப்புக் கூடாரத்திற்குச் சென்ற பாபா, நஸர்வான் ஸட்டாவைப் பற்றி கேட்டார். அவர் ஆதி சீனியருடன் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது; ஆனால் பத்து நிமிடத்தில் அவர் திரும்பி வந்தார். அதுவரை பாஸ்கரா, ராமபத்ர ராஜு இருவரின் ‘நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா’ உள்ளிட்ட சில பாடல்களை பாபா கேட்டு மகிழ்ந்தார்.

சரியாக மதியம் 3:00 மணிக்கு, பாபாவின் ‘இறுதிப் பிரகடனம்’ (FINAL DECLARATION) நான்கு மொழிகளில், எரச் - ஆங்கிலம்; தேஷ்முக் - மராட்டி; கேஷவ் நிகம் - இந்தி; குடும்ப ஸாஸ்திரி - தெலுங்கிலும் வாசிக்கப்பட்டது:

**நீங்கள் அனைவரும் இங்கு இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**

**உங்களில் பலர் மிகவும் கடினமான சூழ்நிலையில் மெஹராபாத்திற்கு வந்திருப்பதை நான் அறிவேன். உங்களில் சிலர் ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்தும், சிலர் கண்டங்களைக் கடந்தும் இன்று மெஹராபாத் கூட்டத்தில் பங்கெடுப்பதற்காக வந்துள்ளீர்கள். என் மீதான உங்கள் ஆழ்ந்த அன்பு ஒன்றுதான், எல்லா தடைகளையும் துணிச்சலாக எதிர்கொண்டு, இன்று என் அழைப்பை ஏற்றுக்கொள்ளவும், என்**

அருகில் இருக்கவும், உங்கள் வசதிகளையும், சௌகரியங்களையும் தியாகம் செய்யவும் தூண்டியது.

உங்கள் பக்தி என் ஆழ் இதயத்தை நெகிழச் செய்தது; அத்தகைய அன்பையும் நம்பிக்கையையும் கொண்ட இதயங்களை எண்ணி நான் பெருமைப்படுகிறேன்.

உங்களைப் போன்ற இன்னும் பல தியாகத்தின் இலக்கணமான இதயங்கள் இங்கு இருக்க ஏங்குகின்றன, ஆனால் அவர்கள் இன்று உங்கள் மத்தியில் இல்லை. என் அருகில் இருக்க வேண்டும் என்ற அதீத ஆசை இருந்தபோதிலும், ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்களால் வர முடியவில்லை என்பதை நான் அறிவேன். எனவே, இந்த இரண்டு நாட்களில் உங்களால் அடையப் பெற்ற இந்தத் தனித்துவமான வாய்ப்பின் மூலமாக, நீங்கள் பார்க்கும், கேட்கும் அனைத்தையும், விரிவாகத் தெரிந்துகொள்ள அவர்கள் உங்களைச் சார்ந்துள்ளனர். நீங்கள் அவர்களைத் தோல்வியுறச் செய்ய மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் என் மீது கொண்டுள்ள அன்பும், நம்பிக்கையும் உங்களை இங்கு அழைத்து வந்தாலும், என்னுடைய தனிப்பட்ட தொடர்பை அடையப் பெறுவதை நீங்கள் பாக்கியமாக உணர்ந்தாலும், எனது அழைப்பின் உண்மையான முக்கியத்துவத்தையும், இங்கு இருப்பதைக் குறித்தும் நீங்கள் இந்தத் தருணத்தில் எதையும் உணரமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். இந்த மாநாட்டின் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தை காலம்தான் உங்களில் பெரும்பாலோருக்கு உணர்த்தும், அதற்காக பல மாதங்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

அவ்வப்போது நான் பலமுறை வலியுறுத்தியவை அனைத்தும் நிச்சயம் நிறைவேறும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உங்களில் பெரும்பாலோர் அந்த நிகழ்வுகளுக்கு சாட்சியாக இருப்பீர்கள், மேலும் நீங்கள் மெஹராபாத்தில் தங்கியிருந்த இந்த இரண்டு நாட்களில் நடந்த அனைத்தையும் மிகத் தெளிவாக நினைவுபடுத்திப் பார்ப்பீர்கள்.

நான் எதையும் நிறுவ வரவில்லை; நான் பழமைக்கு உயிரூட்டம் தர வந்துள்ளேன். நான் தியான மையங்கள், ஆசிரமங்கள் போன்றவற்றை நிறுவவும் வரவில்லை. எனது 'உலகளாவிய பணி'யின் நிமித்தம் நான் அவற்றை உருவாக்கினாலும், அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் அவற்றை மீண்டும் கலைத்து விடுகிறேன்.

பிரபஞ்சம் எனது ஆசிரமம், ஒவ்வோர் இதயமும் எனது இல்லம், ஆனால் என்னைத் தவிர வேறு எதுவும் வாழாத இதயங்களில் மட்டுமே நான் வெளிப்படுகிறேன்.

எனது அன்பெனும் உலகளாவிய மதம் சின்னாபின்னமாகி, எந்த முக்கியத்துவமும் இல்லாமல் மறைந்துவிடும் தருணத்தில், அதற்கு உயிர்மூச்சாக, மதங்களின் பெயரால் அதை சீரழிக்கும் கோட்பாடுகளின்

கேலிக்கூத்துகளை அகற்றவும், சடங்கு சம்பிரதாயங்களை ஒடுக்கவும் நான் வருகிறேன்.

தற்போதைய உலகளாவிய குழப்பம், அமைதியின்மை அனைத்தும் மனிதனின் இதயத்தை, அதிகார மோகம், பணம், புகழ் போன்ற பேராசையால் நிரப்பியுள்ளதன் விளைவாக, சொல்லொணாத் துன்பம், துயரம், வெறுப்பு, பொறாமை, விரக்தி, அச்சம் போன்றவற்றைக் கொண்டுவருகிறது. அமைதியையும் செழுமையையும் பரவச் செய்து, நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொண்டுவர எவ்வளவுதான் பாடுபட்டாலும், உலகம் துன்பத்தின் உச்சத்திலேயே உள்ளது.

மனிதன் நிரந்தரமான மகிழ்ச்சியின் கண நேரக் காட்சியைக் காண்பதற்கு, கடவுள் எல்லாவற்றிலும் இருப்பதால், அனைத்தையும் அறிந்திருக்கிறார் என்பதை அவன் முதலில் உணர வேண்டும்; கடவுள் மட்டுமே எல்லாவற்றிலும் செயல்படுகிறார், எதிர்வினையாற்றுகிறார்; கடவுள், எண்ணற்ற உயிருள்ள, உயிரற்ற உருபொருட்களின் போர்வையில், இன்ப துன்பங்களின் எண்ணற்ற, பலவகையான நிகழ்வுகளை அனுபவிக்கிறார். இவ்வாறு, மனித அனுபவத்தில் துன்பத்தை அதன் உச்சத்திற்கு கொண்டு வந்தவர் கடவுள்; இந்த மாயையின் பொய்யும் போலியுமான துன்பத்தை நீக்கி, அதே மாயையின் பொய்யும் போலியுமான மகிழ்ச்சியை அதன் உச்சத்திற்கு கொண்டு வருவதும் கடவுளே!

அது படைப்பாக வெளிப்பட்டாலும் அல்லது ஏக இறைவனாகிய உண்மைப்பொருளின் ஒருமையில் மறைந்தாலும், அது உளதாய் இருப்பதாகவும், உண்மையாகவும் உணர்ந்தாலும் அல்லது பொய்யானதாகவும் இல்லாததாகவும் உணரப்பட்டாலும், ஆரம்பம் முதல் இறுதிவரை எல்லாம் மாயையே. கற்பனைக்கு முடிவே இல்லை என்பது போல, மாயைக்கும் முடிவே இல்லை.

மாயையின் அனுபவத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன - பன்மை மற்றும் ஒருமை. பன்மை (பல தன்மை) பலவற்றைப் பெருக்கினாலும், ஒருமை (ஒருமைத் தன்மை) தன்னைப் பெரிதாக்கிக் கொண்டே செல்கிறது. பன்மை என்பது மாயையின் 'மதம்', அதில் மாயை செழித்தோங்கி வளர்கிறது.

'காலம், நேரம்' எனும் மாயையின் தொடக்கத்தில், மாயையில் இன்று இருப்பது போன்ற குழப்ப நிலை எப்போதும் இருந்ததில்லை. பரிணாம வளர்ச்சியின் உணர்வுநிலை ஆரம்பமானபோது, மாயையில் பன்முகத்தன்மை இருந்தபோதிலும், ஒருமை இருந்தது. உணர்வுநிலையின் வளர்ச்சியுடன், பன்மைத் தன்மையும் அதிகரித்துக் கொண்டே சென்றது, இப்போது அது வரம்பை மீற உள்ளது. அலை அதன் உச்சத்தை அடைவது போல், இந்தப் பன்முகத்தன்மையும் அதன் உச்சத்தை அடைந்து, அதனைக் கரைத்து, மாயையில் ஒருமையின் தொடக்கத்தைக் கொண்டுவரும். துன்பம்

அதன் உச்சத்தில், இந்தப் பன்முகத்தின் உச்சநிலையின் அழிவை ஏற்படுத்தும்.

முன்னரே விதிக்கப்பட்ட, மனிதனை ஒற்றுமை மற்றும் சகோதரத்துவ உணர்வை அனுபவிப்பதிலிருந்து தடுக்கும் பல பிரிவினைகளின் அழிவுக்கான நேரம் வந்துவிட்டது. மிக விரைவில் நிகழவிருக்கும் இந்த அழிவு, உலகில் நான்கில் மூன்று பங்கு அழிவை ஏற்படுத்தும். எஞ்சிய நான்கில் ஒரு பங்கானது, இணக்கமான மற்றும் பரஸ்பர புரிதலுடன் கூடிய வாழ்க்கையை வாழ்வதற்காக ஒன்றிணைக்கப்படும்; இது, அனைத்து சக உயிரினங்களிலும் ஒற்றுமை உணர்வை நிலைநாட்டி, அவர்களை, நீடித்த மகிழ்ச்சியை நோக்கி அழைத்துச் செல்லும்.

நான் எனது மௌனத்தைக் கலைக்கும் முன்னர், அல்லது அதற்குப் பின்னர், உலகின் நான்கில் மூன்று பங்கு அழிந்துவிடும். விரைவில் நிகழ இருக்கும் அனைத்தையும் நிறைவேற்ற நான் விரைவில் பேசுவேன்.

மத நம்பிக்கைகளை உறுதிப்படுத்துவது, சமூகங்களை நிறுவுவது அல்லது மாநாடுகளை நடத்துவது மனிதகுலத்தின் வாழ்க்கையில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் உணர்வை ஒருபோதும் கொண்டுவராது; மனித குலம் இப்போது மாயையின் பன்முகத்தன்மையில் முழுமையாக உள்வாங்கப்பட்டுள்ளது. வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமை என்பது இதயத்தின் ஆழத்தைத் தொடுவதன் மூலம் மட்டுமே உணர முடியும். நான் வந்ததன் நோக்கம் இதுவே!

மாயையில், உங்கள் வாழ்க்கையை அனுபவித்து, தாங்கிக்கொள்ள வேண்டிய மேலோட்டமான பன்முகத்தன்மை இருந்தபோதிலும், அன்பின் மூலம், உலகின் அனைத்து தேசங்களிலும், மதங்களிலும், பிரிவுகளிலும், ஜாதிகளிலும் ஒருமைப்பாட்டு உணர்வை ஏற்படுத்துவதற்காக, உங்கள் இதயங்களில் அன்பின் விதையை விதைக்க வந்துள்ளேன்.

இதை நிறைவேற்றும் வகையில், எனது மௌனத்தைக் கலைக்கத் தயாராகி வருகிறேன். நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, அது உங்கள் செவிகளை ஆன்மீக விரிவுரைகளால் நிரப்புவதாக இருக்காது. நான் ஒரே ஓர் 'இறை வார்த்தை'யை மொழிவேன்; இந்த 'இறை வார்த்தை' எல்லா மனிதர்களின் இதயங்களிலும் ஊடுருவி, பாவியைக் கூட, தான் ஒரு துறவியாக இருக்க வேண்டியவன் என்று உணர வைக்கும், அதே நேரத்தில், கடவுள், பாவியில் இருக்கும் அளவுக்குத் தன்னிலும் இருக்கிறார் என்பதைத் துறவி அறிந்து கொள்வார்.

நான் அந்த 'இறை வார்த்தை'யைப் பேசும்போது, அடுத்த 700 ஆண்டுகளில் நடக்கவிருக்கும் அனைத்திற்குமான அடித்தளத்தை நான் அமைப்பேன். 700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் மீண்டும் வரும்போது, பரிணாம உணர்வுநிலை அதன் உச்சத்தை அடைந்திருக்கும், பொருள்முதல்வாதப் போக்குகள் தானாகவே ஆன்மீக ஏக்கமாக

மாற்றப்படும், மேலும் ஆன்மீக சகோதரத்துவத்தில் சமத்துவ உணர்வு மேலோங்கும். இதன் பொருள் என்னவெனில், இன்று, அவற்றின் முழு அளவில் ஆதாரமாகத் திகழும் செல்வம் மற்றும் வறுமை, கல்வியறிவு மற்றும் கல்வியறிவின்மை, பொறாமை மற்றும் வெறுப்பு ஆகியவை அனைத்து மனிதர்களின் ஒற்றுமையின் உணர்வுகளின் மூலம் கரைந்துவிடும். செழிப்பும் மகிழ்ச்சியும் அதன் உச்சத்தில் இருக்கும்.

இதன் அர்த்தம், மாயையில் ஒருமைத்தன்மை என்றென்றும் நிலைத்திருக்கும் என்றல்ல. ஏனெனில் இதில் இருப்பவை அனைத்தும் மாயை. ஒருமையின் உணர்வு, அதே போல் மாயையில் பன்முகத்தன்மை ஆகியவை பரிணாம வளர்ச்சியின் ஓர் அங்கமாகும். மாயையில் பன்மை மற்றும் ஒருமையின் அதே ஆரம்பம், வளர்ச்சி, உச்சக்கட்டம் ஆகியவை மீண்டும் நிகழும் நேரம் வரும்.

எனது அடுத்த அவதார காலகட்டம், நான் இந்த உடலைக் கைவிட்ட பின்னர், 700 ஆண்டுகள் கடந்து வரும்; அது காலச்சுழற்சிகளின் முடிவையும் தொடக்கத்தையும் குறிக்கும். மாயையில், காலத்தின் அனைத்து சுழற்சிகளும் 700 முதல் 1400 ஆண்டுகளுக்குப் பிறகு முடிவடைந்து, தொடங்குகின்றன. காலச்சுழற்சிகளின் சுழற்சியில் லட்சக்கணக்கான மற்றும் கோடிக்கணக்கான சுழற்சிகள் இருந்ததுபோல், இனிமேலும் இருக்கும். எனவே, மாயைக்கு முடிவே இல்லை, அது எப்பொழுதும் மாயையாகவே இருந்துகொண்டிருக்கும்.

காலங்காலமாக, அவதார புருஷர் மனிதர்களிடையே தோன்றி, அவருடைய சுய படைப்பான மாய உலகைப் பராமரிக்கும் அதே வேளையில், மனிதகுலத்தில் அதைப் பற்றிய விழிப்புணர்வையும் எழுச்சியுறச் செய்கிறார். மாயையின் கட்டமைப்பு எப்போதும் ஒன்றாகவே இருந்தாலும், அதன் வடிவமைப்புகள் எண்ணிலடங்காததும், என்றைக்கும் மாறிக்கொண்டே இருப்பதுமாகும். எனது வருகை, மாயையை அழிப்பதற்காக அல்ல, ஏனெனில் மாயையானது, அது இருக்கும் நிலையில் ஒன்றுமில்லாதது. மாயை ஒன்றுமில்லாதது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவே, நான் உங்களிடையே வருகிறேன். உங்களின் மூலமாக, நான் தானாகவே மாயையை பராமரிக்கிறேன்; இது என் எல்லையற்ற சுயத்தின் நிழலைத் தவிர வேறொன்றுமில்லை; மேலும் அதன் பொய்த்தன்மையை நீங்கள் அறிந்து கொள்ளும் தருணத்தில், என் மூலமாக, நீங்கள் தானாகவே மாயையை நிராகரிக்கிறீர்கள்.

இக்காலகட்டத்தின் அவதார புருஷராக எனது வெளிப்பாடு குறுகிய காலமே இருக்கும். இந்தக் குறுகிய காலத்தில், எனது அவமானம், எனது மௌனத்தைக் கைவிடுவது, எனது மகிமை, இறுதியாக எனது பௌதீக உடலுக்கு ஏற்படும் கொடூரமான தாக்குதல்கள் அனைத்தும், அதிவிரைவில் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவுறும். எல்லையற்ற காலம்வரை, எனக்குள் இருக்கும் அனைத்து தெய்வீக பேரின்பத்துடன், நான்

**ஒவ்வொருவருக்காகவும் என்றென்றும் துன்பப்படுகிறேன் - இவ்வாறு நான் நித்தியமாகவும், தொடர்ந்து எல்லோருக்காகவும் சிலுவையில் அறையப்படுகிறேன்.**

**இந்தக் குறுகிய காலத்தில், எனது வார்த்தைகளின் 'இறை வார்த்தை' அனைத்து மனிதகுலத்தின் இதயங்களையும் தொடும், மேலும் தன்னிச்சையாக இந்த தெய்வீக ஸ்பரிசமானது அனைத்து சக உயிரினங்களின் ஒருமை உணர்வை மனிதனுக்குள் விதைக்கும். படிப்படியாக, அடுத்த 700 ஆண்டுகளில், இந்த உணர்வு, பிரிவினையின் போக்கை முறியடித்து, அனைவரின் இதயங்களையும் ஆட்சி புரியும்; துன்பத்தை உருவாக்கும் வெறுப்பு, பொறாமை, பேராசை அனைத்தையும் விரட்டியடிக்கும், மேலும் மகிழ்ச்சி தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும்.**

இறுதிப் பிரகடனம் முழுமையான நிசப்தத்தில் கேட்கப்பட்டது. அதை வாசித்த வேளையில், பந்தலின் மீது பெரிய மழைத் துளிகள் விழ ஆரம்பித்தன, ஆனால் காலையில் வானம் மிகவும் பிரகாசமாகவும் தெளிவாகவும் இருந்தது. மழை பெய்யக்கூடும் என தோன்றிய போது, பாபாவும் மேல்நோக்கி விரலைச் சுட்டிக்காட்டி, இது தெய்வீக சித்தத்தைச் சார்ந்தது என்று கூறினார்.

ஆனால் ஐந்தே நிமிடத்தில் மழை நின்றது. ஒருவேளை, அவதார புருஷரின் இறுதிப் பிரகடனத்திற்கு செவிமடுத்து, பரிதாபமாக உணர்ந்ததால், வானுலகங்கள் கண்ணீர் சிந்தியிருக்கலாம். செப்டம்பர் 28 முதல், கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் அன்பால், இதுபோன்ற கண்ணீர்த் துளிகள் தொடர்ந்து சிந்தப்பட்டன. இன்று இந்தக் கடைசி துளிகள், அன்பர்கள் தங்கள் அன்பிற்குரியவரிடமிருந்து பிரிந்து செல்லும் தவிர்க்க முடியாத சோகத்தின் அடையாளமாக இருந்தது.

குடும்ப ஸாஸ்திரி தெலுங்கு மொழியில் உரையைப் படித்துக் கொண்டிருந்தபோது, மினூ கராஸ் தூங்குவதை பாபா கவனித்து அவரை அழைத்து வருமாறு எரச்சிடம் கூறினார்; மேலும் 'தண்டனையாக' பாபா அவரை நடவடிக்கைகள் முடியும் வரை மேடையில் நிற்கும்படி கட்டளையிட்டார். பாபாவின் புன்னகைக்கும் கண்கள் அவர் மீது அடிக்கடி வீழ்ந்ததால் அவர் அங்கு நிற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

அதைத் தொடர்ந்து பாபா, கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். மேற்கத்திய அன்பர்கள் அவரை அணுகியபோது, பாபா ஒவ்வொருவரும் முத்தமிட தமது கையை நீட்டினார். புக்கார் அவரை அணுகியதும், பாபா பிரசாதத்தை அவர் வாயில் ஊட்டி அரவணைத்துக் கொண்டார்.

மாலை 4:45 மணிக்கு அனைவருக்கும் பிரசாதம் வழங்கி முடிந்ததும், மேடையிலிருந்து இறங்கிய பாபா, நௌரங்காவின் ஹீராலாலைப் பார்த்தார். "பாபா, பாபா!" என்று முணுமுணுத்தபடியே, அவர் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. அவரது தலையை பாபா மார்போடு அழுத்தி, கையால் முகத்தை வருடி ஆறுதல் கூறினார்.

காரை நோக்கி மெதுவாக நடந்து சென்று, அதில் ஏறி அமர்ந்து மெஹராஸாத்திற்குப் புறப்படுவது பாபாவிற்கு அவ்வளவு எளிதாக இல்லை. தெய்வீக மதுபானம் இதயத்தை உலுக்கும் கண்ணீரைக் கொட்டியது, அந்த சூழலில் 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற குரல் எதிரொலித்தது! பலர் அவரது காரை சூழ்ந்துகொண்டதால், எரச்சிற்கு அதை ஓட்டிச்செல்ல சிரமமாக இருந்தது. கார் மெதுவாக சாலையை நோக்கி சென்றது. பாபா தமது கையை ஜன்னலுக்கு வெளியே நீட்டியபோது, அதை அவரது மதிமயங்கிய அன்பர்கள் முத்தமிட்டனர். இது ஏறக்குறைய கால் மைல் தூரம் நடந்தது; அன்பர்கள் பாபா சென்ற கார், கண்களிலிருந்து மறையும் வரை சாலையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

மும்பையின் பானாஜி கரணி (BANAJI KARANI) என்பவர் சாலையில் வெகு தூரம் சென்றிருந்தார். பாபாவின் கார் வருவதைப் பார்த்து, சாலையோரம் நின்றவர், கடுமையாக அழுது கொண்டிருந்தார், காரில் தலையை இடித்துக்கொள்ள விரும்பினார். ஆனால் கிஷன் ஸிங் அவரைத் தடுத்து நிறுத்தினார். பாபா, பானாஜியின் முகத்தை வருடி, ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

ஆனால் சாலையின் வெகு தொலைவில் மெஹர்ஜி காணப்பட்டார். அவரும் கண்ணீரை அடக்க முடியாமல் தனது மனதைத் தேற்றிக்கொள்ள இவ்வளவு தூரம் வந்தார். பாபா அவரிடம், **"ஏன் அழுகிறீர்கள்? வீட்டிலிருந்து ஏதாவது செய்தி வந்ததா?"** மெஹர்ஜி இல்லையென தலையை அசைத்து, கண்ணீரை மறைக்க தன்னால் இயன்றவரை முயற்சித்தார். பாபா அவருக்கு வழங்கிய வேலையில் கவனம் செலுத்துமாறும், கவலைப்பட வேண்டாம் என்றும் அன்புடன் கூறினார்.

தொடர்ந்து மேலே செல்லச் செல்ல, மீண்டும் காரை நிறுத்த வேண்டியதாயிற்று. ஹமிர்பூரின் போக்கர் (BOKHAR) கிராமத்தைச் சேர்ந்த ராம ஷங்கர் காரின் முன் பாய்ந்து செல்லவிருந்தார். எரச் சரியான நேரத்தில் பிரேக்கை அழுத்தாமல் இருந்திருந்தால், ராம ஷங்கர் கண்டிப்பாகத் தாக்கப்பட்டிருப்பார். பாபா அவரிடம், **"ஏன் அப்படிச் செய்தீர்கள்?"** என்று கடுமையாக வினவினார்.

"பாபா, நான் திருப்தியாக இல்லை... கடைசியாக ஒரு முறை என்னைத் தழுவிக்கொள்ளுங்கள்".

பாபாவின் அனைத்து அன்பர்களின் நிலையும் அப்படித்தான் இருந்தது. பாபா அவரைத் தழுவிய பிறகு, மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். இரண்டு நாள் கூட்டத்தின் தொடக்கத்தில், மெஹராபாத்தில் மழை வெள்ளம் பெருக்கெடுத்தது; இப்போது கண்ணீரின் ஆறுகள் எங்கும் கரைபுரண்டோடின!

கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் பாபாவின் திடீர் பிரிவால் தொலைந்து போனது போல குழப்பமடைந்தனர். வாகனங்கள் அவர்களை ரயில் மற்றும் பேருந்து நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல தயாராக நின்றன, ஆனால் அன்பர்கள் அனைவரும் வேறு உலகில் இருப்பது போலத் தோன்றியது. பெண்டு, பாதிரி, அலோபா மூவரும் பலமுறை அவர்களை, பேருந்துகளில்

இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொண்டனர்; பப்பா ஜெஸவாலா தன்னால் இயன்றவரை அவர்களுக்கு ஆறுதல் கூறியும், அது எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை, அவர்களின் துயரத்தைத் தணிக்கவுமில்லை. நீண்ட நேரத்திற்குப் பின்னர், அவர்கள் இறுதியாக இரவு 8:00 மணிக்கு ரயில் நிலையத்திற்குச் சென்றனர்; ஹமிர்பூர் மற்றும் மத்திய பிரதேச குழுக்கள் மட்டும் அடுத்த நாள் புறப்படவிருந்தன. அன்றிரவு சிது, ருஸ்தம் காக்கா மற்றும் மதுசூதனன் பாடல்களால் அவர்களை மகிழ்வித்தாலும், அன்பர்கள் பிரிவின் வலியால் உள்ளூர உயிரற்றவர்கள் போலக் காணப்பட்டனர்.

பாபா கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்கத்திய அன்பர்கள் 30ஆம் தேதி மாலையே ரயிலில் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் இந்தியாவில் இருந்தக் குறுகிய காலம் 'எங்கள் வாழ்வின் மிகவும் குறிப்பிடத்தக்க அனுபவம்' என்று சார்லஸ் பர்டம், மால்கம் ஸ்க்லோஸ் ஆகியோர் எழுதினர். இறை-மனிதனின் அன்பின் நீரூற்றில் அவர்கள் உளமார அருந்திய பின்னர், அவருடைய நீண்டகால சகவாசத்தின் இனிய சுவையை இப்போது அறிந்திருந்தனர்.

புறப்படுவதற்கு முன்னர், ஐவி மற்றும் டான் ஸ்டீவன்ஸிடம் வெளியீட்டிற்கென வழங்குவதற்காக 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) ஆங்கில கையெழுத்துப் பிரதி லட் டிம்ப்ஃப்லிடம் கொடுக்கப்பட்டது.

மேற்கத்திய அன்பர்கள் 'மூன்று வியத்தகு வாரங்களில்' (THREE INCREDIBLE WEEKS) பல பாடங்களைக் கற்றுக்கொண்டனர் (பின்னர் அவர்கள் இந்தியாவில் தங்க நேர்ந்தது), இது அவர்களின் வாழ்நாள் பாடங்களாக, அவர்களுடன் என்றென்றும் நிலைத்திருந்தது. 'தி அவேக்கனர்' (THE AWAKENER) இதழுக்காக, தனது பயணத்தைப் பற்றி சுருக்கமாக ஃபிலிஸ் ஃபிரடெரிக் கேட்டபோது, ஃபிலிப் டுபுயி (PHILIPPE DUPUIS) இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "ஆன்மீக வாழ்க்கை என்பது வேடிக்கை விளையாட்டோ, சாகச செயல்களோ அல்லது பகுதி நேர உற்சாகம் பொங்கும் நிகழ்வுகளோ அல்ல என்பதே இந்தியாவிலிருந்து நான் அடையப்பெற்ற முக்கிய போதனை. இது நவீன போர்களைப் போன்றது. முழுமையானது!"

இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்ற வில் பேக்கெட், மே லண்ட்குவிஸ்ட் (MAY LUNDQUIST) என்பவருக்கு இவ்வாறு எழுதினார்:

ஒருவர் பாபாவை எவ்வளவு அதிகமாகப் பார்க்கிறாரோ, அவ்வளவு அற்புதமாக ஒவ்வொரு சந்தர்ப்பமும் அமையும். புதிய மனிதர்கள், புதிய மற்றும் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைகள் - தனிப்பட்ட நேர்காணல்கள் அல்லது வெகுஜன தரிசனங்கள் - புதுமை நிறைந்த அனுபவங்களாக வெளிச்சமிட்டுக் காட்டி, அவரது புரிந்துகொள்ள முடியாத அன்பு, ஞானம் மற்றும் சமயோசித அணுகுமுறையின் புதிய ஆழங்களையும் நோக்குகளையும் வெளிப்படுத்துகின்றன. பலவிதமான நிலைமைகளால் சூழப்பட்டு, ஒவ்வொருவரும் தனது நெருக்கமான, விரிவான கவனத்தை கோருகிறார்கள்

மற்றும் அடையப்பெறுகிறார்கள், இருந்தும் அவர் ஒருவரை பாதிக்கும் சில முக்கியமற்ற நிகழ்வுகளை நினைவில் கொள்கிறார். அவரது அன்பால் கவனிக்கப்படாத அளவுக்கு சிறியது எதுவுமில்லை.

சில சமயங்களில் அவருடைய பெரும் சுமை, தாங்க முடியாததாகத் தோன்றினாலும், அவருடைய இறை அன்பு, அனைத்தையும் மீறிச் செல்கிறது. மெஹராபாத் மேல்மலையில் அமைந்த பெரிய அறையில் அவர் அன்பு, நகைச்சுவை, ஞானம் மற்றும் புரிதலை வெளிப்படுத்தி, ஒவ்வொரு நாளும் எங்களுடன் அமர்ந்தார். "**நீங்கள் என்னை இங்கே பார்க்கிறீர்கள், ஆனால் நான் எங்கும் இருக்கிறேன் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? எனக்கு எல்லாம் தெரியும், இருந்தாலும் என்னால் அதற்கு உதவும் வகையில் ஒன்றை நான் செய்ய விரும்பவில்லை**" என்று கூறுவதை நான் இப்போது எனது மனக்கண்ணில் பார்க்கிறேன்.



# சத்தாரா வருகை

**(Return to Satara)**

1954 அக்டோபர் 1 வெள்ளியன்று, மேற்கத்திய அன்பர்கள் புறப்பட்டுச் சென்ற மறுநாள், பாபா மதியம் மெஹராபாத்திற்கு வந்து, அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் முடித்துவிட்டு, 4ஆம் தேதிக்குள் கணக்கு வழக்குகளையும் தீர்க்கும்படி சம்பந்தப்பட்ட மண்டலிக்கு அறிவுறுத்தினார். மண்டலி அனைவரும் 5ஆம் தேதி சத்தாராவிற்குப் புறப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். வாடகைக்கு எடுத்து வந்த பொருட்கள் அனைத்தையும் மூட்டை கட்டி, அஹமதுநருகக்கு இவ்வளவு குறுகிய காலத்தில் அனுப்புவது கடினமாக இருந்தது. ஆனால், பாபாவின் விருப்பப்படி பெண்டு அதை சமாளித்தார்.

அக்டோபர் 2ஆம் தேதி எதிர்பாராதவிதமாக பீலாமாய் வந்து, அன்றும் மறுநாளும் குஷ்ரு குவார்ட்டர்ஸில் பாபாவை சந்தித்தார். அவரைத் தனது நெருங்கிய தோழியான குல்மாயுடன் ஒரு வாரம் குஷ்ரு குவார்ட்டர்ஸில் தங்க பாபா அனுமதித்தார்.

நானா கேர் நச்சுக்காய்ச்சலிலிருந்து விடுபடாத நிலையில், டாக்டர் டான் அவரது சிகிச்சையைத் தொடர்ந்தார். மண்டலி சத்தாராவிற்குப் புறப்படவிருந்த வேளையில், நானாவை அஹமதுநகரில் ஆயுர்வேத மருத்துவமனையில் அனுமதிக்குமாறு டான் அறிவுறுத்தினார். அவரை மருத்துவமனையில் பால் சுபேதார் (BAL SUBEDAR) தொடர்ந்து கவனித்து வர, நானா சற்று குணமடைந்ததும், 8ஆம் தேதி நாக்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

1954 அக்டோபர் 5 அன்று பாபா, மெஹராஸாத்திலிருந்து சத்தாராவிற்கு ஆண், பெண் மண்டலியுடன் புறப்பட்டார். பாபா மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட பெண் மண்டலி ஆகியோரை ஸரோஷ் தனது காரில் அழைத்துச் சென்றார். ரானோ, நாஜா, டாக்டர் நீலு மூவரும் எரச்சுடன் ஆதியின் காரில் பயணித்தனர். ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் பாபா, ஆதி சீனியர், டாக்கே, யஷ்வந்த் ராவ் ஆகியோரை சந்தித்து, அவர் சத்தாரா புறப்படுவதற்கு முன்பு, விலூ வில்லாவில் குல்மாய், பிரோஜா, பீலாமாய் ஆகியோரையும் பார்த்தார்.

தனது பயணத்தினூடே பாபா, 35 வயதான பெலி ஃபிரோஸ் ராண்டேலியா (BELI PHIROZ RANDELIA) என்ற பக்தரைப் பார்க்க, ஏர்வாடா மத்திய சிறைச்சாலைக்குச் சென்றார். 1941இல் உபாஸனி மஹாராஜின் மறைவிற்கு முன்னும் பின்னும், அவர் தனது படிப்பை விட்டுவிட்டு ஸாக்கோரியில் பல மாதங்கள் வாழ்ந்தார். ஆனால், அந்த இளைஞன் உணர்ச்சி ரீதியாக சமநிலையற்றவராகவும், எரிச்சலூட்டும் சுபாவத்துடனும் இருந்தார். மும்பை கல்லூரியில் மாணவராகப் பயின்று வந்த அவரது சகோதரர் நோஷிர் (NOSHIR) என்பவரும் மஹாராஜைப் பார்க்க வந்தார். எப்படியோ, பெலியைப்

பொறுத்தவரை, மஹாராஜும் அவரது பெற்றோரும் நோஷிரை அதிகமாக நேசித்தனர் என்ற எண்ணம் ஏற்பட்டது. (நோஷிரை மேல்படிப்புக்காக அமெரிக்காவிற்கு அனுப்ப தந்தை விரும்பினார்.) இதைத் தாங்க முடியாமல் பெலி தனது சகோதரனை வெறுக்கத் தொடங்கவே, 1945 மே வரை அவர்களுக்கிடையேயான பகை அதிகரித்தது; ஒரு நாள், அவரது சகோதரர் நோஷிர் கழுத்தில் ஆழமான காயத்துடன் படுக்கையில் இறந்து கிடந்ததைக் கண்டுகொள்ள நேர்ந்தது; பொறாமையின் உச்சத்தில், பெலி அவரைக் கொன்றார்.

அடுத்த எட்டு மாதங்கள், பெலி காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்படாமல் தலைமறைவாக இருந்தார். அவர் மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு, அவரை சந்திக்கத் தீவிரமாக முயன்றும், பாபா மஸ்த் பயணத்தில் இருந்ததால் சந்திக்க முடியவில்லை. பெண்டு அவரை சரணடையுமாறும், மீண்டும் மெஹராபாத்திற்கு வர வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார். ஆனால் பெலி அஹமதுநகரில் தங்கி, பாபா திரும்பிவந்த பின்னர் ஒரு நாள் அவரை சந்தித்து, தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதோடு, அதற்காக மனதார வருந்தினார்.

பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், '**கவலைப்பட வேண்டாம்**' என்றும், '**காவல்துறையிடம் சரணடையவும், அவரது செயலின் விளைவுகளை அஞ்சாமல் ஏற்றுக்கொள்ளவும்**' அறிவுறுத்தினார். "**எனது பார்வை உங்கள் மீது இருக்கும்**" என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். பெலி கீழ்ப்படிந்து, 1946 ஜனவரி 31 அன்று காவல்துறையினரிடம் சரணடைந்தார். கொலைக் குற்றத்திற்காக அவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு, வாழ்நாள் காவலில் ஏர்வாடா சிறைக்கு அனுப்பப்பட்டார்.

சிறையிலிருந்து, பெலி, பாபாவிற்கு எழுதிய கடிதத்திற்கு பதிலாக ஒரு முறை, பாபா அவரிடம், "**நான் பாவிகளை நேசிப்பதைப் போலவே, புனிதர்களையும் நேசிக்கிறேன். நான் உங்களையும் நேசிக்கிறேன். கடவுளை நேசிப்பது ஒருபோதும் தாமதமாகவோ அல்லது மிகையாகவோ இருப்பதில்லை. உங்களால் இயன்றவரை, பாபாவைப் பற்றி அதிகமாகவும், உங்களைக் குறைவாகவும் சிந்தியுங்கள்**."

பாபாவின் தரிசனத்திற்காக ஏங்குவதாக பெலி மீண்டும் மீண்டும் கடிதங்கள் எழுதியதோடு, பாபாவின் புத்தகங்களையும் வரவழைத்துப் படித்தார். 1954இல் பாபா பூனாவைக் கடந்து செல்வதற்குச் சில நாட்களுக்கு முன்பு, தரிசனம் கோரி பெலியிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. சிறைக்கைதிக்கு தரிசனம் வழங்க அதிகாரிகள் அனுமதித்தால், பாபா அழைப்பை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தபோது, ஆதி சீனியர் மூலம், ஏற்பாடு செய்யப்பட்டது.

பாபா காலை 9:00 மணியளவில் ஏர்வாடா சிறைச்சாலைக்கு வந்தார். பூனா, பர்ஸி (BARSI), அஹமதுநகர் மற்றும் குஜராத்திலிருந்து பல அன்பர்களும் வந்திருந்தனர். பாபாவை முதலில் சிறை அதிகாரிகள் சந்தித்து, அவரை மிகுந்த பயபக்தியுடனும் மரியாதையுடனும் வரவேற்றனர். ஒரு வரவேற்பு நிகழ்ச்சி

ஏற்பாடு செய்யப்பட்டு, சிறைக் கண்காணிப்பாளர் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டதில் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அங்கு பெலிக்கு பிரத்யேக நேர்காணலுக்கு அனுமதி வழங்கப்பட்டது. **"ஏன் இவ்வளவு பொறுமை இழந்து காணப்படுகிறீர்கள்?"** பாபா அவரிடம் கேட்டார். **"என்னை நினைவில் கொள்ள உங்களுக்கு மிகச்சிறந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சிறை அதிகாரிகள் சொல்வதைச் செய்யுங்கள், நீங்கள் எனது கட்டளைகளை நிறைவேற்றினால், நான் உங்களுடன் மகிழ்ச்சியாக இருப்பேன்."** இதைக் கேட்ட (பேட்டியின் போது உடனிருந்த) அதிகாரிகள், பெலி ஒரு தொந்தரவான கைதியாக இருந்ததால் பாபாவிற்கு மிகவும் நன்றி தெரிவித்தனர்.

பெலி அன்பாலும் பக்தியாலும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார், மேலும் கூப்பிய கைகளுடன், "இது எனது வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான நாள்" என்று கூறினார். அவர் தரையில் அமர்ந்திருந்தார், பாபா சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட அறையில் ஒரு நாற்காலியில் இருந்தார். பாபா அவருக்கு மேலும் சில அறிவுரைகளை வழங்கி, அவரைத் தழுவி, அவர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டது. புறப்பட ஆயத்தமான பாபா, பதினொரு மணியளவில் சிறையிலிருந்து வெளியேறிய வேளையில் அவரிடமிருந்து பெலி மற்றுமொரு அரவணைப்பைப் பெற்றார்.

சத்தாராவில், பாபா மீண்டும் பெண் மண்டலியுடன் கிராஃப்டன் பங்களாவில் (GRAFTON BUNGALOW) தங்கினார், ஆனால் அவர் ரோஸ்வுட் பங்களாவில் (ROSEWOOD BUNGALOW) தங்கியிருந்த ஆண் மண்டலியை ஒரு நாளைக்கு இரண்டு முறை சந்தித்தார். 1954 அக்டோபர் 6 புதன் கிழமை அன்று, பாபா, மண்டலிக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்: **"நானும் நீங்களும் நாளை நள்ளிரவு வரை விழித்திருப்போம். மதியம் 1:00 மணி முதல் நள்ளிரவு வரை, நாம் அனைவரும் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும், இரவு 9 மணிக்கு காஃபி அருந்தலாம். நாளை காலை 6:00 மணிக்கு, காலைக்கடன்களை முடித்து, நீராடிய பிறகு ரோஸ்வுட்டில் சந்திப்போம்."**

அக்டோபர் 7ஆம் நாள், ஏற்கனவே அறிவுறுத்தியதற்கு இணங்க அஹமதுநகரிலிருந்து டாக்கே, பூனாவிலிருந்து ஜால்பாய் இருவரும் அதிகாலையில் சத்தாராவிற்கு வந்தனர். இந்து பண்டிகையான தஸரா (DASSERA) அன்று 7ஆம் தேதி கொண்டாடப்பட்டது; வழக்கம் போல, பாபாவின் விருப்பத்திற்கிணங்க, ரோஸ்வுட்டில் குதிரை ஷீபா (SHEBA) முழுமையாக மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டது. ('ஷீபா ராணி'யை மணமகன் வேடத்தில் வந்த ரானோவிற்கு வழங்கிய நிகழ்ச்சி பாபாவை மிகவும் மகிழ்வித்தது.)

அந்த நாள் 1918ஆம் ஆண்டு சாய்பாபா உடலைத் துறந்த நாள். பாபா இந்தத் தொலைத்தந்தியை ஷிர்டிக்கு அனுப்பி வைத்தார்: **"ஆதிகாலத்தவனான**

**அவதார் மெஹர் பாபா, கடவுளாக வாழ்ந்த அவருடைய குருநாதர், சாய்பாபாவிற்கு அஞ்சலி செலுத்துகிறார்.**"

பாபாவின் அன்பர்களில் ஒருவர், டெஹ்ரா டூனில் கால்நடை மருத்துவராக இருந்த டாக்டர் ஆர்.ஆர். பால் ஷர்மாவும் (DR. R.R. PAL SHARMA) அன்று அழைக்கப்பட்டார். டாக்டர் ஷர்மா, புது வாழ்வின் போது, முதன்முதலில் டெஹ்ரா டூனில் பாபாவின் தொடர்பில் வந்தவர், சமீபத்தில் நடந்த மெஹராபாத் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

மேலும் பல பக்தர்கள் பாபாவின் தரிசனத்திற்காக அன்றைய தினம் வருகை தந்தனர். கராச்சியிலிருந்து வந்த ஆதி - ரோடா துபாஷ் (ADI - RODA DUBASH) ஆகியோரிடம் பாபா, "**இவ்வளவு நாட்கள் என்னுடன் மெஹராபாத்தில் தங்கியிருந்தும் நீங்கள் இன்னும் திருப்தி அடையவில்லையா? ஒருவேளை ரோடா உங்களை இங்கு அழைத்து வந்திருக்கலாம்**" என்றார்.

பாபா, ரோடாவை நோக்கி, "**இன்று, நான் மூன்று மாதங்களுக்குப் பிறகு** (தலை முதல் கால் வரை) **நீராடியுள்ளேன். எனவே நீங்கள் என்னைத் தழுவுவதை நான் விரும்பவில்லை. அப்படிச் செய்தால், நான் மீண்டும் நீராட வேண்டும். எனக்கு ஏற்கனவே ஜுரமாக உள்ளது**" என்றார்.

பாபாவிடமிருந்து ஒரு குறிப்பிட்ட செய்தியைக் கோரிய ஒரு மகளிர் பள்ளி முதல்வரிடமிருந்து வந்த கடிதம் வாசிக்கப்பட்டது. பாபா இவ்வாறு எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார், "**மாணவிகள் இல்லங்களிலும், வேறு எல்லா இடங்களிலும் அன்பைப் பரவச் செய்யுமாறு பாடம் புகட்டப்பட வேண்டும்.**"

அதற்குப் பிறகு, பாபா ஆதியிடம், "**ரோடாவை மனைவியாக எப்படிப் பார்க்கிறீர்கள்?**" என்று கேட்டார்.

"முதல் தரம்!" ஆதி அழுத்தமாக பதிலளித்தார்.

பாபா, ரோடாவிடம் ஆதியைக் குறித்து அதையே வினவியபோது அவரும் "முதல் தரம்" என்று பதிலளித்தார்.

அதைத் தொடர்ந்து, பாபா, முதல்வரிடம், "**இப்போது, எந்த செய்தியும் தேவையில்லை. பள்ளி அவை கூட்டத்தில் ஆதியும் ரோடாவும் ஒரு சிறந்த ஜோடிக்கான எடுத்துக்காட்டாக மேடை ஏறட்டும்**" என்று தெரிவித்தார்.

பாபா, ரோடாவை அனுப்பிவிட்டு, அன்று மாலை நடந்த விழாவிற்கு ரோஸ்வுட்டில் ஆதியை தங்க அனுமதித்தார், அந்த நேரத்தில் அவர் ஏற்கனவே அறிவித்தபடி எழுத்துப்பலகையை 'கைவிடப்போவதாக' இருந்தது.

ரோடா போகும் முன்பு, பாபா அவரிடம் மிக்க ஆர்வத்துடன் கேட்டார், "**உங்கள் மகன்களில் ஒருவரை எனக்குக் கொடுங்கள் என்று நான் கேட்டால், நீங்கள் அவரை முழு விருப்பத்துடன் எனக்குத் தருவீர்களா?**"

"நிச்சயமாக பாபா," ரோடா பதிலளித்தார். "அவர்கள் உங்களுடையவர்கள்." ஆயினும்கூட, அவர் அறையின் ஒரு மூலையில் அமர்ந்திருந்தபோது, பாபா மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருக்கையில்,

அவர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. தூரத்திலிருந்த பாபா இதை கவனித்து, "**ஏன் இப்போது அழுகிறீர்கள்? ஓயாமல் அழும் காலம் வரும்**" என்று கருத்துத் தெரிவித்தார்.

பாபா எதைக் குறிப்பிடுகிறார் என்று எவருக்கும் புரியவில்லை, ஆனால் ஆறு மாதங்களுக்குப் பின்னர் அவர்கள் அதை அறிய முடிந்தது.

பிற்பகல் 1:30 மணியளவில், ஜால்பாய் ஏதோ பணி நிமித்தம் பூனாவிற்குப் புறப்பட்டார், அப்போது பாபா, "**இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் அவர் இங்கு இல்லாமல் இருப்பது எவ்வளவு துரதிர்ஷ்டவசமானது**" என்று குறிப்பிட்டார்.

சரியாக மதியம் 2:00 மணிக்கு, குமார், அலோபா, பாவ் கல்சூரி ஆகியோருடன் பாபா கிராஃப்டனிலிருந்து ரோஸ்வுட் பங்களாவிற்கு வந்தார்.

பாபா தன்னுடன் மூன்று எழுத்துப்பலகைகளை எடுத்து வந்திருந்தார்: ஒன்று ஒட்டு பலகை, ஒன்று பிளாஸ்டிக், மற்றொன்று அட்டை. பாபா, ஒட்டு பலகையை குமாரிடமும், பிளாஸ்டிக் ஒன்றை டாக்கேயிடமும் கொடுத்து, பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறினார். அட்டையால் செய்யப்பட்ட மூன்றாவது எழுத்துப்பலகை, கடந்த ஆண்டுகளில் பாபாவால் அதிகம் பயன்படுத்தப்பட்டது; அதில் எழுத்துக்களும், எண்களும் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டிருந்தன. இந்தப் பலகையில் இருந்த பூஜ்யம் பாதியளவு சேதமடைந்தாலும், அதன் மறு பாதி இன்னும் தொங்கிக்கொண்டிருந்தது.

பாபா குறிப்பிட்டார், "**நான் இந்தப் பலகையை மிகவும் இரக்கமற்ற முறையில் பயன்படுத்துகிறேன், இதில் பூஜ்ஜியம் தொங்கிக் கொண்டிருக்கிறது. எழுத்தின் ஒரு துண்டு உடைந்ததால், பலகையில் இருந்த பூஜ்ஜியத்தில் நான்கில் மூன்று பங்கு அழிக்கப்பட்டு, கால் பங்கு மட்டுமே எஞ்சியுள்ளது. தொங்கிக்கொண்டிருக்கும் துண்டு எழுத்தும் விழுந்துவிடும், பல விஷயங்கள் நடக்கும், அது உலகிற்கு சிறந்ததாக இருக்கும்.**"

பாபா எழுத்துப்பலகையை ஸவக் கொத்வாலை நோக்கி எறிந்தபோது, எஞ்சியிருந்த துண்டும் துண்டிக்கப்பட்டது. எரச் எழுத்துப்பலகையை மெஹராபாத்தில் பாதிரிக்கு அனுப்ப வேண்டும் என்று பாபா கூறினார். பாபா மேலும் கூறினார், "**இந்தப் பூஜ்ஜியத்தின் மதிப்பையும் அது எதைக் குறிக்கிறது என்பதையும் கடவுள் மட்டுமே அறிவார்.**"

பூஜ்ஜியத்தின் பிரிக்கப்பட்ட துண்டை ஸவக்கிடம் கொடுத்து, பாபா, "**உங்கள் இறுதி மூச்சு வரை இதை மிகவும் கவனமாக வைத்திருங்கள்**" என்றார்.

அப்போது பாபா, "**அக்டோபர் 8ஆம் தேதியிலிருந்து எந்தக் கடிதப் பரிமாற்றமும் இருக்காது. எவரேனும் ஏதேனும் கூறினால், நான் அதைக் கேட்பேன், ஆனால் பதில் சொல்ல மாட்டேன். 8ஆம் தேதி முதல், எழுத்துப்பலகை இல்லை, கடிதப் பரிமாற்றம் இல்லை**" என்று கூறி முடித்தார்.

பாபா அங்கிருந்து கிராஃப்டனுக்குச் சென்று மாலை 5:30 மணிக்கு திரும்பி வந்து, ஸவக்கிடம் கேட்டார், "**அந்தப் பூஜ்ஜியத் துண்டை எங்கே வைத்திருந்தீர்கள்?**"

"நான் அதை எனது பெட்டியில் வைத்தேன்."

பாபா அவரிடம், "**உங்கள் இடத்தில் நான் இருந்திருந்தால், நான் எனது சதையிலிருந்து ஒரு பாகத்தை வெட்டி, அந்தத் துண்டை அங்கேயே வைத்திருந்திருப்பேன்! உங்களுக்கு அது உண்மையில் தேவையா?**" என்று கேட்டார்.

"அதன் முக்கியத்துவத்தை நான் உணரவில்லை," என்று ஸவக் பதிலளித்தார், "நன்மை இருந்தால், நான் அதை வைத்துக்கொள்கிறேன்."

"**பூஜ்ஜியத்தின் அந்தத் துண்டு பேரழிவை உருவாக்கும்**" என்று பாபா எச்சரித்தார்.

"அப்படியானால் நான் அதை வைத்திருப்பதில் பயனில்லை, அதைத் திருப்பித் தருகிறேன்."

ஸவக் அதைத் திருப்பிக் கொடுத்ததும், பாபா, "**அதைத் திருப்பிக் கொடுக்க நீங்கள் ஒரு படுமுட்டாள்!**" என்றார்.

பிறகு, சிரித்துக்கொண்டே, "**எனக்கு அது வேண்டியதாக இருந்தது, நான் கேட்காமலேயே ஸவக் தானாக முன்வந்து கொடுத்திருக்கிறார்**" என்றார்.

பூஜ்ஜியத் துண்டை எரச்சிடம் கொடுத்து, எழுத்துப்பலகையுடன் இதையும் பாதிரிக்கு அனுப்புமாறும், பூஜ்ஜியத் துண்டைப் பலகையுடன் மிகவும் கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் எழுதும்படி பாபா கட்டளையிட்டார்.

மாலை 6:00 மணிக்கு, பாபா மண்டலியிடம், "**இப்போது அனைவரும் கைகளைக் கழுவி, சில சமயங்களில் சிறுநீர் துளிகள் சிதறியிருக்கும் என்பதால், பைஜாமாவையும் சுத்தம் செய்யுங்கள்**" என்றார்.

இந்த நிகழ்ச்சியில் பின்வரும் 20 ஆண்கள் கலந்து கொண்டனர்: குஸ்தாஜி, பைதூல், காக்கா, பெண்டு, விஷ்ணு, எரச், ராம்ஜூ, டான், நீலு, ஸவக், கைக்கோபாத், கிருஷ்ணா நாயர், பாவ், அலோபா, கிஷன் ஸிங், குமார், டாக்கே, ஆதி துபாஷ், டாக்டர் ஷர்மா மற்றும் கிருஷ்ணாஜி.

ஆண்கள் அனைவரும் திரும்பி வந்ததும், கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டு, உள்ளே எவரும் வராதபடி அனைத்து பக்கங்களிலும் சேவகர்கள் காவல் புரிந்தனர்; பாபா கூறினார், "**நான் இன்று எழுத்துப்பலகையைக் கைவிட வேண்டும். ஆனால், அதற்கு முன்பு, நான் ஐந்து சத்குருக்களுக்கும் எனது வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன்.**"

மாலை, 6:30 மணிக்கு, மரியாதையுடன் வணக்கம் தெரிவிக்கும் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஒரு வெள்ளைத் துண்டு தரையில் விரிக்கப்பட்டு, அதன் மீது ஒரு கால்மணை நாற்காலி போடப்பட்டது. பாபா அனைவருக்கும் இவ்வாறு அறிவுறுத்தினார்: **உங்கள் 20 பேரில் ஒவ்வொருவரும் என்னிடம் வந்து,**

**நாற்காலி மீது நிற்க வேண்டும். எனது நெற்றி உங்கள் பாதத்தைத் தொடும்போது, நான் கூறிய அதே வரிசையில், நீங்கள் ஐந்து சத்குருக்களின் பெயர்களை உச்சரிக்க வேண்டும்: 'ஓ சாய் பாபா, உபாஸனி மஹாராஜ், பாபாஜான், தாஜுதீன் பாபா, நாராயண் மஹாராஜ். பாபா உங்களுக்கு இறுதி வணக்கத்தைத் தெரிவிக்கிறார்.'**

ஒவ்வொருவராக, மண்டலியும் இதர அன்பர்களும் பாபா முன் வந்தனர், பாபா அவர்களின் கால்களில் தலையை வைத்ததும், ஒவ்வொருவரும் உரத்த குரலில் பெயர்களை மொழிந்தனர். சத்குருக்களின் பெயர்கள் வரிசை தவறி மொழியப்பட்டால், சரியான வரிசையில் மொழியும் வரை அந்த நபர் அவற்றை மீண்டும் உச்சரிக்க வேண்டும். கிருஷ்ணா நாயர் ஐந்து அல்லது ஆறு முறை சொல்ல வேண்டியிருந்தது. குஸ்தாஜி அமைதியான கை அசைவுகளுடன் விழாவைத் தொடங்கினார், கைக்கோபாத் கடைசியாகப் பங்கெடுத்தார். அனைத்தும் முடிந்த பிறகு, பாபா, தன்னையே வணங்கி - நெற்றியில் கையைத் தொட்டு, பின்பு தமது பாதங்களையும் தொட்டு மரியாதை செலுத்தினார். அவர் மௌனம் காத்ததால், அந்தப் பெயர்களை ஒன்றிணைந்து வரிசையாக மொழியுமாறு மண்டலியிடம் கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்களால் அதை ஒரே நேரத்தில் செய்ய முடியாத பட்சத்தில், பாபா அவர்களிடம் விரலை உயர்த்துவதாகக் கூறினார்; அவர்கள் அனைவரும் முதலில் 'சாய் பாபா!' என்றும், அவர் மீண்டும் விரலை உயர்த்தியபோது, 'உபாஸனி மஹாராஜ்!', இந்த வழியில் "பாபாஜான்! தாஜுதீன் பாபா! நாராயண் மஹாராஜ்!" என்று அனைவரும் ஒன்றிணைந்து மொழிந்தனர்.

அதன் பிறகு, பாபா கைகளைக் கழுவினார். ஒரு கிண்ணத்தில் தண்ணீர் நாற்காலி மீது வைக்கப்பட்டதும், பாபா கைகளால் தொட்டு, சிறிது நீரை ஏழு முறை தரையில் தெளித்தார். இதைச் செய்த பின்னர், அவர் தாம் நின்ற இடத்திற்குத் திரும்பி வந்து, மீண்டும் கிண்ணத்திலிருந்த நீரைத் தொட்டு, ஏழு முறை தரையில் தெளித்தார்; அதற்குப் பின்னரே அவர் திருப்தியடைந்ததாகத் தோன்றியது. அவர் குஸ்தாஜி, கைக்கோபாத் இருவரையும் பாபாவின் இருபுறமும் நின்று அவரது கைகளைப் பற்றிக்கொள்ளக் கூறி, பின்னர் அவர் பிரார்த்தனையில் கைகளை ஒன்றிணைத்தார்.

மாலை 6:45 மணிக்கு, எரச் பின்வரும் பிரார்த்தனையை ஆங்கிலத்தில் வாசிக்க, அதை பாவ் கல்சூரி இந்தியில் மொழிந்தார். முந்தைய நாள், இந்தப் பிரார்த்தனை பாபாவால் எடுத்துரைக்கப்பட்டது:

**ஓ சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், பாபாஜான், தாஜுதீன் பாபா மற்றும் நாராயண் மஹாராஜ்! நீங்கள், ஐவரும் ஒன்றிணைந்த ஏக இறைவனாகவும், ஐந்தில் ஒருவராகவும், முழுநிறைவான ஒன்றைக் குறிக்கும் இறை மனிதர்களே, நான் உங்களுக்கு பரிபூரண மரியாதையுடன் தலைவணங்குகிறேன்.**

**நீங்கள் ஐந்து மனித-கடவுள்களும், நான் என்னவாக இருக்கிறேனோ - ஆதிகால புருஷன், என்றென்றும் நிலைத்து நிற்கும் ஏக இறைவன் - அதற்கான மூல காரணம்.**

**நீங்கள் ஐவரும் ஒருவரே, யாருக்காக நீங்கள் ஐவரும் உலகளாவிய ரீதியில் பணிபுரிகிறீர்களோ, அந்த அன்பிற்குரிய கடவுள், நான் இந்த வடிவத்தை எடுத்ததன் நிமித்தம், அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான வலிமையையும், சக்தியையும், ஞானத்தையும் உங்கள் பெயர்களால் எனக்கு வழங்குவாராக. கடைசி மெஹராபாத் கூட்டத்தில் மொழிந்த பிரகடனம் அனைத்தும் நிறைவேறும் விதத்தில் கண்காணிப்பாராக.**

**நான் இப்போது எழுத்துப்பலகை பயன்படுத்துவதை விட்டுவிடுகிறேன்; அது, கடவுளுக்கு முன்பாக, விரைவில் மௌனத்தைக் கலைப்பதற்கான எனது செயற்குறிப்பாக அமையும்.**

பிரார்த்தனையை மொழிந்து கொண்டிருக்கும் வேளையில், பாபா தமது கைகளை உயர்த்தி கடவுளிடம் வேண்டி, அவரே எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்வது போல தோற்றமளித்தார். அவர் முகத்தில் ஒரு தெய்வீகப் பொலிவும், கண்களில் ஒரு வித்தியாசமான பிரகாசமும் தென்பட்டது. பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார், அவர் எரச், பாவ் இருவரிடமும் இரண்டாவது முறையாக, பிரார்த்தனையை மொழியுமாறு கூறினார்.

அப்போது பாபா மீண்டும் அங்கு இருந்த ஒவ்வொருவரையும் வணங்கினார் - முதலில் குஸ்தாஜி, இறுதியாக கைகோபாத் - இந்த முறை அவர்களிடம் மீண்டும் மொழியுமாறு அறிவுறுத்தினார்: “பரபிரம்மா, பரமாத்மா, யா எஸ்தான், அஹுரமஸ்தா, அல்லா ஹு அக்பர்” என்று கூறியதும் பாபா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். அவ்வாறு ஒவ்வொருவரையும் வணங்கிய பின்னர் அவர் நாற்காலியையும் தொட்டு வணங்கினார்.

சரியாக இரவு 7:00 மணிக்கு, பாபா நாற்காலி மீது பூஜ்ஜியம் இல்லாத எழுத்துப் பலகையை வைத்து, வேறொரு நாற்காலியில் அமர்ந்தார். விழாவின் போது பாபா நின்றுகொண்டிருந்த வெள்ளைக் கம்பளத்துடன், எழுத்துப்பலகையையும் பாதிரிக்கு அனுப்புவதற்காக எரச் அவற்றை தன்வசம் வைத்துக் கொண்டார்.

விழா முடிந்ததும், பாபா சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந்திருந்தார். அது இனிமையும், அமைதியும் நிறைந்த ஒரு சூழலாக இருந்தது. திடீரென பாபா (கை சைகைகள் மூலம்), “**நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன்! அனைத்தும் நல்லபடியாக நிறைவடைந்தது... அனைத்தும் சீராகிவிடும்**” என்று கூறினார்.

பாபா இரவு 11:30 மணி வரை, சில பஜன் மற்றும் கவாலி இசைப் பதிவுகளைக் கேட்டார். அதன் பின்னர், 11:45 மணிக்கு, பர்வர்திகார் பிரார்த்தனை (MASTER’S PRAYER) ஆங்கிலத்தில் எரச்சால் வாசிக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து பாவ் கல்சூரி இந்தியில் மொழிந்தார். நள்ளிரவில் பிரார்த்தனை முடிந்ததும், அனைத்து மண்டலியும் பாபாவுடன் கிராஃப்டனுக்குச் சென்றனர்.

இரவு 10:00 மணியளவில் டாக்கேயிடம் புறப்படுமாறு பாபா அறிவுறுத்தினார். பதினைந்து நிமிட இடைவேளையின் போது எரச் அவரை பேருந்து நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்.

எனவே பாபா, 1954 அக்டோபர் 7 முதல் எழுத்துப்பலகை பயன்படுத்துவதை நிறுத்தினார்; அவர் தனது எண்ணங்களையும் அறிவுறுத்தல்களையும் எவ்வாறு தெரிவித்தார் என்பதை இனி பார்க்கலாம்.

மறுநாள் கிருஷ்ணாஜியை காக்கா பாரியாவுடன் தங்குமாறு கூறி, பாபா, அவரை மெஹராஸாத்திற்கு அனுப்பி வைத்தார். கிஷன் ஸிங் டெஹ்ரா டூன், டாக்டர் ஷர்மா மதுரா, ஆதி துபாஷ் கராச்சிக்கும் புறப்பட்டுச் சென்றனர்.

1954 அக்டோபர் 7 அன்று நியூயார்க்கில் மால்கம் ஸ்க்லோஸ் (MALCOLM SCHLOSS) காலமானார் என்ற செய்தியை ஜான் பாஸ் தொலைத்தந்தி மூலமாக பாபாவிற்குத் தெரிவித்தார். பாபா, தமது மேற்கத்திய அன்பர்களை, இந்தியாவை விட்டு வெளியேறிய பிறகு, நேரடியாக தத்தமது இல்லங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியிருந்தார், ஆனால் மால்கம் நேரடியாக ஹாலிவுட், கலிஃபோர்னியாவிற்குத் திரும்புவதற்கு பதிலாக, சில நாட்கள் பாரிஸ், நியூயார்க் நகரங்களில் தங்கியிருந்தார்.

கீழ்வரும் இந்த இரண்டு தொலைத்தந்திகளை அனுப்புமாறு பாபா, மெஹர்ஜிக்கு அறிவுறுத்தினார்:

**மிகவும் அதிர்ஷ்டசாலியான மால்கம், பாபாவைத் தழுவி, பாபாவின் பணியை நிறைவு செய்த பின்பு, தனித்துவமான சூழ்நிலையில், ஏழாம் தேதி மிக முக்கியமான இந்நாளில், உங்கள் அனைவரையும் விட்டுச் சென்றுவிட்டார் என்பதை, சம்பந்தப்பட்ட அன்பர்களுக்குத் தெரிவிக்கவும்.**

**7ஆம் தேதியிலிருந்து பாபா எழுத்துப்பலகை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டார், ஆனால் மால்கம் 7ஆம் தேதி உயிரைத் துறந்து, பாபாவிடம் வந்துவிட்டார் என்ற செய்தியை, தமது கை சைகைகள் வழியாகத் தெரிவித்து 'மால்கம் குழு'விற்கு அனுப்பிவைத்தார். மால்கமின் குழுவிலுள்ள அனைவருக்கும், பட்டியலின்படி, பாபா கையெழுத்திட்ட புகைப்படங்களையும், அவருடைய குழுவிற்குப் பொறுப்பேற்கும் நபருக்கு பாபாவின் அங்கியையும்** (சத்ரா) **அனுப்பி வைக்க பாபா விரும்புகிறார். அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழும் பாபா அன்பர்கள் அனைவரும், இந்த இரண்டு தொலைத்தந்திகளில் அடங்கிய செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார்.**

1954 செப்டம்பர் மாதத்தில் மெஹராபாத்தில் நடந்த கூட்டத்திற்குப் பின்னர், அன்பர்கள் தங்கள் இல்லங்களைச் சென்றடைந்ததும், மெஹர் பாபா தமது உடலைத் துறக்க இருப்பதாகவும், உலகின் நான்கில் மூன்று பாகம் அழியப் போவதாகவும் செய்திகள் எங்கும் பரவின. இந்தியாவில், சில பிரதேச மொழி செய்தித்தாள்களில், அறிக்கைகள் வெளியிடப்பட்டு, அவை நாடு முழுவதும்

பரவின. ஹமிர்பூரில் அமைந்த மெஹர் பாபா மையங்களில் 24 மணிநேரமும், இடைவேளையின்றி பாபாவின் நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது தொடங்கியது; மேலும் மாவட்டம் முழுவதும் பாபாவின் அன்பால் மூழ்கியது. பாபா உடலைத் துறக்கக்கூடாது என்று அனைவரும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர், இந்திய தேசத்தின் ஒவ்வொரு மூலைகளிலும் மெஹர் பாபாவைப் பற்றிய பேச்சு எழுந்ததால், ஒரு விசித்திரமான சூழ்நிலை நிலவியது; பாபாவின் அசாதாரணமான அறிவிப்பு அவருடைய பெயரை வெகு விரைவில் எங்கும் பரவச் செய்தது.

பாபாவின் இறுதிப் பிரகடனம் வெளியான பின்பு, அவரை எதிர்த்த பலர், அத்தகைய அறிவிப்பை வெளியிட அவர் வெளிப்படுத்திய அதிகாரத்தை எதிர்த்தனர். மாறாக, ஆவேசமான கருத்துக்கள் காரணமாக, இந்த எதிர்ப்பின் விளைவு, பல புதியவர்களை பாபாவின் பாதங்களை நோக்கி ஈர்த்தது. இந்தப் பிரகடனம், உண்மையாகவே, கடவுளின் பிரகடனம், அது ஒருபோதும் ஆதாரமற்றதாகவோ அல்லது பொய்யாகவோ இருக்க முடியாது: முடிவுகள் எப்பொழுதும் பாபாவின் விருப்பப்படியே இருக்கும்.

ஒரு சாதாரண மனிதன் இத்தகைய வியத்தகு அறிவிப்பை வெளியிடும் வேளையில், உறுதியான முடிவு எதுவும் ஏற்படவில்லை என்றால் அது மோசமான விளைவை ஏற்படுத்தியிருக்கும். அவதார புருஷர் விஷயத்தில், அனைத்தும் அவர் விரும்பியபடியே, அவரே நிர்ணயித்த காலத்தில் நிகழ்ந்தது. காலம் இவ்வாறு குறிப்பிட்டது: “இப்பொழுதும் எப்பொழுதும், அவதார புருஷர் உலகத்தின் துடிப்பை தமது கைகளில் வைத்திருக்கிறார், மேலும் அவரது விருப்பத்தால் மட்டுமே மனிதகுலம் சுவாசிக்கிறது.”

பாபாவின் மேற்கத்திய சீடர்கள் பலர், அவருடைய இறுதிப் பிரகடனம் குறித்த கவலையை வெளிப்படுத்தும் விதத்தில் எழுதிய கடிதங்கள் சத்தாராவில் பெறப்பட்டன. 1954 அக்டோபர் 8ஆம் தேதி வெள்ளிக்கிழமை, பாபா அவர்களுக்கு பின்வரும் செய்தியை அனுப்பினார். இதுவே, முந்தைய தினம் எழுத்துப்பலகை வழியாக வழங்கப்பட்ட பாபாவின் கடைசி செய்தி:

**உங்களில் எவரும் கவலைப்படுவதற்கு எக்காரணமும் இல்லை. பாபா இருந்தார், பாபா இருக்கிறார், பாபா என்றென்றும் நிரந்தரமாக இருப்பார். வெளியளவிலான உறவுகளைத் துண்டிப்பது என்பது, உள் இணைப்புகளை முடிவுக்குக் கொண்டுவருவதாக அர்த்தமாகாது. உள் தொடர்பை ஏற்படுத்துவதற்காகத்தான் இதுவரை வெளியளவிலான தொடர்புகள் பேணப்பட்டு வந்தன. உள் இணைப்புகளின் சங்கிலியால் பிணைக்கப்படும் நேரம் இப்போது வந்துவிட்டது. எனவே, வெளிப்புற தொடர்பு இனி தேவையில்லை. பாபாவின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உள் இணைப்பை ஏற்படுத்த முடியும். இந்த உள் இணைப்புகளை வலுப்படுத்துவதற்கு எனது அனைத்து ஆசிகளையும் வழங்குகிறேன்.**

**நான் எப்பொழுதும் உங்களுடனேயே இருக்கிறேன், உங்களை விட்டு விலகி அல்ல. நான் இருந்தேன், இருக்கிறேன், எப்போதும் உங்களுடன்**

**இருப்பேன், இந்த உணர்வை ஊக்குவிப்பதற்காகத்தான் வெளியுலகத் தொடர்பைத் துண்டித்தேன். இது அனைத்து நபர்களும் ஒருவரையொருவர் உள் இணைப்புகளுடன் பிணைப்பதன் மூலம், ஏக இறைவனான உண்மைப்பொருளை உணர உதவும்.**

**என் அன்பர்களே, நான் உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன்! எனது படைப்பின் மீது கொண்ட அன்பினால்தான் நான் பூமியில் இறங்கியுள்ளேன். என் உடல் கைவிடப்படுவதைப் பற்றிய எனது அறிவிப்புகளால் உங்கள் இதயங்கள் பிளவுபட வேண்டாம். மாறாக, எனது தெய்வீக விருப்பமாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களால் என்னிடமிருந்து தப்பிக்க முடியாது. நீங்கள் என்னிடமிருந்து தப்பிக்க முயன்றாலும் என்னை ஒழிக்க முடியாது. எனவே, துணிச்சலோடு, தைரியமாக இருங்கள்.**

**இவ்வாறு நீங்கள் உங்கள் இதயங்களை இழந்தால், நான் உங்களிடம் ஒப்படைத்த மாபெரும் பணியை நீங்கள் எவ்வாறு நிறைவேற்ற முடியும்? தைரியமாக இருங்கள், மேலும் எனது தெய்வீக சித்தத்தை நிறைவேற்றும் வகையில், என் அன்பின் செய்தியை உலகின் அனைத்து பாகங்களிலும் பரப்புங்கள். ஒவ்வொரு குழந்தையின் வாயிலிருந்தும் 'பாபா, பாபா, பாபா' என்ற வார்த்தைகள் வெளிவரட்டும், என் அன்பின் சுடரால் அவர்களின் அறியாமை எரிந்து சாம்பலாகட்டும்.**

**உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றில் உங்கள் நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம், எனது விருப்பத்தை நிறைவேற்ற ஒன்றிணைந்து வாருங்கள், மேலும் எனது பணியில் பங்கேற்க தகுதியுடையவர்களாக இருங்கள். என் அன்பின் செய்தியைப் பரப்புவதற்கு எனது அனைத்து ஆசிகளையும் வழங்குகிறேன்.**

எழுத்துப்பலகையைக் கைவிட்ட மறுநாள் பாபா, கைக்குட்டையால் சுற்றப்பட்ட கைகளுடன் மண்டலியின் பங்களாவிற்கு வந்தார். அவர் மண்டலியுடன் அமர்ந்த வேளையில், மேலே குறிப்பிட்ட செய்தி பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது. அவர் எதையேனும் தெரிவிக்க நினைத்தால், அது என்ன என்பதை அனைவரும் அவரை உற்று நோக்கி யூகிக்க வேண்டும். எரச்சின் யூகங்களைத் தவிர, பிற அனைவரின் யூகங்களும் தவறாக இருந்தன. ராம்ஜூ உடனே, "இது எல்லா அற்புதங்களையும் மிஞ்சும் வகையில் அமைந்துள்ளது! முகபாவனைகளிலிருந்து எதையாவது யூகிப்பது என்பது உண்மையில் நம்பமுடியாதது" என்று குறிப்பிட்டார்.

சத்தாராவில் 'ஜால் வில்லா' (JAL VILLA) என்று அழைக்கப்படும் மற்றுமொரு பங்களா வாடகைக்கு எடுக்கப்பட்டது, அங்கு கிருஷ்ணா, டாக்டர் நீலு, பாவ் கல்சூரி, கைக்கோபாத், பின்பு கிருஷ்ணாஜி ஆகியோர் தங்கத் தொடங்கினர். ஜால் வில்லாவில் இருந்த இந்தக் காலகட்டத்தில், பாபா மீண்டும் கைக்கோபாத்துடன் தமது தினசரி பணியைத் தொடர்ந்தார்.

அவரது எழுத்துப்பலகை இல்லாத இந்நேரத்தில், பாபா என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்துவது கடினமாக இருந்தது. மண்டலியில் ஒருவர் ஆங்கில எழுத்துக்களைத் திரும்பத் திரும்ப எடுத்துரைத்தபோது, பாபா அவரை ஒரு குறிப்பிட்ட எழுத்தில் நிறுத்தி விளக்க முயற்சித்தார். இது ஒரு தொல்லை மிகுந்த சோதனையாக இருந்தது, அவர் சொன்னதைப் புரிந்துகொள்ள நிறைய நேரம் பிடித்தது. சிறிது நேரம் கழித்து, பாபா தனது விரல்களால் காற்றில் எழுதத் தொடங்கினார், ஆனால் இதையும் பின்பற்றுவது கடினமாக இருந்தது. சில நேரங்களில், அவர் தரையில் எழுதினார், அதுவும் எளிதில் புரிந்துகொள்ள முடியாததாகவே இருந்தது.

படிப்படியாக சில மாதங்களுக்குப் பிறகு, பாபா தமது விரல்களால் அடையாளங்களை உருவாக்கத் தொடங்கினார்; இவ்வாறு, சைகைகளின் புதிய மொழி உருவாக்கப்பட்டது. அவர் தனது விரல்களால் ஆங்கில எழுத்துக்களை உருவாக்கியபோது, எப்போதாவது தனது செவியை 'ஈ' (E) என்ற எழுத்துக்காகப் பயன்படுத்தினார், மேலும் அவரது கண்ணை 'ஐ' (I) எழுத்துக்காகச் சுட்டிக்காட்டினார். இருப்பினும், ஆங்கில மொழியில் 'ஜே' (J) மற்றும் 'எஃப்' (F) எழுத்துக்களுக்கு எந்த அடையாளமும் தென்படவில்லை. பாபா இந்த எழுத்துக்களைப் பயன்படுத்த விரும்பும்போது, ஒருவர் எழுத்துக்களைத் திரும்பத் திரும்ப 'எஃப்' அல்லது 'ஜே' என்று கூறியபோது பாபா தலையை அசைப்பதை வழக்கமாகக் கொண்டார். இந்தப் புதிய, வினோதமான 'விரல் மொழி'யைப் பயன்படுத்துவதில் பாபா மிகவும் வேகமாகவும், கைதேர்ந்தவராகவும் இருந்தார், மேலும் ஆண், பெண் மண்டலியில் சிலர் அவரது கை சைகைகளைப் புரிந்துகொள்வதில் சாதுரியம் மிக்கவர்களாக இருந்தனர் - ஆண்களில் எரச் பாபாவின் அடையாளக் குறிகளை விரைவாகப் புரிந்துகொண்டார், மேலும் பெண்மணிகளில் மணி.

பாபா ஒருமுறை குறிப்பிட்டதற்கு இணங்க, **"உலகம் ஒவ்வொரு கணமும் எனது விரல்களின் அசைவுகளுக்கு இசைந்தாற் போல நடனமாடுகிறது!"**

ஒரு நாள் காலை, ஹமிர்பூரிலிருந்து 26 வயதான நிர்வாண சாது ஒருவர் ஆங்காங்கே அலைந்து திரிந்து ரோஸ்வுட் பங்களாவிற்கு வந்தார். உள்ளே செல்ல அனுமதிக்காமல், பாபா ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதாகவும், எவரையும் சந்திக்கவில்லை என்றும் கூறப்பட்டது. சாதுவின் பெயர் ராம்தாஸ் (RAMDAS, அர்த்தம், ராமரின் சேவகன்); அவர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு, அவரைப் பார்க்கும் ஆர்வத்தில் உறுதியாக இருந்தார்.

விரைவில் பலத்த மழை பொழியத் தொடங்கியது, அவர் அதில் முற்றிலும் நனைந்தாலும், அந்த இடத்தை விட்டு நகர்ந்தபாடில்லை. அவர் ஏறக்குறைய எட்டு மணிநேரம் வாயிலுக்கு வெளியே காத்திருந்தார்; பிற்பகல் 3:00 மணியளவில், பாபா அவரை ஜால் வில்லாவிற்கு அழைத்து தரிசனம் வழங்கினார். பாபாவைப் பார்த்ததும், அவர் மேலும் கீழும் துள்ளிக்குதித்து

நடனமாடத் தொடங்கி, “நான் கடவுளை மனிதனாகக் கண்டேன்!... ராம், கிருஷ்ணா, மஹாவீர்!” என மொழிந்து மகிழ்ச்சியில் அழத் தொடங்கினார்.

பாபா அவரிடம் தனது வழிகளை சீர்படுத்தி, துறவியாகப் பாசாங்கு செய்வதைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டார். ராம்தாஸ் ஒரு பொய்யும், போலியுமான சன்யாசியின் வாழ்க்கையை வாழ்ந்து, மக்கள் அவரை வணங்குவதையும், அவருக்கு மாலை அணிவிப்பதையும், தங்களால் இயன்ற அனைத்து சுவைமிகு உணவுகளை வழங்குவதையும் அனுபவித்து வந்தாலும், அவர் பாபாவிடம் தன்னை சீர்திருத்திக் கொள்வதாக உறுதியளித்தார்; விரைவில் தனது வாழ்க்கை முறையை மாற்றினார். பாபா, பின்னர், அவருக்கு மெஹர்தாஸ் என்று பெயர் சூட்டினார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், அர்னவாஸின் இளைய சகோதரர் நோஸர் தாதாசாஞ்சி (NOZAR DADACHANJI), மினூ எஃப். கம்பட்டா (MINOO F. KHAMBATTA), கர்ஷெட் தலாட்டி (CURSHED TALATI) ஆகியோருடன் பாபாவைக் காண மும்பையிலிருந்து வந்தார். 21 வயதான நோஸர், விமானப்படையில் விமானியாகப் பணிபுரிந்தார்; பாபா அவரிடம், “**விமானத்தில் பறப்பதற்கு முன்பு, முதலில் என்னை நினைவில் கொள்ளுங்கள். இது மிக முக்கியமானது, நான் சொல்வதைச் செய்தால், எதற்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை**” என்று அறிவுறுத்தினார். அவர் நோஸரிடம், “**நீங்கள் இப்போதே சென்றாக வேண்டும். நான் எவரையும் பார்க்கவில்லை என்றாலும், உங்களுக்கு தரிசனம் வழங்கி அதைச் சொல்ல நினைத்தேன்; ஏகாந்தவாசத்தில் கூட தரிசனம் செய்ய அனுமதித்ததே உங்கள் அதிர்ஷ்டம்**” என்றார்.

செப்டம்பர் மாதத்தில் மெஹராபாத் சந்திப்பின் போது, பாபாவுடனான நேர்காணலுக்குப் பிறகு, பாபாவின் அறையிலிருந்து வெளியேறும் வேளையில், நோஸர் ஒரு கல்லில் தடுக்கிக் கீழே விழுந்தார். அவரைத் திரும்ப அழைத்த பாபா, “**மீண்டும் கீழே விழுந்து, நீங்கள் எப்படி விழுந்தீர்கள் என்பதை எனக்குக் காட்டுங்கள்**” என்று கேட்டுக்கொண்டார். நோஸர் அதற்கு இணங்கி அவ்வாறே செய்ததும், பாபா, “**இப்போது நீங்கள் விமான விபத்தில் உயிர்த் துறக்க மாட்டீர்கள்**!” என்றதும், ஏதோ ஒரு விபத்தில் மரணம் தவிர்க்க முடியாதது என்று நோஸர் தனது இதயத்தில் உணர்ந்தார். பாபாவின் தரிசனத்திற்குப் பிறகு, மினூ, நோஸர், கர்ஷெட் மூவரும் மும்பைக்குத் திரும்பிச் சென்றனர்.

கப்பலின் வானொலி இயக்குபவராகப் பணிபுரிந்த எரச்சின் உறவினர், ஸாம் கேரவாலா (SAM KERAWALA), அவரது விடுமுறையின் போது சத்தாராவிற்கு வந்தார். சிறுவயதில், ஸாம் தனது தாயார் பானுமாசியுடன் (கெய்மாய் ஜெஸவாலாவின் சகோதரி) பெங்களூர் ஆசிரமத்தில் தங்கியிருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் பாபா அவரிடம், “**நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?**” என வினவினார்.

“ஆமாம் மிகவும் நன்றாகத் தெரியும்!” ஸாம் நம்பிக்கையுடன் பதிலளித்தார்.

பாபா, மண்டலி பக்கம் திரும்பி முகபாவத்துடன் கூறினார்: “**இது உண்மையில் அற்புதம்; நீங்கள் அனைவரும் என்னுடன் இத்தனை ஆண்டுகளாக இருந்துவருகிறீர்கள், இதுகாறும் நான் யார் என்று உங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் ஸாமுக்குத் தெரியும்! அவர் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி**” என்றதும், ஸாம் தன்முனைப்பான துணிச்சலுக்காக வெட்கப்பட்டார்.

ஸாம் சமீபத்தில் ஒரு பழைய வாக்ஸால் (VAUXHALL) காரை வாங்கினார், ஆனால் சிறிது காலம் ஓட்டிய பிறகு, காரின் எஞ்சின் முழுவதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதைக் கண்டுபிடித்தார். பாபா அதை ஒரு மஸ்த் பயணத்திற்கு பயன்படுத்த விரும்பினார், எனவே காரைப் பழுதுபார்த்து, சத்தாராவிற்குக் கொண்டு வரச் செய்தார். செல்லும் வழியில், ஸாம் தனக்குள்ளே இவ்வாறு நினைத்தார்: “இந்தக் கார் எனக்கு ஓர் உண்மையான தலைவலியாக இருந்தது, இப்போது கடவுளுக்கு நன்றி, இது விரைவில் பாபாவின் பிரச்சினையாக மாறிவிடும் - எரிவாயு, எண்ணெய் உட்பட அனைத்தும்!”

ஸாம் ஓட்டுநருடன் காலை 10:00 மணியளவில் சத்தாராவை வந்தடைந்து, பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். பாபா கார் வந்ததில் மிகவும் மகிழ்ச்சியாகத் தோன்றினார்; அவர் அதில் சிறிது நேரம் பயணம் செய்து அதன் செயல்திறனைக் கண்டு திருப்தி அடைந்தார்.

அன்று மதியம், ஸாம் ஓட்டுநருடன் புறப்படுவதற்கு முன்பு, பாபா ஆண்கள் பங்களாவிற்குத் திரும்பிய வேளையில், இளஞ்சிவப்பு நிற கோட்டின் பாக்கெட்டுகளை உள்ளிருந்து திருப்பி, ஸாமிடம் “**என்னுடைய உபயோகத்திற்காகக் காரைக் கொண்டு வந்துள்ளீர்கள், ஆனால் அதை இயக்க என்னிடம் பணம் இல்லை. ஆதலால் உங்களிடம் உள்ள பணத்தை எரச்சிடம் ஒப்படைப்பது நல்லது; மேலும் அனைத்து எதிர்கால செலவுகளுக்கும் தேவைப்படுவதை உறுதி செய்ய வேண்டும்**” என்றார். ஸாம் அதற்கு ஒப்புக்கொண்டு சத்தாராவிற்கு வரும் வழியில் தன்னுள் உதயமான குறுகிய மனப்பான்மையை நினைத்துப் பார்த்தார். இதன் முலம் பாபா, அவருக்குத் தனது தவறை உணர்த்தினார். ஸாம், பூனா செல்வதற்குத் தேவையான பணத்தை மட்டும் கொடுத்து, மீதியை எரச் தன்னுடன் வைத்துக்கொண்டார்.

ஸாமின் கார் நல்ல நிலையில் இல்லாவிட்டாலும், எப்படியோ சமாளித்து ஓட வைத்தனர். தினமும் காரை சுத்தம் செய்யும் கடமை பாவ் கல்சூரிக்கு வழங்கப்பட்டது, பாபா ஒவ்வொரு நாளும் வந்து அது நன்றாக சுத்தம் செய்யப்படுகிறதா என்பதை ஊர்ஜிதம் செய்வது வழக்கம்.

ஆதி சீனியர் 1954 அக்டோபர் 11 அன்று சத்தாராவிற்கு அழைக்கப்பட்டார், அங்கு பாபா, மால்கம் ஸ்க்லோஸ், சார்லஸ் பர்டம் இருவரின் ‘மூன்று வியத்தகு

வாரங்கள்' (THREE INCREDIBLE WEEKS) நிகழ்ச்சிகளின் குறிப்புகள் பற்றியும், பாபாவின் எதிர்வரும் பண்டர்பூர் விஜயம் குறித்தும் விவாதித்தார், மேலும் நஸர்வான் ஸட்டா, ஸரோஷ் இருவரிடமும் இந்த விவரங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு ஆதிக்கு அறிவுறுத்தினார்.

ஆதியின் மருமகன் ஃபாலுவும் அவரது குடும்பத்தினரும் அவருடன் சத்தாராவிற்கு வந்திருந்தனர்; ஃபாலுவைப் பார்த்து பாபா மகிழ்ச்சியடைந்தார். அவர் ஃபாலுவின் தந்தை ருஸ்தத்தைப் பற்றி பேசினார், "**உங்கள் தந்தை என் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்ததோடு அளப்பரிய தியாகமும் செய்துள்ளார். உங்களின் மூலமாக அவர் என்னை மீண்டும் உடல் ரீதியாகப் பார்க்கிறார்.**" ஃபாலு கண்கலங்கி அழுதபோது, பாபா அவரைத் தழுவினார்.

1954 அக்டோபர் 16 பிற்பகல் 3:00 மணிக்கு, பெண்டு, பைதூல், குமார் ஆகியோருடன், எரச் ஓட்டிச் சென்ற ஆதியின் காரில் பாபா மஸ்த் பணிக்காகப் புறப்பட்டுச் சென்றார். கோலாப்பூர், பெல்காவ்ம், மைசூர் மற்றும் பிற இடங்களில் வாழும் மஸ்துகளை பாபா தொடர்பு கொண்டு, ஆறு நாட்களுக்குப் பின்னர், 22ஆம் தேதி சத்தாரா திரும்பி வந்தார்.

இந்தப் பயணத்தின் போதுதான், பாபா, முன்னர் ஒருமுறை திட்டமிட்டிருந்த 'உலகளாவிய ஆன்மீக மையம்' (UNIVERSAL SPIRITUAL CENTER) நிறுவவிருந்த பைரமங்களா (BYRAMANGALA) சொத்துகளுக்குத் திடீரென விஜயம் செய்தார். அந்த நேரத்தில் தீபாவளி கொண்டாட்டங்களின் ஒலிபெருக்கி சத்தத்தால் மைசூரில் ஓய்வெடுப்பதற்கு பாபா சிரமப்பட்டார். வெங்கோபா ராவ் அந்த நிலத்தின் ஒரு பகுதியை வாங்கி, அங்கேயே வாழ்ந்து வந்த பைரமங்களாவுக்குச் செல்லுமாறு எரச் பரிந்துரைக்க, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய பெண்டு முன் கூட்டியே அனுப்பப்பட்டார். பாபா வருகை தந்ததில் வெங்கோபா ராவ் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அஹமதுநகரில் நடைபெற்ற செப்டம்பர் மாத நிகழ்ச்சிகளில் ஏன் கலந்து கொள்ளவில்லை என்று வெங்கோபா ராவிடம் பாபா கேட்க, அவற்றைப் பற்றிய சுற்றறிக்கை தனக்கு வரவில்லை என்று அவர் பதிலளித்தார். பாபா கூறினார், "**நீங்கள் என்னைப் பார்க்க வராததால், நான் உங்களிடம் வர வேண்டியதாயிற்று!**"

பலத்த மழையையும் பொருட்படுத்தாமல், பாபா அந்த நிலத்தை சுற்றி வந்து அருகில் அமைந்த நீர்த்தேக்கத்தையும் பார்வையிடச் சென்றார். வெங்கோபா ராவ் மீண்டும் மண்டலியுடன் இணையும் விருப்பத்தைத் தெரிவித்தபோது, சரியான நேரத்தில் அவரை அழைப்பதாக பாபா கூறினார்.

பாபா, தனது பணியை தொடருவதற்கு முன்பு, பைரமங்களாவில் ஒரிரு நாட்கள் தங்கியிருந்தார்.

இந்த மஸ்த் பயணத்தை நிறைவு செய்த சில நாட்களுக்குப் பின்னர், எரச், பைதூல், குமார், பாவ் ஆகியோருடன் இஸ்லாம்பூர், கோலாப்பூர் ஆகிய இடங்களில் வாழ்ந்த இரண்டு குறிப்பிட்ட மஸ்துகளுடன் பணிபுரிய பாபா, பல சந்தர்ப்பங்களில் திரும்பி வந்தார். 1946 டிசம்பர் மாதத்தில், மஹாபலேஷ்வர்

ஆசிரமத்திற்கு அழைத்து வரப்பட்ட, ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட தொண்டி புவா (DHONDI BUA) என்ற மஸ்தை இஸ்லாம்பூரில் தொடர்பு கொண்டார். தொண்டி புவா ஓர் உயரமான உருவம், ஒளிரும் கண்களுடன், எல்லா காலநிலையிலும் முற்றிலும் நிர்வாணமாக இருந்தாலும், மிகவும் வலிமையாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தார். போர்வை, சட்டை போன்றவை வழங்கப்பட்டால், “என்னால் மகிழ்ச்சியையும், சௌகரியங்களையும் தாங்க முடியவில்லை!” என்று கூறி அவற்றை நிராகரித்தார்.

ஒருமுறை, பாபா மண்டலியுடன் இரவு 1:00 அல்லது 2:00 மணியளவில் தொண்டி புவாவைத் தொடர்பு கொள்ளச் சென்றபோது, அவர் ஒரு கோவிலில் அமர்ந்து, அங்கிருந்த சிலையின் முன்னால் சிறுநீர் மற்றும் மலம் கழித்திருந்தார். மஸ்த் தொடர்புகளின் போது, மண்டலியில் ஒருவர், மஸ்துடன் உரையாடி அவரது கவனத்தைத் திசைதிருப்பும் அவ்வேளையில், பாபா அவருடன் அவர் விரும்பும் எந்தப் பணியையும், பொதுவாக அவர்களின் உடலை வெளிப்புறமாக வருடி அல்லது அவர்களின் பாதங்களை அழுத்துவதன் மூலம், செய்ய முடியும்.

எனவே எரச், தொண்டி புவாவிடம், “நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள்?” என வினவியபோது,

“ஓ, இது இறைவனின் பெரிய கோவில்” என்று மஸ்த் பதிலளித்தார். “இது ஒரு புனிதமான இடம்.”

“அப்படியென்றால் எப்படி இங்கே ஒருவர் சிறுநீர், மலம் கழித்திருக்கிறார்?” எரச் ஆச்சரியத்துடன் கேட்டார்.

அதற்கு தொண்டி புவா, “எப்படியிருந்தாலும், கோவில் என்றால் என்ன?” என்ற கேள்வியை எழுப்பினார்.

எரச் பதிலளித்தார், “கோயில் என்பது கடவுள் நிலைகொண்டுள்ள புனிதமான இடம். எனவே இயற்கையாகவே, மக்கள் அங்கு அவரை வணங்க வருகிறார்கள்.”

“இல்லை இல்லை!” மஸ்த் தெளிவான தொனியில் விளக்கினார். “கடவுள் எங்கும் இருக்கிறார்! கடவுள் எங்கும் இருப்பதாலும், எங்கும் வியாபித்திருப்பதாலும், மனிதனால் அவரைக் கண்டுகொள்ள முடியவில்லை. ஆகவே, அவர்கள் செய்வது என்னவென்றால், அந்தக் கடவுளின் கற்பனை உருவத்தை, அவர்களால் கையாள முடியாதபடி தயார் செய்து, அதை ஓரிடத்தில் நிறுவுகிறார்கள். அதுவே கோவில்.

“அப்படியானால், உண்மையில் சொல்லப்போனால், கோயில் என்பது இறைவனை வழிபடுவதற்கான இடமல்ல, அது இறைவனுக்கான சிறைச்சாலை! மக்கள் அவரை அங்கேயே சிறைப்படுத்துகிறார்கள்!”

மஸ்த் தொண்டி புவா, வீணாக வீசி எறியப்பட்ட பீடிகளை சேகரித்து, புகைபிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். எவரேனும் ஒரு புதிய பீடி அல்லது சிகரெட்டை வழங்கினால், அவர் அதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால்

“சௌகரியங்கள் எனக்கு ஏற்புடையதல்ல, அதனுடன் தொடர்பு கொள்வதை என்னால் தாங்க முடியாது!” என்று கூறுவது வழக்கம்.

சில நேரங்களில், மஸ்த் தூசியில் உருண்டு புரளும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். “**இது கடவுள் மீதான அன்பின் ஏக்கத்தால் வந்தது**” என்று பாபா கூறினார், “**அத்தகைய அன்பு என்ன என்று உங்களுக்கு சிறிதளவு சிந்தனையும் இருக்க முடியாது**” என்று ஒரு நாள் பெண் மண்டலியிடம் கூறினார். “**இது இறை பித்தனைச் சுட்டெரிக்கும் தாங்கொணா வேதனை என்பதால் மஸ்தை ‘ஜீவனுள்ள நெருப்பு’ என்று அழைக்கலாம்.**”

தொண்டி புவாவுடனான அவரது தொடர்பில் பாபா, மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, அவருடன் தொடர்ந்து பலமுறை பணியாற்றினார். பாபா அவரைக் குறித்து அவ்வப்போது குறிப்பிடுவதோடு, அவரை சத்தாராவிற்கு அழைத்துவர விரும்பினார், ஆனால் மஸ்தை வற்புறுத்த இயலவில்லை.

இவர்களின் மிக உயர்வான உணர்வு நிலை காரணமாக, மஸ்துகள் கற்பனை செய்ய முடியாத, கடுமையான சூழ்நிலைகளைத் தாங்கும் சக்தி படைத்தவர்கள். கோலாப்பூரின் புறநகர் பகுதியில், ஒரு வயதான மஸ்த், அழுக்கு படிந்த, கருமையான தோல் மற்றும் வளைந்த முதுகுடன் ஒரு கல் கோவிலுக்கு அருகில், குறுகலான ஒரு மூலையில் வாழ்ந்து வந்தார். அந்த இடம் மிகவும் சிறியதாக இருந்ததால், ஒரு சாதாரண மனிதனால் அங்கு அமர முடியாத நிலையில், அவரது கால்கள் வெளியே இருந்தன. கல் மற்றும் சிமெண்டால் கட்டப்பட்ட அந்த இடம் கோடையில் கொதிக்கும் உலை போல மாறிவிடும். இருந்தும் அனைத்து பருவகாலங்களிலும், இந்த மஸ்த் அந்த மூலையை ஆக்கிரமிக்கத் தவறியதில்லை.

யாரொருவர் எதைக் கொடுத்தாலும் அதை ஒரு துணி மூட்டையில் திணித்து, தினமும் மாலையில், அந்த மூட்டையுடன், நகரத்தில் அலைந்து திரிந்து, இரவு 9 அல்லது 10 மணிக்குத் திரும்புவது வழக்கம். அவர் ஒரு ஜமாலி (சாந்தம்) வகையைச் சார்ந்தவராக இருந்தாலும் சில சமயங்களில், ஜலாலி (நெருப்பு) தன்மையை வெளிப்படுத்தியதுண்டு. அவர் மிக அரிதாகவே ஒரு வார்த்தை பேசினார்.

பாபா அவரைத் தொடர்பு கொண்டபோது, அவரது மூட்டையில் உணவுப் பொருட்கள் நிறைந்து இருந்ததால், துர்நாற்றம் வீசியது; ஆனால் ஒரு கணம் கூட அவரது குப்பை மூட்டையிலிருந்து விலகி இருக்க மஸ்த் தயாராக இல்லை. இந்த மஸ்தைத் தொடர்பு கொண்டதில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்ததோடு, அவரைப் பெரிதும் விரும்பினார். ஒரு நாள் இரவு பாபா, மஸ்தை சத்தாராவிற்கு அழைத்து வந்தார், ஆனால் அவர் மிகவும் அமைதியற்றவராக இருந்ததால், மறுநாள் கோலாப்பூரில் அவரது இருப்பிடத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.


இந்த நேரத்தில் குமாரும் டெஹ்ரா டூனுக்குத் திரும்பிச் சென்றார்; அக்டோபர் 27 அன்று, கிருஷ்ணாஜியை மெஹராஸாத்திற்கு அனுப்பிவைத்து, அங்கு ஆறு மாதங்கள் மௌனம் கடைப்பிடிக்குமாறு பாபா கட்டளையிட்டார்.

குமார் புறப்படுவதற்கு முன்னர், ஒரு நாள் மெஹராஸாத்தில், பாபாவின் பாதச்சுவடுகளைத் தயார் செய்வது உகந்ததாக இருக்கும் என்ற எண்ணம் அவர் மனதில் உதயமானது. பாபா அதற்கு இணக்கம் தெரிவிப்பாரா என்று தெரியாதபோதும், அவர் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸை (PLASTER OF PARIS) தயாராக வைத்திருந்தார். அதைத் தொடர்ந்து, மணி அல்லது கோஹெர், பாபாவிடம் பாதச்சுவடைப் பதிவு செய்ய அவர் விரும்புகிறாரா என்று கேட்குமாறு தனது கோரிக்கையை முன்வைத்தார்; அவரது வலது பாதத்தை மட்டும் பதிவிட ஒப்புக்கொண்டால் கூட போதுமானது என்றும் கூறியிருந்தார். பாபா ஏற்கனவே அன்றைய தினம் ஓய்வு பெற்று, தனது அறையில் பாவ் கல்சூரியுடன் இருந்தார்.


குமார், பிளாஸ்டர் பொடியை ஓர் அட்டைப் பெட்டியில் தயாராக வைத்துக் காத்திருந்த அவ்வேளையில், அவர், பாபாவின் படுக்கையறைக்கு அழைக்கப்பட்டார். பாபா என்ன கூறுவாரோ என்ற யோசனையில் பதற்றமடைந்தார். அவர் வந்து விளக்கியபோது, பாபா இனிமையான மனநிலையில் இருந்தார், “**ஆம்**, **சரி**” என்று பதிலளித்தார். பதட்டமான இதயத்துடன், குமார், பிளாஸ்டர் ஆஃப் பாரிஸை தண்ணீரில் வேகமாகக் கலந்தபோது, எரச்சும் அவருடன் இணைந்து கலவையில் சிறிது உப்பும் சேர்க்குமாறு கூறினார்.

பாபா கருணையுடன் தனது வலது பாதத்தை பெட்டிக்குள் வைத்து, வெளியே எடுத்த பின்பு குமாரிடம் “**இடது கால்?**” என்ற கேள்வியுடன் அவரை நோக்கினார். பாபா இரண்டு கால்களுக்கும் இணக்கம் தெரிவிப்பாரா என்று குமாருக்கு உறுதியாகத் தெரியாததால், சிறிதளவு பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் மட்டுமே எஞ்சியிருந்தது. உற்சாகமாக, மீண்டும் அந்தக் கலவையைத் தயார் செய்தபோது, பாபா தனது இடது காலையும் அதில் வைத்தார். (இதனால்தான் வலது கால் தடம் இடதுபுறத்தை விட முழுமையாகவும், துல்லியமாகவும் இருந்தது.)

குமார் பாதச்சுவடுகளைப் பதிவு செய்து கொண்டிருந்தபோது, பாபா, “**எதிர்கால சந்ததியினருக்கு இது நல்லது**” என்று குறிப்பிட்டார். குமார் பிளாஸ்டர் பெட்டிகளை தனது அறைக்கு எடுத்துச் சென்று, அவற்றை உலரவைத்து, தன்னுடன் டெஹ்ரா டூனுக்கு எடுத்துச் சென்றார்.



காட்கே மஹாராஜுடன்
மெஹர் பாபா,
**பண்டர்பூர், 1954 நவம்பர் 6**
(MEHER BABA WITH
GADGE MAHARAJ,
PANDARPUR 1954 NOVEMBER 6)



காட்கே மஹாராஜின்
தர்மசாலை,
**பண்டர்பூர், 1954 நவம்பர் 6**
(GADGE MAHARAJ'S
DHARAMSHALA,
PANDARPUR 1954 NOVEMBER 6)

# பண்டர்பூர் தரிசனம்

**(Pandharpur Darshan)**

புனித யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றான பண்டர்பூர், விட்டோபா (VITHOBA, கிருஷ்ணரின் வேறொரு பெயர்) கோவிலுக்கு, கிருஷ்ண பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் தரிசனத்திற்காகச் செல்வது வழக்கம். அஹமதுநகரிலிருந்து ஏறக்குறைய 160 மைல் தொலைவில், சந்திரபாகா நதிக்கரையில் (CHANDRABHAGA RIVER) அமைந்துள்ள இக்கோயில், துக்காராம் (TUKARAM) என்பவரால் பிரசித்தி பெற்றது. காட்கே மஹாராஜ் (GADGE MAHARAJ) ஏற்கனவே பாபாவிற்கு அழைப்பு விடுத்திருந்தார்; அதைத் தொடர்ந்து, 1954 நவம்பர் 6ஆம் தேதி மதியம் முதல் 7ஆம் தேதி மதியம் வரை, பண்டர்பூரில் தங்குமாறு பாபாவிற்கு வேண்டுகோள் விடுத்தார்; ஆண்டின் மிகவும் புனிதமான இரண்டு நாட்கள், பக்தர்கள் அங்கு கூடுவது வழக்கம்.

இருப்பினும், வாடியா பார்க்கில் தரிசனம் வழங்கியதைப் போல, வெகுஜன தரிசனத்தை பாபா விரும்பவில்லை என்பது காட்கே மஹாராஜுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாபா கூறினார், **“நான் பண்டர்பூருக்கு வருவது, விட்டோபாவை, விட்டோபாவே தரிசனம் செய்ய வந்ததற்கு சமம்!”**

ஆனாலும் 6, 7 தேதி என நாட்களை நிர்ணயம் செய்து, பூனாவில் காடேக்கருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஒரு வருடத்திற்கு முன்பு, காடேக்கர் நாசிக் நகருக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பின்னரும், காட்கே மஹாராஜ், காடேக்கர் குடும்பத்தினரை பூனாவில் சந்தித்ததைப் போலவே, நாசிக் குடியிருப்புக்கும் விஜயம் செய்து வந்தார். காடேக்கர், தனது மனைவி குணாதாய் மற்றும் அவர்களது குழந்தைகளான திகம்பர், நளினி இருவருடன், பாபா செல்வதற்கு முன்னரே பண்டர்பூருக்குச் சென்று, அங்கு பாபாவையும் மண்டலியையும் ராணுவ உறைவிடப் பள்ளியில் தங்க வைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

நரிமன் தாதாசாஞ்சி, மெஹர்ஜி கர்காரியா இருவரையும் பாபா, நவம்பர் 5ஆம் தேதி சத்தாராவிற்கு அழைத்தார். அவர்களுடன், பாபா, ஸரோஷ், எரச், பெண்டு, பாவ் கல்சூரி, கோஹியார், குஸ்தாஜி ஆகியோர் இரண்டு கார்களில் 1954 நவம்பர் 6 சனிக்கிழமை அன்று பண்டர்பூருக்குப் புறப்பட்டு, மதிய உணவுக்காக பிந்த்ரா ஹவுஸில் நின்றனர். பல்வேறு இடங்களில் வாழும் பாபாவின் நெருங்கிய அன்பர்கள் பலருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்களும் பண்டர்பூருக்குப் பயணம் மேற்கொண்டனர். இவர்களில் ஆதி சீனியர், ஜங்கூ, நஸர்வான், டாக்கே, வாமன், ருஸ்தம் காக்கா, பகீரத், காக்கா சிஞ்சோர்கர், அஹமதுநகரைச் சேர்ந்த பைய்யா பாண்டே, ஸாக்கோரியிலிருந்து யஷ்வந்த் ராவ்; பால் நாத்து, குருதுவாடியைச் சேர்ந்த வாசுதேவ் கேர் என்ற சக ஆசிரியர்; பூனாவைச் சேர்ந்த தாடே குடும்பம், ரங்கோலே, சுபத்ரா, படே, ஷிண்டே,

காம்ப்ளே, சதாஷிவ் பாட்டீல்; மற்றும் ஆந்திராவைச் சேர்ந்த குடும்ப ஸாஸ்திரி ஆகியோர் அடங்குவர்.

பிற்பகல் 3:30 மணிக்கு பண்டர்பூரைச் சென்றடைந்ததும், காக்கா சிஞ்சோர்கரின் மாமனார் ஆராத்யா பாட்டீல் வக்கீலின் (ARADHYA PATIL VAKIL) இல்லத்தில் பாபாவிற்கு தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. மாலை 4:00 மணிக்கு, பாபாவும் மண்டலியும் விசாலமான பள்ளிக்கூட கட்டிடத்தில் தங்கினர். கீழ்வரும் இந்தச் செய்தி காட்கே மஹாராஜுக்கு அனுப்பப்பட்டது:

**விட்டோபா, அவர்களே பண்டர்பூருக்கு நேரில் வந்துள்ளார், அவர் இங்குத் தங்கியிருக்கும் அடுத்த 24 மணிநேரமும் முழுமையாக உங்களோடு இருந்து, நீங்கள் சொல்வதைச் செய்யத் தயாராக இருக்கிறார். ஆனால் மஹாராஜ், பாபாவிடம் மௌனத்தைக் கலைக்கவோ அல்லது அக்டோபர் 7ஆம் நாளிலிருந்து கைவிட்ட அவரது எழுத்துப் பலகையைப் பயன்படுத்தவோ கேட்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு உடன்பட வேண்டும். காட்கே மஹாராஜும் அவர் (விட்டோபா, பாபா) முடிவெடுத்ததற்கு இணங்க இரவு உணவில் பங்கெடுக்கவோ அல்லது ஓய்வெடுக்கவோ அவரிடம் வேண்டுதல் வைக்கக் கூடாது. இது அங்கு வரும் யாத்ரீகர்களுக்கு தன்னால் இயன்றவரை தரிசனம் வழங்க ஒரு வாய்ப்பாக இருக்கும்.**

பாபாவின் வருகையைக் கேள்விப்பட்ட காட்கே மஹாராஜ், அவரைத் தனது சொந்த தர்மசாலாவில் வரவேற்க ஏற்பாடு செய்தார். திறந்த முற்றத்தில், இயன்ற எண்ணிக்கையிலான யாத்ரீகர்களை அழைத்துச் சென்றார். பாபாவை தூரத்தில் இருந்தும் தரிசிக்கும் வகையில் அனைவரும் சீரான முறையில் அமர வைக்கப்பட்டனர்.

மாலை 5:00 மணிக்கு, பாபா தர்மசாலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடைய கையைப் பற்றிக்கொண்டு காட்கே மஹாராஜ், தனக்காக, பிரத்யேகமாக கட்டப்பட்டிருந்த உயரமான மேடைக்கு அழைத்துச் சென்று, பாபாவை அதில் அமருமாறு கேட்டுக் கொண்டார். பாபா யாத்ரீகர்களுடன் தரையில் அமர விரும்பினாலும், அவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் விதத்தில் மஹாராஜின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்தார்.

கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் தெளிவாகத் தெரியும் விதத்தில், பாபா நாற்காலியில் அமர்ந்தார். தர்மசாலாவில் அமைந்த விட்டோபாவின் கோவிலுக்குள் வைக்கப்பட்ட சிலைக்குப் பின்னால், விட்டோபாவின் சிலையை மறைக்கும் விதத்தில் பாபாவின் நாற்காலி, வைக்கப்பட்டிருந்தது. ஆண்டு முழுவதும் வழிபடப்பட்ட அந்த சிலை, விட்டோபாவாகிய மெஹர் பாபா மனித உருவில் அவர்கள் முன் இருந்தபோது, அதன் முக்கியத்துவத்தை இழப்பது இயற்கையே!

பாபாவைச் சுட்டிக்காட்டி, காட்கே மஹாராஜ் யாத்ரீகர்களிடம் கூறினார்: "மெஹர் பாபா, நம் மத்தியில் இருப்பதில் நான் இன்று மகிழ்ச்சியில் மூழ்கிவிட்டேன், நீங்கள் அனைவரும் அவரை தரிசனம் செய்ய விரும்புகிறேன்.

இந்த வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில், அவர் ஜகத் குரு (உலகின் அதிபதி), அவர் நித்தியமானவர், முழு உலகிற்கும் உண்மையில் சேவை புரிபவர்."

அவர் அங்கிருந்த அனைவரையும் கேட்டுக்கொண்டார்: "மெஹர் பாபாவின் தரிசனத்தை முழு மனதுடன் பெற்றுக் கொள்ளுங்கள், பாபா இங்கே இருப்பதன் மூலம் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்துள்ளார்."

மெஹர் பாபா தமது நாற்காலியிலிருந்து எழுந்து, சில வினாடிகள் ஒன்றுதிரண்டிருந்த மனித குலத்திற்கு வணக்கம் செலுத்தி, கைகளைக் கூப்பி நின்றார். பின்னர் அவர் கோவில் படிகளில் ஒன்றில் அமர்ந்தார். அனைவரும் ஒன்றாக இணைந்து, கிருஷ்ணரைப் புகழ்ந்து பஜனைகளைப் பாடி, கைகளைத் தட்டினர். சில நிமிடங்களுக்குப் பிறகு, காட்கே மஹாராஜ் பஜனையை நிறுத்துமாறு கையை உயர்த்தி, சைகையால் கூறி, பாபாவிற்கு மாலை அணிவித்து, ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் பாபாவின் பாதங்களில் தலைவணங்கினார். அவரை மாபெரும் துறவியாக நேசிப்பவர்களுக்கும் கருதுபவர்களுக்கும் இது ஓர் ஆச்சரியமான காட்சியாக இருந்தது (சில பக்தர்கள் அவரை ஒரு சத்குருவாகக் கூட கருதினர்). அவரது வழிபாட்டை ஏற்றுக்கொண்ட பாபா, மஹாராஜின் முகத்தை வருடி, அவரை மெதுவாகத் தட்டிக் கொடுத்துக்கொண்டே இருந்தார்.

மீண்டும் கூட்டத்தில் உரையாற்றிய காட்கே மஹாராஜ் இவ்வாறு அறிவித்தார்: "உலகம் முழுவதும் வாழும் மக்கள் மெஹர் பாபாவின் தரிசனத்தை ஆவலுடன் நாடுகின்றனர் - ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து அவரைப் பார்ப்பதற்காகவே வருகிறார்கள், அதேசமயம் இன்று இங்கு இருக்கும் நீங்கள், பாபாவைத் தனிப்பட்ட முறையில் காணமுடிந்தது உண்மையிலேயே உங்கள் அதிர்ஷ்டம். அவரைத் தொடர்பு கொள்வதற்கான அரிய வாய்ப்பை உங்களுக்கு வழங்குவதற்காக சத்தாராவிலிருந்து மெஹர் பாபா வருகை தந்துள்ளார்."

அளப்பரிய ஆர்வத்துடனும், பயபக்தியுடனும், மஹாராஜ் மேலும் கூறினார்: "முழு பக்தியுடனும் நம்பிக்கையுடனும் அவரது தரிசனத்தை அடையப்பெறுவதன் மூலம், மெஹர் பாபாவின் கருணைமிகு பிரசன்னத்தின் முழு பலனையும் பெற்றுக்கொள்ளுங்கள்." இதயபூர்வமாக "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்று கூறி ஒலிப்பெருக்கியில் தனது பேச்சை நிறைவுசெய்தார்.

புகைப்படக் கலைஞர் பைய்யா பாண்டே இந்த நிகழ்வின் சில புகைப்படங்களை எடுத்தார். எந்த ஒரு விழாவிலும் அவர் அப்படியொரு வாய்ப்பைத் தவறவிட்டதில்லை. பாபா அவரைக் கேலி செய்தார், "**இப்போது என்னைக் கொஞ்சம் ஓய்வெடுக்க அனுமதிப்பீர்களா?**"

பாண்டே பதிலளித்தார், "எனது கேமரா அமைதியற்ற நிலையில் உள்ளது, பாபா."

பாண்டே, பாபாவை உன்னிப்பாக கவனித்து, அவருடைய அற்புதமான வெளிப்பாடுகளைப் படமெடுக்க முயற்சித்தார். பாபா அவரை அடிக்கடி கடிந்து கொள்வதுண்டு: "**நீங்கள் என்னை உங்கள் கண்களால் உண்கிறீர்கள்**!"

மெஹர் பாபாவின் வாழ்க்கையைப் பற்றி, கூட்டத்தில் எடுத்துரைக்குமாறு காட்கே மஹாராஜ் மண்டலியிடம் கேட்டுக்கொண்டார். பாபாவின் விருப்பத்திற்கிணங்க, பாவ் கல்சூரி முக்கிய நிகழ்வுகளையும் சில சம்பவங்களையும் கூறினார்.

இடையிடையே, பாபாவின் முன்னிலையில் இருக்கும் போது, காட்கே மஹாராஜ் பக்தர்களிடம், "தேவகி நந்தன் கோபாலா!" என்று மொழியுமாறு கேட்டுக்கொண்டார்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, வெளியில் பொறுமையாகக் காத்திருந்த இதர பக்தர்களுக்கு இடம் கொடுக்குமாறு அங்கிருந்தவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மிகுந்த தயக்கத்துடன், உள்ளே இருந்தவர்கள் வெளியே நகர்ந்தனர். அவர்களின் இடத்தை உடனடியாக நூற்றுக்கணக்கானவர்கள் ஆக்கிரமித்தனர்; புதிதாக வந்தவர்கள் பாபாவின் பிரசன்னத்தை அன்புடன் உள்வாங்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாலை 6:30 மணிக்கு, "மெஹர் பாபாவிற்கு ஜெய்! காட்கே மஹாராஜுக்கு ஜெய்!" என்ற முழக்கங்களுக்கு மத்தியில், காட்கே மஹாராஜ் தனது கையை உயர்த்தி, பாபாவை மட்டுமே துதிக்க வேண்டும் என்று கூட்டத்தினரை கடுமையாக எச்சரித்து - பாபாவை மஹாராஜ் அவரது காருக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் வெளியேறியதைக் கண்டு மக்கள் பாபாவின் பாதங்களைத் தொட முன்னோக்கி விரைந்தனர். சில யாத்ரீகர்கள் பாபாவை வணங்கினாலும், மஹாராஜ் சாமர்த்தியமாக பாபாவை ஒருவரும் நெருங்கி தொந்தரவு செய்யாமல் இருக்க உதவினார்.

பாபா மற்றும் மண்டலி மீண்டும் பள்ளிக்கூட வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. பள்ளிக்கூடம், நகரின் தொலைதூரத்தில், மக்கள் கூட்டம் அலைமோதும் சாலைகளிலிருந்து விலகி இருந்தது. அன்று மதியம் சத்தமும், நெரிசலும் நிறைந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சிறிது ஓய்வுக்காக இந்த அமைதியான இடத்திற்கு திரும்பி வந்ததில் மண்டலி நிம்மதியடைந்தனர். பண்டர்பூருக்கு வந்திருந்த அவருடைய அன்பர்கள் குழு ஒன்று பாபாவைச் சுற்றித் திரண்டது. அற்புதமான மனநிலையில் இருந்த பாபா, மெஹராபாத் கூட்டங்களுக்குப் பின்னர் அவர்களை மீண்டும் சந்தித்ததில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அனைவரும் தேநீர், சிற்றுண்டியை முடித்ததும், பாபா தனது அன்பர்களின் பாடல்களைக் கேட்க விரும்பினார், இசைக்கருவிகளும் கொண்டு வரப்பட்டன. பாபா அன்று இரவு முழுவதும் தூங்குவதைத் தவிர்த்து, பக்தி இசையைக் கேட்டுக் கொண்டே இரவைக் கழிக்குமாறு அனைவருக்கும் அறிவுறுத்தினார். இது, காட்கே மஹாராஜ் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகள்

அனைத்தும் நிறைவடைந்ததாக அர்த்தப்படுத்தவில்லை. பாபாவும் மண்டலியும் சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, சந்திரபாகா நதிக்கரையில் ஆயத்தப் பணிகள் முழுவீச்சில் நடந்து கொண்டிருந்தன.

சுபத்ராவும், தொடர்ந்து ருஸ்தம் காக்காவும் பாபாவுக்காகப் பாடினர். பாபா, சுபத்ராவிடம், "**இப்போது எப்படி இருக்கிறீர்கள்?**" என வினவினார்.

சுபத்ரா காசநோயால் பாதிக்கப்பட்டு, பாபாவின் அருளால் காப்பாற்றப்பட்டார். "என் உடல்நிலை நன்றாக இருக்கிறது பாபா" என்றார்.

காட்கே மஹாராஜ் தனது அன்பான விட்டோபாவை தர்மசாலாவிற்கு வருமாறு தூதுவரை அனுப்பி வைத்தார். அன்று இரவு, பல்லாயிரக்கணக்கான யாத்ரீகர்கள் மஹாராஜ் மற்றும் அவரது பக்தர்களின் ஆன்மீக சொற்பொழிவுகளையும் கீர்த்தனைகளையும் கேட்கக் கூடியிருந்தனர். மஹாராஜ் தனிப்பட்ட முறையில், பாபாவை அந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பியதால், இரவு 9:30 மணியளவில், புனித சந்திரபாகா நதிக்கரையில் கீர்த்தனையைக் கேட்க பாபா அனைவருடனும் புறப்பட்டார். அவர் மஹாராஜின் தர்மசாலாவிற்குச் சென்றபோது, அங்கு காட்கே மஹாராஜ் அவருடன் காரில் இணைந்தார். காரில் செல்லும் வேளையில், மஹாராஜ் இவ்வாறு தெரிவித்தார்: "பாபா, நீங்கள் இன்று இங்கு இருப்பதில் எனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை."

"**நானும் இங்கு இருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்**," என்று பாபா காட்கே மஹாராஜின் முதுகில் மெதுவாகத் தட்டி, கன்னத்தை வருடியபடி கூறினார். எரச் நினைவு கூர்ந்தார், "தாயின் அன்பையும், அரவணைப்பையும், அருகாமையையும் தேடும் ஒரு குழந்தையைப் போல, மஹாராஜ் பாபாவுடன் நெருக்கமாக இருந்தார். கடைசியாக அவர் தனது கடினமான வாழ்க்கையின் சுமையை பிரியமானவரின் பாதங்களில் இறக்கி வைத்தது போலத் தோன்றியது - ஒரு வகையில் முதல் முறையாக அவரது பணியிலிருந்து ஓய்வு பெறுவது போன்ற ஓர் உணர்வு."

பாபா வந்தபோது கீர்த்தனை நடந்து கொண்டிருந்தது. கைகாடி மஹாராஜ் (KAIKADI MAHARAJ, காட்கே மஹாராஜின் பிரதான சீடர்) ஒரு பெரிய மணல் குவியல் மீது நின்று கொண்டிருந்தார், அது அவருக்கு ஒரு மேடையாக உதவியது, நதிக்கரையில் அமர்ந்திருந்த ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் உரையாற்றினார். கூட்டம் மிகுந்த உன்னிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தது. குளிர் கடுமையாக இருந்த அவ்வேளையில், விட்டோபா (பாபா) மெல்லிய ஆடைகளை அணிந்திருந்தாலும் மகிழ்ச்சியாக இருந்தார்!

பாபாவின் அருகில் நின்று, அவரது கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, காட்கே மஹாராஜ் மக்களை நோக்கிக் கூறினார்: "மெஹர் பாபாவை தரிசனம் செய்யுங்கள்! ஜகத் குரு மெஹர் பாபா! நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை உணர முயற்சி செய்யுங்கள். பிரபஞ்சத்தின்

அதிபதியான பாபா, உங்கள் மத்தியிலும், என் அருகிலும் இருப்பதில் நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பதை உங்களால் உணர முடியாது.”

விட்டோபா (பாபா), மஹாராஜின் விருப்பப்படி செய்வதாக உறுதி அளித்திருந்தார். மஹாராஜ், ‘எழுந்து நில்லுங்கள்’ என்றபோது எழவும், ‘அமருங்கள்’ என்று கூறியபோது பாபா அமரவும் செய்தார்.

கீர்த்தனை பாடல்கள் தொடர்ந்தது. “இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், உங்கள் இதயங்களை பாபாவின் தரிசனத்தால் நிரப்புங்கள்” என்று மஹாராஜ் மீண்டும் கூட்டத்திலிருந்த மக்களுக்கு வலியுறுத்தினார். டாக்கே, பாபாவின் வாழ்க்கையைப் பற்றி பேசி, அவருடைய செய்திகளில் ஒன்றை வாசித்தார். பஜனை தொடங்கியது, மஹாராஜின் மற்றுமொரு பக்தரான நமானந்த் மஹாராஜ் (NAMANAND MAHARAJ) சில வார்த்தைகளை மொழிந்தார்.

பாபா, காட்கே மஹாராஜிடம், **“இதற்குப் பின்னர், இனி என்ன இருக்கிறது?”**

“இனி உங்கள் விருப்பம் பாபா” என்று பதிலளித்தார்.

பாபா சிரித்துக்கொண்டே, **“சரி; இப்போது நான் சொல்வதைச் செய்யுங்கள். என்னை, தொழுநோயாளிகளின் சரணாலயத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். நான் அவர்களைக் நீராட்ட விரும்புகிறேன்”** என்றார்.

ஆச்சரியமடைந்த மஹாராஜ், “இந்த இரவு நேரத்திலா? காலையில் நீங்கள் அவர்களை நீராட்டலாம்” என்றதும்...

பாபா, **“சரி, நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நீங்களும் நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளுங்கள். தொழுநோயாளிகளை நீராட்டிய பின்பு நாளை எங்களைப் புறப்பட அனுமதியுங்கள்”** என்று கூறினார்.

மஹாராஜ் ஏற்றுக்கொண்டார், இதனால் மஹாராஜுக்கும் அவரது ‘விட்டோபா’விற்கும் இடையே ஒரு ‘சமரசம்’ ஏற்பட்டது.

அவரது ‘ஜெய்’ முழக்கங்களுக்கிடையில், பாபாவும், மஹாராஜும் நள்ளிரவு 12:45 மணிக்கு நதிக்கரையிலிருந்து புறப்பட்டனர். கார் தர்மசாலாவை நெருங்கியதும், மஹாராஜ் தனது கைகளைக் கூப்பி, பாபாவை நோக்கி, “எனக்கு வயதாகிவிட்டது, இனி எந்த வேலையும் செய்ய முடியாது, என்னை உங்களுடன் வைத்திருந்தால், நான் உங்களுக்கு ஒரு பாரமாக இருக்க மாட்டேன். ஒரு சில பாக்ரிகளும் (ரொட்டி), ஒரு மேலங்கியும்தான் எனக்கு தேவை.” அவரது வேண்டுகோள் பாபாவின் இதயத்தைத் தொட்டது, மகிழ்ச்சியில் பாபா, அவரை அன்புடன் தழுவினார்.

காட்கே மஹாராஜ், குறிப்பாக ஹரிஜனங்கள் வாழும் மற்றும் ஒரு தர்மசாலாவிற்குச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, பாபா காலையில் தொழுநோயாளிகளின் ஆசிரமத்திற்குச் செல்லும் நேரத்தில் அங்கும் செல்வதாக உறுதியளித்தார்.

மஹாராஜ் விடைபெற்று சென்ற பின்பு, பாபா மண்டலியிடம், **“மஹாராஜின் வார்த்தைகளில் அடங்கியுள்ள உண்மையான அர்த்தத்தை,**

**என்னைத் தவிர வேறு எவராலும் புரிந்து கொள்ள முடியாது. மஹாராஜ், வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் ஒரு பரிபூரண துறவி,**" என்று கூறினார்.

பாபாவும் மண்டலியும், பிற அன்பர்கள் ஏற்கனவே ஒன்றாகக் கூடியிருந்த பள்ளிக்கூட விடுதிக்குத் திரும்பிச் சென்றனர். பாபா, தேநீர் பருக விரும்பி, ஒன்று அல்லது இரண்டு வாய் மட்டுமே அருந்தினார். பின்னர் அவர் கூறினார்: "**நான் காட்கே மஹாராஜை மிகவும் நேசிக்கிறேன்; அவர் உண்மையிலேயே ஒரு சிறந்த துறவி. இப்போது எங்கள் சந்திப்பு நடந்ததால், அவர் விரைவில் தனது உடலைக் கைவிட்டு நித்திய ஆனந்தத்தை அனுபவிக்க என்னிடம் வருவார்.**"

பாபா மேலும் கூறினார்: "**நீங்கள் அனைவரும் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும்; அதாவது, எனது இறுதிப் பிரகடனத்தில் நான் அறிவித்த அனைத்தும் நிச்சயம் நிறைவேறும்.**"

பிரகடனத்தின் முக்கியக் குறிப்புகளை மீண்டும் வலியுறுத்திய பாபா, "**எனது அன்பர்கள் அனைவரும் இந்தப் பிரகடனத்தை பிறருக்குத் தெரிவிக்கவும், எனது அன்பின் செய்தியை நாட்டின் நான்கு மூலைகளில் பரப்பவும் விரும்புகிறேன்!**"

காடேக்கர் கூறினார்: "உலகின் நான்கில் மூன்று பாகத்தின் அழிவைப் பற்றி நாம் பேசும்போது, செல்வந்தர்களும் அறிவுஜீவிகளும் நம்மை கேலி செய்கிறார்கள், ஏழைகள் நம்மை நம்புகிறார்கள், உலகம் அழிந்துவிடும் என்று உறுதியாகக் கூறுகிறார்கள்."

பாபா இதைக் கேட்டு மனமகிழ்ந்தார், "**பாமர மக்களும், மனச்சோர்வடைந்தவர்களும் இதைப் பற்றி கேட்கும்போது ஒருவித நிம்மதியை அடையப் பெறுகிறார்கள், உலக அழிவு தானாகவே தங்கள் துன்பங்களையும் வறுமையையும் அழித்துவிடும் என்ற எதிர்பார்ப்பிலும், நம்பிக்கையிலும் அவர்கள் இருக்கிறார்கள், ஏனெனில், நான் அப்படிச் சொல்கிறேன் என்பதால் அல்ல; ஆனால் சூழ்நிலைகள் அவர்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்ததால், சுயநலத்தால் அவர்கள் தங்களுக்கு இது ஓர் ஆறுதல் அல்லது நிவாரணம் என்று கருதுகிறார்கள்; செல்வந்தர்களும் அறிவுஜீவிகளும் இதை ஏளனம் செய்வது இயற்கையானது; இது அவர்களின் குற்றமும், தவறும் அல்ல. என்னை நேசிப்பவர்களும் என்னுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களும் எனது இறுதிப் பிரகடனத்தைப் புரிந்து கொள்ளாதபோது, பிறர் அதைப் புரிந்துகொள்வார்கள் அல்லது நம்புவார்கள் என்று எதிர்பார்ப்பது அபத்தமானது.**"

'**உலக அழிவு, அவரது அவமானம் மற்றும் கொடூர மரணம் பற்றி பாபா இறுதிப் பிரகடனத்தில் கூறியதை அவர்கள் நம்புகிறார்களா இல்லையா என்பதை, உண்மையுடனும், நேர்மையுடனும் சொல்லும்படி**' பாபா அங்கிருந்த மண்டலியிடம் கேட்டதற்கு, இதுபோன்ற விஷயங்கள் உண்மையில்

நடக்கும் என்று நம்புவது கடினமாக இருப்பதாக பலர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டனர்.

அதற்கு பதிலளித்த பாபா, **“இதுபோன்ற விஷயங்கள் குறுகிய காலத்தில் நடக்கும் என்று என் அன்பர்கள் கூட நம்பாமல் இருப்பது இயற்கையானது, ஏனெனில் நான் சொன்னதை எவரும் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. மெஹராபாத்தில் நான் அறிவித்ததெல்லாம் ஒன்றும் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மை!”**

பாபா தீவிரமான முகபாவத்துடன், **“பாபா என்ன சொல்கிறார் என்பது உங்கள் கடவுளுக்கு மட்டுமே தெரியும், ஏனெனில் அவர் மெஹராபாத்தில் பேசினார்!”** பாபா மேலும் கூறினார், **“நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளாவிடிலும், எனது வார்த்தைகளை நம்பவும், அவற்றில் நம்பிக்கை வைக்கவும் முயற்சி செய்ய வேண்டும், ஏனெனில் மெஹராபாத்தில் நான் அறிவித்த அனைத்தும் நான் சொன்னது போலவே நடக்கும். என் அன்பர்கள் அனைவரும் எந்தவித அச்சமும், தயக்கமும் இல்லாமல் பிறருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.”**

அப்போது மண்டலியில் ஒருவர் கூறினார், “பாபா, எங்களைப் பொறுத்தவரை எங்களுக்கு எந்த பயமும் இல்லை, ஆனால் நீங்கள் அறிவித்த அனைத்தையும் பொதுமக்களிடம் எடுத்துரைக்க நாங்கள் தயங்குகிறோம், ஏனெனில் ஏப்ரல் (1955) இறுதிக்குள் இவை நிறைவேறவில்லை என்றால், எங்கள் பிரியமான பாபாவிற்கு எதிராக மோசமான அபிப்ராயங்கள் உருவாக வாய்ப்புள்ளது! நாங்கள் உங்களை மிகவும் நேசிப்பதாலும், உங்கள் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருப்பதாலும் நீங்கள் சொல்வது உண்மையா இல்லையா என்பது எங்களுக்கு மிகவும் சிறிய விஷயம்.”

பாபா சிரிப்பை அடக்க முடியாமல், **“நான் சொன்னதை பிறருக்குச் சொல்லும் தைரியம் உள்ளவர், அதை விரக்தியில் அல்ல, நம்பிக்கையுடன் செய்ய வேண்டும். ஆனால், அந்த விரக்தியுடன் மட்டுமே பிறருக்குத் தெரிவிப்பதாக இருந்தால், எதையும் சொல்லாமல் மௌனம் காப்பது நல்லது”** என்றார்.

மெஹர்ஜி உடனே, “பாபா, பிணைப்புகளிலிருந்து நாங்கள் எவ்வாறு விடுபடுவது?” என்று கேட்டார்.

பாபா பதிலளித்தார், **“நீங்கள் பிணைக்கப்படவே இல்லை - நீங்கள் நிரந்தரமாக சுதந்திரமாக இருக்கிறீர்கள்! ஆனால் நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ளும் போது, நீங்கள் கட்டுண்டவர்களாக ஆகிவிடுகிறீர்கள். உதாரணமாக, நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். இதற்கு ஒரு வினாடிக்கு முன்பு, மும்பையில் இருக்கும் உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளைப் பற்றி நீங்கள் நினைக்கவே இல்லை. அவர்கள் உங்கள் மீது சுமத்துகின்ற பிணைப்புகளிலிருந்தும், அவர்களுக்காக உங்கள் மீது நீங்கள் சுமத்துகின்ற பிணைப்புகளிலிருந்தும் நீங்கள் முற்றிலும் விடுபட்டிருந்தீர்கள். நீங்கள்**

**அவர்களை நினைக்கும் அந்த கணத்தில், இன்ப துன்பங்களின் அனைத்து உறவுகளும் உங்களை பிணைக்கிறது. எனவே, நீங்கள் நித்தியமாக சுதந்திரமானவர், உங்களுக்கு எந்தப் பிணைப்பும் இல்லை என்பதை உணர ஒரே வழி, பாபாவை முழு மனதுடன் நேசிப்பதும், என்னைத் தொடர்ந்து நினைப்பதும்தான்.**"

பாபா மகிழ்ச்சியான மற்றும் கலகலப்பான மனநிலையில் இருந்தார். எழுத்துப்பலகையைக் கைவிட்ட பிறகு, பாபாவை உரையாடும் ஆர்வத்தில் மண்டலி கண்டுகொண்டது இதுவே முதல் முறை. உற்சாகமும், உயிர்த்துடிப்பும் அடங்கிய சைகைகள் மற்றும் வெளிப்பாடுகள் மூலம் அவர் தனது எண்ணங்களை சிரமமின்றி வெளிப்படுத்தியதைக் கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர், மேலும் எழுத்துப்பலகை இல்லாததை எவரும் உணரவில்லை.

பாபா பின்னர் விவாதத்தை நிறுத்தக் கூறி, பூனா பஜன் குழுவிடம் சில பாடல்களைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார்.

பொழுது விடிந்ததும் பாபாவும் மண்டலியும் தேநீர் அருந்தி, காலைக் கடன்களை முடித்து, பாபா, காட்கே மஹாராஜுடன் தொழுநோயாளிகள் புகலிடத்திற்குப் புறப்பட்டார். மஹாராஜ் முதலில் காலை 8:00 மணிக்கு பாபாவை ஹரிஜனங்களின் தர்மசாலைக்கு அழைத்துச் சென்றார். பாபா பெரிய வளாகத்தில் அவர்கள் மத்தியில் அமர்ந்து, பின்பு தொழுநோயாளிகளைப் பார்க்கச் சென்றார். அந்த நாள் பண்டர்பூர் யாத்ரீகர்களுக்கு ஆண்டின் மிகவும் புனிதமான நாளாகும், மேலும் ஆயிரக்கணக்கானோர் புனித நதியில் நீராடிக்கொண்டிருந்தனர். தொழுநோயாளிகளில் ஒருவரைத் தவிர பிற அனைவரும் யாசிப்பதற்காக நதிக்கரைக்குச் சென்றிருந்தனர். இந்தத் தொழுநோயாளி, தனிமையில் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி, ஏனெனில் கடவுளே அவரை அவருடைய அன்பு மற்றும் கருணையின் புனித நீரில் மூழ்கடிக்க வந்தார்!

தொழுநோயாளியை நீராட்ட வெந்நீர் கொண்டு வந்தபோது, காட்கே மஹாராஜ், பாபாவிற்கு உதவினார். பெண்டு பாபாவிடம் நீரைக் கொடுத்ததும், அவர் அந்த மனிதரை சுத்தம் செய்ய நிறைய சோப்பைப் பயன்படுத்தினார். ஒரு துண்டால் உடம்பை உலர்த்தி புத்தாடைகளை அணிவித்து, பாபா அவரை வணங்கி, பிரசாதம் வழங்கினார்.

பாபா நீராட்டி முடித்ததும், மஹாராஜிடம், "**நான் எனது வாக்குறுதியைக் காப்பாற்றிவிட்டேன்; இப்போது உங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

காட்கே மஹாராஜ், பாபாவை தன்னுடன் நமானந்தின் தர்மசாலைக்கு (NAMANAND'S DHARMASHALA) வருமாறு கேட்டுக் கொண்டார்; பாபா அதற்கு இணங்கி மஹாராஜுடன் சென்ற வேளையில், அங்கே கீர்த்தனைகளின் இசை நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது. காட்கே மஹாராஜ், பாபாவை நாற்காலியில் அமரச் செய்து, அவர் தரையில் அமர்ந்தார். கைகாடி மஹாராஜும் (KAIKADI MAHARAJ)

அவரது சீடர்களும் உடனிருந்தனர், மேலும் காட்கே மஹாராஜ், பாண்டேயிடம் புகைப்படங்களை எடுக்குமாறு கூறினார்.

அதற்குப் பிறகு, பாபா, காட்கே மஹாராஜிடம் அனுமதி கோரினார், 1954 நவம்பர் 7 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9:30 மணிக்கு, பாபா, மஹாராஜை மீண்டும் காரில் அவரது தர்மசாலாவிற்கு அழைத்துச் சென்றார்; அவரது அழைப்பை ஏற்று, பாபா பண்டர்பூருக்கு வந்ததற்காக மஹாராஜ் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தார். அவர் பாபாவிடம் வேண்டினார், "உங்களுக்கு சேவை செய்ய எனக்கு ஒரு வாய்ப்பை வழங்குங்கள். எனக்கு இரண்டு ரொட்டியும் ஒரு மேலங்கியும் மட்டுமே தேவை... நீங்கள் விரும்பும் எந்த சேவையையும் நான் செய்வேன். உங்கள் இருப்பிடத்தை நான் துடைத்து சுத்தம் செய்வேன்." அதைக் கேட்டு சிரித்து, தலையசைத்து, பாபா அவரைத் தழுவினார்.

காட்கே மஹாராஜ் மேலும் பாபாவை நாசிக் நகருக்கு வருகை தருமாறு வேண்டிய போது, பாபா பதிலளித்தார்: "**நான் பண்டர்பூருக்கு வந்து, எனது வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன், இனி, நான் சத்தாராவில் தங்கப் போகிறேன், பொது இடங்களில் தோன்றமாட்டேன், மெஹராபாத்தில் நடந்த கூட்டத்தில் நான் அறிவித்த அனைத்தும் அடுத்த ஆறு மாதங்களுக்குள் நிறைவேறும்.**"

காட்கே மஹாராஜ் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, "உங்களிடமிருந்து இதுபோன்ற வார்த்தைகளை நான் கேட்க விரும்பவில்லை, ஏனெனில் இந்த நேரத்தில் உலகத்திற்கு நீங்கள் மிகவும் தேவைப்படுகிறீர்கள், உங்கள் தரிசனம் ஒன்றுதான் சொல்லொணாப் பேரழிவுகளை சந்திக்கும் உலகிற்கு ஒரே ஆறுதல். நீங்கள் எங்கும் எல்லோருக்கும் தரிசனம் வழங்க வேண்டும்!" என வேண்டினார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார், "**விரைவில் நான் எனது மௌனத்தைக் கலைத்து, உலகிற்கு 'உண்மையான தரிசனத்தை' வழங்குவேன், ஏனெனில் இந்தப் பௌதீக உடலின் தரிசனத்தைப் பெறுவதன் மூலம் உலகம் நிரந்தரமான பலனைப் பெறாது. 'இறை வார்த்தை'யை மொழியும் போது, அது உலகின் இதயத்தில் ஆழமாக ஊடுருவும். எனது 'உண்மையான' தரிசனத்தின் நிரந்தர பலனை உலகுக்குத் தரும்.**"

பாபா மேலும் கூறினார், "**நீங்கள் என்னை சத்தாராவில் பார்க்க முயற்சிக்காதீர்கள். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அனைத்தும் நிறைவேறும் முன்னர், இது நம்முடைய கடைசி சந்திப்பு.**"

பின்னர் அவர்கள் தர்மசாலாவை சென்றடையும் வரை காரில் அமைதி நிலவியது. அவர்கள் வந்ததும் பாபா, காட்கே மஹாராஜ் இருவரும் வெளியே வந்தனர். மஹாராஜ் பாபாவை வணங்கினார், பாபாவும் அவரை வணங்கினார். பாபாவும் மண்டலியும் பிற அன்பர்கள் காத்திருக்கும் இடத்திற்குத் திரும்பிச் செல்லவே, ஒவ்வொருவருக்கும் பிரியாவிடையளித்து, பாபா சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.



பண்டர்பூரில் ஒரு தொழுநோயாளியை நீராட்டும் காட்சி;
உடனிருப்பவர்: காட்கே மஹாராஜ் & பெண்டு
(BATHING A LEPER AT PANDARPUR WITH GADGE MAHARAJ & PENDU)



காட்கே மஹாராஜுடன் பாபா, பண்டர்பூர், **1954** நவம்பர் **7**
(WITH GADGE MAHARAJ AT PANDARPUR 1954 NOVEMBER 7)

# விளக்கம், உறுதிப்பாடு & தீர்மானம்

**(Clarification, Confirmation & Decision)**

பண்டர்பூரிலிருந்து பாபா திரும்பி வந்த பின்பு, மேக்ஸ் ஹெஃப்லிகருக்கு (MAX HAEFFLIGER) டாக்டர் நீலு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "இப்போது பாபா மிகவும் துயரார்ந்த மனநிலையில், தீவிரமான தோற்றத்தில் இருக்கிறார்; மேலும், அவர் தம்மையே உள்வாங்கிக் கொள்வதாகத் தோன்றுகிறது."

பாபா தனது இறுதிப் பிரகடனத்தைக் குறித்து என்ன அர்த்தத்தில் கூறினார் என்று ஆண் மண்டலி தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டனர். நரிமன் சில நாட்களுக்கு முன்பு சத்தாராவிற்கு வந்தவரும், இந்த விஷயத்தில் ஆர்வமாக இருந்தார். 1954 நவம்பர் 8 அன்று, பாபாவை ரோஸ்வுட் பங்களாவிற்கு அழைத்துச் செல்ல, பாவ் கல்சூரி, அலோபா இருவரும் வழக்கம் போல கிராஃப்டனுக்குச் சென்றனர். வழியில், பாபா **'மண்டலி என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள்?'** என்று பாவ் கல்சூரியிடம் வினவினார். பாவ் அவருக்கு அதைத் தெரிவித்தார், மேலும் ரோஸ்வுட்டில் நுழைந்து வேறு சில விஷயங்களைப் பற்றி விவாதித்த பிறகு, பாபா தனது பிரகடனத்தைத் தெளிவுபடுத்தினார். இது (நவம்பர் 20 அன்று) ஒரு சுற்றறிக்கை வடிவில் வெளியிடப்பட்டது:

மெஹராபாத் சந்திப்பின் போது, மெஹர் பாபா பண்டர்பூர் விஜயத்தைக் குறித்து உத்தேசித்துள்ளதைக் குறிப்பிட்டார், அதுவே அவரது கடைசி வெகுஜன தரிசனமாகும். எனவே, பாபா தமது எழுத்துப்பலகையைப் பயன்படுத்துவதையும் தரிசனம் வழங்குவதையும் நிறுத்திவிட்டாலும், அவர் துறவி காட்கே மஹாராஜுக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றும் நோக்கத்தில், நவம்பர் 6ஆம் தேதி பண்டர்பூருக்கு விஜயம் செய்தார்; அங்கு, பல்லாயிரக்கணக்கான மக்கள் பாபாவின் பிரசன்னத்தால் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

பண்டர்பூருக்கு விஜயம் செய்த அடுத்த நாள், பாபா தமது மண்டலிக்கு சைகைகள் மூலமாக, பின்வரும் விளக்கத்தை அளித்தார்:

**நான் சொல்வதை நம்புவதும், புரிந்துகொள்வதும் எவருக்கும் மிகவும் கடினம், ஏனெனில், எனது வார்த்தைகளின் அர்த்தத்தை எவராலும் கிரகிக்க முடியாது. எனது இறுதிப் பிரகடனத்தைப் புரிந்து கொள்ளாமல் இருப்பது, எனது நெருங்கிய மண்டலிக்குக் கூட இயல்பானது. ஆனால் கூட்டங்களின் போது, நான் மெஹராபாத்தில் பேசிய அனைத்தையும், நீங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஏனெனில் நான் சொன்னது அனைத்தும் உண்மை; அவை கடவுளின் வார்த்தைகள், மேலும் சொல்லப்பட்ட அனைத்தும் நான் விவரித்த விதத்தில் சரியாக நடக்கும்.**

உலகில், நான்கில் மூன்று பாகம் அழிவை சந்திக்கும், ஒரு விசித்திரமான நோய் என் உடலைத் தாக்கும், நான் அவமானத்தை அனுபவிப்பேன், எனது மௌனத்தைக் கலைத்து இறை வார்த்தையான அந்த ஒரே வார்த்தையைப் பேசுவேன், நான் அப்போது எனது முழு மகிமையில் வெளிப்படுவேன்; இறுதியாக, எனது நட்பைப் புண்படுத்தி துரோகமாக விமர்சிக்கும்போது என் உடலைக் கைவிடுவேன் என்று மெஹராபாத் பிரகடனத்தில் அறிவித்த நாள் முதல் என் அன்பர்களும், பிற அனைவரும் எனது வார்த்தைகளை வெவ்வேறு வழிகளில் விளக்க முயற்சிக்கிறார்கள்.

எனது வார்த்தைகளை ஒவ்வொருவரும் நினைக்கும், உணரும் விதத்தில் விளக்குவதற்கு அனைவருக்கும் சுதந்திரம் உள்ளது. ஆனால் ஒரு விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன், நான் ஒன்றைச் சொல்லும்போதெல்லாம், இயல்பாகவே எனது சொந்த 'மொழி'யைப் பயன்படுத்துகிறேன், மேலும் நான் சொல்வதெல்லாம் 'உண்மை'. ஆனால் எனது 'மொழி' என்பது, நான் சொல்வதன் அடிப்படையான பொருளை எவராலும் புரிந்து கொள்ளவோ அல்லது கிரகிக்கவோ முடியாது. எனவே, நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பும் போது, எனது மொழியை மட்டும் பயன்படுத்தினால், உங்களுக்கு எதுவும் புரியாது என்பதை நன்கு அறிந்து, உங்கள் மொழியையும் ஒரே நேரத்தில் பயன்படுத்துகிறேன்.

எனது இறுதிப் பிரகடனத்தைப் புரிந்துகொள்வதற்கும், உங்கள் குழப்பம் மற்றும் கவலைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், மெஹராபாத்தில் நடந்த கூட்டங்களின் போது, எனது எழுத்துப்பலகையில் நான் எடுத்துரைத்ததை நீங்கள் பார்த்ததையும், இதைப் பற்றி கேட்டதையும், நீங்கள் அனைவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்:

1. எனது உடலைத் தாக்கும் ஒரு விசித்திரமான நோய்: உங்கள் மொழியில் சொல்லப்பட்டது.
2. நான் அவமானத்தை சந்திப்பேன்: உங்கள் மொழியில் சொல்லப்பட்டது.
3. எனது மௌனத்தைக் கலைத்து வார்த்தைகளின் ஒரே 'இறை வார்த்தை'யை உச்சரிப்பது: அது எனது சொந்த மொழியிலும், அதே வேளையில் உங்களுடைய மொழியிலும் சொல்லப்பட்டது, ஏனெனில் நான் அந்த 'இறை வார்த்தை'யை உச்சரிக்கும் போது, அது உங்களுக்குக் கேட்கக்கூடிய வார்த்தையாக இருக்கும்.
4. எனது மகிமை: இது எனது மொழியிலும் உங்கள் மொழியிலும் ஒரே நேரத்தில் கூறப்பட்டது.
5. உலகில் நான்கில் மூன்று பாகம் அழியும்: இது எனது சொந்த மொழியில் மட்டுமே சொல்லப்பட்டது.
6. எனது நட்பைப் புண்படுத்தி துரோகமாக விமர்சிப்பது: இதுவும் எனது சொந்த மொழியில் சொல்லப்பட்டது.

7. **என் உடலைக் கைவிடுவது: இது எனது சொந்த மொழியிலும் ஒரே நேரத்தில் உங்கள் மொழியிலும் கூறப்பட்டது.**

**இதன் விளைவாக, உங்கள் மொழியில் நான் எதைச் சொன்னாலும், என்ன சொல்லப்படுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும் முடியும்; ஆனால் 'எனது சொந்த மொழியில்' கூறப்படுவதை உங்களால் புரிந்து கொள்ள இயலாது, எனது வார்த்தைகளில் அடங்கிய அடிப்படை அர்த்தத்தை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ள முயற்சித்தாலும் அது முடியாது. நிகழ்வுகளின் காலப்போக்கில் மட்டுமே, சரியான நேரத்தில், எனது சொந்த மொழியில் சொல்லப்பட்டதன் அர்த்தத்தை உங்களுக்கு வெளிப்படுத்த முடியும்.**

**எனவே நீங்கள் அனைவரும் தேவையின்றி கவலைப்படவோ, குழப்பமடையவோ வேண்டாம் என்று நான் கூற விரும்புகிறேன். நான் சொல்வதெல்லாம் உண்மை என்றும், எனது இறுதிப் பிரகடனத்தில் நான் கூறியவை அனைத்தும் 1955 ஏப்ரல் இறுதிக்குள், நான் விதித்தபடியே நிறைவேறும் என்றும் நம்புங்கள். 1954 டிசம்பர் 1 முதல் ஆறு மாதங்களில் இவை அனைத்தும் என்னால் செயல்படுத்தப்படும்.**

ஐரீன் கோனிபியர் அவரது 'உலக நாகரிகமா அல்லது குழப்பமா?' (CIVILIZATION OR CHAOS?) என்ற புத்தகத்தை வெளியிடும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். நவம்பர் 10ஆம் நாள், பாபா அவருக்கு (மணி மூலம்) இந்தக் குறிப்பை எழுதி அனுப்பினார், "**நீங்கள் எப்படியேனும் இறுதியில் பாபாவுடன் இருப்பீர்கள், நீங்கள் எல்லாவற்றையும் புரிந்துகொள்வீர்கள்.**" அந்தக் கடிதத்துடன் பாபாவின் தலை முடியின் ஒரு சிறிய கொத்தும் இணைக்கப்பட்டிருந்தது.

பாபா டிசம்பர் 1 முதல் 40 நாட்களுக்கு, சில சிறப்புப் பணிகளில் ஈடுபட விரும்புவதாக அறிவித்தார், எனவே அதற்கு முன்னதாக (1954 நவம்பர் 30), ஒரு கவாலி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது, ஜாதவ் (JADHAV) எனும் கவாலி இசைக் கலைஞர் மும்பையிலிருந்து சத்தாராவிற்கு அழைக்கப்பட்டார். நரிமன், மெஹர்ஜி, ஆதி சீனியர், ஜங்கூ, பாதிரி, சிது, வாமன், பால் நாத்து போன்ற மும்பை மற்றும் அஹமதுநகர் அன்பர்களும் அழைக்கப்பட்டனர். இரவு 9:00 மணிக்கு தேநீர் வழங்கப்பட இருந்ததால், அன்று மாலையில் எவருக்கும் தேநீர் வழங்க வேண்டாம் என்று பாபா, அலோபாவிற்கு அறிவுறுத்தியிருந்தார். கவாலி நிகழ்ச்சி கிராஃப்டன் பங்களாவில் நடைபெற இருந்தது.

கவாலி நிகழ்ச்சிக்கு ஆதி ஜூனியரும் சத்தாராவிற்கு அழைக்கப்பட்டார். அன்று மாலை பங்களாவிற்கு வந்ததும், அவர் தேநீர் அருந்த விரும்பினார். அன்றைய தினம் மாலை வேளையில் தேநீர் வழங்கக் கூடாது என்று பாபா தடை விதித்ததை அவரிடம் கூறாமல், அலோபா தேநீர் தயார் செய்தார். திட்டமிட்டபடி, இரவு 8:00 மணிக்கு, ஜாதவ் கவால், அவரது குழு மற்றும் மண்டலி கிராஃப்டனுக்கு வந்தனர். சில ஆரம்ப உரையாடலுக்குப் பிறகு, பாபா

கூறினார், “**ஒன்பது மணிக்கு அனைவருக்கும் தேநீர் வழங்கப்படும், அதைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி தொடங்கும். இன்று மாலை எவரேனும் ஏற்கனவே தேநீர் அருந்தியுள்ளீர்களா?**”

ஆதி ஜூனியர் ‘ஆமாம்’ என்று கூறியதும், “**உங்களுக்குத் தேநீர் வழங்கியது யார்?**” என்று பாபா வினவினார்.

“அலோபா” என்று ஆதி பதிலளித்தார்.

மிகவும் அதிருப்தி அடைந்த பாபா, அலோபாவிடம் வினவினார், “**ஏன் எனது கட்டளையை மீறினீர்கள்?**”

“அவர் உங்கள் சகோதரர், பாபா,” அலோபா பதிலளித்தார்.

இந்த வார்த்தைகள் பாபாவை மேலும் வருத்தமுறச் செய்தது, “**அவர் எனது சகோதரர் என்பதால், மிகவும் பெரியவர் என்று நீங்கள் நினைத்தால், அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்றுவது நல்லது! என்னை அல்ல, அவருடன் செல்லுங்கள்!**” என அவர் கடிந்து கொண்டார்,

ஆதி ஜூனியர் உடனே குறுக்கிட்டு, “உங்கள் உத்தரவு என்பதை அறிந்திருந்தால் நான் தேநீர் அருந்தியிருக்க மாட்டேன்” என்றார்.

பாபா பதிலளித்தார், “**அலோபா, என்னை மகிழ்விக்கும் எண்ணத்தில் உங்களுக்கு தேநீர் வழங்கியுள்ளார். என்னுடைய கட்டளையை மீறுபவர் எனது எதிரி என்பது அவருக்குத் தெரியாது! என்னுடைய கட்டளைகளை நிறைவேற்றுபவர் எனது உண்மையான சகோதரர்! என்னுடைய கட்டளைகளை மீறுபவர் ஒருபோதும் எனது சகோதரராக இருக்க முடியாது!**”

அவர் மிகவும் வருத்தமடைந்ததால், பாபா, கவாலி இசை நிகழ்ச்சியை ரத்து செய்து, மண்டலியை ரோஸ்வுட்டுக்குத் திரும்புமாறு அறிவுறுத்தினார். இசைக்கலைஞர்களும் தங்கள் இசைக்கருவிகளை எடுத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாயினர். அப்போது, பாபா அவர்களைத் திரும்ப அழைத்து, அலோபாவை மன்னித்தார். அனைவரும் தேநீர் அருந்திய பிறகு, கவாலி நிகழ்ச்சி தொடங்கி நள்ளிரவு வரை நீடித்தது. பாபா பாடல்களை மிகவும் கவனமாகக் கேட்டு ரசித்தார், அவருடைய மனநிலை இப்போது மகிழ்ச்சிகரமாக இருந்தது.

பின்னர், அனைத்து ஆண் அன்பர்களுடன், பாபா ரோஸ்வுட் சென்றார், அங்கு கவாலி நிகழ்ச்சி தொடர்ந்தது. நள்ளிரவு 1:00 மணியளவில், பாபா அலோபாவிடம் தேநீர் தயார் செய்யுமாறு அறிவுறுத்தினார்; சிறிது நேரத்தில், பாபா சமையலறையில் அவரிடம் சென்றதும், பாபாவைப் பார்த்த அலோபா உணர்ச்சிவசப்பட்டு அவரை இறுகப் பற்றிக்கொண்டார். அதன் பின்னர், அலோபா கவாலி பாடல்களைக் கேட்கும்போதும், வெறித்தனத்தில், “என்னைக் கொன்றுவிடுங்கள்!” என்று பாபாவிடம் கூறினார், கவாலின் வார்த்தைகள் மற்றும் இசையால் அவர் மிகவும் மனம் நெகிழ்ந்து போனார். பாபா அவரது கையை இறுக்கமாகப் பிடித்து, அவரை அமைதியாக இருக்குமாறு சைகையால் தெரிவித்தார். மண்டலி அவரைக் கட்டுப்படுத்தி அறையிலிருந்து அழைத்துச் செல்ல வேண்டியதாயிற்று. பாவ் கல்சூரி, மெஹர்ஜி இருவரும் அவரை ஜால்

வில்லாவிற்கு அழைத்துச் செல்லும்படி கூறப்பட்டனர், அங்கு அவரை படுக்கையில் படுக்க வைத்து ஓய்வெடுக்கச் செய்தனர். மெஹர்ஜி பின்பு ரோஸ்வுட் செல்ல, பாவ் கல்சூரி, அலோபாவுடன் இருந்தார். கவாலி நிகழ்ச்சி அதிகாலை 4:00 மணி வரை தொடர்ந்தது, அதற்குப் பிறகு பாபா கிராஃப்டனில் ஓய்வு பெற்றார். மெஹர்ஜி, நரிமன், ஆதி சீனியர், ஆதி ஜூனியர், வாமன், பால் நாத்து மற்றும் பிற அனைவரும் தத்தமது இடங்களுக்குப் புறப்பட்டனர், இத்துடன் பாபாவின் சிறப்பு 40-நாள் நடவடிக்கைகள் ஆரம்பமானது.

இந்தக் காலகட்டத்தில், பாபா குறுகிய இருக்கையின் மீது அல்லது வேறு ஏதேனும் வசதியான மேற்பரப்பில் தனது விரலால் எழுத்துக்களை வரைந்து, வார்த்தைகளைத் தெரிவிக்க முயற்சித்தார். ஆனால் அவற்றை விரைவாகப் புரிந்துகொள்வது மண்டலிக்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஆனாலும் பாபா எல்லையற்ற பொறுமையைக் கொண்டிருந்தார், உண்மையில் எதையாவது தெரிவிக்க மணிக்கணக்கில் செலவிட வேண்டியிருந்தது. மண்டலி அவர் எழுதியதை அவர்கள் புரிந்து கொள்ளும் வரை, பாபா இந்த 'எழுதப்படாத எழுத்து'க்கள் மூலம் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார்.

1954 டிசம்பர் தொடக்கத்தில் பாபாவின் ஒப்புதலுக்காக ஐவி டியூஸ் அனுப்பிய 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்திற்கான துணைப் பகுதிகளை சரிசெய்வதற்கும் இந்த சைகை முறை பயன்படுத்தப்பட்டது. ஐவி பரிந்துரைத்ததற்கு இணங்க, 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தின் அர்ப்பணிப்பையும் பாபா எடுத்துரைத்தார்: "**உண்மைப்பொருளைத் தவறாது தக்கவைக்கும் மாயை எனும் பிரபஞ்சத்திற்கு அர்ப்பணம்**."

அதற்குப் பிறகு, பாபா, தமது 40 நாட்கள் சிறப்புப் பணியைத் தொடங்கினார்: பத்து நாட்களுக்கு, 1954 டிசம்பர் 1 முதல் 10 வரை, பாபா ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உணவு உண்டார்; 11 முதல் 20ஆம் தேதி வரை, திரவ ஆகாரங்கள், டிசம்பர் 21 முதல் ஜனவரி 10 வரை ஒரு டம்ளர் காஃபி மற்றும் ஒரு டம்ளர் பழரசம் - தினமும் இரண்டு முறை உட்கொண்டார். பாபா ஏற்கனவே எழுத்துப்பலகையைப் பயன்படுத்துவதை விட்டுவிட்டார், மேலும் டிசம்பர் 1 முதல் அவர் கை சைகை முறைகளையும் நிறுத்தினார். இந்த நேரத்தில், கைக்கோபாத்துடன் பாபா தினமும் இரண்டு மணிநேரம் ஜால் வில்லாவில் பணிபுரிந்தார்; மண்டலியிடம் செல்வதை கிட்டத்தட்ட முற்றிலும் நிறுத்திவிட்டார்.

முதல் பத்து நாட்களுக்கு, ஆண் மண்டலியும் ஒரு நாளைக்கு ஒரு வேளை மாலை உணவு, காலையில் தேநீர் என்ற கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தனர்; மேலும் டிசம்பர் 1 முதல் ஜனவரி 10 வரை முழு நேரமும் ஒருவருக்குப் பின் ஒருவராக, தொடர்ந்து 24 மணிநேரமும் இறை நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு பாபா அறிவுறுத்தினார்.

பாவ் கல்சூரி, சத்தாராவில் இந்தக் கடினமான காலகட்டத்தை பங்க்ராஜுக்கு எழுதிய கடிதத்தில் (1954 டிசம்பர் 12) விவரித்தார்:

பண்டர்பூரின் கடைசி விஜயம் மற்றும் பொது வெகுஜன நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபா அனைத்து நடவடிக்கைகளையும், வெளி நபர்களுடனான தொடர்புகளையும் நிறுத்தினார். அக்டோபர் 7ஆம் நாள், பாபா தனது எழுத்துப்பலகையை பயன்படுத்துவதைக் கைவிட்ட பிறகு, தரிசனம், செய்திகள், சொற்பொழிவுகள் அனைத்தையும் நிறுத்திவிட்டார். டிசம்பர் 1ஆம் நாளுக்குப் பிறகு, பாபாவிற்கும் மண்டலிக்கும் இடையிலான உரையாடலின் கடைசி இணைப்பு கூட முடிவுக்கு வந்தது, பாபா தனது ஆள்காட்டி விரலை சைகைகளுக்காக பயன்படுத்துவதையும் நிறுத்தினார். பாபாவுடன் தொடர்பு கொள்ள எந்த வழியும் இல்லாததால், மண்டலி மற்றும் பாபாவுடன் கூடிய சூழல் ஒருவித தீவிரத்தன்மையுடன் காணப்பட்டது.

இப்போதெல்லாம், பாபா தினமும் 20 முதல் 30 நிமிடங்கள் வரை மண்டலியுடன் அமர்ந்திருந்தாலும், இந்த கணங்கள் முழு மௌனத்தில் கழிகின்றன - நகைச்சுவைகள் இல்லை, உரையாடல் இல்லை, கடிதப் பரிமாற்றம் இல்லை. இதனால், ரோஸ்வுட் பங்களாவில் அசௌகரியமான சூழ்நிலை ஒன்று உருவானது.

மண்டலியுடன் அமைதியாக அமர்ந்து, பிறகு பாபா நாள் முழுவதும் தமது அறையிலே இருந்தார் . இதன் விளைவாக, மண்டலியுடன், பாபா 20 முதல் 30 நிமிடங்கள் இருந்தாலும் கூட, அந்த நேரமும் அமைதியாகக் கழிந்தது.

இந்த நேரத்தில் மினூ கராஸ் ஒரு பெண் குழந்தை பிறந்த செய்தியைத் தெரிவித்து எரச்சிற்கு கடிதம் எழுதியிருந்தார். 1954 டிசம்பர் 11 அன்று எரச் இவ்வாறு பதிலளித்தார்:

ரோஸ்வுட்டின் தற்போதைய சூழ்நிலையில், பாபா, மண்டலியிடமிருந்தும் விலகியே இருக்கிறார்; உங்களிடமிருந்து எங்களுக்கு வரும் செய்திகளைக் கூட பாபாவிற்குத் தெரிவிக்க முடியாத சூழ்நிலை. பாபாவின் கண்டிப்பான உத்தரவின்படி, கடிதங்கள், தொலைத்தந்திகள் அல்லது மண்டலியின் அன்றாட வழக்கத்திற்குரிய விஷயங்கள் எதுவாக இருந்தாலும், அவரிடம் எதையும் தெரிவிக்கக் கூடாது. பாபாவின் அருகில் நிலவும் சூழ்நிலையின் தீவிரம், படிப்படியாக அதிகரித்து வருகிறது. மண்டலியின் மீதும் அதன் தாக்கம் முழு அளவில் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது.

ராம்ஜூ (1955 ஜனவரி 25 அன்று) மினூ கராஸுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

பாபாவும் அவருடன் அல்லது அவருக்கு அருகில் இருப்பவர்களும், பாபா தமது மௌனத்தைக் கலைப்பதற்கான 'ஆயத்தம்' என்று குறிப்பிடுவதில் ஏதோ ஒரு விதத்தில் ஈடுபட்டுள்ளனர். வெளியளவில், பாபா நாளுக்கு நாள் தம்மை ஒவ்வொன்றிலிருந்தும் மேலும் மேலும் விலக்கிக் கொள்கிறார்; கடந்த 30 வருடங்களாக பயன்படுத்திய எழுத்துப்பலகையை நாடாமல் அல்லது

விரல்களால் எழுதுவது போன்ற அடையாளங்களையும் செய்யாமல், அன்றாட வழக்கத்தைப் பொறுத்து அனைத்து தகவல் தொடர்புகளையும் குறைந்தபட்ச சைகைகளோடு முடித்துக் கொள்கிறார்.

24 மணி நேரத்திற்கு ஒருமுறை உண்ண வேண்டும் என்பதற்காக, சொற்பமான ஊட்டச்சத்தையே உண்டு வாழும் பாபா, இரவுகளில் உறக்கமின்றி இருந்தாலும், காலை முதல் மாலை வரை மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்; மேலும், ஒரு நாளில் இரண்டு முறை, ஒரு பங்களாவிலிருந்து மற்றொரு பங்களாவிற்கு ஒரு மைலுக்கு மேல் நடந்து செல்கிறார்; அங்கு வெவ்வேறு குழுக்களாக அவருடன் பல மண்டலி நிரந்தரமாக வாழ்கின்றனர்.

ஜனவரி 1955இன் தொடக்கத்தில், பாபா, சோர்வாகவும் சற்று பலவீனமாகவும் காணப்பட்டார், ஆனால் அவரது மனநிலை நன்றாக இருந்தது. 1955 ஜனவரி 9 ஞாயிற்றுக்கிழமை அன்று, அவர் 56 ஏழைகளுக்கு உணவளித்தார், மேலும், ஓர் அனாதை இல்லத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 50 சிறுமிகளுக்கு புதிய ஆடைகளும், தொழுநோயாளிகள் காலனியைச் சேர்ந்த 50 தொழுநோயாளிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய சட்டையும் வழங்கப்பட்டது. அன்றிரவே நள்ளிரவில், அவரது அறிவுறுத்தலின்படி, பாபா கைதட்டும்போது ஆண்களும் பெண்மணிகளும் உரத்த குரலில் கடவுளின் பெயரை மொழிந்தனர். 10ஆம் தேதி மாலை 4:00 மணிக்கு, பாபா சிறிதளவு சாதம், பருப்பு உண்டு உபவாசத்தை நிறைவுசெய்தார்.

டாக்டர் நீலுவுக்கு 10ஆம் தேதி மும்பை செல்ல அனுமதி வழங்கப்பட்டு அவர் ஒரு மாதத்திற்குப் பின்பு திரும்பி வந்தார்.

அனாதை இல்லத்தில் வாழும் பெண்கள் குறிப்பாக அதிர்ஷ்டசாலிகள், கோஹெர், அடெல் வோல்கினுக்கு - ADELE WOLKIN (1955 செப்டம்பர் 13) ஒரு கடிதத்தில் இவ்வாறு விவரித்தார்:

குழந்தைகள் பாபாவை நோக்கி மிக எளிதில் ஈர்க்கப்படுகிறார்கள். பாபா, மண்டலி பங்களாவிலிருந்து நம் இல்லத்திற்கு வந்து போகும் போதெல்லாம், வழியில் பாபாவை வாழ்த்துவதற்காக விரைந்து செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை நீங்கள் பார்க்க வேண்டும். ஆடுகளை மேய்க்கும் சிறுவர்கள், சிறுமிகள், சாலையோரங்களில் மரத்தடியில் அமர்ந்து, பச்சை வயல்களில் தங்கள் மந்தை மேய்வதைப் பார்த்துக் கொண்டும், பள்ளிக்குச் செல்லும் இதர குழந்தைகள், பாபாவின் புன்னகை அல்லது முதுகு, கை, தலை மீது அன்பான வருடலைப் பெற காத்திருக்கின்றனர். ஏறக்குறைய பதினைந்து அல்லது பதினாறு பெண் குழந்தைகள், பன்னிரண்டு வயது வரையிலான சிறு பெண்களுக்கான காப்பகம் ஒன்று இங்கே உள்ளது. அவர்கள் ராணுவ வீரர்களின் குழந்தைகள். இந்தக் குழந்தைகள் அனைவரும் பாபாவை மிகவும் நேசிக்கின்றனர். தூரத்திலிருந்து பாபாவைக் கண்டதும் வாசலுக்கு விரைந்து வந்து கைகூப்பி வணங்கி நிற்கின்றனர்.

இதற்கிடையில், குஷால் (KHUSHAL), கிர்பால் (KIRPAL) என்று அழைக்கப்பட்ட இரண்டு நேபாள சிறுவர்கள் - ஊழியர் வேலைக்காக டெஹ்ரா டூனிலிருந்து சத்தாராவிற்கு அழைத்து வரப்பட்டனர். ஒரு நாள் காலையில் அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருக்கத் தவறியபோது, அலோபா அவர்களை மூர்க்கத்தனமாக நடத்தினார். அலோபா, பல மாதங்களாக சமையலறை பணிகளை மேற்பார்வையிட்டார், மேலும், சிறுவர்கள் அவரது வழிகாட்டுதலின் கீழ் பணிபுரிந்தனர். இந்த சம்பவம் பாபாவிடம் கூறப்பட்ட போது, அவர் சிறுவர்களை இவ்வளவு கடுமையாக நடத்த வேண்டாம் என்று உத்தரவிட்டார்.

சிறிது நேரம் கழித்து, பாபா, அலோபா மற்றும் பாவ் கல்சூரியுடன் கிரா∴ப்டனுக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவர் பாவ் கல்சூரியிடம், "**என்ன யோசிக்கிறீர்கள்?**" என வினவினார்.

பாவ் பதிலளித்தார், "அலோபா சிறுவர்களை நடத்தும் விதத்தைக் குறித்து நான் யோசித்துக் கொண்டிருந்தேன்." பாபா திடீரென அவரைக் கடிந்துகொண்டார், "**நீங்கள் வேறு ஏதாவது ஆசிரமத்திற்குச் செல்வது நல்லது! இந்தியா முழுவதும் ஆசிரமங்களால் நிறைந்துள்ளது, அவற்றில் ஒன்றில் நீங்கள் வாழ்வதானால், ஒழுக்கமான வாழ்க்கை வாழ முடியும்.**"

பாவ் மிகவும் அதிர்ச்சியடைந்த நிலையில், பாபா விரிவாக விளக்கினார்:

**என்னுடன், ஒழுக்கமான வாழ்க்கை என்று உலகம் கருதுவதை எவராலும் வாழ முடியாது. இங்கே, நாம் ஆன்மீகத்தில் அக்கறை கொண்டுள்ளோம், ஒழுக்கத்தில் அல்ல. ஆன்மீக வாழ்க்கையானது எந்தக் கொள்கைகளாலும் ஆளப்படவில்லை அல்லது கட்டுப்படுத்தப்படவில்லை. ஒவ்வொருவருடைய மனப்படிவங்களும் வித்தியாசமானவை, எனவே ஒவ்வொருவரின் நடத்தையும் குணமும் வித்தியாசமாக இருக்கும்.**

**ஒரு நல்லொழுக்க வாழ்வில், தீயவை அடக்கப்படும் அவ்வேளையில் நல்லவை மேற்பரப்புகளில் இருக்கும்; ஆனால் தீயவை இன்னமும் மறைந்திருக்கும். எஞ்சியுள்ள தீய மனப்படிவங்கள், இந்தப் பிறவியில் இல்லாவிடிலும் அடுத்த பிறவியிலோ அல்லது அதற்குப் பின்னால் தொடரும் பிறவியிலோ செயல்படுத்தப்பட வேண்டும். ஆன்மீக வாழ்க்கையில், நல்ல, தீய மனப்படிவங்கள் இரண்டும் தங்களை வெளிப்படுத்துகின்றன, இரண்டும் அழிக்கப்படுகின்றன. ஆன்மீக வாழ்க்கை ஒருவரை இயற்கையை நோக்கி வழிநடத்துகிறது, அதே வேளையில் ஒரு நல்லொழுக்கமான வாழ்க்கை, பணிவு என்ற போர்வையில், அகங்காரத்தை விரிவடையச் செய்து, நிலைநிறுத்துகிறது!**

**இருப்பினும், ஆன்மீக வாழ்க்கை என்பது, அவதார புருஷர் அல்லது பரிபூரண குருநாதரின் வழிகாட்டுதல் மற்றும் கட்டளைகளின் கீழ் மட்டுமே நடத்தப்படுகிறது, அவர் அனைவரின் இதயத் துடிப்பையும் அறிந்தவர்; ஒவ்வொருவருக்கும் அவரவர் குறிப்பிட்ட 'பிணி'க்கு ஏற்றாற் போல பரிகாரத்தை வழங்குகிறார்.**

**அலோபாவின் நடத்தை உங்களுக்குப் பிடிக்கவில்லை, ஆனால் அவரது நடத்தை அவருக்கு மிகவும் இயல்பானதாகவும் அவசியமாகவும் இருந்தது. அதை எப்படி உங்களால் புரிந்து கொள்ள முடியும்? உலக மக்கள் தார்மீக தரநிலைகள் மற்றும் சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைக்கு ஏற்ப செயல்படுகிறார்கள், ஆனால் அவதார புருஷர் அல்லது பரிபூரண குருநாதர் ஒவ்வொருவரையும் அவரவர் மனப்படிவங்களின்படி கையாளுகிறார். எனவே ஆன்மீக வாழ்க்கை என்பது முற்றிலும் வேறுபட்டது, அதை அறநெறி, நெறிமுறைகள் அல்லது எந்தவொரு கொள்கையின் அடிப்படையிலும் மதிப்பிட முடியாது.**

சிரித்துக்கொண்டே பாவ் கல்சூரியிடம் பாபா கேட்டார், “**இப்போது, நீங்கள் எந்த ஆசிரமத்திற்குச் செல்ல விரும்புகிறீர்கள் என்று சொல்லுங்கள்?**”

“இல்லை, எங்கும் இல்லை” பாவ் பதிலளித்தார்.

உண்மை என்னவெனில், பாவ் கல்சூரி சிறுவர்கள் மீது அனுதாபம் காட்டினார், ஏனெனில் அலோபாவின் கடினமான கட்டை விரல் கட்டுப்பாட்டின் கீழ் அவர் இருந்தார். அலோபா அறிவுறுத்தியபடியே செய்யும்படி பாபா அவருக்குக் கட்டளையிட்டிருந்தார்; மேலும் இந்தி கடிதப் பரிமாற்றங்களில் கலந்துகொள்வது, பாபாவை அழைத்துச் செல்வது, வருவது, விளக்குகள் மற்றும் சைக்கிள்களை சுத்தம் செய்தல், துடைப்பது, தோட்டத்தை களையெடுத்தல், வீட்டிலிருந்து அசுத்த நீரை வெளியேற்றுவது, எழுத்து வேலை போன்ற கடினமான பணிகளை பாவ் செய்ய வேண்டியிருந்தது. அலோபா எப்பொழுதும் அவருக்கு ஏதாவது அதிகப்படியான வேலைகளைக் கண்டுபிடித்து அதைச் செய்யச் சொல்வது, அதுவும், மிகக் கடுமையுடன், உடனடியாகச் செய்யக் கோருவது! ஆனால் பாவ் கல்சூரிக்கு, இவை அனைத்தும் சகிப்புத்தன்மையின் மிகச் சிறந்த பாடமாக இருந்தது, பாபாவே அத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கினார். அவர் மண்டலி உறுப்பினர்கள் இடையே வீண் மோதல்களை உருவாக்குவதும், அதனால் எவரும் வேறொருவரிடம் பாரபட்சம் காட்டாமல் இருப்பதையும் உறுதிசெய்தார்.

மெஹர் பாபாவுடனான வாழ்க்கை என்பது வாளின் விளிம்பில் - ஒரு கால் ஊனமாக இருந்தாலும் அதன் மீது - நடப்பது போன்றது! அத்தகைய வாழ்க்கை, கற்பனை செய்து பார்க்க முடியாதது. தினசரி, ‘இடி-மின்னல்’ போல் அடி உதைகள் விழுவதை ஒருவர் தாங்கிக்கொள்ள வேண்டும்; இன்னும், விசித்திரமாக, ஒருவர் காயங்களால் வேதனைப்பட்டாலும், அவை இல்லாமல் ‘பாதிப்பின்றி’ இருக்க விரும்பாத ஒரு நிலையில் இருப்பார்! ஒருபுறம், மனமானது தாக்குதலின் கீழ் துடிக்கும், மறுபுறம், இதயம் அதிக தண்டனையை விரும்பும்! இவ்வாறு, ‘அகந்தைக்கு அடி மேல் அடி’ என்ற தொடர் ‘இடி-மின்னல்-மழை’யால், மனம் சக்தியற்றதாகவும், இதயம் வலுவாகவும் மாறுகிறது. இறை-மனிதனுடனான ஆன்மீக வாழ்க்கை அப்படித்தான் இருந்தது.

1955 ஜனவரி மாதத்தில், ஹமிர்பூரின் கேஷவ் நிகம் மற்றும் நௌரங்காவின் பாபு ராம்பிரசாத் ஆகியோரிடமிருந்து பாபாவிற்குக் கடிதங்கள் வந்தன. ராம்பிரசாத் ஒரு மெஹர் கோயிலை நிறுவ திட்டமிட்டு, மண்டலியில் ஒருவர் அடிக்கல் நாட்ட நௌரங்கா வர வேண்டும் என்று விரும்பினார். பாபா, பாவ் கல்சூரியை அங்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

பாவ் எதிர்ப்புத் தெரிவித்தார், "எனக்கு எங்கும் செல்ல விருப்பமில்லை, நான் அங்குச் செல்வதால் என்ன பயன்? நான் என்ன செய்ய முடியும்?

பாபா அவரைக் கடிந்துகொண்டார், "**ஒன்றில், நௌரங்காவுக்குச் செல்லுங்கள் அல்லது உங்கள் பெட்டி, படுக்கை, சாமான்களுடன் உங்கள் வீட்டிற்குத் திரும்புங்கள்!**"

இரண்டில் எதைத் தேர்வு செய்வது என்பது அவ்வளவு கடினமானதாக இல்லை; பாவ், நௌரங்காவிற்குச் செல்ல ஒப்புக்கொண்டார். பாபா அவரிடம், "**அங்கு அனைவருக்கும் என் அன்பை தெரிவியுங்கள்**" என்று அறிவுறுத்தி, "**நான் உங்களுடன் வருவேன்**" என்று உறுதியளித்தார்.

பாவ், சத்தாராவிலிருந்து ரயிலில் புறப்பட்டு ஜனவரி 21 அன்று கான்பூருக்கு வந்தார். அவரது வார்த்தையின்படி, பாபா உண்மையில் ஹமிர்பூருக்கு அவருடன் சென்றது போலத் தோன்றியது. ஹமிர்பூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன, மேலும் இந்தப் பதினைந்து நாட்கள் முழுவதும், பாபா தன்னுடன் இருப்பதை பாவ் கல்சூரி உணர்ந்தார். ஒரு சம்பவம் அவரை குறிப்பாக நம்ப வைத்தது. பாவ் கல்சூரி பாபாவிடமிருந்து சில செய்திகளைக் கேட்டிருந்தார், அதற்கு பதிலாக பாபா, "**சச்சிதானந்த, பரமானந்த, மெஹர் பாபா வித்யானந்த**" என்ற இந்த ஐந்து வார்த்தைகளைக் கொண்ட ஒரு வரி பாடலைப் பாடுமாறு கிராம மக்களைக் கேட்டுக்கொள்ளும்படி அவருக்கு அறிவுறுத்தினார்.

பாவ் கல்சூரி ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்: "அங்குள்ள மக்கள் இதில் திருப்தி அடைவார்களா?" ஆனால் அவர் ஹமிர்பூருக்கு வந்து கேஷவ் நிகமிடம் அந்த ஒரு வரி பாடலைக் கொடுத்தபோது, கேஷவ் அதை இசையமைப்பாளர்களிடம் திரும்பத் திரும்ப மொழிந்து, ஐந்தே நிமிடங்களில் ஒரு மெட்டை உருவாக்கினார். அதன் பின்னர், ஒவ்வொரு சிறிய குக்கிராமங்களிலும், நகரங்களிலும், இந்த வரியை மீண்டும் மீண்டும் பாடத் தொடங்கினர்; அது தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வது போலத் தோன்றியது! அதன் ராகம் குளிர்ந்த தென்றல் போலக் காற்றில் பரவியது!

பாவ் கல்சூரி பாலத்தின் வழியாக நௌரங்காவில் ஊர்வலத்தை வழிநடத்திச் சென்றபோது, முன்னணியில் அது அவரல்ல, மெஹர் பாபா என்பதைத் திடீரென உணர்ந்தார். அவர் அப்போது அங்கு இல்லாதது போலவும், பாபாவின் உடல் வடிவில் நடந்து கொண்டிருந்ததாகவும் தெளிவாக உணர்ந்தார்! பாவ், நௌரங்காவில் அடிக்கல் நாட்டு விழாவை நிறைவு செய்து, பிப்ரவரி 7 அன்று சத்தாராவிற்குத் திரும்பினார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த இடத்தில் ஒரு கோயில் கட்டி எழுப்பப்பட்டது, அதன் திறப்பு விழாவிற்கு ஆதி

சீனியர் அனுப்பப்பட்டார். அந்த நேரத்தில், பாபா அதற்கு ‘மெஹர் தாம்’ (MEHER DHAM) என்று பெயரிட்டார், அதாவது மெஹரின் இல்லம் அல்லது தங்குமிடம்.

இதற்கிடையில் 1955 ஜனவரி 20 அன்று, எரச், பெண்டு, பைதூல் ஆகியோருடன் பாபா, வாக்ஸால் (VAUXHALL) காரில் குல்தாபாத் புறப்பட்டுச் சென்றார். சகன் அஹமதுநகரிலிருந்து வந்து அவர்களுடன் இணைந்தார். பாபா, ஹஸ்ரத் ஸர்ஸாரி ஸர் பக்ஷின் (HAZRAT ZARZARI ZAR BAKSH) தர்காவிலும், இதர சமாதிகளிலும் தினமும் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்தார்; பறவையின் கிரீச்சொலி கூட பாபாவிற்கு கேட்காதபடி மண்டலி சுற்றிலும் கடுமையான கண்காணிப்பை மேற்கொண்டனர்.

ஐந்து நாட்கள் குல்தாபாத்தில் தங்கிய பிறகு, பாபா மெஹராஸாத் சென்று, காக்கா மற்றும் கிருஷ்ணாஜியை சந்தித்தார். பாபாவின் அறிவுரைகளைப் பின்பற்றாத கிருஷ்ணாஜியைக் குறித்து காக்கா பல புகார்களை முன்வைத்தார்.

நீலப்பேருந்தில் ஒவ்வொரு நாளும் நள்ளிரவில் ஒரு மணி நேரம் பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு அவருக்கு உத்தரவு இருந்தது; ஆனால் கிருஷ்ணாஜி பேருந்தில் நுழைந்ததும், பாபாவின் படுக்கையில் வெறுமனே படுத்து தூங்குவது வழக்கம். அவர் பிம்பல்காவ்ம் கிராமத்திற்குச் செல்ல தடை விதிக்கப்பட்டது; இருந்தாலும் அவர் அங்குச் செல்வதுண்டு. ஆறு மாதங்கள் மௌனம் கடைப்பிடிக்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தியிருந்தார், ஆனால் கிருஷ்ணாஜி பிறரின் கவனத்தைக் கவரும் நோக்கத்தில் அதைச் செய்தார்; காக்காவின் கூற்றுப்படி, தொடர்ந்து எழுதுவதன் மூலம் ‘அதிகமாகப் பேசினார்’.

பாபா, காக்காவை சமாதானப்படுத்தி, கிருஷ்ணாஜியை நன்றாக கவனித்துக் கொள்ளுமாறும், அவரிடம் குற்றம் குறை காணாமல் இருக்குமாறும் கூறி அமைதிப்படுத்தினார். பாபா, ஜனவரி 25 அன்று சத்தாராவிற்குத் திரும்பி வந்தார். அவர் அஹமதுநகரில் ஸர்ஜேபுரா பெட்ரோல் பம்பில் (SARJEPURA PETROL PUMP) நின்று, ஆதி சீனியரை ஒரு குறுகிய நேர சந்திப்பிற்காக அழைத்ததைத் தவிர, வேறு எவரையும் பார்க்கவில்லை.

பாபா, சத்தாராவிற்குத் திரும்பி வந்ததும், 1955 பிப்ரவரி 3 செவ்வாய் அன்று சுற்றறிக்கையாக வெளியிடப்பட்ட தமது இறுதிப் பிரகடனத்தின் ‘உறுதிப்பாடு’ (CONFIRMATION) என்பதன் விளக்கத்தை எடுத்துரைத்தார்:

**பாபாவும் அவருடன் வாழும் அன்பர்களும் 1954 டிசம்பர் 1 முதல் 1955 ஜனவரி 10 வரை, 40 நாட்களுக்கு, குறிப்பிட்ட செயல்களின் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை மேற்கொண்டனர். இந்தச் சிறப்புப் பணி நிறைவடைந்த இவ்வேளையில், சம்பந்தப்பட்ட அனைவரும் அது குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார்:**

**என்னால் அறிவிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் தெளிவுபடுத்தப்பட்ட அனைத்து விஷயங்களும் நிலையான,**

நிர்ணயிக்கப்பட்ட உண்மைகள்; கடவுள் எல்லாவற்றையும் அவர் முன்னறிவித்தபடி நடப்பதை ஊர்ஜிதம் செய்வார்.

விருப்பப்பட்ட இவை அனைத்தும் நடைபெற வேண்டியது தவிர்க்க முடியாதது, இருப்பினும் இதன் இறுதி விளைவுகளை, சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இரண்டு வெவ்வேறு வழிகளில் மாற்றியமைக்க முடியும். விதிக்கப்பட்ட திட்டத்தின் விளைவுகளின் மாற்றம் - ஒருபுறம், தொடரும் நிகழ்வுகளின் தீவிரத்தன்மை, நோக்கம் அல்லது அளவைப் பாதிக்க முடியும்; அல்லது மறுபுறம், காலத்தின் காரணத்தால் மாபெரும் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

இரண்டிலுமே, முழு உலகிலும், என்னைப் பொறுத்த வரையில், என்னுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களுடன் இறுதி விளைவுகளை மாற்றியமைக்க முடியும். எடுத்துக்காட்டாக, நிகழ்வுகளின் தரம் மற்றும் அளவு ஆகியவற்றில் அல்லது நேரக் காரணியில் ஏற்படும் மிகையான மாற்றத்தால், உலகம் ஒரே நேரத்தில் ஆன்மீக மற்றும் பொருள் சார்ந்த அதிர்ச்சியை முழுமையாக உள்வாங்க முடியும்.

(மெஹராபாத் கூட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 1955 ஏப்ரல் என்ற) கால வரம்பு மாறாமல் இருந்தால், அதிர்ச்சிகளின் அதிர்ச்சியை, உலகம், முழுவதுமாக உள்வாங்குவதற்கு, நிகழ்வுகளின் தொடர்ச்சி, அளவிலும் தன்மையிலும் மாற்றியமைக்கப்படலாம். ஆனால் காலவரம்பு கணிசமான அளவில் மாறினால், நிகழ்வுகள் எந்த மாற்றமும் இல்லாமல் நடக்கும்.

பின்னதாகக் கூறப்பட்ட நிகழ்வில், மிக முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில், எனது உடல் மற்றும் அனைத்து வெளியளவிலான செயல்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பு, நிச்சயமாக, திட்டவட்டமாக 1955 ஏப்ரல் மாதத்திற்குள் கைவிடப்படும்; மேலும் எனக்கும் என்னுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களுக்கும் இடையிலான வெளி உறவுகளில் அளவிட முடியாத அளவுக்கு மாற்றம் ஏற்படும். ஆகையால், நான் என் உடலைக் கைவிடவில்லை என்றால், நான் இன்னும், 'இறந்தவனாக இருப்பேன்' என்று கூறுவேன், ஏனெனில் நான் மாற்றப்பட்ட காலத்தின் இறுதி வரை, உலகைப் பொறுத்த வரையில் உண்மையில் இறந்தவனாகி விடுவேன்.

காலவரையறை இல்லாமல் மாற்றியமைக்கப்பட்ட நேரத்தில், நான் எனது உடலில் வாழ்ந்த பல்வேறு கட்டங்களில், என்னுடன் நிரந்தரமாக இருப்பவர்களோடு வாழும் தற்போதைய ஓய்வுக்கால வாழ்க்கை உட்பட, நான் மேற்கொண்ட மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட எனது வெளிப்புறச் செயல்பாடுகள் அனைத்தையும் முற்றிலுமாக நிறுத்துவேன்.

1. அப்போது நான், இந்த மாற்றியமைக்கப்பட்ட காலம் முழுவதும், எல்லாவற்றிலிருந்தும், எல்லோரிடமிருந்தும், உடல் ரீதியான, முற்றிலும் பற்றற்ற ஒரு வாழ்க்கையை வாழ்வேன்; ஒரு சில விஷயங்களைத் தவிர - அதாவது மனிதன் உயிருடன் வாழ,

**குறைந்தபட்ச இன்றியமையா இயல்பான தேவைகளைத் தவிர - இதர அனைத்தையும் கைவிடுவேன்.**

2. **எனது அன்பர்கள் அனைவரும், பிப்ரவரி 12 சனிக்கிழமை இரவு 8:00 மணி முதல், பிப்ரவரி 13 ஞாயிற்றுக்கிழமை இரவு 8:00 மணி வரை, 24 மணி நேரமும் தண்ணீர் மட்டுமே அருந்தி** (உபவாசத்தின் போது எத்தனை முறை வேண்டுமானாலும் அருந்தலாம்) **உபவாசத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என விரும்புகிறேன்; மேலும் 24 மணி நேரத்தில், உங்களுக்குக் கிடைக்கும் முழு நேரத்தையும், ஒவ்வொருவரும் விரும்பும் விதத்தில் இறைவனிடம் பிரார்த்தனை செய்வதில் செலவிட வேண்டும்.**
3. **நேர்மை என்பது தெய்வீகத்தின் மையக் கருத்து. கடவுளை நேர்மையாக நேசிக்கக்கூடியவர் கடவுளில் தன்னை இழந்து, தன்னை கடவுளாகக் காணலாம்.**

கோலாப்பூரிலிருந்து மிகவும் மேல்நிலையை அடைந்த மஸ்த் ஒருவரை அழைத்து வந்து, பாபா அவருடன் சில நாட்கள் பணியாற்றினார். பிப்ரவரி 7 அன்று சில அறிவுறுத்தல்களை வழங்க ஆதி சீனியர் அழைக்கப்பட்டார்.

இதற்கிடையில், ஸொராஸ்ட்ரிய நாள்காட்டியின்படி, பாபாவின் 61ஆவது பிறந்தநாள் பிப்ரவரி 11 அன்று சத்தாராவில் தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது. வெளியுலகிலிருந்து எவரும் அழைக்கப்படவில்லை. (இரண்டு வாரங்களுக்குப் பின்னர், 25ஆம் தேதி மீண்டும் கொண்டாடப்பட்டது.) மேலும், பாபாவின் அறிவுறுத்தலின்படி, அவரது அன்பர்கள் அனைவரும் 1955 பிப்ரவரி 12 சனிக்கிழமை இரவு 8:00 மணி முதல் 24 மணி நேரம் உபவாசம் கடைப்பிடித்து பிரார்த்தனையை மொழிந்தனர்.

இந்தக் காலகட்டத்தில், மண்டலியில் ஒருவர் பாபாவை கிராஃப்டன் மற்றும் ரோஸ்வுட் பங்களாக்களுக்கு இடையே, அவரது தலை மீது குடையைப் பிடித்த வண்ணம், அழைத்துச் செல்வது வழக்கம். 1955 பிப்ரவரி நடுப்பகுதியில் ஒரு நாள் காலை, அலோபா, பாபாவை ஜால் வில்லாவிற்கு அழைத்துச் சென்ற பிறகு, சாலையோரத்தில் ஹரிசந்த் கோச்சாரைக் (HARICHAND KOCHAR) காண நேர்ந்தது. டெஹ்ரா டூனிலிருந்து வந்திருந்த அவரைப் பார்த்த ஆச்சரியத்தில், அலோபா ஏன் வந்தீர்கள் என்று கேட்டார்.

“எனக்கு பாபாவை பார்க்க வேண்டும்” என்றார் கோச்சார்.

“ஆனால் பாபா ஏகாந்தவாசத்தில் இருக்கிறார், எவரையும் பார்க்க அனுமதிக்கவில்லை.”

“அவரது அன்பு என்னை ஈர்த்தது. நான் அவரை ஒரு முறையேனும் பார்த்தாக வேண்டும், அதற்கு மேல் எதுவும் இல்லை. அவர் எங்கே தங்கியிருக்கிறார்?” கோச்சார் வினவினார்.

“என்னால் சொல்ல முடியாது, அது அவருடைய கட்டளையை மீறுவதாகும். நீங்கள் திரும்பிச் சென்றாக வேண்டும்.”

கோச்சார் பிடிவாதமாக, “நான் பாபாவைத் தொந்தரவு செய்ய மாட்டேன், நான் அவரை தூரத்திலிருந்து பார்க்க விரும்புகிறேன்” என்றார்.

அலோபாவின் இதயம் அதற்கு இணங்கி, “நீங்கள் சத்தியமாக, தூரத்தில் இருந்துதானே பார்ப்பீர்கள்? அப்படியானால் நீங்கள் இப்போது இருக்கும் இடத்திலிருந்து, காலையில் அவர் இந்த வழியாக வரும் வேளையில் பார்க்கலாம்; பாபா தினமும் செல்லும் பாதை இதுதான், எனவே இந்த மரத்தின் கீழ் நில்லுங்கள்” என்று அறிவுறுத்தினார்.

நடந்ததை அலோபா மண்டலியில் எவரிடமோ அல்லது பாபாவிடமோ சொல்லவில்லை. மறுநாள் காலை, ரோஸ்வுட்டிலிருந்து கிரா∴ப்டன் வரை பாபாவுடன் செல்ல அலோபா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர்கள், பிரதான சாலையில் நடந்து சென்றபோது, பாபா, கோச்சாரைப் பார்க்க நேர்ந்தது. அவர் அங்கேயே நின்று, அலோபாவின் பக்கம் திரும்பி, “**அவர் ஏன் இங்கே வந்திருக்கிறார்? நான் இந்த வழியைக் கடந்து செல்வதாக அவரிடம் யார் சொன்னது?**” என வினவியபோது…

அலோபா ஒப்புக்கொண்டார், ஆனால் கோச்சாரைப் பாதுகாக்கும் விதத்தில், “பாபா, அவர் உங்கள் மீதுள்ள அன்பினால் இவ்வளவு தூரம் வந்துள்ளார்.”

“**அவர் என் மீது கொண்ட அன்பால் வந்திருக்கிறாரா?**” பாபா மிகவும் அதிருப்தியுடன் கேட்டு, “**சரி, அவர் எப்படிப்பட்ட அன்பு கொண்டவர் என்பதை நான் உங்களுக்குக் காட்டுகிறேன்!**” என்றார்.

பாபா, கோச்சாரை ஜால் வில்லாவிற்கு அழைத்துச் சென்றார், அங்கு அவரிடம், “**நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?**”

“உங்கள் அன்பு என்னை உங்களிடம் ஈர்த்தது பாபா.”

“**இப்போது நீங்கள் என்னைப் பார்த்துவிட்டீர்கள், போகலாம். நான் ஏகாந்தவாசத்தில் இருக்கிறேன், மக்கள் என்னை வணங்குவது அனுமதிக்கப்படவில்லை.**”

அப்போது கோச்சார், “பாபா, நான் எனது நீதிமன்ற வழக்குகளால் மிகவும் சிரமப்படுகிறேன். என் மீது ஆறு வழக்குகள் உள்ளன. அவை இரவும் பகலும் என்னைத் துன்புறுத்துகின்றன; என்னால் தூங்க முடியவில்லை. தயவுசெய்து ஏதாவது செய்யுங்கள்!”

பாபா, அலோபாவின் பக்கம் திரும்பி, “**அவருடைய அன்பைப் பாருங்கள்!**” என்று சைகையால் தெரிவித்தார். கோச்சாரிடம், “**அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அதுவும் கடந்து போகும். திரும்பிச் சென்று நிலைமைகளை எதிர்கொள்ளுங்கள். எனது பார்வை எப்போதும் உங்கள் மீது இருக்கும்**” என்று கூறினார்.

“பாபா, என் மனைவியும் காசநோயால் மருத்துவமனையில் இருக்கிறார்…” என்று கோச்சார் விளக்கினார்.

“**அவருடைய அன்பைப் பாருங்கள்!**” என்று பாபா மீண்டும் அலோபாவிடம் சைகை செய்தார்.

“...மேலும் என் மகளுக்கு இப்போது திருமண வயதாகி விட்டது, நல்ல கணவன் கிடைக்க வேண்டும். உங்கள் ஆசிர்வாதத்தை வழங்குங்கள்.”

பாபா கடுமையாக பதிலளித்தார், “**நான் உங்களை எச்சரிக்கிறேன், நீங்கள் உலகப்பொருட்களின் பின்னால் செல்வதானால், என்னை மறந்துவிடுவீர்கள்!**”

பாபா, உங்களை நான் என்றும் மறக்கமாட்டேன்,” என்று கோச்சார் ஆணித்தரமாக அறிவித்தார், “ஆனால் தயவுசெய்து எனக்கு உதவுங்கள்.”

பாபா, “**எனக்குத் தெரியும், அதனால்தான் சொல்கிறேன். உங்களுக்கு நான் வேண்டுமா அல்லது என் ஆசீர்வாதம் வேண்டுமா?**” என்று சைகையால் வினவினார்.

கோச்சார் தொடர்ந்து உதவி கேட்டு பாபாவின் ஆசீர்வாதத்தை வலியுறுத்தவே, பாபா அவரை ஒரு குறுகிய இருக்கையில் கால் வைக்கக் கூறி, “பரபிரம்ம பரமாத்மா” என்று கோச்சார் உச்சரித்த அவ்வேளையில், பாபா தனது நெற்றியால் ஏழு முறை அவரது கால்களைத் தொட்டார். பாபா பின்னர் அதே முறையில் அலோபாவை ஐந்து முறை வணங்கினார். (பாபாவின் முகம் சிவந்திருந்தது). அவர் உடனடியாக டெஹ்ரா டூன் செல்லுமாறு கோச்சாருக்கு உத்தரவு வழங்கியதும், அதை அவர் செய்தார்.

அதற்குப் பிறகு வெகு குறுகிய காலத்தில், ஹரிசந்த் கோச்சார் அனைத்து நீதிமன்ற வழக்குகளிலும் வெற்றி பெற்றார், அவரது மனைவி குணமடைந்தார், மேலும் அவரது மகளுக்கு ஒரு நல்ல வரனும் வந்தது. டெல்லியில் ஒரு பெரிய ஹோட்டலின் மேலாளராக கோச்சார் நியமிக்கப்பட்டு, அவர் பயன்படுத்தும் வகையில் ஒரு காரும் வழங்கப்பட்டது. ஆனால் 1955ஆம் ஆண்டு மெஹராபாத்தில் நடந்த சகவாச நிகழ்ச்சிக்குப் பிறகு, கோச்சார் தனது பணியில் அதிக ஈடுபாடு கொண்டு, அவர் மீண்டும் பாபாவிடம் வரவுமில்லை அல்லது ஒரு கடிதமும் எழுதவில்லை. பாபா கூறியது உண்மையாகி விட்டது.

1955 பிப்ரவரி 28 திங்கட்கிழமை அன்று, ஆதி சீனியர், ஆதி ஜூனியர், நஸர்வான், ஸரோஷ், ஸவக் தமானியா, நரிமன், மெஹர்ஜி ஆகியோரை பாபா சத்தாராவிற்கு அழைத்தார். பாபா, எரச்சை ஒரு சுற்றுப்பயணத்தில் அனுப்பி, தனது பணிக்குத் தேவையான நிதியைப் பெற எண்ணியிருந்தார், ஆனால் பென் ஹேமன் (BEN HAYMAN) 5,000 டாலருக்கான காசோலையை அப்போது அனுப்பியிருந்ததால், எரச் பயணம் செய்ய வேண்டிய தேவையில்லாமலாயிற்று.

பாபா, தமது உத்தரவை 100 சதவீதம் பின்பற்றத் தவறியதாக மண்டலி, பார்வையாளர்கள், அனைவரையும் கடுமையாகக் கண்டித்தார். ஸவக் தமானியாவைக் குறித்த பாபாவின் அறிவுரையை நிறைவேற்றத் தவறியதற்காக, ஸரோஷ் மட்டுமே குற்றம் சாட்டப்படுகிறார். ஸவக், நேர்மையும், நாணயமும் வாய்ந்த நபர், ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் காசாளராகப் பணிபுரிந்து வந்தார்,

அவருக்கும் ஸரோஷுக்கும் இடையே சில பண பரிவர்த்தனை சம்பந்தமான பிரச்சினைகள் இருந்தன, அதை பாபா, ஸரோஷிடம் தெளிவுபடுத்தக் கூறினார். பாபா எல்லோரையும் திட்டிக் கொண்டிருந்தாலும், அவரது அம்பு சரியான இலக்கைத் தாக்கியது, ஸரோஷ் அழுதுகொண்டே இருந்தார். மன்னிப்புக் கோரும் விதத்தில் தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து பாபாவை வணங்கினார். பாபா அவரைக் கட்டித் தழுவி, அங்கிருந்த ஒவ்வொருவரின் காலிலும் 100 முறை தம் நெற்றியைத் தொட்டு வணங்கினார். (சில புகைப்படங்கள் எடுக்க ஆதி சீனியர் பைய்யா பாண்டேயை அழைத்து வர விரும்பினார், ஆனால் பாபா அவரை வர அனுமதிக்கவில்லை.)

விஷ்ணுவின் உறவினர் சுஷீலா சத்தாரா கல்லூரியில் ஆயுர்வேத மருத்துவம் பயின்று வந்தார். சுஷீலா சிறுவயதிலிருந்தே பாபாவின் தொடர்பில் இருந்ததால், அனைத்து மண்டலியும் அவரை நன்கு அறிவர். டாக்டர் நீலுவுக்கு பஜ்ஜி என்றால் அலாதி பிரியம் ஆதலால், சுஷீலாவிடம் ஒரு மாலைப் பொழுதில் அதைத் தயார் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

எரச், பெண்டு, விஷ்ணு, டாக்டர் நீலு ஆகியோர் மார்ச் 12 அன்று பஜ்ஜியை உண்டு களிக்க அவரது வீட்டிற்குச் செல்லவிருந்தனர்; அவ்வேளையில் அஞ்சலை அனுப்பிவிட்டு பாவ் கல்சூரி தபால் நிலையத்திலிருந்து திரும்பி வந்தார். அவர்கள் ஏற்கனவே இரவு உணவை முடித்து, பாவ் கல்சூரியிடம், “நாங்கள் ஒரு நடைக்காக வெளியே செல்கிறோம், நீங்களும் வருகிறீர்களா?” என்று கேட்டபோது அவரும் உடன் சென்றார். சில நாட்களுக்கு முன்பு வரை, மண்டலி ரோஸ்வுட்டை விட்டு வெளியே செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. விஷ்ணு மட்டுமே பஜாருக்கும், ஸவக் கொத்வால் தபால் நிலையத்திற்கும் செல்வது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் பாபா அவர்கள் வெளியே நடக்கச் செல்லலாம் என்று கூறியிருந்ததால், மாலையில் அவர்கள் அவ்வாறு செய்யத் தொடங்கினர்.

அவர்கள் சுஷீலாவின் இல்லத்தைச் சென்றடைந்து, அங்கு பஜ்ஜிகளை உண்டு ரசித்தனர். பாவ் கல்சூரி இரவு உணவு உண்ணாததால், விஷ்ணுவின் வற்புறுத்தலின் பேரில் அவர் அங்கேயே இரவு உணவையும் உண்டார் - இது ஒரு சலசலப்பை உருவாக்கியது.

அடுத்த நாள், பாபாவை ரோஸ்வுட்டுக்கு அழைத்துச் செல்ல பாவ் கல்சூரி, அலோபா இருவரும் கிரா஼ப்டனுக்குச் சென்றனர். வழியில், பாபா சாதாரணமாக பாவ் கல்சூரியிடம், “**நேற்று இரவு என்ன சாப்பிட்டீர்கள்?**” என வினவியதும்…

சில கணங்களுக்கு, பாவ் கல்சூரி, தான் உண்டதை நினைவுகூர முடியாமல், சற்று தாமதமாக பதிலளித்தார். பாபா மிகவும் அதிருப்தி அடைந்தார், “**ஏன் சுஷீலா வீட்டில் சாப்பிட்டீர்கள்? எனக்குக் கீழ்ப்படிய தவறிவிட்டீர்கள்.**”

“வெளியில் உண்ணுவது பற்றி எந்த உத்தரவும் இல்லையே பாபா,” பாவ் கல்சூரி எதிர்ப்புத் தெரிவித்தார்.

அலோபா தலையை அசைத்து, “ஆம், இருந்தது! நான் வேறொருவர் இல்லத்தில் உணவு உண்பதில்லை” என்றார்.

அவர்கள் ஜால் வில்லாவிற்குச் செல்லும் வழியில் பாவ் கல்சூரியை பாபா கடுமையாகத் திட்டினார். பாபா, அப்போது பஜார் செல்லவிருந்த விஷ்ணுவையும் அழைத்து, அவரிடமும் கீழ்ப்படியாததைக் குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தார். அவரும் பாவ் கூறிய அதே பதிலையே கூறினார். எதுவாயினும், கீழ்ப்படிதல் மீறப்பட்டதாக அலோபா வலியுறுத்தி கூறி, வெளியே உண்ண வேண்டாம் என்ற பாபாவின் கட்டளை அமலில் இருந்ததாகத் தெரிவித்தார். விஷ்ணு கோபமடைந்து, அலோபாவிடம், “நீங்கள் பொய் சொல்கிறீர்கள்!” என்றார்.

பாபா, அலோபாவின் கூற்றை ஆதரித்தார். இது அலோபாவை உற்சாகப்படுத்தியதும் அவர் பதிலளித்தார், “பொய் சொல்வது நான் அல்ல, ஆனால் நீங்கள்தான் ஒரு பொய்யர்!”

அலோபாவிற்கும் விஷ்ணுவுக்கும் இடையே கடுமையான வார்த்தைகளின் யுத்தம் வெடித்தது, பாபா அந்த வாக்குவாதத்தை மிகவும் ரசித்தார். ஆவேசத்தில் விஷ்ணு அலோபாவிடம், “இனிமேலும் பொய் சொன்னால், வெட்கமற்ற ஈரானி, உங்களை உதைப்பேன்!” என்றார்.

“நான் என்ன, பதிலடி கொடுக்க மாட்டேன் என்று நினைக்கிறீர்களா?” அலோபா கத்தினார். “உங்கள் மண்டையை உடைப்பேன்!” என்றதும் முதுகைத் திருப்பிக் கொண்டு, விஷ்ணு சைக்கிளில் ஏறி பஜாருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பாபா மீண்டும் பாவ் கல்சூரியைக் குற்றம் சாட்டினார், “**இது அனைத்தும் உங்கள் தவறு! இந்த மோதலுக்கு நீங்கள்தான் காரணம். உங்களால்தான் இது நடந்தது. நீங்கள் கீழ்ப்படியவில்லை; அலோபா எனக்கு முற்றிலும் கீழ்ப்படிகிறார்.**”

ஊக்கமும் பெருமிதமும் அடைந்த அலோபா, “எனக்கு விஷ்ணுவின் மீதுதான் கோபம். ஒருவரையொருவர், நேருக்கு நேர் எதிர்கொண்டு போராடுவோம்!” பாவ் கல்சூரியை ரோஸ்வுட்டுக்கு அனுப்பி, பெண்டு, எரச், டாக்டர் நீலு ஆகியோரை அழைத்து வந்து நடந்ததைக் கூறியதும் அவர்களும், பஜ்ஜி அல்லது உணவு வெளியே உண்ணக்கூடாது என்ற உத்தரவும் இல்லை என்று ஒப்புக்கொண்டனர்.

நீண்ட விவாதத்திற்குப் பிறகு, பாபா கூறினார், “**இதுபோன்ற விஷயங்கள் எனக்கு தலைவலியைத் தருகின்றன, நான் உங்களை வெளியே செல்ல அனுமதித்தேன், இப்போது நீங்கள் சொல்வது சரியோ தவறோ, அது எனக்கு ஒரு பெரிய தலைவலியாகிவிட்டது.**”

மண்டலி அனைவரும், “அப்படியானால், நாங்கள் வெளியே செல்ல மாட்டோம்” என்று பதிலளித்தனர்.

“**நீங்கள் வெளியே சென்றாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை, ஆனால் எனக்கு எந்தத் தலைவலியும் வேண்டாம். இதை எப்படி உறுதி செய்வது?**”

இறுதியில், வெளியே செல்லும் அனுமதி ரத்து செய்யப்பட்டது, உண்மையில் பாபா இதைத்தான் விரும்பினார்! மண்டலி சுதந்திரமாக நடமாடுவதை அவர் விரும்பவில்லை, மேலும் அந்த சலுகையை ரத்து செய்ய விரும்பினார்.

பாபா முறையிட்டார், "**இது எவ்வளவு பெரிய சிக்கலாகிவிட்டது! அலோபா மிகவும் கோபமடைந்து விஷ்ணுவுடன் மோத விரும்புகிறார். அவரது கோபம் தணியவில்லை என்றால், நிச்சயமாக ஒரு குத்துச்சண்டை நிகழும். இது நான் உங்கள் அனைவரையும் வெளியே செல்ல அனுமதித்ததன் விளைவு. இப்போது எப்படி நான் அலோபாவை சமாளிப்பது?**"

எரச், சற்று நகைச்சுவை தொனியில், "சில நாட்கள் குளுமையாக இருக்கும் மஹாபலேஷ்வருக்கு அனுப்புங்கள். அதற்குள் அவரும் குளிர்ந்து விடுவார்" என்று பரிந்துரைத்தார்.

"**அவர் தனியாகச் செல்வது பாதுகாப்பானது அல்ல**" என்று பாபா தீவிரமான தொனியில் பதிலளித்தார். "**அவரது உற்சாகமான நிலையில், அவர் எதையும் செய்யக்கூடியவர்.**"

இதன் விளைவாக, எரச், அலோபாவுடன் சிறிது காலம் மஹாபலேஷ்வருக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இந்த முழுக் கதையும், ரோஸ்வுட் பங்களாவிலிருந்து மண்டலி வெளியே செல்வதைத் தடுக்க பாபாவின் தந்திரமே தவிர வேறொன்றுமில்லை - இந்த சூழ்ச்சியும் நன்றாக வேலை செய்தது.

1955 மார்ச் 16 புதன்கிழமை அன்று, பாபா மேற்கொண்ட 24 மணி நேர உபவாசத்தில், பாலின்றி ஒரு டம்ளர் காஃபி மட்டுமே அருந்தினார். பாபா தமது ஆன்மீக உள்பணிக்காக குல்தாபாத் செல்ல விரும்பியதால், ஆதி சீனியரின் மைத்துனரான, ஔரங்காபாத்தைச் சேர்ந்த டாக்டர் ரானடே, மூன்று வாரங்களுக்கு அரசு விருந்தினர் மாளிகையை முன்பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டார். பாபா ஔரங்காபாத் அல்லது குல்தாபாத் செல்லும் போதெல்லாம், டாக்டர் ரானடே அவர் தங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வது வழக்கம். குல்தாபாத் செல்வதற்கான ஆயத்தங்கள் தொடங்கியது; டெஹ்ரா டூனிலிருந்து வரவழைக்கப்பட்ட குமார் 16ஆம் தேதி அங்கு வந்து சேர்ந்தார்.

18ஆம் தேதி காலை, அமெரிக்காவில் விரைவில் வெளியிட இருக்கும் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தகத்தின் சுமார் 500 தலைப்புப் பக்கங்களில் பாபா கையெழுத்திட்டார். மணி விவரித்தபடி (மேக்ஸ் ஹெஃப்லிகருக்கு எழுதிய கடிதத்தில்), "அவர் அனைத்திலும் ஒரு நாள் காலையில் கையொப்பமிட்டார் - அவர் அதைச் செய்த வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில், நாங்கள் நான்கு பேர் இடைவிடாமல் - அடுத்தடுத்த பக்கங்களை அவர் முன் வைப்பது, முறையாக ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குவது போன்ற அனைத்தையும் துல்லியமாகச் செய்ய வேண்டியிருந்தது."

ஏற்கனவே குறிப்பிட்டபடி, 1953இல் டெஹ்ரா டூனில் பாபா தங்கியிருந்த வேளையில் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை எழுத்துப்பலகையில் எடுத்துரைக்கத் தொடங்கினார், எரச் பல மாதங்களாக, பாபாவின் எழுத்தர் எனும் பங்கை வகித்து, தனது பணியை நிறைவு செய்தார். பின்னர், எரச்சின் கையால் எழுதப்பட்ட பக்கங்களைத் தட்டச்சு செய்வதை பாவ் கல்சூரி ஒருங்கிணைத்தார்; புத்தகத்தை அத்தியாயங்களாக ஒழுங்கமைக்கும் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

1954 செப்டம்பர் மாதத்தில், கையெழுத்துப் பிரதியை, அமெரிக்காவில் ஐவி மற்றும் டான் ஸ்டீவன்ஸுக்கு, திருத்தங்கள் செய்வதற்காகவும், அதைத் தொடர்ந்து அச்சிடுவதற்காக லட் டிம்ப்ஃப்லுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில், மணி, ஐவிக்கு எழுதினார்: "பாபாவின் இந்தப் புத்தகம், மிகவும் பரந்த அளவில், சிறந்த விநியோகத்தைக் கருத்தில் கொள்ளும் பிரபலமான வெளியீட்டாளருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது பாபாவின் தனிப்பட்ட விருப்பம் - அதன் மிகப்பெரிய மதிப்பும், முக்கியத்துவமும் பின்பு கடவுளின் நேரடி வார்த்தைகளாக அங்கீகரிக்கப்படும்."

ஐவி டியூஸ், டான் ஸ்டீவன்ஸ் இருவரும் இதன் ஆரம்பப் பணியைத் தொடங்கிய பிறகு, மணி, ஐவி இவர்களிடையே புத்தகத்தின் தயாரிப்பு மற்றும் வெளியீடு தொடர்பாக கடிதப் பரிமாற்றம் தொடர்ந்து நடந்து வந்தது. ஐவி மற்றும் டான், தெளிவற்ற அல்லது முழுமையடையாத பத்திகள் பற்றிய கேள்விகளையும் அவ்வப்போது அனுப்பி வந்தனர். இதற்கு பாபா, மணி மூலம் பதிலளித்த அனைத்தும் புத்தகத்தின் முதல் பதிப்பில், அடிக்குறிப்பாகவோ அல்லது, துணைப் பகுதியில் நீண்ட மேற்கோள்களாகவோ இணைக்கப்பட்டுள்ளன. இலக்கணம் மற்றும் நிறுத்தற்குறிகளில் அவர்கள் சில திருத்தங்களைச் செய்த பின்பு, பாபாவின் கையெழுத்துப் பிரதியை சரிபார்க்கவும், திருத்தவும், அவர் விரும்பும் விஷயங்களை இணைக்கவும் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது. இறுதியில் பாபாவின் அறிவுறுத்தலின்படி எரச், ராம்ஜூ, பாவ் கல்சூரி ஆகியோர் இறுதித் திருத்தங்களைச் செய்தனர்.

1955ஆம் ஆண்டு மணி, ஐவிக்கு எழுதிய கடிதம், 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை பாபா எவ்வாறு சரிபார்த்தார் என்பதை விவரிக்கிறது:

பிரியமான ஐவி,

துணைப் பகுதியின் மீதமுள்ள (முழுப்) பாதியும் இத்துடன் திரும்ப அனுப்பப்படுகிறது. பாபா செய்த திருத்தங்கள் மற்றும் இணைப்புகளால் இதைத் திருப்பி அனுப்பி வைப்பதில் ஏற்பட்ட தாமதம் தவிர்க்க முடியாதது. பல திருத்தங்கள் அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டிய சில பக்கங்கள் (பக்கம் 279, 284, 289, 294, 297, 302, 311க்கான கீழ்க்குறிப்பு) அல்லது முழுமையான இணைப்புகள் [270 (1) முதல் 270 (6) வரை நீல நிறத்தில்] மீண்டும் தட்டச்சு செய்யப்பட்டுள்ளன. பாபாவின் வழிமுறைகள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ராம்ஜூ, எரச் இருவரும் எழுதிக் கொள்ளும் குறிப்புகளை, நான் தட்டச்சு செய்வதை பாபா விரும்புகிறார்.

எனவே, நீங்கள் இந்தப் பக்கங்களை கவனமாகக் குறித்துக் கொள்ள வேண்டும் என்றும், ஆங்கிலத்தில் தேவையான அனைத்து இலக்கண திருத்தங்கள் அல்லது மாற்றங்களை மேலும் தெளிவுற வெளிப்படுத்தும் விதத்தில் ஒரு நோக்குப் பார்வையும், முழு உணர்வும் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். உங்கள் அசல் பக்கங்கள் (சரிசெய்யப்பட்டவை) புதிதாக தட்டச்சு செய்தவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் பல பக்கங்களில் சிவப்பு பென்சில், சிவப்பு அல்லது நீல நிற மையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன (நேரமின்மையால் மீண்டும் தட்டச்சு செய்யப்படவில்லை) மேலும் இந்தத் திருத்தங்கள் நேர்த்தியாக, அதற்குரிய பக்கங்களில் செருகப்படாததற்கு, சம்பந்தப்பட்ட மண்டலி வருத்தத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறார்கள் - அதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, அவசர அவசரமாக பலவற்றை ஒரே நேரத்தில் செய்ததால், நேரப் பற்றாக்குறை (குறிப்பாக எரச்சின் விஷயத்தில் அவர் தனது பலதரப்பட்ட கடமைகளைப் பார்க்க வேண்டியிருந்தது; மற்றும் ராம்ஜூ சில சமயங்களில் இரவு வரை அதில் பணிபுரிகிறார்).

எரச், பாபாவிற்கு உள்ளடக்கங்களை வாசிக்க, கேள்விக்குரிய புள்ளிகளை இணைக்க ராம்ஜூ உதவினார்; இந்து மண்டலி (பாவ் கல்சூரி) ஒரு விசித்திரமான பங்கை வகிக்கிறார். ஸுஃபியிஸம் அல்லது வேதாந்தத்தில் அடங்கும் சொற்கள் அல்லது பெயர்களை, சாதாரண சைகைகள் மூலம் தெரிவிப்பது சாத்தியமற்றது ஆகையால், சில சமயங்களில் பாபா பொறுமையாக, திரும்பத் திரும்ப சைகைகள் மூலம் ஒரு விஷயத்தை அல்லது சாரத்தை எடுத்துரைப்பதற்காக, அவர், பாவ் கல்சூரி ஏ (A), பி (B) சி (C), டி (D) போன்ற ஆங்கில எழுத்துக்களை உச்சரிக்கும் வேளையில், சரியான எழுத்தை உச்சரிக்கும் அந்த கணத்தில் அவரைத் தடுத்து நிறுத்துவதை செயல் முறையாகப் பயன்படுத்தினார். பாபாவின் மனதில் இருந்த விஷயத்தின் முதல் எழுத்தை அவர் அடைந்த பின்பு, மீண்டும் அதே செயல்முறையைத் தொடங்கி, பாபா இரண்டாவது எழுத்தை கண்டுகொள்ளச் செய்தார். இப்படி ஒவ்வொரு கருத்து அல்லது உணர்வு அல்லது வாக்கியம் முடியும் வரை, அயராமல் உழைக்க வேண்டிய கட்டாயம். அதனால்தான் இந்த முழுப் பிரதியையும் உங்களுக்குத் திருப்பி அனுப்புவதில் இத்தனை கால தாமதம் ஏற்பட்டது. பாபா தினமும் நான்கு முதல் ஐந்து மணி நேரம் அதில் பணிபுரிந்து, பட்டியலிட்டு, இணைப்புகளைத் திருத்தம் செய்தார். பாபாவால் சுயமாக தம்மீது திணிக்கப்பட்ட குறைபாடுகளுடன், நீங்கள் இருவரும் முழு மனதுடன் உழைத்துக் கொண்டிருக்கும் இந்தப் புத்தகத்தை, அவர் மிக நுணுக்கமாகப் படித்திருக்கிறார் என்ற செய்தி உங்களை மகிழ்வித்து உற்சாகப்படுத்தும் என்ற எண்ணத்தில் நான் இதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

பாபா இந்தப் புத்தகத்தைத் திருத்துவது, மாற்றியமைப்பது, இணைப்பது போன்ற பல விஷயங்களைப் பார்க்க நேர்ந்திருந்தால் அன்பான டாக்டர் கனியின் இதயத்திற்கு இதமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். இந்தப் புத்தகத்தின்

துணைப்பகுதி ‘சில சீடர்’களின் முயற்சியால் வெளிவருவதை பாபா விரும்பினார் என்பதையும் நான் இப்போது பார்க்கிறேன்.

‘தேவதைகள் மற்றும் தேவதூதர்கள்’ (‘ANGELS & ARCHANGELS’ பாபா இணைத்துள்ள புதிய 6 பக்கங்கள்) குறித்து உங்கள் முந்தைய கடிதத்தில் எழுப்பியிருந்த கேள்விக்கு பாபா விடையளித்துள்ளார் என்பதை நான் உறுதியாகக் கூறுவதை கவனிப்பதில் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

270 (1) அடிக்குறிப்பைச் சேர்த்துள்ளேன், ஏனெனில் இது சுவாரஸ்யமானது. நானும், டானும், கனியின் கைவண்ணத்தில் உருவான சிலவற்றில் பணிபுரிந்து கொண்டிருந்த நேரத்தில், பாபா கூறிய கருத்துக்களிலிருந்து வந்தது; ஆனால் அவர் அதற்கு மேல் சொல்ல மாட்டார். நான் அதை பாபாவிடம் படித்துக் காட்டினேன், அவர் அதை ‘சரி’ என்று கூறும் அதே வேளையில், அதை இத்துடன் இணைக்க வேண்டாம், ஏனெனில், இதுவே இதன் தொகுப்பில் ஒரு புத்தகமாக உருவாகிவிடும் என்று கூறினார். (நமது பூமியில் உருவாக்கப்பட்ட ‘அறிவுத்திறன் மிக்க மூளை’யின் கண்டுபிடிப்புகள் பற்றி அவர் ஏதோ சொன்னது எனக்கு நினைவிருக்கிறது, பொதுவாக சில ஆன்மாக்கள் இதர இரண்டு உலகங்களில் ஒன்றிலிருந்து மறுபிறவி எடுக்கின்றன, ஆனால் இதைப் பற்றி எனக்கு உறுதியாகத் தெரியவில்லை, எனவே நான் அதை இத்துடன் இணைக்கவில்லை; மேலும், பாபா சோர்வாகவும் பதில் சொல்ல விரும்பாதவர் போலவும் காணப்பட்டார்.)

அன்பான ஐவி, கீழ்க்குறிப்பின் ஆங்கிலத்தை அவசியம் திருத்துங்கள்; ‘தலை’ (HEAD) மற்றும் ‘இதயம்’ (HEART) என்ற சொற்றொடருக்கு சிறந்த விளக்கமோ வரியோ தேவையா என்று எனக்குத் தெரியவில்லை. எப்படியிருந்தாலும், நான் அதை உங்களிடம் விட்டுவிடுகிறேன் - நீங்கள் விரும்பினால் உங்கள் விருப்பப்படி அதை மாற்றியமைக்கவும்.

- மணிஜா

1955 மார்ச் 21 திங்கட்கிழமை, ஜாம்ஷெட்-இ-நவ்ரோஸின் (JAMSHED-E-NAVROZ) ஈரானி புத்தாண்டு. இத்திருநாளில் ‘ஃபலுடா’ (FALOODA) எனப்படும் இனிப்புக் குளிர்பானம் அருந்துவது வழக்கம். பாபா ரோஸ்வுட்டுக்கு வந்ததும், மண்டலிக்கு பானத்தைக் கொண்டு வர பாவ் கல்சூரியை மீண்டும் கிராஃப்டனுக்கு அனுப்பி வைத்தார். பாவ், பெரிய பானை நிரம்ப பானத்தை எடுத்துச் செல்ல பணியாள் எவரேனும் இருப்பார் என்று நினைத்தார், ஆனால் அவர் வந்ததும், இரண்டு பெண் பணியாட்கள் பானையை அவரது தலையில் மிகவும் சிரமப்பட்டு தூக்கி வைத்தனர்.

கிராஃப்டன், ரோஸ்வுட்டிலிருந்து சுமார் 600 அடி தொலைவில் இருந்தது; இடையில் பாபா மீது ஆழ்ந்த மரியாதை கொண்ட ‘சொத்து மேலாளர்’ ஸொராப்ஜி தமானியாவின் (SOHRABJI DAMANIA) இல்லம் இருந்தது. ஸொராப்ஜி, பாவ் கல்சூரியை அறிந்திருந்ததோடு, அவருடன் நட்பாக இருந்தார். பாவ் இதுபோன்ற குற்றேவல் பணிகளைச் செய்வதால் வெட்கமடைந்தார், மேலும்

அவர் ஸொராப்ஜியை சந்திக்க மாட்டார் என்று தீவிரமாக நம்பினார். அவரது கழுத்து அதீத பளுவால் வளைந்து நெளிந்திருந்தாலும், தோள்கள் வலித்தாலும், ஸொராப்ஜியை கண்டுகொள்ளாதவரை பாபா கருணையுள்ளவர் என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தார்; ஆனால், அவர் இதை நினைத்துக் கொண்டிருக்கும்போதே, ஸொராப்ஜி ஒரு பக்கப் பாதையிலிருந்து தோன்றி, பாவ் கல்சூரிக்கு நமஸ்காரம் செய்தார்; அவர் வெட்கப்படவே, ஸொராப்ஜி தாமதம் செய்யாமல் தனது வழியில் சென்றார். பாபா தன்னை அதிகம் உழைக்க வைத்தது மட்டுமின்றி, இந்த இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ளவும் செய்தார் என்று பாவ் நினைக்கத் தொடங்கினார்!

அவர் ரோஸ்வுட் வந்தடைந்ததும், பெண்டு, எரச் இருவரும் அவரது தலையிலிருந்த பாரத்தை இறக்கினர். "**பானை கனமாக இருந்ததா?**" என்று பாபா கேட்டார்.

பாவ் பதிலளிக்கும் முன்னர், எரச் இடையே, "இது மிகவும் கனமானது!" என்றார்.

பெண்டு உடனே கூறினார், "இத்தகைய சுமையை நீண்ட நேரம் ஒருவர் சுமந்தால் முதுகு உடைந்துவிடும்."

பாபா, பாவ் கல்சூரியிடம் கேட்டார், "**வழியில் எவரேனும் உங்களைப் பார்த்தார்களா?**"

"ஸொராப்ஜி மட்டும்தான்" என்று பாவ் புலம்பினார்.

பாவின் முகத்தில் இருந்த வெளிப்பாட்டைக் கண்டு, மண்டலி மிகையாகச் சிரித்தனர். அப்போது பாபா, "**உங்களுக்கு வெட்கமாக இருந்ததா?**" என்று கேட்டார்.

"மிகவும்!"

"**பிறரைப் பார்த்து வெட்கப்பட்டால், நீங்கள் எனக்கு எப்படிக் கீழ்ப்படிவீர்கள்? நீங்கள் உலக வழிகளின்படி செயல்படுவீர்கள், எனது வழிகளில் அல்ல. என்னையே நினைப்பவர் உலகத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை! நான் உங்களின் அவமான உணர்வைக் குறித்து குல்தாபாத்தில் கவனித்துக்கொள்கிறேன்**" என்றார் பாபா.

பாபா பின்னர் ஃபலூடாவின் ஒரு பகுதியை ஒரு சிறிய பானையில் ஊற்றி, அதை ஸொராப்ஜிக்கு எடுத்துச் செல்லுமாறு பாவ் கல்சூரியிடம் கூறினார். அவர் ஸொராப்ஜியை சந்தித்தபோது, "இவ்வளவு பெரிய சுமையைச் சுமக்க உங்களுக்கு பணியாட்கள் எவரும் இல்லையா?" என வினவினார்.

நாங்கள் அனைவரும் பாபாவின் பணியாட்கள்," என்று பாவ் கூறினார். "பாபா எங்களுக்கு இதுபோன்ற பணியை வழங்குவது எங்கள் அதிர்ஷ்டம்."

அவர் திரும்பி வந்ததும், ஸொராப்ஜி என்ன சொன்னார் என்று பாபா கேட்க, பாவ் அதைத் தெரிவித்தார். பாபா அவருக்கு அறிவுரை வழங்கினார், "**கல்லைப் போல வாழக் கற்றுக்கொள்ளுங்கள்! மக்கள் அதை மிதிக்கிறார்கள், சிலை வடிவத்தில் அதை மதித்து வணங்குகிறார்கள்; ஆனால், கல் அதனால் எந்த வகையிலும் பாதிக்கப்படுகிறதா? கொஞ்சமும்**

**இல்லை. அதை உதைத்தாலும், உமிழ் நீரைத் துப்பினாலும், வணங்கினாலும், அது பாதிப்பின்றி உள்ளது. நீங்கள் அனைவரும் கல்லைப் போன்ற உணர்வுடன் இருக்க வேண்டும். நீங்கள் ஒரு கல்லைப் போல மாறினால் வாழ்க்கையின் இலக்கை அடைவீர்கள்.**"

அன்று மாலை மார்ச் 21, 8:00 மணிக்கு பாபா, பெண்டு, பைதூல், பாவ், குமார் ஆகியோரை சத்தாராவிலிருந்து குல்தாபாத்தை நோக்கி எரச், ஆதி சீனியரின் காரில் அழைத்துச் சென்றார். அதிகாலை 2:00 மணிக்கு அஹமதுநகர், ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் சிறிது நேரம் நின்றனர். அங்கு பாபா, ஆதி சீனியரை சந்தித்தபோது, அவரது பெயரை தொலை தூரம் பரப்பும் பணியைத் தொடருமாறு அறிவுறுத்தினார். பாபா, ஆரஞ்சு ஸோடா பாட்டில் ஒன்றை விரும்பவே, ஸவக் தமானியா அதைக் கொண்டு வந்தார். குல்தாபாத்தில், பாபாவின் அறிவுறுத்தலின்படி, சகன், சிது மற்றும் மெஹராபாத்தில் தங்கியிருந்த மஸ்த் அலி ஷா ஆகியோர் அவரை சந்தித்தனர். குல்தாபாத் சென்றடைந்ததும், பாபா பகல் வேளையில் அலி ஷாவுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கினார், மேலும் இரவு நேரங்களில் பல்வேறு சமாதிகள் மற்றும் கோவில்களில் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். ஓரிரவு அவர் எரச்சுடன் குதுப் ஸர்ஸாரி ஸர் பக்ஷின் கல்லறைக்கு அருகிலும், வேறொரு துறவியின் கல்லறையிலும் அமர்ந்திருக்க, பிற மண்டலி அனைவரும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா கவாலி இசையைக் கேட்க விரும்பிய வேளையில், எரச், பெண்டு இருவரும் ஔரங்காபாத் சென்று, ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கி கவாலி பாடகர் ஒருவரை ஏற்பாடு செய்தனர். அன்று மாலை குல்தாபாத்திற்கு தப்லா கலைஞர் ஒருவருடன் கவாலி பாடகர் வந்தார். ஆனால் அவரைப் பார்த்ததும் அனைவரும் சிரித்தனர். அவர் முகத் தோற்றத்தில் தூங்கி விழுவது போலத் தோன்றியது. கடந்த மூன்று இரவுகள் ஔரங்காபாத் இசை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்ததால் சோர்வாகக் காணப்பட்டார்.

கவாலி நிகழ்ச்சி இரவு 8:00 மணிக்குத் தொடங்கியது, ஆனால் சோர்வு காரணமாக அவரால் பாட முடியவில்லை. பாபா அவரை தேநீர் அருந்த அனுப்பி, அவர் இல்லாத நேரத்தில் பெண்டு, எரச்சிடம், "**நான் கவாலி இசையைக் கேட்க விரும்பினேன், நீங்கள் என்ன வகையான பாடகரைக் கொண்டு வந்துள்ளீர்கள்?**" பாபா பின்னர் அந்த மனிதனுக்கும் அவரது பக்க வாத்திய துணைக்கும், விழித்திருக்கும் நோக்கத்தில் மாத்திரையைக் கொடுத்தார், அது அற்புதங்களைச் செய்யத் தொடங்கியது! பாவ் கல்சூரி தனது வாழ்நாளில் இப்படிப்பட்ட கவாலி பாடல்களை இதற்கு முன்னரோ பின்னரோ கேட்டதே இல்லை. காலை 4:00 மணி வரை கவாலி நிகழ்ச்சி நடந்தது. மண்டலி முழு உற்சாகத்தில் காணப்பட்டனர். பாபா பிரகாசித்துக் கொண்டிருக்க, அவருடைய வெளிப்பாடுகளிலிருந்து தெய்வீக மதுபானம் வழிந்தது. அனைவரும் நம்ப முடியாத ஒருவித போதை உணர்வில் இசையில் மூழ்கி மகிழ்ந்தனர்.

குல்தாபாத்தில், சகன் உணவு தயார் செய்தார்; தேநீர் தயார் செய்வது பைதூலின் பொறுப்பு. இருவரும் தொடர்ந்து மோதிக்கொள்வது வழக்கம், ஆனால் அது வெளியே தெரியாத வண்ணம் சமையலறையில் மட்டுமே நடந்தது. சகன் ஒரு சிறந்த சமையல்காரர், பைதூல் நடுத்தரம்; இருந்தாலும், பைதூல் அவரது சமையலைக் குறித்த ஞானத்தை சகனுக்கு வழங்க முயற்சித்ததே இந்தக் குழப்ப நிலைக்கான காரணம்.

பாபாவின் தனிப்பட்ட பணியை பாவ் கல்சூரி செய்ய வேண்டியிருந்தது. அவரும் குமாரும் பாபாவின் துணிமணிகளை சுத்தம் செய்தனர். பாவ், எரச் இருவரும் பாபா அவரது காலைக் கடன்களை முடிக்க உதவினர், அதன் பின்னர், இதர மண்டலி உறுப்பினர்கள் தேநீர் அருந்திய வேளையில், பாவ், பாபாவின் கழிவுக் கலத்தை சுத்தம் செய்து, அவரது அறை, படுக்கை அனைத்தையும் செம்மையாக்கி, பாபாவின் குடிநீரை நிரப்பிவிட்டு, பின்பு தேநீர் அருந்துவதை வழக்கமாகக் கொண்டார். பாவ், தேநீர் அருந்த ஒவ்வொரு நாளும் தாமதமாக வந்ததால், பைதூல் பொறுமை இழந்தார். பாபாவின் பணிகளை பாவ் முதலில் கவனித்ததை அவர் நன்கு அறிந்திருந்தாலும், அவரைத் தவறாக நடத்தி, கோபத்தில் அவரைத் தாக்கும் விதத்தில், பாவின் சட்டையின் முன்பக்கத்தைப் பிடித்து அவரைக் கடுமையாக அறைந்தார். “நான் உங்கள் தந்தையின் வேலைக்காரனா? நான் உங்களுக்காகத் தேநீர் தயார் செய்து காத்திருக்க வேண்டுமா?” என்று பைதூல் கோபமாகக் கேட்டார்.

பாபாவுடன் ஒருவரின் வாழ்க்கை இப்படித்தான் இருந்தது. பாபாவின் கட்டளைகளை, ஒருவர், சங்கடமான சூழ்நிலைகளிலும் பின்பற்ற வேண்டிய கட்டாயம். ஒவ்வோர் அடியிலும், ஒருவர் துண்டு துண்டாக உடைக்கப்படும் வரை, தடைகளை கடக்க வேண்டியிருந்தது. பாபாவுடன் வாழ்பவர்களின் நிலை இதுதான் - ஒவ்வொரு நொடியும் இறந்துகொண்டே வாழ்கிறார்கள்! குல்தாபாத்தில் பாவ் கல்சூரியின் மானம், வெட்கம் அனைத்தையும் கண்காணித்து பாடம் புகட்டுவதாக பாபா கூறியிருந்தார், இதைத்தான் அவர் அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும்.

மூன்று வாரங்களுக்காகத் திட்டமிடப்பட்ட ஆன்மீக உள்பணியை, ஒரே வாரத்தில் முடித்த பாபா, 1955 மார்ச் 28ஆம் தேதி திங்கட்கிழமையன்று மெஹராஸாத், அஹமதுநகர் வழியாக சத்தாராவிற்குத் திரும்பிச் சென்றார். (சிது, அலி ஷாவை மீண்டும் மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில், சகன் அஹமதுநகருக்குச் சென்றார்.) மெஹராஸாத்தில், பாபா என்றென்றும் வாழும் உணர்வில், காக்கா, அனைத்தையும் கச்சிதமாகவும், சுத்தமாகவும் வைத்திருந்தார். எனவே, முன்னறிவிப்பின்றி அங்கு விரைந்து சென்று வருவதில் பாபா எந்தத் தயக்கமும் காட்டவில்லை. பாபா மீண்டும் அஹமதுநகர் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் அவரது கார் எரிவாயு நிரப்புவதற்காக நிறுத்தப்பட்ட வேளையில், ஆதி சீனியர், ஸவக் தமானியா இருவரையும் சிறிது நேரம் சந்தித்தார். மணி மேற்கத்திய அன்பர்களுக்கு எழுதிய கடிதத்தில், “பாபா

குல்தாபாத்திலிருந்து திரும்பி வந்தபோது, அங்கு அவர் நீண்ட நேரம் முழு முனைப்புடன் செய்த சிறப்புப் பணியால் மிகவும் சோர்வடைந்து காணப்பட்டார்" என்று குறிப்பிட்டிருந்தார்.

பாபா, சத்தாராவிற்குத் திரும்பி வரும் வேளையில், மஹாபலேஷ்வரில் 100 ஏழை உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஆண், பெண்களைத் தேர்ந்தெடுத்து தயார் நிலையில் இருக்கச் செய்யுமாறு கோஹியார் சத்தாராவாலாவிடம் கூறப்பட்டிருந்தது, மேலும் அவர் ஷஹஸ்த்ரபுத்தேயின் உதவியுடன் அதைச் செய்தார். பாபா, 1955 ஏப்ரல் 7ஆம் தேதி வியாழன் அன்று எரச், பெண்டு, பாவ், பைதூல், குமார் ஆகியோருடன் மஹாபலேஷ்வருக்குச் சென்று, தமது வழக்கப்படி, ஏழைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார்.

திரும்பி வரும் வழியில் பாபா, பஞ்ச்கணியில் நின்று, அங்கு, 'டைகர் பள்ளத்தாக்கு குகை'யில் (TIGER VALLEY CAVE) பல மாதங்களாக ஏகாந்தவாசம் மேற்கொண்ட பிளீடரைப் பார்த்து, அவரிடம் ஜூன் மாதம் வரை, அதைத் தொடருமாறு அறிவுறுத்தினார்; அதன் பின்னர் அவர் மேலும் ஆலோசனை வழங்குவதாகக் கூறினார். சத்தாராவிற்குத் திரும்பி வந்த பின்பு, பாபா, டைகர் பள்ளத்தாக்கு குகை அமைந்துள்ள இடத்தைப் பாதுகாக்க விரும்பியதாகவும், நிலத்தை வாங்க முயற்சித்ததாகவும், ஆனால் இதை ஏற்பாடு செய்ய முடியாமலானதையும் தெரிவித்தார்.

மறுநாள் புனித வெள்ளி. பாபாவும் ஆண், பெண் மண்டலி அனைவரும் பாதி நேர உபவாசத்தைக் கடைப்பிடித்தனர். அனைவரும் ஒரு நாள் உபவாசம் மேற்கொண்டு, மறுநாள் பாபா மண்டலியின் பங்களாவிற்கு வந்து, தன்ஸக் (DHANSAK, பார்சி உணவு), காய்கறியுடன் தயார் செய்யும் சிறப்பு உணவை மேற்பார்வையிட்டார். மண்டலி அரிசி மற்றும் காய்கறிகளை சுத்தம் செய்த பின்பு, பாபா தானே சமையல் செய்தார். அனைவரும் உண்ட பின்னர் இதுபோன்ற சுவையான தன்ஸக் இதுவரை உண்டதில்லை என்று கூறினர். பாபா உணவைத் தயார் செய்யும் போது, தனது சொந்த காரணத்திற்காக, பாவ் கல்சூரியை குறைந்தது 20 முறை கைகளை சுத்தம் செய்யக் கூறினார்.

சத்தாராவிற்குத் திரும்பி வந்ததும், பாபா அவரது '**இறுதிப் பிரகடனம்**' (FINAL DECLARATION) தொடர்பான '**தீர்மானத்தை**' (DECISION) எடுத்துரைத்தார், இது ஒரு சுற்றறிக்கை வடிவில் 1955 ஏப்ரல் 10 அன்று, வெளியிடப்பட்டது:

**இந்தப் பிரபஞ்சம் கடவுளிடமிருந்து வெளிவந்தது. கடவுள் பிரபஞ்சத்திலிருந்து வெளிவரவில்லை. மாயை, உண்மைப்பொருளாகிய கடவுளிடமிருந்து வெளிவந்தது. உண்மைப்பொருள் மாயையிலிருந்து வெளிவரவில்லை. கடவுள் மட்டுமே உண்மையானவர்; பிரபஞ்சம் அதுவாகவே மாயை.**

**கடவுள் மனிதனாக முடியும், அதன் மூலம் கடவுளாகவும்**

மனிதனாகவும் பூமியில் வாழ முடியும். அவரே இறை-மனிதன், அவதார புருஷன், கிறிஸ்து அல்லது ரஸூல்.

அவதார புருஷராகவும், சத்குருக்களாகவும் மாயையில் வாழும் கடவுளின் வாழ்க்கை மாயை அல்ல, அதேசமயம் அனைத்து உயிருள்ள மற்றும் ஜட ஜீவராசிகளாகப் படைப்பில் வாழ்ந்த கடவுளின் வாழ்க்கை உண்மையும், மாயையுமானது. 'மாயை', 'மாயத்தன்மை மிக்க வாழ்க்கை' மற்றும் 'மாயையில் கடவுளின் வாழ்க்கை' இவை அனைத்தும் ஒன்றல்ல, ஒன்றாக இருக்கவும் முடியாது. மாயைக்கு உயிர் இல்லை, உயிர் இருக்க முடியாது. மாயை என்பது மாயை, அதுவாகவே ஒன்றும் இல்லாதது. மாயையான வாழ்க்கை என்பது மாயையில் வாழும் வாழ்க்கை என்று பொருள்படும், அது வாழ்க்கையாக இருந்தாலும் (படைப்பில் ஆத்மா அனுபவிப்பது போல்), இது மாயையான வாழ்க்கை. ஆனால் மாயையில் வாழ்ந்த கடவுளின் வாழ்க்கை மாயையானது அல்ல, ஏனெனில் மாயையான வாழ்க்கையை வாழ்ந்தாலும், கடவுள் எப்பொழுதும் தமது இறை உணர்வை உடையவராகவே இருக்கிறார்.

கடவுள் முற்றிலும் சுதந்திரமானவர், மேலும் முழுப் பிரபஞ்சமும் கடவுளைச் சார்ந்துள்ளது. இருப்பினும், பரிபூரண குருநாதர்கள் (சத்குருக்கள்) கடவுளின் 'வம்சாவளி'யான அவதார புருஷரை பூமியில் கொண்டுவரும்போது, அவர்கள் உண்மைப்பொருளையும், மாயையையும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கச் செய்கிறார்கள். இப்படி, மாயையில் மூழ்கியவர்களால் கடவுளின் எல்லையற்ற கருணையும் அளவற்ற அன்பும் நித்தியமாக ஈர்க்கப்படுகின்றன.

கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே, எல்லையற்ற கருணை, அளவற்ற அன்பு ஆகியவை கடவுளாக மாறும் மனிதர்களால் (சத்குருக்கள், பரிபூரண குருநாதர்கள் அல்லது குதுப்கள்) மற்றும் மனித உருவில் வரும் கடவுளால் (அவதார புருஷர், கிறிஸ்து, ரஸூல்) என்றென்றும் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய இணைப்புச் சங்கிலியாகச் செயல்படுகிறது; அதனால் பிரபஞ்சம் கடவுளின் நித்திய விளையாட்டுத் தோழனாக மாறுகிறது.

இந்த இன்றியமையா இணைப்பின் மூலம், அவதார புருஷர் தமது 'தெய்வீக விளையாட்டில்' வாழ்க்கையை நிலைநாட்டியது மட்டுமல்லாமல், மாயையில் சட்டத்தையும் நிறுவினார். இறை-மனிதன் அல்லது அவதார புருஷரால் நிறுவப்பட்ட இந்தச் 'சட்டம்', சட்டமற்ற எல்லையில்லா சட்டமாகும், மேலும் இது நித்தியமாக உண்மையானதும் அதே நேரத்தில் மாயையானதும் ஆகும். இந்தச் 'சட்டம்'தான் பிரபஞ்சத்தை ஆட்சி புரிகிறது; அதன் அனைத்து ஏற்றத்தாழ்வுகளும், உருவாக்குதலும், அழித்தலும் இந்தச் 'சட்டத்தால்' வழிநடத்தப்படுகின்றன.

இந்தக் காலச் சுழற்சியில், இறைவனின் 'சுதந்திரமான முழுமைத்தன்மை', இறை-மனிதனால் இறைவனின் விருப்பமாக, இந்தச்

சட்டத்தின் மீது செயலாற்றுகிறது. அவதார புருஷர் விரும்பும் அனைத்தும் இறைவனால் விதிக்கப்பட்டவை என்பதே இதன் பொருள். இதன் விளைவாக, 'இறுதிப் பிரகடனம்' மற்றும் 'உறுதிமொழி'யில் நான் கூறிய அனைத்தும் கடவுளால் விதிக்கப்பட்டவை, கண்டிப்பாக நடக்க வேண்டும்.

மார்ச் 22ஆம் தேதியிலிருந்து ஏறக்குறைய ஒரு வாரம் குல்தாபாத்தில் இருந்தேன். அங்கே இரவும் பகலும் எனது பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டேன். எனது ஆன்மீகப் பணியின் தீவிரத்தன்மை எனது உடல் மற்றும் மனதின் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியது, மேலும் 'எனது இறுதிப் பிரகடனத்தில் நான் அறிவித்த அனைத்தும் ஒரே வரிசையில் மற்றும் அதே தீவிரத்தன்மையுடன், ஆனால் நேர காரணியில் ஒரு மாற்றத்துடன், துல்லியமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். எனவே, காலக்கெடுவில் கொண்டுவரும் மாற்றத்தைத் தவிர, விதிக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர, தொடர்ச்சியான நிகழ்வுகளின் தீவிரத்தன்மை, நோக்கம், வடிவம் மற்றும் அளவு ஆகியவற்றில் எந்தவித மெத்தனமும் இல்லாமல் நடைபெறும்.

இதற்கிடையில், எனது 'இறுதி தீர்மானத்தின்படி', கடவுளால் நிர்ணயிக்கப்பட்டதற்கு இணங்க, நடக்கவிருக்கும் அனைத்திற்கும் சாட்சியாக மனிதகுலம் காத்திருக்க வேண்டும். மனிதன் கடவுளை மேலும் மேலும் நேசிக்க வேண்டிய நேரம் இது. அவன் கடவுளுக்காக வாழட்டும், கடவுளுக்காக சாகட்டும். அவனுடைய எண்ணங்கள் அனைத்திலும், அவனுடைய எல்லா வார்த்தைகளிலும், அவனுடைய எல்லா செயல்களிலும், கடவுள் மீதான அன்பு மட்டுமே மேலோங்கி நிற்கட்டும்.



‘கடவுள் பேசுகிறார்’
புத்தகத்தின் தலைப்புப்
பக்கங்களில்
பாபா கையெழுத்திடுதல்,
**18 மார்ச் 1955**
(SIGNING TITLE PAGES OF
‘GOD SPEAKS’, 18 MARCH 1955)



ஆதி சீனியருடன்
பாபா, சத்தாரா, **1955**
(BABA WITH ADI SENIOR
AT SATARA, 1955)

# சத்தாரா ஏகாந்தவாசம்

(**Seclusion in Satara**)

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ராம்ஜூ அப்துல்லாவும் அவரது குடும்பத்தினரும் சத்தாராவில் வாழ்ந்து வந்த அவ்வேளையில், ராம்ஜூ தினமும் பாபாவைப் பார்க்க வருவது வழக்கம். அவரது மைத்துனி ஹாஜாவின் (HAJA) குடும்பம் நாசிக்கில் வாழ்ந்தபோது, தொடர்ந்து பாபாவின் தொடர்பில் இருந்தது. ஒருமுறை ஹாஜா ஒருவரிடம், "நான் அவ்வளவு அழகாக இருப்பதால், பாபா கூட என்னைக் காதலிக்கிறார்!" என்று கூறியதை அறிந்த பாபா, ஹாஜாவின் வாழ்நாள் முழுவதும் தனது முகத்தை அவரிடம் காட்டக்கூடாது என்று அறிவுறுத்தினார். அதன்படி, ஹாஜா சத்தாராவில் வாழ்ந்தாலும், ஒருமுறை கூட பாபாவை சந்திக்க வரவில்லை.

ராம்ஜூவின் மகன் அலி (**25**), மும்பையிலிருந்து தனது தந்தைக்கு, பாபாவைப் பற்றிய நீண்ட கடிதங்களை எழுதிக் கொண்டிருந்தார்.

பாபாவின் தெய்வீகத்தன்மை குறித்த சந்தேகம் அவரை விட்டபாடில்லை. ஒருமுறை, பாபா சத்தாராவில் தங்கியிருந்தபோது, அலி மும்பையிலிருந்து வர நேர்ந்தது. திடீரென அலியின் உடல்நிலை சரியில்லாமல் போகவே, ஒரு மாலை ராம்ஜூ, டாக்டர் நீலுவிடமிருந்து அலிக்குத் தேவையான மருந்தைப் பெற்றுக்கொண்டார். மறுநாள் பாபா, நீலுவிடம், "**நேற்று மாலை என்ன நடந்தது?**" என்று கேட்டதற்கு, நீலு பதிலளித்தார், தொடர்ந்து பாபா, "**வேறு ஒன்றுமில்லையா?**" என வினவினார். அப்போது நீலு, ராம்ஜூவின் வருகையை நினைவுகூர்ந்து, அலி நோய்வாய்ப்பட்டிருப்பதை பாபாவிடம் கூறினார். பாபா, "**உங்கள் மருந்தினால் அவர் நிச்சயமாக இறந்துவிடுவார்! இப்போது அவரைக் காப்பாற்ற முடியாது!**" என்று குறிப்பிட்டு நாள் முழுவதும் அதையே அறிவித்தார், ஆனால் வீட்டில் அலி குணமடைந்து வந்தார். இது குறித்து ராம்ஜூ, அலியிடம் கூறியபோது, அவர் மனதில் பாபா மீதான நல்லெண்ணத்தையும், நன்மதிப்பையும் தூண்டியது.

ஆனால் மும்பைக்குத் திரும்பி வந்ததும், அலி தனது முந்தைய சந்தேக வழிகளுக்குத் திரும்பிய அந்த நேரத்தில், தனது தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினார்; அதை ராம்ஜூ பாபாவிடம் காண்பித்தார். பாபா, அலியை சத்தாராவிற்கு அழைக்குமாறு அறிவுறுத்திய பின்னர், அவர் ஒரு நாள் பிற்பகலில் ரோஸ்வுட்டுக்கு வந்தார். பாபா அவரிடம், "**நீங்கள் ஒரு நல்ல மனிதரா?**" என்று கேட்டதற்கு அலி பதில் சொல்லவில்லை; பாபா, ராம்ஜூவிடம், "**அலி மிகவும் புத்திசாலி என்று நீங்கள் கூறினீர்கள். ஆனால், அவர் படு முட்டாள் போலத் தெரிகிறது!**"

அப்போது பாபா, "**நீங்கள் கீதையைப் படித்திருக்கிறீர்களா?**" என வினவ, அலி "இல்லை," என்று பதிலளித்தார்.

**"கீதை, குரான், பைபிள் அனைத்திலும் ஒரே விஷயம் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. ஒவ்வொருவரும் நல்லது, தீயது இரண்டையும் கடந்து செல்ல வேண்டும். நல்லது, தீயது என்பது குவியல் குவியலாக இருக்கும் வைக்கோலைப் போன்றது. நான் இரண்டிற்கும் நெருப்பு வைக்கிறேன்! அவை சாம்பலாக மாறாமல் இறை ஞானத்தை அடைய முடியாது."**

பாபா அலியிடம், **"நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?"**

"ஆம், நான் அப்படித்தான் நினைக்கிறேன்," என்று அவர் உண்மையாக பதிலளித்தார்.

**"என்னால் உங்களை நேசிக்க முடியாத போது, நீங்கள் எப்படி என்னை நேசிக்க முடியும்?"** பாபா கிண்டலாகக் கேட்டார்.

பாபா அவரிடம் கூறினார்: **"உலகம் முழுவதும் என் மீது கற்களை வீசினாலும், உங்கள் பாபா, பாபா (கடவுள்) என்று நீங்கள் உணர்ந்தால், உங்கள் நம்பிக்கையை நழுவ விடாமல் கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள். ஆனால் முழு உலகமும் எனது பாதங்களில் வணங்கினாலும், நீங்கள் பாபா கடவுள் என உணரவில்லை என்றால், உங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருங்கள்."**

இந்த சந்திப்பிற்குப் பின்னர், அலி, பாபாவுடன் நெருக்கமாகிவிட்டார், படிப்படியாக அவருடைய சந்தேகங்கள் அனைத்தும் மறைந்தன.

இதற்கிடையில் மேற்கத்திய அன்பர்கள், மெஹர் பாபாவின் வட்ட அமைப்பைப் பற்றி தெளிவுபடுத்த வேண்டி, பல கடிதங்களை அனுப்பிக் கொண்டிருந்தனர்; எனவே, 1955 ஏப்ரல் 20 முதல், பல நாட்கள், பாபா இந்த சொற்பொழிவை வழங்கினார்; அதை மணி தட்டச்சு செய்து, அந்த மாத இறுதியில் மேற்கு நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்:

**உண்மைப்பொருளான இறை உலகில், உண்மையில், 'முழுமையான ஒருமைத்தன்மை' நிலவுகிறது. இடம், காலம் இரண்டும் மாயையே. அவை கடவுளின் எல்லையற்ற தன்மையின் பிரதிபலிப்பின் விளைவு மட்டுமே. மனிதன் உண்மைப்பொருளை உணரும் போது** (இறை உணர்வை அடையும் போது), **அவனை உண்மைப்பொருளிலிருந்து விலக்கிய பிரதிபலிப்பு மறைந்து, கடவுளின் முழுமையான ஒருமைத்தன்மையை அவன் அனுபவிக்கிறான். அத்தகைய பரிபூரண மனிதர், தனது வாழ்க்கையை மாயையில் தொடர்ந்து வாழும்போது, அவர் பூமியில் 'மனித-கடவுள்'** (PERFECT MASTER) **அல்லது 'சத்குரு'வின் வாழ்க்கையை வாழ்கிறார். முழுநிறை உண்மைப்பொருளின் நிலையான அனுபவத்துடன், அவர் முழுப் பிரபஞ்சத்தின் மையமாக, அச்சாணியாகப் பணிபுரிகிறார். பிரபஞ்சத்தின் ஒவ்வொரு புள்ளியும் அதன் கருவாக மாயையில் நிலைத்திருக்கும் பரிபூரண குருநாதரிடமிருந்து சம தொலைவில் உள்ளது.**

பரிபூரண குருநாதர் (சத்குரு) பிரபஞ்சத்தின் புற எல்லைப் பகுதிக்கு மையமாக மாயையில் இருந்தபோதிலும், முழுப் பிரபஞ்சத்தின் மீதும் தமது ஆதிக்கத்தை ஒரே மாதிரியாக வியாபிக்கச் செய்தாலும், அவரது வாழ்நாளில், அவர் தமது தனித்துவத்தில் நேரடியாக ஆர்வமுள்ள 12 நபர்களை, அவரைச் சுற்றி ஒன்றுதிரட்டுகிறார். இந்த நபர்கள், கடந்த காலத்தில், பரிணாம வளர்ச்சியின் காலத்திலிருந்தே, அவருடன் கொண்டிருந்த நிலையான மற்றும் நெருங்கிய தொடர்பின் மூலம், அவர்களின் கடந்தகால நெருங்கிய தோழர் ஒருவர் பரிபூரண குருநாதராக (சத்குருவாக) மாறும் இந்தத் தருணத்தில், மிகப்பெரிய பலனை அடையப் பெறுகிறார்கள்.

அத்தகைய 12 ஆண் உறுப்பினர்களின் குழு ஒரு சத்குருவின் 'வட்டம்' என்று அழைக்கப்படுகிறது. இருப்பினும், 12 ஆண் உறுப்பினர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவைத் தவிர, ஒரு சத்குருவின் வட்டத்தை, அதன் அனைத்து அம்சங்களிலும் முழுமையாக்க, இரண்டு பெண் உறுப்பினர்களின் இணைப்பையும் கொண்டுள்ளது. இந்த இரண்டு பெண் உறுப்பினர்களும் தங்கள் வட்டம் சம்பந்தமான நிலைப்பாட்டிற்கு, சத்குருவுடனான அவர்களின் கடந்தகால தொடர்பைக் காரணமாகப் பார்க்கின்றனர்.

சத்குருவின் தொடர்பில் இருக்கும் இந்த 14 நெருங்கியவர்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிலர், அவருடைய வாழ்நாளில் அல்லது அதற்குப் பின்பு, சில சந்தர்ப்பங்களில், ஒன்று அல்லது சில பிறவிகளுக்குப் பின்னர் இறை-நிலையை எய்துவர்; இருப்பினும், சத்குரு தனது வாழ்நாளில் வட்டத்தை நிறுவுவதன் மூலம், தமது கடமைகளை நிறைவேற்றுகிறார்; அவருடைய 12 சீடர்களை உள்ளடக்கிய வட்டத்தில், அவரது வாழ்நாளில், ஒருவருக்கேனும், அதன் முழுமையோடு இறை உணர்வை வழங்குவதே அவர் அருளும் மிகப் பெரிய நன்மையாகும்.

அவதார புருஷர் விஷயத்தில், இது வித்தியாசமானது. அவருக்கு மொத்தம் பத்து வட்டங்கள் உள்ளன. அவதார புருஷரின் முதல் அல்லது உள் வட்டம், இரண்டு பெண் உறுப்பினர்களின் துணையுடன் 12 ஆண்களை உள்ளடக்கியது; எஞ்சிய ஒன்பது வெளி வட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்களும், பெண்களும் இணைந்து 12 நபர்களைக் கொண்டுள்ளது. இவ்வாறு, அவதார புருஷரின் பத்து வட்டங்களில் மொத்தம் 120 நபர்கள் உள்ளனர், மேலும் உள் வட்டத்தின் இரண்டு பெண்மணிகளையும் சேர்த்து, மொத்தம் 122 உறுப்பினர்கள்.

ஒன்பது வெளி வட்டங்களில் உள்ள 108 உறுப்பினர்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிலர், அவதார புருஷர் பூமியில் வாழும் காலத்தில் அல்லது அதற்குப் பின்னர் இறை-நிலையை எய்துவர்; மேலும் சிலர் அவர்களின் அடுத்த பிறவியில் அல்லது இன்னும் சில பிறவிகளுக்குப் பின்னர் இறையுணர்வை எய்துவர்.

சத்குருவின் வட்டத்தைப் போலவே, அவதார புருஷரின் உள் வட்டம் 12 ஆண்களையும், இரண்டு பெண் துணை உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. சத்குருவின் வட்டத்திற்கும் அவதார புருஷரின் உள் வட்டத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவெனில், சத்குரு, பரிணாம வளர்ச்சி நிலை தொடங்கிய காலம் முதல் அவருடன், நெருக்கமாக இணைந்திருந்தவர்களைக் கொண்டு தனது வட்டத்தை நிறுவுகிறார்; ஆனால் அவதார புருஷர், தனது தொடர்ச்சியான வருகைகளில், பரிணாமம், மறுபிறவி அல்லது உட்சுழற்சி செயல்முறையை கடந்து செல்ல வேண்டியதில்லை, எனவே ஒவ்வொரு வருகை காலத்திலும் தனது உள் வட்டத்தைப் புதிதாக நிறுவுவதற்கான அதே இணைப்புகளைக் கொண்டிருக்கவில்லை.

சுருக்கமாக, சத்குரு தனது வட்டத்தை நிறுவும் அதே வேளையில், அவதார புருஷர் அவரது உள் வட்டத்துடன் நேரடியாக இணைந்துள்ளார், இது அவரது அனைத்து வருகை காலத்திலும் எப்பொழுதும் (செயற்பாடு மற்றும் பொறுப்பு வகிக்கும் பாத்திரத்தைப் பொறுத்த வரை) ஒரே மாதிரியாக இருக்கும். பூமியில் அவர் இறங்கி வரும் தருணத்தில், அவதார புருஷர், அவரது உள் வட்டத்தின் உறுப்பினர்களை அவருடன் அழைத்து வருகிறார்.

அவதார புருஷருடான உள் வட்டத்தின் தொடர்பை, ஒருவர் தனது சொந்த உடலின் 14 பாகங்களுடன் நேரடியாக இணைத்துக் கொள்ளும் ஒரு மனிதனுடன் ஒப்பிடலாம் - இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு மூக்குத் துவாரங்கள், ஒரு வாய், இரண்டு கைகள், இரண்டு கால்கள், மற்றும் உடற்பகுதியின் தண்டு; இவற்றுடன், வெளிப்புற பிறப்புறுப்புகள் மற்றும் ஆசனவாய் ஆகியவை உடலின் துணை இணைப்பாகச் செயல்படுகின்றன. ஒரு மனிதன் பிறந்ததும், அவனது உடலின் இந்த 14 பாகங்களை நேரடியாகப் பயன்படுத்துகிறான்; இந்தப் பாகங்கள், அவனது கட்டளைகளுக்குத் தனித்தனியாகவும் இணைந்தும் இணங்கவும், இயங்கவும் செய்கின்றன.

இதேபோல, பூமியில் அவதார புருஷரின் வருகையுடன், அதே 12 (வகையான) தனிநபர்கள் மற்றும் அதே இரண்டு தனித்துவமான பெண் துணை நபர்களும், அவரது உள்வட்டத்தில் அவதார புருஷரின் கட்டளைகளின்படி தனித்தனியாகவும், குழுவாகவும் செயல்படத் தொடங்குகின்றனர்.

பூமியில் அவதார புருஷரின் ஒவ்வொரு வருகை காலத்திலும், உள்வட்டத்தைச் சேர்ந்த 12 ஆண்களும், இரண்டு பெண்களின் துணையும், அவதார புருஷரின் ஆளுமையைச் சுற்றி ஒன்று சேர்கின்றன; அதே 14 வகையான தனித்துவங்கள், வெவ்வேறு ஆளுமைகளின் வடிவத்தில், பூமியில் அவதார புருஷர் வெளிப்பட்டு, அவரது பணியைத் தொடங்கும் வேளையில், எப்பொழுதும் அந்தந்த ஆளுமைகளையும், அலுவலகங்களையும் ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். மேலும், அவதார புருஷரின் ஆயுட்காலத்தின் போதும் அதற்குப் பின்னரும், அவருடைய கடந்த

வருகைகளின் போது, உள்வட்டத்தின் அதே அலுவலகங்களில் இருந்த மற்றும் செயல்பட்ட அவர்களின் முன்னோடிகளைப் போலவே தனித்தனியாகவும் கூட்டாகவும் செயல்படுகின்றனர்.

எனவே, கிறிஸ்துவாக மறுபடியும் பூமியில் வரும் வேளையில், பீட்டர், யூதாஸ் மற்றும் அவருடைய அப்போஸ்தலர்கள் அனைவரும் வருகிறார்கள் என்று கூறுவது தவறாகாது. ஆனால், அதே பீட்டர் அல்லது அதே யூதாஸ் மீண்டும் மீண்டும் மறுபிறவி எடுக்கிறார் என்று ஒருபோதும் இதை அர்த்தப்படுத்த முடியாது. இவர்கள் ஒருபோதும் மறுபடியும் பிறவி எடுக்க முடியாது, ஏனெனில் அவதார புருஷரின் உள் வட்டத்தின் 12 தனிப்பட்ட ஆளுமைகள் ஒவ்வோர் அவதார காலத்திலும் அல்லது அவதார புருஷரின் ஆயுட்காலத்தில் அல்லது அதற்குப் பின்னர் இறை-உணர்வை அடைகிறார்கள்.

ஒரு முறை இறை-உணர்வை அடைந்த பிறகு, மறுபிறவி என்பது சாத்தியமற்றது. இதன் ஒரே விதிவிலக்கு அவதார புருஷர் மட்டுமே, மனிதகுலத்தை மீட்டெடுக்க மீண்டும் மீண்டும் அவதரிக்கிறார்.

எனவே மறுபிறவி எடுப்பது உள் வட்டத்தின் அதே தனிப்பட்ட ஆளுமைகள் (ஆத்மாக்கள்) அல்ல; அவதார புருஷரின் ஒவ்வொரு வருகை காலத்தின் போதும் அவர்களின் குறிப்பிட்ட அலுவலகங்களின் தனித்தன்மைகள் மட்டுமே வருகின்றன.

ஏனெனில், அவதார புருஷரின் அனைத்து வருகை காலங்களிலும், உள்வட்டத்தில் உள்ள 12 ஆண்களும் இரண்டு பெண்களும், ஒவ்வொருவரும் சரியாக ஒரே அலுவலகத்தில் அதே முறையில் செயல்படுகின்றனர்; அதனால்தான் அவதார புருஷர் எப்பொழுதும் (எல்லா காலகட்டத்திலும்) அதே வட்டத்தை தன்னுடன் கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

அவதார புருஷர் பூமியில் இறங்கி வரும் வேளையில், அவரை மூடி மறைத்திருக்கும் வித்யானி (VIDNYANI) என்ற முகத்திரையை, அப்போது வாழும், ஐந்து அக்கால சத்குருக்கள் கிழித்தெறியும் அந்தத் தருணத்தில், அவதார புருஷர் தனது அவதார இறைத்தன்மையை உணர்கிறார்; அதே வேளையில் 12 ஆண்களும், இரண்டு துணை உறுப்பினர்களான பெண்களும் தானாகவே அவதார புருஷரின் ஆளுமையை ஆக்கிரமித்து, உள் வட்டத்தில் தத்தமது நிலையில், யுகத்தின் அவதார புருஷரின் கட்டளைகளின்படி வழக்கம் போல செயல்பட தொடங்குகின்றனர்.

உள் வட்டம் மற்றும் அதன் செயல்பாடு குறித்து அவதார புருஷரின் நிலையை, தூங்கும் மனிதனுடன் ஒப்பிடலாம். ஒரு மனிதனை, ஏதோ ஒரு வெளிப்புற தூண்டுதல் மூலமாக விழித்தெழச் செய்ததும், அவன் தன் உடலின் 14 பாகங்களும், முன்பு குறிப்பிட்டபடி, அவன் விரும்பினால், அவற்றின் தனித்தனி பாத்திரங்களில், செயல்படத் தயாராக இருப்பதைத் தன்னிச்சையாகக் கண்டுகொள்கிறான். அதேபோல், அந்தக் காலத்தின் ஐந்து சத்குருக்களில் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் மூலம் அவதார

புருஷர் தமது அவதார இறைத்தன்மையை உணரச் செய்தவுடன், உள் வட்டத்தில் உள்ள 14 ஆளுமைகள் தத்தமது கடமைகளைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் அவர் உணர்கிறார்.

அவதார புருஷரின் ஒவ்வொரு வருகை காலத்திலும் இந்த 14 குறிப்பிட்ட ஆளுமைகள் மட்டும் ஏன் இத்தகைய பொறுப்புகளை வகிக்கிறார்கள் என்பதை விளக்க பல விரிவுரைகள் தேவைப்படும். 14 உறுப்பினர்களாக யார் இருக்க முடியும், அவதார புருஷரின் உள் வட்டத்தில் அவர்கள் எவ்வாறு இணைக்கப்படுகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கு மேலும் அதிகமான விளக்கங்கள் தேவைப்படும்.

இந்த 14 குறிப்பிட்ட ஆளுமைகள் ஒவ்வொருவரும், உள்வட்டத்தின் அலுவலகம் மற்றும் செயல்பாட்டை ஆக்கிரமிக்கும் போது, அவதார புருஷரின் முந்தைய வருகைகளில் அவரது முன்னோடியின் தனித்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும், அதே வேளையில் எல்லாவற்றிலும் சரிசமமாக ஒத்திருக்க வேண்டும் என்று கூறுவது போதுமானது. உதாரணமாக, இயேசு கிறிஸ்துவின் உள் வட்டத்தின் அலுவலகங்களில் ஒன்று பீட்டரால் ஆக்கிரமிக்கப்பட்டது. கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் போது, இந்த குறிப்பிட்ட அலுவலகம் வேறொரு பீட்டரால் ஆக்கிரமிக்கப்பட வேண்டும், அவர் 'ஏ' என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம், ஆனால் பீட்டரின் அதே குணம், இதயம் மற்றும் பிற குணாதிசயங்களைக் கொண்டவராக இருந்திருக்க வேண்டும். கிறிஸ்துவின் காலத்தில் உள் வட்டத்தைச் சேர்ந்த யூதாஸ், ஜான், ஜேம்ஸ் மற்றும் பலர் வகித்த பதவிகளுக்கும் இது பொருந்தும்.

அவதார புருஷரின் உள்வட்டத்தில் அடங்கிய 14 உறுப்பினர்களும், அதே அவதார காலத்தில் அவதார புருஷரின் அருளால் கடவுளை உணர்கிறார்கள், இது பூமியில் அவதார புருஷர் தோன்றிய அடுத்த 100 ஆண்டுகளில் நிகழும். அவதார புருஷரின் வெளி வட்டங்களைப் பொறுத்தவரை, ஒன்பது வட்டங்களில் உள்ள 108 நபர்களில் எவரும் உள் வட்டத்தில் உள்ளவர்களைப் போன்ற எந்தப் பதவியையும் வகிக்கவில்லை; மேலும் இந்த 108 நபர்கள் அனைவரும் அவதார புருஷரின் அருளால் இறை-உணர்வை அடைகிறார்கள், ஆனால் அவதார காலகட்டத்தில் இது நிகழும் என்ற கட்டாயம் இல்லை.

வெளிவட்டங்களின் இந்த 108 நபர்களும் தங்களுக்கு முன்னால் இருக்கும் வட்டத்து உறுப்பினர்களுடனான கடந்தகால தொடர்புகளுக்கு ஏற்ப, ஒன்பது வட்டங்களில் தமக்குரிய தத்தமது இடங்களை ஆக்கிரமிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, 12 நபர்களின் இரண்டாவது வட்டத்து உறுப்பினர்கள், உள் வட்டத்திற்கு அடுத்தபடியாக, உள் வட்டத்தின் உறுப்பினர்களுடனான அவர்களின் கடந்தகால தொடர்புக்கு ஏற்ப, அவதார புருஷரைச் சுற்றி குழுவாக அமைந்துள்ளனர். இதேபோல, மூன்றாவது வட்டத்தின் 12 நபர்கள், இரண்டாவது வட்டத்திற்கு அடுத்தபடியாக,

**இரண்டாவது வட்டத்தின் உறுப்பினர்களுடனான அவர்களின் கடந்தகால தொடர்புகளின்படி, மீதமுள்ள ஏழு வட்டங்களுடனும் அவதார புருஷரைச் சுற்றி குழுவாக அமைகின்றனர்.**

**ஒவ்வொரு வட்டத்திலும் நிலைகொண்டிருக்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை பின்வருமாறு:**

1. **முதல் உள் வட்டம் - 12 ஆண்கள் மற்றும் இரண்டு பெண்களை உள்ளடக்கியது.**
2. **இரண்டாவது வெளி வட்டம் - எட்டு ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள்**
3. **மூன்றாவது வெளி வட்டம் - நான்கு ஆண்கள் மற்றும் எட்டு பெண்கள்**
4. **நான்காவது வெளி வட்டம் - எட்டு ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள்**
5. **ஐந்தாவது வெளி வட்டம் - நான்கு ஆண்கள் மற்றும் எட்டு பெண்கள்**
6. **ஆறாவது வெளி வட்டம் - எட்டு ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள்**
7. **எட்டாவது வெளி வட்டம் - எட்டு ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள்**
8. **ஒன்பதாவது வெளி வட்டம் - எட்டு ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள்**
9. **பத்தாவது வெளி வட்டம் - பத்து ஆண்கள் மற்றும் இரண்டு பெண்களை உள்ளடக்கியது.**

1955 ஏப்ரல் மாதத்தில், மெஹர் பாபா, ரோஸ்வுட் பங்களாவில் ஒரு சிறிய குழுவைக் கூட்டி, மூன்று மாதங்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் தமது எண்ணம் உட்பட, சில திட்டங்களை அறிவிக்கவும், விவாதிக்கவும் செய்தார். பாபாவின் மண்டலி மற்றும் நெருங்கிய அன்பர்களில், பாதிரி, காக்கா பாரியா, நரிமன், மெஹர்ஜி, மெஹர்வான் ஜெஸவாலா, ஆதி சீனியர், டாக்கே, பால் நாத்து, காடேக்கர், ஜால்பாய், பெஹராம் மற்றும் பலர் அழைக்கப்பட்டனர். நாக்பூரிலிருந்து டாக்டர் தேஷ்முக், டெஹ்ரா டூனிலிருந்து கிஷன் ஸிங், ஹமிர்பூரிலிருந்து கேஷவ் நிகம் போன்றவர்களுடன், இந்தியாவின் பல்வேறு மையங்களிலிருந்தும் சிலர் அழைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் ஏப்ரல் 23 மதியம் சத்தாராவிற்கு வந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் காக்கா பாரியா, கிருஷ்ணாஜியைக் குறித்து பாபாவிடம் கடுமையாகப் புகார் செய்தார்: "அவர் மெஹராஸாத்தில் இன்னும் இருக்க விரும்பினால், நான் அங்கிருந்து சென்றாக வேண்டும்!"

எனவே, பாபா, கிருஷ்ணாஜியை சத்தாராவில் வந்து தங்குமாறு அறிவுறுத்தினார். கிருஷ்ணாஜி இன்றும் செல்லப்பிள்ளையாகவே இருந்தார், மேலும் அவர் விரும்பியதெல்லாம் வழங்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, அவருக்கு விலையுயர்ந்த சோப்புகள், எண்ணெய்கள், சிறந்த தரமான உணவு, தேநீர், சுருட்டுகள், சிகரெட்டுகள் - அவருடைய மனம்போன போக்கில் போகும்

அளவுக்கு கிட்டத்தட்ட எதையும், விரும்பும் அனைத்தும் அவருக்கு வழங்கப்பட்டது. அவரது நடத்தை மிகவும் விசித்திரமானது; அவர் தன்னை ஒரு மேல்நிலை ஆத்மா, ஒரு துறவி என்று நினைத்தார். பாபா அவரை இந்த மாயையிலிருந்து விடுவிக்க விரும்பினார், எனவே அவர் கிருஷ்ணாஜிக்கு, இந்த அளவிற்குத் தோள் தட்டி, செல்லம் கொடுத்தார். பாவ் கல்சூரிக்கு மீண்டும் சேவை செய்யும் விரும்பத்தகாத 'பாக்கியம்' வந்து சேர்ந்தது.

1955 ஏப்ரல் 23 அன்று மாலை, குழுவுடன் பல விஷயங்களைப் பற்றி விவாதித்தபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**இயேசு, கிறிஸ்துவின் உணர்வு நிலையில் இருந்தார். அவர் யூதாஸில் இருப்பதையும், யூதாஸ், கிறிஸ்து அல்ல என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். அவரைக் காட்டிக்கொடுத்து, யூதாஸ் ஏமாற்றுவார் என்பதை இயேசு அறிந்திருந்தார், இருந்தும் அவரை விட்டு, விலகச் சொல்லவில்லை. அனைத்தையும் அறிந்திருந்தும், ஒன்றும் தெரியாதவர் போல நடந்துகொண்டார். அனைத்தும் அறிந்தவரின் இந்த தெய்வீகப் பாசாங்குத்தனம்தான் இறை நாடகம் (லீலை) செயல்படும் தத்துவநெறியாகும்.**"

இதற்கிடையில், பாபாவைப் பார்க்க டெஹ்ரா டூனைச் சேர்ந்த கே.எஸ். ராணா (K.S. RANA), தேவி பிரசாத் ஷர்மா (DEVI PRASAD SHARMA) இருவரும் வந்திருந்தனர். பாபா டெஹ்ரா டூனில் தங்கியிருந்தபோது, அவர்களால் பாபாவை தரிசனம் செய்ய முடியாததன் காரணமாக இப்போது 1,000 மைல்களுக்கு மேல் பயணம் மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் தனது மனைவியின் நகைகளை விற்று பயணச் செலவுகளைச் செய்த வேளையில், இரண்டாமவர் தனது சகோதரன், வேறு நோக்கத்திற்காக வழங்கிய பணத்தை, பயணச் செலவுக்காகப் பயன்படுத்தியதாகத் தெரியவந்தது. பாபா அவர்களை அன்புடன் சந்தித்தார், ஆனால், "**ஏன் இவ்வண்ணம் செலவு செய்து வந்தீர்கள்?**" என வினவினார்.

இருவரும் அமைதியாக இருக்கவே, பாபாவின் விருப்பத்திற்கிணங்க அவர்கள் திரும்பிச் செல்வதற்குத் தேவையான கட்டணம் ரூ.100 வழங்கப்பட்டது. அவர்கள் அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்கிய வேளையில் பாபா இவ்வாறு அறிவுரை வழங்கினார், "**எந்தவோர் இறை உணர்வை அடைந்த ஆன்மா வழங்கும் எதையும் - அது தங்கமாக இருந்தாலும் அல்லது தூசியாக இருந்தாலும், ஏற்றுக்கொள்ளத் தயங்காதீர்கள்.**" இருவரும் அந்தப் பணத்தை பாபாவின் பிரசாதமாக ஏற்றுக்கொண்டு, உணவு உண்டு, பின்பு திரும்பிச் சென்றனர்.

சிறிய குழுவுடனான கூட்டம் ரோஸ்வுட்டில் ஏப்ரல் 24 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணிக்குத் தொடங்கியது. மண்டலி உட்பட முப்பத்தாறு ஆண்கள் கலந்து கொண்டனர்; அவர்கள், தம்முடன் நெருங்கிய தொடர்பில் இருக்கும், அவரை நேசிக்கும், அவரது வழிமுறைகளைப் பின்பற்றும்

அனைவரையும் 'ஒட்டுமொத்தமாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக'க் கூறினார். பாபா, தமக்கு சற்று சளி இருப்பதாகத் தெரிவித்தார்.

பாபா இவ்வாறு கூறி, தொடங்கினார்: **"முதலில் நாம் ஜால் வில்லாவிற்குச் செல்வோம், அங்கு நான் ஏகாந்தவாசத்தில் அமர வேண்டும். இப்போது நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள், உங்கள் உலக விவகாரங்கள் மற்றும் உலகக் கடமைகள் - மனைவி, குழந்தைகள், வணிகம் போன்றவற்றை மறந்து விடுங்கள். கவனமாகக் கேளுங்கள், முடிந்தவரை நான் கூறுவதை உள்வாங்க முயற்சிக்கவும்; ஏனெனில், ஒருவேளை நீங்கள் அத்தகைய சந்தர்ப்பத்தை மீண்டும் கண்டுகொள்ள முடியாது!"**

பாபா தமது விரல்களால் அடையாளங்களை உருவாக்கி, எண்ணங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததை எரச் விளக்கினார். மண்டலியில் இதர உறுப்பினர்களும் பாபாவின் கை அடையாளங்களைப் 'படிக்க' முடிந்தது, மேலும் பாபா, எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தது போல பல மொழிகளில் பேசினார்.

பாபா, ஜால் வில்லாவிற்குக் குழுவுடன் நடந்து சென்று, மூன்று மாதங்களுக்கு ஏகாந்தவாசத்தில் பணிபுரியவிருக்கும் சிறிய அறையைக் காட்டிக் கூறினார், **"இங்கே நான் தூங்குவேன், ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் வேளையில் நான் பிரதான அறையை விட்டு வெளியே வரமாட்டேன். மே 1 முதல் ஜூலை 31 வரையிலான இந்த மூன்று மாதங்கள் எனக்கு நெருக்கடியான ஒன்று என்பதை நான் நன்கு அறிவேன் - குறிப்பாக என் உடல், செயலிழந்து போகலாம் அல்லது வீழ்ச்சியடையலாம். இவை அனைத்தும் நான் தாங்க வேண்டிய அழுத்தத்தைப் பொறுத்தது, அது போலவே, நான் மூன்று மாதங்கள் இங்கேயே இருக்க முடியும் என்று நினைக்கிறேன். ஆனால் என்னை எதுவும் பிணைக்காது - நான் எனது வேலைக்கு ஏற்றவாறு விஷயங்களை இயன்றவரை சரிசெய்ய வேண்டும். அடுத்த நாளே நான் வெளியே வந்து சுதந்திரமாக நடமாடலாம், இதைவிடப் பெரிய ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கலாம் அல்லது இடம் விட்டு இடம் பயணம் செய்யலாம்.**

**"நான் என்ன செய்தாலும், செய்யாவிட்டாலும், அனைத்து நடைமுறை நோக்கங்களுக்காகவும் நான் ஓய்வு பெற விரும்புகிறேன், மேலும் மூன்று மாத முழுக் காலத்திற்கும் அனைவரும் என்னைத் தனியாக விட்டுவிட வேண்டும் என்று விரும்புகிறேன்."**

பாபா அனைவரையும் ரோஸ்வுட்டுக்கு அழைத்துச் சென்று, அங்கு அவர்களின் உடல்நலம் மற்றும் முந்தைய இரவில் ஒவ்வொருவரும் எப்படி ஓய்வெடுத்தனர் என்பதை விசாரித்து, பின்னர் இவ்வாறு தெரிவித்தார்: **"இப்போது புத்துணர்ச்சியுடன் இருங்கள். நீண்ட முகத்துடன் அமர்ந்திருக்க வேண்டாம், ஆனால் தோற்றத்தில் மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும் இருக்க வேண்டும். நினைவில் கொள்ளுங்கள், கூட்டத்தின் போது கொட்டாவி விடாதீர்கள், இல்லையேல் வெளியேற்றப்படுவீர்கள்!"**

தூக்கம் வராமல் இருக்க, பாபா ஒவ்வொருவருக்கும் மாத்திரையை வழங்கி, "**கொட்டாவி விடாதீர்கள்! அரைத்தூக்கத்தில் இருப்பவர்கள் மண்டபத்தை விட்டு வெளியே செல்ல வேண்டியது வரும்**" என்று மீண்டும் வலியுறுத்தினார்.

உரையாடலின் போது, பாபா குறிப்பிட்டார், "**ஒவ்வொருவரும் தங்கள் சொந்த செயல்களை நியாயப்படுத்துவதையும், அது எவ்வளவுதான் முக்கியமற்றதாக இருந்தாலும், வானத்தையும் பூமியையும் நகர்த்தி, தான் சொன்னது அல்லது செய்தது சரி என்று நிலைநிறுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.**"

'**டெஹ்ரா டூனைச் சேர்ந்த நபர், தனது பயணச் செலவுகளை சமாளிக்க, மனைவியின் நகைகளை விற்றது நியாயமா?**' என்று பாபா கேட்டார், "**அவர் தனது சொந்த பொருட்களை விற்றிருக்க வேண்டும், ஏன் இவருக்காக ஏழைப் பெண்மணியை சிரமத்திற்குள்ளாக்க வேண்டும்?**"

பாபாவின், துணுக்கான கருத்துகளுக்கு பதிலளிக்கும் விதமாக, இந்து சமுதாயத்தில் கணவனின் உரிமைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. மன்னர் ஹரிச்சந்தர் மற்றும் துறவி மீராவின் நிகழ்வுகளை பாபா மேற்கோள் காட்டினார் - '**மன்னர் தனது மனைவியை விலை பேசினார், மீரா தனது கணவரைக் கைவிட்டார்.**'

ஒவ்வொரு நபரும் அவரவர் கருத்தை வெளிப்படுத்தினர், ஆனால் விவாதத்தைத் தொடர்வதற்கு பதிலாக, பாபா கூறினார்: "**நான் ஓய்வெடுக்க விரும்பும் போதெல்லாம், ஏதோ ஒன்று நடுவே வருகிறது. நேற்று மதியம் வரை, இன்றைய கூட்டத்திற்கான ஏற்பாடுகளில் நான் முழு முனைப்புடன் இருந்தேன். வேலையை முடித்துவிட்டு சதுரங்கம் விளையாடத் தொடங்கிய வேளையில், நரிமன், டாக்கே, தேஷ்முக் மற்றும் பலர் வந்தனர், நான் விளையாட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது; தொடர்ந்து நான் அவர்களுடன் உரையாடி, பின்பு கிரா∴ப்டனுக்குச் சென்றேன்; அங்கு நான் ஓய்வெடுக்க விரும்பினேன், ஆனால், சில நிமிடங்களில், டெஹ்ரா டூனிலிருந்து இரண்டு பேர் எனது தரிசனத்திற்காகக் காத்திருப்பதாக செய்தி வந்தது.**

"**இப்படி எப்போதும் நடப்பதுண்டு. நான் ஓய்வெடுக்க விரும்பும் போதெல்லாம், சில தொல்லைதரும் நிகழ்வுகள் ஏற்படுகின்றன. இது போன்ற தேவையற்ற நிகழ்வுகள் என் மனநிலையை கெடுக்கும் அதே வேளையில், அது எதிர்பாராத விதத்தில் மீட்டெடுக்கப்படுகிறது. நேற்று, நான் கிரா∴ப்டனிலிருந்து ரோஸ்வுட் வந்தபோது, எனக்கு பயங்கரமான தலைவலி இருந்தது. அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு கடிதத்தைப் படித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று மணி என்னிடம் கூறினார். எனக்கு அந்தக் கடிதம் மிகவும் பிடித்திருந்தது, எனது தலைவலியும் முற்றிலும் மறைந்தது.**"

சந்திப்பின் போது, பாபாவைக் குத்திக் கொலை செய்ய நினைப்பவர்களின் பிடியிலிருந்து அவரைக் காப்பாற்றுவதாக உறுதியளித்து,

இந்தியாவில் தங்குவதற்குத் தயாராக இருப்பதாக அமெரிக்க அன்பர் ஒருவர் எழுதிய கடிதத்தை, ஆதி ஜூனியர் வாசித்தார். பாபா சிரித்துக்கொண்டே கூறினார், “**என்னைப் பாதுகாக்க உலகில் ஒருவராவது இருக்கிறார்**!”

கடந்த வாரம், கராச்சியில் ஆதி - ரோடா துபாஷின் ஐந்து வயது மகன் ஹோமியின் தற்செயலான மரணம் குறித்து கூட்டத்திற்குத் தெரிவிக்குமாறு பாபா, எரச்சிடம் கேட்டுக்கொண்டார். 1952இல் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா பயணத்தை நிறைவு செய்து, பாபா, மண்டலியுடன் திரும்பிக் கொண்டிருந்தபோது, ரோடாவும் ஆதியும் கராச்சி விமான நிலையத்தில் தங்கள் இரண்டு மகன்களுடன் பாபாவை சந்தித்தனர். ரோடா, ஹோமியை பாபாவின் கைகளில் கொடுக்க விரும்பினார், ஆனால் பாபா அவரைத் தடுத்து, அதற்கு பதிலாக அவர்களின் எட்டு வயது மகன் மேர்வானை மடியில் வைத்தார். இதேபோல், 1954 செப்டம்பர் கூட்டத்திற்குப் பின்னர், ஆதியும் ரோடாவும் சத்தாராவில் பாபாவை சந்தித்தபோது, பாபா, ரோடாவிடம் மேர்வானைப் பற்றி கேட்டார், ஆனால் ஹோமியைக் குறிப்பிடவில்லை. ‘உங்கள் மகன்களில் ஒருவரை எனக்குக் கொடுங்கள் என்று நான் கேட்டால், நீங்கள் அதை விருப்பத்துடன் செய்வீர்களா’ என்று பாபா கேட்டதற்கு, ‘செய்வேன்’ என்று ரோடா பதிலளித்திருந்தார்.

1955 ஏப்ரல் 16 அன்று பிற்பகல் 3:30 மணியளவில் சிறுவன் ஹோமி அவர்களின் வீட்டின் முதல் மாடி ஜன்னலிலிருந்து கீழே விழுந்தார், மருத்துவமனையில் அனுமதித்த அரை மணி நேரத்திற்குள் அவர் சுயநினைவைத் திரும்பப் பெறாமல் உயிரைத் துறந்தார்.

ஒரு மாதத்திற்கு 24 மணிநேரமும் இடைவிடாது பாபாவின் பெயரை உச்சரிக்குமாறு பாபா தமது அன்பர்களுக்கு முன்பு கட்டளையிட்டிருந்தார். எனவே, பாபாவின் பெயரை இடைவிடாமல் திரும்பத் திரும்ப உச்சரிப்பதை கராச்சி அன்பர்கள் குழு ஏற்பாடு செய்தது. குழந்தை உயிரைத் துறந்த அந்த இக்கட்டான நேரத்திலும், ஆதி துபாஷ் அவரது முறையைத் தவறாமல் செய்தார். இதைத் தொடர்ந்து ரோடாவின் அடுத்த முறை வந்தபோதும், அவரும் அதைத் தொடர்ந்தார். குழுவில் ஒருவர், ரோடாவின் இடத்தில் அமர்ந்து, பாபாவின் நாமத்தை உச்சரிப்பதாகக் கூறி வற்புறுத்திய பின்னரே, அவர்கள் தங்கள் இளம் மகனின் இறுதிச் சடங்குகளில் பங்கெடுத்தனர். பாபா, ஹோமியை விரும்பி தம் வசம் அழைத்துக்கொண்டதாக நினைத்து தங்களைத் தாங்களே ஆறுதல் படுத்திக் கொண்டனர்.

அந்த நேரத்தில், பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பியிருந்தார்: “**சிறுவன் ஹோமி, என்னிடம் வந்து என்னுடன் இருக்கிறார்**.” ஹோமியின் சிறிய புகைப்படமும் பாபாவிற்கு அனுப்பப்பட்டது. பகல் நேரமாக இருந்தாலும், பாபா, ஒளிரும் விளக்கு ஒன்றை எடுத்துவரக் கூறி, புகைப்படத்தில் பிரகாசிக்கச் செய்தார்; பின்னர் அதை சட்டம் பொருத்தி வீட்டில் வைக்குமாறு அறிவுறுத்தி, துபாஷ் குடும்பத்தினருக்குத் திருப்பி அனுப்பி வைத்தார்.

எரச் நிகழ்வை விவரித்த பிறகு, பாபா விளக்கினார்:

**இது சாதாரண விஷயமல்ல! இதற்கு மிகவும் அன்பான இதயம் தேவை. இறை நாமத்தை இடைவிடாமல் உச்சரிக்கும் அனைவரும் அதை இவ்வளவு நேர்மையுடன் செய்தால், அது எனது பணிக்கு, பேருதவியாக இருக்கும். அவர்களின் இடத்தில், இறை நாமத்தை நான் இவ்வளவு நன்றாக நினைவில் வைத்திருப்பேனா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது!**

**நான் விரும்பியபடி, இரவும் பகலும் இடைவிடாமல் பங்கேற்பவர்கள், குறைந்தபட்சம் ஏப்ரல் இறுதி வரை அவ்வாறு செய்ய வேண்டும். முடிந்தால், ஜூலை இறுதி வரை அடுத்த மூன்று மாதங்களுக்கு அவற்றைத் தொடர விரும்புகிறேன்.**

**ஆனால், பிரார்த்தனைக்கு** (ஜபம்) **அதற்கான மதிப்பு எதுவும் இல்லை - அதாவது நீடித்த மதிப்பு என்ற அர்த்தத்தில் எந்த முக்கியத்துவமும் இல்லை. நான்கு விஷயங்கள் நீடித்த மதிப்புகளைக் கொண்டுள்ளன:**

- **முதன்மையானது ஒரு பரிபூரண குருநாதரின் தொடர்பில் இருப்பது.**
- **முக்கியமான இரண்டாவது** (விஷயம்) **கடவுளின் அன்பின் பரிசு. நீங்கள் ஒரு பரிபூரண குருநாதரின் தொடர்பில் வருவது, கடவுளிடமிருந்து அடையப் பெறும் அன்பை விட சிறந்தது! பரிபூரண குருநாதர் அல்லது அன்பின் பரிசு இல்லாத பட்சத்தில்,**
- **மூன்றாவது சிறந்த விஷயம், முழு மனதுடன் வழங்கும் தன்னலமற்ற சேவை. இதுவும் முடியாவிடில்,**
- **நான்காவதாக, உலகைத் துறந்து, உலகியல் சார்ந்த அனைத்திலிருந்தும் விலகி, பிரார்த்தனையில் நேரத்தைச் செலவிடுவது.**

**இந்த நான்கு விஷயங்களில் எதையும் உங்களால் செய்ய முடியாவிட்டால், பூஜை, ஜபம் போன்றவற்றைச் செய்யுங்கள். மாமிசம் கிடைக்காத வேளையில் எலும்பில் திருப்தி அடைய வேண்டும். ஒரு பரிபூரண குருநாதரின் தொடர்பில் நீங்கள் வரும்போது, அவருக்குக் கீழ்ப்படிவதே மிகச் சிறந்த விஷயம். ஒருவேளை உங்களில் ஒருவராவது நான் விரும்புவது போல் எனக்குக் கீழ்ப்படிவார்.**

சிறிது நேர இடைவேளைக்குப் பிறகு, காலை 10:00 மணிக்கு அனைவரும் மீண்டும் ஒன்றுதிரண்டனர். நிகழ்ச்சிகளைத் தொடர்வதற்கு முன்பு, சிது, பாபாவின் விருப்பத்திற்கிணங்க சில கஸல்களைப் பாடினார், அது அவரைப் பெரிதும் மகிழ்வித்தது.

கூட்டம் நிறைவடைந்த பிறகு, வெளியிடப்பட வேண்டிய சுற்றறிக்கை ஒன்றை பாபா ஏற்கனவே எடுத்துரைத்தார், ஆனால் அதை வாசிப்பதற்கு முன்னர், அவர் இவ்வாறு கூறினார்:

**நான் உங்களை அழைத்த வேளையில், நீங்கள் வந்திருப்பது உங்களுக்கு நல்லது; நான் அப்படிச் செய்தது எனக்கு நல்லதும் அல்லாததும்**

ஆகும். நல்லதல்ல என்று ஏன் சொல்கிறேன்? நான் ஒரு சிறு குழுவிற்கு மட்டும் அழைப்பு விடுத்துள்ளேன் என்பதை மக்கள் அறிந்தவுடன், நான் அவ்வாறு செய்யக்கூடாது என்று நான் அறிவித்திருந்தும், நான் கூட்டத்திற்கு அழைக்காதவர்களிடம் நீங்கள் கூறும்போது, ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக வருத்தப்பட வாய்ப்புள்ளது. இன்று நீங்கள் பார்த்த, கேட்ட அனைத்தையும் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

உள்ளடக்கத்தில் சிறியதாக இருந்தாலும் இந்த சுற்றறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இது வெவ்வேறு மொழிகளில் அச்சிடப்பட்டு அனைத்து இடங்களிலும் விநியோகிக்கப்பட வேண்டும், ஏனெனில் நான் அதில் கூறியிருப்பது இதயத்திலிருந்து வருவது. எனவே அதன் உள்ளடக்கங்களை பரப்புபவர்கள் மீது அதிக பொறுப்பு உள்ளது.

செப்டம்பர் மாதம் மெஹராபாத்தில் நடந்த கூட்டத்தில் நான் இனி எவரையும் பார்க்க மாட்டேன் என்று கூறியிருந்தேன். ஆனால் இப்போது நான் உங்களுக்கு அழைப்பு விடுத்தேன்; நீங்கள் எங்கு, ஏன் செல்கிறீர்கள் என்பதை எவருக்கும் தெரிவிக்காமல் வருமாறு கேட்டுக் கொண்டேன். சில பகுதிகள் மற்றும் மையங்கள், உங்களில் ஒருவருக்கு மேற்பட்ட நபர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அதே வேளையில், சில மையங்கள் ஒரு நபரால் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன, இன்னும் பலவற்றில் எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை. முதலில், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்க நினைத்தேன், ஆனால் தவிர்க்கக்கூடிய மற்றும் தவிர்க்க முடியாத பல காரணங்களால் அது நடைமுறைக்கு சாத்தியமாக இல்லை. அதற்கு மாறாக, அறிவுறுத்தல்களை, சுற்றறிக்கைகள் மூலமாக தெரிவிப்பது மட்டும் போதாது. நீங்கள் எனது செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும், மேலும் எனக்கு நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் எனது வார்த்தைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும் - உங்கள் பிராந்திய மொழிகளில் அச்சிடப்பட்ட மொழிபெயர்ப்புகள் மூலம் எனது அறிவுறுத்தல்களுக்கு பரந்த அளவில் மக்களின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.

என்னுடன் வாழ்பவர்கள், என்னை விட்டு விலகியிருந்தாலும் எனக்காக வாழ்பவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட குறைபாடுகளும் பலவீனங்களும் உண்டு; ஆனால் அவர்களுக்கு நிகரானவர்கள் எவரும் இல்லை என்பது எனக்குத் தெரியும்... அவர்கள் அதை தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம். இத்தனை வருடங்களாக அவர்கள் என்னைப் பின்பற்றி வருகிறார்கள். அவர்கள் இவ்வளவு அற்புதமான விதத்தில் தாங்கிக் கொண்டதை, நான் அவர்கள் இடத்தில் இருந்திருந்தால், என்னால் தாங்க முடியாமல் போயிருக்கலாம் என்று சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமுமில்லை.

அவர்கள் என்னுடன் அட்டை போல் ஒட்டிக் கொண்டிருக்க உதவுவது நான்தான் என்பதும் நிதர்சனம். என் மீதான அவர்களின் பிடிப்பை தாங்களாகவே தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நேரம் நெருங்கிக்

**கொண்டிருக்கிறது. எவரும் என்னிடமிருந்து பிரிந்து விடக்கூடாது என்று நான் விரும்புகிறேன், ஆனால் இப்போது ஒவ்வொருவரும் என்னை விட்டுச் செல்வதானால், நான் கவலைப்பட மாட்டேன். என்னுடனும், எனக்கு அருகாமையிலும் இருக்க விரும்புவோருக்கு, நான் ஓய்வு பெறும் காலத்திற்குப் பின்னர், அதிக கஷ்டங்களும், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான எதுவும் இல்லாத சூழ்நிலைகளும் உருவாக வாய்ப்புள்ளது. இதுகாறும் வாழ்ந்த கீழ்ப்படிதலின் வாழ்க்கை போதுமானதாக இருப்பதாக கருதுபவர்கள், மற்றும் மே அல்லது ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் தங்கள் சொந்த வாழ்க்கையை வாழ விரும்புபவர்கள் மீது நான் அதிருப்தி அடைய மாட்டேன். நான் இப்போது அந்த சுதந்திரத்தை அனைவருக்கும் வழங்குகிறேன்; நீங்கள் இப்போது என்னை விட்டு வெளியேற முடிவு செய்தால், நீங்கள் அதை மரியாதையுடன் செய்கிறீர்கள், இதுவரை நீங்கள் செய்த அனைத்தும் உங்கள் வரவுக் கணக்கில் தொடர்ந்து இருந்து வரும். ஆனால், இப்போது என்னுடன் இருப்பதாகத் தீர்வு செய்து, பின்னர் என்னை நீங்கள் கைவிடுவதானால், நீங்கள் கண்டனத்திற்குரியவர் (துரோகி) என்ற பட்டத்தைப் பெறுவீர்கள்; இதனால் உங்கள் கடந்தகால சேவை மற்றும் எனக்குக் கீழ்ப்படிந்ததால் உருவான பலன் அனைத்தையும் இழந்து விடுவீர்கள். என்னுடன் இருக்க முடிவு செய்பவர்கள் எதிர்காலத்தில் சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தாலும், ஒன்று மட்டும் நிச்சயம்: அவர்கள் தனியாகத் துன்பப்பட மாட்டார்கள் - நானும் அவர்களுடன் சமமாக அவர்களின் துன்பங்களையும் துயரங்களையும் பகிர்ந்து கொள்கிறேன்.**

**இப்போது வாக்குறுதிகளைப் பற்றி ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். வாக்குறுதிகளை வழங்குவதற்கும் மீறுவதற்கும் பாபா எப்போதும் சுதந்திரமாக இருக்கிறார். ஆனால் ஒரு விதத்தில், தனித்தனியாகவும் குழுவாகவும் பொருந்தக்கூடிய இந்த வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 25ஐ வெளியிடுவதன் மூலம் அவர் தன்னைத்தானே பிணைத்துக் கொள்கிறார்.**

அப்போது பாபா இந்த சம்பவத்தை விவரித்தார்: **அவர் பூனாவில் பள்ளி மாணவனாக இருந்தபோது, தனது வீட்டை ஒட்டிய மதுபானக்கடை ஒன்றில், ஒரு குறிப்பிட்ட நபரைப் பார்க்க நேர்ந்தது. அந்த மனிதர் தினமும் வந்து, மது அருந்துவது வழக்கம். குடிபோதையில், அவர் இரவு வெகுநேரம் வரை அமைதியாக ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த வேளையில், அவருடைய மனைவி அங்கு வந்து அழுது புலப்பி, அவரிடம் மது அருந்துவதை நிறுத்துமாறு கெஞ்சினார்; அந்த மனிதரும் மறுநாள் மது அருந்தப் போவதில்லை என்று உறுதியளித்தார். ஒவ்வொரு நாளும் அந்தப் பழக்கத்தைக் கைவிடுவதாக அவர் உண்மையாக உறுதியளித்தாலும், அடுத்த நாள் வரும் வேளையில் அவர் அதைச் செய்ய முற்றிலும் உதவியற்றவராக இருந்தார்.**

தொடர்ந்து பாபா கூறினார்:

எனது வாக்குறுதிகளைக் குறித்து இப்போது எப்படி விளக்குவது? அவற்றை விளக்குவதில் பாபா உதவியற்றவராக இருக்கிறார்! ஏன்? பாபா எதைச் செய்தாலும் அல்லது விளக்கினாலும் அது (மானிடர்களின்) புரிதலுக்கு அப்பாற்பட்டது - என்னைப் புரிந்து கொள்ளாதது ஒருவரின் தவறல்ல. பரிபூரணமான ஒருவரை நீங்கள் எவ்வாறு புரிந்துகொள்வது?

இயேசு மற்றும் முஹமது காலத்திலும் இதுபோன்ற சில சம்பவங்கள் நடந்துள்ளன. இயேசு சிலுவையில் அறையப்பட்டார், முஹமது கல்லால் தாக்கப்பட்டபோது, (மெக்காவை நோக்கி) தப்பி ஓட வேண்டியிருந்தது! பரிபூரண குருநாதர்களின் இதுபோன்ற செயல்கள் மக்களால் புரிந்து கொள்ளப்படுவதில்லை.

நான் வாக்குறுதிகளை வழங்கி, அவற்றை மீறுவது தொடர்ந்து நடந்து வருகிறது. சில மண்டலி உறுப்பினர்கள், நான் வாக்குறுதிகள் வழங்குவதை நிறுத்தினால், மிகவும் போற்றிப் புகழப்படுவேன் என்று நினைக்கிறார்கள். என்னுடன் மிகவும் நெருக்கமானவர்கள் இப்படி உணர்ந்தால், எப்போதேனும் எனது சகவாசத்தை அடையப் பெறும் அந்த அன்பர்கள் என்ன நினைப்பார்கள். ஆனால் சில நேரங்களில் நான் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் நினைக்கிறேன். ஆனால் அதுவும் அப்படித்தான்!

எனது பிரகடனம், விளக்கம், உறுதிப்பாடு, தீர்மானம் இவை அனைத்தும் இருந்தபோதிலும், நேற்று இரவு எனக்கு ஒரு சிந்தனை உதயமானது: “பிரகடனத்தை வழங்கிய பின்பு, விளக்கம், உறுதிப்பாடு, தீர்மானம் போன்றவற்றை வெளியிட வேண்டிய தேவை என்ன?” அந்தக் கேள்விக்கான பதில் எனக்குக் கிடைத்தது.

இப்போது புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். பிரகடனம் வழங்கப்பட்டபோது, கடைசி மூன்றும் அதன் வரிசையில் ஒன்றன் பின் ஒன்றாக நடந்தாக வேண்டும். பிரகடனத்திலேயே கட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த முழு செயல்முறையையும் முழுமையாக வளர்ந்த ஒரு மா மரத்திற்கு ஒப்பிடலாம். பிரகடனத்தை, நிலத்திலிருந்து சற்று மேலே முளைத்து வரும் மரத்தின் துளிர்ப்புடன் ஒப்பிடலாம். வளரும் தண்டு மற்றும் கிளைகளை, விளக்கத்துடனும், அதில் மலரும் மலரை, உறுதிப்பாட்டுடனும், மற்றும் மாம்பழத்தை, தீர்மானத்துடனும் ஒப்பிடலாம்.

உவமையை வழங்க வேண்டும் என்றால், ஒரு நாள் என்பது நான்கு பாகங்களால் ஆனது. ஒவ்வொரு பாகமும் மூன்று மணி நேரமாக வகுக்கப்படுகிறது. நாள், முதல் பாகத்துடன் தொடங்குகிறது. கடைசி பாகம், ஒரு நாளை நிறைவு செய்ய, முந்தைய மூன்று பாகங்களைப் பின்தொடர்ந்து வருகிறது. அதேபோல், ஒரு மனிதனின் வாழ்க்கை குழந்தை பருவம், இளமை, நடுத்தர வயது அல்லது முதிர்ச்சி மற்றும் முதுமைக் காலம் என நான்கு முக்கிய நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. படைப்பின் ஒவ்வொரு கட்டத்திலும், இந்த நிலைகளை நீங்கள் காணலாம்.

நாம் பிரபஞ்சத்தின் மூல முதலான தொடக்கத்தைப் பார்த்தால், நாம் அதையே காணலாம். தொடக்கமற்ற தொடக்கத்தில், அதாவது, அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலையில், கடவுள் உணர்வற்றவராகவும், எல்லையற்றவராகவும் இருந்தார். கடவுள் கொண்டிருந்த 'இனம் புரியாத ஆர்வத்தை' (அதாவது தற்போக்கு எண்ணம்) பிரகடனத்துடன் ஒப்பிடலாம். ஒரு முறை இந்த 'இனம் புரியாத ஆர்வம்' வந்ததும் அதைத் தடுக்க முடியாத சூழ்நிலையில், பின்னர் படைப்பு, பரிணாம வளர்ச்சி, உட்சுழற்சி என்ற அடுத்தடுத்த மூன்று கட்டங்கள் உருவாயின. கடவுள் எல்லையற்ற ஞானத்தையும் கொண்டிருப்பதால் விரைவில் “நான் யார்?” என்ற கேள்வி எழவே, “நான் கடவுள்” என்ற பதிலும் கிடைத்தது. ஆனால் அதே நேரத்தில், இடைப்பட்ட நிலைகள் இன்றியமையா தேவைகளாக இருப்பதால், படைப்பின் மூலமாக, பதில் தெளிவுபடுத்தப்பட்டது (விளக்கம்); பரிணாம வளர்ச்சியின் மூலம் பதில் உறுதிப்படுத்தப்பட்டது (உறுதிப்பாடு); மேலும் உட்சுழற்சி மூலமாக அவர் கடவுள் என்று முடிவு (தீர்மானம்) செய்யப்பட்டது!

இவை அனைத்தையும் விளக்குவது மிகவும் கடினம், ஏனெனில் இவை அறிவுக்கு அப்பாற்பட்டவை. ஒரு பாரசீகக் கவிஞர் கூறினார்: “ஆன்மீகத்தின் வாயிலில் நீங்கள் அடியெடுத்து வைத்ததும், உங்களுக்குக் கேட்க வேறுவிதமான காதுகளும், காண வேறுவிதமான கண்களும் தேவை.”

துக்காராம் மேலும் கூறினார்: “குருநாதர்களின் வழிகளும் முறைகளும் உலக வழிகளுக்கு முரணாக நிற்கின்றன.”

இந்த விளக்கங்கள் மூலம் நான் எனது செயல்களை நியாயப்படுத்த முயற்சிக்கிறேன் என்று நினைக்க வேண்டாம். ஃபாமோஸா (தைவான்) பிரச்சினை பேரழிவுக்கு அச்சுறுத்தலாக இல்லையா? நேரு கூட தனது உரையில் பாதி உலகம் அழிந்துவிடும் என்று கூறினார். நேரக் காரணியைத் தவிர்த்து, நான் சொன்னது அனைத்தும் நிறைவேறும். நான் எதைச் சொன்னேனோ, அதைக் கடவுள் என்னைச் சொல்ல வைத்துள்ளார்.

இப்போது நான் கூறுவதை மிகவும் கவனமாகக் கேளுங்கள். 1955 மே முதல் ஜூலை வரையிலான மூன்று மாதங்களுக்கு, உங்கள் மனைவி, குழந்தைகள், பணம் போன்றவற்றைப் பற்றி அதிகம் சிந்திக்காதீர்கள். அவதார புருஷர் தமது உடலைக் கைவிட வேண்டியிருக்கும் வேளையில் உங்களுக்கு இதுபோன்ற எண்ணங்கள் இருக்கலாமா?

செயல் நோக்குடன் சேவை புரியும் வீரர்கள் பூமியின் ஒரு சிறிய பாகத்தை சொந்தமாக்க, முழு விருப்பத்துடன் தங்கள் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறார்கள். அவதார புருஷருக்காக உங்கள் உயிரைத் தியாகம் செய்தால் அது மிகப்பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமா? அத்தகைய தயார்நிலையை நீங்கள் கொண்டிருக்கத் தவறினால், கூட்டத்தில் கலந்துகொள்ள நீங்கள் இங்கு வருவது ஓர் உல்லாசப் பயணத்தைத் தவிர வேறொன்றுமில்லை!

இப்போது, மேலும் ஒன்றைக் கூறுகிறேன். அனைத்து விளக்கங்களுக்கும், கதை கட்டுரைகளுக்கும் உண்மைப்பொருளுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இது வார்த்தைகளின் விளையாட்டு, இதற்கு நிலையான மதிப்பு எதுவும் இல்லை. உண்மைப்பொருள் மனதிற்கும், அறிவுத்திறனுக்கும் அப்பாற்பட்டது. நீங்கள் உண்மைப்பொருளை அறிவுப்பூர்வமாகப் புரிந்து கொண்டீர்கள் என்று சொல்லும் போதே, நீங்கள் அதைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் என்பதைக் காட்டுகிறது! உண்மையான இறை ஞானத்தை அடைய, உணர்வு நிலைத்திருக்க வேண்டும், புத்தி (மனம்) மறைந்தாக வேண்டும். மனநிலை பாதிக்கப் பட்டவர்களுக்கான ராஹூரி ஆசிரமத்தில் இருந்த புஞ்சியாவைப் போலப் பைத்தியமாக வேண்டும் என்று அர்த்தமல்ல! நான் சொல்வது என்னவெனில், புத்தி என்பது இதயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை, முழு மனதுடன் அடைவதற்கான வழிமுறையாக இருக்க வேண்டும். நீங்கள் முழு மனதுடன் எனக்குக் கீழ்ப்படிந்தால், புத்தி போய், உணர்வு நிலைத்திருக்கும்.

ஒரு நபர் மிகவும் புத்திசாலியாக இருக்கலாம், ஆனால் அவருக்கு சத்குருவின் சகவாசத்தை அடையப் பெறும் பாக்கியம் இல்லை என்றால், அவர் இறை-உணர்வை அடைய முடியாது. அதே வேளையில், ஒரு நபர், மந்தமானவராக இருந்தாலும், பரிபூரண குருநாதரின் சகவாசத்தைப் அடையப் பெறும் அரிய அதிர்ஷ்டத்தைப் பெற்றவராயின் இறை-உணர்வை அடைய முடியும். மேலும், மிகவும் புத்திசாலியாகவும், அதே சமயம், ஒரு சத்குருவின் மீது அன்பு கொண்டவராகவும், அவரது சகவாசத்தை அடையப் பெற்றவராகவும் இருக்கும் அதிர்ஷ்டசாலியான ஒருவருக்கு நானே தலைவணங்குவேன்.

ஒரு சத்குருவின் சகவாசத்தில் வந்த பின்னரும், அவருக்குக் கீழ்ப்படிவது மிகவும் கடினம். நான் பரிபூரண குருநாதர் என்று நீங்கள் நம்புகிறீர்கள் என வைத்துக்கொள்வோம், எனக்குக் கீழ்ப்படியும் அந்தத் தருணத்தில், என்னுடைய பரிபூரண தன்மையை சந்தேகிக்கும் எண்ணம் உங்களுக்கு வந்தாலும், அது முழுநிறைவான கீழ்ப்படிதல் ஆகாது.

உரையின் தலைப்பை மாற்றி, பாபா இவ்வாறு கூறினார்: “ஸவக் கொத்வால் இரவு நேரக் கண்காணிப்பாளராக இருப்பது உங்களுக்குத் தெரியும். ஒரு நாள் இரவு நான் அவரிடம், ‘நான் எப்படி இருக்கிறேன்? ஏப்ரல் நெருங்கிவிட்டது’ என்று கேட்டேன். அதற்கு ஸவக், ‘பாபா, நீங்கள் மிகவும் இளமையாகத் தோன்றுகிறீர்கள்.’ எனது உடலைக் கைவிடுவதைப் பற்றி நான் அவரிடம் கேட்டபோது, ஸவக், ‘எனது கருத்துப்படி, இன்னும் 20 ஆண்டுகள் கடக்க வேண்டும்’ என்று பதிலளித்தார். இது அவருடைய யூகம், அதை அவர் சுதந்திரமாக வெளிப்படுத்துகிறார், ஆனால் ஒன்று: உங்கள் கருத்துகளையும் விளக்கங்களையும் பிறர் மீது திணிக்க முயற்சிக்காதீர்கள்!

ஒருவர் கூறினார், “பாபா, நீங்கள் அவதார புருஷர், உங்கள் பரிபூரண தன்மையை நாங்கள் சந்தேகிக்கவில்லை. நீங்கள் பௌதீக உடலில் இருப்பது

எங்களுக்கு மேலும் மேலும் தேவை... முழு உலகத்திற்கும் நீங்கள் தேவைப்படுகிறீர்கள்!"

பாபா சிரித்துக்கொண்டே, **"இப்போதைக்கு, அவதார தன்மையைப் பற்றி நான் எதுவும் கூறவில்லை. ஆனால் இது நிச்சயம் என்பதை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்: முழு உலகில் எனக்கு நிகர் எவரும் இல்லை - நல்ல குணங்கள் அல்லது தீய குணங்கள், எனக்குத் தெரியாது."**

**'அச்சு வார்க்கப்படுகிறது'** (THE DIE IS CAST) என்ற சுற்றறிக்கையை வாசிக்குமாறு பாபா எரச்சிடம் கேட்டுக்கொண்டார். எரச் வாசித்துக் கொண்டிருந்த வேளையில் மழை பொழியத் தொடங்கியது. பாபா, **"இது** (சுற்றறிக்கை) **என் இதயத்திலிருந்து வெளிவந்தது, ஆதலால் மழை பொழிகிறது!"** என்றார்.

**எனது இறுதி தீர்மானத்தின்படி, நேரக் காரணியைத் தவிர, நான் அறிவித்த பிரகடனத்தைத் தொடர்ந்து, தெளிவுபடுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டதற்கு இணங்க, அனைத்தும் அதன் ஒவ்வொரு விவரத்திலும், வரிசையிலும் நடக்கும். எந்தக் கால நேரத்திற்கும் எவ்வித வரம்பும் இல்லை, எந்தக் கால நேரத்தினுடனும் தொடர்பும் இல்லை. ஒரு மாதம் அல்லது மூன்று மாதங்களுக்குப் பிறகு, மூன்று ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகு விஷயங்கள் நடக்கலாம். சுருக்கமாகச் சொன்னால், நான் நாளை பேசலாம், அல்லது பத்து வருடங்களுக்குப் பின்னர் எனது மௌனம் கலைக்கப்படலாம்.**

**நான் எல்லா வாக்குறுதிகள், பிணைப்புகள், ஒப்பந்தங்கள், ஏற்பாடுகள் அனைத்திலிருந்தும் விடுபட்டுள்ளேன். ஆகவே, எந்த நேரத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் எவரும் என்னிடம் பொருள் அல்லது ஆன்மீக ரீதியில் எதையும் கேட்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் சிறந்தது என்று நான் நினைப்பதை, பொருத்தமான நேரம் என நான் கருதும்போது செய்வேன்.**

**மேலே கூறப்பட்டதன் அடிப்படையில்** (இரண்டு மற்றும் மூன்றாவது பத்திகள்) **சம்பந்தப்பட்ட அனைவரும், இப்போது, எனது 'மேலங்கி'யைக்** ('DAAMAN') **கைவிடுவதா அல்லது நழுவ விடாமல் கெட்டியாகப் பற்றிக் கொள்வதா என்பதை முடிவு செய்ய வேண்டும் - அதாவது, என்னை நம்புவது, என்னை வணங்குவது மற்றும் எனது கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றி எனக்கு அர்ப்பணிப்புடன் இருப்பது...**

**1955 மே 1 முதல் ஜூலை 31 வரையிலான மூன்று மாதங்கள் எனக்கு நெருக்கடியான காலம். மூன்று காரணங்களுக்காக நான் ஓய்வு பெற வேண்டும்:**

1) **எனக்காகவும்;**
2) **என்னை நேசிப்பவர்களுக்காகவும்; மற்றும்,**
3) **அனைவருக்காகவும்.**

(அ) **சத்தாரா ஜால் வில்லாவில் நான் தங்கியிருக்கும் காலத்தில், பங்களாவின் முக்கிய அறைகளை விட்டு வெளியே வரமாட்டேன்.**
(ஆ) **நெருக்கடி காலத்தில் நான் உண்ணலாம், தவறாமல் உறங்கலாம் அல்லது அவ்வாறு செய்யாமலும் இருக்கலாம்.**
(இ) **நான் ஓய்வுபெறும் முதல் மாதத்தில் அல்லது அதற்குப் பின்னர், எந்த ஓர் இடத்திலும் இருக்கக் கடமைப்பட்டவனாக இருக்கமாட்டேன். நான் எந்த நேரத்திலும் எனது திட்டங்களை மாற்றிக் கொள்ளலாம், மேலும் இடம் விட்டு இடம் நடந்து செல்லலாம் அல்லது இதைவிடக் கடுமையான ஏகாந்தவாசத்தைக் கடைப்பிடிக்கலாம்.**

**ஜூலை** 1955 **இறுதி வரை எக்காரணத்தைக் கொண்டும், நேரடியாகவோ மறைமுகமாகவோ எவரும் என்னைப் பார்க்கவோ, என்னுடன் தொடர்புகொள்ளவோ வரக்கூடாது.**

**என்னுடன் நெருங்கியவர்கள், என்னை நேசிப்பவர்கள், எனது அறிவுரைகளைப் பின்பற்ற விரும்புபவர்கள் அனைவரும் முழுக் கண்காணிப்புடன் நேர்மையாக இருக்க வேண்டும், பாலியல் செயல்களிலிருந்து கண்டிப்பாக விலகி இருக்க வேண்டும், மேலும் எனது அன்பு மற்றும் உண்மை பற்றிய செய்தியை, மூன்று மாத நெருக்கடி காலத்தில் முடிந்தவரை எங்கெங்கும் பரப்ப முயற்சிக்க வேண்டும்.**

எரச் சுற்றறிக்கையை ஆங்கிலத்தில் படித்து முடித்ததும், தேஷ்முக், டாக்கே இருவரும் அதை உடனடியாக மராட்டியில் மொழிபெயர்த்தனர். பாபாவின் விருப்பப்படி எரச் அதை மீண்டும் ஆங்கிலத்தில் வாசித்தபோது பாபா கூறினார்:

**இப்போது நான் எனது 'மேலங்கி'யைக்** (DAAMAN) **குறித்து கூறுகிறேன். எனது 'மேலங்கி'யைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள், அல்லது விட்டுவிடுங்கள்! சமரசம் செய்ய முயற்சிக்காதீர்கள். ஒன்று மட்டும் உறுதியானது மற்றும் திடமானது: நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவனாக அல்லது தாழ்ந்தவர்களில் தாழ்ந்தவனாக இருந்தால், நீங்கள் எனது 'மேலங்கி'யைப் பற்றிக் கொள்வீர்களானால், நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருப்பீர்கள். இது எனது 'மேலங்கி'யின் மீது உங்கள் பிடியின் இறுக்கத்தைப் பொறுத்தது. நீங்கள் புனிதர்களா அல்லது பாவிகளா என்பது முக்கியமல்ல.**

**நான் உங்களுக்கு உதாரணம் ஒன்று தருகிறேன். சிறுவயதில் பட்டம் பறக்கவிடுவதில் எனக்கு அலாதி ஆசை. காத்தாடிகளுக்கு நீண்ட வால்கள் இருப்பதையும், அவை வானத்தில் உயரும் போது, வால்கள் வேகமாகவும் உற்சாகத்துடனும் படபடப்பதையும் நீங்கள் அறிவீர்கள். வால்கள் காத்தாடியை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தால், அவை காத்தாடி பறக்கும் இடத்திற்கெல்லாம் செல்லும். வால்கள் நுண்ணிய பசை அல்லது ஏதேனும் அழுக்கு நிறைந்த பொருட்களால் இணைக்கப்பட்டுள்ளதா என்பது**

முக்கியமல்ல. அவற்றின் பிடி தளராமல் இருப்பதுதான் முக்கியம். அதே போல, நீங்கள் பாவிகளாக அல்லது மகான்களாக இருந்தாலும் சரி, நீங்கள் எனது மேலங்கியை நழுவி விடாமல் தக்கவைத்துக் கொண்டால், நான் எங்கிருந்தாலும் நீங்களும் என்னுடன் இருப்பீர்கள்.

இப்போது, உறுதியாகப் பற்றிக் கொள்வதன் அர்த்தம் என்ன? பாபாவை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும் என்று அர்த்தம். மேலும் அவரை எப்படி மகிழ்விப்பது? நீங்கள் அவருக்கு முழு மனதுடன் கீழ்ப்படிவதன் மூலம்!

இத்தனை வருடங்களாக நான்தான் உங்கள் மேலாடையை இறுக்கமாகப் பற்றிப் பிடித்திருந்தேன். இப்போது நீங்கள் என்னுடையதை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. உங்களில் எவராலும் அதைச் செய்ய முடியாது என்று சில நேரங்களில் நான் நினைக்கிறேன், ஏனெனில் என்னால் கூட அதைச் செய்ய முடியாது!

மூன்று மாத காலம் எனக்கு மிகவும் முக்கியமானது. ஏகாந்தவாச ஏகாந்தவாசம் மேற்கொள்ளும்போது, நான் பக்கவாதத்தால் பாதிக்கப்படலாம். ஆகஸ்ட் 1 முதல் நீங்கள் கடிதப் பரிமாற்றம் செய்யலாம், ஆனால் நான் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

சத்தாராவில் தங்கியிருக்கும் மண்டலிக்கு பின்வரும் வழிமுறைகள் வாசிக்கப்பட்டன:

1. 1955 ஜூலை இறுதி வரை அல்லது தொடர்ந்து இறுதி வரை பாபாவின் 'மேலங்கி'யைப் (பாபாவிற்குக் கீழ்ப்படிந்து வாழும் வாழ்க்கை) பற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் இப்போது சுதந்திரமாக உள்ளனர். பாபாவை விட்டுவிட்டு அவர்கள் விரும்பியபடி வாழவும், 1955 ஏப்ரல் 30 ஆம் தேதிக்குப் பின்னர் அல்லது ஜூலை 31 ஆம் தேதிக்குப் பின்னர் ஒவ்வொருவரும் அவர்கள் விரும்பியதைச் செய்யவும், அவர்களுக்கு சமமான சுதந்திரம் உள்ளது.
2. எவ்வாறாயினும், ஒவ்வொரு தனிமனிதனும் மிகவும் சுதந்திரமாகவும், ஒருவரின் சொந்த விருப்பத்தின்படியும் தானே ஒரு முடிவை எடுக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும், முடிவு உண்மையில் தீர்க்கமானதாகவும் இறுதியானதாகவும் இருக்க வேண்டும்.
3. 'இதுகாறும் பாபாவிற்கு கீழ்ப்படிந்து வாழும் வாழ்க்கை போதுமானது என உணராமல் இருக்க முடியவில்லை' என்று நினைப்பவர்கள் இப்போது பாபாவை விட்டு வெளியேறி, அவர்கள் விரும்பியபடி சிறப்பாக வாழ, தங்களால் இயன்றதைச் செய்யுங்கள். இதனால் பாபா சிறிதளவும் அதிருப்தி அடையமாட்டார், ஏனெனில், இதுவரை தம்மிடம் மிகவும் அற்புதமாக அட்டைபோல் கெட்டியாக ஒட்டிக்கொண்டிருக்கும் அனைவருக்கும், சமமாக, ஒவ்வொருவரின் விருப்பப்படி தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை அவர் தானே

வழங்குகிறார். பாபாவைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ள முடிவு செய்து விட்டு, நம்பிக்கை துரோகியாக, கண்டனத்திற்கு உரியவராக ஆவதை விட இப்போதே வெளியேறுவது சிறந்தது.

4. எனவே, பாபாவை விட்டுப் பிரிந்து செல்ல விரும்புபவர்கள் 1955ஆம் ஆண்டு மே 1ஆம் தேதிக்கு முன்னர் அல்லது ஜூலை 31ஆம் தேதிக்குப் பின்னர் அதைச் செய்ய வேண்டும். இப்போது பாபாவுடன் தொடர்ந்து இருக்க முடிவு செய்பவர்களில் எவரேனும் திட்டவட்டமான 1955 ஜூலை இறுதிக்குள் அல்லது காலவரையற்ற காலத்திற்குள் பாபாவை விட்டு வெளியேறுவதால் - பாபாவுடனான அனைத்து தொடர்பையும் இழக்க நேரிடும், மேலும் அவர் இன்றுவரை செய்த சேவை அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும்.

5. ஒருவர் எந்த முடிவிற்கும் வருவதற்கு முன்னர், பின்வரும் உண்மைகளை முழுமையாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார்:

அ) அனைவரும் அவரை விட்டு விலக முடிவு செய்து, இப்போது அல்லது ஜூலை 31க்குப் பின்னர் அவரை விட்டு விலகினால், பாபா சிறிதும் கவலைப்படமாட்டார்.

ஆ) பாபா, தன்னை எவரும் விட்டுச் செல்ல வேண்டும் என்று எப்போதும் விரும்பவில்லை அல்லது விரும்புவதுமில்லை.

இ) பாபா எப்பொழுதும் ஒருவர் தமது 'மேலங்கி'யை இறுதிவரை கெட்டியாகப் பற்றிக் கொள்ள வேண்டுமென்றே விரும்புகின்றார்.

ஈ) மூன்று மாத காலத்திற்குப் பின்னர், அனைவருக்கும் வழக்கமான உணவு, உடை மற்றும் அன்றாடத் தேவைகளை வழங்குவது சாத்தியமாகலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். அப்படியானால், பாபா அவர்கள் எந்த விதமான துன்பங்களை சந்திக்கவும், என்னென்ன குறைபாடுகளை சுமக்கவும் நேரிடும் என்பதை அந்த மண்டலியுடன் முழுமையாகப் பகிர்ந்து கொள்வார்.

உ) இதுவரை, பாபா தனது பிடியை மண்டலி மீது வைத்திருக்க வேண்டியிருந்தது; இப்போது, பாபாவின் 'மேலங்கி'யை ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பற்றிப் பிடிப்பதைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது.

6. பாபா, மே 1ஆம் நாள் ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, மனதில் உள்ளார்ந்த ஐயப்பாடு, தயக்கம், தடை எதுவும் இல்லாமல், ஒவ்வொரு மண்டலியும் தெளிவான வார்த்தைகளில் பாபாவின் முன் தனது இறுதி முடிவை அறிவிக்க வேண்டும்.

<u>மாதாந்திர உதவித்தொகை</u>: மாதாந்திர உதவித்தொகையைப் பெறும் அன்பர்களைப் பொறுத்தவரை, அந்தத் தொகையைத் தொடர முடியும் வரை, ஜூலைக்குப் பிறகும், தொடரலாம். ஆகஸ்ட் 1 மற்றும் அதற்குப் பின்னரும்

**அனைத்து உதவித்தொகைகளையும் முற்றிலுமாக நிறுத்தவோ அல்லது பாதி அல்லது கால் விகிதமாக குறைக்கவோ வாய்ப்பு உள்ளது.**

பாபா, தமது மண்டலியைக் குறித்து கூறினார்:

**கடந்த பல வருடங்களாக, இடர்பாடான காலங்கள் மற்றும் சூழல்களுக்கு இடையே, என்னுடன், என்னைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கும், என் மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருக்கும், எனது மண்டலிக்கு இணையாக எவரும் இல்லை. நான் அவர்களை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்தேன், சிரித்து விளையாடினேன், என்ன இல்லை! ஆனால் அவர்கள் என்னை விட்டுச் செல்லவில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் குறைபாடுகள் உள்ளன, ஆனால் அவர்கள் என் மீது வைத்திருக்கும் அன்பை மட்டுமே நான் பார்க்கிறேன். இந்த நேரத்தில், யார் என்னுடன் இருக்கிறார்கள், யார் என்னை விட்டுச் செல்கிறார்கள் என்பதைப் பார்க்க விரும்புகிறேன். இத்தனை வருடங்கள், நீங்கள் என்னுடன் இருந்தீர்கள், ஏனெனில் நான் உங்கள் அனைவரையும் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தேன். இப்போது நான் உங்களை விடுவிக்கப் போகிறேன். எனவே நீங்கள் எனது மேலங்கியை மேலும் மேலும் இறுகப் பற்றிக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.**

சத்தாராவில் வாழ்ந்த தமது மண்டலிக்கு பாபா விளக்கமளித்தார், **அவர்கள், அவருடன் வாழ அல்லது அவரை விட்டுப் பிரிய விரும்புகிறார்களா என்பதை அவர்கள் சுதந்திரமாக தீர்மானிக்கிறார்கள். ஆனால் பாபா அவரது தனிப்பட்ட தேவைகளை கவனித்துக்கொண்ட எரச்சிடம்** (இதை காக்கா பாரியா பல ஆண்டுகளுக்கு முன்பு செய்து வந்தார்), **குறைந்தபட்சம் அவராவது பாபாவுடன் இருக்க முடிவு செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் உண்மையில் அவரை விட்டு விலகி வாழ விரும்பினால், பாபா கூறினார், "நான் இப்போது சொல்கிறேன், எனக்குக் கவலையில்லை!"**

பாபா தொடர்ந்து கூறினார்:

**இப்போதெல்லாம், பிறருடனான செயல்பாடு மற்றும் தொடர்புகளில் எனக்கு சந்தேகம் எழும்போதெல்லாம் எரச்சிடம் அவரது வெளிப்படையான கருத்தைக் கேட்கிறேன்.**

**'நேற்று மாலை, டெஹ்ரா டூனிலிருந்து வந்த இரண்டு நபர்களுக்கு நான் தரிசனம் வழங்கியது சரியா?' என்று அவரிடம் கேட்டேன். 'நான் அவ்வாறு செய்தது சரியல்ல' என்று பதிலளித்தார். 'ஏன்' என்று கேட்டதற்கு, 'இது எனது சொந்த உத்தரவுக்கு எதிரானது' என்றார். மேலும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரசாதமாக ரூ.100 வழங்கிய எனது நடவடிக்கையும் அவரது பார்வையில் ஆட்சேபனைக்குரியதாக இருந்தது, ஏனெனில், இடர் நேரும் வாய்ப்பை எதிர்கொண்டிருந்தால், அவர்கள் பாபாவை மேலும் மேலும் நினைவு கூர்ந்திருப்பார்கள் என்று அவர் கூறினார்.**

**நேற்றிரவு, அவருடைய பதில்களைப் பற்றி சிந்தித்தபோது, நான் செய்தது சரி என்று கண்டுகொண்டேன். எப்படி? 'நான் எவருக்கும் தரிசனம் தரமாட்டேன், பிரசாதம் வழங்கமாட்டேன்' என்று அறிவித்திருந்தேன். ஆனால். அதே வேளையில் 'நான் எந்த விதமான கூட்டங்களையும் நடத்தமாட்டேன்' என்றும் தெரிவித்திருந்தேன். இப்போது உங்கள் அனைவரையும் இந்த சிறிய குழுவின் கூட்டத்திற்கு அழைத்துள்ளேன். இப்போது, நான் உங்களை இந்தக் கூட்டத்திற்காக அழைத்த வேளையில், இவ்வளவு தூரத்திலிருந்து வந்த இவர்களுக்கு தரிசனம் மறுப்பது என் தரப்பில் நியாயமாகுமா?**

முடிவில், 1955 மே முதல் ஜூலை வரையிலான மூன்று மாதங்களில், மண்டலிக்காக செய்யப்பட்ட உணவு, உடை மற்றும் பலவற்றின் ஒதுக்கீடு தொடர்பான விஷயங்களைப் பற்றி பாபா பேசினார்: "**ஜூலை இறுதி வரையிலான காலத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. அதன் பிறகு, பண நிலைமை என்னவாக இருக்கும் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. கிழக்கு மற்றும் மேற்கிலிருந்து வரும் பெரும்பாலான பண உதவிகள் வறண்டுவிட்டன. ஒருவேளை நாம் யாசிக்க வேண்டியிருக்கலாம்; ஆனால் என்னுடன் இருக்க முடிவு செய்யும் மண்டலியான உங்களுக்கு நான் உறுதியளிக்கிறேன், உணவு, உடை மற்றும் பலவற்றை உங்கள் அனைவருடனும் நான் பகிர்ந்து கொள்வேன்.**"

பெண் மண்டலிக்கு நிலையான சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பாபா குறிப்பிட்டார்.

பாபா தொடர்ந்தார், "**இது, அதீத கஷ்டங்கள் மற்றும் இடர்பாடுகளின் காலமாக இருக்கும், எனவே இப்போது எவரேனும் என்னை விட்டு வெளியேற முடிவு செய்தால், நான் மகிழ்ச்சியடைவேன். இல்லையெனில், நான் உங்களுக்குச் சொல்கிறேன், கஷ்டங்களுக்கு முடிவே இருக்காது. நிச்சயமாக, இதன் மூலம் நீங்கள் என்னை விட்டு விலகி வாழ வேண்டும் என்ற குறிப்பிட்ட நோக்கத்தோடு முடிவு செய்ய வேண்டும் என்று அர்த்தமாகாது; நீங்கள் என்னை விட்டு விலகி வாழ நினைத்தால் மட்டுமே நீங்கள் தன்னுரிமையோடு அவ்வாறு செய்ய முடியும்.**"

பாபா கேலி செய்தார், "**என்னுடைய இதயம் மிகவும் சிறியது, அதனால் மண்டலி உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கப்படும்போது, நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன். அவர்கள் நல்ல உணவை உண்டு, வசதிகளை அனுபவிக்கும்போது, நான் மகிழ்ச்சியற்றவனாக உணர்கிறேன் - ஏனெனில் என் இதயம், மிக மிகச் சிறியதாக உள்ளது!**"

மே 1 முதல் ஜூலை 31 வரையிலான மூன்று மாதங்களுக்கு, அனைவருக்கும் '**பொதுவான கட்டளைகள்**' (GENERAL ORDERS) எரச்சால் வாசிக்கப்பட்டன:

1. கைக்கோபாத், நீலு இருவரும் ஜால் வில்லாவின் அந்தந்த மேற்கு மற்றும் கிழக்குப் பிரிவுகளில் இப்போது தொடர்ந்து தங்க வேண்டும். அவர்களையும், அங்குப் பணிபுரிபவர்களையும் தவிர, பாபாவின் அழைப்பின்றி எவரும் ஜால் வில்லாவிற்கு போகக் கூடாது.
2. ஜால் வில்லாவில் அவர்களுக்குத் தனித்தனியாகவும் கூட்டாகவும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்யும் நோக்கத்திற்காக மட்டுமே அங்கு இருக்க வேண்டும்.
3. பாபா அழைத்தால் தவிர, ஜால் வில்லாவில் அமைந்த பாபாவின் பிரதான அறைக்குள் எவரும் நுழையக்கூடாது.
4. பாபா எவரையும், எதையும் கவனிக்கும் விதத்தில் அல்லது எவரைப் பற்றியும் எதைப் பற்றியும் அவர் கேள்வி எழுப்பும் விதத்தில், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எதுவும் சொல்லவோ, செய்யவோ கூடாது.
5. இந்த மாதங்களில், பாபா எவரையேனும் கேள்வி கேட்க நேர்ந்தால், கேள்வி சம்பந்தப்பட்ட விஷயத்திற்கு மட்டும் அவர் உண்மைகளை மறைக்காமல், நேரடியாக பதிலளிக்க வேண்டும்; அதே சமயம் அந்தக் கேள்வியைப் பயன்படுத்தி, அதில் குறிப்பிடப்படாத வேறொருவரைப் பற்றி மறைமுகமாகக் குறிப்பிடாமல் பதிலளிக்க வேண்டும்.
6. எரச், ஒருவேளை அவர் மிகவும் நோய்வாய்ப்பட நேர்ந்தாலோ அல்லது உயிரைத் துறந்தாலோ, விஷ்ணு அந்த இடத்தில் வரவேண்டிய அந்நேரத்தில், அவரும் உயிரைத் துறந்துவிட்டால் அல்லது அவரைக் கண்டுகொள்ள முடியாமல் போனால், பெண்டு உடனடியாக பாபாவிற்கு - கீழ்குறிப்பிட்டதில் உண்மையான அல்லது அறிவிக்கப்பட்ட எதையும் - தெரிவிக்க வேண்டும்: தீவிரமான நோய், மரணம் அல்லது ஏதேனும் கடுமையான பேரிடர் நிகழும் வேளையில் கீழ் வருபவர்கள்/வருவன பற்றிய தகவல் தருவது.

    அ) கிராஃப்டனில் இருக்கும் பெண்மணிகள், ஷெபா மற்றும் பீட்டர்;

    ஆ) என்னுடன் வாழும் மண்டலி; மற்றும்

    இ) சத்தாரா அல்லது வெளியில் வாழ்ந்து, பாபாவுடன் மிக நெருங்கிய தொடர்பில் இருப்பவர்கள்.
7. மெஹராவும் மணியும் வாரத்திற்கு ஒருமுறை பாபாவை சந்திக்கவும், அவருடைய அறைகளுக்குள் நுழையவும் அனுமதிக்கப்படுகிறார்கள். பாபாவின் அழைப்பைத் தவிர, எந்த சூழ்நிலையிலும் கோஹெர், ஜால் வில்லா வளாகத்திற்குள் நுழையக்கூடாது.

8. எந்த இடத்திலிருந்தும், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அல்லது நெருக்கமானவர்கள் எக்காரணத்தைக் கொண்டும், எந்த சூழ்நிலையிலும் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
9. ஓய்வு பெற்று சகவாசத்தைத் தொடங்கி, 1955 ஜூலை 31ஆம் நாள் முடிவடையும் மூன்று மாதங்களில், பாபாவிற்கு அதிகாரப்பூர்வமான அல்லது அதிகாரப்பூர்வமற்ற இடையூறு ஏற்படக்கூடிய சம்பவங்கள் நிகழலாம், எனவே, சம்பந்தப்பட்ட அனைவரும் பாபா அவரது ஏகாந்தவாசத்தை நிச்சயமாகத் தொடரும் வகையில் ஒவ்வொரு தார்மீக மற்றும் சட்ட வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டும்.
10. மரணம், விபத்து அல்லது நெருங்கிய உறவினர்கள் அல்லது சார்ந்திருப்பவர்களின் தீவிர நோய் போன்ற அவசரநிலைகள், தவிர்க்க முடியாத அலுவலக சம்பந்தமான மற்றும் சட்டத் தேவைகள் போன்றவற்றால் ஏற்படும் முக்கியமான தேவையின் போது, ஒருவர், மண்டலியுடன் தனது கடமைகளுக்கான வேண்டிய ஏற்பாடுகளைச் செய்த பின்பு, மூன்று மாத காலத்திற்குள் சத்தாராவை விட்டுச் செல்லலாம்.
11. மூன்று மாதங்களுக்குள் பாபா உடலைத் துறந்தால், அப்போது:

அ) கிராஃப்டனில் வாழும் பெண்மணிகளுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டு, அவர்களுடன் உடலை மெஹராபாத்திற்கு எடுத்துச் சென்று, மெஹராவின் முன்னிலையில், நீண்ட காலத்திற்கு முன்னர் இதற்காகப் பிரத்யேகமாகக் கட்டப்பட்ட சமாதியில் அடக்கம் செய்ய வேண்டும்.

ஆ) மெஹரா உயிருடன் இருக்கும் வரை, சம்பந்தப்பட்ட இதர பெண்மணிகள் அனைவரும் மெஹராவுடன் தொடர்ந்து வாழ வேண்டும்.

இ) மெஹரா உயிரைத் துறந்ததும், பாபாவின் சமாதிக்கு அருகில், வலது பக்கத்தில் அடக்கம் செய்யப்பட வேண்டும்.

ஈ) இதர எல்லா விஷயங்களிலும், பெண்மணிகளும், குடியிருக்கும் மண்டலியும் தங்களால் இயன்ற வழிகள் மற்றும் வசதிகளுக்கு ஏற்ப அவர்கள் நல்லது என நினைப்பதைச் செய்ய வேண்டும்.

12. மூன்று மாத காலப்பகுதியில் பாபாவுடன் வாழும் மண்டலியில் எவரேனும் உயிரைத் துறந்தால்:

அ) உயிரைத் துறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் நடைமுறைக்குத் தகுந்தாற்போல் அவர்கள் விரும்பியபடி உடலை அப்புறப்படுத்த வேண்டும்.

ஆ) சம்பந்தப்பட்டவர்களால் குறிப்பிட்ட விருப்பங்கள் எதுவும் தெரிவிக்கப்படாவிட்டால், சூழ்நிலைகளுக்கு ஏற்ப, உடலை

**அப்புறப்படுத்துவதற்கு முதலில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்:**

**கைக்கோபாத் - டோக்மா (அமைதிக் கோபுரம்) அஹமதுநகர்**
**விஷ்ணு - மெஹராபாத்தில் தகனம்**
**நீலு - மெஹராபாத்தில் தகனம்**
**பாவ் - மெஹராபாத்தில் தகனம்**
**குமார் - மெஹராபாத்தில் தகனம்**
**கிருஷ்ணா - மெஹராபாத்தில் தகனம்**
**அலோபா - மெஹராபாத்தில் அடக்கம்**
**பெண்டு - மெஹராபாத்தில் அடக்கம்**
**பைதூல் - மெஹராபாத்தில் அடக்கம்**
**குஸ்தாஜி - மெஹராபாத்தில் அடக்கம்**
**டான் - மெஹராபாத்தில் அடக்கம்**
**கொத்வால் - மெஹராபாத்தில் அடக்கம்**
**எரச் - மெஹராபாத்தில் அடக்கம்**
**கிருஷ்ணாஜி - மெஹராபாத்தில் அடக்கம்**

அதன் பின்னர், ஒவ்வோர் அன்பர்களையும் தன்னிடம் அழைத்து, பாபா அவரவர் முடிவைக் கேட்டார். பாவ் கல்சூரியிடம் ஏற்கனவே எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் இருந்தது, அவர் எந்த சூழ்நிலையிலும் பாபாவை விட்டு வெளியேற மாட்டார் என்று உறுதியளித்தார்.

கிரா:ப்டனில் தங்கியிருந்த பெண் மண்டலிக்கு, இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன:

1. **1955 மே, ஜூன், ஜூலை ஆகிய மூன்று மாதங்களில் மெஹராவும், மணியும் வாரத்தில் ஒரு முறை ஜால் வில்லாவில் பாபாவை சந்திக்க வேண்டும்.**
2. **பாபா அழைக்கும் வரை கோஹெர், ஜால் வில்லாவிற்கு வரக்கூடாது.**
3. **கோஹெர், அருகாமையில் இல்லை என்றால், ரானோ உடனடியாக எரச், விஷ்ணு அல்லது பெண்டு மூலமாக, கிரா:ப்டனில் வாழும் பெண்மணிகள், ஷெபா அல்லது பீட்டருக்கு விளையும் கடுமையான நோய், விபத்து போன்றவற்றைக் குறித்த விபரங்களை பாபாவிற்குத் தெரிவிக்க வேண்டும்.**
4. **மூன்று மாதங்களுக்குப் பிறகும் ஏற்கனவே அமலில் இருக்கும் ஏற்பாடுகள் தொடரவில்லை என்றால், பெண்மணிகள் ஒதுக்கி வைக்கப்பட்ட சேமிப்புத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.**
5. **மேலே கூறியது கிரா:ப்டனில் வாழும் ஷெபா மற்றும் பீட்டருக்கும் பொருந்தும்.**

6. **பாபா அவரது உடலைக் கைவிடவில்லை என்றால், மூன்று மாதங்களுக்குப் பிறகு பெண்மணிகள் எங்குத் தங்குவது என்பதை அவரே தீர்மானிப்பார். இல்லை என்றால், 'பொது கட்டளை' எண் 11ஐ பின்பற்ற வேண்டும்.**
7. **பெண்மணிகளில் எவருக்கேனும் மரணம் ஏற்பட்டால், உடலை மெஹராபாத்திற்கு எடுத்துச் சென்று, மேல்மலையில் பின்வருமாறு புதைக்க வேண்டும்:**
   I. **பாபாவின் சமாதிக்கு அருகில், வலது பக்கத்தில் - மெஹரா.**
   II. **பாபாவின் சமாதிக்கு அருகில், வலது பக்கத்தில், மெஹராவின் சமாதியை அடுத்து - நாஜா.**
   III. **பாபாவின் சமாதிக்கு அருகில், வலது பக்கத்தில், நாஜாவின் சமாதியை அடுத்து - மெஹரு.**
   IV. **பாபாவின் சமாதிக்கு அருகில், இடது பக்கத்தில் - மணி.**
   V. **பாபாவின் சமாதிக்கு அருகில், இடது பக்கத்தில், மணியின் சமாதியை அடுத்து - கோஹெர்.**
   VI. **பாபாவின் சமாதிக்கு அருகில், இடது பக்கத்தில், கோஹெரின் சமாதியை அடுத்து - ரானோ.**

மண்டலி உறுப்பினர்கள் உயிரைத் துறந்தால் எங்கே புதைக்க அல்லது தகனம் செய்யப்படுவார்கள் என்பதைக் காட்டும் பட்டியல் பின்பு பாதிரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவரது அன்பர்கள் சிலரால் பாபா அற்புதங்கள் நிகழ்த்தியதாகக் கூறப்படுவதைக் குறிப்பிட்டு பாபா விளக்குகிறார்: **"நான் அவ்வப்போது நிகழும் தற்செயல் மற்றும் அதிசயங்கள் என்று அழைக்கப்படுவதைக் குறித்து ஆச்சரியப்படுகிறேன். ஆனால் இந்த விஷயங்கள் பெரிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. ஆன்மீக வரலாற்றில், இது எப்போதும் நிகழ்ந்து வருகிறது; மிக முக்கியமற்ற விஷயங்கள் பெரிதாக்கப்படுகின்றன, ஆனால் இப்படிச் செய்வதன் மூலம், இத்தகைய மிகையான மதிப்பீடுகள், தங்கள் குருநாதரின் ஆன்மீக அந்தஸ்தைக் குறைக்கிறது என்பதை அன்பர்கள் புரிந்துகொள்வதில்லை, மேலும் வரலாறு மீண்டும் மீண்டும் நிகழும் என்று நான் அஞ்சுகிறேன்!"**

பாபா அங்கிருந்த அனைவருக்கும் மாம்பழங்களை வழங்கினார். அவ்வேளையில், ஏற்கனவே மௌனி புவாவிற்கு (MAUNI BUA) வழங்கப்பட்ட சில உத்தரவுகளைப் பற்றி, பால் நாத்து அவரிடம் கேட்டபோது, பாபா, தமது அதிருப்தியைக் வெளிப்படுத்தினார். தண்டனையாக, பாபா தமது உயர்நிலைப் பள்ளி கிரிக்கெட் அணியுடன் பாபாவின் குழந்தைப் பருவப் புகைப்படத்தின் 50 பிரதிகளை விற்குமாறு நாத்துவிற்கு உத்தரவிட்டார். 1955 ஜூலை இறுதி வரை மௌனி புவாவின் மௌனத்தை தொடர அறிவுறுத்துமாறு பால் நாத்துவிடம்

அவர் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, அவர் விற்கப்படவேண்டிய புகைப்படங்களின் எண்ணிக்கையை பாபா ஐந்தாகக் குறைத்தார்.

கிரிக்கெட் அணியுடன் இளம் மேர்வானின் அந்தப் புகைப்படத்தைப் பற்றி பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**பல ஆண்டுகளாக நான் ஒரு சிறந்த சிறுவனைத் தேடிக்கொண்டிருந்தேன், ஆனால் அந்தப் புகைப்படத்தைப் பார்த்தபோது, 'நான் சிறந்த சிறுவனைக் கண்டுகொண்டேன்!**'"

யாரோ ஒருவர் கூட்டத்தில் கூறினார், "அப்படியானால் பாபா, சிறந்த சிறுவனைத் தேடுவது முடிவுக்கு வந்தது!"

"**இல்லை, இல்லை, இது ஒரு புகைப்படம்**" என்று பாபா உடனே பதிலளித்தார்.

கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு நிறைவடைந்தது. கிட்டத்தட்ட எட்டு மணி நேரம் பாபா அவர்களுடன் தொடர்ந்து இருந்தார். வந்தவர்களைத் தழுவவோ, அவர்களுடன் கைகளைக் குலுக்கவோ இல்லை. அவர் கிராஃப்டனுக்குப் புறப்பட்டபோது, முகத்தில் அந்த மறக்கமுடியாத புன்னகையுடன், விடைபெறும் வேளையில், வெறுமனே கையை அசைத்தார். வெளியூர் அன்பர்கள் அனைவரும் அன்று அல்லது மறுநாள் காலையில் தத்தமது இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்; பாபாவின் ஏகாந்தவாசம் குறித்த விவாதங்கள் தொடங்கின.

சத்தாராவில் பாபாவுடன் தங்கியிருக்கும் ஆண் மண்டலிக்கு 1955 மே தொடக்கத்திலிருந்து ஜூலை இறுதி வரை சில கடமைகள் வழங்கப்பட்டன.

<u>ஜால் வில்லாவில் கண்காணிப்பாளர்கள்</u>:

எரச் - காலை 6:00 முதல் மதியம் 12:00 மணி வரை.

குமார் - மதியம் 12:00 முதல் மாலை 6:00 மணி வரை.

பாவ் - மாலை 6:00 மணி முதல் நள்ளிரவு வரை.

பைதூல் - நள்ளிரவு முதல் காலை 6:00 மணி வரை.

மேற்குறிப்பிட்ட ஆண்களில் எவரேனும் நோய்வாய்ப்பட்டால், அந்த நோயுற்றவரின் கடமையை பெண்டு செய்ய வேண்டும் என பாபா அறிவுறுத்தினார்.

<u>மேலும் வழங்கப்பட்ட கடமைகள்</u>:

அலோபா - மண்டலி மேலாண்மை.

பைதூல் - காவலாளியாகக் கடமையைச் செய்வதோடு, கடவுளின் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது.

பாவ் - காவலராகக் கண்காணிக்கவும் கடிதப் பரிமாற்றம் செய்யவும்.

டான் - வழக்கம் போல மருத்துவ தேவைகளில் கலந்துகொள்வது.

எரச் - காவலராகக் கண்காணிக்கவும் கடிதப் பரிமாற்றம் செய்யவும்.

குஸ்தாஜி - வழக்கம் போல் (அமைதியாக இருப்பது)

கைக்கோபாத் - வழக்கம் போல பாபாவின் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது.

கொத்வால் - ஜால் வில்லாவில் இரவு 8:30 முதல் காலை 5:30 மணி வரை கண்காணிப்பாளராகப் பணிபுரிவது.

கிருஷ்ணாஜி - வழக்கம் போல மௌனம் கடைப்பிடிக்க வேண்டும்.

கிருஷ்ணா நாயர் - இரவு 8:30 முதல் காலை 5:30 மணி வரை கிராஃப்டனில் கண்காணிப்புப் பணி.

குமார் - காவலாளியாகக் கடமையைச் செய்வதோடு, ஹிம்மத் ஸிங் மணமகன் (மணமகள், குதிரை ஷெபா) நோய்வாய்ப்பட்டாலோ அல்லது சேவையை விட்டு வெளியேறினாலோ, அவருடைய கடமையையும் சேர்த்து செய்ய வேண்டும்.

நீலு - வழக்கம் போல (மருத்துவ தேவைகளில் கலந்துகொள்வது)

பெண்டு - விஷ்ணு நோய்வாய்ப்பட்டாலோ அல்லது பூனாவிற்குச் சென்றாலோ, அவர் (பஜாருக்குச் செல்வது போன்ற) விஷ்ணுவின் கடமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ராம்ஜூ - விஷ்ணு இல்லாத பட்சத்தில், பெண்டுவும் எதுவும் செய்யமுடியாத நிலையில் இருந்தால் அல்லது நான்கு காவலர்களில் இருவர் நோய்வாய்ப்பட்டால் காவலாளியாகக் கடமையாற்றுவது.

விஷ்ணு - ஆண், பெண் மண்டலிக்குத் தேவையான மளிகை மற்றும் பிற பொருட்களை வாங்கி வழங்கும் கடமை, மற்றும் கணக்கு வழக்குகளை பராமரிப்பது.

இருப்பினும், 1955 ஏப்ரல் 24 அன்று நடந்த கூட்டத்தில் மண்டலிக்கு வழங்கப்பட்ட கடமைகள் பின்பு மாற்றப்பட்டன. பாவ் கல்சூரி காலை 6:00 மணி முதல் மதியம் வரை எரச்சுடன் ஜால் வில்லாவில் காவல்புரிய வேண்டும். ஜால் வில்லாவில் பங்களா முழுவதையும் துடைப்பது, கல் தரையைக் கழுவுவது, பாபாவின் பாத்திரங்களை சுத்தம் செய்வது, தண்ணீர் பானைகளை நிரப்புவது, படுக்கையை சுத்தம் செய்து சீர் செய்வது, பெண் மண்டலி தயார் செய்த தேநீர் மற்றும் உணவுகளை கிராஃப்டனிலிருந்து கொண்டுவருவது போன்ற கடமைகள்.

மற்றுமொரு முக்கியமான மாற்றமும் நிகழ்ந்தது. மண்டலியில் ஒவ்வொருவருக்கும் அவரவர் உணவுக்கான ஏற்பாடுகளை கவனித்துக்கொள்ள பாபா, மாதம் ரூ.30 வழங்கினார். எரச் மற்றும் பாவ் கல்சூரியின் கடமைகளால், அவர்கள் தேவையான பொருட்களை வாங்க வெளியே செல்லவும், நேரமின்மையால் உணவு தயார் செய்யவும் முடியவில்லை.

1955 ஏப்ரல் 30 சனிக்கிழமையன்று, பாபாவின் விருப்பத்திற்கிணங்க, மண்டலிக்கு உணவு தயாரிப்பதற்கான அனைத்து பொருட்களையும், பாத்திர பண்டங்கள், தானியங்கள், சமையல் எண்ணெய், தேநீர், சர்க்கரை மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் பாவ் கல்சூரி கிராஃப்டனுக்கு அனுப்பி வைத்தார். பாபாவின் ஏகாந்தவாசம் அடுத்த நாள் தொடங்க இருந்தது, அவர்களின் உணவுக்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. இந்தப் பிரச்சினையை அவர்களுடன் விவாதிக்க பாபா இரவு 8:00 மணிக்கு ஜால் வில்லாவிற்கு வந்தார். அலோபா, குமார், கிருஷ்ணா, கிருஷ்ணாஜி ஆகியோர்

தங்களுக்கென தனி ஏற்பாடுகளை ஏற்கனவே செய்திருந்தனர், ஏனெனில் அவர்களுக்கு நிறைய ஓய்வு நேரம் இருந்தது, ஆனால் மீதமுள்ள மண்டலிக்கு எந்த ஏற்பாடும் இதுவரையிலும் செய்யப்படவில்லை. கிராஃப்டனிலிருந்து கைகோபாத்திற்கு மட்டும் தேநீர் மற்றும் உணவு அனுப்பப்பட வேண்டும்.

நீண்ட விவாதத்திற்குப் பின்னர், அனைவருக்கும் உணவு வழங்கும் பொறுப்பை பைதூல் ஏற்றுக்கொண்டார், பாபா இது குறித்து மகிழ்ச்சியடைந்தார். எனவே, பைதூல் இரவு கண்காணிப்புப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அடுத்த நாள், விஷ்ணு பாத்திர பண்டங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ததும், இந்த முறையில் மண்டலியின் உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாபாவின் தனிப்பட்ட பொருட்கள் அனைத்தும் கிராஃப்டனிலிருந்து ஜால் வில்லாவிற்கு கொண்டு வரப்பட்டது. பாபா, மண்டலிக்கு 30ஆம் தேதி 24 மணிநேரம் உபவாசம் மேற்கொள்ள உத்தரவிட்டார், மூன்று முறை தேநீர் அருந்த அனுமதிக்கப்பட்டது. நள்ளிரவு 12:15 மணிக்கு ஜால் வில்லாவில் பாபா ஏகாந்தவாசத்தைத் தொடங்கும் வரை அவர்கள் பாபாவுடன் விழித்திருந்து, 1955 மே 1 ஞாயிற்றுக்கிழமை அன்று ரோஸ்வுட் திரும்பி வந்தனர்.

ஜால் வில்லாவில், பாபா, கைக்கோபாத்துடன் தினமும் தொடர்ந்து மணிக்கணக்கில் பணிபுரிந்தார். உள்ளே எவரும் பார்க்க முடியாதபடி கதவு இறுக்கமாக மூடப்பட்டிருந்தது; ஆனால் வெளியே, கைக்கோபாத் இறை நாமத்தை உச்சரிக்கும் குரல் (யா எஸ்தான் - YA YEZDAN, பிலவட் காட் - BELOVED GOD, பரமாத்மா - PARAMATMA, அஹுரமஸ்தா - AHURAMAZDA, பரபிரம்மா - PARABRAHMA, அல்லா - ALLAH, சர்வவல்லமையுள்ள கடவுள் - GOD ALMIGHTY, குதா - KHUDA போன்றவை) திரும்பத் திரும்பக் கேட்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, கைக்கோபாத் தனது கால்களை ஒரு குறுகிய இருக்கையில் வைத்துக்கொண்டு இறை நாமத்தை ஒன்றன் பின் ஒன்றாக உச்சரித்து வந்ததை, மண்டலி கண்டுபிடித்தனர்; அவர் அவ்வாறு செய்த ஒவ்வொரு முறையும், பாபா, கைக்கோபாத்தின் கால்களை நெற்றியால் தொட்டு வணங்கினார். அது பல மணிநேரம் தொடர்ந்தது. ஆயிரக்கணக்கான முறை கடவுளின் பெயரை உச்சரிக்கவே, பாபா அத்தனை முறையும் தலைவணங்கினார். அவதார புருஷரின் உலகளாவிய பணியை எவரால் புரிந்து கொள்ள முடியும்?

ஜால் வில்லாவில் அவரவர் பணியில் மும்முரமாக இருந்தவர்களைத் தவிர, வேறு எவரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. வாரத்தின் ஒவ்வோர் ஐந்தாவது நாளிலும், மெஹரா, மணி இருவரையும் ஜால் வில்லாவிற்கு அழைப்பதை பாபா, வழக்கமாகக் கொண்டார். கோஹெர் அவர்களுடன் வந்தாலும், பங்களாவிற்கு வெளியே காத்திருந்தார்.

1955 மே 5ஆம் நாள், பெரில் வில்லியம்ஸுக்கு (BERYL WILLIAMS) எழுதிய கடிதத்தில், ஜால் வில்லாவைப் பற்றி மணி விவரித்தார்:

மெஹராவும் நானும் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்படுவதால் - நேற்று நாங்கள் சென்றோம். பாபா எங்களுக்கு

வீட்டைச் சுற்றிக் காண்பித்தார். இது ஒரு பழைய வீடு, ஆனால் பலவிதமான சூழ்நிலைகள் அங்கு நிலவியது, முன் ஜன்னல்களில் ஒன்றிலிருந்து அழகான இயற்கைக் காட்சியைக் காணமுடிந்தது. ஒரு பெரிய பிரதான அறை (உண்மையில் இது ஓர் இடைச்சுவரால் பிரிக்கப்பட்ட இரண்டு அறைகள்) அங்கு பாபா உடற்பயிற்சிக்காக முன்னும் பின்னும் நடந்து செல்கிறார், ஏனெனில் அவர் வீட்டை விட்டு, அல்லது வீட்டின் அந்தப் பகுதியை விட்டு வெளியே வரவில்லை. அவருடைய படுக்கையறை, அதை ஒட்டிய ஒரு சிறிய அறை (6X8 அடிக்கு மேல் இருக்காது), அங்கு அவர் தமது பணிக்காகத் தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்கிறார். அறையின் ஒரு மூலையில் சற்று உயரமான மற்றும் குறுகிய சிமெண்ட் தளம் இருந்தது, அதில் நமது ‘உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்’ பணிபுரியும் போது அமர்ந்திருக்கிறார்.

ஆதி சீனியர் 1955 மே 18 அன்று சத்தாராவிற்கு அழைக்கப்பட்டார். மே 22 ஞாயிற்றுக்கிழமை இரவு 7:00 மணிக்கு, பாபா அனைத்து ஆண் மண்டலியையும் ஜால் வில்லாவிற்கு அழைத்தார். குருநாதரின் ‘பர்வர்திகார் பிரார்த்தனை’ (PARVARDIGAR PRAYER) மொழியப்பட்டது, நள்ளிரவு கடந்து ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா, ஜால் வில்லாவிலிருந்து கிரா:ஃப்டனுக்குச் சென்றார். அனைத்து மண்டலியும் உடன் சென்றனர், அவரது விருப்பத்திற்கு இணங்க அனைவரும் காலை 5:00 மணி வரை விழித்திருந்தனர்.

பாபா கிரா:ஃப்டனில் தமது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்த வேளையில் ரோஸ்வுட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டார். எப்போதேனும், அவர் மண்டலியை அங்கு அழைத்து கிரா:ஃப்டனில் அவர்களுடன் சீட்டு விளையாடுவதை வழக்கமாகக் கொண்டார். பாபா, நீலுவிடம் கவிதைகள் இயற்றக் கூறியபோது, மிகுந்த முயற்சியுடன் ஒரு நாளைக்கு ஒரு ‘கவிதை’ எழுதி பாபா முன்னிலையில் வாசித்தார். நீலுவின் விதவிதமான வசனங்கள் இப்படி ஒலித்தன:

குமார் ஒரு மூங்கில்,
குலாப் ஜாமூன் உங்கள் வாயில்!
எரச் மெல்வது குரும், குரும்
குமார் (அமைதியாக) முறும், முறும்!

அவருடைய வரிகளை வாசிப்பதற்கு முன்னர், அவர் எந்த விதமான உத்வேகத்தை அடையப் பெற்றார் என்பதை முதலில் பாபாவிடம் கூறினார், “இன்று எனக்கு எந்த உத்வேகமும் வராமல், மிகவும் சிரமப்பட்டேன்; நான் கழிப்பறைக்குச் சென்றதும், அங்கு உத்வேகம் பிறந்தது. உடனடியாக, நான் எனது குடல்களை அசைக்காமல் வெளியே வந்து, இந்த வரிகளை எழுதினேன்.”

ஒரு நாள் நீலு, பாவ் கல்சூரியிடம் வேண்டினார், “என்னால் கவிதைகள் எதையும் யோசிக்க முடியவில்லை, தயவுசெய்து எனக்கு உதவுங்கள்.”

பாவ் நான்கு வரிகளை எழுதினார், ஆனால் நீலு மாலையில் பாபாவிடம்

அவற்றைப் படித்தபோது, பாபா, பதட்டமடைந்த பாவ் கல்சூரியைத் தீவிரமாக உற்று நோக்கினார். பாபா, நீலுவிடம், "**இன்று வசனம் சரியில்லை**" என்றார்.

"ஆமாம் பாபா எனக்கும் இது பிடிக்கவில்லை" என்றார் நீலு.

கிரா∴ப்டனிலிருந்து வரும் வழியில், நீலு, பாவ் கல்சூரியிடம், "எதுகை, மோனையுடன் கவிதை எழுதுவது உத்வேகத்திலிருந்து பிறப்பது, எல்லோரிடமும் அது இருப்பதில்லை. ஆனால் கழிப்பறையில் நான் அதை அடையப் பெறுகிறேன்!" என்று கூறினார்.

நீலுவின் கைவண்ணத்தில் பாபா மிகவும் ஆர்வமாக இருந்தார், மேலும் அவரிடம் கூறினார்: "**கவிதைகளை எதுகை, மோனையுடன் சிறப்பாக எழுதுங்கள், அவை பின்னர் அச்சிடப்படும்.**"

அவர் பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தினார், "**நீலு கவிதைகளை முடித்து உங்களிடம் கொடுக்கும்போது, அவற்றை மும்பையில் நரிமனுக்கு அனுப்பி வைத்து அச்சிடக் கூறுங்கள்.**"

நீலுவின் இந்தக் கவிதை எழுதும் செயற்பாடு பாபாவின் ஏகாந்தவாசம் முடியும் வரை நீடித்தது, அது எப்பொழுதும் பாபாவை நல்ல மனநிலையில் வைத்திருக்க உதவியது.

மேக்ஸ் ஹெ∴ப்லிகருக்கு (MAX HAEFLIGER) எழுதிய கடிதத்தில் (1955 செப்டம்பர் 15), நீலு தனது சில அனுபவங்களை இந்த நேரத்தில் விவரிக்கிறார்:

பாபா எழுத்துப்பலகையைக் கைவிட்டுவிட்டார் என்பது உங்களுக்குத் தெரியும், ஆனால் எப்படியோ மிகவும் மர்மமான முறையில் அவர் என்ன கூற விரும்புகிறார் என்பதை எங்களுக்குப் புரிய வைக்கிறார், நாங்களும் அதை முழுமையாகப் புரிந்து கொள்கிறோம். எழுத்துப்பலகையைக் கைவிட்ட பின்னர், ஆரம்பத்தில் சிறிது காலம், விரலால் சுவரில் அல்லது தளபாடங்களில் எழுதுவது போல் இப்போது எதுவும் இல்லை. முகபாவங்கள், சைகைகள் மூலம் அவர் தமது எண்ணங்களையும், உணர்வுகளையும் நன்றாக வெளிப்படுத்துகிறார். ஓ, அவருடைய சக்தியை என்னால் விவரிக்க முடியாது! அதை அனுபவித்து உணர வேண்டும். அவர் சில நேரங்களில் மணிக்கணக்கில் இந்தப் புதிய வழியில், தெளிவான முறையில், நீண்ட விளக்கங்களை வழங்குகிறார். அவர் வெளிப்படுத்தும் மகத்தான சக்தியை என்னால் எழுதவும் விவரிக்கவும் முடியாது.

அவர் மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தமது முக்கியமான சிறப்பு ஏகாந்தவாச பணிகளை மேற்கொண்டார். நான் மிகவும் அதிர்ஷ்டசாலி, ஏனெனில் பாபாவின் பணியின் இந்தக் கட்டத்தில், நான் அவருக்கு அருகிலும், மிகவும் நெருக்கமாகவும் இருந்தேன். அந்த நேரத்தில் அவர் வெறுமனே ஒளிர்ந்த வண்ணம், சக்தியை வெளிப்படுத்தினார், கண்கள் பிரகாசத்தில் நளினத்துடன் இயங்கியது போலத் தோன்றின. அவர் வியக்கத்தக்க வகையில் அற்புதமாகவும் காணப்பட்டார். தற்சமயம் அவரும் தனது தனித்தன்மைமிக்க பணிகளில் முழு முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்; அதை என்னால் விவரிக்க முடியாது. அவரிடமிருந்து வெளிப்படும் அளப்பரிய சக்தியை நான் உணர்கிறேன். அவரது

முன்னிலையிலும், சகவாசத்திலும் ஒருவர் தன்னை மறந்து அவரது தெய்வீக அன்பின் ஆற்றலையும் ஒருவித மனநிறைவையும் மகிழ்ச்சியையும் உணர்கிறார். ஆனால் இது அனைத்தும் அவரது விருப்பத்தைப் பொறுத்தது.

1955 ஜூன் 1 புதன் அன்று, மெஹரா, மணி, கோஹெர், ரானோ, நாஜா, மெஹரு ஆகியோருடன் சத்தாராவிலிருந்து மெஹர்ஜியின் புதிய காரில், பாபா, உல்லாசப் பயணமாக மஹாபலேஷ்வருக்கு அதிகாலையில் புறப்பட்டுச் சென்று, அன்று மாலையே சத்தாராவிற்குத் திரும்பி வந்தார்.

மறுநாள், இரவு 7:00 மணிக்கு எரச், பைதூல், குமார், மெஹர்ஜி ஆகியோருடன் பாபா, மஸ்த் தொடர்புகளுக்காக இஸ்லாம்பூர், கோலாப்பூர், ஸாவந்த்வாடி, பெல்காவ்ம், ஹூப்ளி ஆகிய நகரங்களுக்குப் புறப்பட்டுச் சென்றார். அதிகாலை 2:00 மணியளவில் ஸாவந்த்வாடியை வந்தடைந்த பாபா, '**இந்த கிராமத்தின் தலைவரை தூக்கத்திலிருந்து எழுப்பி, இங்கு ஏதேனும் மஸ்த் இருக்கிறாரா**' என்று விசாரிக்குமாறு பைதூலுக்கு அறிவுறுத்தினார். ஒரு பெரிய அறையில் தூங்கிக் கொண்டிருந்த அந்த மனிதரை பைதூல் எழுப்பிக் கேட்டபோது, அந்த நபர், நள்ளிரவில் எழுப்பப்பட்டதற்காக அதிருப்தி அடையாமல், ஒரு மஸ்தைப் பற்றிய விபரங்களை வழங்கினார். பின்னர் அவர்கள் உணவகம் ஒன்றில் தேநீர் அருந்தச் சென்றனர், அதுவும் மூடப்பட்டிருந்தது. உரிமையாளரை எழுப்பியதும் அவர், அனைவருக்கும் தேநீர் தயார் செய்தார். பாபாவின் மறைமுகத் தொடர்பு காரணமாக, கிராமத் தலைவர், உணவக உரிமையாளர் இருவரும் இவ்வளவு தாமதமான நேரத்திலும் விழித்தெழுந்தது, அவர்கள் அதிர்ஷ்டம். ஸாவந்த்வாடியின் மஸ்தைத் தொடர்பு கொண்ட பிறகு, பாபா ஹூப்ளி நகருக்குப் புறப்பட்டுச் சென்று, அதிகாலை 4:00 மணிக்கு வந்தடைந்தார். 460 மைல்கள் தொடர்ந்து பல்வேறு இடங்களுக்குப் பயணித்து, பாபாவும் மண்டலியும 3ஆம் தேதி மாலை 6:00 மணிக்கு சத்தாராவிற்குத் திரும்பி வந்தனர்.

ஜூன் 4ஆம் நாள், மாலை 5:00 மணிக்கு, எரச், பைதூல், குமார், பாவ் கல்சூரி ஆகியோருடன் மீண்டும் மெஹர்ஜியின் காரில், பாபா ஸாவந்த்வாடிக்குப் புறப்பட்டுச் சென்று, அன்று நள்ளிரவு 1:30 மணிக்கு ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார். பின்னர் அவர் இஸ்லாம்பூர் மற்றும் கோலாப்பூர் நகர்களில் வாழ்ந்த மஸ்துகளை மீண்டும் தொடர்பு கொண்டு, 5ஆம் தேதி பிற்பகல் 1:00 மணிக்கு சத்தாராவிற்குத் திரும்பினார்; 20 மணி நேரத்தில் 430 மைல் பயணம் செய்துள்ளார். "திரும்பி வந்த வேளையில் பாபாவும் மண்டலியும் முற்றிலும் சோர்ந்து போயிருந்தனர்" என்று மணி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

1955 ஜூன் 8 புதன்கிழமை முதல் பாபா, ஜால் வில்லாவில் தமது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்து, கைக்கோபாத்துடன் பணிபுரிந்தார். ஒரு நாள் அவர் கூறினார், "**பிரபஞ்சத்திற்காக நான் செய்யும் பணியின் பாரம் மிகவும் பெரியது. நமக்குப் பொழுதுபோக்காக ஏதேனும் தேவை - நாம் கிரிக்கெட்**

**விளையாட வேண்டும்!**" எனவே எரச், பெண்டு இருவரையும் பொருத்தமான விளையாட்டு மைதானத்தைக் கண்டுபிடிக்க பாபா அனுப்பி வைத்தார்.

எரச்சும், பெண்டுவும் சத்தாராவிலிருந்து 13 மைல் தொலைவில் அமைந்த உட்தாரா (UDTARA) என்ற இடத்தில் ஓர் மைதானத்தைத் தேர்ந்தெடுத்தனர். பாபா அந்த இடத்தைப் பார்க்கச் சென்று (அதற்கு முன்பு பலவற்றை நிராகரித்த பின்னர்) ஒப்புதல் அளித்தார். பெண்டுவிற்கு அந்த மைதானத்தை சமன் செய்து தயார் படுத்த உத்தரவிடப்பட்டது. 19ஆம் தேதி நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டிக்கு பல நெருங்கிய அன்பர்கள் அழைக்கப்பட்டனர்.

ஜூன் 15 அன்று மாலை, ஜால் வில்லாவிலிருந்து நேரடியாகப் புறப்பட்டு, பாபா மீண்டும் அதே மஸ்துகளைத் தொடர்பு கொள்வதற்காக, காரில் இஸ்லாம்பூர் மற்றும் கோலாப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பாபாவுடன் எரச், பைதூல், பாவ், குமார் ஆகியோர் சென்றனர். குமாரின் வேடிக்கையான கதைகள் இரவும் பகலும் தொடர்ச்சியான பயணத்தின் போது, அனைவரையும் விழித்திருக்கச் செய்தது. பாபா தனது பணியை நிறைவு செய்து, பிற்பகல் 2:00 மணிக்கு சத்தாராவிற்குத் திரும்பி வந்தார். அடுத்த நாள், கிராஃப்டனில் தங்க முடிவு செய்தார்.

ஜூன் 18 சனிக்கிழமையன்று, கிரிக்கெட் போட்டிக்காக பின்வரும் அன்பர்கள் சத்தாராவிற்கு வந்தனர்: ஆதி சீனியர், பாதிரி, சகன், டாக்கே, சிது, காக்கா, மெஹர்ஜி, நரிமன், ஸரோஷ், சதாஷிவ் பாட்டீல், மெஹர்வான் ஜெஸவாலா, ஜங்கூ, தாதி கேரவாலா, பாபாவின் சகோதரர்கள் ஜால்பாய், பெஹராம், ஆதி ஜூனியர் ஆகியோர். அனைவரும் ரோஸ்வுட் அருகே அமைந்த அரசு விடுதியில் தங்கினர். அன்று மதியம், முன்னதாக வந்தவர்களில் சிலரை பாபா சந்தித்தார்.

மறுநாள் அதிகாலையில், எரச், மெஹர்ஜியின் காரில் பாபாவை பன்னிரெண்டு மைல் தொலைவில் அமைந்த உட்தாராவிற்கு அழைத்துச் சென்று, அங்கு அவர் இந்தக் குழுவையும், சத்தாராவில் வாழும் மண்டலியையும் சந்தித்தார். ஆய்வு பங்களா ஒன்றை ஒட்டியிருந்த சில மாமரங்களுக்குக் கீழே, பாபா அனுமதித்ததன் அடிப்படையில், அன்பர்களுடன் (ரப்பர் பந்தைப் பயன்படுத்தி) கிரிக்கெட் விளையாடினார். பாபா மிகவும் அற்புதமான மனநிலையில் காணப்பட்டார். பாபாவின் அறிவுறுத்தலின்படி கிரிக்கெட் போட்டி வழக்கத்திற்கு மாறாக தீவிரமாக விளையாடப்பட்டது. ஒவ்வொரு பக்கத்திலும் பத்து விளையாட்டு வீரர்கள் இருந்தனர், ஒவ்வோர் அணியிலும் பதினொன்றாவது நபராக பாபா இருபுறமும் விளையாடினார். நரிமன், ஸரோஷ் இருவரும் அணிகளுக்குத் தலைவர்களாக இருந்தனர், ஆனால் பாபா ஒவ்வோர் அணியையும் தேர்வு செய்தார்.

இடை வேளையில் மாமரத்தின் நிழலில் அமர்ந்து சிற்றுண்டி உண்டனர்.

காலை 11:00 மணியளவில், விளையாட்டின் முடிவில் ஆட்டப் புள்ளிகள் சமமாக இருந்தன. பாபா அவர்களை ஓய்வறைக்கு அழைத்துச் சென்று,

மும்பையிலிருந்து நரிமன் கொண்டு வந்த தின்பண்டங்களையும், சிறப்பாக விளையாடிய சிலருக்கு சிறு பணப் பரிசுகளையும் வழங்கினார். பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "**உலகில் அனைத்தும் வாழ்வதற்குக் காரணமாக இருப்பது சுய அகந்தை** (EGO, **அகங்காரம்**). **சுய அகந்தை அகற்றப்பட்டால், அனைத்தும் மறைந்துவிடும். உங்களில் எவரேனும் அதன் பொருளைப் புரிந்துகொண்டீர்களா அல்லது அனுபவித்திருக்கிறீர்களா? ஒருவருமில்லை! அரிதான ஒருவர் மட்டுமே அதை அனுபவிக்கிறார்**."

பாபா, பின்னர் அன்பர்களுடன் சீட்டு விளையாடிவிட்டு மாலை 5:00 மணிக்கு சத்தாராவிற்குத் திரும்பிச் சென்றார். ஔரங்காபாத்திலிருந்து கவாலி பாடகர் ஒருவர் அழைக்கப்பட்டு, கிராஃப்டனில் இரவு 7:30 முதல் 10:30 மணி வரை கவாலி நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னர், அலோபா ஒரு பாரசீக கவிதையை உரக்க வாசித்தார். பெண் மண்டலியும் அனுமதிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியை பாபா மிகவும் ரசித்தார்.

அதற்கு பிறகு, பாபா, அன்பர்கள் ஒவ்வொருவரும், அவரவர் இறை நாமத்தை மொழிந்த அந்த நேரத்தில், அனைவரின் கால்களிலும் தலைவணங்கினார்; அத்துடன் அன்றைய நடவடிக்கைகள் நிறைவடைந்தன. மறுநாள் காலையில் வேறு இடங்களிலிருந்து வந்த அன்பர்கள் தத்தமது இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர். விளையாட்டுப் போட்டி நடந்த நாளில் பருவமழைக்கு முந்தைய வானிலை சாதகமாக இருந்தது, ஆனால் அடுத்த நாள், கனமழை பொழியத் தொடங்கியது.

உட்தாராவில் கிரிக்கெட் போட்டி மிகவும் ஆவேசமாக விளையாடப்பட்டது, அதில் பங்கெடுத்த அனைவரும் அதன் பிறகு பல நாட்கள் தசைகள் விறைத்து வலியால் அவதிப்பட்டனர். பாபா உண்மையில் ஒவ்வொருவருக்கும் விளையாட்டுக்குப் பின்னர் ஏதாவது வலி இருக்கிறதா என்று கேட்டு கடிதங்களை அனுப்பினார். ஒவ்வொருவருக்கும் பல்வேறு வலிகளும், ஒரு சிலருக்கு லேசான காய்ச்சல் இருப்பதாகவும் பதில்கள் வந்தன. அவர்கள் உட்தாராவிலிருந்து புறப்படும் வேளையில், சாலையின் அருகே, பாபா, "**இந்த இடத்தை நினைவில் கொள்ளுங்கள்**" என்று குறிப்பிட்டிருந்தார். பாபா ஏன் இப்படிக் கூறினார் என்று அவர்களுக்கு அப்போது புரியவில்லை. ஆனால் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, மெஹர் பாபாவின் இரண்டாவது வாகன விபத்து இந்த இடத்திற்கு அருகில் நடந்தபோது அவருடைய இந்த வார்த்தைகளின் முக்கியத்துவம் புலப்பட்டது.

1955 ஜூன் 23 வியாழன் அன்று மாலை, எரச், பைதூல், பாவ் கல்சூரி, குமார் ஆகியோருடன் பாபா, இஸ்லாம்பூர், கோலாப்பூர், ஸாங்ளி, மீரஜ் ஆகிய நகரங்களுக்குச் சென்று, மீண்டும் மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். மஸ்த் பணியை நிறைவு செய்து பாபா மறுநாள் காலை 8:00 மணிக்கு சத்தாரா திரும்பி வந்தார்.

ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 26 முதல் 30ஆம் தேதி வரை, பாபா ஜால் வில்லாவில் காலை இரண்டு மணி நேரம் மற்றும் மதியம் ஒரு மணி நேரம் கைக்கோபாத்துடன் தமது ஏகாந்தவாசப் பணியைத் தொடர்ந்தார்.

30ஆம் தேதி மதியம் 2:00 முதல் மறு நாள் மதியம் 2:00 மணி வரை, பாபா கிராஃப்டனில் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் மேற்கொண்டார்.

1955 ஜூலை 2 அன்று, பாபா, கைக்கோபாத்துடன் ஜால் வில்லாவில் ஒன்றரை மணி நேரம் பணிபுரிந்தார்.

ஜூலை 4 முதல் 10 வரை, பாபா, கைக்கோபாத்துடன் தமது பணியைத் தொடர்ந்து, மேலும் ஒரு குறுகிய அளவிலான உபவாசத்தைத் தொடங்கினார். காலை 6:00 மணிக்கு தேநீர்; 11:00 மணிக்கு சாதம், பருப்பு; இதற்குப் பின்னர் அவர் மறுநாள் காலை தேநீர் அருந்துவது வரை எதுவும் உண்ணவில்லை. “பாபா தினமும் காலையில் ஒரு சில மண்டலியுடன் (குடைகள் மற்றும் மழைக்கோட்டுகளுடன்) நடக்கச் செல்கிறார்!” என்று மணி மேற்கத்திய அன்பர்களுக்கு எழுதினார்.

1955 ஜூலை 10 ஞாயிற்றுக்கிழமை, மெஹர் பாபாவின் மௌன நாள் அன்று, ஆண், பெண் மண்டலி அனைவரும் மௌனம் காத்து, அன்றைய தினம் ஒரு வேளை உணவை மட்டுமே உண்டனர். இந்தியா, பாகிஸ்தான், ஐரோப்பா, அமெரிக்கா தேசங்கள் மற்றும் இதர இடங்களில் வாழும் பாபாவின் அன்பர்களும் மௌனம் கடைப்பிடிக்குமாறு கட்டளையிடப்பட்டனர், ஆனால் உபவாசம் கூடாது.

இந்தியா, பாகிஸ்தான், மற்றும் இதர இடங்களிலும், சத்தாராவிலும், அவரது விருப்பத்திற்கு இணங்க, பாபாவின் நாமம், மே 1 முதல் ஜூலை 31ஆம் தேதி வரை, திரும்பத் திரும்ப மொழியப்பட்டது; மண்டலி, தொடர்ந்து மாறி மாறி தொடர வேண்டும். ஒரு நாள், பாவ், குமார் இருவரும் பாபாவை, ஜால் வில்லாவிலிருந்து கிராஃப்டனுக்கு அழைத்துச் சென்ற பிறகு, பாவ், குறிப்பிட்ட நேரம் கடந்து விட்டதால், ரோஸ்வுட்டுக்குத் திரும்பாமல் அங்கேயே நாமத்தை உச்சரிக்கும் பிரார்த்தனையில் அமர்ந்தார். அவர் கண்களை மூடிக்கொண்டு, ‘ஓம் பரபிரம்மா, பரமாத்மா’ என்று திரும்பத் திரும்ப மொழியத் தொடங்கினார், ஆனால் அவரது மனம் அங்கும் இங்கும் அலைந்து கொண்டே இருந்தது. விரக்தியடைந்த பாவ், ஒரு கட்டத்தில் தனக்குள் நினைத்துக் கொண்டார்: “கடவுளின் பெயரை இயந்திரத்தனமாக திரும்பத் திரும்பச் சொல்வதால் என்ன பயன்?”

இதற்கிடையில், பாபா மீண்டும் ஜால் வில்லாவிற்கு வந்து, பாவ் கல்சூரிக்கு அருகில் அமைதியாக நின்றார். அவரது கண்கள் மூடப்பட்டிருந்ததால், பாபா அங்கு இருந்ததை அவர் அறியவில்லை, ஆனால் சிறிது நேரம் கழித்து, பாபா அவரது தலையில் தட்டினார். கண்களைத் திறந்து பார்த்தபோது பாபா தனக்கு முன்னால் நிற்பதைக் கண்டு அவர் திடுக்கிட்டார். பாபா கேட்டார்,

**“உங்கள் மனம் எங்கே அலை பாய்ந்து கொண்டிருந்தது? கடவுளின் பெயரை முழு மனதுடன் உச்சரிக்க வேண்டும்!”**

அதற்கு பாவ், “என்னால் அதைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை பாபா. நான் நாமத்தை உச்சரிக்க முயலும்போது மனம் அதிகமாக அலை மோதுகிறது” என்றார்.

பாபா கூறினார், “**இத்தகைய பிரார்த்தனையால் எந்த பயனும் இல்லை. கடவுள் அதைக் கேட்பதுமில்லை. ஆனால் நான் அதைச் செய்யுமாறு உங்களுக்குக் கட்டளையிட்டதால், பொறுப்பு என்னுடையது. நீங்கள் அதை உண்மையாகச் செய்ய வேண்டும் என்பதை நினைவூட்டவே வந்தேன்.**”

பின்னர், “**எண்ணங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். மனம் உங்கள் கையில் இல்லை. நான் உங்களுக்கு அறிவுறுத்தியதால் நீங்கள் கடவுளின் பெயரை மீண்டும் கூறுகிறீர்கள். நீங்கள் என் வழிமுறைகளைப் பின்பற்றுகிறீர்கள். அதுதான் முக்கியம்.**”

பாபா மேலும் கூறினார், “**நீங்கள் கொசுவலைக்குள் இருக்கும் வேளையில், கொசுக்கள் திரைக்கு வெளியே சலசலப்பை ஏற்படுத்தும் சத்தத்தை நீங்கள் கேட்டாலும், அவை உங்களைத் தீண்டமுடியாது. நீங்கள் அவற்றிலிருந்து பாதுகாக்கப் படுகிறீர்கள், அவை உங்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காது. எண்ணங்கள் கொசுக்கள் போன்றவை. அன்பின் திரையையும், என் நினைவையும் உங்கள் இதயத்தைச் சுற்றி வேலிபோல் அமைப்பதானால், எண்ணங்களால் உங்களுக்கு எந்தத் தீங்கும் நிகழாது. எனவே எண்ணங்களைப் பற்றி கவலைப்படாதீர்கள். என்னை நினைவில் கொண்டு நேசியுங்கள். உங்களைக் காக்க நான் இங்கே இருக்கிறேன்.**”

குருநாதரின் விருப்பத்தை நிறைவேற்றுவது குறித்த மற்றுமொரு முக்கியமான நிகழ்வு பின்வருமாறு. பாபா முதன்முதலில் சத்தாராவிற்குச் சென்றபோது நடந்த சம்பவம். மும்பையிலிருந்து மெஹர்ஜியின் காரை பாபா வரவழைத்தபோது, அதை அவரது ஓட்டுநர் கொண்டு வந்தார்.

சத்தாராவிலிருந்து சிறிது தூரத்தில், கார் விபத்தில் சிக்கியது; பலத்த காயமடைந்த ஓட்டுநர் ‘வை’ (WAI) கிராமத்தில் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் செய்தி சத்தாராவை எட்டியதும், எரச் அவசரமாகப் புறப்படத் தயாரான அதே நேரத்தில், பாபா மண்டலிக்கு இனிப்புகளை வழங்கத் தொடங்கினார். பாபா, பிரசாதத்தைப் பெற எரச்சை அழைத்தார், ஆனால் அவர், “அந்த ஏழை அங்கே உயிரைத் துறக்கும் நிலையில் இருக்கும்போது, நான் இனிப்புகளை உண்பதா?” என்று கேட்க, பாபா அமைதியாக இருந்து, எரச்சின் பங்கை அவரிடம் கொடுத்தார்.

எரச் சென்ற பின்பு, பாபா பிற மண்டலியிடம் கூறினார்: “**எனது கட்டளைக்கு முன்னால் அத்தகைய அனுதாப உணர்வுகளுக்கு எந்த இடமுமில்லை. எனது விருப்பத்திற்கு மாறாக அவற்றிற்கு என்ன மதிப்பு இருக்கிறது? என்னை மகிழ வைப்பது முக்கியம் என்றாலும், அதை நினைவில் கொள்வது என்பது மிகப் பெரிய விஷயம். என்னைப் போல**

**பிறரை கவனத்தில் கொள்பவர் வேறு எவரும் இருக்க முடியுமா? அனைத்தும் எனது கைகளில் உள்ளது, எனது விருப்பம் நிறைவேறினால் எல்லாம் நன்றாக இருக்கும்.”**

எரச், பெண்டு இருவரும் மருத்துவமனைக்கு வந்தபோது ஓட்டுநர் நன்றாக கவனிக்கப்பட்டதைக் கண்டனர்.

1955 ஜூலை 13 அன்று, எரச், பைதூல், விஷ்ணு, குமார் ஆகியோருடன் பாபா, சத்தாராவிலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, நள்ளிரவு வரை பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். நரிமனின் கார் மும்பையிலிருந்து அவர்களுக்காக அனுப்பப்பட்டது, ஆனால் அது சத்தாரா செல்லும் பாதையில் பழுதடைந்ததால், அவர்கள் உள்ளூர் வாடகைக் கார் ஒன்றில் பயணம் செய்தனர். மறுநாள் பாபா மும்பையிலிருந்து மெஹராஸாத்திற்கு மெஹர்ஜியை அழைத்துச் சென்றார்.

அஹமதுநகர் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் பாபா பெட்ரோலுக்காக நின்றபோது, ஆதி சீனியரை அங்கே அழைத்து, ரானோவின் கைவண்ணத்தில் உருவான இரண்டு விளக்கப்படங்களை ஆதியிடம் காட்டி, பாபா அதன் பிரதிகளை உருவாக்கும் விருப்பத்தைத் தெரிவித்தார். மேலும் பாபாவைப் பற்றிய கட்டுரைகளை, டோக்கியோ நகரில் வாழும் ஹிட்டாக்காவிற்கு அனுப்புவதற்காக ஆதியிடம் கொடுக்கப்பட்டது; அங்கு ஆகஸ்ட் மாதம் நிகழவிருக்கும் உலக மதவாதிகள் மாநாட்டில் (CONFERENCE OF WORLD RELIGIONISTS) அதை அவர் வழங்க இருந்தார்.

அடுத்த நாள், ஜூலை 15, பாபா மெஹராபாத் சென்று, மஸ்த் அலி ஷாவுடன் பணிபுரிந்து, அதே நாள் நள்ளிரவில் சத்தாராவிற்குத் திரும்பி வந்தார். வரும் வழியில் குல்மாய், ஸரோஷ் மற்றும் ஸவக் தமானியாவைப் பார்க்க சிறிது நேரம் நின்றார்.

ஜூலை 17 அன்று மதியம் 2:00 மணிக்கு, எரச், பெண்டு, பைதூல், குமார் ஆகியோருடன் பாபா, 49 மைல் தொலைவில் அமைந்த ஃபல்டன் (PHALTAN) நகரத்திற்குச் சென்று, பைதூல் கண்டுபிடித்த ஒரு பழைய இந்து மஸ்தைத் தொடர்பு கொண்டார். அவர் ஆன்மீக நிலையில் உயர் மட்டத்தில் இருந்ததாக பாபா சுட்டிக்காட்டினார். பாபா அன்று இரவு சத்தாராவிற்குத் திரும்பி வந்தார்.

அடுத்த பன்னிரண்டு நாட்களுக்கு, ஜூலை 30ஆம் தேதி வரை, பாபா, ஜால் வில்லாவில் கைக்கோபாத்துடன் தமது ஏகாந்தவாச பணியில் தீவிரமாக ஈடுபட்டார். இந்தக் காலகட்டத்தில் குமார் டெஹ்ரா டூனுக்குத் திரும்பிச் சென்றார். ‘ஒவ்வொரு காலையிலும் பாபா, கைக்கோபாத்துடன் சில மணிநேரம் பணிபுரிகிறார்’ என்று மணி மேற்கத்திய அன்பர்களிடம் கூறினார், ‘அவர் வெளியளவில் ஓய்வெடுப்பது போலத் தோன்றினாலும், தனது பணியில் தீவிரமாக இருக்கிறார்.’

ஆதி ஜூனியர் இங்கிலாந்து நாட்டில் குடியேற திட்டமிட்டு, பூனாவிலிருந்து அஹமதுநகர் வந்து தங்கினார்; ஆதி சீனியர் அவரையும் ஃபிரீனியையும் ஜூலை 30ஆம் தேதி சத்தாராவிற்கு அழைத்து வந்தபோது, இருவரும் பாபா மற்றும் மணியுடன் தங்கள் திட்டங்களைக் குறித்து விவாதித்தனர். அடுத்த மார்ச் மாதம் வரை பயணத்தை ஒத்திவைக்குமாறு பாபா கூறினார். ஆதி சீனியர், மெஹராவின் சகோதரி ஃபிரீனி நாசிக்கிலிருந்து மெஹராவிற்கு அனுப்பி வைத்த ஆடைகள் அடங்கிய பெட்டியை ஒப்படைத்தார்.

ஜூலை 31 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா 51 ஏழைகளின் கால்களைக் கழுவி, அவர்களைத் தலை வணங்கிய பின்னர், ஒவ்வொருவருக்கும் தமது அன்புப் பிரசாதமாகப் பணத்தை வழங்கினார்.

அன்றைய தினம், ஆந்திராவில் தனிமைப்படுத்தப்பட்ட ஓரிடத்தில் கடந்த பதினான்கு ஆண்டுகளாக மௌனம் கடைப்பிடித்து வந்த மௌனி புவா (MAUNI BUA), சத்தாராவிற்கு அழைத்து வரப்பட்டார். பாபா அவரிடம் 'ஓம் பரபிரம்ம பரமாத்மா' என்ற இறை நாமத்தை உச்சரித்து, அவர் முன்னிலையில் மௌனத்தைக் கலைக்குமாறு அறிவுறுத்தினார். 'ஓம் பரபிரம்ம பரமாத்மா' என்ற வார்த்தைகளை 40 நாட்கள் இரவும் பகலும் திரும்பத் திரும்ப மொழியுமாறும் பாபா கட்டளையிட்டார். அதன் பின்னர், அவர் மௌனத்தைக் கைவிட்டு சாதாரணமாகப் பேசத் தொடங்கினார். ஆனால் மௌனி புவா தனது மௌனத்தைத் தொடர்வதில் தீவிர ஆர்வம் காட்டியதால், இறுதியில் பாபா அவரை அவ்வாறு செய்ய அனுமதித்தார்.

இவ்வாறு மூன்று மாத ஏகாந்தவாசப் பணியை நிறைவு செய்ததில் பாபா தமது திருப்தியை வெளிப்படுத்தினார்.

கிராஃப்டன் அருகே ஒரு சலவைத் தொழிலாளி தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார். குடும்பத்தினர் தொடர்ந்து சண்டை சச்சரவுகளில் ஈடுபடும் வேளையில், சம்பந்தப்பட்டவர்களை அழைத்து, பாபா அவர்களைத் தன் முன்னால் அமரச் செய்து, சமாதானப்படுத்துவது வழக்கம். இந்த நேரத்தில் அவர் எவரையும் பார்க்க அனுமதிக்காத போதும், இந்த ஏழை சலவைத் தொழிலாளியின் குடும்பம் அவரது சகவாசத்தின் வளமான நன்மையை அறுவடை செய்து கொண்டிருந்தது. அந்த நபருக்கு, பதினான்கு குழந்தைகள்; பெரும்பாலும் அவருக்கும் அவரது மூத்த மகன்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் நடைபெற்றன. ஒருமுறை, தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்ட காரசாரமான விவாதத்திற்குப் பிறகு, பாபா இருவரையும் அழைத்தார். தந்தை பாபாவிடம் கூறினார், "நீங்கள் எனக்குக் கட்டளையிட்டால், நான் இந்த நேரத்தில், லங்கோட்டி அணிந்து, பண்டர்பூருக்குச் செல்லத் தயாராக இருக்கிறேன்; கீழ்ப்படிதலின் பொருள் இதுவல்லவா? இந்த 'ஒன்றுக்கும் உதவாத' எனது மகனுக்கு நீங்கள் அறிவுறுத்தினால், இப்படி அங்குச் செல்வானா இல்லையா என்று கேட்டுப்பாருங்கள்!" பாபா, தந்தையின் வாதத்தைக் கேட்டு மிகவும் அகமகிழ்ந்தார்; மேலும் சத்தாராவில் தங்கியிருந்த காலத்தில், குடும்பம்

ஒவ்வொரு நாளும், நடைமுறையில் அவரது தொடர்பில் வரும் பாக்கியத்தைப் பெற்றது. பாபாவின் அறிவுறுத்தலின்படி, கோஹெர் அந்தக் குடும்பத்தில் எவரேனும் நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை அளிக்க வேண்டும்.

எவருக்கும் தெரியாமல், சத்தாராவில் வாழும் மக்களுக்கு 'மருத்துவர் என்று அழைக்கப்படும்' வேறு ஒருவரும் சிகிச்சை அளித்து வந்தார். பல ஆண்டுகளுக்கு முன்னர், ஈரானில், பைதூல் ஒரு மருத்துவராகச் செயல்பட்டார், மேலும் பாபாவின் பெயரையும், ஆசீர்வாதத்தையும் உள்ளூர உதவிக்காகக் கோருவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களைக் குணப்படுத்தினார்; அவராகவே தயார் செய்த, வேகவைத்த பூண்டு எண்ணெயை வழங்கினார். சத்தாராவில், அவர்கள் தங்கியிருந்த பங்களாவிலிருந்து சற்று தூரத்தில், ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து, தினமும் 70 முதல் 80 பேருக்கு விரைவு சிகிச்சை வழங்கி வந்தார். பைதூல் தனது நோயாளிகளில் ஒவ்வொரு நபருக்கும் ஒரே ஹோமியோபதி மருந்தைக் கொடுத்து (வியாதி எதுவாக இருந்தாலும் சரி!) அரை மணி நேரத்திற்குள் ரோஸ்வுட் திரும்புவது வழக்கம்.

ரோஸ்வுட் அருகே வாழும் ஒரு கிறிஸ்தவ சிவில் அறுவை சிகிச்சை நிபுணர், டாக்டர். ஏ.ஈ. ஃபெர்னாண்டஸ் (DR. A.E. FERNANDES) , அவரது இளம் மகன் நாள்பட்ட தொண்டை நோயால் மிகவும் சிரமப்பட்டார். சிறுவனை குணப்படுத்த அறுவை சிகிச்சை நிபுணர் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார், ஆனால் பலனில்லை. ஒரு நாள் பைதூல் அந்தக் குடும்பத்தை சந்தித்த வேளையில், மருத்துவரின் மனைவி தனது மகனின் துயரத்தைப் பற்றி அவரிடம் எடுத்துரைக்க, பைதூல் உடனடியாக தனது 'மருந்தை' அந்த சிறுவனுக்கு வழங்கினார், ஆச்சரியப்படும் விதத்தில் சிறுவன் சில நாட்களில் குணமடைந்தான்.

ஆகஸ்ட் 5ஆம் தேதி பெண்டுவின் பிறந்தநாள். அன்று மாலை, மண்டலி ரோஸ்வுட்டில் அமர்ந்து அதை எப்படிக் கொண்டாடுவது என்ற சிந்தனையில் ஆழ்ந்தனர். அவர்களின் உணவுக்காக தினசரி பாபா வழங்கிய கட்டணம், மதியம் சாதம், பருப்பு, மாலையில் காய்கறியுடன் சப்பாத்திக்குப் போதுமானதாக இருந்தது. பாபாவின் அனுமதியின்றி சிறப்பு உணவு எதையும் தயார் செய்ய முடியாது என்பதால், வேறு எதையும் நினைத்துப் பார்க்கவுமில்லை. அதற்கு பதிலாக, பெண்டுவுக்காக ஒரு நகைச்சுவை நாடகத்தை அரங்கேற்ற முடிவு செய்தனர்.

எந்த முன் அறிவிப்புமின்றி, டாக்டர் ஃபெர்னாண்டஸிடமிருந்து ஒரு பணியாள் புதிதாகத் தயார் செய்த இனிப்புப் பண்டங்கள் நிறைந்த பெட்டி ஒன்றை எடுத்து வந்து, "டாக்டர் ஸாஹேப் எங்கே?" என்று விசாரித்தார். டாக்டர் நீலு, டாக்டர் டான் இருவரும் வெளியே வந்ததும், அந்த நபர், "இல்லை, இல்லை, எங்கள் டாக்டர், முதலாளியை சந்திக்க வரும் வேறொரு மருத்துவர்" என்றார். பைதூலின் ரகசியச் செயல்பாடு எவருக்கும் தெரியாததால், அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று புரியவில்லை. அந்த நேரத்தில் பைதூல் அறைக்குள்

நுழைந்ததைப் பார்த்ததும், அந்த நபர், “இதோ, இதோ, இவர்தான்; எனக்கு இந்த மருத்துவர் தேவை. அவருடைய சிகிச்சை எனது முதலாளி டாக்டரின் மகனுக்கு பயனுள்ளதாக இருந்தது. இதை அவருக்காக அனுப்பியுள்ளார்” என்றார்.

இனிப்புப் பண்டங்களின் அளவு அனைவருக்கும் போதுமானதாக இருந்தது, பெண்டுவின் பிறந்த நாள் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. பைதூல் மீது முதலாளி டாக்டரின் நம்பிக்கை மிகவும் அதிகமாக இருந்ததால், சில சமயங்களில் அவர் தனது சொந்த சிகிச்சை பயனளிக்காத நோயாளியைப் பரிசோதிப்பதற்காக, பைதூலை, தனது காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதுண்டு. இந்த சம்பவத்திற்குப் பிறகு, பாபா, பைதூல் மருத்துவராக நடிப்பதை நிறுத்தக் கூறினார். பைதூலின் சக்தி அவரது மருந்தில் இல்லை, ஆனால் அவர் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு சிகிச்சை வழங்கும் போதெல்லாம் பாபாவின் பெயரை நினைவில் கொள்வதில் இருந்தது.



ஆஷியானாவில்
**பாபா, 1955**
(BABA AT ASHIYANA**,** 1955)



ஷீபாவிற்கு
முத்தமளிக்கும்
காட்சி
(KISSING SHEBA)

# மும்பை & சத்தாரா - தரிசனங்கள்

(**Mumbai & Satara Darshans**)

இந்த நேரத்தில் பாபா, மும்பையில் தரிசனம் வழங்க இணக்கம் தெரிவித்தார்; தரிசன நிகழ்ச்சிக்கு வருபவர்களுக்காக, பாபா தனது வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 25இல் (LIFE CIRCULAR NO: 25, 1955 மே 1 அன்று வெளியிடப்பட்டது) மேற்கோள் காட்டிய வரிகளை ஒரு பலகையில் வரையுமாறு ஆதி சீனியருக்குத் தகவல் அனுப்பினார்.

**நான் எல்லா வாக்குறுதிகள், பிணைப்புகள், ஒப்பந்தங்கள், ஏற்பாடுகள் அனைத்திலிருந்தும் விடுபட்டுள்ளேன். ஆகவே, எந்த நேரத்திலும், எக்காரணத்தைக் கொண்டும், எவரும் என்னிடம் பொருள் அல்லது ஆன்மீக ரீதியில் எதையும் கேட்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் சிறந்தது என்று நான் நினைப்பதை, பொருத்தமான நேரம் என நான் கருதும்போது செய்வேன்.**

அதன்படி, ஆதி சீனியர் பலகையைத் தயார் செய்து சத்தாராவிற்கு அனுப்பி வைத்தார். மும்பை தரிசன நிகழ்ச்சியின் போது, அந்த அறிவிப்புப் பலகையைக் கழுத்தில் தொங்கவிட்டு, மக்கள் வரும்போது அதை முக்கியமாக அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று பாவ் கல்சூரிக்கு பாபா அறிவுறுத்தினார்.

எரச், பெண்டு, பாவ், அலோபா ஆகியோருடன், 1955 ஆகஸ்ட் 13 சனிக்கிழமையன்று அதிகாலையில் பாபா சத்தாராவிலிருந்து மும்பைக்கு புறப்பட்டுச் சென்றார். வழியில், பூனாவில் காடேக்கரின் இல்லத்தில் (24-பி மும்பை-பூனா சாலையில்) பாபா சிறிது நேரம் நின்றார். ஜால்பாய் மும்பை செல்வதற்காக அங்கே காத்திருந்து அவர்களுடன் இணைந்தார்.

அவரது பணி சுமைகளால் பாவ் கல்சூரி புறப்படுவதற்கு முன்பு, சத்தாராவில் தேநீர் அருந்த முடியாததால், பாபா, அவரை காடேக்கரின் இல்லத்தில் தேநீர் அருந்துமாறு கூறினார். காடேக்கரின் மனைவி குணாதாய் அனைவருக்கும் தேநீர் வழங்கிய பின்பு, பாபா, ஒரு தனி அறையில் காடேக்கருடன் சிறியதோர் உரையாடலை நிகழ்த்தினார். குணாதாய் தயார் செய்திருந்த உணவையும் பாவ் கல்சூரிக்கு வழங்கிய அவ்வேளையில், பாபாவின் கட்டளைகளை நினைவுகூர்ந்த பாவ், அதை மறுத்துவிட்டார்; ஆனால் அலோபா அதை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டு உண்டார். அப்போது அவர் முன் தோன்றிய பாபா, சீற்றத்துடன் அலோபாவை கடுமையாகக் கண்டித்தார். **"இங்கே உண்ணும் உணவு உங்களுக்கு எங்குமே கிடைக்காதா? சத்தாராவில் இருந்தபோது வெளி இடங்களில் உணவு உண்ணுவதில்லை என்று கூறினீர்கள். சுஷீலா இல்லத்தில் பஜ்ஜி உண்டதற்காக, பாவிற்கு எதிராகப் புகார் செய்தீர்கள். நீங்கள் சொன்னதற்கான உண்மையான காரணம் இப்போது எனக்குத் தெரியும். எனது கட்டளைகளை மீறியதற்காகப் புகார்**

**செய்யவில்லை, ஆனால் உங்களுக்கு பஜ்ஜி எதுவும் கிடைக்கவில்லை என்ற கோபம்! அப்போது உங்கள் நாணயத்தை வெளிப்படுத்தக் கூறினீர்கள்; இப்போது பன்றியைப் போல் உண்கிறீர்கள்!"**

இவ்வாறு சிறிது நேரம் பாபா, சுத்தியலால் அறைவது போலத் திட்டிக் கொண்டிருந்தார். அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்து, அன்று மதியம் மும்பை சென்றடைந்த பாபா, ஆஷியானாவில் தங்கினார். நரிமன், அர்னவாஸ் இருவரும் பாபாவிற்கும் அவரது மண்டலிக்கும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். தாதாசாஞ்சி குடும்பத்தைத் தவிர, ஜால் தஸ்தூர், அவரது வருங்கால மனைவி டாலி எஞ்சினீயர், தீனா தலாட்டி, அவரது இரண்டு மகள்கள், ஜிம் மிஸ்திரி, டாக்டர் தேஷ்முக், ஆதி சீனியர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மிகவும் நல்ல மனநிலையில் காணப்பட்ட பாபா, "**நல்லவர் யார்? தீயவர் யார்?**" என்ற கேள்வியை எழுப்பி, அதை விளக்குவதற்கு, அவர் இந்தக் கதையைக் கூறினார்:

**ஒரு காலத்தில், ஒரு திருடன், பல இடங்களில் பல முறை கொள்ளைகளில் ஈடுபட்டார். ஒரு நாள் அவர் ஒரு வீட்டிற்குள் நுழைந்த போது, அங்கு ஓர் ஏழைப் பெண்மணி குழந்தையை ஈன்றெடுக்கும் அந்தத் தருணத்தை நெருங்கவே, மிகுந்த வேதனையுடன் இருப்பதைக் கண்டார். அந்தப் பெண்மணி தனியாக இருந்ததால், மனமிரங்கி, அவர் வீட்டில் கொள்ளையடிப்பதற்கு பதிலாக, அந்தப் பெண்மணி, குழந்தையை ஈன்றெடுக்க உதவியாக இருந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார், வீட்டில் உண்ண எதுவும் இல்லை, தேவையான ஆடைகளும் இல்லை. எனவே அவர் வெளியே சென்று அந்தப் பெண்மணிக்கு வேண்டிய உணவு மற்றும் ஆடைகளை வாங்கினார். அந்தப் பெண்மணி தனது கால்களில் நிற்கும் வரை, ஒரு சில நாட்கள் அங்கேயே இருந்து, பின்னர் அவர் தனது வழியில் சென்றார்.**

**எனவே, இந்த மனிதனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் நல்லவரா? தீயவரா? திருடனாக இருந்ததால் மக்கள் அவரை தீயவர் என்று அழைக்கிறார்கள், ஆனால் அவர் முற்றிலும் தன்னலமற்ற சேவையைச் செய்துள்ளதால் நல்லவராக மாறினார். உண்மையில், நல்லது தீயது என்று எதுவும் இல்லை. எனக்குப் பிடிக்காத மூன்று விஷயங்கள்: பேராசை, கோபம், காமம். இந்த மூன்று விஷயங்கள், என்னைப் பொறுத்தவரை மோசமானவை, எனவே அவற்றிலிருந்து விலகி இருங்கள்.**

மாலை 5:00 மணிக்கு பாபா தனது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார். பாவ் கல்சூரி காலை 4:00 மணி வரை கண்காணித்ததைத் தொடர்ந்து அலோபா காலை 6:00 மணி வரை, இரண்டு மணி நேரம் கண்காணிக்க வேண்டும். அலோபா இதற்கு முன்னர் இரவு கண்காணிப்பாளராகப் பணியாற்றியதில்லை; அது அவரது முதல் நாள், எனவே பாபா, '**அவர் வரும்போது, சிறிதும் சத்தம் எழுப்பாமல் அமைதியாக அமர வேண்டும் என்று அவருக்குத் தெரிவிக்கவும்**' என்று பாவ் கல்சூரியிடம் கூறினார். அலோபா அதிகாலை 4:00 மணிக்கு வந்ததும்,

பாபாவின் அறிவுறுத்தல்களுடன் அவரை விட்டுவிட்டு, பாவ் அடுத்த அறைக்குச் சென்றார்.

ஆனால் பாவ் ஓய்வெடுக்கச் சென்ற சிறிது நேரத்தில் அலோபா அவரிடம் வந்தார். பாபாவின் அறைக்குள் பாவ் சென்றதும், **“அலோபாவிடம் சத்தம் எழுப்பக் கூடாது என்று நீங்கள் சொல்லவில்லையா? அவர் அதிகம் சத்தம் போடுகிறாரே!”** என்று கோபத்துடன் கேட்டார் பாபா. அலோபா நகரும்போது நாற்காலி சத்தமிட்டது. பாவ் மீண்டும் அவரிடம் அமைதியாகவும் அசையாமலும் இருக்குமாறு விளக்கி, மறுபடியும் அவர் ஓய்வெடுக்கச் சென்றார். ஆனால் மீண்டும், பதினைந்து நிமிடங்களில் அலோபா தோன்றி அவரை பாபாவிடம் அழைத்துச் சென்றபோது, அவர் மீண்டும் அலோபா சத்தம் எழுப்புவதாகப் புகார் கூறினார். இது காலை 5:00 மணி வரை நீடித்தது, பாவ் இப்போது தரிசன நிகழ்ச்சிக்குத் தயாராக வேண்டும்.

1955 ஆகஸ்ட் 14 ஞாயிற்றுக்கிழமை காலை 7:00 மணிக்கு பொது தரிசனம் தொடங்கியது. பாவ் ஆஷியானாவின் வாசலில் அறிவிப்புப் பலகையைக் கழுத்தில் தொங்கவிட்டபடி நின்று கொண்டிருந்தார். இந்த வினோதமான காட்சியைக் கண்டு, புதிதாக வந்தவர்கள் சிரித்தனர். அனைத்து மும்பை அன்பர்கள் தவிர, நவ்ஸாரி, பாஜ்வா (BAJWA), ஸூரத், பாவ்நகர் (BHAVNAGAR) மற்றும் பரோடாவிலிருந்து பலர் கலந்து கொண்டனர். கிட்டத்தட்ட 800 பேர் பங்கெடுத்தனர். தரிசன வேளையில் பாபா சிலருடன் சில விஷயங்களைப் பற்றி விவாதிக்கவும், சிலருடன் நகைச்சுவையாகப் பேசியும், பக்திப் பாடல்களைக் கேட்டுக் கொண்டும் இருந்தார். பாஜ்வா நகரின் ஹரிபாய் பட்டேல், நவ்ஸாரியின் பச்சூபாய் ஸோனி ஆகியோர் பாடல்கள் பாடி, பாபாவை மகிழ்வித்தனர். ஸூரத் நகரின் ரவிகாந்த் ராவல், கதை ஒன்றை எடுத்துரைக்க, பிறர் வெவ்வேறு சம்பவங்களை விவரித்தனர். மதியம் ஒரு சிறிய இடைவேளையைத் தவிர, தரிசன நிகழ்ச்சி நாள் முழுவதும் நீடித்தது.

ஜிம் & ரோடா மிஸ்திரி தமது சிறிய மகன்கள், ஆறு வயது மெஹர்வான் மற்றும் மூன்று வயது ஃபாலுவுடன் வந்திருந்தனர். மெஹர்வானிடம் பாபா ஒரு ஆப்பிளைக் கொடுத்ததும் சிறுவன் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தான். ஆனால் குறும்புத்தனத்துடன் அவனைக் கிண்டல் செய்ய, சில நிமிடங்களில் பாபா அதைப் பறித்தார். பதற்றமடைந்த மெஹர்வான் சிறுபிள்ளைத்தனமான ஏதோ ஒன்றைக் கூறியதைக் கேட்டு பாபாவும் அனைவரும் மனமார சிரித்தனர். பாபா அதைத் திரும்பக் கொடுத்தார்.

பாவ் கல்சூரியின் கழுத்தில் அறிவிப்புப் பலகை தொங்கவிடப்பட்டதைப் பார்த்து, மக்கள் அவரை ஏளனம் செய்ததை பாபாவிடம் தெரிவித்தபோது, அவர் சிரித்துக்கொண்டே சைகையால் பதிலளித்தார்: **“நல்லது. நான் மகிழ்ச்சியாக உள்ளேன். எனது அவலநிலையைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? உங்கள் கழுத்தில் அறிவிப்புப் பலகை மட்டுமே இருந்தது. ஆனால் முழு உலகமும் எனது கழுத்தைச் சுற்றியுள்ளது!”**

ஸொராப்ஜி ஸிகன்போரியா (SORABJI SIGANPORIA) அன்று மாலை ஒரு கவாலி நிகழ்ச்சிக்காக ஃபெரோஸ்ஷா மேத்தா ஹாலை (PHEROZESHAH MEHTA HALL) ஏற்பாடு செய்திருந்தார். இருநூறு அன்பர்கள் ஒன்றுதிரண்ட கூட்டத்தில், பாபா கலந்து கொண்டார், ஆனால் சுமார் ஒரு மணி நேரம் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பின்னர் ஆஷியானாவிற்குத் திரும்பிச் சென்றார்.

முந்தைய இரவு தொந்தரவு காரணமாக, அலோபா இரவு கண்காணிப்புப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதால், பாவ் கல்சூரி இரவு முழுவதும் கண்காணிக்க வேண்டியிருந்தது. 15ஆம் தேதி காலை பாபா சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றார். கடந்த பல வருடங்களுக்கு முன்பு செய்ததைப் போலவே, வழியில், தாதரில் வாழ்ந்து வந்த நௌரோஜி தாதாசாஞ்சியின் இல்லத்தில், அவர் சிறிது நேரம் நின்றார். குடும்பத்தினர் அனைவரையும் சந்தித்து, நௌரோஜியின் இளைய மகன் நோஸர் பாபாவிற்கு வழங்கிய உணவில் சிறிதளவு உண்டு, பாபா மண்டலியுடன் புறப்பட்டுச் சென்றார்.

தரிசனத்திற்குப் பின்னர், எரச், டெஹ்ரா டூன் குழுவிற்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு விவரித்தார்:

அனைத்து தரப்பையும் சார்ந்த பக்தர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்: ஆண்கள், பெண்கள், குழந்தைகள்; பார்சிகள், குஜராத்திகள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள்; மராட்டியர்கள், மதராஸிகள்; எந்த வித தயக்கமும், வேறுபாடுகளும் இல்லாமல், செல்வந்தர்களும் ஏழைகளும் பாபாவின் தரிசனத்திற்காக ஒன்றாக இணைந்து வரிசையில் நின்று கொண்டிருந்தனர். மும்பை கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் பாபாவை தரிசனம் செய்ய வந்ததே ஒரு கண்கொள்ளா காட்சி. மண்டலி அனைவரும் 'இவர்கள் பாபாவைப் பற்றி எப்படித் தெரிந்துகொண்டார்கள்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டபோது, அவர்கள் பாபாவின் பழைய அன்பர்கள் என்று பெருமையுடனும் பக்தியுடனும் பதிலளித்தனர். இந்த எளிய மக்கள், பாபாவைத் தங்கள் சொந்த வழியில் மிகுந்த பக்தியுடன் வணங்கினர்; அருகருகே, மும்பையின் மேற்குடி மக்களும் பாபாவை வணங்கினர்.

அன்றைய நிகழ்ச்சியின் முடிவில் பாபாவும் மகிழ்ச்சியாக உணர்ந்தார்; மேலும் அவரிடம் வந்த அனைவரும் மிகுந்த அன்புடன் அணுகியதால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகத் தோன்றினார்... மேலும், அன்று பாபாவை சந்தித்த அனைவரும் நீண்ட நாட்களுக்குப் பிறகு, மட்டற்ற மகிழ்ச்சியை உணர்ந்தனர். அவர்கள் தங்கள் உலக வழக்கத்தின் அதிருப்தி மற்றும் கொந்தளிப்புகளுக்கு மத்தியில் மிகுந்த மனநிறைவையும் அமைதியையும் அனுபவித்தனர்.

ஆனால், நிச்சயமாக, துன்பத்தின் தாக்குதலைத் தாங்க முடியாத வெகு சிலரே, தங்களுக்கு இரக்கம் காட்டுமாறு பாபாவிடம் மன்றாடினர். பாபா அவர்களைத் தட்டிக்கொடுத்து கடவுளை நம்பி, பாரத்தை அவர் மீது போடுமாறு கேட்டுக் கொண்டார். "**கடவுள் அளவிறுதியற்ற கருணையுள்ளவர்**" என்று அவர்

கூறினார். “**கடவுள் ஒருவரே அனைவருக்கும் பாதுகாவலர், அனைத்திற்கும் அதிபதி**.”

பாபா சத்தாராவிற்குத் திரும்பிச் சென்றதும், தரிசன நிகழ்ச்சிகளைக் குறித்து பெண் மண்டலிக்கு விவரித்ததை, மணி மேற்கத்திய அன்பர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்தார்:

ஆஷியானா சிறியதாக இருந்தாலும், குருநாதருக்கும் அன்பர்களுக்கும் இடையே நிகழ்ந்த சந்திப்பு, வழக்கமான கண்ணீர், புன்னகை மற்றும் அன்பு முத்தங்களுக்கு மத்தியில் மிகவும் பாசம் நிறைந்த, மனதைத் தொடும் ஒன்றாக அமைந்தது. பின்பு கூறியது (அன்பு முத்தங்கள்) நிகழ்ச்சி நிரலில் ஓர் அங்கமாக இல்லை என்றாலும், ஓர் ஈரானி பெண்மணி (பாபா பின்னர் எங்களிடம் வேடிக்கையாகக் கூறியதற்கு இணங்க) அதைத் தொடங்கி வைத்தார். தாய்மை உள்ளம் படைத்த ஆத்மா ஒன்று பாபாவின் கன்னங்களிலும் நெற்றியிலும் முகத்திலும் உரத்த முத்தங்களை பதித்தது. இதுகாறும் தைரியமின்றி இருந்த பிறருக்கு (சமீபத்திய ஏகாந்தவாசம் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக) இது ஒரு தூண்டுதலாக அமைந்தது. உடனடியாக கூட்டம் முன்னேறவே விரைவில் அப்பாவி பாபா ஒவ்வொருவரிடமிருந்தும் அன்பு முத்தங்களால் மூழ்கடிக்கப்பட்டார்...

பாபா எங்களிடம் ஒரு மனிதனைப் பற்றி கூறினார் - ஓர் இந்து - மேற்கத்திய உடை அணிந்த பெரிய உருவம். அவர் அணிந்திருந்த மென்மயிர் தொப்பியைத் தூக்கி எறிந்துவிட்டு, பாபாவை ஆசைத்தீர திருப்திகரமாக முத்தமிட்டு, பின்னால் நின்று, கைகளை உயர்த்தி அனைவரையும் மௌனமாக இருக்குமாறு தெரிவித்து, இதயப்பூர்வமான தன்னிச்சையான ஓரிரு வார்த்தைகளால், சிறிய உரை ஒன்றை நிகழ்த்தினார்: 'நம் அனைவர் முன்னிலையிலும், ஒன்றே உருவான அவதார புருஷரை உண்மையில் நாம் தொட்டு உணர முடியும்'. இறுதியில் உணர்ச்சிகளைக் கடந்து, அவர் பாபாவின் முன்னால் சாஷ்டாங்கமாக வணங்கினார்.

பின்பு பாபா, நீண்ட நெடிய தரிசன நிகழ்ச்சிகளாலும், இருவழி பெருங் களைப்பான பயணத்தாலும் சோர்வாகக் காணப்பட்டார். அத்தகைய தரிசன நிகழ்ச்சிகளில் பாபா எவ்வளவு பெரிய மாற்றத்தை வெளிப்படுத்துகிறார் - எவ்வளவு அழகாக - சோர்வடையாமல் - அவரது தெய்வீக சுயத்தையும் அன்பையும் வெளிப்படுத்துகிறார்! பாபாவும் அதைப் பற்றி குறிப்பிடுகிறார். அவர் நேற்றைய தினம் (1955 ஆகஸ்ட் 16) எங்களிடம் கூறினார், “**நான் எவ்வளவு அழகாகத் தோற்றமளித்தேன் என்று அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இருந்தார்கள்**.”

ஆமாம், இதுபோன்ற தருணங்களில், பாபா, நம்மிடமிருந்து அவரை மறைக்கும் திரையின் மிகச்சிறிய பாகத்தைத் தானாகவே விலக்குகிறார், அதனால் அவருடைய அழகிலும் அன்பிலும் நாம் நம்மை முழுவதுமாக இழந்துவிடுகிறோம்; அவரை ஆழ் இதயத்திலிருந்து மிகுந்த நன்றியுடனும் வணங்குகிறோம்.

அர்னவாஸ் மேற்கத்திய அன்பர்களுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

நரிமனும் நானும் பாபாவுடன் அனுபவித்த இரண்டு நாட்களின் மகிழ்ச்சியை என்னால் விவரிக்க முடியாது. நான் காற்றில் மிதப்பது போலவும், தரையில் நடக்காதது போலவும் உணர்ந்தேன். 'புது வாழ்வு'க்கு முன்னர் இருந்த பாபாவாக மீண்டும் தோற்றமளித்தார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவர் முகத்தில் பொலிவையும் மகிழ்ச்சியையும் கண்டோம்... கடல் அலைகள் கரையை நோக்கி வந்து மீண்டும் கடலுக்குள் செல்வது போல, பக்தர்களின் அன்பு அலைகள் பாபா மீது பாய்ந்தது, அதே வேளையில் பாபாவின் அளவிறுதியற்ற அன்பு அவர்களை நோக்கி விரைந்தோடியது. அங்கு வியாபித்திருந்த சூழ்நிலை அன்பும், பக்தியும் நிறைந்ததாக இருந்தது, அந்தக் காற்றை நாங்கள் முழு நேரமும் சுவாசித்தோம்.

சத்தாராவில் 1955 ஆகஸ்ட் 18 வியாழன் அன்று, காலை 7:00 மணி முதல், கைக்கோபாத்துடன் பாபா ஆறரை மணி நேரம் பணிபுரிந்து, பன்னிரண்டு மணி நேரம் உபவாசம் கடைப்பிடித்தார். மண்டலிக்கும் ஒரு மணி நேரம் இறை நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. மாலை 6:00 மணிக்கு, பாபா அனைத்து மண்டலியையும் அழைத்து, ஒவ்வொருவரையும் தலைவணங்கினார். பாபாவுடன் தங்கியிருந்த பெண் மண்டலியும் அன்று பன்னிரெண்டு மணி நேரம் உபவாசம் கடைப்பிடித்தனர்.

மண்டலியின் பங்களாவிற்கு அருகில், சத்தாராவில், மகளிர் பள்ளி ஒன்று இருந்தது; இரவு காவலுக்காகச் செல்லும் கிருஷ்ணா நாயர் அதைக் கடந்து செல்வது வழக்கம். ஒரு குறிப்பிட்ட மாணவி, மராட்டி மொழியில் பாபாவின் புத்தகங்களைக் கொடுக்குமாறு கிருஷ்ணாவிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவரும் ஒரு புத்தகத்தைக் கொடுத்தார். அந்த மாணவியின் தோழிகளில் சிலர், அவள் கிருஷ்ணா நாயருடன் பேசுவதைப் பார்த்து, வேடிக்கையாகக் குறும்புத்தனத்தில் ஈடுபட முடிவு செய்தனர். மராட்டியில் எழுதப்பட்ட காதல் கடிதம் ஒன்று அந்த மாணவிக்கு, பள்ளி முகவரிக்கு வந்தது. பள்ளிக்கூட மேலதிகாரி கிருஷ்ணா நாயரை சந்தேகப்பட்டு, விஷயம் பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பாபா, மேலதிகாரியை சந்தித்து, கிருஷ்ணா இந்தியாவின் தெற்கு பகுதியைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு மராட்டி தெரியாது என்று விளக்கி, பள்ளி அதிகாரியிடம், "**கிருஷ்ணா எந்தத் தவறும் செய்யவில்லை என்று எனக்குத் தெரியும், ஆனால் நீங்கள் அவரை சந்தேகிப்பதால், அவரை வீட்டிற்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளேன்**" என்று கூறினார். அந்த மாணவியும் திருப்தியடைந்து வெளியேறினாள்.

அதன் பின்பு, பாபா, கிருஷ்ணாவிடம், "**நடந்தது மிகவும் மோசமானது. அது என்னைக் குறித்து மோசமான பிரதிபலிப்பை ஏற்படச் செய்கிறது. இப்போது நீங்கள் வெளியேறுவது நல்லது**" என்று விளக்கினார்.

கிருஷ்ணா திகைப்பில் ஆழ்ந்து, ஒரு கணம், மெஹர் பாபா கடவுளா என்று கூட நினைக்கத் தொடங்கினார். அழுதுகொண்டே, “நான் நிரபராதி, பாபா! உங்களுக்கு உண்மை தெரியும், இருந்தும் நீங்கள் என்னை திருப்பி அனுப்புகிறீர்களா?” என்று கேட்டார்.

பாபா பதிலளித்தார், “**ராமரும், சீதை தூய்மையானவர் என்று அறிந்திருந்தார், ஆனால் அவர் அவரைக் காட்டிற்கு அனுப்பி வைத்தார். அதுபோலவே, நீங்களும் எந்தத் தவறும் செய்யவில்லை என்பதை நான் அறிவேன், ஆனால் எனது சொந்த காரணங்களுக்காக நான் உங்களை அனுப்புகிறேன். எனது பார்வை எப்போதும் உங்களிடம் இருக்கும், மேலும் உள்ளளவில் நான் உங்களுக்கு உதவுவேன்.**” பாபா, கிருஷ்ணா நாயரை மலபாரில் அவரது இல்லத்திற்குத் திருப்பி அனுப்பினார், அதற்குப் பிறகு கிருஷ்ணாவை மண்டலியில் நிரந்தர உறுப்பினராகத் தன்னுடன் வைத்துக் கொள்ளவில்லை.

கிருஷ்ணா புறப்பட்டுச் சென்றதால், இரவு கண்காணிப்பாளர்களாக ஸவக் கொத்வால், பாவ் கல்சூரி இருவரும் முறையே நள்ளிரவு வரை, தொடர்ந்து காலை 5:00 மணி வரை பகிர்ந்து கொண்டனர்.

பாபாவின் வழிகாட்டுதலின்படி, ரானோ சத்தாராவில் ‘உண்மைப்பொருளாக இருப்பது கடவுள், பிற அனைத்தும் மாயை’ (GOD IS REALITY, ALL ELSE IS ILLUSION) என்ற தலைப்பில் ஒரு விளக்கப்படத்தைத் தயாரித்தார். ஒரு திறமையான கலைஞரான ரானோ, பாபாவின் வழிகாட்டுதலின் கீழ் பல வரைபடங்களை உருவாக்கினார்.

பாபா மற்றும் பெண் மண்டலிக்கு உணவு தயார் செய்வது நாஜாவின் பொறுப்பு. ஒரு கட்டத்தில், பாபாவை மகிழ்விக்க, நாஜா ஒவ்வொரு நாளும் வெவ்வேறு ஆண் உடைகளை அணிந்து வந்தார். இந்தக் காலகட்டத்தில், ஸவக் உடல்நலமின்றி இருந்ததால், பாவ் இரவு முழுவதும் கண்காணிப்புப் பணியை செய்ய வேண்டியதாயிற்று. பாவ் மாலையில் பாபாவிடம் சென்றபோது, ”**வினோபா பாவே** (VINOBA BHAVE, இந்தியாவின் புகழ்பெற்ற மதம் மற்றும் சமூகத் தலைவர்) **இன்றிரவு எனது தரிசனத்திற்காக வருகிறார்**” என்று பாபா அறிவித்தார். இந்தச் செய்தியைக் கேட்டு வியப்படைந்த பாவ் கல்சூரி, சிறிது நேரத்தில் வினோபா வருவதைக் கண்டார். ஆனால் அது வேறு எவருமல்ல, வினோபாவைப் போலவே உடை அணிந்து வந்த நாஜாவின் மாறுவேடத்தில் பாவ் கல்சூரி ஏமாற்றமடைந்தார். அனைவருக்கும் இது வேடிக்கையாக இருந்தது.

மணி மேற்கத்திய நாடுகளுடன் கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், மெஹரா, மெஹரு இருவரும் பாபாவின் தனிப்பட்ட தேவைகளை கவனித்து வந்தனர். கோஹெர் எப்பொழுதும் பல்வேறு மருத்துவம் மற்றும் வீட்டுக் கடமைகளில் கவனம் செலுத்தி வந்தார். (ஒரு மருத்துவராக இருந்தாலும், பஜார் பட்டியலைத் தயார் செய்வது, பணியாட்களைக்

கண்காணிப்பது போன்ற பலதரப்பட்ட பணிகள் இருந்தன.) மணி தனது செல்லப் பிராணியான காக்கர் ஸ்பானியல் (COCKER SPANIAL), பீட்டர் (PETER) இரண்டையும் கவனித்துக் கொண்டிருந்தார். சத்தாராவில் அவர்கள் வாழ்ந்த பங்களாவிற்கு அருகில், அஞ்சி நடுங்கும் அணில்களுடன் ஆர்வத்துடன் விளையாடுவதை நாய் பழக்கமாகக் கொண்டிருந்தது. மெஹரா, குட்டிக் குதிரை ஷீபாவை அன்புடன் பராமரித்து வந்தார்; பாபா, தினமும் தானே ஷீபாவிற்கு கேரட்டை ஊட்டிவிடும் வேளையில், குட்டிக் குதிரை அவரை முத்தமிட கழுத்தை நீட்டியது; பாபாவும் ஷீபாவை மிகவும் நேசித்தார், அடிக்கடி அதற்கு முத்தம் கொடுத்தார்.

பாபாவின் இரவு கண்காணிப்பாளர், கிரா∴ப்டனில் அவரது அறைக்கு வெளியே அமர்ந்து பாபா கைகளைத் தட்டும் வேளையில் உள்ளே செல்ல வேண்டியிருந்தது. ஒரு நாள் மாலை பாவ் கல்சூரி இரவு கண்காணிப்புப் பணிக்காக பாபாவின் அறைக்குச் சென்றார், எப்பொழுதும் போலவே பாபா அவரை எச்சரித்தார்: “**எந்த சத்தமும் செய்யாதீர்கள்; எந்தவித அசைவும் ஆகாது; விழித்திருப்பீர்களாக!**” பாபா இந்த மூன்று அறிவுரைகளையும் தினமும் திரும்பத் திரும்பச் சொல்வது வழக்கமாகிவிட்டது. இதற்குப் பிறகு, பாபா, அவரிடம் வெளியே சென்று இருக்கையில் அமருமாறு அறிவுறுத்தினார், அறையை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, பாபாவின் கதவு மூடப்பட வேண்டும், பின்னர் அவர் நாற்காலியில் அமரவேண்டும்.

வழக்கமாக, 20 அல்லது 30 நிமிடங்களுக்கு ஒருமுறை, பாபா தவறாமல் கைகளைத் தட்டுவதுண்டு; ஆனால் அன்று இரவு அவர் இரண்டு மணி நேரம் அழைக்கவில்லை. ஒரே நிலையில் தொடர்ந்து அமர்ந்திருந்ததால் பாவ் கல்சூரியின் கால்கள் விறைத்துப்போனதோடு கொசுக்களும் கடித்தன - ஆனால் அவர் நகரவே இல்லை. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, பாபாவின் குறட்டை சத்தம் கேட்கவே, இதுதான் சரியான தருணம் என்று எண்ணி, சிறிதும் ஓசையின்றி, மெதுவாகக் கால்களை அசைக்க முயன்றார்; அந்த கணத்தில் பாபா கைகளைத் தட்டினார். பாவ் உள்ளே சென்றபோது, பாபா கேட்டார், “**நீங்கள் ஏன் நகர்ந்தீர்கள்?**”

திகைத்துப் போன பாவ், “எனது கால்கள் தூங்கிவிட்டன, நான் அவற்றை எழுப்பி சீராக்க முயற்சித்தேன்” என்று பதிலளித்தார்.

பாபா சைகையால் தெரிவித்தார், “**நான் தூங்கிவிட்டேன் என்று நினைத்து நீங்கள் நகர்ந்தீர்கள் அப்படித்தானே? ஆனால் நினைவில் கொள்ளுங்கள், தூக்கத்தில் கூட, எனது கண்கள் பிரபஞ்சம் முழுவதையும் வட்டமிடும். இவ்வளவு தூரம் என்னால் பார்க்க முடிந்தால், எனக்கு அருகில் இருக்கும் உங்களைப் பார்க்க முடியாதா? நீங்கள் வெளியில் இருப்பதால், என்னால் உங்களைப் பார்க்க முடியாது என்று ஒருபோதும் நினைக்காதீர்கள்! தூக்கத்திலும் நான் எல்லாவற்றையும் பார்க்கிறேன், ஒரு கல்லின் சுவாசத்தைக் கூட நான் கேட்கிறேன்! எனது தூக்கம் உணர்வு நிலையிலான தூக்கம்.**”

இரவில், குறிப்பாக, தடிமனான கொசுக்கள் பாவ் கல்சூரியை பயங்கரமாகத் தொந்தரவு செய்தது. மெதுவாக, அவர் கையை உயர்த்தி அவற்றை விரட்டினார். பாபா அந்த நேரத்தில் கைகளைத் தட்டி, நகர்ந்ததற்காக அவரைக் கண்டித்தார். கண்காணிப்புப் பணியில் இருக்கும்போது, ஒரு சிலை போல் அமர்ந்து, சிறுநீர் கழிப்பதற்கான தூண்டுதலையும் கட்டுப்படுத்த வேண்டும். பாபாவின் அருகில் கண்காணிப்பில் இருப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. வாகன விபத்துக்குப் பின்னர், இரவு கண்காணிப்பாளர், பாபாவின் அறைக்குள் அமர வேண்டியிருந்தது, அது இன்னும் கடினமாகிவிட்டது.

சத்தாராவில் ஓர் இரவு பாபா கைகளைத் தட்டி, பாவ் கல்சூரியை அழைத்து, அவர் இரு கைகளையும் அகலமாக உயர்த்தி, சில கை சைகைகளால் எதையோ கூற முயன்றதை, பாபா, தன்னைத் தழுவ விரும்புவதாக பாவ் கல்சூரி நினைத்தார். மிகுந்த மகிழ்ச்சியில், பாவ் கல்சூரியும் அணைப்பைப் பெறுவதற்காக கைகளை விரிக்கவே, பாபா திகைப்புடன் பார்த்து, **"என்ன செய்கிறீர்கள்? என் மேல் போர்வையை இழுத்து மூடச் சொன்னேன், இங்கே நீங்கள் எனது மார்பில் அமர ஆயத்தமாகிறீர்கள்!"** என்று கேட்டார். பாவ் தனது சிரிப்பை அடக்கிக் கொண்டு, போர்வையை சரிசெய்து அறையை விட்டு வெளியேறினார்.

மறுநாள் காலை, பாபா, மண்டலியிடம் கூறினார், **"நேற்று இரவு, எனக்குக் குளிராக இருந்தது, போர்வையை என் மீது போர்த்த இவரை உள்ளே அழைத்தபோது - அவர் என்னைத் தழுவ ஓடோடி வந்தார்! நான் மிகவும் பயப்படவே, என் இதயம் படபடத்தது!"** பாபாவும் மண்டலியும் பாவ் கல்சூரியின் தவறைக் கண்டு மனம் விட்டுச் சிரித்தனர்.

இரவில் பாபாவின் அருகில் பாவ் கல்சூரி காவல்புரிந்தபோது, இந்த எண்ணம் அவரது மனதில் உதயமானது: 'நீங்கள் புத்தகங்களை எழுத வேண்டும்.' பாவ் திடுக்கிட்டார், ஆனால் பல நிமிடங்கள் இந்த வாக்கியத்தை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே இருந்தார். அந்த நேரத்தில், அவரால் அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியவில்லை, மேலும் புத்தகங்கள் எழுதுவது பற்றி பாபா நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே அவருக்கு அறிவுறுத்தனார். பாவ் கல்சூரிக்கு, கடிதங்களுக்கு பதிலளிக்கவும், அவ்வப்போது கட்டுரை அல்லது உரையை எழுதவும் மட்டுமே கூறப்பட்டது. ஆனால் பின்னர், 1959ஆம் ஆண்டு முதல், அவருக்கு வெவ்வேறு புத்தகங்களை எழுதுமாறு அறிவுறுத்தப்பட்டது, அதில் 'மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு' (LORD MEHER) புத்தகமும் ஒன்று!

1955 செப்டம்பர் 7 அன்று பாபா கைக்கோபாத்துடன் காலையில் சில மணி நேரம் பணிபுரிந்தார். செப்டம்பர் மாதத்தில், பாபா, உள்ளூர் மக்களுக்கு தினமும் மதியம் 2:00 முதல் 2:30 வரை தரிசனம் வழங்கிய அந்த வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். 15ஆம் தேதி பாபா அவரது அன்பர்களின் கூட்டத்திற்குத் தயாராகத் தொடங்கியதால் அது நிறுத்தப்பட்டது.

செப்டம்பர் 16 வெள்ளிக்கிழமை, மெஹராபாத்தில் ஒரு மாத கால ‘சகவாச நிகழ்ச்சி’ நடத்துவது குறித்து ஜால் வில்லாவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஆதி சீனியர், ஸரோஷ், பாதிரி, மெஹர்ஜி, நரிமன் ஆகியோரை வரவழைத்து, விவாதம் தொடங்கியது.

ஒவ்வொருவருக்கும் தமது சகவாசத்தின் முழு பலனை வழங்கவும், அனைவருக்கும் சிறப்பான தங்கும் வசதிகளை ஏற்பாடு செய்யவும், பாபா கை சைகைகள் மூலம் வெளிப்படுத்த விரும்புவதை வெவ்வேறு பிராந்திய மொழிகளில் பெரிய அளவிலான மொழிபெயர்ப்பில் செலவழிக்கும் நேரத்தை மிச்சப்படுத்தும் நோக்கத்திலும், 1955 நவம்பர் மாதத்தில் ‘சகவாச நிகழ்ச்சி’யை நடத்த முடிவு செய்யப்பட்டது. மொழிவாரியாக, குஜராத்தி, தெலுங்கு, ஹிந்தி, மராட்டி ஆகிய நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் மெஹராபாத்தில் ஒரு வாரம் தங்கியிருக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு இணங்க, சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவிக்கும் விதத்தில், மண்டலியின் கடிதப் பரிமாற்றம் கணிசமான அளவில் நடந்தது. பாபா முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்களை, ஒவ்வொரு குழுவிலும் 150 பேர் அடங்கிய நான்கு குழுக்களாக அழைக்க முடிவு செய்தார்; ஆனால் பாபாவின் அனுமதி மேலும் கோரப்பட்டதால் எண்ணிக்கை பின்னர் அதிகரித்தது. சகவாச செலவுகளை சந்திக்க, அனைவரிடமிருந்தும் அல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களிடமிருந்து மட்டும் பணம் கோரப்பட்டது. ஆனால், இறுதியியில் ரூ.5,000 மேலும் தேவைப்பட்டதால், இந்தத் தொகையை ஆந்திராவின் டாக்டர் கனகதண்டி, குடும்ப ஸாஸ்திரி ஆகியோரால் ஏற்பாடு செய்ய முடிந்தது.

வழக்கம் போல், அத்தகைய செயல்பாடுகளின் முதன்மை பொறுப்பு, ஒரு நிபுணத்துவ அமைப்பாளராக இருந்த பெண்டுவைச் சார்ந்தது. பாதிரி தற்காலிகமாக மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகத்தை கவனித்த வேளையில், விஷ்ணு கணக்கு வழக்குகளை பராமரித்தார். பாவ் கல்சூரி கூடாரங்களில் தங்கும் ஏற்பாடுகளை செய்யும் பணியில் பெண்டுவின் உதவியாளராக இருந்தார்.

மெஹராபாத்தில் பெண்டு தனது பணி சம்பந்தமான விஷயங்களை முன்கூட்டியே ஏற்பாடு செய்யும் எண்ணத்தில், செப்டம்பர் 28 அன்று சத்தாராவிலிருந்து புறப்பட்டுச் சென்றார். சத்தாராவில் வாழும் மண்டலியுடனான கடிதப் போக்குவரத்து மிகையாக அதிகரித்ததோடு, ஆதி சீனியர் அலுவலகமும் மிகவும் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியது. தத்து மெஹந்தர்கே ஆகஸ்ட் மாதம் அவரது பணியை நிறுத்தி விட்டதால், அவரது இடத்தில் ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா நியமிக்கப்பட்டார். ஃபெராம் மெஹராபாத்தில் நான்கு ஆண்டுகள் வாழ்ந்ததைத் தொடர்ந்து ‘புது வாழ்வின்’ தொடக்கத்தில் அக்பர் அச்சகத்திற்கு அனுப்பப்பட்டார். இப்போது அவர் குஷ்ரு குவார்ட்டர்ஸில் தங்கத் தொடங்கினார்.

அக்டோபர் 4ஆம் நாள் ஆதி சீனியர் சத்தாராவிற்கு, ஜால்பாய், பெஹராம், ஆதி ஜூனியர் ஆகியோரை தன்னுடன் அழைத்து வந்தார். அன்று காலை பாபாவை சந்தித்து, அறிவுரைகளைப் பெற்று புறப்பட்டுச் சென்றனர்.

1955 செப்டம்பர் 28 அன்று, 'பாபா பணி' குறித்து ஸொராப்ஜி ஸிகன்போரியாவிற்கு எழுதிய கடிதத்தில், எரச் இவ்வாறு விளக்கினார்:

பாபாவின் அன்பர்கள் வழிநடத்தும், அன்பும், பணிவும் அடிப்படையாகக் கொண்ட, பிறருக்கு எடுத்துக்காட்டாக அமையும் வாழ்க்கையால் மட்டுமே அவரது அன்பை வெற்றிகரமாகப் பரவச்செய்ய முடியும். பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, அவருடைய அன்பர், அத்தகைய வாழ்க்கையை வாழாத வரை, அவரது பணியைப் பொறுத்தவரை, அவர் விரும்பும் அளவுக்கு சிறப்பாகச் செய்ய இயலாது. பாபாவிற்கு ஒருவர் செய்யும் மிகப்பெரிய பணி, அன்பு, பணிவு, நேர்மை மற்றும் தன்னலமற்ற சேவையுடன் வாழ்வது - பாசாங்குத்தனம் அல்லது பகட்டுத்தனத்தின் இம்மியளவு சுவடு கூட இல்லாத வாழ்க்கையை வாழும்போது மட்டுமே, பாபாவின் பணி முடிந்ததாகக் கருதப்படும் என்று அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இதர அனைத்தும் எந்த உழைப்பும் அல்லது பிரச்சாரமும் இல்லாமல் தானாகவே பின்தொடர்ந்து வரும்.

1955 அக்டோபர் 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை, பாபா சத்தாராவிலிருந்து பூனா, கணேஷ்கிந்த் தோட்டத்திற்கு, எரச், நீலு, குஸ்தாஜி ஆகியோருடன் சென்று, தாவரவியல் பூங்காவில் அமைந்த தாதி கேரவாலாவின் இல்லத்தில் தங்கினார், அங்கு அவர் இதற்கு முன்னர் இரண்டு முறை தங்கியிருந்தார். அன்று மாலை, மும்பையிலிருந்து அர்னவாஸ் தொலைபேசி மூலமாக, தனது சகோதரன் நோஸர் விமான விபத்தில் மறைந்த சோகச் செய்தியைத் தெரிவித்தார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, நோஸர் இந்திய விமானப்படையில் விமானியாகப் பணிபுரிந்தார். இவர் நேற்று முன்தினம் பயிற்சிப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, விமானம் கட்டுப்பாட்டை இழந்து, ஹைதராபாத்தில் உஸ்மான் ஸாகர் (USMAN SAGAR) ஏரியில் வீழ்ந்தது. நோஸர் நீரில் மூழ்கி உயிரைத் துறந்தார். அர்னவாஸ், நோஸரின் இறுதிச் சடங்குகள் குறித்து விசாரிக்கவே, பாபா, எரச்சிடம் அவரைத் தொலைபேசியில் அழைத்து இவ்வாறு கூறுமாறு அறிவுறுத்தினார்: **"என்னுடன் இத்தனை வருட கால தொடர்பில் இருக்கும் நீங்கள், இப்பொழுதும் சடங்கு முறைகளைப் பற்றி என்னிடம் கேட்கிறீர்களா? எனக்குப் பிடிக்காத விஷயங்களில் என்னைத் துன்புறுத்துவானேன்? சரி, அதை மறந்து, சொல்வதைக் கேளுங்கள்: நோஸரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு, எடுத்துவரும் நிலையில் இருந்தால், அதை மெஹராபாத்திற்கு கொண்டு வாருங்கள், அங்கு நான் அனைத்திலும் சிறப்பான சடங்குகளைச் செய்வேன், இல்லையெனில், நான்கு நாட்கள் மட்டுமே கடைபிடிக்கப்படும் ஸொராஸ்ட்ரிய சடங்குகள் மற்றும் பிரார்த்தனைகளைப் பின்பற்ற வேண்டும்."**

பாபா (நோஸரின் தந்தை) நௌரோஜிக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**கடவுள் மீதான நேசம் உண்மையானதா என்று அவர் நம்மை சோதிக்கிறார். என்னை நேசித்ததற்காக, நோஸர், ஆன்மீக ரீதியில் என்னை அடையப் பெறுவார். எனவே மேலும் மேலும் என்னை நேசிப்பதன் மூலம் மகிழ்ச்சியாக இருங்கள், என்னை நேசிப்பவர்கள் ஒருபோதும் என்னைவிட்டுப் பிரியமாட்டார்கள்!**

கணேஷ்கிந்திலிருந்து, பாபா பிந்த்ரா ஹவுஸுக்குச் சென்று, வழக்கத்திற்கு மாறாக நீராடி, தலைமுடியை நன்றாக சுத்தம் செய்தார். அதன்பிறகு, தலையில் வெள்ளைத் துணியைப் போர்த்தி, வெறுங்காலுடன் நீண்ட நேரம் வராந்தாவில் நடந்தார். பின்னர் அவர் தமது ஐந்து சத்குருக்களின் புகைப்படங்களுக்கு முன்னால் நின்று, வணங்கி, பறைசாற்றினார்: "**எனது நௌரோஜி வென்றுவிட்டார், நான் தோல்வியுற்றேன்!**"

இந்த நேரத்தில், நௌரோஜியிடமிருந்து ஒரு தொலைத்தந்தி வந்தது: "உங்கள் விருப்பத்தில் நான் மகிழ்ச்சியடைகிறேன்." நௌரோஜி, இறுதிச் சடங்குகளைப் பற்றி கேட்டதற்கு, பொறுப்புள்ள அதிகாரிகள்தான் தெரிந்துகொள்ள விரும்பியதாக விளக்கி, மன்னிப்புக் கோரினார். பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

1952இல் பாபா, தனக்கு 'பிளாட்டினம்' செயற்கைப் பற்களைத் தயார் செய்த நேரத்தில், அவர் பப்பா ஜெஸவாலாவிடம் வேடிக்கையாகக் கூறினார்: "**ஏறக்குறைய ஒரு வருட காலத்தில், கிழக்கிலும் மேற்கிலும் வாழும் எனது அன்பர்களில் ஐந்து பேர் தங்கள் உடலைக் கைவிடுவார்கள். அவர்களில் இருவர் எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள்.**"

பாபா அக்டோபர் 16ஆம் தேதி, பூனாவிற்கு சிதுவை வரவழைத்து, மெஹர்ஜி மற்றும் இதர மண்டலியுடன் மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார். அஹமதுநகர் வந்தடைந்த பாபா, மதிய உணவுக்காக அக்பர் அச்சகத்தில் நின்று, ஸட்டா குடும்பத்தில் ஒவ்வொருவரையும் சந்தித்து, தழுவினார், அவர்கள் அனைவரும் அவரது அன்பர்கள். படுத்த படுக்கையாக இருந்த ஷிரின் மற்றும் அலுவைப் பார்க்க பாபா உள்ளே சென்றார். பாபா பயன்படுத்திய சக்கர நாற்காலியை ஷிரினின் உபயோகத்திற்காக அனுப்பியிருந்தார். மதிய உணவுக்குப் பிறகு, பாபா, ருஸ்தம் காக்காவின் வீட்டிற்கு அருகில் காரில் அமர்ந்து அவரது குடும்பத்தினரை சந்தித்து, பின்னர் அவர் மெஹராபாத்திற்குச் சென்றார். ஆதி சீனியர், பெண்டு, பாதிரி ஆகியோருடன் சகவாசத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றி பாபா விவாதித்து, அங்கிருந்து தொடர்ந்து, மெஹராஸாத் செல்லும் வழியில், குஷ்ரு குவார்ட்டர்ஸில் அரை மணி நேரம் நின்று, குல்மாய், பிரோஜா, டாலி அனைவரையும் சந்தித்தார்.

நரிமன், அர்னவாஸ், நௌரோஜி தாதாசாஞ்சி ஆகியோர் ஜிம் மிஸ்திரியுடன், நோஸரின் இறுதிச் சடங்கிற்காக அஹமதுநகருக்கு வந்தனர்; பாபா, அக்டோபர் 17 திங்கட்கிழமை அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்தார். அர்னவாஸ் கூறியபடி, அவரது சகோதரர் நோஸர், ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த ஆத்மா: "அவர் மிகவும் இனிமையானவர், எதையும் புரிந்து கொள்ளும் தன்மை படைத்தவர், பாபா மீது மிகுந்த பக்தி கொண்டவர்; அதி புத்திசாலி, பதினைந்து வயதிற்குள் பாபாவின் அனைத்து புத்தகங்களையும் படித்து முடித்தார். விமானப்படையில் இருந்த சூழ்நிலையிலும், அவர் (இதர விமானிகளிடமிருந்து) பழக்கவழக்கங்களில் மிகவும் வித்தியாசமாக நடந்துகொண்டார். பாபா என்ன விரும்புகிறார் என்பதை அறிந்து அதற்கேற்ப செயல்பட்டார்." அவர்களைத் தழுவி, பாபா, நௌரோஜியிடம் கேட்டார், **"நோஸரை இங்கிலாந்துக்கு அனுப்புமாறு கூறி, அவரைத் திரும்ப அழைக்க வேண்டாம் என்று நான் உங்களுக்கு உத்தரவிட்டிருந்தால், நீங்கள் வருந்தியிருப்பீர்களா?"**

"இல்லை பாபா" என்று பதிலளித்தார்.

**"அப்படியானால் இப்போது எதற்காக இந்த வருத்தம்? நோஸரை நீங்கள் பார்க்க வேண்டுமா?"** பாபா தமது உடலைச் சுட்டிக் காட்டி, **"இதைப் பாருங்கள்? இதுவே நோஸர்!"** என்றார்.

பாபா தொடர்ந்து கூறினார், **"உயிரைத் துறந்தவர்களுக்காக நான் ஒருபோதும் வருந்துவதில்லை. எனது பெயரை உதட்டிலும், என்னை இதயத்திலும் வைத்து, உயிரைத் துறப்பவர் ஒருகாலும் இறப்பதில்லை. அவர்களைக் குறித்து நான் ஒருபோதும் கவலைப்படுவதில்லை, ஏனெனில், அவர்களுக்கு எந்தவிதமான இழப்பும் இல்லை. நான் எப்பொழுதேனும் கவலைப்படுவதானால், ஒரு மரண நிகழ்வால் துன்பப்படுபவர்கள், என்னிடமிருந்து தங்களை விலக்கிக் கொள்வதற்காக மட்டுமே; உண்மையில் அது, அவர்களுக்கு ஓர் இழப்பு என்று கூறலாம். ஏன் தேவையின்றி சிரமப்படுகிறீர்கள்? என்னுடைய 'இறந்தவர்கள்' என்னில் வாழ்கிறார்கள், அது உங்களை மகிழச் செய்ய வேண்டும். ஆதலால் அவருடைய மகிழ்ச்சியில் நாம் ஏன் மகிழ்ச்சியடையக்கூடாது? உங்களைப் போல் என்னை நேசித்து, நான் 'ஏக இறைவன்' என்பதை அறிந்து, நோஸர் என்னில் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதை தெரிந்து கொள்ளும் நீங்கள், உண்மையில் மகிழ்ச்சியடைய வேண்டும். இதை அறிந்த பின்னரும், துக்கத்திலும் துயரத்திலும் மூழ்குவது, உங்களின் சுயநல நோக்கங்களுக்கு மட்டுமாகத்தான் இருக்க வேண்டும் - எனது பெயரை உதடுகளிலும், இதயங்களிலும் வைத்துக்கொண்டு உயிரைத் துறக்கும் அவர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பது உங்களுக்குத் தெரியாது."**

பாபா, அர்னவாஸிடம், **"உங்கள் இறுதி மூச்சை விடும் வேளையில் என்னை நினைவில் கொள்ளுங்கள்!"** அவர்கள் ஆறுதலடைந்து சமாதானத்துடனும் புறப்பட்டுச் சென்றனர். நௌரோஜியின் இரண்டாவது மகன் தாரா, விபத்து நடந்த ஐந்து நாட்களுக்குப் பின்னர், உடலைக் கொண்டுவர

ஹைதராபாத் சென்றிருந்தார்; ஆனால் உடல் உருகுலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டதால், இராணுவ மரியாதையுடன் ஸெக்கந்திராபாத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது; எந்தவிதமான சடங்கு சம்பிரதாயங்களும் பின்பற்றப்படவில்லை. பாபாவிற்குத் தகவல் கிடைத்ததும், அக்டோபர் 18ஆம் தேதி மாலை 4:00 மணிக்கு இந்தத் தொலைதந்தியை அனுப்பி வைத்தார்:

**உடல்ரீதியாக நான் எனது ரத்தினக்கல்லான நோஸரை இழந்துவிட்டேன், நோஸர் அவரது இறுதி மூச்சு வரை என்னை நேசித்து, நினைவுகொண்டதன் மூலம், ஆன்மீக ரீதியில் என்னை அடையப் பெற்றுள்ளார். நாம் தைரியமாக இருப்போம், சுயநலமின்றி நோஸரின் பேரின்பத்தில் மகிழ்ச்சியடைவோம். அன்பிற்குரியவரை நேசிப்பது எப்படி, அவரை நேசிக்கத் தகுதிவாய்ந்தவர்களாக இருப்பது எப்படி என்பதை, இத்தகைய ஆத்மாக்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.**

1955 அக்டோபர் 18ஆம் தேதி, ஐரீன் கோனிபியர் சத்தாரா வந்தடைந்த அன்று, பாபா அங்குத் திரும்பிச் சென்றார். பாபா அவரைக் கேலி செய்தார், **"உங்களுக்கான தங்குமிடம் இந்த முறை ஒரு சிறிய குடிசையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, நீங்கள் உலர்ந்த ரொட்டியை மட்டுமே உண்டு வாழ வேண்டும்!"** பாபா கூறியதை ஐரீன் தீவிரமாக எடுத்துக் கொண்டார், ஆனால் அவர் வசதியான கூப்பர் பங்களாவில் (COOPER'S BANGALOW) தங்கியிருந்ததைக் கண்டு நிம்மதியடைந்தார். பாபா சத்தாராவில் தங்கியிருந்த எஞ்சிய நாட்களில் அவர் அங்கேயே இருந்தார், பாபா அவ்வப்போது அவரை கிரா ஃப்டனில் சந்தித்தார்.

சத்தாராவில், 'ராஜ்குரு' (RAJGURU) என்று அழைக்கப்படும் மற்றுமொரு பங்களா மண்டலிக்காக வாடகைக்கு எடுக்கப்பட்டது; அங்கு, பாபா சில நாட்கள் கைக்கோபாத்துடன் தமது பணியைத் தொடர்ந்தார். பைதூல் ஒரு நாள் மும்பையிலிருந்து பெயர் தெரியாத ஒரு மஸ்தை அழைத்து வந்தார்; அவர் இந்தியாவிற்கு குடிபெயர்ந்த ஓர் அரேபியர். வந்ததும், மஸ்த் காரை விட்டுவிட்டு உள்ளே வர மறுத்தார், மிகவும் மோசமான மனநிலையில் இருந்த அவர் வன்முறை குணம் படைத்தவராக இருந்தார். மஸ்த் தன்னைத்தானே அடித்துக் கொள்ளத் தொடங்கினார், மிக்க சிரமத்துடன் பாபா காரில் ஒரு நிமிடம் அவரைத் தொடர்பு கொண்டு, பின்னர் மும்பைக்குத் திருப்பி அனுப்பினார்.

கிரா ஃப்டன் மற்றும் ரோஸ்வுட் பங்களாக்களுக்கு இடையில் ஏழை மாணவர்களுக்கான விடுதி ஒன்று அமைந்திருந்தது. பாபா தினமும் அவ்வழியாகச் செல்லும் வேளையில், தலைமையாசிரியரும் மாணவர்களும் சாலையோரத்தில் நின்று மரியாதையுடன் வணக்கத்தைத் தெரிவித்தனர், அவரால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். ஆனால் அதை ஒட்டி வேறொரு மாணவர் விடுதியும் இருந்தது, அதன் மாணவர்கள் அவர்களை கேலி செய்வது வழக்கம். ஒருமுறை, அவர்கள் பாவ் கல்சூரியை சூழ்ந்துகொண்டு விசாரிக்கத்

தொடங்கினர். "நீங்கள் நன்கு கற்றறிந்த இந்து. நீங்கள் ஏன் உங்கள் மதத்தை விட்டுவிட்டு இந்த பார்சி துறவியின் பின்னால் ஓடுகிறீர்கள்?" என வினவினர்.

பாவ் பதிலளித்தார், "அதனுள் அடங்கியுள்ள விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். மதத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களை நான் மெஹர் பாபாவில் காண்கிறேன், அதனால் நான் அவருடன் இருக்கிறேன்."

மாணவர்கள் தினமும் பாவ் கல்சூரியை வழிமறித்து கேள்விகளால் துன்புறுத்துவதோடு, பாபா மீது ஆர்வம் காட்டுவது போல பாசாங்கு செய்தனர். அவர்கள் நேர்மையானவர்கள் என்று எண்ணி, அவர்களுடன் பேசவும், பாபாவைப் பற்றிய கதைகளைக் கூறவும் பாவ் நேரம் ஒதுக்கி வந்தார்.

ஒரு நாள் பாவ் கல்சூரியிடம் பாபா, அந்த மாணவர்களைப் பற்றி கேட்க, அவர்களை எப்படி, பாபாவை நோக்கி ஈர்க்க முயன்றார் என்பதை அவர் விவரித்தார். பாபா அவரைத் திருத்தும் விதத்தில் கூறினார், "**நீங்கள் ஒரு மூடன்! ஒரு கல்லில் விதையை நட்டு, தினமும் நீர் பாய்ச்சினால், என்னவாகும்? எந்த பலனும் இருக்காது. அது முளைக்காது, உங்கள் உழைப்பு அனைத்தும் வீணாகிவிடும்.**

**"அப்படியானால் என்னைப் பற்றி அவர்களிடம் சொல்லி என்ன பயன்? அவர்கள் கற்களைப் போன்றவர்கள்! அவர்களின் நேரம் இன்னும் வரவில்லை. இனி அவர்களுடன் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள்.**"

மணி, ஃபிலிஸுக்கு (1955 அக்டோபர் 23) எழுதியது போல: "பாபா நீண்ட காலத்திற்கு முன்பு கூறினார், '**நான் ஒரு சிங்கத்தைப் போன்றவன் - ஆனால் தற்போது ஒரு கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கம். என்னை அடையாளம் கண்டுகொள்பவர்கள் எனது சக்தியின் வலிமையை உணர்கிறார்கள், ஆனால் ஒரு சிறிய அளவிற்கு மட்டுமே. நான் பேசும் போது, கூண்டைவிட்டு வெளியே வருவேன், அப்போது எனது தெய்வீக பலத்தை நீங்கள் அறிவீர்கள்.**"

ஆண், பெண் மண்டலியுடன், 1955 அக்டோபர் 27 காலை 6:00 மணிக்கு பாபா, சத்தாராவிலிருந்து மெஹராபாத்தில் நிகழவிருக்கும் சகவாச நிகழ்ச்சிக்காகப் புறப்பட்டுச் சென்றார். எரச், முதலில் பாபாவையும் பெண் மண்டலியையும் பிந்த்ரா ஹவுஸிற்கு அழைத்துச் சென்ற போது, அங்கு ஆதி சீனியர் அவர்களை சந்தித்தார். அன்று காலை 9:00 மணிக்கு ஆதி, எரச், பப்பா ஜெஸவாலா, பாபா ஆகியோர், பூனா ஏர்வாடா மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பெலி ராண்டேலியாவை (BELI RANDELIA) மீண்டும் சந்தித்தனர். பாபாவின் முதல் வருகைக்குப் பிறகு, பெலி சிறையில் நன்றாக நடந்து, சிறை அதிகாரிகளின் அனுதாபத்தையும் நல்லெண்ணத்தையும் பெற்றதாகவும், ஆனால் பின்னர் அவர் பாபாவை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற தீவிர ஏக்கத்தில் மூழ்கியதாகவும் தெரியவந்தது. பாபா அடிக்கடி பூனாவிற்கு விஜயம் செய்ததால், அதிகாரிகள் அவரை, தரிசனத்திற்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று பெலி வேண்டுகோள் விடுத்தார், ஆனால் அதிகாரிகள் மறுத்துவிட்டனர்; பெலியின் விரக்தியும் நாளுக்குநாள் அதிகரித்தது. அவர் சிறை காப்பாளர் மற்றும் இதர

சிறை ஊழியர்களிடமும் முறைகேடாக நடக்கத் தொடங்கி, அவர்களின் பல்வேறு முறைகேடுகள் குறித்து விமர்சித்து குற்றம் சாட்டினார்.

இந்த நேரத்தில் நஸர்வான் ஸட்டா சிறைச்சாலைக்கு விஜயம் செய்தார், மேலும் சிறை அதிகாரிகளிடம் இணக்கமான முறையில் நடந்துகொள்ள பெலிக்கு ஆலோசனை வழங்குமாறு அவரது உதவியை நாடினர். பெலியின் நேர்மையால் நஸர்வான் வெகுவாக ஈர்க்கப்பட்டார், எனவே பாபாவை மீண்டும் சிறைக்கு விஜயம் செய்ய அழைப்பு விடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அவர்களும் அவ்வாறே செய்தனர்; அவர்களின் அழைப்பை ஏற்று, பாபா இந்த சந்தர்ப்பத்தில் அங்குச் சென்றார்.

வி. ஒய். அகாஷி (V.Y. AGASHI), மத்திய சிறைச்சாலை அச்சகத்தில் பணியாளராக இருந்த வேளையில், சிறைக்கு எதிரே அமைந்த ஊழியர்கள் குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்தார். மெஹர் பாபாவை சந்திப்பதற்கு முன்பே, ஷிர்டி சாய்பாபாவின் பக்தராக இருந்தார். சிறைக்கு எதிரே அமைந்த சாலை முழுவதும் சீருடை அணிந்த போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். அகாஷியின் குடியிருப்பிற்கு முன்னால் ஒரு சிறிய பந்தலும் அமைக்கப்பட்டிருந்தது. விதானத்தின் கீழ் ஒரு பக்கமாக இரண்டு சோஃபாக்கள் - அதில் ஒன்றில் சாய்பாபாவின் பெரிய புகைப்படமும், மற்றொன்று பாபா அமருவதற்காகவும் வைக்கப்பட்டிருந்தது. பாபாவின் தரிசனத்திற்காக அங்கு மக்கள் கூட்டம் ஒன்று திரண்டிருந்தது.

மெஹர் பாபாவின் வரவேற்பு நிகழ்ச்சிக்கு, சிறை அதிகாரிகள் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பெலி சிறையின் பிரதான நுழைவாயில் அருகே அமைந்துள்ள அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டார். அலுவலகம் மற்றும் அதை சூழ்ந்த வளாகங்கள் அனைத்தும் சுத்தமாகவும், பந்தல்கள், பச்சை இலைகள் மற்றும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன. பாபாவை அதிகாரிகளும், ஊழியர்களும் மரியாதையுடன் வரவேற்று, அனைவரும் அவரது தரிசனத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், அவர் அன்புடன் பெலிக்கு 20 நிமிட நேர்காணலை வழங்கினார், அவரைத் தழுவி ஆசீர்வதித்தார்.

அதைத் தொடர்ந்து, அகாஷியின் இருப்பிடத்திற்குச் சென்ற பாபாவை, உள்ளூர் அன்பர்கள் வரவேற்றனர். சோஃபாவில் அமர்ந்து சுமார் 300 பேருக்கு தரிசனம் வழங்கினார். மும்பை, பர்ஸி (BARSI), குஜராத்திலிருந்தும் பக்தர்கள் வருகை தந்தனர்.

மும்பையிலிருந்து வந்த கர்மான் மாசி, அர்னவாஸ், அவரது சகோதரிகள் நர்கிஸ், ரோடா, அவருடைய மூன்று மகன்கள் உட்பட பிற அன்பர்களுக்கும், நெருங்கிய பூனா நண்பர்களுக்கும் பிந்த்ரா ஹவுஸில் தரிசனம் வழங்கிவிட்டு, பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ரோஷன் ஸட்டா, பாபா மற்றும் பெண் மண்டலியுடன் சவாரி செய்து அக்பர் அச்சகத்தில் இறங்கிய வேளையில், பாபா மீண்டும் அவரது அன்பர்களைப் பார்த்தார். சாய்பாபாவுடன் இருந்த கம்மு பாபா (KAMMU BABA) என்ற ஒரு பெரிய துறவி மும்பையில் வாழ்ந்து வந்தார். பல ஆண்டுகளாக, மும்பையில் பயின்று வந்த

ரோஷன் மூலமாக, இந்த மேல் நிலை ஆன்மாவை பாபா, மறைமுகமாகத் தொடர்பு கொண்டார். கம்மு பாபாவைத் தொடர்புகொண்டு, அவருக்கு ஒரு குறிப்பிட்ட செய்தியை வழங்குமாறு பாபா, ரோஷனுக்கு அறிவுரைகளை அனுப்புவதும், மேலும் துறவி அதற்கு பதிலை வழங்குவதும் வழக்கம். ஒருமுறை பாபா, ரோஷனின் சகோதரி தூனை அந்தத் துறவியிடம் அனுப்பி வைத்தார். மெஹர்ஜி அவரை பூனாவிலிருந்து தனது காரில் அழைத்து வர, பாபாவின் அறிவுறுத்தலின்படி தூன், கம்மு பாபாவிற்கு மாலை அணிவித்ததும், அவர் மாலையைக் கழற்றி அவரிடம் திருப்பிக் கொடுத்து, மெஹர் பாபாவிற்கு அதை அணிவிக்குமாறு அறிவுறுத்தினார். தூன் மெஹராஸாத்திற்கு வந்தபோது, பாபா அந்த மாலையை அணிந்து, பின்னர் அதைத் தூனிடம் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறி திருப்பிக் கொடுத்தார்.

1955ஆம் ஆண்டில் (அல்லது 1956), '**கம்மு பாபாவை கடைசியாக ஒருமுறை தொடர்பு கொள்ளுமாறும், பின்னர் அவரிடம் செல்ல வேண்டாம்**' என்றும் ரோஷனுக்கு, பாபா செய்தி அனுப்பினார். இந்தியாவில் வாழ்ந்த, அவருக்குப் பிரியமான ஏழு துறவிகளில் ஒருவராக கம்மு பாபாவை அடிக்கடி குறிப்பிட்டாலும், பாபா, அவரை நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை.

பாபா, பெண் மண்டலியுடன் மெஹராஸாத்தில் பிரதான வீட்டில் தங்கினார். வெளியில் அமைந்த அறைகளில் காக்கா, எரச், பைதூல், கிருஷ்ணா நாயர் ஆகியோர் தங்கி இருந்தனர்; கிருஷ்ணா, குறிப்பாக சகவாச நிகழ்ச்சிகளுக்காக அழைக்கப்பட்டார். குமார் ஒரு மாதம் மெஹராஸாத்தில் தங்குவதற்காக டெஹ்ரா டூனிலிருந்து வந்தார். இதர ஆண் மண்டலி அனைவரும் மெஹராபாத் சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொள்பவர்களை தங்க வைப்பதற்கான ஆயத்தப் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டனர்.



நோஸர் தாதாசாஞ்சி
(NOZAR DADACHANJI)



ஏர்வாடா சிறைச்சாலை,
**27** அக்டோபர் **1955**
ஆதி சீனியர்,
பெலி ராண்டேலியா, எரச்
(YERVADA PRISON,
27 OCTOBER 1955 ADI SR.,
BELI RANDELIA, ERUCH)



**மெஹராபாத் சகவாசம், நவம்பர் 1955**
(MEHERABAD SAHAVAS, NOVEMBER 1955)



மெஹர் பாபாவின் மண்டலி (MEHER BABA'S MANDALI), **1955**
அமர்ந்திருப்போர் (SEATED): அலோபா (ALOBA), குஸ்தாஜி (GUSTADJI), ராம்ஜூ (RAMJOO), பெண்டு (PENDU) நிற்போர் (STANDING): பாவ் (BHAU), பாதிரி (PADRI), விஷ்ணு (VISHNU), ஃபெராம் (FERAM), எரச் (ERUCH), பால் நாத்து (BAL NATU), சிது (SIDHU)

# மெஹராபாத் சகவாசம் - குஜராத்தி
(**Meherabad Sahavas - Gujarati**)

மெஹராபாத்தில் திட்டமிடப்பட்ட நான்கு சகவாச நிகழ்ச்சிகளில், முதல் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் இறுதி கட்டத்தில் இருந்தன. 1955 அக்டோபர் 27 வியாழன் அன்று, பாபா சத்தாராவிலிருந்து மெஹராஸாத்திற்குக் காரில் அழைத்துச் செல்லப்பட்டார்; மறுநாள் முதல், அவர் தினமும் மெஹராபாத்திற்குச் செல்லத் தொடங்கினார். தூங்குவதற்கும், கூட்டங்கள் நடத்துவதற்கும் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. தேநீர், காலை, மதிய, இரவு உணவுகள் வழங்குவதற்காக ஒரு தனி சாப்பாட்டுப் பந்தலை அமைத்து, மேசைகள் மற்றும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சமையல் ஏற்பாடுகள் அனைத்தும் சகன், ஷஹஸ்த்ரபுத்தே (மஹாபலேஷ்வர்) இருவருடைய பொறுப்பில், நானா கேர், பால் நாத்து, டாக்டர் கனகதண்டி (ஏலூரைச் சேர்ந்தவர்), ரங்கோலே, தீரஜ் பர்மார் (ரமா கல்சூரியின் சகோதரர்), மினூ கராஸ், ஆதி துபாஷ், கோஹியார் சத்தாராவாலா ஆகியோரின் உதவியோடு நடந்தது. மேலும் உதவிக்காக அரன்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த ஊழியர்களும் பணியமர்த்தப்பட்டனர்.

பெண்டு அனைத்து ஏற்பாடுகளையும் கண்காணித்து வந்தாலும், கூட்டத்திற்கான உணவுகள் குறித்து குறிப்பிடத்தக்க கவனத்துடன் இருந்தார். அஹமதுநகர் ரயில் நிலையத்திலிருந்து மெஹராபாத் வரை, இலவச போக்குவரத்து வசதியும் வழங்கப்பட்டது. விஷ்ணு, பால் நாத்து இருவரும் கணக்குவழக்குகளைப் பராமரிக்க வேண்டும்; பாவ் கல்சூரி அன்பர்களின் தங்குமிடங்கள், உணவு மற்றும் அப்பகுதியின் பொது ஒழுங்கமைப்பைக் கண்காணிக்க வேண்டும்; தினமும் காலையில் நீராடுவதற்கு வெந்நீர் தயாராக இருப்பதை அலோபா கவனித்து வந்தார்; நீலு, டான் இருவரும் முகாமின் மருத்துவர்களாக கடமையாற்றினர்; கிஷன் ஸிங், ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா ஆகியோர் கூட்டங்களில் பாபாவின் உரை மற்றும் அறிக்கைகளை குறிப்பெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்; ஆதி அவரது அஹமதுநகர் அலுவலகத்தை கவனித்துக் கொண்டிருந்தபோது, வாமன் படாலேயின் உதவியுடன், ராம்ஜூவைப் போலவே, சகவாச ஏற்பாடுகளை மேற்பார்வையிடவும் உதவினார். பாபாவின் கை சைகைகளையும், குறிப்புகளையும் விளக்குவதற்கு எரச் தொடர்ந்து பாபாவுடன் இருந்தார். பாபாவின் சகோதரர் ஜால்பாய், சதாஷிவ் பாட்டீல், நரிமன் மற்றும் மெஹர்ஜியைத் தவிர இதர அனைத்து மண்டலியும் இரவும் பகலும் ஏதேனும் ஒரு பணியில் மும்முரமாக இருந்தனர், பாபா ஒவ்வொரு விவரத்தையும் தவறாமல் கண்காணித்துக் கொண்டிருந்தார்.

மெஹர்-ஆபாத் (MEHER-ABAD) அதன் பெயருக்கு ஏற்ப 'வாழ்ந்து' வந்ததையும், அதன் அனைத்து மகிமையிலும் 'வளர்ந்து' இருப்பதையும் காலம்

பார்த்தது. 'பிரியமானவரின் மதுபானத்தின் கதிர்கள் ஒவ்வோர் இதயத்திலும் ஊடுருவி, மெஹராபாத்தை தெய்வீக உணவகமாக மாற்றியது.' ஆயினும்கூட, அனைத்து வசதிகள் மற்றும் வெளிப்புற ஓய்வுக்கான ஏற்பாடுகள் இருந்தபோதிலும் - தங்கள் அன்பானவரின் சகவாசத்தை அனுபவிக்கும் அதிர்ஷ்டம் குறித்த உயர்வான எதிர்பார்ப்பு - நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களிடையே உள்ளளவிலான பதற்றத்தையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியது, இதை ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் யாத்ரீகர்கள் மட்டுமே அனுபவிக்க முடியும்.

1955 நவம்பர் 1 செவ்வாய்க்கிழமை அன்று, ஆஸ்திரேலியாவிலிருந்து ஃபிரான்சிஸ் பிராபஸோன் (FRANCIS BRABAZON), அமெரிக்காவிலிருந்து டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS) ஆகியோர் மும்பை வந்தனர். ஐரீன் கோனிபியருடன் இணைந்து, மூவரும் 2ஆம் தேதி மாலை மெஹர்ஜியால் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். ஃபிரான்சிஸ் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் பாபாவை முதல்முதலாக சந்தித்தார், இது அவரது மூன்றாவது இந்திய பயணம். (அவர் ஆந்திரா தரிசன நிகழ்ச்சியிலும், 1954 ஆண்கள் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.) சகவாச நடவடிக்கைகளில் பங்கேற்க, அவர் 40 நாட்களுக்காக இந்தியா வருகை தந்தார்.

டான் ஸ்டீவன்ஸைப் பொறுத்தவரை, இது அவரது முதல் இந்திய பயணம். டான், ஒரு ஸூஃபி, 1952இல் அமெரிக்காவில் மெஹர் பாபாவை சந்தித்தார். அவர் 1954 செப்டம்பர் மாதத்தில் உடல்நிலை சரியில்லாததால் கூட்டத்தில் பங்கேற்க முடியாமலாயிற்று; எனவே அவர் ஏறக்குறைய பத்து நாட்கள் சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இந்தியா வந்திருந்தார். இருவரும் மெஹராபாத் மேல்மலையில் அமைந்த ஒரு சிறிய அறையில் (பின்னர் அது நூலகமாக மாற்றப்பட்டது) தங்க வைக்கப்பட்டனர்; மேலும் ஸவக் கொத்வால் அவர்களின் உணவுக்கான ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டார், அது ஸரோஷின் விலூ வில்லாவிலிருந்து அனுப்பப்பட்டது. ஆதி ஜூனியரும் அவரது மனைவி ஃப்ரீனியும் உணவு வேளையில் அவர்களுடன் இணைவதோடு தங்களால் இயன்ற விதத்தில் உதவினர். இருப்பினும், ஃபிரான்சிஸ் இதர ஆண் மண்டலியுடன் கீழ் மெஹராபாத்தில் தங்க விரும்பியதால், டான் ஸ்டீவன்ஸ் திரும்பிச் சென்ற பின்னர், ஃபிரான்சிஸ் மேல் மலையிலிருந்து கீழே சென்றார். ஐரீன் மெஹராஸாத்தில் ஓர் இரவு தங்க வைக்கப்பட்டார்.

பாபா, நவம்பர் 3ஆம் நாள், ஐரீனுடன் இரண்டு மேற்கத்திய அன்பர்களை மெஹராபாத் மேல்மலையில் சந்திக்க வந்தார். ஆதி சீனியருடன் வந்த டாக்டர் தேஷ்முக், ஐரீனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். இந்தியாவின் துணை குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனிடம், அவர் அது முழுவதையும் படிப்பதாக உறுதிமொழி வழங்கும் அடிப்படையில், பரிசாக வழங்குவதற்காக 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தகம் ஐரீனிடம் கொடுக்கப்பட்டது.

பின்னர் ஐரீன் மீண்டும் மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கிருந்து அவர் குளிர்காலத்தை நண்பர்களுடன் கழிக்க டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொள்பவர்கள், கீழ்வரும் அறிவிப்புகளை கவனமாகப் படிக்குமாறு பாபா கட்டளையிட்டார்; அவை, கீழ் மெஹராபாத் மண்டபத்தின் அறிவிப்புப் பலகைகளில் வெளியிடப்பட்டன:

**1955 நவம்பர் மாதத்தில் மெஹர் பாபா வழங்கிய வழிமுறைகள்:**

**குறிப்பாக சகவாச வாரங்களில் பங்கேற்பவர்களும், பொதுவாக பாபாவுடன் தொடர்பில் இருக்கும் அன்பர்கள் அனைவரும் கவனமாகப் படித்து, இந்த வழிமுறைகளையும், அத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற குறிப்புகளையும் முழுவதுமாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும், அதாவது:**

1. **1955 மே 1 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 25இன்** (மரச்சட்டத்துடன் பொருத்தப்பட்ட அறிக்கை) **சாராம்சம்.**
2. **'கடவுளும் அன்பும்'** (GOD AND LOVE) **பற்றிய இரண்டு விளக்கப்படங்கள்** (ரானோவால் வரையப்பட்டது).
3. **சகவாச வாரங்களுக்கான நன்கொடைகளின் பட்டியல்** (அனைத்து இந்திய அன்பர்களால் வழங்கப்பட்டது).

**ஒருவரும், சகவாச நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்தவர்கள் உட்பட, எந்த சூழ்நிலையிலும் - நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ - என்னிடம் உதவிகள், வெகுமதிகள், பணம், உத்தியோகங்கள், உடல்நலம் அல்லது பிற பொருட்களை, ஆன்மீக நலனுக்காகக் கூட கேட்கக்கூடாது. எதையும் கேட்காமல் இருப்பதே சாலச் சிறந்தது. எதையேனும் கேட்க வேண்டும் என்றால், பாபாவின் அன்பைக் கேட்பதற்குத் தேவையான அளவு உறுதியும் தைரியமும் உள்ளதா என்பதை முதலில் சிந்திக்க வேண்டும்.**

**அந்த அளவுக்கு உறுதியும் தைரியமும் இருந்தால், உடல், மனம், இதயம் என அனைத்தையும் தியாகம் செய்து, முற்றிலும் சரணடையத் தயாராக இருக்க வேண்டும். மேலும் ஒருவரின் சுயமானது, ஒரே நேரத்தில் உயிருடன் இருக்கவும், உயிரைத் துறக்கவும் தயாராக இருக்க வேண்டும்.**

**நான் அவதார புருஷர் என்று நம்பும், உணரும் உங்கள் அனைவருக்கும், என்னிடம் எதையும் கேட்க வேண்டிய தேவையில்லை என்று நான் கூறுகிறேன்; ஏனெனில், ஒருவருக்கு எப்போது, என்ன செய்ய வேண்டும், ஒருவருக்கு எப்போது என்ன கொடுக்க வேண்டும் என்ற அனைத்தையும் நான் நன்கு அறிவேன்.**

**உங்களது நம்பிக்கையும், பற்றும் உங்களிடமிருந்து கோருவது என்னவெனில், என்னிடமிருந்து நீங்கள் எதை அடையப் பெற்றாலும் அல்லது என்னால் உங்களிடமிருந்து எது பறிக்கப்பட்டாலும், அதை சமமாக ஏற்றுக்கொண்டு, நீங்கள் மகிழ்ச்சியாக உணர வேண்டும். நான் யார் ஒருவருக்கும், எந்த நேரத்திலும் அமைதி மற்றும் வளம், பணம் மற்றும் குழந்தைகள், பெயர் மற்றும் புகழ் போன்றவற்றை ஆசீர்வதிக்கும்போது,**

அவரும், பிறரும் இதை ஆனந்தக் களிப்பாக உணரக்கூடாது. அவர்கள், உண்மைப்பொருளாக என் மீது நம்பிக்கை கொள்ளும்போது, அவர்களின் மனதையும் இதயத்தையும் ஒருமுகப்படுத்துவது மட்டுமே அவர்களின் அக்கறையாக இருக்க வேண்டும்.

நான் விரும்பியபடி கொடுக்க எனக்கு உரிமையும், சுதந்திரமும் இருந்தால், எந்த வகையிலும், எந்த நேரத்திலும், நான் சிறந்ததாகக் கருதும் எதையும், நான் விரும்பியபடி எடுக்கவும், உரிமையும், சுதந்திரமும் உடையவனாக இருக்க வேண்டும். நான் எவரிடமிருந்தும் எதையும் எடுத்துச் செல்லும்போது, அவர் அழுகை குரலை எழுப்பக் கூடாது, ஏனெனில் அவருடைய ஒரே கவலை, ஏக இறைவனான உண்மைப்பொருளின் மீது கவனம் செலுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர, நான் எடுத்துச் செல்லும் ஒன்றில் அல்ல.

அனைத்து ஆரம்பங்களின் ஆரம்பத்திலிருந்தும் நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன், நான் இப்போதும் சொல்கிறேன், கடைசி வரை நான் இதையே சொல்வேன், ‘கடவுளை நேசிப்பவன் கடவுளாகிறான்.’

நான் உங்கள் மத்தியில் வந்திருக்கிறேன் என்பது உண்மை. நான் எப்படி வந்தேன், எங்கிருந்து வந்தேன், நான் வந்ததன் நோக்கம் என்ன என்பதை, இந்த நாட்களில் ஒரு நாள், முழு உலகமும் உணரும். நான் உலகில் ‘குழு’க்கள் மற்றும் ‘வகுப்பு’களை நிறுவவோ அல்லது கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் ஆசிரமங்களை எழுப்பவோ வரவில்லை என்பதை மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நான் அன்பின் அழகைப் பெற்று அதன் ஆசிகளை வழங்க வந்துள்ளேன். கடவுளைத் தவிர இதர அனைத்தும் - மதம், உலக சொத்துக்கள், குடும்பம், பணம் அல்லது ஒருவரின் சொந்த உடல் என்ற இவை அனைத்தின் பெயரில் நடத்தும் சடங்குகள், திருவிழாக்கள் அல்லது சம்பிரதாயங்கள் அனைத்தும் - மாயை.

‘எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னிடம் வாருங்கள்’ என்று ஒவ்வொருவருக்கும் நான் விடுத்த அழைப்பை ஏற்று, சிலர் வந்துள்ளனர். ஒரு சிலர் ஆன்மீக ஞானத்திற்காகவும், பிறர் அமைதியை நாடியும், உலக சச்சரவுகள் மற்றும் சிக்கல்களிலிருந்து தப்பிக்கும் எண்ணத்திலும் வந்துள்ளனர்; அதே வேளையில், ஒரு சிலர் என் மீது கொண்டுள்ள நேசத்தினால், என்னை எனது சுய ரூபத்தில் கண்டுகொள்ள வந்துள்ளனர். என்னிடம் வந்த அனைவரும் இயல்பாகவே என்னைச் சார்ந்து இருந்தாலும், பாபாவாகிய நான் சுதந்திரமாகவும், தன்னுரிமையுடனும் இருக்கிறேன்.

அன்பின் அடிப்படையில் வந்து போகும் பணத்தைக் கொண்டு, நான் அவர்களின் தேவைகளைப் பார்த்து வருகிறேன். அன்புடன் எனக்கு வழங்கப்படுவதை நான் அன்புடன் ஏற்றுக்கொள்கிறேன், மேலும் எனது அன்பினால் அதைப் பகிர்ந்தளிக்கிறேன். நான் அற்புதங்கள் நிகழ்த்தி பணத்தைப் பெறுவதுமில்லை அல்லது பணம் சம்பாதிக்கும் எந்தத் தொழிலோடு எனக்குத் தொடர்பும் இல்லை. தங்களால் இயன்றதைக்

**கொடுத்தவர்களும் இருக்கிறார்கள், பணத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல் எனக்காகவும் என் அன்பிற்காகவும் தங்கள் அனைத்தையும் அர்ப்பணித்தவர்களும் இருக்கிறார்கள்.**

வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 25இல் (LIFE CIRCULAR NO. 25) பாபா தனது அன்பர்கள் மற்றும் பக்தர்களுக்கு விதித்த நிபந்தனைகளின்படி, தொடர்ந்து கூறினார்:

**இன்றைய சூழ்நிலையில், என்னிடமிருந்து எந்த வாக்குறுதியும் இல்லை, என் மீது எந்தப் பிணைப்பும் இல்லை, மேலும் முறைப்படியான எந்த உறுதிமொழியும் இல்லாத நிலையில், என்னைச் சார்ந்திருப்பவர்களும் பொருள்சார்ந்த நிலையிலிருந்து முற்றிலும் விடுபட்டு, சுதந்திரமாக வேண்டும். இதன் மூலம், அவர்கள் அன்பின் நிமித்தம், அன்பின் தூய உறவைப் பேணி பாதுகாக்க முடியும்.**

**நான் எப்பொழுதும் உள்ளளவில் இருப்பது போல, வெளியளவிலும் இருக்க விரும்புகிறேன்: அன்பில், அன்பிற்காக, அன்புடன் மட்டுமே வாழ்கிறேன். அந்த உணர்வின் அடிப்படையில், 'இன்றைய தினங்களுக்கும்', 'நாளைய நாட்களுக்கும்' உணவு மற்றும் உறைவிடத்திற்கான எந்த ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளதா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், முழு உலகமும் என்னுடன் வாழ முடியும். அது போலவே, நான் சுதந்திரமாக இருக்கிறேன், எந்தப் பிணைப்பும் என்னைத் தொடாத முறையில், பிறருக்கான ஏற்பாடுகளைப் பற்றி கவலைப்பட வேண்டிய தேவையின்றி, நான் சுதந்திரமாக இருக்க வேண்டும். என்னுள் அன்பு எப்போதும் நிலைத்தோங்கி நிற்பது போல, வெளியளவிலும் அன்பு மேலோங்கித் தழைக்க வேண்டும் என்று நான் இப்போது விரும்புகிறேன்.**

**அன்பை எப்படி விளக்குவது? மானிடரின் எண்ணிக்கையைப் போலவே அன்பையும் கீழ்ப்படிதலையும் விளக்க பல வழிகள் உள்ளன. அன்பின் அடிப்படையிலான கீழ்ப்படிதல் மூலமாக, மேலும் அன்பின் வழியாக மட்டுமே அதைப் புரிந்துகொள்வதைத் தவிர, அவற்றைப் புரிந்துகொள்வதற்கு முடிவே இருக்காது. அன்பின் நிமித்தம் அன்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்போது அல்லது அது தோல்வியுறும் நிலையில் அன்பின் நிமித்தம் கீழ்ப்படிதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று, எல்லா மாபெரும் துறவிகளும், ஆசிரியர்களும், குருநாதர்களும் ஒரு வழியில் அல்லது இன்னொரு வகையில் அதையே கூறுகிறார்கள்.**

**தன்னிச்சையான சரணடைதலுக்கு, இதை இவ்வாறு சொல்வதானால், உங்கள் உணர்வுகளை மறைக்காமல், உள்ளத்தைத் திறந்து வெளிப்படுத்த வேண்டும். அன்பானவரின் கூர்மையான கத்தியாகிய கட்டளையின் கீழ், ஒருவரின் கழுத்தை அர்ப்பணிக்க எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும், மேலும் தலை துண்டிக்கப்படுவது, குருநாதரின் பாதங்களில் முழுமையாக சரணடைவதன் அடையாளமாகும்.**

கீழ்ப்படிதல் மிகவும் முழுமையானதாக இருக்க வேண்டும், அது ஒருவரை இயலாமைகளுக்கு செவி சாய்க்க அனுமதிக்காமல், அதைக் குறித்த அவரின் கரிசனம், பல்வேறு வாய்ப்புகளுக்கு அவரை விழிப்படையச் செய்கிறது - கவிஞரின் (ஹ஁பீஸ்) கற்பனை கண்ணோட்டத்தில்:

நான் ஒரு கட்டுமரத் தோணியில் கட்டப்பட்டு,
கடலில் தள்ளப்பட்டேன்;
அப்போது எனது மேலங்கி நனையாமல்
கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டேன்.

இருந்தாலும், இவை அனைத்தும், எப்போதும் தயார்நிலையில் இருக்கும் அன்பு, அன்பிற்கான கீழ்ப்படிதல் ஆகியவற்றின் போதுமான வரையறையை விளக்கவுமில்லை, விளக்கவும் முடியாது. உண்மையில், இந்த சகவாசத்திற்கான மூன்று காரணங்களில் ஒன்று என்னவெனில், அன்பு, கீழ்ப்படிதல் இரண்டும் உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதை கிரகித்து, முழுவதுமாகப் புரிந்துகொள்ள உதவுவதாகும்.

என்னுடைய பிரகடனங்கள், செய்திகள், சொற்பொழிவுகள் போன்றவற்றை முற்றிலும் மறந்துவிடுவதற்கு, இந்த சகவாசங்களைப் பற்றிய தெளிவான சித்திரம் உங்கள் மனத்திரையில் இருக்க வேண்டும். இது கடந்த கால மற்றும் எதிர்கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது மீறுவதற்கான ஒரு சந்தர்ப்பம் அல்ல. இங்கு இருக்கும் பெரும்பாலான அன்பர்களின் அனுபவத்தைப் போல, நான் மேடையில் அமர்ந்து உரையாற்ற, நீங்கள் எனக்கு முன்பாக அமர்ந்திருப்பது போலவும் உங்கள் மனத்திரையில் இருக்கும் சித்திரத்தை முழுவதுமாக அகற்றிவிட வேண்டும்.

நீங்கள் என்னுடன், எனக்கு அருகிலும், என்னைச் சுற்றிலும், முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; இதன் மூலம் உங்களோடு தனிப்பட்ட முறையில் நான் இணைந்திருப்பதன் அந்த சுற்றுப்புற காற்றை நீங்கள் சுதந்திரமாக சுவாசிக்க முடியும். ஒருவரோடொருவர், ஒருவருக்கொருவர் நெருக்கமாக வாழ்வதைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் இல்லாமல், ஒரே கூரையின் கீழ் வாழ்வது போல் நாம் ஒன்றிணைந்து இருக்க வேண்டும்.

எந்தவொரு செயல்பாடுகள், கூட்டங்கள், கால அட்டவணைகள், நிகழ்ச்சிகள், நிகழ்ச்சி நிரல்கள் அல்லது திட்டமிட்டு தீர்மானிக்கப்பட்ட விஷயங்களையும் எதிர்நோக்க வேண்டாம். விளையாடுவது, அமர்ந்திருப்பது, நடப்பது, கேலி செய்வது, தீவிரமான விஷயங்களைப் பற்றி விவாதிப்பது அல்லது கதைகளைக் கேட்பது என நான் உங்களுடன் இருக்கும் எல்லா நேரங்களிலும் நீங்கள் என் அருகில் இருக்க வேண்டும். நான் வழக்கமாக நடத்தும் அன்றாட வாழ்க்கையை நீங்கள் என்னுடன் வாழ வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நீங்கள் படிக்கவும், பயிலவும், தியானம் அல்லது பிரார்த்தனை செய்யவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை, ஆனால் உங்கள் குடும்பத்தினர், உறவுகள், நண்பர்கள் மத்தியில் உங்கள் இல்லத்தில் இருப்பதைப் போல் இயல்பாகவும், சுதந்திரமாகவும் என்னுடன் இருக்கவேண்டும். சமூக வாழ்க்கையில் ஒருவர் வழக்கமாகக் கருதும் அனைத்து மேலோட்டமான அணுகுமுறைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நீங்கள் உங்கள் இயல்பான சுயமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனது சகவாசத்தில் இருப்பதாலும், என்னைப் பார்ப்பதாலும், அதேவேளை நான் உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதாலும், நீங்கள் தானாகவே ஒவ்வொன்றையும் கற்றுக்கொள்வீர்கள், அதே வேளையில் ஏற்புடையதாக இல்லாததைக் களைந்து விடுவீர்கள், அதை வழக்கமான கல்வி அறிவு மூலம் கற்றுக் கொள்ள முடியாது. சுருக்கமாக, இந்த சகவாச திட்டத்திற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன:

- முதலாவதாக: நம்மிடையிலான ஒற்றுமையை வெளிக்கொணரும் வகையில் எனது நெருங்கிய சகவாசத்தை உங்களுக்கு வழங்குவதற்காக...
- இரண்டாவது: அன்பு, கீழ்ப்படிதல் இரண்டையும் புரிந்துகொள்வதற்கும், எல்லா உயிரினங்களுக்கும் பின்னால் எல்லையற்ற நிலையில் இருக்கும் அமிர்தத்தின் இந்த இரட்டை அம்சங்களை நீங்கள் உள்வாங்கச் செய்வதற்கும்...
- மூன்றாவது: அன்பைப் பரப்பும் எனது பணியை எப்படிச் செய்வது என்று உங்களுக்கு நடைமுறையில் காண்பிப்பதற்காகவும்...

நான் எவ்வளவு விளக்கினாலும், கடந்த பன்னிரெண்டு மாதங்களில் என் உடலில் ஏற்பட்ட மிகப்பெரிய அளவிலான அழுத்தத்தைப் பற்றிய உண்மையான யோசனை உங்களுக்கு இருக்க முடியாது. குறைந்த பட்சம், நான் உடல்ரீதியாக முற்றிலும் சோர்வடைந்துவிட்டேன், இருப்பினும் சில விஷயங்களை உங்கள் மனதில் முழுமையாகப் பதிய வைப்பதற்காக, இந்த சகவாசம் நிகழும் மாதம் முழுவதும், இன்னும் அதிகமாக உழைக்க விரும்புகிறேன். உடல்ரீதியாக என் அருகில் இருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் மட்டுமல்லாமல், என்னை நேசிக்கும், எனக்குக் கீழ்ப்படியும், மற்றும் பல காரணங்களுக்காகவும் இங்கு வர இயலாமல் இருப்பவர்களுக்காகவும், மேலும் மேலும் ஆழமாக எடுத்துரைத்து உள்வாங்கச் செய்ய வேண்டிய கருத்துக்கள் பல உள்ளன. இந்தக் கருத்துக்களை, மேலே கூறிய, சகவாசத்திற்கான மூன்று காரணங்கள் மூலமாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இந்த ஏழு நாட்களில், எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் கவலைகள், சௌகரியங்கள், அசௌகரியங்கள், வீடு மற்றும் வணிக விவகாரங்களை மறந்து விடுங்கள். சுருக்கமாகச் சொன்னால், என்னுடன் இருக்கும் உங்கள் இந்த நேர வாழ்க்கையைத் தவிர, உங்கள் அன்றாட

**வாழ்க்கையைப் பற்றிய அனைத்தையும் மறந்துவிடுங்கள். நான் கூறியது போல், உடல் ரீதியாக இங்கு இல்லாதவர்கள் உட்பட, என்னை நேசிக்கும், எனக்குக் கீழ்ப்படியும் அனைவருக்காகவும், மேலும் அதிக அளவிலான எனது உடல் உழைப்பையும் பொருட்படுத்தாமல் இந்த சகவாசத்தை வழங்கியிருக்கிறேன்.**

**சகவாசத்தின் போது நீங்கள் என்னிடம் எதிர்பார்க்க வேண்டிய நான்கு விஷயங்களுக்கான விளக்கங்கள்:**

- **அன்பு** (**நேசம்**);
- **கீழ்ப்படிதல்;**
- **என் அன்பைப் பரப்பும் பணி;**
- **என்னைச் சார்ந்திருப்பவர்களின் வெளியளவிலான பிணைப்பில் இருந்து விடுதலை.**

'**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **என்ற தலைப்பில் நான் வழங்கிய இந்தக் கடைசி புத்தகத்தைத் தன்வசப்படுத்திக் கொண்டதோடு மட்டுமின்றி, நீங்கள் ஒவ்வொருவரும் முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை, படித்து ஜீரணித்திருந்தால் நான் மகிழ்ச்சியடைவேன் என்பதை நீங்கள் அனைவரும் குறிப்பாக கவனிக்க வேண்டுகிறேன். உங்களில் அவ்வாறு செய்யக்கூடியவர்கள், இந்தப் படைப்பை ஆங்கிலத்தில் படிக்கவும் புரிந்துகொள்ளவும் முடியாதவர்களுக்காக, இயன்றவரை பல மொழிகளில் மொழிபெயர்த்து உதவுவதைப் பார்த்து நான் மேலும் மகிழ்ச்சி அடைவேன்.**

மும்பை, பூனா, சூரத், நவ்ஸாரி, பாஜ்வா, டெல்லி, டெஹ்ரா டூன், கராச்சி போன்ற இடங்களிலிருந்து 97 அன்பர்களை உள்ளடக்கிய குஜராத்தி மொழி பேசும் குழு, நவம்பர் 3ஆம் தேதி மெஹராபாத்தை வந்தடைந்தது; அடுத்த நாள் பாபா அவர்களுடன் சகவாசத்தைத் தொடங்கினார்.

சகவாசத்தின் முதல் நாளான 1955 நவம்பர் 4 வெள்ளிக்கிழமை அன்று, பாபா, காக்கா பாரியா இருவரையும் மெஹராஸாத்திலிருந்து மெஹராபாத்திற்கு எரச் காரில் அழைத்து வந்தார். வழியில், அவர்கள் அக்பர் அச்சகத்திலிருந்து மெஹர்ஜி மாமா ஸட்டாவை உடன் அழைத்துச் சென்றனர். அவர்கள் பயணம் செய்துகொண்டிருந்த வேளையில் திடீரென எதிரே வந்த எருமை மாடு ஒன்றைக் பார்த்து, எரச் உடனடியாக பிரேக்கை அழுத்தியதில் சாலையோரம் இருந்த பள்ளத்தில் வீழாமல் கார் வளைந்து நெளிந்து காப்பாற்றப்பட்டது.

பாபா வினவினார், "**எனது பெயரை உச்சரித்தது யார்?**"

எரச், "நான் உங்களுடன் பேசிக்கொண்டிருந்தேன், என்னைப் பொறுத்தவரை, உங்கள் பெயரை எடுப்பதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை."

பாபாவின் தனிப்பட்ட உடமைகளை கவனிப்பதில் தனது கவனம் இருந்ததாக, காக்கா கூறினார், மேலும் மெஹர்ஜி மாமா பாபாவுடன் அதே காரில் பயணித்ததால், அவரது பெயரை மீண்டும் உச்சரிக்க வேண்டிய தேவை எழவில்லை என்று பதிலளித்தார்.

பாபா அவர்களுக்கு நினைவூட்டினார், **"எந்த விதமான அசம்பாவிதமும் நிகழும் போது, எப்பொழுதும் எனது பெயரை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்."**

பாபா காலை 8:20 மணிக்கு மெஹராபாத் வந்த வேளையில் உற்சாகமான வரவேற்பு வழங்கப்பட்டது. பாபா சந்திப்புப் பந்தலில் அமர்ந்து அன்பர்களின் உடல்நிலை, உணவு, ஓய்வு பற்றி விசாரித்தார். '**அறிவிப்புப் பலகையில் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் வழிமுறைகளை அனைவரும் படித்துவிட்டு, ரானோ வரைந்த இரண்டு விளக்கப்படங்களையும் பார்த்தார்களா?**' என்றும் அவர் வினவினார். (பாபா அமர்ந்திருந்த இடம் திருப்திகரமாக இல்லாததால் பாபா இருக்கையை மீண்டும் சரிசெய்தார்.) பின்னர் அவர், **"நேற்று இரவு முழுவதும் எனக்கு தூக்கம் இல்லை"** என்று குறிப்பிட்டார்.

கூடியிருந்த அன்பர்களைத் தழுவிய பிறகு, பாபா சகவாசத்தின் அர்த்தத்தை விளக்கத் தொடங்கினார்:

**சகவாசம் என்பதன் அர்த்தம், உடல் ரீதியில் நெருக்கமாக இருந்து, ஒருவரையொருவர் சந்தித்து, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போல் ஒன்றிணைந்து இருப்பது. ஆனால் நான் உங்களுடன் இருப்பதும், நீங்கள் என்னுடன் இருப்பதும் ஒன்றல்ல. கடந்த பல யுகங்களாக, பாபா அனைவருடனும் இருக்கிறார்; ஆனால் இங்கே, நீங்கள் அனைவரும், பிற அனைத்தையும் மறந்துவிட்டு, பாபாவுடன் இருக்க வேண்டும். எண்ணங்கள் வரலாம், எண்ணங்கள் போகலாம். அவற்றை நம்மால் கட்டுப்படுத்தவோ தடுக்கவோ முடியாது. அவற்றை எப்படிக் கட்டுப்படுத்துவது? உங்களை இழப்பதன் மூலம், பாபாவின் 'சகவாசத்தில்' மூழ்கிவிட முயற்சிப்பதன் மூலம், அவை உங்களுக்குத் தெரியாமல் தானாகவே வந்து போகும்.**

**இப்படி ஆறு நாட்கள் செய்யுங்கள். குறைந்தது ஆறு நாட்களுக்கு, உங்கள் கௌரவம், ஞானம், ஆன்மீகம் அனைத்தையும் மறந்து விடுங்கள். மிகச்சிறிய, சிறிய விவரங்களை கவனித்து, இங்கே என்ன நடக்கிறது என்பதை ஆராய்ந்து, அறிந்துகொள்ள முயற்சிக்கவும். நான் உள்ளே அடியெடுத்து வைக்க வேண்டுமாயின், உங்கள் இதயங்கள் சுத்தமாகவும், திறந்தும் இருப்பதை நான் விரும்புகிறேன். மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், குடும்பம், நிதி, உடல்நலம் போன்ற அனைத்தையும் மறந்துவிட்டு, பாபாவின் அன்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். அற்புதங்களை எதிர்பார்க்காதீர்கள். இங்கு வருவதன் மூலம் உங்கள் கஷ்டங்கள் அனைத்திற்கும் தீர்வு காண முடியும், உங்கள் இடர்பாடுகள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்று நினைக்காதீர்கள். எனக்கும் இதுபோன்ற விஷயங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தேவையான திறவுகோல் என்னிடம் இல்லை. ஆரோக்கியமாக இருக்கவும், செல்வந்தராக மாறவும் தேவையெனக் கருதும்**

ஆசீர்வாதங்களை எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக வந்தீர்கள் என்று நினைப்பதானால், மாறாக நீங்கள் அதை இழக்க நேரிடும்.

உங்கள் அனைவருக்கும் என் அன்பை வழங்குவதற்காக நான் (உயர்ந்தவரிலும் உயர்ந்த நிலையிலிருந்து) வந்துள்ளேன். இதர அனைத்தும் மாயை. என் அன்பைத் தவிர எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

அன்பைப் பற்றி விளக்கும் ஏராளமான இலக்கியங்கள் உள்ளன, ஆனால் அன்பை அடையப் பெறுவது எளிதானது அல்ல. மிக மிக சிலரே அதைக் கண்டுகொள்கிறார்கள். நீங்கள் உண்மையிலேயே என்னை நேசித்திருந்தால், இங்கே இருந்திருக்க மாட்டீர்கள், ஏனெனில் உங்கள் உண்மையான அன்பு, என் உண்மையான 'இறைநிலை'க்கு உங்களை உயர்த்தியிருக்கும். நான் கூறுவதைக் கேளுங்கள், தத்துவஞானியைப் போல சிந்திக்காதீர்கள்! உங்களுக்கும் எனக்கும் இடையே வேறு திரை ஏதும் இல்லை; இருக்கும் ஒரே திரை நீங்கள், நீங்கள் மட்டுமே!

'நீங்கள்', 'நீங்களே' என்ற வார்த்தைகளின் அரத்தம் என்ன? நீங்கள் பசியை உணர்ந்தால், 'நான் பசியாக இருக்கிறேன்', உடல்நிலை சீராக இல்லாத வேளையில், 'எனக்கு உடல்நலம் சரியில்லை' என்று கூறுகிறீர்கள், இவ்வாறு மற்றும் பல. இதுவே 'நான்', 'எனக்கு' என்ற முகத்திரை. இந்தத் முகத்திரை மறைந்ததும், வாழ்க்கையின் ஒருமைப்பாட்டை நீங்கள் உணர்கிறீர்கள் - 'நீங்களே அந்த ஏக இறைவன்' என்பதை, நீங்கள் உணர்கிறீர்கள். இந்த 'அகந்தை' எனும் மனதால் மறைக்கப்பட்ட திரையால்தான் நாம் பல சிரமங்களுக்கு ஆளாகிறோம்.

இந்தத் திரையை எப்படி அகற்றுவது? கோடிக்கணக்கான பிறவிகள் எடுத்தாலும், அதை அகற்ற முடிவதில்லை. நீங்கள் 'நானே அந்த ஏக இறைவன்' என்று அனைவரும் உணர்கிறீர்கள், ஆனால் எனது 'உண்மை நிலை'யை நீங்கள் உணரவில்லை. காரணம், நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நீங்கள் என்னை நேசிக்கவில்லை.

இந்த ஆறு நாட்களும், நீங்கள் அனைவரும் மண்டலியை ஒத்த நெருக்கத்தின் அடிப்படையில், எனது நிலையான சகவாசத்தில் இருக்க வேண்டும், எனது அன்றாட நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். பாபாவை எவரும் உண்மையாக நேசிக்கும் விதத்தில் நேசிப்பதில்லை, எனது மண்டலி கூட, என்னுடன் பல ஆண்டுகளாக ஒன்றாக இருந்தபோதிலும், அந்த விதத்தில் என்னை நேசிப்பதில்லை. எனது ஒரே வார்த்தையில், எனது காலடியில் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள்; ஆனால் அத்தகைய அன்பு அவர்களிடத்தில் இல்லை. அன்பு இல்லாவிடிலும் என்னுடன் இருக்கிறார்கள். அவர்கள் நேசித்திருந்தால் அவர்களைப் பொறுத்தவரை கீழ்ப்படிவதற்கென எதுவும் இருந்திருக்காது, ஏனெனில் அவர்கள் என்னுடன் ஒன்றாகி விடுவார்கள்.

ஆனால் கீழ்ப்படிதல், அன்பை விட அதிகமாக இருக்க வேண்டுமாயின், அது 100 சதவீதம் இருக்க வேண்டும்.

ஹபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை விளக்கிக் கூறுகையில், குருநாதர், 'கீழ்ப்படிதல் என்பது வெறும் கீழ்ப்படிதல், வேறு எந்தக் கேள்விக்கும் இடமில்லை' என்று கூறுகிறார்; பாபா மேலும் விளக்குகிறார்:

நீங்கள் குருநாதரின் அடிமைகளாக இருக்க வேண்டும்; சிறிதளவும் உங்கள் சிந்தனைக்கு இடந்தராமல் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். நான் எவரிடமேனும் அவரது குழந்தையைக் கொல்லுமாறு கட்டளையிட்டால், அந்தச் செயலைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல் அவர் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

நான் இவ்வளவு விளக்கினேன்; இப்போது, உங்கள் மனசாட்சி எனக்குக் கீழ்ப்படிவதை ஏற்றுக்கொள்ளுமா? உங்கள் இதயங்கள் கீழ்ப்படியத் தயாராக இருக்குமா? உலக மக்கள் என்னிடம் வந்து, மாலை அணிவித்து, வணங்கி, என் அருளை நாடுகிறார்கள்.

நான் அதற்காக வரவில்லை. நான் இதை அனைவருக்கும் கூறுகிறேன் - எனது மண்டலி, அதே போல் இன்று என் அருகில் இருக்கும் உங்கள் அனைவருக்கும் கூறுகிறேன். என்னை தலைவணங்கி, எனக்கு ஆரத்தி நிகழ்த்தி, வழிபட நான் வரவில்லை. இந்தச் செயல்கள் அனைத்தும் சாதுக்கள் மற்றும் புனிதர்களுடன் செய்வது நல்லது. என்னுடன் இது முற்றிலும் வேறு, என்னிடம் இது நடக்காது. நான் இதைவிட அதிகமாக எதிர்பார்க்கிறேன்.

நீங்கள் ஏன் இங்கு அழைக்கப்பட்டீர்கள்? நான் உங்கள் அன்பைப் பெற வந்துள்ளேன், நீங்கள் என்னைப் பற்றிய உணர்வுப்பூர்வமான அனுபவத்தை அடைய வேண்டுமாயின், நீங்கள் உண்மையில் எனக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது உங்கள் நோக்கம் இல்லையென்றால், நீங்கள் ஒரு வகையான உல்லாசப் பயணமாக இங்கு வந்துள்ளீர்கள் என்றுதான் பொருள்படும்! இனிமேல் நாம் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக, அனைத்தையும் இன்று கூற விரும்புகிறேன். உண்மைப்பொருள் ஒன்றுதான், ஒன்றே உருவான ஏக இறைவன், இதர அனைத்தும் மாயை என்பது பாபாவின் வாழ்க்கை அனுபவம். நாம் பார்த்து அனுபவிக்கும் இதெல்லாம் என்ன? நாம் இங்குத் தங்கியிருப்பது, நான் உங்களுக்கு விளக்கங்கள் அளிப்பது, நான் அவதார புருஷராக இருப்பது கூட கனவுதான். ஒவ்வொரு நாளும், நீங்கள் கனவு காண்கிறீர்கள்; ஒவ்வொரு நாளும், நீங்கள் தூக்கத்திலிருந்து எழுந்து அதே கனவை மீண்டும் மீண்டும் அனுபவிக்கிறீர்கள்.

நீங்கள் அனைவரும் தூங்குகிறீர்கள், உங்கள் தூக்கத்தில் நீங்கள் என்னை கனவில் காண்கிறீர்கள். நீங்கள் கனவு காண்கிறீர்கள் என்று நான் உங்களுக்குக் கூறுவதானால், அதற்கு நீங்கள், 'பாபா, நீங்கள் இங்கே

**இருக்கிறீர்கள், நாங்கள் உங்களைப் பார்க்கிறோம்; அது எப்படிக் கனவாக முடியும்?' என வினவுவீர்கள்; ஆனால் நீங்கள் இங்கு எதை அனுபவித்தாலும் அது கனவே. உண்மையான விழிப்புணர்வுடன் எழுந்தால், இதெல்லாம் ஒரு கனவு என்பதை அனுபவிப்பீர்கள்.**

**ஒரு குழந்தை பிறக்கிறது, அது வளரும்போது, அதன் உணர்வும் அதிகரிக்கிறது. சிறுவயது முதல் இளமை வரை, நடுத்தர வயது மற்றும் முதுமை வரை, ஆனால் அவர் எங்கிருந்து, எதற்காகப் பிறந்தார் என்ற எண்ணமே அவருக்கு ஏற்படுவதில்லை. பிறவிக்குப் பின் பிறவிகள் இந்த வழியில் கடந்து செல்கின்றன. அவர் உலக விஷயங்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார், உண்மைப்பொருளைப் பற்றி ஒருபோதும் சிந்திப்பதில்லை. மிகவும் அரிதாகவே ஒருவர் உண்மையில் விழித்திருக்கிறார். இது மிகவும் நீண்ட நெடிய கனவு. ஹ◌ஃபீஸ் கூறுகிறார்: கடவுள் மீதுள்ள அன்பினால் ஆயிரக்கணக்கான அன்பர்கள் மண்ணில் உருண்டுபுரண்ட போதிலும் எவராலும் அவரை உணர முடியவில்லை. ஒரு மனிதன் அறிவொளியைப் பெறுவதற்கு பல கால சுழற்சிகள் தேவை. பல யுகங்களுக்குப் பின்னர் ஒருவர் கடவுளைக் காண்கிறார் என்று புத்தகங்கள் கூறுகின்றன. ஆனால் எனக்குக் கீழ்ப்படிபவர்கள் என்னை உணரும் காலம் இது.**

**மகிழ்ச்சியுடன் எனக்குக் கீழ்ப்படிவது இன்றியமையாதது. அது முடியாவிட்டால், குறைந்தபட்சம் கீழ்ப்படியுங்கள். நான் ராவ்ஸாஹேபின் மகனைக் கொல்லுமாறு அவருக்கு உத்தரவிட்டால், அவர் அதை இணங்கும் மனப்பாங்குடன் செய்யாமல், எப்படியேனும் செய்தாலும், அவர் என்னைக் கண்டுகொள்வார்.**

**உங்கள் இதயங்களை சுயமாக ஆராய்ந்து, அத்தகைய கீழ்ப்படிதலுக்கு நீங்கள் தயாரா என்று பாருங்கள். உங்கள் மனசாட்சி அதற்கு தயாராக இல்லை என்றால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

**அனைத்தும் மனதின் நாடகம். நான் விரும்பினால், ஹார்மோனியத்தைத் தானே இசைக்கச் செய்வேன். அப்போது, மக்கள் என்னைக் கடவுளாகக் கருதி, என்னிடம் சரணடையத் தயாராக இருப்பார்கள். இது எனக்காக அர்ப்பணிப்பது ஆகாது, ஆனால் ஹார்மோனியம் இசைத்ததற்கான அர்ப்பணம். உயிர் துறந்த குழந்தையை உயிர்த்தெழச் செய்தால், மக்கள் கீழ்ப்படியத் தயாராக இருக்கிறார்கள் - ஆனால் இந்தக் கீழ்ப்படிதல் குழந்தையை உயிர்த்தெழச் செய்ததற்காக மட்டுமே இருக்கும்.**

சூரத் நகரின் ரவிகாந்த் ராவல் ஒருமுறை வறட்சியின் போது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் மெஹர் பாபாவின் நாமத்தை மொழிந்து மழையை வரவழைத்ததில் அன்பர் ஒருவர் வெற்றி கண்டதாக விவரித்தார். பதிலுக்கு பாபா இவ்வாறு கூறினார்:

**அவர் கூறுவதை நாம் சந்தேகப்படத் தேவையில்லை, அவர் அதைத் தனது கண்களால் பார்த்திருக்கிறார்; ஆனால் உண்மை என்னவென்றால்,**

எனக்கு அது குறித்து எதுவும் தெரியாது. அது தொடர்பாக நான் எதுவும் செய்யவுமில்லை.

நோஸர் (தாதாசாஞ்சி) என்னை நேசித்தார். அவருடைய குடும்பம் என்னை நேசிக்கிறது; அவர் உயிரைத் துறந்தபோது அவர்கள் வருந்தவில்லை ஆனால் என் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்.

நான் உண்மையில் மஹாபிரபு என்று நீங்கள் அனைவரும் எப்படியோ உணர்கிறீர்கள், ஆனால் உங்களுக்கு உணர்வுப்பூர்வமான அனுபவம் இல்லை. என்னை அறிந்த பின்னர் உங்கள் கீழ்ப்படிதலில் எந்த மகத்துவமும் இருக்காது. ஆனால் என் 'உண்மையான சுயத்தை' அறியாதபோது எனக்குக் கீழ்ப்படிவது உண்மையிலே மிகப் பெரிய விஷயம். அத்தகைய கீழ்ப்படிதலுக்கு எதிராக மனம் கிளர்ச்சி செய்யும்.

கைக்கோபாத் தஸ்தூர் சில அனுபவங்களைப் அடையப் பெற்றுள்ள நிலையில் ஆனந்தத்தை அனுபவிக்கிறார். நான் யார் என்று அவருக்குத் தெரியும் என்கிறார். நான் அவருடைய குடும்பத்தை துண்டு துண்டாக்கச் சொன்னால், பாபா ஏதோ உயர்ந்தவர் என்று அவருக்குத் தெரியும் என்பதால், அவர் அதை உற்சாகமாகச் செய்வார். ஆனால் என்னை உண்மையில் அறியாமல் கீழ்ப்படியும் தருவாயில், அது உங்களை என்னைவிட உயர்ந்ததாக்கும். நான் எதைக் கூறினாலும், முழு மனதுடன் கூறுகிறேன். உண்மையில் எனக்குக் கீழ்ப்படிவது சாத்தியமில்லை. நான் உங்கள் இடத்தில் இருந்திருந்தால், கீழ்ப்படிவது எனக்கு எவ்வளவு கடினமாக இருந்திருக்கும். எனவே, எனது 'உண்மையான நிலை'யை அறியாமல் எனக்குக் கீழ்ப்படிவதைப் பற்றி நான் என்ன சொல்வது!

கீழ்ப்படிதல் சாத்தியமற்றது என்றால், மற்றுமொரு வழி உள்ளது - இதயத்தை சுத்தப்படுத்துதல். மொத்தத்தில் மூன்று வழிகள் உள்ளன:

- முதலாவது - கீழ்ப்படிதல்;
- இரண்டாவது - இதயத்தை சுத்தப்படுத்துதல்;
- மூன்றாவது - தன்னலமற்ற சேவை.

நம் இதயத்தைத் தூய்மைப்படுத்துவது மிகவும் கடினம். அதை எப்படிச் செய்வது? அது உலகைத் துறந்து, தனிமையான வாழ்க்கை வாழ்வதில் இல்லை. உலக வாழ்க்கையை வாழும் வேளையில், உங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்த முடியும். நீங்கள் கோபப்படுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், உங்களுக்குத் தீய எண்ணங்களும் உள்ளன. அப்போது என்ன செய்வது? செய்ய வேண்டியது இதுதான், எண்ணங்கள் வந்து போகட்டும். அவற்றைத் தடுக்க வேண்டாம். சில நேரங்களில் கோபப்படுவது ஒரு வகையில் நல்லதுதான். நீங்கள் உணர்ச்சி வசப்படுகிறீர்கள், மேலும் உங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தவில்லை என்றால், நீங்கள் ஏன் கோபமடைந்தீர்கள் என்பதை சிந்திக்க உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். உங்களுக்கு காம சிந்தனைகள் வரும். அவை வரட்டும். ஆனால் செயல்கள் மூலமாக அவற்றை வெளிப்படுத்த வேண்டாம்.

சிந்தனைகள் வரவில்லை என்றால் தனிச்சிறப்பு எதுவும் இல்லை. அவை வரும். ஆனால் நீங்கள் அவற்றைத் தடுக்கவேண்டாம். பரிணாம வளர்ச்சியில் விலங்குகளின் கீழ் உணர்வு நிலைகள் வழியாக, மனித மனம் காமம், கோபம் மற்றும் பேராசைக்கு ஆளாகிறது. இந்த மனப்பதிவுகள் காரணமாகவே இத்தகைய எண்ணங்கள் நமக்கு வருகின்றன. நீங்கள் அவற்றை தற்காலிகமாகத் தடுக்கலாம், ஆனால் அவை தங்களை வெளிப்படுத்துவது உறுதி. இந்த மனப்பதிவுகள், எண்ணங்கள் மூலம் தங்களை வெளிப்படுத்துகின்றன அல்லது செலவிடுகின்றன. ஆனால் நீங்கள் செயல்களில் ஈடுபடுவதானால், பிணைப்புகளை உருவாக்குகிறீர்கள். மேலும் இந்தப் பிணைப்பு ஒன்றுமில்லாதது, மாயையில் இருப்பது. அனைத்தும் பூஜ்யம்.

திடீரென கோபம் வரும் வேளையில், அதை வெளிப்படுத்தாவிட்டால் என்ன நடக்கும்? உங்கள் மனம் கோபமடைகிறது ஆனால் உங்கள் இதயம் அதை அறியக்கூடாது. அதற்கு ஒரு வழி இருக்கிறது, அந்த எண்ணங்களை வெளிப்படுத்தாமல் இருக்கும் வேளையில், உங்களுக்கு கோபம் வந்த அந்த கணமே, பாபாவை நினைவில் கொள்வீர்களேயானால் உங்கள் கோபத்தால் இதயம் பாதிக்கப்படாது. காம சிந்தனைகளுடனும் அவ்வாறே செய்யுங்கள். பாபாவை முழு மனதுடன் நினைவுகூருங்கள். இது மிகப் பெரிய விஷயம். நீங்கள் உணர்ச்சி வசப்படும்போது என்னை நினைவில் கொள்வது குழந்தைகளின் விளையாட்டல்ல. நீங்கள் என்னை நினைவில் கொள்ள மறந்துவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம், மூன்றாவது வழி - தன்னலமற்ற சேவை. உங்களால் பாபாவிற்குக் கீழ்ப்படிய முடியாவிட்டால், உங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்துங்கள்; கோபம் வந்தால் பாபாவை நினைவுகூருங்கள்.

மதத்தின் வெளியளவிலான நடைமுறை சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதன் மூலம் இதயங்கள் தூய்மை அடைவதில்லை. ஸொராஸ்டரின் மூன்று கொள்கைகளின் சாராம்சம் இதுதான். ஸொராஸ்டரின் அவதார காலகட்டத்தில் பாபாவே இந்தக் கொள்கைகளை எடுத்துரைத்தார்: 'நல்ல சிந்தனைகள்', 'நல்ல வார்த்தைகள்' மற்றும் 'நல்ல செயல்கள்'. புனித நூல் (SACRED THREAD, குஸ்தி) வழிபாடு செய்யும் போது, அதை உண்மையாகச் செய்ய வேண்டும். ஒரு தூய்மையற்ற சிந்தனை வந்தால், நாம் கடவுளை வணங்காமல் சிந்தனையை வழிபடுகிறோம் என்று அர்த்தம்.

எனது சிறுவயதில் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. நான் கோலி விளையாடவும், காத்தாடி பறக்கவிடவும் ஆசைப்பட்டபோது, ஒருமுறை, எனது தாயார் நெருப்புக் கோயிலுக்குச் செல்ல வற்புறுத்திக் கொண்டிருந்ததால், நானும் அவருடன் அங்குச் சென்றேன். (ஸொராஸ்ட்ரிய புனித நூல்) அவெஸ்தாவைக் கையில் எடுத்து, சாதாரணமாகப் பக்கங்களைப் புரட்டி, பிரார்த்தனை செய்த திருப்தியுடன் இருந்தேன். ஆனால் நீங்கள் கடவுளிடம் பிரார்த்தனை செய்ய விரும்பினால், அதை உண்மையாகச்

**செய்யுங்கள். அப்போது, எனது தாயாரை சமாதானப்படுத்தும் எண்ணத்தில் எனது கடமையைச் செய்தேன், ஆனால் அதில் எந்த மனநிறைவும் இல்லை. சடங்கு முறைகள் மற்றும் பிரார்த்தனைகளைச் செய்யாமல் இருப்பது நல்லது, ஆனால் நீங்கள் இதைச் செய்ய விரும்பினால், அவற்றை உண்மையாகச் செய்ய வேண்டும்.**

**தன்னலமற்ற சேவை செய்வது கூட கடினமாக இருந்தால், வேறொரு வழி உள்ளது, அதுதான் என்னை எப்போதும் நினைவில் கொள்வது. உங்களால் இதைச் செய்யவும் முடியாவிடில், உங்கள் இறுதி மூச்சை விடுவதற்கு முன்னர், என்னை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் அதற்காக நீங்கள் இன்றிலிருந்து என்னை நினைவில் கொள்ளத் தொடங்க வேண்டும், இல்லையெனில், கடைசி நேரத்தில் உங்களால் அதைச் செய்ய முடியாது.**

**இன்றைக்கு இது போதும். (அறிவிப்பு பலகையில்) இருக்கும் எஞ்சிய இரண்டு கருத்துக்களை நாளை விளக்குகிறேன். அதற்குப் பிறகு மூன்று அல்லது நான்கு நாட்கள் நாம் சுதந்திரமான வாழ்க்கையை வாழலாம்.**

பாபா, கோஹியாரிடம் சர்வவல்லமையுள்ள கடவுளின் பெயரால் (பனாம்-இ-எஸ்தான் - 'BANAAM-E-YEZDAN') பிரார்த்தனையை மீண்டும் மொழியுமாறு கேட்டுக்கொண்டார், கோஹியார் அவரது இனிமையான குரலில் பிரார்த்தனையை மொழிய, அதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் பாபா விளக்கினார். காலை சுமார் 10:30 மணி முதல் மதிய உணவு நேரம் பதினொரு மணிவரை, நவ்ஸாரி பஜன் மண்டலி பக்திப் பாடல்களைப் பாடினர்.

மதிய உணவுக்குப் பிறகு, 12:30 மணிக்கு பாபா ஓய்வெடுக்காமல் இருந்த அனைவரையும் கீழ் மெஹராபாத்தில் மண்டபத்திற்கு அழைத்தார். பாபா முன்னும் பின்னும் வேகமாக நடந்து கொண்டிருந்தார். மேலும் பஜனை பாடல்கள் தொடங்கும் முன்பு, ரவிகாந்த் ராவல் ஒரு வேடிக்கையான கதையைக் கூறத் தொடங்கினார். ரவிகாந்த் ஒரு வீரார்ந்த தோற்றமுடைய நபர், அவர் பேசத் தொடங்குவதற்கு முன்னரே அவரது நடை உடை பாவனை ஒருவரின் சிரிப்பை வரவழைத்தது. குஜராத்தியில் அவரது வளைந்து நெளிந்த கதைகள் (பல கலப்பட மொழிகளுடன்) பாபா மற்றும் குழுவினரிடமிருந்து பக்கவாட்டு சிரிப்பை வரவழைத்தன. (பாபா சத்தம் வராதபடி கையால் வாயை மூடிக்கொண்டார்.)

**"கடவுளின் நிமித்தம், இப்போது அமருங்கள்; இல்லையேல் எனது மௌனம் கலைந்து விடும்!"** என்று பாபா அறிவுறுத்தினார்.

"இரண்டே நிமிடம்" ரவிகாந்த் கெஞ்சினார்.

**"இல்லை, இல்லை. நாளை, நீங்கள் தொடரலாம்"** என்றார்.

ரவிகாந்தின் கதை நான்கு புத்திகூர்மையான திருடர்களை மையமாகக் கொண்டது; பாபா அப்போது கிண்டல் செய்தார், **"உலகில் வாழும் ஐந்து மாபெரும் திருடர்கள்** (ஐந்து சத்குருக்கள்) **மக்களின் இதயங்களைத் திருடுகின்றனர், அவ்வப்போது எனது உயர்ந்த நிலையிலிருந்து என்னையும் திருடி உங்கள் மத்தியில் கொண்டுவருகின்றனர்."**

சுமார் ஒரு மணி நேரத்திற்கு பிறகு, நூற்றுக்கணக்கான அரன்காவ்ம் கிராம மக்களுக்கு பாபா தரிசனம் வழங்கினார். பெரும்பாலான மக்கள் சகவாச நிகழ்ச்சிக்காகப் பணியமர்த்தப்பட்ட சேவகர்களின் குடும்ப உறுப்பினர்கள். கிராமத்திலிருந்து ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் நீண்ட ஊர்வலமாக, பாடியும் நடனமாடியும் சந்திப்புக் கூடாரத்தை வந்தடைந்தனர். பாபாவின் பாதங்களைத் தொடக்கூடாது, ஆனால் மேலெழுப்பப்பட்ட மேடையில் அவருடைய இருக்கையை மட்டும் தொட்டுக் கடந்து செல்ல வேண்டும் என்று அவர்களிடம் கூறப்பட்டது. பாபா தனது வலது கையால் அவரது பாதங்களைத் தொட்டு, பின்னர் அவரது நெற்றியில் கையை வைத்து, முதலில் தமது சுய தரிசனத்தைப் பெற்றுக் கொண்டார். கிராம மக்களின் தரிசனம் தொடங்கும் முன்பு, ஸாக்கோரியின் கோதாவரி மாய் அங்கு வருகை தந்த வேளையில், பாபா அவரை ஒரு நாற்காலியில் தன் அருகில் அமர வைத்தார். நிகழ்ச்சி தொடங்கியதும், கிராம மக்கள் அன்புடன் கொண்டு வந்த ஏராளமான மாலைகளையும் தேங்காய்களையும் பாபா ஏற்றுக்கொண்டு, ஒவ்வொருவருக்கும் பிரசாதம் வழங்கினார். கோதாவரி மாய் புறப்பட்டுச் சென்றதும் பாபா மீண்டும் மண்டபத்திற்குள் நுழைந்தார்.

மண்டபத்தில் அனைவரும் அவருடன் இணைந்ததும், பாபா கூறினார்:

**ஒவ்வொரு குழுவிலிருந்தும், பிப்ரவரி 15 முதல் 21 நாட்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி, உபவாசம் கடைப்பிடித்து, தொடர்ந்து எனது நாமத்தை உச்சரிக்கும் ஒருவரை நான் விரும்புகிறேன். 21 நாட்கள் தண்ணீரில் உபவாசம் கடைப்பிடிப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல; பலர் நீண்ட காலம் இது போன்று உபவாசத்தை மேற்கொண்டுள்ளனர். ஆனால் ஒரே இடத்தில் அமர்ந்துகொண்டு, அவருக்கு மட்டுமே கேட்கும் விதத்தில் எனது பெயரை மிதமான குரலில் மீண்டும் மீண்டும் மொழிவது மிகவும் கடினம்.**

**பாபாவிற்குக் கூட இது கடினம்!**

இந்த உபவாசத்தை மேற்கொள்ளும் தைரியம் படைத்தவர்கள் எழுந்து நிற்குமாறு பாபா கேட்டுக் கொண்டார். எழுந்து நின்ற ஒரு சிலரில் பாபா ஐந்து பேரைத் தேர்ந்தெடுத்தார்: ஹோஷங் பரூச்சா, மினூ கராஸ், புர்ஜர் மேத்தா, எரச் கராடியா மற்றும் மினூ கம்பட்டா. பாபா அவர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்:

**21 நாட்கள் ஒரே இடத்தில் தங்கி, தண்ணீரைத் தவிர வேறு எதையும் உண்ணவும், அருந்தவும் செய்யாமல், மேலும் தூங்காமல் பாபாவின் பெயரை மெதுவான குரலில் மொழிய வேண்டும். இது குறித்த மேலும் அறிவுறுத்தல்களைப் பின்பு வழங்குகிறேன். கடவுள் காது கேளாதவர். மனதளவில் எனது பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரித்தால், நானும் காது கேளாதவன் என்பதால் கேட்க மாட்டேன்! நீங்கள் நோய்வாய்ப்பட்டாலும் சரி, வேறு இடர்பாடுகளை சந்தித்தாலும் சரி, நான் கூறியதை நேர்மையாகப் பின்பற்றுங்கள்.**

பாபா சிரித்துக் கொண்டே சபையிடம் வினவினார், **"மாலை 5:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு சீக்கிரமாகப் புறப்பட என்னை அனுமதிப்பீர்களா?"**

அனைவரும் ஒரே குரலில் சத்தமாக "இல்லை!" என்றனர்.

**"சரி, சரி"** என்றார் பாபா, **"உங்கள் விருப்பத்திற்கு மதிப்பளிக்கிறேன்... நான் ஐந்து மணிக்குப் போகமாட்டேன், ஆனால் 4:30 மணிக்குப் புறப்பட்டுச் செல்வேன்!"**

எதிர்ப்பு ஆரவாரங்கள் எழுந்ததும், இறுதியில் பாபா மாலை 5:30 மணிக்குப் புறப்படுவதாக முடிவு செய்யப்பட்டது. உண்மையில், பாபா ஆறு மணிக்குப் புறப்படத் திட்டமிடப்பட்டிருந்ததால், தனது வழக்கமான சாதுரியத்தால், தங்குவதை அரை மணி நேரம் குறைத்து, அதே நேரத்தில் அனைவரையும் மகிழ்ச்சியடையவும் செய்தார்.

பாபா பின்னர் அமெரிக்காவில் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தக வெளியீட்டைக் குறித்து, கை சைகைகளுடன், குஜராத்தி மொழியில் பேசினார்:

**'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகம் விரைவில் நமது கைகளில் வந்துவிடும். இது ஒரு தனித்துவமான புத்தகம். அதில் பல விஷயங்களை விளக்கியுள்ளேன்; இருந்தும் நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் விதத்தில் சுருக்கமாக விளக்குகிறேன்:**

**காலாதிகாலத்திலிருந்து, நித்தியமாக, நாம் அனைவரும் ஒன்று. அது நமக்குத் தெரியாது; நாம் அதை உணரவில்லை. ஆனால் நித்தியத்தில் நாம் எல்லையற்ற சமுத்திரம். நாம் அனைவரும் இந்த சமுத்திரத்தின் துளிகள்.**

**தினமும் என்ன நடக்கிறது? நாம் விழித்திருக்கும் நிலையிலிருந்து தூங்கச் செல்கிறோம். ஆழ்ந்த தூக்கத்தில் நுழைவதற்கு முன்பு, நாம் கனவு நிலையை கடந்து செல்கிறோம். விழித்தெழுவதற்கு முன்பும், நாம் அதையே கடந்து செல்கிறோம் - அதாவது ஆழ்ந்த தூக்கத்திலிருந்து கனவு நிலைக்கும், கனவிலிருந்து விழிப்பு நிலைக்கும். அயர்ந்து தூங்கும் போது அனைத்தையும் மறந்து விடுகிறீர்கள்; உங்களைப் பொறுத்தவரை எதுவும் இல்லை. அதுதான் ஏக இறைவனின் 'அசல்' நிலை. நாம் தினமும் இந்த நிலையைக் கடந்து சென்று, விழித்துக்கொள்கிறோம் - கனவு நிலையைக் கடந்த பின்னர் - இன்னுமொரு கனவு நிலையில், இந்தப் பௌதீக உலகில் இருக்கிறோம்.**

**இப்போது என்ன செய்ய வேண்டும்? இப்படி அனுதினமும் நமது 'அசல்' நிலைக்கு வந்து, இந்தக் கனவு நிலையில் விழிப்பதற்காக ஏதாவது செய்தாக வேண்டும். நமது அசல்** (ஆழ்ந்த தூக்க) **நிலையில் ஒருமைத்தன்மை** (UNITY) **உள்ளது, ஆனால் நாம் விழித்தெழும் போது இருமைத்தன்மையை** (DUALITY) **உணர்கிறோம். இந்த அசல்** (ஆழ்ந்த தூக்க) **நிலையால் எந்த பயனும் இல்லை. நாம் உணர்வுப்பூர்வமாக 'அசல்' நிலையில் விழிப்புடன் எழுந்திருக்க வேண்டும், அப்போதுதான் நாம் ஒன்றானவன் (ஏக இறைவன்) என்பதை அனுபவிப்போம்.**

அதுவே 'நித்திய பேரின்ப' நிலை. இந்த ஆனந்தத்திற்கு முன்னர் என்ன இருந்தது? இதே நித்திய பேரானந்தம் மட்டுமே. எங்கும் எதிலும் எல்லாம் பேரானந்தம். ஏக இறைவனான 'அசல்' ஒருமைப்பாட்டு உணர்வு நிலையுடன் - அதாவது, இறை ஞானம், இறை சக்தி, இறை இன்ப நிலையில் இருப்பதே. இந்த நிலை மனோ நாஷிற்குப் பிறகு (மனதை நிர்மூலமாக்கிய பிறகு) வருகிறது. இந்த அனுபவத்தை அடையப் பெற, ஒருவர் குருநாதரின் காலடியின் தூசியாக மாற வேண்டும்.

நான் மட்டுமே உளதாயிருக்கிறேன் எனும்போது எனது காலடியில் தூசியாக மாறுவது எப்படி? அனைத்து நோய்க்கும் ஒரே அருமருந்து - எனக்கு முற்றிலுமாக கீழ்ப்படிவது. நான் கூறுவதை செய்வதன் மூலம் ஒருவர் தூசியாக மாற வேண்டும்! எனக்குக் கூட அந்த தைரியம் இல்லை. ஆனால் தெய்வீக அன்பின் பரவசத்தில் தொலைந்து போனவர்கள் உலகில் ஒரு சிலரே.

உங்களால் எனக்குக் கீழ்ப்படிய முடியாவிட்டால், என்னை எப்பொழுதும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். அதுவும் முடியாவிட்டால், கடைசி மூச்சு விடுவதற்கு முன்னர், எனது நாமத்தை உச்சரிக்க வேண்டும். அவரது கடைசி நேரத்தில், நோஸர் என்னை நினைத்து, எனது பெயரை உச்சரித்தார். எனது சகோதரர் ஜாம்ஷெட் இதையே செய்தார் - ஜால் கேரவாலா, மெஹரு தமானியா (எரச்சின் சகோதரி) மற்றும் பலர். மாவீரர்கள் மட்டுமே தங்கள் பௌதீக உடல் வடிவில் என்னிடம் சரணடைகிறார்கள். அரன்காவ்ம் கிராமவாசிகள் தங்களின் உலக ஆசைகளுக்காக என்னிடம் ஆசிர்வாதத்தை நாடி வந்தனர். அதற்காக நான் இவ்வுலகில் வரவில்லை. நான் உலகம் முழுவதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றாலும் நான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்காக வந்துள்ளேன், உங்கள் பௌதீக உடல்களில் நீங்கள் என்னை அனுபவிப்பதற்காக நான் வந்துள்ளேன்.

நான் பாபாஜானிடமிருந்து தெய்வீக பேரின்பத்தை அடையப் பெற்றேன். அதன் பின்னர், ஒன்பது மாதங்கள் தாங்கொணா ஆன்மீக வேதனையைக் (சாதாரண உலக உணர்வைத் திரும்பப் பெறுவது வரை) கடந்து சென்றேன்; அது உண்மையிலேயே தாங்க முடியாததாக இருந்தது. அதிலிருந்து நிவாரணம் பெற, நான் எனது தலையை சுவர்களின் மீது கடுமையாக அறைந்ததில், சுவர்களில் கீறல்கல் விழவும் ஆரம்பித்தன! நிஜத்தில் துன்பம் துயரம் எதுவுமில்லை. ஐந்து சத்குருக்கள் என்னை இப்பூவுலகில் கொணரும் போது, அவர்கள் என் மீது முகத்திரை அல்லது முக்காடு ஒன்றை அணிவித்து விடுகிறார்கள். பாபாஜான் அந்த முகத்திரையை அகற்றினார். நான் ஒன்பது மாதங்கள் அந்த நிலையில் இருந்தேன், பின்பு முழு உலக உணர்வை அடையப்பெற்றேன். இந்த நேரத்திலிருந்து, நான் எல்லையற்ற பேரின்பம் மற்றும் எல்லையற்ற துன்பம் இரண்டையும் ஒரே நேரத்தில் அனுபவித்து வருகிறேன், நான் எனது பௌதீக

**உடலைத் துறக்கும் வேளையில், ஆனந்தமும் பேரின்பமும் மட்டுமே இருக்கும், ஏனெனில் ஆனந்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.**

**காலாதிகாலத்திலிருந்து நான் வந்துகொண்டிருக்கிறேன், எனவே எனக்கு எவ்வளவு வயதாக இருக்க வேண்டும்! நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நீங்களும் கடந்த காலங்களிலிருந்து வருகிறீர்கள், இருந்தும் நீங்கள் ஒரே மாதிரியாக இருக்கிறீர்கள். உண்மையில், எவரும் வருவதுமில்லை, போவதுமில்லை; எவரும் பிறக்கவுமில்லை அல்லது இறக்கவுமில்லை. அதை அனுபவிக்க, அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்க வேண்டும். முந்தைய நாள் 'ஏழு ஓடுகள்'** (LINGOCHA**, லிங்கோச்சா**) **விளையாடிய போது, இவையெல்லாம் என் நினைவுக்கு வந்தது.**

அதற்குப் பிறகு பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

அடுத்த நாள், 1955 நவம்பர் 5 சனிக்கிழமை காலை 7:30 மணிக்கு பாபா மெஹராபாத் வந்தார். ஒவ்வொரு நாளும் அவர் வரும்போதும் முதலில் பெண்டு, பாதிரி, விஷ்ணு மூவரையும் (மண்டபத்தற்கு எதிரே) தமது அறையில் சந்திப்பது வழக்கம். இந்த மூவரையும் தவிர, ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான இதர மண்டலி (சகன், பாவ் கல்சூரி மற்றும் பலர்) தங்கள் கடமைகளின் காரணமாக சந்திப்புகளின் போது பாபாவின் அருகில் இருக்க முடியாத போதிலும், அவர்களுக்கு வேறு வகையான 'மதுபானம்' வழங்கப்பட்டது - வலி மிகுந்த பழங்கால மதுபானம்! வெளியூர் அன்பர்கள் இறை போதையின் இன்பத்தை மட்டும் அனுபவித்துக் கொண்டிருந்த தருணத்தில், இந்த மண்டலி உறுப்பினர்களை பாபா கண்டிக்காத நாளே இல்லை. பாபாவுடனான இந்த அதிகாலை சந்திப்பின் முடிவில் அவர்கள் அறையிலிருந்து வெளியே வந்த வேளையில், தங்கள் பங்கான மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில், உதட்டளவில் புன்னகையை அணிய வேண்டியிருந்தது.

காலை சுமார் 8:15 மணிக்கு, பாபா, மெஹராபாத் மண்டபத்திற்குள் நுழைந்தார். அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து, **"நேற்று நான் அரவணைக்காதவர்கள் அனைவரும் இப்போது முன்வரலாம்"** என்று கூறினார். வரிசையில் நின்றவர்களில் டாக்டர் தேஷ்முக், பால் நாத்து இருவரும் இரண்டாவது அரவணைப்பை எதிர்நோக்கி நின்றனர். நேற்று காலையில் நான் ஏற்கனவே உங்களைத் தழுவினேன் எனக் கூறி, டாக்டர் தேஷ்முக்கை அரவணைத்த அவ்வேளையில், பால் நாத்துவிடம், **"இப்படியே செய்தால் அனைவரையும் மறுபடியும் தழுவ வேண்டியது வரும்"** என்று சுட்டிக்காட்டி, மறுத்தார். பாபா, பிறகு தேஷ்முக்கிடம் அவருடைய ஃபவுண்டன் பேனாவைப் பற்றி கேட்டபோது, பாபா, தேஷ்முக்கின் பாக்கெட்டிலிருந்து, அவரைத் தழுவிய வேளையில் அமைதியாக அதைப் பிடுங்கிவிட்டார் என்பது தெரியவந்தது!

லாகூரைச் சேர்ந்த ஹோமி தேசாயிடம், பாபா, **"நீண்ட நாட்களுக்குப் பிறகு மெஹராபாத்திற்கு வந்திருக்கிறீர்கள்"** என்று குறிப்பிட்டார்.

சகவாசத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பாபா விளக்கினார்:

ஜலதோஷத்தால் அவதிப்படுபவர்கள், அது என்னை அண்டாதபடி தூரத்தில் அமர வேண்டும். அவதார புருஷரான எனக்கு, எப்படிச் சளி பிடிக்கும் என்று உங்களில் சிலர் கேட்கலாம். அதுபோல், எனக்கு ஏன் பசி எடுக்க வேண்டும் அல்லது ஓய்வு தேவை என்றும் நீங்கள் கேட்கலாம்!

பல ஆண்டுகளுக்கு முன்னர், இங்கிலாந்தில் நடந்த ஒரு சம்பவம் எனது நினைவுக்கு வருகிறது. அந்த நேரத்தில் என்னுடன் சாஞ்சி, கனி, ஆதி, காக்கா பாரியா, ருஸ்தம் ஆகியோர் இருந்தனர். என் மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த மேற்கத்திய அன்பர்கள், எனது புகைப்படத்தை எடுக்க விரும்பினர். கடும் குளிரில் என்னை வெளியில் நிற்க வைப்பார்கள் என்று எனக்குத் தெரியாது! ஆனால் அவர்கள் எனது சாதாரண உடையில் புகைப்படம் எடுக்க விரும்பினார்கள், என்னால் மறுக்க முடியவில்லை. எனக்கும் சளி பிடிக்கும் என்று அவர்கள் நினைக்கவில்லை. அவதார புருஷர் நோயின் தாக்கத்திற்கு உள்ளாகாதவர் என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தனர். மன்ஸில்-எ-மீம் நாட்களில், குளிர்காலத்தில் கூட நான் ஒரு சத்ராவில் மட்டுமே சுற்றி வந்தேன். அந்த நாட்களில் மெஹராபாத் மிகவும் குளிராக இருந்தது. மேற்கத்திய அன்பர்கள் என்னைத் திறந்த வெளியில் நிற்க வைத்தனர். நான் எவ்வளவு குளிராக உணர்ந்தேன் என்பதை என்னால் விவரிக்க முடியாது. மேலும் வித்தியாசமாகத் தோன்றும் விதத்தில் பல புகைப்படங்களை எடுக்க, நான் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது.

இன்று காலை நான் மண்டபத்திற்கு வருவதற்கு முன்னர், என் அறையில் பெண்டுவுடன் ஒரு வாக்குவாதம் நடந்தது. சகவாச நிகழ்ச்சிகளுக்குத் தேவையான பல்வேறு ஏற்பாடுகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், பராமரித்தல் ஆகியவற்றின் சுமையை பெண்டு தாங்கி வருகிறார். முதலில், மொத்தம் ரூ.20,000 மதிப்பீட்டில் ஒவ்வொரு வாரமும் 150 பங்கேற்பாளர்களை மட்டுமே அழைக்க முடிவு செய்யப்பட்டது, மேலும் சகவாச மாதம் முழுவதும் ஏழைகளுக்கான நான்கு திட்டங்களுக்கு ரூ.10,000 செலவிடவும் தீர்மானிக்கப்பட்டது.

அசல் திட்டத்தில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்று பெண்டுவுடன் நான் ஒப்புக்கொண்டேன். ஆனால் கடிதங்களும் தொலைத்தந்திகளும் அதி விரைவில் வந்த வண்ணம், மேலும் முறையீடுகள் தவிர்க்க முடியாததாக இருந்ததால், பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது. ஆந்திரா அன்பர்கள் எனது பணியில் உண்மையான ஊழியர்கள் என்பதை நிரூபித்துள்ளனர். அங்கு பல பகுதிகளில் எனது பெயர் இல்லத்துச் சொல்லாகிவிட்டது. அதுபோல், உத்தர பிரதேசத்தின் ஹமிர்பூர் மாவட்டத்தில் எனக்காக மனமார பணிபுரிபவர்களுக்கும் இதே நிலைதான்; ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கள் அன்றாட வாழ்க்கையின் போது, அவர்கள் வயல்களில்,

**இல்லங்களில், தங்கள் வேலையில், அல்லது பள்ளிக்குச் செல்லும் வேளையில் என்னைப் புகழ்ந்து பாடல்களைப் பாடுகின்றனர்.**

**மஹாராஷ்டிரா குழுவின் எண்ணிக்கையும் 250க்கு மேல் எட்டியுள்ளது. பல அன்பர்களின் பெயர்கள் பட்டியலில் சேர்க்கப்படாததால், அவர்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களாக நாம் சகவாசத்தில் இருப்பதால், இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். எண்ணிக்கை 200ஐ எட்டியதும், பெண்டு எதிர்ப்புத் தெரிவித்தார். ஏழைத் திட்டங்களுக்கான ரூ.10,000தை பெண்டு ரூ.5,000ஆகக் குறைத்தார். தற்போது புதிய உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குவது நிறுத்தப்பட்டது. சகவாசங்களில் கலந்துகொள்பவர்கள் நீண்ட தூரத்திலிருந்து வருபவர்கள், சேவகர்கள் மற்றும் அன்பர்கள் என்று பெண்டுவிடம் விளக்கினேன். இப்போது ஒரு சந்தர்ப்பத்தில் எண்ணிக்கை 300ஐ எட்டக்கூடும். எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில், இதர அனைத்துடனும், பெண்டு, தங்குமிடத்திற்கான பந்தலை நீட்டிக்க வேண்டும், மேலும் மேலும் கட்டில்கள், போர்வைகள், தலையணைகள் போன்றவற்றை முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழைகளின் திட்டத்திற்கான பணம் இப்போது ரூ.1,000ஆக குறைந்துள்ளது.**

**உதவி எவ்வாறு தானாக வருகிறது என்பதைப் பாருங்கள். நோஸர் இப்போது என்னிடம் வந்துள்ளார், ஆனால் அவர் எனக்காக ரூ.1,000தை விட்டுச் சென்றார். இதன் மூலம் மொத்த தொகை 2,000ஆக உயர்ந்தது. கடந்த ஆண்டு ஆந்திராவிற்கு தரிசன சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். அதற்கான நிதியை, வரவேற்புக் குழுவினர் ஒன்று திரட்டினர். பாபாவின் சுற்றுப்பயணச் செலவுகளைக் கழித்து, குழு ரூ.1,200ஐ சேமித்தது. அவர்கள் அதை சகவாசத்திற்கென வழங்கினர். இந்த அன்பளிப்புடன் எந்த நிபந்தனையை இணைப்பதையும் நான் விரும்பவில்லை. தென்னிந்திய பக்தர்களின் வரவேற்புக் குழுவின் பங்களிப்பு ரூ.1,000த்துடன் ஏழைகளின் நிகழ்ச்சிக்கான மொத்த தொகை ரூ.3,000ஐ எட்டியது. இப்போது நாம் பெண்டுவின் தயவால் அவரிடமிருந்து கூடுதலாக ரூ.1,000ஐ பெற முயற்சிக்க வேண்டும். இப்படி மொத்தத்தில் ரூ.4,000 இருக்கும்.**

பாபா பெண்டுவை அழைத்தார், மேலும் ஏழை நிகழ்ச்சிக்காக ஒவ்வொரு குழுவிலிருந்தும் குறைந்தபட்சம் ரூ.1,000 வேண்டும் என்று கூறினார். பாபா கேலி செய்தார், **“கடைசி மஹாராஷ்டிரா குழுவினருக்கு நிதி போதுமானதாக இல்லை என்றால், அவர்கள் ஒரு வாரத்திற்கு பாக்ரி-சட்னி** (எளிய உணவு) **உண்டு வாழ வேண்டும். நான் சில சுவாரஸ்யமான ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்குவேன்; அவற்றில் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து, பாக்ரி-சட்னியை திருப்தியுடன் ஏற்றுக்கொள்வார்கள். எனக்கு அந்தத் தந்திரம் தெரியும்.”**

அனைவரும் சிரித்தனர், பெண்டுவும் இதை ஏற்றுக்கொண்டார். மண்டபத்தில் சகவாச நிகழ்ச்சிக்கு எந்தத் தொந்தரவும் விளைவிக்காத வகையில் தூங்கும் வசதியை நீட்டிக்க அவரை அனுமதித்தார்.

குழுவை நோக்கி பாபா கூறியதாவது:

**நாளை காலை ஒன்பது மணி முதல் பத்து மணி வரை, ஏழைகளுக்கான நிகழ்ச்சி நடைபெறும். நேற்று நாம் இரண்டு விஷயங்களைப் பார்த்தோம் - 'அன்பு' மற்றும் 'கீழ்ப்படிதல்'. இன்று நாம் 'பிணைப்பு' என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். நான் எப்போதும் சுதந்திரமாக இருக்கிறேன். ஆனால் கீழே பூமியில் இறங்கியதும் என்னை நானே பிணைத்துக் கொள்கிறேன். உங்களுக்கு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் என்பதை சிந்தித்து பாருங்கள். கடவுள் மீதான ஏக்கத்தைக் கொண்டவர்கள் முன்னிலையில், நான் தோன்றுவதில்லை; அதே வேளையில் உங்களுக்கு எனது சகவாசத்தை வழங்குகிறேன்! எனவே இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

**நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் மற்றும் தாழ்ந்தவர்களில் தாழ்ந்தவர். இடைநிலை என்பது பேசுவது, கேலி செய்வது, விளையாடுவது போன்றவை. நீங்கள் பார்ப்பது எனது உடல் மட்டுமே. முதல் ஆன்மீகத் தளம், இரண்டாவது ஆன்மீகத் தளம், இப்படி ஏழாவது ஆன்மீகத் தளம் வரையிலும் நிலைகொண்டவர்களுடன் நான் இருக்கிறேன். அதுபோலவே, நான் எல்லா இடங்களிலும், எல்லாவற்றுடனும், எல்லாவற்றிலும் இருக்கிறேன். எல்லோரும் எல்லாமும் என்னிடமிருந்து சமமான தூரத்தில் இருக்கின்றனர். படிப்படியாக மக்கள் எனது தொடர்பில் வருகிறார்கள், வந்து அவர்கள் என்னுடன் நெருக்கமாக இணைந்திருக்கிறார்கள் மற்றும் எல்லாவற்றையும் அர்ப்பணிக்கிறார்கள். பின்னர் அவர்கள் என்னை முழுவதுமாகச் சார்ந்து இருக்கிறார்கள். இந்த செயல்முறை ஒவ்வோர் அவதார காலகட்டத்திலும் மீண்டும் மீண்டும் நிகழ்கிறது. நான் உங்களுக்கு எடுத்துரைப்பதை இதர மூன்று குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் மீண்டும் கூற வேண்டும். நான் என்னுடன் எதையும் வைத்திருக்க மாட்டேன்.**

**நான் கூறியது போல், இந்த செயல்பாட்டுமுறை காலங்காலமாக நடந்து வருகிறது. எனக்குப் பிரியமானவர்கள் என்னைச் சார்ந்திருக்கிறார்கள். எனது பணிக்காக நான் அவர்களுக்கு உத்தரவு வழங்க வேண்டும். இப்படி, சார்ந்திருப்பது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கும். என்னுடைய ஒவ்வோர் அவதார காலகட்டத்திலும் இதே நிலைதான். முன்பு மெஹராபாத்தில் பல நிறுவனங்களும், அமைப்புகளும் இருந்தன. இதுபோன்ற நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் போதுமான நிதி இருக்கும் போது செலவு செய்து, இல்லாத போது கலைத்து விடுகிறேன். எனக்கு எதுவும் நிரந்தரம் இல்லை. உலகில் இதர இடங்களைப் பொறுத்தவரை இது வேறு விஷயம். எனது ஒவ்வோர் அன்பரின் இதயமும் எனது ஆசிரமம். அன்பின் பரிசுகளை நான் அன்புடன் ஏற்றுக்கொள்கிறேன்,**

அன்புடன் வழங்குகிறேன். ஆனால், இனிமேல் நான் இந்த சுயமாக விதிக்கப்பட்ட பிணைப்புகளிலிருந்து என்னை விடுவிக்க விரும்புகிறேன். நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. எதையும் வாக்குறுதிகளாக எடுத்துக் கொள்ளாதீர்கள். வாக்குறுதிகளிலிருந்து விடுபட்ட நான், ஒரு நாள் வாக்குறுதி அளித்து, மறுநாளே அதை மறந்து விடுவது வழக்கம்.

1956 பிப்ரவரி 15 முதல், இந்த அனைத்து பிணைப்புகளிலிருந்தும் நான் வெகு தொலைவில் இருக்க விரும்புகிறேன். எனக்கு முக்கியமான வேலை உள்ளது. ஒரு வருடம் முழுவதும் என்னைச் சார்ந்திருப்பவர்களுக்கு நான் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதற்கான திட்டம் என்னிடம் உள்ளது. இந்த சுயமாக விதிக்கப்பட்ட பிணைப்புகளிலிருந்து அத்தகைய முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்க நான் நினைக்கிறேன், நான் கடிதப் பரிமாற்றத்தையும், எப்பொழுதும் என் அருகில் இருப்பவர்களின் முகங்களைப் பார்க்கவும் விரும்பவில்லை. இது போன்ற பலவற்றை நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். பெண்மணிகளுக்கான பிரத்யேக திட்டத்தையும் யோசித்து வருகிறேன். இது குறித்து பல பெண்மணிகளிடமிருந்து கடிதங்களும், தொலைத்தந்திகளும் வந்த வண்ணம் உள்ளன. தரிசன நிகழ்ச்சிகளின் இந்தத் தொற்றுநோய் இப்போது வெகுதூரம் பரவி வருகிறது. பெண்மணிகளையும் குழந்தைகளையும் இங்கு அழைப்பது நடைமுறைக்கு உகந்ததாக இல்லை. பெண்களுக்கென, பிரத்யேகமாக, ஒவ்வோர் இடத்திலும் இரண்டு நாள் நிகழ்ச்சி நடத்துவது குறித்து யோசித்து வருகிறேன். நான் அமெரிக்கா செல்வதாக வதந்திகள் பரவி வருகின்றன. சில நாட்களுக்காக மட்டுமே விரைந்து பறந்து செல்லும் பயணம். இன்னும் எதுவும் நிச்சயமாக அல்லது உறுதியானதாக இல்லை. எதிர்வரும் பிப்ரவரி 15 முதல் நான் மண்டலியிடமிருந்து விலகியே இருக்கப் போகிறேன். என்னைச் சார்ந்தவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய எனக்கு இரண்டு மாதங்கள் - டிசம்பர் மற்றும் ஜனவரி - உள்ளன. நான் இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குச் செல்ல விரும்புகிறேன்; நான் மேற்கத்திய நாடுகளுக்குக் கூட பயணம் செய்யலாம்.

இப்போது நான்காவது விஷயம், அதாவது, 'பாபாவின் அன்பின் செய்தியைப் பரப்புவது' குறித்து: ஆந்திரா சேவகர்கள் நடைமுறையில் அங்குள்ள அனைத்து கிராமங்களுக்கும் விஜயம் செய்துள்ளனர். உத்தரபிரதேச மாநிலம், ஹமிர்பூர் மாவட்டத்திலும் இதே நிலைமைதான். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் பாபாவை அறிந்திருக்கிறார்கள், அவரை மனமார நேசிக்கிறார்கள். இந்தப் பணியை ஓரிரு கிராமங்கள் எதிர்த்தாலும், ஒரு சில அற்புத நிகழ்வுகள் அவர்களை, பாபாவின் நோக்கங்களைச் சுற்றி அணிதிரளச் செய்தன. நாக்பூர் நகரத்தில் தேஷ்முக், நானா கேர், போஃபலி மற்றும் டெல்லி, டெஹ்ரா டூன் வட்டங்களில், கிஷன் ஸிங் இந்தப் பணியை கவனித்து வருகின்றனர். நடைமுறையில் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும், பாபாவின்

அன்பின் செய்தியைப் பரப்புவதற்கு என் அன்பர்கள் தங்களால் இயன்றதைச் செய்து வருகின்றனர்.

ஆனால் இந்தப் பார்சி இனத்தவர்களை என்ன சொல்வது! நான் இயேசுவாக வந்தபோது பார்சிகள் யூதர்களாக இருந்ததாக உணர்கிறேன். நான் சிலுவையில் அறையப்படுவதற்கு யூதர்களே காரணம். இப்போது நான் ஒரு ஸொராஸ்ட்ரியன், இந்தப் பார்சி மக்கள் எனக்கு அந்த பழைய நாட்களை நினைவூட்டுகின்றனர். அவர்களில் என்னை நேசிக்கும் ஒரு பெரிய குழு உள்ளது என்பதில் சந்தேகமில்லை, அந்த அன்பு இதர குழுவின் அலட்சியத்தை ஈடுசெய்கிறது.

இந்தியாவில் நான் எங்குச் சென்றாலும் ஆயிரக்கணக்கான மக்கள் என்னைச் சுற்றி திரள்கின்றனர். நான் இந்த விதமான அன்பை விரும்பவில்லை. நான் கூற விரும்புவது என்னவெனில், நீங்கள் எப்படி என் அன்பைப் பரப்புவீர்கள், என் அன்பை மக்களுக்குத் தெரிவிப்பது, அவர்கள் என்னை நேசிக்கத் தூண்டுவது, நான் யார் என்பதை அவர்களுக்குப் புரியுமாறு எடுத்துரைப்பது - இதையெல்லாம் எப்படிச் செய்வீர்கள்? அதற்கு, முதலில் நீங்கள் அனைவரும் என் அன்பர்களாக இருக்க வேண்டும். நீங்கள் என்னைப் பற்றி பிற நபர்களுக்குக் கூறும்போதும், 'பாபா இதைக் கூறுகிறார்' என்று கூறும்போதும், நீங்கள் எல்லாவற்றையும் விளக்க வேண்டும். உண்மையைப் பேசுவது, பிறரை அவதூறாகப் பேசாமல், பிறரிடம் பொறாமை கொள்ளாமல், வெறுப்பு காட்டாமல், பிறரைத் துன்புறுத்தாமல் இருப்பது - இவை அனைத்தையும் நீங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். இதை பாபா கூறுகிறார் என்று நீங்கள் அவர்களுக்குக் கூறுவீர்கள். ஆனால் உங்கள் மனசாட்சி மாசற்றதாக இருந்தால் மட்டுமே, நீங்கள் இவற்றைக் கூற முடியும். அப்போதுதான் மக்களின் மனநிலையில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, அவர்களின் அன்பை, பாபாவை நோக்கித் திருப்ப முடியும்.

இதயம் சுத்தமாக இல்லை என்றால், அவர்களிடம் உங்கள் முகத்தைக் காட்டி ஒரு வார்த்தை கூட பேசாமல் இருப்பது நல்லது. அமைதியாக இருங்கள். உலகம் என்னைப் போற்றினாலும், தூற்றினாலும் அதனால் நான் பாதிக்கப்படுவதில்லை. உயர்ந்தவர்களில் உயர்ந்தவரான எனது நிலை மாறாது. நீங்களே என் அன்பர்கள் என்பதை உங்கள் சொந்த உதாரணத்தின் மூலம் காட்டுங்கள். ஓர் உண்மையான அன்பராக - நேர்மையான சேவகராக இருந்தால், ஒரே ஒருவர் கூட எனக்காக மிகப் பெரிய அளவிலான பணிகளைச் செய்ய முடியும். அவர் முழு உலகத்தையும் மாற்ற முடியும். நீங்கள் அனைவரும் அப்படி இருக்க முடிந்தால், பிரபஞ்சத்தின் முழு முகத்தையும் மாற்றிவிடுவீர்கள். என்னைப் பற்றி உண்மையாகப் பேசுபவர்கள், என்னைப் பற்றி பிறருக்கு விளக்க முயற்சிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் - ஆனால் அவர்களே தங்கள் சோகக் கதைகளை என் முன் கொண்டு வருகிறார்கள். இது போலித்தனம்! இந்த சகவாசத்தில் நாம் நெருங்கிய உறவில்

**இருக்கிறோம் என்பதால் இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் சொல்ல நினைப்பதை சொல்ல வேண்டும். இத்துடன் நான்காவது விஷயம் முடிவடைகிறது.**

பாபா தொடர்ந்தார்:

**மற்றுமொரு விஷயம்: நான் எனது எழுத்துப்பலகையைக் கைவிட்டபிறகு, நான் எப்படி எனது எண்ணங்களை வெளிப்படுத்துகிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.** ('மண்டலி பாபாவின் சைகைகளைப் புரிந்துகொண்டு, அவர் கூற விரும்புவதை எடுத்துரைக்கின்றனர்' என்று எரச் விளக்கினார்.) **'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **என்ற புத்தகம் எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைக்கப்பட்டது. இது ஒரு சிறந்த புத்தகம். ஒரு அமெரிக்க தத்துவஞானியின் இது குறித்த விமர்சனமும் வெளிவந்துள்ளது. மற்றுமொரு மதிப்புரை, டாக்டர் ஷ்ரோடர்** (DR. SCHROEDER**,** ஒரு புராட்டஸ்டன்ட் இறையியலாளர் - A PROTESTANT THEOLOGIAN) **என்பவரிடமிருந்தும் வந்திருக்கிறது. அமெரிக்காவில் டான் ஸ்டீவன்ஸ் மற்றும் பலர் இந்தப் புத்தகத்தை வெளியிடுவதிலும், அச்சிடுவதிலும் தொடர்புடையவர்கள். புத்தகத்தின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் அமெரிக்க மக்களிடையே கொண்டு செல்ல, டானும் பிற அன்பர்களும், லட்சக்கணக்கான மக்கள் என்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காக, நான் எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைப்பதைத் திரைப்படமாக்கி, தொலைக்காட்சியில் ஒளிப்பரப்ப விரும்புகிறார்கள். இதற்கு முன்பு பல திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன, ஆனால் இது தொலைக்காட்சிக்காக 24 மிமீ திரைப்படமாக இருக்கும். புத்தகத்தின் விமர்சனத்திற்கு இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு உதவியாக இருக்கும். நல்ல விளம்பரத்திற்கும் வழிவகுக்கும். டான் என் எழுத்துப்பலகையை சிறிது நேரம் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். உங்களுக்குத் தெரியும், 1954 அக்டோபர் 7ஆம் நாளிலிருந்து நான் அதைத் தூக்கி எறிந்துவிட்டேன். ஆனால் இந்தப் புத்தகத்திற்காக, நான் அதைப் பயன்படுத்துவேன் என்று உறுதியளித்தேன். இன்று வாக்குறுதி அளித்து நாளை அதை மீறுவதே என் இயல்பு. இது காலங்காலமாக நடந்து வருகிறது. பழையது போல் எழுத்துப்பலகையில் உச்சரிப்பதாக இருக்காது. அதில் ஒரு எழுத்தில் விரல் வைப்பேன் அவ்வளவுதான்.**

டான் ஸ்டீவன்ஸ் இடையே குறுக்கிட்டு, "அமெரிக்க மக்கள் மிகவும் புத்திகூர்மை மிக்கவர்கள், பாபா, அது மிகக் குறைவான விளைவையே ஏற்படுத்தும்" என்றார்.

அதன்பிறகு, பாபா அடுத்த நாள் எழுத்துப்பலகையை, திரைப்படம் எடுப்பதற்காக மட்டுமே சில நிமிடங்கள் பயன்படுத்த ஒப்புக்கொண்டார். **"நான் இந்த வாக்கியத்தை மட்டும் உச்சரிப்பேன்: கடந்த பன்னிரெண்டு மாதங்களாக எழுத்துப்பலகை பயன்படுத்துவதை நான் விட்டுவிட்டேன், இனி பயன்படுத்த மாட்டேன்."** ஏழைகளுக்கான நிகழ்ச்சியை திரைப்படமாக எடுக்கவும் பாபா அனுமதித்தார்.

ஸொராப்ஜி ஸிகன்போரியா, புர்ஜர் மேத்தா இருவரும் மும்பையில் செய்து வரும் பணியைப் பாராட்டிய பாபா, அதை முழு மனதுடன் தொடரும்படி கேட்டுக் கொண்டார். ஸொராப்ஜி ஒரு மெஹர் பாபா மையத்தைத் நிறுவினார்; அவர் எதிர்கொள்ளும் சிரமங்களை பாபாவிடம் விளக்கியபோது, பாபா அவருக்கு அறிவுரை வழங்கினார்: **“என்னைத் தூற்றுவோர் உங்களை எதிர்க்கலாம், துன்புறுத்தலாம், ஆனால் நீங்கள் உங்கள் பணியைத் தொடர வேண்டும். இதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள், நான் கடவுள். கால்பந்து போல் இருங்கள். எங்கு உதைக்கப்பட்டு நகர்ந்தாலும், உதைகள் அதை இறுதியில் இலக்கை அடையச் செய்கின்றன. அதேபோல், உங்கள் வழியில் என்ன இடர்பாடுகள் இருந்தாலும், எவ்வளவு எதிர்ப்புகள் வந்தாலும், அதை அமைதியாக சகித்துக் கொள்ளுங்கள். அவை ஒரு நாள் உங்களை இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும்.”**

கூட்டத்தில் பாபா தொடர்ந்து கூறினார்:

**மேலுமொரு விஷயம் - நான் அதை ‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்தில் விளக்கவில்லை - அது பிணைப்பைப் பற்றியது. நீங்கள் அனைவரும் பிணைக்கப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். எப்படி? உங்களின் ‘நான்’ எனும் அகந்தையால்** (EGO)! **எங்கும் ஒரே விஷயம்தான். சிலருக்கு எல்லா சுகபோகங்களுடன் கடவுள் வேண்டும். ‘எனக்கு உணவு வேண்டும்’ எனத் தொடங்கி ‘எனக்கு கடவுள் வேண்டும்’ என்பது வரை இதே கதைதான். ‘நான்’ எனும் அகந்தை எப்போதும் இருக்கும் ஒன்று. இந்த ‘நான்’ எங்கிருந்து வந்தது? இது எந்தப் புத்தகத்திலும் விளக்கப்படவில்லை, எனவே கவனமாகக் கேளுங்கள். பசியாக இருக்கும்போது, ’எனக்கு உணவு வேண்டும்’ என்று சொல்கிறீர்கள். உங்கள் பசி அடங்கியதும் ‘எனக்கு உணவு வேண்டும்’ என்ற எண்ணம் இருக்காது. ஆனால் மீண்டும் நீங்கள் பசியாக உணர்கிறீர்கள், மீண்டும் ‘எனக்கு உணவு வேண்டும்’ என்ற எண்ணம் வருகிறது. இப்போது இதற்கு நான் விளக்கமளிக்கிறேன்.**

**ஆரம்பத்தில் கடவுளுக்கு ‘அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை’** (GOD IN THE BEYOND BEYOND STATE) **மட்டுமே இருந்தது. கடவுளுக்கு அவர் ‘கடவுள்’ என்ற சுய உணர்வு இல்லை. ஆனால், சமுத்திரத்தின் வழுவழுப்பான மேற்பரப்பில் தவழும் சிறிய அதிர்வலைகளைப் போல, சுய உணர்வு நிலையில் இல்லாத கடவுளிடம் “நான் யார்?” அல்லது “நான் என்னை அறிய விரும்புகிறேன்” என்ற இனம் புரியாத திடீர் ஆர்வம் (தற்போக்கெண்ணம் -** WHIM) **உருவானது. ஆதி முதலான அசல் ஆர்வம் என்பது: “நான் என்னை அறிய விரும்புகிறேன்” என்பதாகும். அந்த ஆர்வத்துடன், பிணைப்பு ஆரம்பமானது; சமுத்திரத்தின் எல்லா எண்ணற்ற துளிகளிலும் அது பரவியது; படைப்புத் தொடங்கியது, ஒவ்வொரு துளியும் ‘எனக்கு வேண்டும்’ என்பதை மட்டும் நினைவில் கொண்டது. இறுதியில், யுகம் யுகங்களுக்குப் பின்னர், “நான் என்னை அறிய விரும்புகிறேன்” என்ற ஆதி முதலான அசல் ஆர்வம் மீண்டும் திரும்பி வந்தது.**

**இறை உணர்வை அடைந்த பின்பு, சாதாரண பௌதீக உணர்வு நிலைக்கு வருபவர்கள் மக்களிடமிருந்து ஒருவித எதிர்ப்பை சந்திக்க வேண்டும். ஆனால் கடவுளின் அவதாரமாக வரும் அவதார புருஷருக்கு எப்பொழுதும் கடுமையான எதிர்ப்பின் தலைவலி உள்ளது. எல்லா அவதார யுகங்களிலும் இது இப்படித்தான் நடந்துள்ளது - ஸொராஸ்டர், ராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசு, முஹமது, அனைவரும் இந்த எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இன்றும் அதே சித்திரம் எனது கண் முன்னே தெரிகிறது.**

**நாளை, ஒரு மணி நேரம், ஒன்பது முதல் பத்து வரை, ஏழைகளுடனான நிகழ்ச்சிக்காக நேரம் செலவிடப்படும். தொடர்ந்து தொலைக்காட்சிக்குத் திரைப்படம் எடுப்பது. ஆனால் நாளை மறுநாள் உங்கள் ஒவ்வொருவரையும் இரண்டு நிமிடம் சந்திப்பேன். அப்போது என்னிடம் எதுவும் கேட்காதீர்கள். உங்களுடன் பேசும் இரண்டு நிமிடத்தில் நான் எதையேனும் கேட்டால், அதற்கு மட்டும் பதில் கூறுங்கள்.**

**ஏழு நாட்கள் ஒரே இடத்தில் அமர்ந்து, நீர் மட்டுமே அருந்தி, தூங்காமல், எனது பெயரை உச்சரிக்கும் ஐந்து பேருக்கும், நான் அறிவுரை வழங்குவேன்.**

**8ஆம் தேதி, பிம்பல்காவ்மில் சில இடங்களைக் காண்பிக்க உங்களை அழைத்துச் செல்கிறேன். பேருந்து கட்டணமாக ஒவ்வொருவரும் இரண்டு ரூபாய் செலவழிக்க வேண்டும். உங்களில் எவருக்கேனும் இந்த இரண்டு ரூபாயை வழங்க முடியாவிடில், மெஹர்ஜி ஸாஹுகாரைப்** (SAHUKAR, MONEYLENDER, வட்டிக்கடைக்காரர்) **பிடித்துக் கொள்ளுங்கள். பிம்பல்காவ்ம் கிராமத்திலிருந்து திரும்பி வந்ததும், நான்கு முதல் ஏழு மணி வரை, பூனாவிலிருந்து வரவழைக்கப்படும் ஒரு சிறந்த கவாலி பாடகரின் இசை நிகழ்ச்சி நடைபெறும். சாய்பாபாவும் கவாலி இசையைப் பெரிதும் விரும்பினார். பாபாஜானும் இந்த இசையைப் பாராட்டுவதுண்டு. மஹாராஜுக்கு இது போன்ற விஷயங்களில் ரசனை இல்லை; அவருக்குப் பாடல்கள் பிடிக்காது என்பதல்ல. அவர் யார் என்பது எவருக்கும் தெரியாது.**

**9ஆம் தேதி காலை எழுந்து புறப்படும்போது, உங்களுடன் என்னையும் அழைத்துச் செல்லுங்கள். உங்களால் என்னை முழுமையாக எடுத்துச் செல்ல முடியாவிடில், குறைந்த பட்சம் என்னில் ஒரு பாகத்தையேனும் எடுத்துக் செல்லுங்கள். என்னை மறந்துவிடாதீர்கள். மிகச்சிறிய விஷயமும் எனக்குத் தெரியும். நாளை ஒரு மணி நேரம் கடவுளின் பெயரை உண்மையாக உச்சரிக்கும் வேளையில், அதன் நேர்மையைப் பொறுத்து, அது என்னை வந்தடையும். கடவுள் காது கேளாதவர். அவரது அன்பர்களின் நேர்மை மட்டுமே அவரைக் கேட்கத் தூண்டுகிறது.**

காலை சுமார் 10:25 மணிக்கு 'பனாம்-இ-எஸ்தான்' (BANAM-E-YEZDAN) ஸொராஸ்டிரிய பிரார்த்தனையை மொழிய பாபா, கோஹியாரை அழைத்தார். பாபா நின்றுகொண்டு தமது இரு கரங்களையும் கூப்பிய போது, பிரார்த்தனையில் அனைவரும் இணைந்தனர். உணர்வு நிரம்பிய குரலில், கோஹியார் பிரார்த்தனையை மொழிந்தார்; பாபாவின் அருளால் ஒவ்வொரு வார்த்தையும் அங்கிருந்த ஒவ்வொருவரின் இதயத்தையும் ஊடுருவியதாகக் காலம் பறைசாற்றியது.

அதன் பின்னர் இருக்கையில் அமர்ந்த பாபா இவ்வாறு கூறினார்:

**காலங்காலமாக, எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னிடம் வாருங்கள் என்று நான் மக்களிடம் கூறி வருகிறேன். அது ஒன்றுதான் விடுதலைக்கான வழி. மதியம் மூன்று மணிக்கு, பதினைந்து நிமிடங்கள் நான் ஒன்றைச் சொல்ல போகிறேன். நாம் எப்பொழுதும் நிகழ்காலத்தில் வாழ்கிறோம். குழந்தைப் பருவம் முதல் முதுமை வரை, நிகழ்காலத்தில் வாழ்கிறோம். கடந்த காலத்தை நாம் எப்போதும் நினைவில் கொள்வதில்லை. கடந்த காலம் இல்லாததால் அதை மறந்து விடுகிறோம். அது அங்கு இல்லவே இல்லை. அது எப்போதுமே நித்திய நிகழ்காலம்.**

**மஹான்கள் கூட அளவிறுதியற்ற தன்மையைப் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். ஹைதராபாத்தில் ஒரு பிரபலமான துறவியை ஆயிரக்கணக்கான மக்கள் பின்பற்றுகிறார்கள். அவராலும் அதைக் கண்டுகொள்ள முடியவில்லை. ஹ:ஃபீஸின் கூற்றுப்படி: "அதைக் கண்டுகொண்ட ஒருவரை எவராலும் கண்டுகொள்ள முடியாது."**

ஆதி, ராம்ஜூ இருவரும் 1922இல் பூனா குடிலில் வாழ்ந்த நாட்களையும், மன்ஸில்-எ-மீமில் நிகழ்ந்த சில சம்பவங்களையும் விவரித்தனர். அனைவரும் மதிய உணவிற்குச் சென்ற போது, பாபா அவரது அறைக்குச் சென்றார்.

பாபு காம்ப்ளே என்ற அரன்காவ்ம் சிறுவன் பாபாவின் உணவைத் தயார் செய்து கொண்டிருந்தான். பாபா மெஹராஸாத்திலிருந்து வந்து, மெஹராபாத்தில் அவரது காலை சிற்றுண்டியை உண்பது வழக்கம். அதில் தேநீர் மற்றும் சில துண்டு ரொட்டியும், பாலாடைக் கட்டியும் இருந்தது. ஒவ்வோர் இரவும், பாபு, பாலிலிருந்து பாலாடையை நீக்கி, பாபாவுக்காகத் தனியாக வைத்தான்; ஆனால், அது காலையில் அங்கிருந்து காணாமல் போனது. யாரோ ஒருவர் அதை, சமையலறை அலமாரியிலிருந்து எடுத்துச் சென்றதால், பாபு இதற்காகக் குற்றம் சாட்டப்பட்டான், ஆனால் பாலாடைக் கட்டி எப்படி மறைந்து போகிறது என்பதை விளக்க முடியாமல் திணறினான்.

ஒரு நாள் இரவு அவன் சமையலறையில் ஒளிந்து கொண்டான். சிறிது நேரத்தில் பாவ்நகரைச் சேர்ந்த தரப்ஷா ஜே. உம்ரிகர் (DARABSHAH J. OOMRIGAR), திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்து பாலாடையை உண்டார். பாபு இதை பாபாவிடம் தெரிவித்தான்.

தரப்ஷாவைத் தமது அறைக்கு அழைத்த பாபா, **"நீங்கள் சமையல் அறையிலிருந்து ரகசியமாகப் பாலாடையை எடுத்து உண்டீர்களா?"** என வினவினார்.

"ஆம், பாபா" என்று ஒப்புக்கொண்டார்.

**"ஏன் அதைச் செய்கிறீர்கள்?"**

ஒரு குழந்தையின் அப்பாவி இதயத்தைக் கொண்ட தரப்ஷா, "இங்கே, ஒருவரது சொந்த இல்லத்தில் இருப்பதைப் போல் உணர்ந்து, ஒரே குடும்பமாக இருக்கச் சொன்னீர்கள்; எனது வீட்டில், நான் எந்த நேரமும் பசியாக இருக்கும்போது உண்ணுவது வழக்கம். இங்கேயும் நான் அதைச் செய்யாவிட்டால், அது உங்கள் கட்டளையை மீறுவதாகாதா?" என வினவினார்.

பாபா அவருடைய தர்க்கரீதியான பதிலைக் கேட்டு மிகையாக ரசித்து அவரைத் தழுவினார். **"என்னுடைய உண்மையான சகவாசத்தை அடையப் பெற்றவர் நீங்கள் மட்டுமே!"** என்றார்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா விறுவிறுப்பாக வராந்தாவில் முன்னும் பின்னுமாக நடந்தார். பாபா, ஒரு சில நெருங்கிய அன்பர்களை அமைதியாக உற்று நோக்கி, **"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"** என்று கேட்டார்.

அவர்கள், "நீங்கள் ஏதோ முக்கியமான உலகளாவிய பணியைச் செய்து கொண்டிருக்க வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம்" என்றதும்...

புன்னகையுடன் பாபா பதிலளித்தார், **"நான் எந்த முக்கிய பணியும் செய்யவில்லை, ஆனால் என் உணவை ஜீரணிக்கச் செய்கிறேன்!"**

மண்டபத்திற்குள் நுழைந்த பாபா, பெண்டு, பாதிரி, சிது, பாவ் ஆகியோரை அழைத்தார். **"என்னைக் கொல்ல விரும்புகிறீர்களா?"** என்று கேட்கத் தொடங்கினார். "(சகவாசத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் அமருவதற்காக மண்டபத்தில் விரிக்கப்பட்ட) **கம்பளம் முழுவதும் தூசியால் நிறைந்திருக்கிறது, நான் நடக்கும் போதெல்லாம் தூசி, மேகங்கள் போல மேலே எழுந்து எனது நாசிக்குள் நுழைகின்றன. யார் கம்பளத்தை சுத்தம் செய்தது?"**

சிது சுத்தம் செய்ததாகக் கூறினார்.

**"உங்கள் தந்தை எப்போதேனும் கம்பளத்தை சுத்தம் செய்ததுண்டா?"** பாபா திட்டினார். **"தூசியை அகற்றுவது இப்படியா? தினமும் அதை வெளியில் எடுத்து வெகுவாக அசைத்து, தட்டி சுத்தம் செய்ய வேண்டும்!"**

"கம்பளம் மிகவும் கனமானது பாபா; இதை அசைக்க இருபது பேர் தேவை!" என்றார் சிது.

பாவ் கல்சூரி பக்கம் திரும்பி பாபா, **"உங்கள் தந்தையார் எப்போதாவது ஒரு கம்பளத்தை சுத்தம் செய்ததுண்டா?"** என வினவினார்.

"இல்லை," பாவ் பதிலளித்தார்.

**"ஆனால் நீங்கள் அதைச் செய்ய வேண்டும்! நாளை கம்பளத்தில் சிறிதளவு தூசி இருந்தால் கூட நான் உங்களை மன்னிக்க மாட்டேன்!"**

(உண்மையில், கம்பளத்தில் தூசி இல்லை, ஆனால் பாபா அதை உதறி சுத்தம் செய்வதை விரும்பினார். எனவே ஒவ்வோர் இரவும், சுமார் 20 முதல் 25 நபர்களை ஒன்று சேர்த்து, பாவ் கம்பளத்தை சுத்தம் செய்யத் தொடங்கினார்.)

பாபா அப்போது, மண்டபத்தில் இருந்த இரண்டு பறவைகளை கவனித்து, மீண்டும் பாவ், சிது இருவரையும் கண்டித்தார்: **"நீங்கள் ஏன் பறவைகளை மண்டபத்தில் அனுமதித்தீர்கள்?"**

பாவ் கல்சூரி தன்னை தற்காத்துக் கொண்டார், "நான் இதர பணிகளில் மும்முரமாக இருந்ததால், மண்டபத்தின் அருகில் அரிதாகவே வருகிறேன். பறவைகள் உள்ளே பறந்து செல்வதை நான் எப்படித் தடுத்திருக்க முடியும்?

**"நீங்கள் எவரையேனும் வாசலுக்கு அருகில் காவல்காக்க வைத்திருக்க வேண்டும்! ஏன் அதை நினைக்கவில்லை?"** என வினவினார்.

பாபா, சகவாச குழுவை மண்டபத்தில் அழைத்து, '**பாவ் கல்சூரியின் அலட்சியத்தை விவரித்து, அவரை மன்னிக்க வேண்டுமா**' என்று கேட்டார். அனைவரும் 'ஆம்' என்றதும், பாபா அவரை மன்னித்தார்.

பிற்பகல் 3:00 மணிக்கு, பாபா, 'இறை ஞானம்' (DIVINE KNOWLEDGE) குறித்து சில வார்த்தைகளைக் கூறினார்:

**ஞானம்** (DNYAN) **இரண்டு வகையானது, புலப்படா நுண்பொருளானது** (PAROKSH, IMPERCEPTIBLE) **மற்றும் உணரக்கூடியது** (APAROKSH, PERCEPTIBLE), **அதாவது 'அதுவாக மாறுவது'** (BECOMING). **நாம் இடைப்பட்ட நிலைகளை இப்போது தவிர்ப்போம். இது முறையே 'அறிவு சார்ந்த ஞானம்'** (INTELLECTUAL KNOWLEDGE), **'ஆன்மீக ஞானம்'** (SPIRITUAL KNOWLEDGE) **என்றும் குறிப்பிடப்படுகிறது. ஞானத்தைப் பற்றிய தொகுப்புகள் பல எழுதப்பட்டுள்ளன. நான் எவ்வளவுதான் விளக்க விரும்பினாலும், அதை புரிந்துகொள்வது சாத்தியமற்றது. அறிவு அல்லது ஞானம் என்பது அனுபவத்திற்குரியது. இருப்பினும், இந்த விஷயத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சியில், இதற்கு முன்னர் எப்போதும் செய்யாத அளவுக்கு, உங்களை அதன் மிக அருகில் அழைத்துச் செல்வேன்.**

**மனதின் மூலம் அடையப் பெறும் ஞானம்** (HUQ-UL-YAKIN, **அறிவு**) **என்பது, இறை உணர்வை அடைந்த பின்னர் இறைவனாக மாறுவதால் விளையும் நம்பிக்கை அல்ல** (THE COVICTION OF BECOMING). **அறிவு சார்ந்த ஞானம் மற்றும் இறைவனுடன் ஐக்கியமாவதால் விளையும் ஞானம் இரண்டிற்கும் எல்லையற்ற வித்தியாசம் உள்ளது. மனதின் மூலம் அடையப் பெறும் அறிவைக் கூட ஒரு சிலரால் மட்டுமே சாதிக்க முடியும். அனைத்திலும் நான் இருக்கிறேன். நான் எல்லாவற்றிலும், ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிலும் இருக்கிறேன், நான் ஒருவன் மட்டுமே இருக்கிறேன் என்ற இந்த அறிவை - மிகச் சிலரே மனதின் மூலம் புரிந்துகொள்கின்றனர்.**

**இறை ஞானத்தைக் குறித்து இந்து தத்துவத்தில் ஏராளமான வேத நூல்கள் உள்ளன. 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தில் நான் மிகத்**

தெளிவாக விளக்கியிருக்கிறேன். புத்தகத்தைப் படித்த பின்னர், என்னைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பது உங்களுக்குப் புலப்படும். இது இறை ஞானம் அல்ல, இதுவே புரிதல். ஆரம்பம் முதல் இறுதி வரை, இறைவனைத் தவிர வேறு எதுவும் இல்லை. அதைப் படித்த பின்பு, நீங்களே கடவுள் என்ற முடிவுக்கு வருவீர்கள். ஆனால் இது, மனதளவிலான அறிவு கூட இல்லை; இது மனம் அல்லது அறிவுசார்ந்த புரிதல் மட்டுமே. ஆழ்மன அறிவு (MENTAL KNOWLEDGE) என்றால் என்ன? 'ஆழ்மனப் புரிதல் (MENTAL UNDERSTANDING) என்றால் என்ன? நாம் அனைவரும் ஒன்று என்ற புரிதலுக்கு வருகிறோம். 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் படித்து முடித்ததும், பாபா கூறியது உண்மை என்று சொல்வீர்கள். ஆழ்மனப் புரிதல் என்பது இறைவன் எங்கும் இருக்கிறார், இறைவனைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதைப் புரிந்துகொள்வது. ஆனால், சில நிமிடங்களில், இந்தப் புரிதல், துன்புறுத்தும் உணர்வால் அல்லது சில பண்பு நயமற்ற விமர்சனம் அல்லது செயலால் சிக்கல்களுக்கு ஆட்பட்டு நிலைகுலைகிறது.

ஆழ்மன அறிவு என்றால் என்ன? ஒருவர் பல புத்தகங்களைப் படித்திருக்கிறார், 'கடவுள் பேசுகிறார்' என்ற புத்தகத்தையும் சேர்த்து, என்று வைத்துக்கொள்வோம், மேலும் 'எல்லாவற்றிலும் நானே உள்ளேன்' என்ற புரிதல் அவருக்கு வருகிறது. பாபா இறைவனுடன் ஒன்றிவிட்டார் என்பதை அவர் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறார். ஆனால், சில துன்புறுத்தும் உணர்வால் அல்லது சில பண்பு நயமற்ற விமர்சனம் அல்லது செயலால் சிக்கல்களுக்கு ஆட்பட்டு நிலைகுலையும்போது கூட, அது அனைத்தும் கடவுளின் விருப்பம் என்று அவர் கூறுகிறார், மேலும் பழிவாங்கும் எண்ணம், வெறுப்பு அல்லது அது போன்ற எதுவும் மனதில் தோன்றுவதில்லை. இதுவே ஆழ்மன அறிவு. இந்த மன நிலையைக் கூட வெகு சிலரே அடையப் பெறுகிறார்கள்.

இதற்குப் பிறகும், வேறு இரண்டு நிலைகள் உள்ளன; பின்னர் ஐக்கியமாகும் வேளையில் விளையும் 'நான் கடவுள்' என்ற இறுதி நம்பிக்கை (LAST CONVICTION OF BECOMING). எரச் தன்னை எரச் என்று நினைக்க வேண்டிய தேவை இல்லை. அதே போல், இந்த இறை ஞானத்தை அடையப் பெற்றவர், தன்னை கடவுள் என்று நினைக்க வேண்டிய தேவையும் இராது. மிக மிக சிலரே இவ்வாறு ஐக்கியமாவதன் மூலம் இந்த நம்பிக்கையை அடையப் பெறுகிறார்கள்.

நான் ஏன் இறை ஞானம் பற்றிய விளக்கத்தைத் தொடங்கினேன் என்பது இங்கிலாந்தில் கடுமையான குளிரில் புகைப்படம் எடுப்பதற்காக கேமரா முன் நின்ற சம்பவத்திலிருந்து தொடர்ந்தது. நாம் எதுவாக இல்லையோ அதுவாகப் பாசாங்கு செய்யக் கூடாது. கடவுள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார், எல்லாவற்றையும் என்றால் எல்லையற்ற அனைத்தையும் குறிக்கிறது; கடவுள் அறிந்த அனைத்தும் எல்லாவற்றிலும் உள்ளடங்கியது. இவை அனைத்தும் 'கடவுள் பேசுகிறார்'

புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. என்னைப் பொறுத்தவரையில் எனக்குத் தெரிந்த ஒரே 'பாவம்' (SIN), நாம் எதுவாக இல்லையோ அதுவாகப் பாசாங்கு செய்வது. அத்தகைய சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கும் ஒரு வழி உள்ளது. ஒன்றே ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், 'கடவுள் மட்டுமே உளதாயிருக்கிறார், கடவுளுக்கு எல்லாம் தெரியும். அவர் எல்லாவற்றிலும் இருக்கிறார், எங்கும் இருக்கிறார், எல்லாவற்றையும் அறிவார்.' இதை எப்பொழுதும் நினைவில்கொள்வதன் மூலம், நீங்கள் இல்லாத ஒன்றை இருப்பது போலக் காட்டிக்கொள்ள முயற்சிக்க மாட்டீர்கள்.

மற்றுமொரு பாவமும் (SIN) உள்ளது. கேக்கி (நலவாலா), கடவுள் எல்லாவற்றிலும் எங்கும் இருக்கிறார் என்று கூறுவதானால், கடவுள் அவரிலும் இருக்க வேண்டும். எனவே, கடவுளே அந்தப் பாசாங்குத்தனத்தை வெளிப்படுத்துபவர் என்ற கருத்தைக் கொண்டவர்! அது உண்மை. ஆனால், ஹாஃபீஸின் வார்த்தைகளில், அத்தகைய சூழ்நிலையில் 'அமைதியாக இருங்கள். கடவுள் பெயரை உச்சரிக்க வேண்டாம்.' 'பாவம்' என்று எதுவும் இல்லை. கடவுள் எல்லா இடங்களிலும் எல்லையற்ற பாகங்களாக அங்கம் வகிக்கிறார். ஆனால் ஹாஃபீஸ் கூறுகிறார், 'கேக்கி போன்றவர்கள் சந்திக்கும் சூழ்நிலையில் அமைதியாக இருந்து, நான் பாவம் செய்துவிட்டேன் இது என்னுடைய தவறு' என்று கூறுங்கள்.

அப்போது அங்கே, ஆழ்மன அறிவுக்குப் பின்னர் இறை ஞானத்தின் இரண்டாம் நிலை உள்ளது. இந்த இரண்டாம் நிலை, கடவுளே அனைத்தையும் செய்தவர் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறது; இருந்தும், உண்மைப்பொருளாகிய ஏக இறைவன் உங்களை "ஆம், நான் தவறு செய்துவிட்டேன்" என்று சொல்ல வைக்கிறார். வெகு சிலரே இந்த நிலைக்கு வருவார்கள்.

ஒருவர் உண்மைப்பொருளான ஏக இறைவனோடு ஐக்கியமானால், எல்லாம் ஏக இறைவன் என்று உணர்கிறார். அந்த நிலையில் அவர் திரும்பி வந்து, "நான் என்னை அறிவேன்! நானே கடவுள்" என்று பறைசாற்றுகிறார். சத்குருவின் நிலையில் பாசாங்குத்தனம் என்பது இல்லை. "நானும் எனது பிதாவும் ஒன்றுதான்... அனைவரும் என்னிடம் வாருங்கள்... எல்லோரும் என்னைப் பின்பற்றுங்கள், எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள்" - இது பாசாங்குத்தனம் அல்ல. அவர் ஏக இறைவனாகவே இருக்கிறார்! நாம் அனைவரும் ஒன்று. கடவுள் ஒரே எல்லையற்ற சமுத்திரம். அந்தக் கடவுளின் ஒருமைப்பாட்டிற்கு நாம் மரியாதை செலுத்த வேண்டும்.

இறைநிலையை அடைவதற்கு நம்மைத் துண்டு துண்டாக வெட்டுவது கூட நம்மை வெகுதூரம் கொண்டு செல்லாது. பிரியமான இறைவன் எல்லையில்லா சௌந்தர்யமும், மகிமையும் வாய்ந்தவர், அவருக்காக நம் உடலை தியாகம் செய்வதில் ஒன்றுமே இல்லை. நான் எதைச் சொன்னாலும் அதிகாரத்துடன் சொல்கிறேன். இறைவன் அளப்பரிய

**மதிப்புமிக்கவர், அவருக்காக உடலை துண்டு துண்டாக வெட்டுவது அர்ப்பணம் ஆகாது!**

**நான் எதைக் கூறினாலும், எதுவாக இருந்தாலும், எப்பொழுது, எங்கு இருந்தாலும், அதற்கு இந்த ஐந்து சத்குருக்களே காரணம். ஒவ்வொரு முறையும் ஒரே விஷயம்தான் நிகழ்கிறது. நான் எவ்வாறு இருக்கிறேனோ அதுவாகவே மாறவேண்டும், அவ்வாறு மாறுவதற்கு இந்த ஐந்து சத்குருக்களே காரணம். பாபாஜான், (நான் அவரை மாமன்னர் என்று குறிப்பிடுகிறேன்) உபாஸனி மஹாராஜ், சாய்பாபா அனைவரும் முழு பிரபஞ்சத்தின் திறவுகோலை வைத்துள்ளனர். சாய்பாபா அவரது பௌதீக உடலில் எப்பொழுதும் குழல்வழி புகைத்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. இருமுவதையும், உமிழ்நீரைத் துப்புவதையும் ஒரு பழக்கமாகக் கொண்டார். தன்னிடம் வருபவர்களிடம் பணம் கேட்பது வழக்கம். மக்கள் தங்கள் இடர்பாடுகளை அவரிடம் சென்று முறையிட்டனர். இப்போது, சாய்பாபாவின் வாழ்க்கையைப் பற்றிய திரைப்படம், தீப்பெட்டியில் கூட அவரது உருவம் உள்ளது. இன்று இங்கு பாடிய பாடல்களைக் கேட்டபோது, ஐந்து சத்குருக்கள் என்னை உங்கள் நிலைக்கு கொண்டு வந்தது நினைவுக்கு வந்தது. அவர்களால்தான் நான் உங்கள் முன்னால் தோன்றி, நானே எல்லாமே என்று அறிவிக்கிறேன். எனது சொந்த விருப்பப்படி, நான் வருவதில்லை. சாய்பாபா நாள் முழுவதும் அவரது புகைக்குழாயுடன் காணப்பட்டார். அவரது கண்களில் பளபளக்கும் ஒளி நிறைந்திருந்தது, அவர் ஓர் அற்புதமான ஆளுமையுடன் இருந்தார். சாய்பாபாவைப் போலவே, நான் இந்தப் பௌதீக உடலைத் துறந்த பிறகு, மக்கள் என்னைப் புரிந்துகொள்வார்கள். நான் உங்கள் முன்னிலையில் இருக்கும்போது நீங்கள் தூங்கிக்கொண்டிருக்கிறீர்கள்!**

அங்கிருந்த அனைவரும் சிரித்தனர், பாபா இதைக் கூறி முடித்தார்:

**நாளை முதல் ஆன்மீக உரைகள் இல்லை. பார்சிகளே, கவனமாகக் கேளுங்கள்! ஸொராஸ்டர் அவதார புருஷர். அவரது மூன்று கொள்கைகளின் சாராம்சம், அனைத்து மதங்களின் போதனைகளிலும் காணப்படுகிறது. நான் கூறுவதும் இந்த மூன்று ஸொராஸ்ட்ரியன் கொள்கைகளுடன் இணைந்து போகிறது. அவரது பெயரை நினைவில் கொள்ளுங்கள். அவருக்கு அவப்பெயரை ஏற்படுத்தாதீர்கள். கடவுளை நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எப்போதும் என்னை நினைவுகூருங்கள்!**

குஜராத்தி குழுவின் பெரும்பாலான அன்பர்கள் மெஹர் பாபாவின் தொடர்பில் பல வருடங்களாக இருந்தனர், மேலும் பாபா அவர்களின் தோழமையில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். டாக்டர் ஹோஷங் பரூச்சா (DR. HOSHANG BHARUCHA) இந்த சகவாசத்தின் போது முதல் முறையாக மெஹராபாத்திற்கு வந்திருந்தார். அவர் 1952இல் மும்பையில் பாபாவை சந்தித்திருந்தாலும், ஸாக்கோரியுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு

இருந்ததால், நீண்ட நாட்களாக, பாபாவைப் பார்க்கவில்லை. சகவாசத்தின் போது, பாபா அவரிடம் அதிக கவனம் செலுத்தினார். பாபா அவரைத் தன் அருகில் அமர வைத்து அவ்வப்போது முதுகில் தட்டினார்.

ஒரு நாள் மதிய உணவுக்குப் பிறகு, ஹோஷங் அவரது நண்பர் எரச் கராடியாவுடன் (ERUCH KARADIA, அவரும் கோதாவரி மாயைப் பின்பற்றுபவர்) பாபாவின் அறைக்கு அருகில் நின்று கொண்டிருந்த வேளையில் பாபா அவரை உள்ளே அழைத்து, **"உங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன?"** என்று ஹோஷங்கிடம் வினவினார்.

"நான் கடவுளை உணர விரும்புகிறேன்," என்று அவர் பதிலளித்தார்.

பாபா கூறினார், **"அந்த இலக்கை அடைவது மிகச் சிலரே, ஆனால் எனது மேலங்கியைக்** (என்னை) **கெட்டியாகப் பற்றிக் கொண்டவர் அதை அடைகிறார்.**" தொடர்ந்து, **"கோதாவரி மாய் இறை உணர்வை அடைந்த ஆத்மா அல்ல"** என்று முடித்தார்.

கோதாவரி மாயை, தனது குருநாதராகக் கருதிய ஹோஷங், பாபா நேரடியாகக் கூறியதைக் கேட்டு குழப்பமடைந்தார். அவருடைய மனக் கிளர்ச்சியும், இதயக் கொந்தளிப்பும் தணிய நீண்ட நேரம் பிடித்தது; ஆனால் அதன் பிறகு, ஹோஷங் முற்றிலும் பாபாவின் அரவணைப்பில் இருந்தார்.

சகவாசத்திற்குப் பின்னர், எரச் கராடியா ஸாக்கோரிக்குச் சென்று பாபா கூறியதை கோதாவரி மாயிடம் எடுத்துரைத்ததற்கு, அவர் இவ்வாறு பதிலளித்தார், "இது என் மீதான உங்கள் நம்பிக்கையை சோதிக்க மட்டுமே கூறப்பட்டது." ஆனால் அதைத் தொடர்ந்து கராடியாவும் பாபாவின் முழுத் தொடர்பில் இருந்தார்.

பாபா கேட்டுக் கொண்டதற்கு இணங்க, ஏழு நாட்கள் உபவாசம் கடைப்பிடிக்க விருப்பம் தெரிவித்த அன்பர்களில், ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஐந்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நவம்பர் 5 அன்று, அவர்களுக்கு பின்வரும் வழிமுறைகள் வழங்கப்பட்டன:

1. **நீங்கள் 1956 பிப்ரவரி 14 நள்ளிரவு 12:00 மணியிலிருந்து தொடங்கி, பிப்ரவரி 21ஆம் தேதி நள்ளிரவு 12:00 மணி வரை உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும். (நேரங்கள் உள்ளூர் நேரத்தின்படி இருக்க வேண்டும்.)**
2. **அவதார் மெஹர் பாபாவின் பெயரில் "பாபா" என்ற பெயர் மட்டும் வெளியே கேட்கும் விதத்தில் - சுவாசத்தை உள்வாங்கும் போது 'பா' என்றும், வெளிவிடும் போது 'பா' என்றும், ஏழு நாட்கள், விழித்திருக்கும் வேளையில் இடைவிடாமல், மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும். ஒளிகள், வண்ணங்கள் மற்றும் பலவற்றின் வட்டங்களைப் பார்ப்பது அல்லது இனிமையான வாசனையை நுகர்வது அல்லது அருமையான இசையைக் கேட்பது போன்ற ஒருவித ஆன்மீக அனுபவத்தை அடையப் பெற்றாலும் கூட, அதை**

நிறுத்தக்கூடாது. பகல் அல்லது இரவில் நீங்கள் தூங்கச் செல்லும்போது, பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிவது எந்த நேரத்தில் தானாக நின்றுவிடும் என்பது முக்கியமல்ல, ஆனால் நீங்கள் விழித்தெழுந்ததும் உடனடியாக அதைத் தொடர வேண்டும்.

3. ஏழு நாட்கள் இந்தக் 'கடமை'யில் ஈடுபட பொருத்தமான அறை ஒன்று மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நீங்கள் அறைக்குள் நுழைந்து, கடமையைத் தொடங்கிய பின்னர், எந்த சூழ்நிலையிலும் அதை விட்டு வெளியே வரக்கூடாது. உதாரணமாக, நீங்கள் ஒரு பாம்பு அல்லது அது போன்ற உயிரினம் அல்லது பெரிய, கொடூரமான உருவங்கள், வடிவங்கள் மற்றும் பலவற்றைப் பார்க்க நேர்ந்தாலும், நீங்கள் அறையை விட்டு வெளியே வரக்கூடாது. இயற்கையின் அழைப்புக்கு பதிலளிப்பது, நீங்கள் விரும்பினால் நீராடுவது, உடல் தேவைகளைப் பூர்த்தி செய்வது, நடைபயிற்சி அல்லது அறைக்குள் எந்த நகர்வும், பகல் அல்லது இரவின் எந்த நேரத்திலும் அனுமதிக்கப்படுகிறது.

4. நீங்கள் விரும்பும் போதெல்லாம் பகல் இரவு பாராமல் தூங்க உங்களுக்கு அனுமதி உண்டு.

   ஆனால் நீங்கள் தூங்கும் போதும் அல்லது முழுமையாக விழித்திருக்கும் போதும், உங்கள் உடலை நேராக, தரைக்கு இணையாக நீட்டக்கூடாது, அதனால் உங்கள் தலை தரையில் அல்லது நீங்கள் ஓய்வெடுக்கும் பொருளைத் தொட்டுக் கொண்டிருக்கும்.

5. முழு ஏழு நாட்களும் நீங்கள் எதையும் படிக்கவோ எழுதவோ கூடாது. உங்கள் தேவைகளைப் பற்றிய எண்ணங்களைத் தெரிவிப்பதற்காக உங்களை சந்திக்கும் நபர்களுக்கு நீங்கள் குறைந்தபட்ச சைகைகள் மூலம் தெரிவிக்கலாம்.

6. முழு ஏழு நாட்களும் நீங்கள் தேவையான அளவு நீர் அருந்தலாம். உங்களுக்குத் தாகம் இல்லையென்றாலும், நீங்கள் எப்போதேனும் தண்ணீர் பருக வேண்டும், இதனால் தொண்டையை எப்போதும் ஈரமாக வைத்திருக்க முடியும். நீங்கள் குறைந்தபட்சம் ஒரு கப் தேநீர் அருந்த வேண்டும், மேலும் 24 மணி நேரத்திற்கு ஒரு முறை, அதிகபட்சமாக இரண்டு கப் தேநீர் அருந்தலாம். தேநீர், ஒரு டம்ளர் பால் மற்றும் ஒரு டம்ளர் தேநீர் என்ற விகிதத்தில் தயாரிக்கப்பட்டு, பின்னர் அருந்த வேண்டும். தேநீர் அருந்த விரும்பாதவர்கள் அதற்கு பதிலாக ஒரு டம்ளர் பால் அருந்தலாம்.

7. ஒவ்வொரு நாளும் மதியம் 12:00 மணிக்கு, நீங்கள் ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி அளவு 'மேக்லீன்ஸ்' வயிற்றுப் பொடியைக் (MACLEAN'S STOMACH POWDER) கலந்து உட்கொள்ள வேண்டும்.

8. **கடமையை முடித்த முதல் இரண்டு நாட்களுக்கு, அதாவது பிப்ரவரி 22, 23 ஆகிய தேதிகளில், நீங்கள் விரும்பும் வேளையில், பழரசம் மட்டுமே அருந்த வேண்டும். தேவைப்பட்டால் சர்க்கரை சேர்க்கலாம்.**
9. **கடமையை முடித்த மூன்றாவது நாளில், அதாவது 24ஆம் தேதி, திட உணவு உண்ணத் தொடங்கும் முன்னர், ஒரு ஏழையை முதலில் தலைவணங்கி அவருக்கு சிறப்பாக உணவளிக்க வேண்டும். தலைவணங்கி உணவளிக்கும் போது, நீங்கள் பாபாவைத் தலைவணங்கி அவருக்கு உணவளிப்பதாக உணர வேண்டும். அதைத் தொடர்ந்து நீங்கள் மென்மையான சாதம், பருப்பு, மோர் போன்ற திட உணவை உண்ணத் தொடங்கலாம். அன்றைய தினம் அத்தகைய திட உணவையே உண்ண வேண்டும். அடுத்த நாள் முதல், நீங்கள் வழக்கம் போல் உண்ணும் உணவை உட்கொள்ளலாம்.**

**குறிப்பு: கடமையைத் தொடங்கும் முன்பு, நீங்கள் எக்காரணத்திற்காகவும், பாபாவை எந்த விதத்திலும் கேள்வி கேட்கவோ அல்லது தொந்தரவு செய்யவோ கூடாது. தொடங்கும் தேதி மற்றும் நேரத்திற்கு முன்பே நீங்கள் நோய்வாய்ப்பட்டாலும், திட்டமிட்ட அட்டவணைப்படி கடமையைத் தொடங்கி முடிக்க வேண்டும். இரண்டாவதாக, பாபாவின் மீது 100 சதவீத அன்புடன், எந்த சந்தேகமும் பயமும் இல்லாமல் முழு மனதுடன் கடமையைச் செய்ய வேண்டும்.**

நவ்ஸாரியின் கோவாஸ் வெஸுனாவும் (COWAS VESUNA) உபவாசம் மேற்கொள்ள விரும்பினார், பாபா அவரிடம் கேட்டார், **“நான் உங்களை அனுமதிக்கவில்லை என்றால் நீங்கள் வருந்துவீர்களா?”**

கோவாஸ் பதிலளித்தார், “நான் உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற விரும்புவதால் வருத்தப்பட மாட்டேன் - இது எனது வாழ்க்கையின் விரதம் மற்றும் ஒரே தவமாகும். எனது விருப்பத்திற்கு எந்த இடமும் இல்லை.”

பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார், ஆனால் அவரது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. கோவாஸ் திரும்பிச் சென்றபோது, அவர் உபவாசம் இருப்பது சாத்தியமில்லை என்பதை உணர்ந்தார், ஏனெனில் அவரது மனைவி அதைக் கடுமையாக எதிர்த்தார். 1947இல் சூரத்தில் தரிசனம் செய்த நாளிலிருந்து கோவாஸ், பாபாவின் தொடர்பில் இருந்தார், ஆனால் அவரது மனைவி பாபாவை நம்பாமல் இருந்தாலும், மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் (1958இல் மெஹராபாத் சகவாச நிகழ்ச்சியில்) அவர் பாபாவின் நேரடித் தொடர்பில் வந்தபோது, அவருடைய இதயம் முழு மாற்றத்தை சந்தித்தது.

பாபா சகவாச குழுவிலிருந்த சில அன்பர்களுடன் ஏழு ஓடுகளின் விளையாட்டை விளையாடினார். அதைத் தொடர்ந்து ஹரிபாய் பட்டேல் சில பாடல்களைப் பாடினார். பாபா பின்பு ஹோஷங்கிடம் பாடச் சொன்ன போது, அவருக்குப் பாட வராததால் தன்னால் முடிந்தவரை சமாளித்தார். மெஹர்ஜி,

கேக்கி நலவாலா, தரப்ஷா போன்ற குரல் வளம் இல்லாத நபர்களை பாபா தேர்ந்தெடுத்து, அவர்களின் 'பாடல்களை' மிகவும் ரசித்தார்.

பாபா மாலையில் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

1955 நவம்பர் 6 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா காலை 7:00 மணிக்கு மெஹராபாத் வந்து, மண்டலியுடனான கலந்துரையாடலுக்குப் பின்னர், அவர் 7:50 மணிக்கு மண்டபத்திற்குள் நுழைந்தபோது, அங்கு ஏற்கனவே சகவாசக் குழு கூடியிருந்தது. எரச் நாள் முழுவதும் பாபாவின் அருகே நின்றபடி அவரது கை அடையாளங்களையும், சைகைகளையும் விளக்கிக் கொண்டிருந்தார். பொதுவாக, பாபா தனது இளஞ்சிவப்பு நிற கோட்டுடன் நீண்ட சத்ராவை அணிந்திருந்தார், அவரது தலைமுடியைப் பின்னலிட்டு கோட்டின் பின்புறத்தில் செருகி இருந்தார்.

"பாபா மிகவும் அழகாக ஒப்பற்ற தோற்றத்துடன் காணப்பட்டார், மேலும் அவரது உடலின் ஒவ்வொரு சிறு துவாரத்திலிருந்தும் இறை அன்பின் மதுபானம் பாய்ந்தது. அவரது கண்கள் திகைப்பூட்டும் வகையில் ஒளிர்ந்து, ஒவ்வோர் இதயத்திலும் ஊடுருவியது. அவரது பார்வை வெளிப்படுத்திய மென்மையான கதிர்கள், ஒருபோதும் ஆறாத ஆழமான காயங்களை உருவாக்கியது."

பாபா கேட்டார், **"நான் எப்படி இருக்கிறேன்?"**

அவர் பிரகாசமாகத் தோற்றமளிப்பதாக பல அன்பர்கள் கூறவே, பாபா, **"நேற்றிரவு நான் தூங்கவில்லை, ஆனால் நான் மிகவும் அழகாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறேன் என்று நீங்கள் கூறுகிறீர்கள்!"** என்றார்.

சரியாகத் தூங்காதவர்களைப் பற்றி பாபா கேட்டபோது, ஒரு சிலர் எழுந்து நின்றனர், அவர்களில் கராச்சியின் ஆதி துபாஷ், மினூ கராஸ் இருவரையும் பாபா கேலி செய்தார், **"நான் உங்களை நம்ப மாட்டேன். நேற்றிரவு, நான் உலக அளவிலான நிலைமைகளைக் குறித்த ஆய்வில் இருந்தபோது, நீங்கள் இருவரும் உரத்த சத்தத்தில் குறட்டை விடுவதைக் கண்டேன்!"**

அவர்கள் அருகில் தூங்கிய கோஹியாரைப் பார்த்து, கண்களைச் சிமிட்டி பாபா, **"உண்மையைச் சொல்லுங்கள். இவர்கள் இருவரும் நேற்று இரவு தூங்கினார்களா இல்லையா?"** என்று கேட்டார்.

கோஹியர் கூறினார், "பாபா, அவர்கள் மிகவும் பயங்கரமாகக் குறட்டை விடுகிறார்கள், என்னால் தூங்க முடியவில்லை! இவ்வளவு சத்தமாகக் குறட்டை விடுபவர்களை நான் பார்த்ததில்லை!" அனைவரும் அடக்க முடியாத சிரிப்பில் கர்ஜனை செய்தனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால், காக்கா சிஞ்சோர்கர் அஹமதுநகரிலிருந்து ஆதி சீனியருடன் வந்திருந்தார். சிஞ்சோர்கரிடம் பாபா, **"கடந்த மூன்று நாட்களாக நான் ஆன்மீக சொற்பொழிவுகள் மற்றும் விளக்கங்களை வழங்கியபோது உங்களுக்கு வர நேரமில்லை; ஆனால் இன்றைய தலைப்பு 'பணம்' ஆகையால் நீங்கள் வந்துவிட்டீர்கள்! சரி, சரி பரவாயில்லை, இப்போது கவனமாகக் கேளுங்கள்."**

நேற்று நான் கூறியது போல, பணம் வந்து போகும். இரண்டு அல்லது மூன்று பேரைத் தவிர, இந்தியாவில் வாழும் பார்சி அன்பர்கள் அனைவரும் என்னைப் போலவே பணத் தட்டுப்பாடுடன் வாழ்பவர்கள், நொடிந்து போனவர்கள். நரிமன், மெஹர்ஜி இருவரும் எனக்கு உதவியாக இருக்கிறார்கள்; ஸரோஷும் எந்த வகையிலும் குறைந்தவர் அல்ல. ஆதி அவரது அனைத்தையும் அர்ப்பணித்துள்ளார். என்னுடன் தொடர்பில் இருக்கும் பெரும்பாலான பார்சிகள் பெரிய உள்ளம் படைத்தவர்களாகவும், என்மீதான அன்பில் பணக்காரர்களாகவும் இருக்கிறார்கள், ஆனால் பணப்பையில் ஏழைகள். இதற்குப் பிறகு வரும் பிற மூன்று குழுக்களுக்கும் நான் ஏற்கனவே சொன்ன விஷயங்களே சொல்லப்படும். ஆனால் நான் உங்களிடம் சொல்லவிருக்கும் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி உங்களுடன் விவாதிக்கும் எண்ணம் எனக்கு இல்லை. சகவாசத்தைப் பற்றிய எனது விளக்கத்தின்படி - நாம் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருப்பது என்பது, எந்தக் குழுவிலிருந்தும் எதையும் மூடிமறைக்காமல் இருப்பது விரும்பத்தக்கது என்று எரச் கூறினார். எனவே இந்த விஷயத்தை இன்று என்னுடன் இருக்கும் குஜராத்தி குழுவின் முன் வைக்க ஒப்புக்கொண்டேன்.

1956 பிப்ரவரி 15 முதல், ஒரு வருடம் மண்டலி மற்றும் எல்லோரிடமிருந்தும் விலகியே இருக்க முடிவு செய்துள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். மண்டலி அவர்களின் தேவைகளுக்கு என்னைச் சார்ந்து இருக்கிறார்கள், எனவே நான் அவர்களுக்கு வழங்க வேண்டும். இதைச் செய்ய என்னிடம் இரண்டு மாதங்கள் உள்ளன. இந்த இரண்டு மாதங்களில், தன்னலமற்ற முறையில், எந்தவிதமான சஞ்சலமும் இல்லாமல், உங்கள் மனதில் பாரத்தை உணராமல், எதையேனும் வழங்க முடிந்தவர்களிடமிருந்து மட்டுமே, இந்தக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். வழங்குவது என்றால் என்ன? இலவசமாக வழங்குவது, நேர்மையாக, வசதிக்கேற்ப வழங்குவது. அன்பு, மன உளைச்சல், சந்தேகங்கள் இல்லாதது; கனத்த மனதுடன் எதையும் வழங்க வேண்டாம். உங்களால் முடிந்தால், நான் கோடிட்டுக் காட்டியபடி உள்ளார்ந்த உற்சாகத்துடன் வழங்க விரும்பினால், காக்கா பாரியா, ஆதி கே. ஈரானியின் முகவரிக்கு, 1956 ஜனவரி இறுதிக்குள் அனுப்பவும். மேலும் அனுப்ப முடிந்தால், அனுப்பவும்; குறைவாக இருந்தாலும் அது குறையல்ல. ஐந்து ரூபாய் கூட உதவும். நீங்கள் பங்களிக்கும் தொகையைப் பொருட்படுத்தாமல், எனது பணியை நீங்கள் சமமாகப் பகிர்ந்து கொள்வீர்கள். ஆனால், நீங்கள் அதிகமாக வழங்கும் வாய்ப்பும், வசதியும் படைத்தவர்களாக இருந்தால், குறைவாக அனுப்ப நினைக்காதீர்கள்; அனைத்து பங்களிப்பாளர்களும் எனது பணியை சமமாகப் பகிர்ந்து கொள்வார்கள் என்ற எண்ணத்தில், நீங்கள் ஏன் அதிகமாக வழங்க வேண்டும் என்று மட்டும் நினைக்காதீர்கள்!

1923ஆம் வருடம் நான் முதன்முதலில் மெஹராபாத்தில் கால்களை வைத்தேன். முப்பத்திரண்டு வருடங்களுக்கு முன்னர், என்னிடம் எதுவும்

**இல்லை. அந்த நேரத்தில், நஸர்வான் ஸட்டா, காக்கா சிஞ்சோர்கர் இருவரும் பிறரிடமிருந்து பணம் வாங்கி எனக்குக் கொடுத்தார்கள். அப்போது நான் நிறுவிய பிரேம் ஆசிரமம், பள்ளிக்கூடங்கள், தர்மசாலா போன்றவற்றிற்காக அனைத்தையும் செலவு செய்தேன். இங்கே, நான் எனது பெருந்தன்மையை அறிவிக்கிறேன். நான் எனக்காக எதையும் செலவு செய்யவில்லை. என்னிடம் பணத்திற்கு மதிப்பும் இல்லை. நான் இதுவரை சுமார் ஒரு கோடி (நூறு லட்சம்) ரூபாய் செலவு செய்திருக்கலாம். அதையும் மீறி இன்று என்னிடம் எதுவும் இல்லை. கொடுக்க முடியாவிட்டால், கவலைப்பட வேண்டாம். ஆனால் அன்பையும் பணத்தையும் கலந்து குழம்பிவிடாதீர்கள். என் மீதான அன்பு உங்கள் இதயங்களில் இருக்க வேண்டும். என்னை நேசிப்பதை மட்டும் நிறுத்தி விடாதீர்கள். மேலும் கோடி பணம் கொடுத்தால் நீங்கள் 'நான்' ஆகிவிடலாம் என்று நினைக்காதீர்கள்! அன்பினால் மட்டுமே கடவுளாக முடியும்.**

**மேலும் ஒரு விஷயம். நானே 'அந்த'க் கடவுள் என்று உங்களிடம் கூறிக் கொண்டிருக்கிறேன். ஆனால் நான் உங்களிடையே இருப்பதால், நான் நடைமுறைக்கு உகந்தாற்போல் இருக்க வேண்டும். ஒவ்வொரு நிமிட விவரங்களையும் நான் கவனிக்க வேண்டும். சகவாச நிகழ்ச்சிகளுக்காக ரூ.30,000 பங்களித்தவர்கள் என்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். பெறப்பட்ட பங்களிப்புகள் மற்றும் செலவுகளின் பட்டியல், முன்பு திட்டமிட்டபடி பங்களிப்பாளர்களுக்கு மட்டுமின்றி இங்கு இருக்கும் அனைத்து நபர்களுக்கும் அனுப்பப்படும்.**

**இப்போது ஏழைகளுக்கான நிகழ்ச்சி தொடங்கும். என்னுடன் இருங்கள்; நிகழ்ச்சி நிறைவடையும் வரை, நேற்று அறிவுறுத்தியபடி நேர்மையாக கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் மொழியுங்கள். எண்ணங்கள் வரட்டும், ஆனால் கடவுளின் பெயரை மட்டும் திரும்பத் திரும்ப மொழியுங்கள். இன்று மதியம் மூன்று மணிக்கு முன்பு, மெஹராபாத் மலையில் ஒன்று திரளுங்கள். இறுதியில் எனது பௌதீக உடல் உள்ளடங்கும் இடத்தை நான் உங்களுக்குக் காண்பிப்பேன்.**

கடந்த பல ஆண்டுகளாக தமது தூக்கமின்மையை பாபா குறிப்பிட்டார், **"என்னுடன் இருக்கும் இரவு கண்காணிப்பாளர்களுக்கு இது தெரியும். அவர்கள் எனது கால்களை அழுத்திக் கொண்டிருந்ததால், நான் விழித்திருந்ததை அவர்கள் அறிவார்கள்."**

தனது இரவு கண்காணிப்பாளரான பாவ் கல்சூரியை அழைத்து, பாபா அவரை அறிமுகப்படுத்தினார், **"அவர் எம்.ஏ. பயின்று விவசாயத்தில் பட்டம் பெற்றவர், என்னை மிகவும் நேசிக்கிறார், ஆழ்ந்த தூக்கத்தில் கூட எப்போதாவது எனது பெயரைக் கூறுகிறார்!"**

காலை 9:00 மணிக்கு பாபா ஏழைகளின் நிகழ்ச்சி நடைபெறவிருந்த துனிக்கு அனைவருடனும் சென்றார். தச்சு வேலை புரியும் பாபு, இரவில் கட்டி

எழுப்பிய பிரத்யேக மேசையை பெண்டு வடிவமைத்திருந்தார். ஏழைகள் ஏறிச் செல்வதற்குப் படிக்கட்டுகளும், கீழே தண்ணீர் வெளியேறுவதற்காகக் கட்டப்பட்ட வடிகால் வசதியும் இருந்தது. கிட்டத்தட்ட 200 ஏழைகள் ஒன்றுதிரண்டனர். பாபா மேசைக்கு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார், ஏழைகள் ஒருவர் பின் ஒருவராக படிகளில் ஏற, பெண்டு ஒரு பெரிய தகர கோப்பையில் பாபாவிடம் தண்ணீரையும், பாதிரி சோப்பையும் வழங்கினர். பாபா ஒவ்வொருவருடைய கால்களையும் கழுவி, எரச்சின் கையிலிருந்த துண்டால் துடைத்தார். பாபா அவர்கள் கால்களில் தலைவணங்கிய பின்னர், ஒவ்வொருவருக்கும் நான்கு ரூபாய் அன்புப் பரிசாக வழங்கினார்.

**'ஏழைகளுக்கான நிகழ்ச்சியின் முழு நேரத்திலும், கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிவதன் தொடர்ச்சியான தாளத்தில் தடங்கல் ஏற்படக்கூடாது'** என்று அவர் அடிக்கடி அனைவருக்கும் அறிவுறுத்திய போதிலும், பாபா, ஒரு கட்டத்தில், திடீரென நிகழ்ச்சியினிடையே நிறுத்துமாறு சைகையால் தெரிவித்தார். தன் முன் நின்றுகொண்டிருந்த ஏழையைச் சுட்டிக்காட்டி, பாபா அவரை அறிமுகப்படுத்தினார். அவர் சத்ய மாங், முன்னாள் கொலை, கொள்ளைக்காரன்; பாபா அடிக்கடி கூறிய கதை. சத்ய மாங் கடினமான காலங்களைக் கடந்து, வறுமையில் வாடினாலும், அவர் பாபாவிற்கு அளித்த வாக்குறுதியில் நேர்மையாக இருந்து, ஒரு கொள்ளையிலும் ஈடுபடவில்லை. பாபா, தனி நபர்களிடம் கொண்டு வந்த அற்புதமான மாற்றத்திற்கு அவருடைய வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு. பாபா அவரைப் பற்றி அங்கிருந்த அனைவருக்கும் அறிவித்தார், மேலும் கிராமப்புறங்களை பயமுறுத்திய ஒரு கடினமான குற்றவாளி, பாபாவின் அன்பின் மூலம் எவ்வாறு சீர்திருத்தப்பட்டார் என்பதை அவர்கள் தங்கள் கண்களால் காண நேர்ந்தது.

நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா தமது அறைக்குச் சென்று, நஸர்வான் ஸட்டாவுடன் சில விஷயங்களைப் பற்றி விவாதித்தார். விரைவில் பாபா வெளியே வந்து, தொலைக்காட்சி திரைப்படத்திற்காகத் தமது எழுத்துப்பலகையைப் பயன்படுத்தினார். பாபா, போதும் என சைகையால் கையை உயர்த்தும் முன்னர், அந்த ஒளிப்பதிவாளரால் பல்வேறு கோணங்களில் பாபாவின் செய்கைகள் படமாக்கப்பட்டன. பாபா, டான் ஸ்டீவன்ஸிடம் அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்வதற்காக எழுத்துப் பலகையைக் கொடுத்து, **"அடுத்த முறை டான் ஏதாவது பத்து நிமிடம் ஆகும் என்று கூறினால், அவர் முப்பது நிமிடத்தைக் குறிப்பிடுகிறார் என்று எனக்குத் தெரியும்!"** என்று கேலி செய்தார். 16 மிமீ கருப்பு-வெள்ளைத் திரைப்படம் பின்பு கலிஃபோர்னியா தொலைக்காட்சி நிறுவனத்தால் 'கேவல்கேட் ஆஃப் புக்ஸ்' (CAVALCADE OF BOOKS) என்ற நிகழ்ச்சியில் பொதுமக்களுக்காக ஒளிபரப்பப்பட்டு, 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) மதிப்பாய்வு செய்யப்பட்டது.

பாபா, சகவாசக் குழுவை மதிய உணவுக்கு அனுப்பிவிட்டு, மீண்டும் தனது அறைக்குச் சென்று, உணவு உண்டு, பின்னர் அவர் சமையலறைக்குச்

சென்றார்; அங்கு, சகன், ஷஹஸ்த்ரபுத்தே இருவரும் உணவு ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்தனர். பாபா அங்கிருந்த பத்து நிமிடத்தில் சமையலறையில் பணிபுரியும் அரன்காவ்ம் சேவகர்களுக்கு உணவு பரிமாறினார். சகவாசக் குழுவிற்கு நீராட, உணவு, தேநீர் போன்றவற்றிற்கு முதல் தர வசதிகள் வழங்கப்பட்டன. பெரிய சமையல் பாத்திரங்களை சுத்தம் செய்தல், பலருக்கு உணவு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள், நன்கு பராமரிக்கப்பட்ட இயந்திரத்தின் துல்லியமான இயங்குமுறை மற்றும் துரிதத்தைப் போலத் தொடர்ந்தன.

பாபா அங்கிருந்து குழு ஏற்கனவே கூடியிருந்த மண்டபத்திற்குள் நுழைந்தார். பந்தலில் சிலர் இரவில் சீட்டு விளையாடுவதாக ஒருவர் புகார் கூறியதற்கு, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**ஒருவரின், கடவுள் மீதான அன்பு மற்றும் ஏக்கத்திற்கும், சீட்டு விளையாடுவதற்கும் ஏதேனும் சம்பந்தம் உள்ளதா?**

"**மக்கள் விளையாடுவதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்கான எந்தக் காரணமும் எனக்குத் தெரியவில்லை. ஷம்ஸ்-இ-தப்ரிஸ்** (SHAMS-E-TABRIS) **அவரது சீடர் ரூமியுடன் சதுரங்கம் விளையாடுவதை மிகவும் விரும்பினர். ஒருமுறை, ரூமி ஆட்டத்தில் தோல்வியடைந்த விரக்தியில், 'நான் மீண்டும் தோல்வியுற்றேன்!' என்று குரல் எழுப்ப, 'இல்லை, இல்லை, நீங்கள் வெற்றி பெற்றீர்கள்!' என்று ஷம்ஸ்-இ-தப்ரிஸ் பறைசாற்றிய அடுத்த கணமே, ரூமி இறை உணர்வை அடையப் பெற்றார்.**"

மில்ட்ரெட் கைல் (MILDRED GYLE) அமெரிக்காவில் பல மாதங்களுக்கு முன்பு காலமானார், மேலும் அவரது 'அஸ்தி' எலிஸபெத்தால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது. அன்று பிற்பகல் 2:30 மணிக்கு, பாபா, காரில் மேல்மலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சகவாசக் குழு வருவதற்கு முன்பு, பாபா அந்த அஸ்தியை அவரது எதிர்கால சமாதிக்கு அருகில் அமைந்த கல்லறை ஒன்றில், டான் ஸ்டீவன்ஸ் முன்னிலையில் கீழே வைத்தார்.

பிற்பகல் 2:45 மணியளவில், முழுக் குழுவும் மேல்மலையில் கூடியது. பாபா சுமார் பதினைந்து நிமிடங்கள் மகளிர் விடுதியின் ஒரு பகுதியில் தன்னை சூழ்ந்திருந்த கூட்டத்தினருடன் அமர்ந்து, பழங்கால சம்பவங்களை நினைவு கூர்ந்தார்: **பிரேம் ஆசிரம நாட்களில் சோட்டா பாபா கடவுளால் ஆட்கொள்ளப்பட்டதை அவர் விளக்கினார். தெய்வீக அன்பால் உணர்ச்சிவசப்பட்டு, சிறுவன் நான்கு நாட்களாக சுயநினைவின்றி இருந்தான். பாபா அறிவுறுத்தியபடி நான்காவது நாளில் 'எனிமா'** (ENEMA) **வழங்கப்படாவிட்டால், அவன் உயிரைத் துறந்திருப்பான்** என்று கூறினார். **சோட்டா பாபா தனது இயல்பான சுயநினைவுக்குத் திரும்பியதும், பாபாவைத் தவிர வேறு எதையும் காணாத அந்த ஆனந்த நிலையிலிருந்து, பாபா ஏன் தன்னை கீழே எடுத்துச் சென்றார் என்று கேட்டு, மன்றாடி, அழுது புலம்பிக்கொண்டிருந்தான்.**

பாபா தொடர்ந்து கூறினார், "**கடவுளோடு ஐக்கியம் என்பது மிகவும் கடினம். ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நுழைந்து, மூன்று நாட்கள் இதர அனைத்து ஆன்மீகத் தளங்களையும் மறந்தவராக தெய்வீக ஆனந்தத்தில் ஒன்றியிருப்பவர், நான்காவது நாளில் சுயநினைவை திரும்பப் பெறாத பட்சத்தில் அவர் உடலைக் கைவிடுகிறார். ஆனால் நான்காவது நாளில் சுயநினைவுக்கு திரும்பும் ஒருவர் உண்மையான மஜ்ஜூப்பாக மாறுகிறார். சாதாரண மனிதர்களைப் பொறுத்தவரை, இந்த உலகத்துடனான இணைப்பு மரணத்தால் துண்டிக்கப்படுவதில்லை. உதாரணமாக, ஓடும் ரயிலில் பிரேக்கை அழுத்துவதால் அது, உடனடியாக நின்றுவிடாமல், தொடர்ந்து சென்று இறுதியில் நிற்க சில நிமிடங்கள் ஆகும்.**

"**ஒருமுறை, கைக்கோபாத் தனது சுயநினைவை இழந்தார். அவரது உடல் முற்றிலும் வியர்வையால் நனைந்தது. டெஹ்ரா டூன் மற்றும் மஹாபலேஷ்வரிலும் அவருக்கு பல அனுபவங்கள் இருந்தன.**"

பாபா தொடர்ந்தார், "**என்னை எனது சுய ரூபத்தில் பார்க்க முயற்சி செய்யுங்கள். முன்பு நான் மிகவும் மெலிந்து இருந்தேன், ஆனால் என் உடலின் நெகிழ்வுத் தன்மையுடன் சுறுசுறுப்பாக இருந்தேன். நான், கடுமையான குளிரிலும், அதிகாலை நான்கு மணிக்கு எழுந்திருப்பதை வழக்கமாகக் கொண்டேன். சத்ராவும் பைஜாமாவும் மட்டுமே அணிந்திருந்தேன். அப்போது மெஹராபாத்தில் பல்வேறு அமைப்புகள் இருந்தன, பொதுவாக நான் ஜலாலி** (சீற்றமான) **மனநிலையில் காணப்பட்டேன். காரணம் இருந்தாலும், இல்லாமலிருந்தாலும், நான் பிறரை அறைவது என்னில் ஒரு பழக்கமாக இருந்து வந்தது. ஒருமுறை, பருமனாகவும், பலமாகவும் இருந்த புவாஸாஹேப் நான் அறைந்ததில் கீழே வீழ்ந்தார், ஆதி சீனியர், ஸரோஷ் மற்றும் பலர் அதே முறையில் எனது சீற்றத்திற்கு ஆளாயினர்.**"

இதற்கிடையில், பைய்யா பாண்டே சில நிமிடங்களுக்கு ஒருமுறை தனது கேமராவில் படம்பிடித்த போது பாபா சிணுசிணுத்துக் கொண்டிருந்தார், "**இந்தப் பாண்டே என்னை நிம்மதியாக இருக்க விடமாட்டார். ஆந்திராவிலும், ஒரு சிறுவன்** (பி. நாராயண ஸ்வாமி) **எங்கும் என்னைப் பின்தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகைப்படங்களை எடுத்தார்.**"

அப்போது பாபா அங்கிருந்து குழுவுடன் சமாதியை நோக்கிச் சென்றார். பாபா நீர்த்தொட்டி கட்டிடத்தில் ஏகாந்தவாசம் மேற்கொண்ட கிழக்கு அறையைச் சுட்டிக்காட்டினார். அங்கிருந்து, அனைவரும் பாபாவின் டின் கேபினைப் பார்வையிடச் சென்றனர். பாபா, அங்கேயும் ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையில், 'சும்' (CHUM) என்ற நாய், மண்டலியைக் கூட அணுக விடாமல் கண்காணித்த விதத்தை எடுத்துரைத்தார். ஒரு மாடு புல் மேய்வதற்காக அருகில் வந்தபோதும், சும் குரைத்து அதைத் தடுத்தது. பாபா தனது உணவிலிருந்து சும்மிற்கு உணவளித்ததாகக் கூறினார்.

பத்து குழுக்களாகக் கூட்டம் பின்பு சமாதிக்குள் அழைத்துச் செல்லப்பட்டது, அங்கு பாபா, எரச்சுடன் நின்றுகொண்டிருந்தார். 1927இல் பாபா, இங்கு ஆறு மாதங்கள் ஏகாந்தவாசத்தில் இருந்ததையும், 24 மணி நேரத்தில் இரண்டு முறை பாபாவின் காஃபியைக் கொண்டு வந்த லாஹு, வரும் வழியில், அதில் பாதியை அவன் அருந்தியதையும், எரச் சில வார்த்தைகளில் விளக்கினார்.

தொடர்ந்து குழு மூங்கில் கூண்டு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டது, அங்கு 1940-41இல், பாபா, மண்டலியில் எவரும் தனது நிழலைக் கூட பார்க்க அனுமதிக்காமல், மிகக் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொண்டார். பாபாவைப் பார்க்காமல், மூங்கில் திரையில் அமைக்கப்பட்ட ஒரு சிறிய ஜன்னலிலிருந்து எழுத்துக்களைப் படிக்க விஷ்ணு மட்டுமே அனுமதிக்கப்பட்டார்.

பாபா மாலை சுமார் 4:15 மணிக்கு மேல்மலையிலிருந்து கீழே வந்தார். மண்டபத்தில், ரவிகாந்த் ராவல் நான்கு திருடர்களைப் பற்றிய தனது கதையைத் தொடர்ந்தார்; மேலும் கராச்சியைச் சேர்ந்த ஆதி. கே. அர்ஜனியும் கதை ஒன்றை விவரித்தார். மேற்கத்திய நாடுகளிலிருந்து எலிஸபெத், நோரினா, கிட்டி மற்றும் பிற அனைவரின் அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல் மற்றும் அன்பை பாபா விளக்கினார். பின்னர் அவர் தரப்ஷா உம்ரிகரிடம், "**எனது காதைப் பிடித்துத் திருகுங்கள்** (பொதுவாக ஒரு குறும்பு குழந்தைக்கு வழங்கப்படும் தண்டனை)!" என்றதும், பருமனான உம்ரிகர் மிகவும் சிரமப்பட்டு எழுந்து நின்றார்.

"**நேற்று இரவு மீண்டும் பாலாடைக்கட்டியை உண்டீர்களா?**" பாபா மின்னும் கண்களுடன் அவரிடம் வினவினார்.

உம்ரிகர் சிரித்துக்கொண்டே பாபாவின் காதுகளைத் திருகினார். பாபா மகிழ்ச்சியடைந்து, "**கீழ்ப்படிதல் சுலபமானது அல்ல. நீங்கள் அனைவரும் கூப்பிய கரங்களுடன் என்னிடம் வந்து செல்கிறீர்கள். இது உங்கள் அன்பைக் குறிக்கிறது. ஆனால் கீழ்ப்படிதல் முற்றிலும் வேறுபட்டது. அது அவ்வளவு எளிதானது அல்ல. நான் இப்போது உங்களிடம் சாலையில் முற்றிலும் நிர்வாணமாக நடக்கச் சொன்னால், அதைச் செய்வது உங்களுக்குக் கடினமாக இருக்கும்.**"

பாபா மாலை 4:45 மணிக்கு மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஒவ்வொரு நாளும் பாபா அங்கிருந்து சென்ற பின்னர், உரையாடல் எப்பொழுதும் அவரை மையமாகக் கொண்டதாகவே இருந்தது. அது ஓர் அற்புதமான நேரம், ஆண் மண்டலி இரவும் பகலும் உழைத்தாலும், பாபாவின் அருளால் அவர்கள் ஒருபோதும் சோர்வடையவில்லை.

அன்று இரவு குஜராத்தி குழுவினர் பலவிதத்தில் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர். ஜால்பாய் மற்றும் டாக்டர் அப்துர் ரஹ்மான் ஆகியோரின் நகைச்சுவை கதைகளைக் கேட்பதற்காக ஒரு பெரிய கூட்டம் இருவரையும் சூழ்ந்துகொண்டது. பச்சூபாய், ஹரிபாய் பட்டேல் ஆகியோர் தங்கள் இசை நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தனர். ஹோஷங் தாதாசாஞ்சி, தாரா தாதாசாஞ்சி (அர்னவாஸின் சகோதரர்), ஜால் தஸ்தூர் மற்றும் சிலர் சீட்டு

விளையாடுவதில் மூழ்கியிருந்தனர். மினூ கராஸ், ஆதி துபாஷ், தாதி மேத்தா மூவரும் தரப்ஷாவை கேலியும் கிண்டலும் செய்து நன்றாக மகிழ்ந்தனர்.

பூனாவைச் சேர்ந்த கே.எம். மேடோன் (K.M. MADON) பத்து வருடங்களுக்கும் மேலாக பாபாவின் தொடர்பில் இருந்தார். அவர் ஒரு வேடிக்கையான, குறுகிய உருவம், பார்சி இனத்தைச் சார்ந்தவர், எப்பொழுதும் பரந்த தொப்பி ஒன்றை அணிந்திருந்தார். மேடோன், தனது மனைவிக்கு அஞ்சுவதாக ஒருமுறை பாபாவிடம் ஒப்புக்கொண்ட நாளிலிருந்து, பாபா அவரைக் கிண்டலும் கேலியும் செய்து மகிழ்ந்தார். சகவாச நாட்களில், மேடோன் சில ஆண்களுக்கு (அவர்களது நோய் எதுவாக இருந்தாலும் சரி!) அவர்களின் கைகால்களை ஒரு தைலத்தால் மஸாஜ் செய்து வந்தார்; அதை அவர் 'ஆச்சர்ய மலம்' (WONDER BALM, அதிசய தைலம்) என்ற பெயரில் அழைத்ததால் - அவருக்கு 'பாம்வாலா' (BALMWALA) என்ற பட்டம் வழங்கப்பட்டது.

டாக்டர் தேஷ்முக் சகவாச மாதம் முழுவதும் மெஹராபாத்தில் இருந்தார். இரவு 8:00 மணிக்கு தூங்கச் செல்வது வழக்கம்; மேலும் அவர் சில அன்பர்களை அதிகாலையில் பஜனைக்காக எழுப்புவதையும் பழக்கமாகக் கொண்டார். பிற அனைவரும் தாமதமாகத் தூங்கச் சென்றதால், ஒருமுறை, டாக்கே சீற்றமடைந்து, தேஷ்முக்கிடம், "அதிகாலை 3:00 மணிக்கு பஜனை பாட வேண்டும் என்பது பாபாவின் உத்தரவா? அது பாபாவின் விருப்பம் இல்லை என்றால், பிறரைத் தொந்தரவு செய்ய உங்களுக்கு உரிமை இல்லை" என்று கூறினார்.

குஜராத்தி குழுவில் கிட்டத்தட்ட 100 நபர்கள் இருந்தனர், ஒவ்வொருவரிடமும் அவரவர் சொந்த கதை இருந்தது. ஆனால் ஒவ்வொருவரையும் பற்றி காலம் என்ன எழுத முடியும்? அனைவரும், தவிர்க்க முடியாத 'குடிகாரர்கள்' என்பதை உறுதிப்படுத்தியது போதுமானது.

1955 நவம்பர் 7 திங்கட்கிழமை, காலை 8:00 மணிக்கு மெஹராஸாத்திலிருந்து எரச், காக்கா இருவருடன் பாபா மெஹராபாத் வந்தார். குமார், கிஷன் ஸிங் இருவரும் நிகழ்ச்சிக்காக டெஹ்ரா டூனிலிருந்து வந்தவர்கள், மெஹராஸாத்தில் தங்கியிருந்தனர். பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஆதி ஜூனியர், ஃபிரான்சிஸ், டான் ஸ்டீவன்ஸ் ஆகியோர் எல்லோரா குகைகளில் இரண்டு நாட்கள் தங்குவதற்காக நரிமனின் காரில் அவரது ஓட்டுருடன் அன்று அதிகாலை புறப்பட்டுச் சென்றனர்.

பாபா தனது அறையில் பெண்டு, பாதிரி, விஷ்ணு ஆகியோருடன் சிறிது நேரம் கலந்துரையாடி, பின்பு சகவாசக் குழுவை சந்திக்க மண்டபத்திற்கு வந்தார். **"நேற்றிரவு தூங்காதவர்கள் எழுந்து நிற்க வேண்டும்"** என்று கேட்டுக்கொண்டதும், மினூ கராஸ், ஆதி துபாஷ் இருவரும் உடனடியாக

மீண்டும் எழுந்து நின்றனர். பாபா உடனே, **“நீங்கள் இருவரும் இரவில் ஒருபோதும் தூங்குவதில்லையா?”** என வினவினார்.

தாதி மேத்தா, “இருவரும் நன்றாகத் தூங்குகிறார்கள், பாபா!” என்றார்.

அனைவரும் சிரித்தனர்; பாபா, ஆதி துபாஷிடம், **“மினூவின் நெருக்கம் உங்களை பாதித்ததா? தூங்கவில்லை என்றாலும், உங்கள் உடல்நிலை நன்றாக இருப்பதாகத் தெரிகிறது, அதனால் கவலைப்பட ஒன்றுமில்லை. உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், நீலுவைத் தொடர்பு கொள்ளுங்கள்”** என்று கேட்டுக்கொண்டார்.

ரவிகாந்த் ராவல் எழுந்து நின்ற போது, பாபா கூறினார், **“நீங்கள் இரவு முழுவதும் விழித்திருந்திருக்க வேண்டும்,** (நான்கு புத்திசாலி திருடர்களின்) **கிட்டத்தட்ட முடிவில்லாத உங்கள் கதையை முடிக்க ஒரு வாய்ப்பை எதிர்நோக்கி இருந்திருக்க வேண்டும்!”**

ராவல் உடனே, “இல்லை, பாபா, நீங்கள் எப்பொழுதும் என் அருகில் இருப்பதை உணர்ந்ததால் என்னால் தூங்க முடியவில்லை.”

பாபா மறுபடியும் கேட்டதற்கு, உடல்நலம் சீரில்லாமல் இருந்த அன்பர்கள் எழுந்து நின்றனர். பாபா அவர்களிடம், **“ஹோமியோபதியில் பழகியவர்கள் பாதிரியின் மருந்தை சாப்பிட வேண்டும்; அலோபதி சிகிச்சை எடுத்துக் கொள்பவர்கள் நீலுவைத் தொடர்புகொள்ள வேண்டும். உங்கள் ஆரோக்கியத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்; இந்த சகவாசத்தால் முடிந்தவரை முழு பலனை அடையப் பெறலாம்.”**

மேடோனின் ‘ஆச்சரியத் தைலம்’ என்ற தலைப்பு எழுந்த போது, சூழல் மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்பட்டது. கிருஷ்ணாஜி, “அவருடைய தைலத்தால் எனது சளி முற்றிலும் மறைந்தது” என்று அறிவித்தார்.

பாபா கேலி செய்தார், **“உண்மையில் வியப்புக்குரியது! இது சிறிதளவு மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜலதோஷத்தை அதிகரிக்கச் செய்து, கடுமையாக பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்துகிறது!”**

மகிழ்ச்சி ஆரவாரத்தால் மேடோன் சற்றும் பாதிக்கப்படாமல், “எல்லா நோய்களுக்கும் ஒரே அருமருந்து!” என்றார்.

ரவிகாந்த் குறுக்கிட்டு, “எனது முழங்கால்களில் சற்று வலி இருந்தது, ஆனால் நான் மேடோனின் மர்ம தைலத்தைப் பயன்படுத்தியபோது அது நரகத்தைப் போல வலிக்கத் தொடங்கியது!” என்றார்.

**“அதனால்தான் இதற்கு ‘ஆச்சரியம்’ என்று பெயர் வைத்திருக்கிறார்கள்”** என்று பாபா கிண்டல் செய்தார்.

இதர அன்பர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த போது, மேலும் சிரிப்பொலி அதிகரித்தது. சிலர் தைலத்தை விரும்பினர், சிலர் விரும்பவில்லை.

பாபா, **“அற்புதமான பெயர் கொண்ட ஓர் ஆச்சரியமான மருந்து. ஒவ்வொரு நோய்க்கும் அதன் விளைவு அற்புதம்! 25 வருடங்கள் வாழவிருக்கும் ஒரு மனிதரை 25 மணி நேரத்தில் இந்த வாழ்க்கையை விட்டு துரத்திவிடும்!”** என்றார்.

பாபா தொடர்ந்து விளக்கினார்:

**வேடிக்கையான வேளைகளை நான் மிகவும் விரும்புகிறேன், ஆனால் நான் தீவிரமான நேரங்களில் தீவிரமாக இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை, அது காலாதிகாலத்திலிருந்தே அப்படித்தான். இறை உணர்வை அடையப் பெற்றதும், நான் எனது நகைச்சுவை உணர்வைத் தவிர, அனைத்தையும் நித்தியத்தில் விட்டுவிட்டேன். இது குறித்து நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். இது அவதார புருஷரின் லீலை** (இறை நாடகம் அல்லது விளையாட்டு) **என்று அழைக்கப்படுகிறது. அந்த உரையில், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது போன்ற பல விஷயங்களைப் பற்றியும் பேசியிருக்கிறேன். ஒவ்வொரு நொடியும் நான் சிலுவையில் அறையப்படுகிறேன்; ஆனால் எனது மகிழ்ச்சிகரமான, குதூகலமான இயல்புநிலை சொல்லொணா துன்பத்தைத் தாங்க உதவுகிறது.**

**வெளியளவில் என்னுடன் வேடிக்கையாகக் கேலி செய்து பேசும் வேளையில், உங்கள் இதயத்தில் என் மீதான பயபக்தியுடன் இருங்கள். உங்களுக்கு உள்ளார்ந்த மரியாதையும் பயபக்தியும் இல்லை என்றால், நீங்கள் என்னிடமிருந்து மைல் தூரத்தில் இருப்பது நல்லது. நான் நெருப்பு போன்றவன்! நெருப்பு, குளிரை விரட்டி உங்கள் உணவை சமைக்க உதவுகிறது. ஆனால் அதனுடன் விளையாட முயன்றால் அது உங்களைச் சுட்டெரித்து சாம்பலாக்கும். நான் அவதார புருஷர் மற்றும் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்பதை நீங்கள் உள்ளூர உணர்ந்தால், உங்கள் வெளியளவிலான நடத்தை, அந்தப் புரிதலைப் பாதிக்காது. ஆனால், அது குறித்த சரியான உள் புரிதல் உங்களுக்கு இல்லை என்றால், என் மீதான உங்கள் அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்துவதில் பயனில்லை.**

பாபா பின்னர் உபவாசம் மேற்கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேரையும் சந்தித்தார். இரண்டு நிமிட தனிப்பட்ட நேர்காணல்கள் தொடர்ந்தன. பாபா, ஐந்து அன்பர்களில் ஒவ்வொருவருடனும் பேசினார். மேடோன் முதலில் வந்து, பாபாவிடம் தனது சிறிய தைலப் பெட்டியைக் காண்பித்தார். அவர் பாபாவிடம், “எரச்சின் மாமாவின் தொண்டை மிகவும் வலித்தது; அவரால் பேசமுடியவில்லை. பிரபல மருத்துவர்கள் அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய அறிவுறுத்தினர். ஆனால், உங்கள் பெயரை உதட்டில் கொண்டு, அவர் ‘ஆச்சரிய’ தைலத்தைப் பயன்படுத்தினார், குணமடைந்தார்!” என்று கூறினார்.

பாபா அப்போது அறிவுரை வழங்கினார், “**நீங்கள் எனது பெயரை உச்சரிக்க மறந்துவிடாதீர்கள்!**”

பாபா அவருக்கு பைதூலைப் பற்றிய ஒரு கதையை எடுத்துரைத்தார். **பல ஆண்டுகளுக்கு முன்னர் ஈரானில், பைதூல் வேகவைத்த பூண்டு எண்ணெயைப் பயன்படுத்தி நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். பாபாவின் பெயரை உச்சரித்து, சளி, இருமல், நிமோனியா, டைஃபாய்டு, மலேரியா, காதுவலி, கண் நோய்கள் போன்ற அனைத்து**

**வகையான நோய்களுக்கும் ஒரே மருந்தை வழங்கினார், நோயாளிகள் குணமடைந்தனர். அது மட்டுமல்லாமல், கழுதைகள், குதிரைகள் மற்றும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதிலும் அவரது வைத்தியம் தவறவில்லை என்றும் நிரூபிக்கப்பட்டது.**

பாபா, மேடோனிடம், "**இது என்னுடைய அதிசயம் அல்ல, பைதூல் என் மீது வைத்த நம்பிக்கையின் விளைவு**" என்று கூறினார்.

பாபா, சகவாசிகளுடன் நிகழ்த்திய உரையாடலைத் தொடர்ந்து மதிய உணவிற்குச் சென்றார்.

தேநீருக்குப் பிறகு, கீழ் மெஹராபாத் மண்டபத்தில் அனைவரும் ஒன்றுதிரண்ட போது, இசை நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு, பாபா கூறினார்:

**இந்தக் குழுவில் வந்துள்ள அனைவரையும் எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். இப்போது இங்கு நிலவும் சூழ்நிலை முற்றிலும் வேறுபட்டது; அடுத்தடுத்த குழுக்களின் வருகையுடன் அது மாறும். ஆந்திரா குழுவுடன், பகல் நேர நிகழ்ச்சிகள் குறிப்பாக பஜனைகள், கீர்த்தனைகள் மற்றும் ஆரத்திகள் நிறைந்ததாக இருக்கும். ஆனால் பார்சிகள், மனோபாவம், பழக்கவழக்கங்கள் மற்றும் பல நிலைப்பாட்டில் முற்றிலும் வேறுபட்டவர்கள். பார்சிகள் இதயத்தில் மிகவும் நல்லவர்களாக இருந்தாலும், அவர்களின் இயல்பு பல விஷயங்களில் போற்றத்தக்கதாக இருந்தாலும், அவர்களின் பக்தி, வழிபாடு மற்றும் புனிதர்கள், குருநாதர்கள் மீதான மரியாதை ஆகியவை இந்துக்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவை. இந்திய தெற்கு பகுதியிலிருந்து வந்தவர்கள், சாமர்த்தியமானவர்கள், கற்றறிந்தவர்கள் மற்றும் புத்திசாலிகள் என்றாலும், அன்பிலும், பாபாவின் பணியை ஆர்வம், உற்சாகம் மற்றும் நேர்மையுடன் செய்வதிலும் பார்சிகளை மிஞ்சுகிறார்கள், அவர்களுக்கு ஈடுகொடுக்க ஹமிர்பூரை சேர்ந்தவர்களால் மட்டுமே முடியும். ஆந்திராவில், ஒரு** (அரசாங்க) **மந்திரி முதல் ஒரு சாதாரண கூலி வரை, அனைவரும் பாபா அன்பர்களாக உள்ளனர், பாபா பணியை நேர்மையாகச் செய்கின்றனர், கிராமம் கிராமமாக எனது அன்பின் செய்தியை எடுத்துச் செல்கின்றனர். மஹாராஷ்டிரா அன்பர்களும் இந்த விஷயத்தில் பின் தங்கியவர்கள் அல்ல.**

**ஆனால் பார்சிகள் நான் ஒரு ஸொராஸ்ட்ரியன் என்பதில் பெருமை கொள்வதில்லை. ஒரு தீர்க்கதரிசி அவரது காலத்திலும், சொந்த மக்களாலும் அங்கீகரிக்கப்படுவதில்லை, மதிக்கப்படுவதில்லை என்பது உண்மைதான். இது கடந்த காலங்களிலிருந்து நடந்து வரும் உண்மை. ஒவ்வோர் அவதார காலகட்டத்திலும் இதுவே நடந்து வருகிறது.**

**பார்சிகள் என்னைப் பற்றி சிந்திக்கவும், என்னை அறியவும் முயற்சிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்களின் கூடி மகிழ்வுறும் இயல்பும், 'நாளை நடப்பது யாருக்குத் தெரியும்' என்ற மனப்பான்மையும்' எனக்குப் பிடிக்கும். ஆனால், அவர்களில் ஒரு சிலரேனும்,**

**என் மீதும் என் நோக்கத்தின் மீதும் கொண்ட அன்பினால், தைரியமாக வெளியே வந்து, எனது பணியைச் செய்வதானால் அது உண்மையிலேயே அற்புதமாக இருக்கும். அவர்கள் உழைத்து, மகிழ்ந்து, தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கான கடமையைச் செய்யட்டும்; ஆனால், அதே நேரத்தில், அவர்களின் நல்ல அதிர்ஷ்டம் என்னைப் பற்றி ஒருமுறை சிந்திக்க அவர்களுக்கு உதவ வேண்டும்.**

**செய்திகள், சொற்பொழிவுகள், வழிபாடுகள், இசை நிகழ்ச்சிகள் போன்றவை எவரையும் இறுதி இலக்கை அடையச் செய்யாது. இவை அனைத்திற்கும் உள்ளளவில் எந்த மதிப்பும் இல்லை. தேவைப்படுவது இதயம், தைரியம் மட்டுமே. ஹாஃபீஸின் வார்த்தைகளில்: "கடவுளின் அன்பில் தன் உயிரை இழக்காதவன் அதைக் கண்டுகொள்ள மாட்டான்."**

**உயிரைக் கொடுப்பதன் அர்த்தம் என்ன? லட்சக்கணக்கான வீரர்கள் போரில் தங்கள் உயிரைத் துறக்கிறார்கள்; பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஆனால் இதன் பொருள் இதுவல்ல. குருநாதரின் விருப்பத்தை நிறைவேற்றி, படிப்படியாக உயிரைத் துறக்க வேண்டும் என்பதே இங்குக் கூறியிருப்பதன் பொருள்! நான், எனக்குக் கீழ்ப்படிதல் மற்றும் என் மீதான அன்பு பற்றி விளக்கினேன். முற்றிலுமாகப் பின்பற்றினால், அது உண்மையில் உங்களை என்னில் இழக்கச் செய்யும்.**

பார்சி சிறுவர்கள் எவ்வளவு குறும்புக்காரர்களாக இருக்க முடியும் என்பதை விளக்கும் ஒரு கதையை, குஸ்தாஜியிடம் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார் பாபா. குஸ்தாஜி தனது அமைதியான கை சைகைகளுடன், "இரண்டு பார்சி இளைஞர்கள், கடவுள், மேலே இருப்பதாக எடுத்துரைத்து வாதாடத் தொடங்கினர்..." என்று ஆரம்பித்தார்.

இடையே குறுக்கிட்டு, பாபா, **"மேலே', 'கீழே' என்று எதுவும் இல்லை. இங்கே எல்லாமே இறைப் பெருங்கடலாக இருக்கிறது. கடவுள் மட்டுமே எங்கும் இருக்கிறார். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள், சூரிய குடும்பங்கள், எண்ணற்ற பிரபஞ்சங்கள் - அனைத்தும் இந்தக் கடலில் இருக்கும் வெறும் குமிழிகள்."**

குஸ்தாஜி கதையைத் தொடர்ந்து, சிறுவர்கள் சைத்தானை எப்படி சூழ்ச்சியால் விஞ்சினார்கள் என்பதை விவரித்தார். அப்போது பாபா கூறினார்:

**பார்சி இளைஞர்கள் மிகவும் தைரியமாகச் சண்டையிட்டு, சைத்தானை முறியடித்தால் - நீங்கள் என்னை நேசித்து, எனக்குக் கீழ்ப்படிந்து, எக்காரணத்திற்காகவும் என்னைக் கைவிடாமல் இருந்தால், அது உங்களுக்கு எவ்வளவு பெருமையானதாக இருக்கும்!**

**தொடர்ந்து என்னை நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் என்னைக் கண்டுகொள்வீர்கள், எல்லா இடங்களிலும் என்னைக் காண்பீர்கள். பார்சி சமூகத்தில் பிறந்தாலும் எனக்கு எல்லா மதங்களும் ஒன்றுதான். குறைந்தபட்சம் என்னைப் பார்க்காமல் எவரும் இறுதி மூச்சை விடக்கூடாது என்று நான் விரும்புகிறேன். "கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப்**

**படியுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தனக்கென ஒரு பிரதியை வைத்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**உங்களால் அதை வாங்க முடியாவிடில், அதை இரவல் வாங்கி படியுங்கள். உங்களால் படிக்க முடியாவிடில், புத்தகத்தை யாரிடமாவது உங்களுக்காக விளக்கிக் கூறச் சொல்லுங்கள். அந்தப் புத்தகத்தில், இதுவரை வெளிவராத சில ஆன்மீக உண்மைகளை நான் வெளிப்படுத்தியுள்ளேன். இது ஏழு ஆன்மீகத் தளங்கள், இந்த உலகம், கடவுள் மற்றும் 'நான்' ஆகியவற்றைக் கையாள்கிறது. முடிந்தவரை பல இந்திய மொழிகளில் அதன் மொழிபெயர்ப்புகளை வழங்க முயற்சிக்கவும். பல ஐரோப்பிய மொழிகளில் அதன் பதிப்பு மேற்கத்தியர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புத்தகத்தைப் படித்த பிறகு நீங்கள் என்னைப் பார்த்தது போல் உணர்வீர்கள். அது உங்கள் மனதிற்கு மிகுந்த ஆறுதலைத் தரும். நிஜமாவே நான் இதைச் சொல்லியிருக்கக் கூடாது. என்னைப் பார்ப்பது என்பது** (எந்த புத்தகத்தையும் படிப்பதைக் காட்டிலும்) **முற்றிலும் வேறுபட்டது.**

பாபா கூறி முடித்தார்:

**உங்களால் தொடர்ந்து என்னை நினைவில் வைத்துக் கொள்ள முடியாவிட்டால், இரவு தூங்கும் முன், காலையில் எழுந்திருக்கும் முன் குறைந்தபட்சம் எனது பெயரை நினைவில் கொள்ளுங்கள். இதுவும் முடியாவிட்டால், உங்கள் பௌதீக உடலைக் கைவிடுவதற்கு முன்னர், என்னை நினைவில் கொள்ள மறவாதீர்கள். இதை நான் எனது தெய்வீக அதிகாரத்தின் பேரில் கூறுகிறேன்.**

அதைத் தொடர்ந்து பாபா மாலை 4:45 மணிக்கு மெஹராஸாத் புறப்படும் வரை, பச்சூபாய் பாடல்களைப் பாடினார்.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, சகவாச குழுவினர் காலை 8:15 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். சகவாசத்தின் இறுதி நாளான, 1955 நவம்பர் 8 செவ்வாய்க்கிழமை, பாபா, தமது அன்பர்களை வரவேற்கக் காத்திருந்தார். 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' எனும் குரலோசை, சுற்றுப்புறம் முழுவதும் எதிரொலித்தது, அவரது துன்பமும், பேரின்பமும் அதில் ஊடுருவி இருந்தது.

பாபா உடனடியாக, குழுவை ஏகாந்தவாச மலைக்கு அழைத்துச் சென்ற வேளையில், கூழாங்கற்களை கையில் எடுத்து, பாதையின் இருபுறமும் வீசினார். வயதானவர்கள் வேகமாக நடந்து வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தார். முதியவர்களில் எவரேனும் பின்னால் சற்று தொலைவில் வந்ததைப் பார்த்து நின்று, மெதுவாக நடந்தார். பப்பா ஜெஸவாலா, பாபாவின் அருகிலேயே இருந்தார், ஆனால் ஒருமுறை ஸெயிலர் மாமா பின்னால் வெகு தொலைவில் தென்பட்டார்.

பாபா அங்கேயே நின்று, குழுவிடம் கூறினார், **"ஸெயிலர் எனது சிறுவயது தோழனாக இருந்தார், ஆனால் அவர் என்னை நம்பவில்லை.**

**அவருக்கு எனது நிலையைப் பற்றி எதுவும் தெரியாது. அவர் ஒரு விளையாட்டு வீரர், திடகாத்திரமான உடல்; அதே வேளையில் நான் மெலிந்து இருந்தேன். ஒருமுறை நான் அவர் வீட்டிற்குச் சென்றபோது, நட்பு முறையில், தனது பலத்தை என்னிடம் காட்டத் தொடங்கினார். அவரைத் தடுக்கும் நோக்கத்தில் மெதுவாகத் தள்ளினேன், அவர் பத்து கெஜம் தூரத்தில் விழுந்தார்! அந்த கணத்திலிருந்து, அவர் என் மீது நம்பிக்கை கொண்டு, பல வருடங்கள், 'புது வாழ்வு' தொடங்கும் வரை மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தார்.**

**"இப்போது இந்த விளையாட்டு வீரரைப் பாருங்கள்! பப்பாவைப் போன்ற ஒரு முதியவர் என்னுடன் வேகமாகச் செல்கிறார், ஆனால் கப்பலோட்டி (ஸெயிலர்) பின்னால் இருக்கிறார்!"**

டாக்கே வேறொரு திசையை நோக்கி முன்னேறுவதைக் கண்ட பாபா, அவரை அழைத்து, ஒன்றாக இணைந்து செல்லுமாறு அறிவுறுத்தினார். வயதானவர்கள் மெதுவாக மலையேறுமாறு அறிவுறுத்தப்பட்டனர்; மேலும் பாபா, குறிப்பாக, தரப்ஷா உம்ரிகர் மீது கவனம் செலுத்தினார். குன்றின் உச்சிக்குச் சென்றதும், பாபா, அவர் மேற்கொண்ட இரண்டு ஏகாந்தவாசங்களைக் குறித்து விவரித்தார், அதற்காக (1947இல்) இரண்டு அறைகள் அமைக்கப்பட்டன.

சிறிது நேரத்தில் குழு மலையிலிருந்து கீழே இறங்கியது; பாபா, மண்டலி அறையில் அமர்ந்தார், அங்கு அன்பர்களை அவருக்கு மலர் மாலை அணிவிக்க அனுமதித்து, பின்பு வளாகத்திற்கு வெளியே சென்றதும், அனைவரும் பாபாவை நோக்கி அமர்ந்தனர்; ஆனால் பார்சிகள் குறிப்பாக, சற்று மிகையாக குரல் எழுப்பினர். பாபா, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, குஜராத்தி குழுவின் சூழ்நிலை இதர குழுக்களிலிருந்து மிகவும் வித்தியாசமானது என்பதை மீண்டும் வலியுறுத்தினார்: **"இந்த நகைச்சுவை ஆரவாரமும் சலசலப்பும் அடுத்த தெலுங்கு குழுவிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. நீங்கள் சிரிக்கிறீர்கள், நகைச்சுவையாகப் பேசுகிறீர்கள். ஆனால் இந்த மக்களின் இதயங்கள் என்னைப் பார்த்ததும் உருகும், அவர்களின் மௌனக் கண்ணீர் நம் கண்களிலும் கண்ணீரை வரவழைக்கும்! இப்படி, எனக்கு இரண்டு வகையான சூழ்நிலைகளும் பிடிக்கும்.**

**"கங்கா-ஜமுனாவாலாக்கள்** (உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த இந்தி குழு) **இவர்களைவிட வித்தியாசமானவர்களாக இருப்பார்கள்."**

மினூ கராஸ், தரப்ஷா உம்ரிகரை கேலி செய்து கொண்டிருந்தபோது, பாபா, உம்ரிகரை அழைத்து, அருகில் அமர வைத்தார். அவர் மினூவைக் கடிந்துகொள்ளும் விதத்தில், உம்ரிகர் மிகவும் பருமனாக இருந்தாலும் மலை மேல் ஏறியதற்காகப் பாராட்டினார்.

பாபாவைச் சார்ந்தவர்களுக்கான உதவித்தொகைக்கு, தங்கள் பகுதியின் பெண்மணிகள் நன்கொடைகளை வழங்க முடியுமா என்று ஒருவர் கேட்டதற்கு, பாபா, **"யார் ஒருவரும் தங்களால் இயன்றதைச் செய்யலாம் - ஐந்து ரூபாய் முதல் ஐந்து லட்சம் ரூபாய் வரை! நான் வலியுறுத்துவது என்னவெனில், வீடு**

**வீடாக நிதி திரட்ட வேண்டாம் - பிறரை வற்புறுத்தி பணம் அனுப்ப வேண்டாம். அவர்களால் அதை வழங்க முடிந்தால் மட்டுமே, அவர்கள் அதை அனுப்ப வேண்டும், இது தனிப்பட்ட நபரின் விருப்பத்தைப் பொறுத்தது.**"

பாபா மீண்டும் மலையில் மேற்கொண்ட ஏகாந்தவாச நாட்களைப் பற்றியும், அங்கு அவர் பணிபுரிந்த போது எதிர்கொண்ட துன்பங்களைக் குறித்தும் கூறினார். "**உலகத்துக்காக நான் துன்பப்படும் போதெல்லாம், 'சுமை' அதிகமாக இருக்கும் நேரத்தில், அது என் உடலை பாதிக்கிறது. நான் ஏதோ நோயால் அவதியுற்று, அதைக் கடந்து வந்ததைப் போலத் தோற்றமளிக்கிறேன்.**"

அன்று பிற்பகல் மெஹராபாத்தில் ஒரு கவாலி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, அதை அமைதியாகவும் ஆர்வத்துடனும் கேட்குமாறு பாபா அன்பர்களுக்கு அறிவுறுத்தினார். "**நீங்கள் மெஹராபாத்திற்குத் திரும்பிச் சென்று, மதிய உணவை உண்ட பின்னர், எல்லோரும் ஒரு மணி வரை ஓய்வெடுக்க வேண்டும், அப்போது நீங்கள் கவாலி இசையைப் பாராட்டுவதற்கு உகந்த மனநிலையில் இருப்பீர்கள். நீண்ட தூரத்திலிருந்து கவாலி பாடகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்; பாடல்களில் ஆழமான அர்த்தம் உள்ளது. எனவே நீங்கள் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும், தூங்கி விழாதீர்கள்.**"

பாபா தொடர்ந்து விளக்கினார், "**இந்தப் பௌதீகத் தளத்தில், நாம் பௌதீகப் பொருட்களை மட்டுமே பார்க்கிறோம், உணர்கிறோம், சுவைக்கிறோம். உணர்வு நிலையின் மூன்று உலகங்கள் (கோளங்கள்) உள்ளன - பௌதீக உலகம், சூட்சும உலகம், ஆழ்மன உலகம். யாத்ரீகர் ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்லும்போது, அவர் பல அற்புதமான அனுபவங்களைக் கடந்து செல்கிறார். அவரது உணர்வில் ஏற்படும் வளர்ச்சியுடன், அவரை மிகவும் திகைக்க வைத்து மயக்கமூட்டும் பல பொருட்களைக் காண்கிறார், ஆனால் இவை அனைத்தும் மாயை என்பதால் அவர் இருக்கும் மனநிலையில், உண்மையில் ஆன்மீகப் பாதையில் சிக்கிக் கொள்கிறார். அவரால் முன்னோக்கி செல்லவோ அல்லது பின்வாங்கவோ முடியாத சூழ்நிலை.**"

ஆன்மீகப் பாதையின் யாத்ரீகர் ஒருவர் உள் ஆன்மீகத் தளத்தில் சிக்கி, உணர்வை இழந்த மயக்க நிலையில், நான்கு வருடங்கள் மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்த அனுபவத்தை பாபா மேற்கோள் காட்டினார்.

தொடர்ந்து பாபா கூறினார், "**இந்த மாயையிலிருந்து விடுபட ஒரே ஒரு வழி உள்ளது; அதை நான் மீண்டும் கூறுகிறேன், எனது பெயரை உச்சரிப்பது, என்னை நினைவில் கொள்வது, என்னை நேசிப்பது. இது உங்களைக் கடவுளாக்கும்!**"

பாபா குழுவினருக்கு நீலப் பேருந்து, பெண் மண்டலி தங்கும் இடம், மெஹராவின் தோட்டம், வீட்டின் மேல் தளத்தில் அமைந்த அவரது அறை

போன்றவற்றைக் காட்டினார். 'சுற்றுப்புறமும், வீடும் எவ்வளவு அழகாக இருக்கின்றன' என்று யாரோ ஒருவர் கூறியபோது, பாபா கூறினார்: **"எல்லா வகையான சுற்றுப்புற சூழ்நிலைகளையும் என்னால் சமமாகப் பாராட்ட முடியும். மரத்தின் கீழ் திறந்த வெளியில் தூங்குவதைப் போலவே, விசாலமான பங்களாவில் ஒரு நல்ல அறையை ஆக்கிரமிப்பதும் எனக்கு ஒன்றுதான். இப்போது நீங்கள் இங்கே எல்லாவற்றையும் நல்ல தரமானதாகப் பார்க்கிறீர்கள்; ஆனால் பழங்கால நாட்களில் மெஹராபாத்தில், நான் மிகவும் கடினமும், சிரமமுமான முறையில் வாழ்ந்துவந்தேன். நான் ஆயிரக்கணக்கான மைல்கள் கால் நடையாக, பேருந்து அல்லது ரயிலில் பயணித்து, ரயில் நிலைய நடைமேடைகளில் ஓய்வெடுத்தேன்.**

**"ஒருமுறை, குஜராத்தில் சுற்றுப்பயணத்தின் போது, ஒரு திருடன், காவல்துறையினரின் பிடியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, என் அருகில் படுக்கையில் சாய்ந்து, எனது போர்வையைப் போர்த்திக்கொண்டு தூங்குவது போல நடித்தான்."**

அதன் பின்பு சகவாச குழு மெஹராபாத் திரும்பிச் சென்றது. அன்று மதியம் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு விஜயம் செய்து, 2:00 மணிக்கு பாபா அங்கு வந்தார்.

மறுநாள் குழு திரும்பிச் செல்வதைக் குறித்து பெண்டுவிடம் ஆலோசனை நடத்திய பின்னர், 2:30 மணிக்கு மண்டபத்திற்கு வந்தார். சகவாச குழுவில் சிலர் பிற சத்குருக்கள் மற்றும் துறவிகளின் சமாதிகளிலும் சன்னதிகளிலும் மரியாதை செலுத்த பாபாவின் அனுமதியை நாடியபோது, பாபா இவ்வாறு கூறினார், **"தனிப்பட்ட முறையில், எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை, ஆனால் நீங்கள் எனது மேலங்கியைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு எனக்குக் கீழ்ப்படிந்தால், நீங்கள் உண்மைப்பொருளை அடையப் பெறுவீர்கள். நீங்கள் விரும்பினால் உங்கள் மதத்தைப் பின்பற்ற உங்களுக்கு சுதந்திரம் உள்ளது, ஆனால் அது உங்களை எங்கும் அழைத்துச் செல்லாது. ஆன்மீகம் முற்றிலும் வேறுபட்ட விஷயம், நீங்கள் குருநாதரின் காலடியின் தூசியைப் போல மாறாவிட்டால், விமோச்சனத்திற்கு நம்பிக்கை இல்லை."**

மெஹர் ரிட்ரீட் (MEHER RETREAT) கட்டிடத்தின் மேற்கு அறையில் கவாலி நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன, அங்கு கீழ் மெஹராபாத்தை விட நன்றாகக் கேட்க முடியும். நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அனைவரும் மூன்று மணிக்கு முன்னதாகவே மேல்மலைக்குச் சென்றனர்.

கவாலி பாடலைக் கேட்டு அலோபா உணர்ச்சிவசப்படுவது வழக்கம் ஆதலால் பாபா, பைதூலின் மருமகன் பெஸியிடம் அவரைக் கண்காணிக்குமாறு அறிவுறுத்தினார். ஆனால் இசை நிகழ்ச்சி தொடங்கியபோது, அதற்கு நேர்மாறாக நடந்தது. பெஸி தானே தனது கட்டுப்பாட்டை இழக்க, அலோபாவும் வேறு

சிலரும் அவரைப் பாதுகாக்க வேண்டியதாயிற்று. பின்னர், அலோபாவிடம், கவாலி இசையைக் கேட்கும் வேளையில் வழக்கம் போல் உணர்ச்சிவசப்படாததன் காரணம் என்ன என்று பாபா கேட்டதற்கு, அலோபா அவ்வேளையில் பாபாவைப் பார்க்காமல் இருந்ததால் அந்த சூழ்நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டதாக விளக்கினார்.

கவாலி பாடலைக் கேட்டு மிகவும் மனம் நெகிழ்ந்ததாலும், பாபாவை விட்டுப் பிரியும் எண்ணத்தாலும், பெரிதும் பாதிக்கப்பட்ட மற்றுமொரு மனிதர் கேக்கி நலவாலா. கவாலி பாடல்கள் தொடங்குவதற்கு முன்பே, குழு வெளியேறும் முன்னர் எந்த அரவணைப்பும், ஸ்பரிசமும் வழங்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், பாபா அவரையும் மேலும் நான்கு அன்பர்களையும் தழுவி முத்தமிட்டார்.

கவாலி இசை அன்று மாலை வரை தொடர்ந்தது. அதுவே ஒரு வார சகவாச நிகழ்ச்சியின் கடைசி அம்சமாக இருந்தது. மகிழ்ச்சி ஆரவாரங்களுக்கு மத்தியில், பாபா அவர்களிடம் விடைபெற்று மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

மறுநாள் காலையில் அந்தப் பகுதி முழுவதும் சுத்தம் செய்து சீராக்கும் பணி கையில் எடுக்கப்பட்டது. ஒவ்வொரு நபருக்கும் ஒரு போர்வை, மெத்தை மற்றும் கட்டில் வழங்கப்பட்டது, அனைவரும் சென்ற பிறகு, போர்வைகள் சுத்தம்செய்து உலர்த்தப்பட்டன. அந்த மாதத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் மிகச் சிறப்பாக நடந்தன. சேவகர்கள் மற்றும் வெளியூர் பக்தர்களின் உதவியால் அனைத்து ஏற்பாடுகளும் சுமூகமாக நடைபெற்றன.

9ஆம் தேதி பாபா மெஹராபாத்திற்கு வரவில்லை. அன்று ஆதி ஜூனியர், ஃபிரான்சிஸ் பிரபாஸோன், டான் ஸ்டீவன்ஸ் மூவரும் எல்லோரா குகைகளுக்குச் சென்று அஹமதுநகர் திரும்பி வந்தனர்; மறுநாள் காலை நரிமன், மெஹர்ஜி, விஷ்ணு ஆகியோருடன் மெஹராஸாத்திற்குச் சென்றனர். பாபா அவர்களுடன் அனைத்து விஷயங்களையும் விவாதித்து, பின்னர் அவர்களுக்கு மெஹராஸாத் நிலத்தை சுற்றிக் காண்பித்தார். எரச் அவர்களை ஏகாந்தவாச மலைக்கு அழைத்துச் சென்றார். டான், பாபாவிற்கு அன்புப் பரிசாக வழங்கிய பைந்நீல நிறத்திலான மேல்கோட்டை பாபா உடனடியாக அணிந்து, பின்னர் இருவருக்கும் பரிசுகளை வழங்கினார்.

அன்று பிற்பகலில், பாபா மெஹராபாத்திற்கு அழைத்துவரப்பட்டார். மேல் மெஹராபாத் மலையில், அவர் டான் ஸ்டீவன்ஸை அழைத்து, '**சகவாச நிகழ்ச்சிகளை எப்படி ரசித்தீர்கள்**' என்று கேட்டார். டான் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

இங்குத் தங்கியிருந்த இத்தனை நாட்களும், இந்த இடமும், நிச்சயமாக, மிகவும் நம்பமுடியாத ஒன்றாக, மிகவும் அழகானதாக, ஆழ் இதயத்தைத் தொடக்கூடியதாக இருந்ததால், எந்த விதமான உணர்ச்சியால் தூண்டப்பட்ட மனப்பாங்கையும் வெளிப்படுத்துவது எனக்கு மிகுந்த சிரமமாக இருந்தது. இது

எனக்கு எப்பொழுதும் குறிப்பிடத்தக்கதாக, பொருத்தமானதாக இருப்பது போல, பாபாவின் சகவாசத்தில் இருக்கும் பலருக்கும் இது பொதுவானது என்று நான் கருதுகிறேன்: ஒவ்வொருவரும் பேச முடியாமல் வாயடைத்துப் போயினர்; ஒருவர் சிறந்த மனநிலையில் இருந்தாலும் கூட, அவரது தரப்பிலான உரையாடலை பாபாவுடன் தொடர முடியாமல், முழு விரக்தியையும், மனமார்ந்த அரவணைப்பின் உணர்வையும் மட்டுமே, அனுபவிக்க முடிந்தது.

பாபாவின் இருக்கைக்கு அருகில் ஒரு நாற்காலி மீது சிறிய அடுக்குகளாலான காகிதங்கள் வைக்கப்பட்டிருந்தது. சகவாச நிகழ்ச்சிகளைப் பற்றிய டானின் எதிர்வினைகளுக்கு செவிமடுத்த பின்பு, பாபா காகிதங்களை தமது கைகளில் கொடுக்குமாறு சைகையால் தெரிவித்ததும், எரச் அவற்றை பாபாவிடம் ஒப்படைத்தார்; பாபா காகிதங்களை மடியில் வைத்து, புரட்டிய வேளையில், எரச் இவ்வாறு விளக்கினார்: "பல பொது நிகழ்ச்சிகளில் பாபா வழங்கிய பல்வேறு அறிக்கைகளின் தொகுப்பு இங்கே உள்ளது. அவற்றில் சில மிகவும் நீளமானது. கவனமாக சேகரிக்கப்பட்ட இவை அனைத்தும் இதுவரை வெளியிடப்படவில்லை. இதை நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்ல விரும்புகிறீர்களா என்பதை பாபா அறிய விரும்புகிறார். 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் போலவே இதையும் திருத்தம் செய்து, நீங்கள் பொருத்தமாக நினைக்கும் விதத்தில் அதைக் கையாளவும் - 'கடவுள் பேசுகிறார்' புத்தகம் வெளிவந்த பின்னர் இதை ஒரு சிறிய புத்தகமாக உருவாக்கவும் பாபா விரும்புகிறார்."

டான் மீதான பாபாவின் இத்தகைய நம்பிக்கை அவரது இதயத்தைத் தொட்டது: "ஆம், நான் இதைச் செய்ய விரும்புகிறேன்; மிக்க மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

பாபா கூறினார், "**உண்மையில், நீங்கள் அதை ஏதேனும் ஒரு பாணியில் இணைக்க விரும்பலாம் - நான் அதை முழுவதுமாக உங்கள் கைகளில் விட்டு விடுகிறேன் - இந்த சகவாசத்தில் உங்கள் அனுபவத்தைக் குறித்த விளக்கத்துடனும் இணைக்கலாம்.**"

டான் தலையசைக்கவே, பாபா தொடர்ந்தார், "**இது உங்கள் மனதிற்கு இதமளிப்பதாக இருந்தால், கூட்டங்களின் பல்வேறு உரைகளின் நகலை நான் உங்களுக்கு வழங்குவேன், மேலும் நிகழ்வுகளைப் பற்றிய உங்கள் சொந்த விளக்கங்களோடு நீங்கள் அவற்றை பின்னிப் பிணைத்து வடிவம் கொடுக்க முடியும்.**"

டான், "இது ஓர் அற்புதமான யோசனை என்று நான் நினைக்கிறேன், பாபா" என்றார்.

"**உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் ராம்ஜூ அல்லது பால் நாத்துவிற்கு எழுதலாம்**" என்று பாபா முடித்தார்.

இப்படித்தான் '**லிஸன், ஹியுமானிட்டி**' (LISTEN, HUMANITY) என்ற புத்தகம் உருவானது.

மெஹராபாத் மேல் மலையிலிருந்து கீழே வந்தபோது, பாபா அலோபாவிடம், "**இன்று என்ன உணவு உண்டீர்கள்?**" என வினவினார்.

"இன்று நாங்கள் ஒரு சிறப்பான மதிய உணவை உண்டோம்; சாதம், கூட்டு, அப்பளம், நெய் மற்றும் ஊறுகாய்!" என்று அலோபா பதிலளித்தார்.

அலோபாவின் அப்பாவித்தனமான விளக்கம், பாபாவிற்குப் போதுமான ஆயுதமாகப் பயன்பட்டது. பெண்டு, பாதிரி, விஷ்ணு, சிது, பாவ் ஆகியோரை அழைத்து, பாபா கடும் கோபமடைந்தார்: "**பன்றிகளான உங்களுக்கு ஏதாவது வெட்கம் மானம் உள்ளதா? நீங்கள் பிறரின் தயவில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து நெய் உண்கிறீர்கள்! சகவாசத்திற்கான செலவுகள் பிறரால் வழங்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

**மதிய வேளையில் வழக்கமான சாதம், பருப்பு, இரவில் சப்பாத்தி, காய்கறி தவிர வேறு எதையும் உண்ண வேண்டாம்.**"

பாபா பிரதான கட்டிடத்திற்குப் பின்னால் நடந்து சென்றபோது, சகவாச நாட்களில் ராஹுரி கேபினில் வைக்கப்பட்டிருந்த முஹமது மஸ்த் திடீரென வெளிப்பட்டு, பாபாவின் கையைக் குறடு போலப் பற்றிக் கொண்டு, அவரை விடாமல், 'தாதாவை'த் தனது அறைக்குள் அழைத்துச் சென்றார். குமார், விஷ்ணு இருவரும் வெளியே நின்ற வேளையில் ஓர் அற்புதமான நிகழ்வைக் காண நேர்ந்தது. முஹமது மஸ்த் ஒளிரும் முகத்துடன், மகிழ்ச்சி பொங்க, பாபாவின் இடது மணிக்கட்டை வலது கையால் பிடித்துக் கொண்டிருந்தார். பாபா, **அவர் அவசரமாக இருப்பதாகவும், உடனடியாகப் புறப்பட வேண்டும்** என்றும் முஹமது மஸ்திடம் விளக்கி, பின்னர் இருவரும் அறையின் வாசலருகே வந்தனர். சில கணங்களுக்குப் பிறகு, முஹமது, பாபாவின் கையை முன்னும் பின்னுமாக அசைத்து, பின்பு, "சரி, சென்று வாருங்கள்" என்றார்.

குமாரும், விஷ்ணுவும், பாபாவின் பின் தலை முடி படிப்படியாக உயர்ந்து, தலையைச் சுற்றிலும் ஒளிவட்டத்துடன் ஒரு குடுமி அல்லது கிரீடமாக உருவெடுத்ததைக் காண நேர்ந்தது. முடி ஒன்றாக அற்புதமான முறையில் வளர்ந்து கதிர்களாக மாறியது. குமார் ஒருவேளை அது அவருடைய கற்பனையாக இருக்கலாம் என்று நினைத்தார். ஆனால் அதற்குப் பிறகு, விஷ்ணு, "பாபாவும் முஹமதும் சேர்ந்து இருந்த போது நீங்கள் எதையேனும் பார்த்தீர்களா?" என்று குமாரிடம் கேட்க, அவர் தான் பார்த்ததை விவரித்தார். விஷ்ணுவும் அதையே பார்த்ததாக உறுதி செய்து, பெருமூச்சு விட்டார்: "இறுதியாக, 30 வருடங்கள் அவருடன் இருந்த காலத்தில், முதல் முறையாக பாபா எனக்கு தரிசனம் வழங்கியுள்ளார் - அதுவும் முஹமது மஸ்தின் தயவால் நிகழ்ந்தது எனலாம்!"

முஹமது மஸ்த்திடமிருந்து விடைபெற்றுச் சென்ற பின்பு, பாபா மறு நாள் ஆரம்பமாகும் அடுத்த குழுவிற்கான ஏற்பாடுகள் பற்றிய விஷயங்களை மண்டலியுடன் விவாதித்து, அன்று மாலை, மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

நவம்பர் 11ஆம் நாள், மெஹராபாத்திற்குச் செல்லும் வழியில், வழக்கம்போல பாபா, குஷ்ரு குவார்ட்டர்ஸில் சிறிது நேரம் நின்றார்.

மெஹராபாத்தில், ஆதி சீனியர், ராம்ஜூ, விஷ்ணு, பெண்டு, பாதிரி, எரச், காக்கா, நரிமன், மெஹர்ஜி ஆகியோர் பாபாவின் நேர்காணல் அறைக்கு அழைக்கப்பட்டனர். டான் ஸ்டீவன்ஸ், ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தின் உரிமைப் பங்கீட்டு ஒப்பந்தங்களின் வரையறைகளை பாபா படிக்கக் கூறி, இதர விஷயங்களைப் பற்றி விவாதித்த பின்பு, மதியம் மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.



மெஹராபாத் ஏழைகளின் நிகழ்ச்சி, நவம்பர் **1955**
(MEHERABAD POOR PROGRAM NOVEMBER 1955)



மெஹராபாத் (MEHERABAD),
நவம்பர் (NOVEMBER) **1955**



மெஹராஸாத் ஏகாந்தவாச மலை, நவம்பர் **1955**
(MEHERAZAD SECLUSION HILL NOVEMBER 1955)

# மெஹராபாத் சகவாசம் - தெலுங்கு

(**The Telugu Sahavas**)

1955 நவம்பர் 11 வெள்ளிக்கிழமை மதியம் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்று எண்பத்தொன்று (181) ஆண்கள் அஹமதுநகருக்கு வந்து சேர்ந்தனர். சகவாசக் குழு தங்கள் பயண உடைமைகளுடன் மெஹராபாத்திற்குச் செல்லவிருந்த பேருந்துகளில் ஏறியபோது, ரயில் நிலையம் பாபாவின் 'ஜெய்' முழக்கங்களால் எதிரொலித்தது; இது வழி முழுவதும் தொடர்ந்தது. 'சகவாச மாதத்தில் நிலவிய அன்பின் இனிமையான சூழல் உண்மையில் விவரிக்க முடியாதது' என்று காலம் களிப்புற்றது.

பெரும்பாலும், குஜராத்தி குழுவினர் பாபாவின் முன்னிலையில் மிகவும் இயல்பாகவும், சுதந்திரமாகவும், நிதானமாகவும் இருந்து, வழிபாட்டு உணர்வுகளை வெளிப்படுத்தவில்லை. தெய்வீக மதுபானம் அதனை வெளிப்படுத்தாமல் உள்ளளவில் இரகசியமாக சுரந்து கொண்டிருந்தது. இருப்பினும், இதர குழுக்களைப் பொறுத்தவரை இது தெளிவாக வெளிப்பட்டது. இது அவர்களின் கண்களில் ததும்பும் கண்ணீர் மற்றும் உணர்வுகள், மொழியும் வார்த்தைகள் மற்றும் செயல்கள் போன்றவற்றிலிருந்து, தெளிவாகத் தென்பட்டது - ஆந்திராவிலிருந்து வருகை தந்த கிட்டத்தட்ட அனைவராலும் எளிதில் இதை உணரமுடிந்தது.

தெலுங்கு குழுவினருக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மண்டலியுடன் பெண்டு கண்காணித்து வந்தார்; அவர்கள் ஒவ்வொரு குழுவின் உணவின் மீதான ரசனை மற்றும் பழக்கவழக்கத்திற்கு ஏற்ப, உணவை வழங்கினர். டாக்டர் கனகதண்டியுடன் ஆந்திராவிலிருந்து சமையல்காரர் ஒருவரை அழைத்துவர பெண்டு ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தார். இதனால், நவம்பர் 11ஆம் தேதி முதல் தெய்வீக மதுபானத்தின் விளையாட்டு மீண்டும் தொடங்கியது. அதன் விதிமுறைகள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக இருந்தாலும், அனைத்து வேறுபாடுகளையும் களைந்து, எல்லா பிரிவுகளையும் ஒன்றிணைத்து, ஒருமைத்தன்மையை நோக்கி வழிநடத்தும் அதன் முக்கிய பண்பு, ஒரே மாதிரியாக இருந்தது. இந்த விளையாட்டில் ஜாதி அல்லது மத வேறுபாடுகள் எதுவும் இல்லை - மேலும் தெலுங்கு குழுவினரும் மெஹராபாத்தில் இருந்த இவ்வேளையில், இறை போதையின் தாக்கத்தை வெகுவாக உணர்ந்தனர்.

1955 நவம்பர் 12ஆம் தேதி சனிக்கிழமை காலை 7:40 மணிக்கு பாபா மெஹராபாத்திற்கு வந்தார். சகவாச குழு, சில நூறு அடிகள் தூரத்தில் முன்னால் சாலையோரம் நின்று கொண்டிருந்தது; பாபாவின் கார் வருவதைக் கண்டதும், அவருடைய 'ஜெய்' கோஷங்கள் இடி முழக்கங்கள் போலக் காற்றில் பரவின. ஏறக்குறைய ஒவ்வொருவரும் விலையுயர்ந்த மாலைகளைக் கைகளில் ஏந்திய வண்ணம் நின்று கொண்டிருந்தனர்; பாபா மண்டபத்திற்குள் நுழைந்ததும்,

வழக்கம் போல மாலை அணிவித்தல், அரவணைப்பு அனைத்தும் ஆரம்பமானது, இடையிடையே பாபா சில நகைச்சுவை துணுக்குகளை எடுத்துரைத்தார்.

**“என்னை இதமாகத் தழுவுங்கள்”** என்று அன்பர் ஒருவரிடம் சைகையால் தெரிவித்தார், **“இல்லையென்றால் எனது விலா எலும்புகளை நொறுக்கிவிடுவீர்கள்!”**

தடித்த, கொழு கொழுவென இருந்த ஒருவரிடம், **“நீங்கள் ஏன் மிகவும் பலவீனமாக இருக்கிறீர்கள்?”** என்று கிண்டல் செய்தார்.

டாக்டர் தனபதிக்கு அப்போது சுமார் 70 வயது; பாபா அவரிடம், **“நாம் கடைசியாக சந்தித்ததை விட நீங்கள் மிகவும் இளமையாக இருக்கிறீர்கள். உங்கள் ரகசியம் என்ன?”** என்று கேலி செய்தார்.

இவ்வண்ணம் சூழ்நிலை, மிகுந்த மகிழ்ச்சி ஆரவாரத்துடன் இருந்தது. பாபாவின் நகைச்சுவை அமுதம் போன்றது; அது, அன்பர்களின் உள்ளங்களை எப்பொழுதும் அவரை உள்வாங்கும் ஆர்வத்துடன் இருக்கச் செய்தது.

பண்டோபா, ஆதி சீனியருடன் வந்து பாபாவின் தெய்வீகம், கருணை போன்றவற்றைப் போற்றும் விதமாக, ஆங்கிலத்தில் ஒரு கவிதையை மொழிந்து, பின்னர் அவரைத் தலைவணங்கினார். அவரை வணங்கவோ அல்லது அவரது பாதங்களைத் தொடவோ கூடாது என்ற பாபாவின் அறிவுரைகளை அவருக்கு நினைவூட்டினாலும், பாபா, பண்டோபாவை பிரேம் ஆசிரம நாட்களில் அவரது பழங்கால அன்பர்களில் ஒருவராக பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

குப்புசாமி என்பவர் காவி நிற மேலங்கியில் தோன்றியபோது, பாபா வினவினார், **“நீங்கள் எப்போதிலிருந்து மேலங்கியை அணிய ஆரம்பித்தீர்கள்?”**

அதற்கு அவர், “இது இந்த சகவாச நிகழ்ச்சிக்காக மட்டுமே” என்று பதிலளித்தார்.

பாபா இவ்வாறு கூறினார், **“இந்த வண்ணத்தால் நம் இதயங்களை சுத்தம் செய்ய வேண்டும் - வெறுமனே வெளியளவில் அணியக்கூடாது.”**

தனபதி சில புதிய அன்பர்களை அறிமுகப்படுத்திய வேளையில் பாபா, **“உங்கள் குரல் என்ன மாறிவிட்டதா?”** என வினவினார்.

யாரோ ஒருவர் குரல் கொடுத்தார்: “அவர் புதிய பற்களை அணிந்துள்ளார்!”

மாலைகள் எடுத்து வராத, மலபாரிலிருந்து வந்த இரண்டு அல்லது மூன்று புதிய அன்பர்களை அறிமுகப்படுத்திய கிருஷ்ணாஜி, “இவர்கள் சமய நம்பிக்கை இல்லாதவர்கள், உங்களைப் போன்ற ஒருவருக்கு மாலை அணிவிப்பதன் முக்கியத்துவத்தை அவர்கள் உணரவில்லை” என்று விமர்சித்தார்.

பாபா கூறினார், **“நான் ஒரு சமயவாதி அல்ல, முழுப் பிரபஞ்சத்திலும் நான் ஒருவனே இருக்கிறேன்!”**

மாலைகளைக் கொண்டு வராதவர்களில் சிலர் மனம் வருந்தியதைக் கண்ட பாபா, சிரித்துக்கொண்டே, **“இங்கு மாலைகள் குவிந்து கிடக்கின்றன. யார் மாலையைக் கொண்டு வரவில்லையோ அவர் அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து எனக்கு அணிவிக்கவும்”** என்று கூறினார். அன்பர்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்து பாபாவிற்கு மாலை அணிவித்தனர்.

முந்தைய நாள் இரவு தூங்காதவர் யார் என்று பாபா விசாரித்து, மேலும் சளியின் முதல் அறிகுறி தென்பட்டதும், உடனடியாக நீலு அல்லது பாதிரியை அணுகுமாறு அனைவரையும் அறிவுறுத்தினார்.

**“நீங்கள் இங்கே சில நாட்கள் இருக்க வேண்டும் என்பதால், உங்கள் உடல்நிலையை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும், என்னைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். என்னுடன் இருக்கும் ஐந்து நாட்களும் நீங்கள் அனைவரும் சொந்த இல்லத்தில் இருப்பது போல் எல்லாவற்றையும் - குடும்பம், வீடு, வேலை,** (நியமிக்கப்பட்ட) **தொழில் அனைத்தையும் - முடிந்தவரை மறந்து என்னுடன் இருங்கள். அனைத்து சிரமங்களையும் கவலைகளையும் முழுவதுமாக மறந்து விடுங்கள். நீங்கள் இங்கே இருக்கும்போது உங்கள் இல்லத்தைப் பற்றி நினைக்காதீர்கள்.”**

**‘அனைவரும் அறிவிப்புப் பலகையிலிருந்த அறிக்கைகளைப் படித்தார்களா?’** என்று பாபா வினவ, அனைவரும் ‘ஆம்’ என உறுதியுடன் பதிலளித்தனர். **“இங்கு இருந்த குஜராத்தி குழுவினர், தங்கள் இல்லங்களில் இருந்தாற் போன்ற உணர்வைக் கொண்டிருந்தனர். ஆன்மீக சொற்பொழிவுகள் இல்லை. பாபா அவர்களுக்கு அளித்த விளக்கங்கள் உங்களுக்கும், தொடர்ந்து வரும் குழுக்களுக்கும் வழங்கப்படும். ராம்ஜூ, குறிப்புகளில் பணிபுரிந்து வருகிறார்.**

**“நம் உடல்கள் எல்லாவிதமான நோய்நொடிகளுக்கும் ஆளாகின்றன. இறை உணர்வை அடையப்பெற்று, சாதாரண உலக உணர்வு நிலைக்கு வராதவர்கள், இதுபோன்ற உடல் உபாதைகளுக்கு ஆளாகாமல், இயற்கையான பாதுகாப்பைக் கொண்டிருக்கிறார்கள். பாபா, ஜலதோஷத்தால் அவதிப்படுகிறார்; ஏனெனில் நான் பௌதீக உலகிற்கு வந்துள்ளேன்; நான் உடல் ரீதியாக துன்பப்படுகிறேன். உங்கள் நோய்நொடிகளைப் பற்றிய அச்ச உணர்வும், சங்கடமும் வேண்டாம்; ஆனால் அதை சம்பந்தப்பட்ட மருத்துவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். நானே சளியால் அவதிப்படும்போது, உங்களையும் அது தாக்கக்கூடும்.”**

பாபா, மாணிக்யால ராவிடம் கேட்டார், **“ஏன் நீங்கள் மிகவும் பலவீனமாகத் தோன்றுகிறீர்கள்?”**

மாணிக்யால, “நேற்று இரவு நான் தூங்கவில்லை பாபா” என்று பதிலளித்தார்.

**“உடம்நலம் இல்லாதவர்களை எழுந்து நிற்கச் சொன்னபோது, நீங்கள் ஏன் எழுந்து நிற்கவில்லை?”**

“பழைய பாணியைப் பின்பற்றுபவர் போல, சிறியதொரு விஷயத்தைப் பற்றி நான் புகார் கூற விரும்பவில்லை!”

**“உடல் எனும் போது இடர்பாடுகள் வரும். அது இயற்கை. அவதார புருஷர் கூட பாதிக்கப்படுகிறார். அவர் துன்பத்தால் பாதிக்கப்படுவது எப்படி என்பதை முதலில் மேற்கத்திய அன்பர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.”** (பாபா இங்கிலாந்தில் கடுமையான குளிரில் நிகழ்ந்த சம்பவத்தை மீண்டும் எடுத்துரைத்தார். இறை மனிதனாக இருப்பதால் மெல்லிய ஆடைகளில், குளிரும், இதர நோய்களும் அவரைத் தாக்க முடியாது என்று மேற்கத்திய அன்பர்கள் நினைத்தனர்.) **படிப்படியாக, நான் அவர்களுக்கு அவதார புருஷரின் நிலையைப் பற்றி விளக்கினேன், இப்போது அவர்களின் புரிதல் ஆழமாக வேரூன்றி உள்ளது.”**

1952இல் நடந்த கார் விபத்தை பாபா நினைவு கூர்ந்தார்: **“அமெரிக்காவில் நடந்த விபத்துக்குப் பின்னர், எனது காலில் பிளாஸ்டர் போடப்பட்டது. ‘அவதார புருஷரான என்னால் வாகன விபத்தைத் தவிர்க்க முடியவில்லையா? அல்லது அது குறித்து எனக்கு முன்கூட்டியே தெரியாதா?’ என்று ஒரு கணம் கூட எவரும் யோசிக்கவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் ஆழமான அன்பில் உறுதியாக இருந்தனர்.**

**“டான் ஸ்டீவன்ஸ் என்னை அந்த நேரத்தில் அமெரிக்காவில் சந்தித்தார். இறை மனிதன் ஏன் காயப்பட வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எழவில்லை. கிருஷ்ணனின் உடலில் அம்பு எய்ததால், அவர் கொல்லப்பட்டார். உண்மைதானே? ஆம், உண்மைதான்.”**

பாபா, டானிடம் கேட்டார், **“எனது காலில் ஏன் பிளாஸ்டர் போடப்பட்டிருந்தது என்பதைக் குறித்து நீங்கள் எப்போதாவது யோசனை செய்தீர்களா?”**

டான், “நான் உங்கள் காலைப் பற்றி யோசனை செய்யவில்லை, ஆனால் நீங்கள் கூறும் ‘அவர்’, நீங்கள்தானா என்று நான் அடிக்கடி ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன்!”

பாபா அதை விளக்கத் தொடங்கினார்:

**நான் எனது தெய்வீக அதிகாரத்தின் பேரில் கூறுகிறேன் - நான் ஒருவனே எங்கும் எதிலும் வியாபித்திருக்கிறேன் - படைப்பில் நான் ஒருவன் மட்டுமே உள்ளேன். இவற்றைக் கற்றறிந்தவர் அல்லது தத்துவஞானியின் வார்த்தைகளாகக் கருதாதீர்கள். அடிக்கடி ‘ஜெய்’ என்று கத்தி, கதறி நேரத்தை வீணடிக்கிறீர்கள். ஐந்து நாட்களுக்கு முன்பு, கோதாவரி மாய் ஸாக்கோரியிலிருந்து வந்தபோது, நான் அதையே எடுத்துரைத்தேன். நான் ஆதி காலத்தவன், ஏக இறைவன், அவர் எப்பொழுதும் எனது பெயரை திரும்பத் திரும்ப உச்சரிக்க வேண்டும், என்னை நினைவில் கொள்ளவேண்டும். உங்கள் அனைவருக்கும் மட்டுமல்ல, புனிதர்கள் மற்றும் ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்லும் ஆத்மாக்களுக்கும்** (துறவிகள், புனிதர்கள்) **நான் இதையே கூறுகிறேன்.**

என்னை மிகவும் நேசிக்கும் 'கம்மு பாபா' (KAMMU BABA) என்று அழைக்கப்படும் மும்பையில் வாழும் துறவி, அவரை, அனைத்து சுமைகளிலிருந்தும் விடுவித்து, என்னிடம் அழைக்குமாறு கடிதம் எழுதியுள்ளார். நான் அவரது செய்திக்கு பதிலளித்தேன், 'அவர் தொடர்ந்து எனது பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்க வேண்டும் என்றும், அவர் தனது உடலைக் கைவிடும் வேளையில் அதை மறந்துவிடக்கூடாது' என்றும் கூறினேன். 'நான் ஒன்றே உருவான ஏக இறைவன்' என்று கூறும்போது, நான் அதையே பொருள்படக் கூறுகிறேன். 'நானும் எனது தந்தையும் ஒன்றே!' என்று எடுத்துரைத்த போது கிறிஸ்துவும் அதையே கூறினார்.

இது என்ன "நான்?"

'நான்' எனும் ஆதிகால புருஷனுக்கும், உங்கள் அனைவருக்கும் இடையேயான வேறுபாடு என்னவெனில், முதன் முதலாக 'நான்' அனைத்து பிணைப்புகளிலிருந்தும் விடுபட்டுள்ளேன், அதே வேளையில் உங்களில் 'நான்' பிணைக்கப்பட்ட நிலையில் உள்ளேன். நான் வேறு என்ன சொல்ல முடியும்? நான் 'ஆதிகால புருஷனாக' இருப்பதால், அதை நான் கூறியாக வேண்டும். பிற அனைத்தும் மாயை. 100 ஆண்டுகளுக்குப் பிறகு, நீங்கள் அனைவரும் உங்கள் உடலைக் கைவிடுவீர்கள், இருந்தாலும், இன்னமும் நீங்கள் இருந்து கொண்டே இருப்பீர்கள். உங்கள் உடலைப் பற்றி நினைக்காதீர்கள், என்னைப் பற்றி மட்டும் சிந்தியுங்கள், நீங்கள் உடலைத் துறப்பதற்கு முன்னர் எனது பெயரை நினைவில் கொள்ளுங்கள். என்னை, நீங்கள் எனது பௌதீக உடலில் பார்ப்பது எனது சுய ரூபம் அல்ல.

நீங்கள் எனது உண்மையான சுய ரூபத்தைப் பார்க்கவில்லை. நீங்கள் அதைப் பார்க்கும்போது, அனைத்து பிணைப்புகளிலிருந்தும் விடுபடுவீர்கள். லட்சக்கணக்கானவர்களில் ஒருவர் என்னைப் பார்க்க முடியும், அதே லட்சக்கணக்கானவர்களில் ஒருவர் என்னை உணர்கிறார். 'கடவுள் மீதுள்ள அன்பினால் உடலைத் துச்சமாகக் கருதும் லட்சக்கணக்கானவர்களில் ஒருவர் மட்டுமே கடவுளை உணர்கிறார்' என்று ஹஃபீஸ் கூறுகிறார்.

ஆனால் உங்கள் பிணைப்புகளிலிருந்து உங்களை நிரந்தரமாக விடுவிக்க, பாபாவிடம் மூன்று வழிகள் உள்ளன. முதலாவதாக, இந்தப் பௌதீக உடலில் எனது காலடியின் தூசியாக மாறுவது; அது சாத்தியமில்லை என்றால், இரண்டாவது வழி என்னவெனில், நீங்கள் உங்கள் குடும்பம், வீடு, வணிகம் மற்றும் பலவற்றுடன் உலகில் வாழ வேண்டும், ஆனால் தினமும் பதினான்கு முறை பாபாவின் பெயரை உச்சரிக்க வேண்டும்: பதினான்கு முறை - அதற்குக் குறையாமல் செய்யும் வேளையில் நீங்கள் என்னிடம் வருவீர்கள். பதினான்கு முறை உச்சரிப்பது கூட கடினம்.

உங்களால் இதைச் செய்ய முடியாவிட்டால், இவ்வளவாவது செய்யுங்கள். உங்கள் இறுதி மூச்சை விடும் வேளையில், எனது பெயரை உச்சரித்து, என்னிடம் வாருங்கள். இதுவும் கடினம், ஏனெனில், இதற்காக, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் நீங்கள் அதைத் திரும்பத்

**திரும்ப உச்சரிக்கவோ அல்லது என்னை நேசிக்கவோ தொடங்க வேண்டும். நீங்கள் அதைச் செய்யாவிடில், உங்கள் கடைசி நேரத்தில் என்னை நினைவில் கொள்ள முடியாது.**

**இதுவும் சாத்தியமில்லையெனில், உங்களுக்கு உதவக்கூடிய முறையில் கடைசி வழி ஒன்று உள்ளது. நான் எங்கும், எதிலும், எல்லோரிலும் இருக்கிறேன் என்பதை நினைவில் கொண்டு, பிறருக்குத் தன்னலமற்ற சேவை புரிவதாகும். சேவைக்காக மட்டுமே செய்யும் சேவை தன்னலமற்ற சேவையாகும். நீங்கள் இதைச் செய்வதானால், எல்லா சூழ்நிலைகளிலும், என்ன நடந்தாலும், அது உங்களை என்னிடம் கொண்டு வரும்.**

துறவி காட்கே மஹாராஜ் (GADGE MAHARAJ) மற்றும் அவரது ஆதரவாளர்களான கைகாடி மஹாராஜ் (KAIKADI MAHARAJ), நமானந்த் (NAMANAND) ஆகியோரின் உதாரணங்களை பாபா மேற்கோள் காட்டினார்; அவர்கள், சமீபத்தில் பாபாவின் வழியைப் பின்பற்றி, அவரது அன்பின் செய்தியை வெகுதூரம் கொண்டு செல்ல, தங்களால் இயன்ற அனைத்தையும் செய்தனர்:

**இந்தப் புனிதர்கள் மனிதகுலத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் இடம் விட்டு இடம் நகர்கின்றனர்; அவர்கள் தர்மசாலைகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை எழுப்பியுள்ளனர். கடவுள் மீதான அதீத அன்பினால் எல்லாவிதமான துன்பங்களையும் அனுபவிக்கின்றனர். அவர்கள் பாபாவை நேசிக்கின்றனர். காட்கே மஹாராஜ் மஹாராஷ்டிரா முழுவதும் ஒரு துறவியாக வணங்கப்பட்டாலும், அவர் என்னை பண்டர்பூருக்கு அழைத்துச் சென்ற போது, ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் எனது தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர்.**

**எடுத்துக்காட்டாக, 'வினோபா பாவே'** (VINOBA BHAVE) **போன்ற ஒரு சாதாரண மனிதன், மக்கள் மீதான அன்பின் நிமித்தம் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு, வெற்றுக் கால்களுடன் நடந்து சென்று, சேவை புரிகிறார். இந்தியாவில் இதுபோன்ற தன்னலமற்ற சேவையில் ஈடுபடும் பலர் உள்ளனர். உங்களில் சிலரும் உங்களுக்குத் தெரியாமல் அதையே செய்கிறீர்கள். தன்னலமற்ற சேவை என்பது 'நான்' எனும் அகந்தையின் சாயல் இல்லாத சேவையாகும். சிறிதளவு அகங்கார எண்ணமும் அனைத்தையும் கெடுத்துவிடும். பலரில் ஒருவரால் மட்டுமே இது போன்ற சேவையை மனிதகுலத்திற்குச் செய்வதில் வெற்றி பெற முடியும் - புனிதர்களால் கூட அது சாத்தியமற்றது!**

**மேற்கத்திய நாடுகளிலும் இத்தகைய சேவையில் ஈடுபடும் மனிதர்கள் உள்ளனர். ஒருவர் தொழுநோயாளிகள் புகலிடத்திற்குப் பொறுப்பான மருத்துவர். அவர் எப்பொழுதும் தொழுநோயாளிகளுடன் இருக்கிறார், தன்னைப் பற்றி சிந்திக்க நேரமில்லாமல் தனது பணியில் மூழ்கி இருக்கிறார். மெஹர் பாபா யாரென்று அவருக்குத் தெரியாது.**

அப்படிப்பட்ட மனிதர்கள் தன்னலமற்ற சேவை செய்யலாம், ஆனால் அவர்களால் கூட என் அருகில் வர முடிவதில்லை. ஏன்? மனம் அங்கே இருப்பதுதான் காரணம். மிகவும் நுட்பமான எண்ணம் பிணைப்பை உருவாக்குகிறது, மேலும் இது பாபாவை அறிந்து கொள்ள முடியாமல் தடுக்கிறது. இருந்தாலும், அத்தகைய நபர்களின் எண்ணம் தங்களுக்காக இல்லாமல், அவர்களின் பணியை முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்காகவும் இருப்பதால், தங்கள் உடலைத் துறந்த அடுத்த கணமே என்னிடம் வருகிறார்கள்.

பாபா அப்போது இவ்வாறு கூறினார்: "ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர், அரை மணி நேரம் வெளியே சென்று இளைப்பாறுங்கள். நாளை முதல், இதுபோன்ற விளக்கங்களோ, உரைகளோ இல்லை. நாம் ஒன்றாக விளையாடுவோம், கேலி கிண்டல்கள் செய்வோம். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்: கடவுள் கருணையுள்ளவர். அவர் நித்திய பேரின்பத்தில் இருக்கிறார். ஒரே ஒரு விஷயத்தை அவரால் மன்னிக்க முடியாது, அதுவே பாசாங்குத்தனம். அயோக்கியனாக இருந்து, சாது போல நடந்துகொண்டால், கடவுள் அதை மன்னிக்க மாட்டார்."

இடைவேளைக்குப் பிறகு பாபா தொடர்ந்தார்: 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) ஒரு தனித்துவமான புத்தகமாக நீங்கள் அதைக் காண்பீர்கள். இதற்கு முன்னர் இதுபோன்ற விஷயங்களை நான் வெளிப்படுத்தியதில்லை. நீங்கள் ஏன், எக்காரணத்திற்காக இருக்கிறீர்கள் என்பதை உங்கள் மனதின் மூலம் புரிந்துகொள்வீர்கள். அதைப் படித்த பின்பு, நீங்கள் கடவுள் என்று பாசாங்கு செய்யாதீர்கள். உங்களுக்கு அந்த அனுபவம் வரும் வரை, அது ஒன்றும் இல்லை.

நீங்கள் என்னை நேசிப்பவராக இருந்தாலும், இல்லையென்றாலும் அதை வெளிப்படையாகக் கூறுங்கள். பாபா, அவதார புருஷராகவும், இறை மனிதனாகவும் இருப்பதாக நீங்கள் உணர்வதானால், அவ்வாறே கூறுங்கள்; உங்களால் முடியாவிட்டால், நான் அவதார புருஷர் இல்லை என்று உலகுக்குச் சொல்லுங்கள். இரண்டும் என்னை மகிழ்விக்கும். இரண்டும் என்னுடையவை. பொய்யும் போலித்தனமும் படைத்தவர்களாக இருக்காதீர்கள்!

பாபா, பின்னர் அடுத்த நாளுக்கான நிகழ்ச்சியை சுருக்கமாக எடுத்துரைத்தார்: குஜராத்தி குழுவிற்கு அவர் விளக்கியது, ராம்ஜூவின் குறிப்புகளிலிருந்து அவர்களுக்கு வாசிக்கப்படும்; மேலும் அதுவே இதர இரண்டு குழுக்களுக்கும் மறுபடியும் எடுத்துரைக்கப்படும்.

எனது அன்பின் செய்தியை வெளியுலகிற்கு எடுத்துச் செல்லும் பணியில் எனக்கு திருப்தி இல்லை. இப்பணி நான் விரும்புவதற்கு இணங்க நடக்க வேண்டும். இதை நான் குஜராத்தி குழுவிற்கு வலியுறுத்தினேன், பிற இரண்டு குழுக்களிடமும் குறிப்பிடுவேன். மேலும், சேவகர்களுக்கிடையே

**நிலவும் கருத்து வேறுபாடு எனக்கு இதமாக இல்லை, இந்தக் கேள்விக்கு இறுதி தீர்வு ஒன்றைக் காண விரும்புகிறேன்.**

பாபாவை ஆந்திராவில் சிலர் பார்த்ததாகவும், வேறு சிலர் எதிர்கொண்ட அற்புத நிகழ்வுகள் குறித்தும் சில அன்பர்கள் பாபாவிடம் தெரிவித்தனர். பாபா கூறினார்:

**இன்றுவரை நான் அற்புதம் ஒன்று கூட செய்ததில்லை. என்னிடமிருந்து வெளிப்பட்ட முழுப் படைப்பையும், நாம் பார்ப்பது போன்ற அல்லது அதைவிட பெரிய அதிசயத்தை நாம் பார்க்க முடியுமா? 'தனிப்பட்ட முறையில் எனது பௌதீக உடல் வடிவில் என்னைப் பார்ப்பது', 'உயிர் துறந்தவர்களை உயிர்ப்பிப்பது' இவை எல்லாம் எனது செவிகளை வந்தடையும் செய்திகள்.**

பாபா, உண்மையான அதிசயம் ஒன்றின் உதாரணத்தை எடுத்துரைத்தார்:

**கடந்த இரண்டு மாதங்களில் இரண்டு விஷயங்கள் நடந்துள்ளன. ஒருபுறம், உ.பி.யிலிருந்து வந்த அறிக்கை ஒன்றில் உயிரைத் துறந்த ஒரு குழந்தை மீண்டும் உயிர் பெற்று வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. திகம்பர் பிரிவைச் சார்ந்த** (நிர்வாண துறவிகள்) **பாபா ராம்தாஸ், அவருடைய குரு மூலமாக என்னைப் பற்றி கேள்விப்பட்டு,** (ஜூலை மாதத்தில்) **சத்தாராவில் என்னைப் பார்க்க வந்தார். திரையிடப்பட்ட ஜன்னல் வழியாக அவர் என்னைப் பார்க்க அனுமதித்தேன். ராம்தாஸ், சிம்ஹஸ்தா** - SIMHASTA (**கும்ப**) **மேளாவிற்கு நாசிக் செல்ல இருந்தார். ஆனால், கேஷவ் நிகமிடமிருந்து வந்த அறிக்கையில், அவர் அங்குச் செல்லவில்லை, ஏனெனில் திரையிடப்பட்ட ஜன்னல் வழியாக அவர் என்னைப் பார்த்தபோது, பாபாவை மூன்று வடிவங்களில் - ராம், கிருஷ்ணா, ஷங்கர் (சிவன்) - பார்த்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் என்னை அப்படிப் பார்த்திருக்கலாம், ஆனால் அந்த அதிசயம் என்னால் உருவாக்கப்பட்டது அல்ல; அதற்கும் ஆன்மீகத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.**

**அப்போது ராம்தாஸ் என் அன்பைப் பரப்பும் ஆர்வத்தில், முதலில் 40 நாட்கள் உபவாசம் கடைப்பிடித்து, பின்னர் அவர் உ.பி.யில் ஒரு கிராமத்திற்குச் சென்றார்; அங்கு நிலவிய சூழலில், கடவுளை அறிமுகப்படுத்துவது என்பது முற்றிலும் சாத்தியமற்றது என்று கேஷவ் எழுதியிருந்தார். துன்பம் கடவுளை நினைவுகூரச் செய்கிறது, ஆனால் என்னைப் பொறுத்தவரை, ஒருவர் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும்போது கடவுளை நினைவில் கொள்ள முடியும். கீர்த்தனையை நிகழ்த்த அனுமதிக்குமாறு கிராமத் தலைவரை ராம்தாஸ் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, மிகக் குறைவான கிராம மக்களே அதற்காக வந்திருந்தனர். கீர்த்தனை நடந்து கொண்டிருந்த வேளையில், ஒரு சிறுமி திடீரென உயிரைத் துறந்தாள். குழந்தையின் உறவினர்கள் கதறி அழுதனர். ராம்தாஸ் கீர்த்தனையை நிறுத்த வேண்டியதாயிற்று. அதற்குப்**

பிறகு மெஹர் பாபாவின் அன்பு, வாழ்க்கை மற்றும் பலவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ளுமாறு பார்வையாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் கிராமத்தில் பாபாவின் பெயரை அறிமுகப்படுத்தும் விதத்தில் அமைந்த முதல் கீர்த்தனை என்பதால் அவர் மிகவும் அஞ்சினார். எனவே உயிரைத் துறந்த சிறுமியின் தந்தையிடம், அவளை எடுத்து வரச் சொல்லி, சிறுமியைத் தனது மடியில் வைத்துக்கொண்டு கீர்த்தனையை மீண்டும் தொடங்கினார். சிறிது நேரத்தில் அந்த சிறுமியின் உயிர் திரும்பியதால், உள்ளூர என்னை நினைவுகூர்ந்து என்னிடம் உதவி கேட்டிருக்க வேண்டும். இந்தச் செய்தி பரவியதும் சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து மக்கள் வரத் தொடங்கினர்.

இதைப்பற்றி அறிந்ததும், இந்தச் சமாச்சாரத்தை நான் இப்போதுதான் கேட்கிறேன் என்று கூறினேன். எனக்கும் அந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. (இது கூட்டத்தில் மிகையான சிரிப்பு ஆரவாரத்தை ஏற்படுத்தியது.) அனேகமாக, ராம்தாஸ் என் மீது கொண்டிருந்த அன்பால் அதைச் செய்திருக்கலாம். கிராமவாசிகளின் அளப்பரியதான ஆச்சரியமும் மரியாதையும் எனக்கு உரித்தானது அல்ல, ஆனால் அந்த 'அதிசயத்திற்கானது'. நமஸ்காரம் பாபாவிற்கு அல்ல, அந்த அற்புத நிகழ்வுக்கு. இந்த ஆன்மீகப் பாதையில் ஒருவர் தூசியாக மாற வேண்டும். என்னால் ஒரே ஒரு அதிசயத்தை மட்டுமே நிகழ்த்த முடியும், அதுவே உங்களை என்னைப் போல் ஆக்குவதாகும்.

இப்போது இந்த 'அற்புதத்தை' எனது பிற அற்புதங்களுடன் ஒப்பிடுங்கள். உங்களில் சிலர் மும்பையைச் சார்ந்த நௌரோஜி தாதாசாஞ்சியைப் பார்த்திருப்பீர்கள். அவரும், அவரது குடும்பத்தினரும் எனது நீண்ட கால அன்பர்கள். அவரது மனைவி எனது பெயரை உதடுகளில் உச்சரித்துக்கொண்டே உடலைத் துறந்தார். நௌரோஜியின் மகன் தெஹம்தன் (TEHEMTAN) எனது பெயரை உதட்டில் கொண்டு இறுதி மூச்சை விட்டார். அது என் மீதான நௌரோஜியின் அன்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. கடைசி நேரத்தில் என்னை நினைவில் கொள்பவர்கள் மிகக் குறைவு. சம்பவத்திற்குப் பிறகு நௌரோஜி மெஹராஸாத்திற்கு வந்தார்; நான் அவரைத் தழுவியதும், நௌரோஜி ஆறுதலடைந்தார். அக்டோபர் 13ஆம் தேதி, அவரது குடும்பத்தின் முக்கிய ஆதாரமாக இருந்த அவரது மற்றுமொரு மகன் நோஸர் (NOZAR), இளம் வயது, அற்புதமான, விமானம் ஓட்டும் அதிகாரி, எனது நோக்கத்திற்காக அவரது மாதச் சம்பளத்தில் ஒரு பகுதியை வழங்கி வந்த அவர், விமான விபத்தில் உயிரைத் துறந்தார். அதற்கு முன்னதாக அவர் என்னைப் பார்க்க சத்தாராவிற்கு வந்திருந்தபோது, நான் அவரிடம் விமானம் ஓட்டுவதற்கு முன்னர் எனது பெயரை நினைவில் கொள்ளுமாறு அறிவுறுத்தினேன். நான் அக்டோபர் மாதம் பூனாவில் இரண்டு நாட்கள் ஓய்வில் இருந்தபோது, நௌரோஜி அனுப்பியிருந்த தொலைத்தந்தியில், அவர் என்னை தொந்தரவு

செய்ததற்காக வருத்தம் தெரிவித்து, நோஸரின் மறைவைக் குறித்து எனக்குத் தெரிவித்திருந்தார். நோஸர் எனது பெயருடன் தனது இறுதி மூச்சை விடும்போது நான் அவருடன் இருந்தேன். உ.பி.யில், என்னை நேரடியாக சந்திக்காத, என் மீது அன்பை வளர்த்துக் கொள்ளாத பெற்றோரின் குழந்தை உயிரைத் துறந்து மீண்டும் உயிர்ப்பெற்றது. இங்கே இரண்டு இளைஞர்கள், நீண்ட காலமாக ஆழ்ந்த அன்புடன் எனது அரவணைப்பில் இருக்கும் அன்பர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், என்னை நினைவுகூர்ந்து அகால மரணம் அடைந்தார்!

உண்மையில், நான் என் அதிகாரத்தின் பேரில் கூறுகிறேன், இறப்பு அல்லது பிறப்பு என்று எதுவும் இல்லை. இது எனக்குத் தெரியும். நாம் அனைவரும் நித்தியத்தில் இருக்கிறோம், எப்போதும் இருப்போம். எவரும் இறப்பதில்லை, பிறப்பதுமில்லை. நோஸர் ஒரு ரத்தினக் கல். அவரது குடும்பத்தில் எவரும் சிறிதளவு உணர்ச்சியையோ வருத்தத்தையோ வெளிப்படுத்தவில்லை. அனைவரும் அமைதியாக இருந்தனர். இந்த 'அதிசயத்தை', நான் ஹமிர்பூர் கிராமத்தில் நிகழ்ந்த ஒன்றை விட மிகையானது என்று கருதுகிறேன். நீங்கள் பாபாவை ஏதேனும் அற்புதத்துடன் தொடர்புபடுத்துவதானால், இந்த வகையான அதிசயத்துடன் என்னைக் காரணம் காட்டுங்கள். எனது அன்பர்களை, என்பால் ஈர்க்க, நான் எனது அன்பினால் குடும்ப மகிழ்ச்சியைக் கூறு கூறாக்குகிறேன். வெங்கடேஸ்வர ராவ் இத்தகைய சிரமங்களையும் மீறி இங்கு இருக்கிறார்.

நோஸர் உண்மையிலேயே ஒரு மாணிக்கக் கல். நான் சொன்னது போல், அவர் தனது தந்தை மற்றும் சகோதரிக்குப் பண உதவி செய்தார், மேலும் அவருடைய வருமானத்தில் ஒரு பகுதியை எனது பணிக்காகச் செலவிட்டார். இப்படிப்பட்ட ரத்தினத்தை இழந்ததைக் குறித்து எதையும் உணராதது எவ்வளவு பெரிய விஷயம் என்று இப்போது கற்பனை செய்து பாருங்கள்! இது தான் அன்பு!

பிறப்பு இறப்பு என்று எதுவும் இல்லை என்பது உண்மையே. இருந்தும், உங்கள் மனைவி உயிரைத் துறந்தால், நீங்கள் அழுது புலம்புகிறீர்கள், உங்கள் தலையில் அடித்துக்கொள்கிறீர்கள். ஒரு வேளை குடும்ப ஸாஸ்திரி அவ்வாறு செய்ய மாட்டார்!

எந்த அற்புதங்களுடனும் என்னை இணைக்க வேண்டாம். உயிரைத் துறந்தவர்களை உயிர்ப்பிக்கும் வகையிலான அற்புதங்களை நான் செய்வேன் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். ஆனால் நான் உங்களுக்குச் சொந்தமான அனைத்தையும் பறித்த பின்னரும், நீங்கள் என் மீது அன்பு செலுத்தினால் அது பாபாவின் உண்மையான அதிசயம். கட்டா சுப்பா ராவ், இதைக் கேட்டு நீங்கள் கவலைப்படாதீர்கள். இது உண்மையை விளக்கும் எனது வழி. ஏலூரில் தரிசன நிகழ்ச்சியின் போது, நீங்கள் எங்களை மிகவும் சௌகரியமாக வைத்திருந்து, எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தீர்கள்; நான் உங்களில் திருப்தி அடைகிறேன், உங்களை

எதையும் இழக்கச் செய்ய மாட்டேன்! நீங்கள் கவலைப்பட வேண்டாம், இல்லையெனில் உங்களால் தூங்க முடியாது!

எனது மூத்த சகோதரர் ஜாம்ஷெட் என்னை மிகவும் நேசித்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். இறுதி மூச்சை விடும் வேளையில் எனது பெயரை நினைவுகூர்ந்தார். அவரது மரணம் குறித்த செய்தி வந்தபோது, நான் பிரேம் ஆசிரம மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தேன். ஜாம்ஷெட் என்னிடம் வந்ததால் அனைவரையும் மகிழ்ச்சியாக இருக்கச் சொன்னேன். இனிப்புகளையும் வழங்கினேன். இது 1926இல் நடந்தது.

தெலுங்கு குழுவினருக்கு இன்று அதிர்ஷ்டமான நாள். ஒவ்வொரு மாதமும் 12ஆம் நாள் இங்கு துனி ஏற்றப்படுகிறது, இன்று மாலை ஆறு மணிக்கு நாம் அங்கே இருப்போம். மனித மனம் எல்லையற்ற எண்ணங்களால் நிறைந்துள்ளது. இந்த மனதிற்கு வரையறுக்கப்பட்ட எல்லை உள்ளது, ஆனால் அதன் எண்ணங்கள் எல்லையற்றவை. எனவே உங்கள் ஆசைகளையும் எண்ணங்களையும் இன்று துனியில் எரித்துவிடுங்கள். குறைந்த பட்சம் காமம், பேராசை அல்லது கோபம் குறித்த ஒரு சிந்தனையாவது அதில் எரியட்டும்.

நீலு என்னுடன் இத்தனை வருடங்களாக இருந்து வருகிறார். அவர் இறை-உணர்வு அல்லது அது போன்ற எதையும் விரும்பவில்லை என்று கூறுகிறார். அவர் எப்பொழுதும் பாபாவுடன் இருப்பதையே விரும்புகிறார். அவருக்கு, முதலில் பிரியமான பாசந்தி, இரண்டாவதாக இனிப்பு ரவை, மூன்றாவதாக கொண்டைக்கடலை கூட்டு (பிட்ல-PITHLA) இவற்றை உண்ணுவதில் அலாதி ஆர்வம். நீலு, இன்று இந்த மூன்று ஆசைகளில் ஒன்றை துனியில் எரித்துவிடட்டும்.

மதிய உணவுக்குப் பிறகு, சகவாச குழு மதியம் 1:30 மணிக்கு கீழ் மெஹராபாத் மண்டபத்தில் மீண்டும் ஒன்று திரண்டபோது, பாபா தொடர்ந்து கூறினார். எரச் பாபாவின் கை அசைவுகளை ஆங்கிலத்தில் விளக்கிய அதே வேளையில், குடும்ப ஸாஸ்திரி தெலுங்கில் மொழிபெயர்த்தார்.

இங்கே உங்களுக்கு ஐந்து நாட்கள் உள்ளன. நான் கூறுவதை முடிந்தவரை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு மேலுமொரு வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். இந்த உடல் ஒரு நாள் கைவிடப்பட வேண்டும்; ஒருவேளை நீங்கள் என்னை மீண்டும் பார்க்க மாட்டீர்கள். நான் எனது பௌதீக உடலைத் துறந்த பின்னர், ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வரலாம்; பிற பாபா அன்பர்கள் அவர்களுக்கு பாபாவைப் பற்றிய விரிவுரைகளை வழங்குவார்கள்; ஆனால் என்னுடன் நீங்கள் இங்கு இருப்பதை ஒப்பிடும்போது, அது ஒன்றும் இல்லை. இதையெல்லாம் நான் தனிப்பட்ட முறையில் உங்களுக்கு விளக்கி வருவதால், பௌதீக உடல் வடிவில் எனது தரிசனத்தைப் பெறுவது என்பது உங்கள் வாழ்நாளின் வாய்ப்பு. எனவே கவனமாகக் கேட்டு பயனடையுங்கள். இப்போது

என்னிடமிருந்து நீங்கள் கேட்கும் அனைத்தையும், பின்பு மக்கள் புத்தகங்களில் படிப்பார்கள். நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் உண்மை.

கைக்கோபாத்தைக் குறித்து பாபா கூறினார்:

கடந்த பல வருடங்களாக என்னுடன் இருக்கிறார்; அவருக்கு ஒரு குடும்பம் உள்ளது; அவர் எனக்காக அனைத்தையும் அர்ப்பணித்துள்ளார். அவர் பார்சி பாதிரியார் வகுப்பைச் சார்ந்தவர். அவரது குடும்பத்தினர் மெஹராபாத் மேல்மலையில் தங்கியுள்ளனர். இப்போது, எதுவும் அவருக்குச் சொந்தமில்லை, அனைத்தும் பாபாவினுடையது என்கிறார். அவருடைய அர்ப்பணிப்பை நான் ஏற்றுக்கொண்டேன். நான் எங்குச் சென்றாலும் அவர் எப்போதும் என்னுடன் இருக்கிறார். பன்னிரண்டு ஆண்டுகளாக அவர் என்னுடன் இருந்து வருகிறார். அன்று முதல் இன்று வரை, தினமும் 24 மணி நேரத்தில் 100,000 முறை எனது பெயரை உச்சரித்து வருகிறார். எனது பெயர் அவருக்கு மூச்சுக்காற்றாக மாறிவிட்டது.

1946இல், மெஹராபாத் மேல்மலையில், அவர் எனது தெய்வீகத்தின் ஒரு சிறிய அம்சத்தைப் பார்க்க நேர்ந்தது. என்னுடனான எல்லா பயணங்களிலும், வெவ்வேறு இடங்களில் தங்கும் வேளையிலும் நாமம் உச்சரிப்பதைத் தொடர்ந்தார். ஒருமுறை, 1953 ஆகஸ்ட் 31 அன்று, அவர் கீழே விழுந்து தனது உடலைக் கைவிடும் நிலையில் இருந்தார். அவருடைய அனுபவங்கள் இப்போதும் தொடர்கின்றன: “நான் பாபாவை எப்போது பார்க்க விரும்புகிறேனோ அப்போதெல்லாம் பார்க்க முடியும்” என்று அவர் கூறுகிறார். எனது தெய்வீகத்தை என்னால் கூட ஆழங்காண முடியாத அளவுக்கு நான் அளவிறுதியற்றவன்!

என்னுடனான சகவாசத்திற்காக நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள், எனவே நான் உங்களுக்குச் சொல்ல விரும்பும் அனைத்தையும் நான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் நான் கைக்கோபாத்தைத் தலைவணங்குகிறேன்; ஏனெனில், அவர் பாபாவை பார்க்க வேண்டிய விதத்தில் பார்க்கிறார். எனது தரிசனத்தை முடிந்த அளவுக்குப் பெற்றுக்கொள்கிறார். அதனால், அவரது காலடியில் தலை வைத்து வணங்குகிறேன். நான், மண்டலி, ஏழை, சாதுக்கள், தொழுநோயாளிகள் மற்றும் பலரைத் தலைவணங்குவது வெளியளவில் காட்டிக்கொள்வதற்காக அல்ல; அது தாழ்மையின் வெளிப்பாடும் அல்ல. மனித குலத்தின் மீதுள்ள அன்பினால் நான் அதைச் செய்கிறேன்.

எனது வழிமுறைகள் அனைத்தையும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். நான் சொல்வதை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். எனது சொந்த பணிக்காகவும், இதுபோன்ற கூட்டங்களுக்காகவும், மஸ்த் மற்றும் பிற சுற்றுப்பயணங்களுக்காக வெளியே செல்லும்போதெல்லாம், கைக்கோபாத்திடம் எனது தலையில் கை வைத்து என்னை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் சத்தாராவில் கைக்கோபாத் அழுது, மன்றாடி என்னிடம் கூறினார்: "உங்களின் தெய்வீகத்தன்மை எனக்குப் புரிகிறது. ஏன் என்னை உங்கள் தலை மீது கை வைத்து ஆசீர்வதிக்கச் சொல்கிறீர்கள்? நீங்கள் என்னவென்று எனக்கு நன்கு புரிகிறது. நான் உங்களைக் கடவுளின் அவதாரமாகப் பார்க்கிறேன், அதைப் பற்றிய அனுபவங்களும் எனக்கு உண்டு. எனது செயலைக் குறித்து நான் மிகவும் வருத்தமாக உணர்கிறேன்!" நான் அவரிடம் எனக்கு முற்றிலுமாக கீழ்ப்படியுமாறு கூறினேன். இது ஒன்றுதான் இன்றியமையா தேவை. என்னை உதைக்கச் சொன்னால், அதை நேர்மையாகச் செய்ய வேண்டும். இது எனது உத்தரவு.

ஆன்மீகப் பாதையில் பயணிக்க கைக்கோபாத் தொடர்ந்து செல்ல வேண்டும். அவர் என்னைப் பற்றிய சிறிய தெய்வீக அம்சங்களைப் பார்க்கிறார், அது போலி நம்பிக்கை இல்லை என்றாலும், அது இறைவனுடனான ஐக்கியம் அல்ல; ஐக்கியம் என்பது அதி உச்ச நிலை. கைக்கோபாத் என்ன அனுபவிக்கிறார் என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கைக்கோபாத் இப்போது ஓர் இருள் நிறைந்த அறையில் தூங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். திடீரென, அவர் விரும்பும் போதெல்லாம், அறை முழுவதும் வெளிச்சம் நிறைந்ததாக இருக்கிறது. இது என்னுடைய அதிசயம் அல்ல. நானே அதைச் செய்ய முடியாது. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும்: நான் எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் இருக்கிறேன். ஆனால் என்னால் இதைச் செய்ய முடியாது. கைக்கோபாத் என்னை அந்த வெளிச்சத்தில் பார்க்கிறார். சூரியனின் பிரகாசம் கூட அறையில் உள்ள வெளிச்சத்துடன் ஒப்பிடுகையில் ஒன்றுமில்லை. அதையெல்லாம் பார்ப்பது என் அருள் என்கிறார் கைக்கோபாத். ஆனால் அவருடைய நம்பிக்கையும் அன்பும்தான் அதை உருவாக்குகிறது என்று நான் சொல்கிறேன். இப்போது இறை-உணர்தல் பற்றி பார்ப்போம்.

கல் தரையில் அமர்ந்திருந்ததால் திருமல ராவின் கால்கள் விறைத்துப் போயின. அவரது அசௌகரியமான அசைவுகளை கவனித்த பாபா, "உங்களில் சிலர் கால்களை நீட்டி அமர விரும்பினால், அதைச் செய்ய வெட்கப்பட வேண்டாம், ஏனெனில் நீங்கள் என் முன்னால் இருப்பதால், நாம் அனைவரும் சகவாசத்தில் இருக்கிறோம். நீங்கள் இங்கே சுதந்திரமாக நடந்து கொண்டால், நான் மகிழ்ச்சியடைவேன். நீங்கள் என் முன்னிலையில் கூச்சமின்றி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், எனவே தடையின்றி, சுதந்திரமாக இருங்கள்." திருமல ராவ் தனது கால்களை நீட்டினார், நிதானமான சூழலில், சிரிப்புக்கு மத்தியில், பிறரும் கால்களை நீட்டி சாவகாசமாக அமர்ந்தனர்.

1931ஆம் ஆண்டு, பாபா இங்கிலாந்து செல்லும் வழியில், எஸ்.எஸ். ராஜ்புத்னா என்ற நீராவி கப்பலில் மஹாத்மா காந்தியை சந்தித்ததைப் பற்றி பாபா அடுத்து விவரித்தார்:

நான் முதன்முறையாக மேற்கு நோக்கிச் சென்றபோது, காந்தியும் அதே கப்பலில் பயணம் செய்தார். மூன்று நாட்களுக்கு, அவர் தொடர்ந்து என் அறைக்கு வந்து, ஒரு முறை இரண்டு மணி நேரத்திற்கு மேல் என்னுடன் இருந்தார். நான் அப்போது எழுத்துப்பலகையைப் பயன்படுத்தினேன். மஹாதேவ் தேசாய் அவருடன் வருவது வழக்கம், ஆனால் அவர் அறைக்கு வெளியே இருந்தார். காந்தியின் இதயம் ஒப்பற்றது; அது சுத்தத் தங்கம். அவர் வந்ததும் அவரை என் அருகில் அமர வைத்தேன். அவர் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருக்க, நான் அவற்றிற்கு பதிலளித்து வந்தேன்.

இதையெல்லாம் நான் ஏன் உங்களிடம் சொல்கிறேன்? ஏனெனில், உங்கள் கால்களை நீட்டுவதற்கும், என் முன்னால் சுதந்திரமாக உணர்வதற்கும் தொடர்பு உண்டு.

ஒரு நாள் காந்தி என்னிடம் குஜராத்தி மொழியில், “பாபா, உலகம் முழுவதும் உங்கள் பேச்சைக் கேட்கும் வகையில் நீங்கள் இப்போது பேச வேண்டும்” என்றார். ‘மெஹர் மெஸேஜ்’ (MEHER MESSAGE) இதழில் வெளிவந்த எனது சில இலக்கியங்கள், எனது மௌனம் மற்றும் கடவுளைப் பற்றி ஏற்கனவே அவர் படித்திருந்தார். “நான் விரைவில் பேசுவேன்” என்று பதிலளித்தேன், ஆனால் இன்னும் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஏன்? ஏனெனில், வாக்குறுதிகளை அளிப்பதும், அவற்றை மீறுவதும் எனது வழக்கமாக இருந்து வருகிறது; நான் அனைத்து பிணைப்புகளிலிருந்தும் என்றென்றும் விடுபட்டிருக்கிறேன். இதை காந்தியிடம் கூறியபோது அவர் சிரித்தார். மஹாதேவ் தேசாய் கதவைத் தட்டி, புறப்பட நேரமாகிவிட்டது என்றார். ஆனால் நாங்கள் சில விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்ததால், காந்தி அவரை சிறிது நேரம் காத்திருக்குமாறு அறிவுறுத்தினார்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததும், காந்தி என்னுடன் இணைவதாக உறுதியளித்தார். இவை அவருடைய வார்த்தைகள். இந்த முதியவரின் இதயத்தைப் பாருங்கள்! அவருக்கு நிகராக எவரும் இல்லை! உரையாடல் நிறைவடைந்து, புறப்பட ஆயத்தமானதும், “பாபா, நீங்கள் ஏன் காதி தொப்பியும் ஆடையும் அணியக்கூடாது?” என்று கேட்டார். நான் அவருடைய கருத்தைக் கேட்டு மிகவும் அகமகிழ்ந்தேன்; என்னைத் தழுவிய பின்னர், அவர் விடைபெற்றுச் சென்றார்.

நான்காம் நாள், (காந்தியின் நெருங்கிய தோழர்) ஷௌகத் அலி (SHAUKAT ALI) வந்தார். அவரும் அதே கப்பலில் பயணம் செய்தார். அவர் எனக்கு மரியாதை செலுத்த விரும்புவதாக சாஞ்சியிடம் கூற, நான் அவரை அறைக்குள் வர அனுமதித்தேன். எனது கையில் முத்தமிட்டு, பின்னர் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். ஆனால், அவர் மிகவும் பருமனாக இருந்ததால், நாற்காலி உடைந்தது; ருஸ்தம், சாஞ்சி, நான் மூவரும் அவருக்கு உதவ வேண்டியிருந்தது. நகைச்சுவையான விஷயங்களாக இருந்தால், நான் அதை மிகவும் ரசிப்பேன். தீவிரமான பேச்சுக்களை விட

**வேடிக்கையான கதைகளை நான் விரும்புகிறேன். ஒவ்வொருவரும், உள்ளளவில் துன்பப்பட்டாலும் மகிழ்ச்சி ததும்பும் முகத்துடனும், அன்புடனும் இருக்க வேண்டும்.**

துனிக்காக ஒன்றுதிரண்ட அரன்காவ்ம் கிராம மக்களுக்கு தரிசனம் வழங்குவதற்காக, பாபா பந்தலுக்குச் செல்லவிருந்தார். “**இந்த சிரமத்துடன் நான் தொடர்ந்தால் முடிவே இருக்காது. துனியை எரியவிடுவதற்கு முன்பு நீங்கள் நிம்மதியாக வெளியே செல்வது நல்லது. நாம் அனைவரும் சுதந்திரமாகவும், திறந்த மனதுடனும் இருக்க வேண்டும்**” என்று குறிப்பிட்டு, பின்னர் அவர் தொடர்ந்தார்:

**நான் உங்களிடம் எதையும் மறைக்க விரும்பவில்லை, ஆகையால் பெண்டு என்னிடம் கூறியதை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். உங்களில் ஒருவர் அவரை அணுகி, எனது காலடியில் கொஞ்சம் பணத்தை வைக்க முடியுமா என்று கேட்டதாகக் கூறினார். இப்போது நான் அனைத்து விஷயங்களையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.**

**நான் என்னவாக இருக்கிறேனோ அதற்கு ஐந்து சத்குருக்களே காரணம்.. இந்த அவதார காலத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு யுகத்திலும் அவர்கள் என்னை பூமியில் கொண்டுவருகிறார்கள். இவை அனைத்தும் ‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்தில் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது. புத்தகத்தைப் படித்த பின்பு, நீங்கள் யார் என்பதை ஓரளவு புரிந்துகொள்வீர்கள். ஆனால் அது உங்களை எனது சுய ரூபத்தில் பார்க்க வழி வகுக்காது. அதற்கு, என் மேல் உங்களின் அதீத அன்பு இன்றியமையாதது. புத்தகத்தை நானே எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தேன். டான் ஸ்டீவன்ஸ் சில பிரதிகளை இங்கு கொண்டு வந்துள்ளார். புத்தகம் இப்போது அமெரிக்காவில் விற்பனைக்கு உள்ளது. சில அத்தியாயங்களைப் படித்தவர்கள் என் மீது ஆர்வம் கொண்டுள்ளனர். இவ்வளவு பெரிய தொகுப்பு எழுத்துப்பலகையில் எழுதப்பட்டிருப்பது தனிச் சிறப்பு மிக்கது என்று அவர்கள் நினைக்கிறார்கள். நான் எழுத்துப்பலகையை எவ்வாறு பயன்படுத்தினேன் என்பதை அவர்கள் தொலைக்காட்சியில் பார்க்க விரும்பினர்.**

முந்தைய வாரம் குஜராத்தி குழு இங்கிருந்தபோது தொலைக்காட்சிக்கான காணொளி எப்படி எடுக்கப்பட்டது என்பதை பாபா விவரித்தார்.

சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், ஹஸ்ரத் பாபாஜான், நாராயண் மஹாராஜ், தாஜுதீன் பாபா ஆகியோரின் குணாதிசயங்களை விளக்கி, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**சாய்பாபா பரிபூரணமானவர். அவரை அணுகும் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர் உடனடியாக எல்லா பணத்தையும் கேட்டு வாங்கி, அவர்களின் பைகளைக் காலி செய்தார். அவர் புகைக்குழலை**

ஊதுவதும், இருமி எச்சிலைத் துப்புவதையும் வழக்கமாக கொண்டிருந்தார். குஸ்தாஜி ஒருமுறை அவரைப் பார்க்கச் சென்ற வேளையில், அவர் குஸ்தாஜியின் பாக்கெட்டைக் காலி செய்தார். சாய்பாபா எவ்வளவு பெரியவர் என்று உங்களுக்குத் தெரியாது. அவரைச் சுற்றி இருப்பவர்களின் ஊதியத்தை அவர் நிர்ணயம் செய்திருந்தார். பரா பாபா (BARRA BABA) என்று அழைக்கப்பட்ட ஒருவர் இருந்தார். சாய்பாபா பார்வையாளர்களிடமிருந்து சேகரிக்கும் தொகையில், அவருக்கு தினமும் ரூ.100 வழங்கி வந்தார். இந்துக்களும், முஸ்லிம்களும் அவரை வணங்கினர், மேலும் அவரைச் சுற்றி பஜனைகளும் கவாலியும் நடந்த வண்ணம் இருந்தது. அவரை தரிசனம் செய்ய வந்தவர்களில் பாதி பேர் அவர் மீது அன்பு வைத்திருந்தனர்; மக்களிடமிருந்து எல்லா பணத்தையும் கேட்டு வாங்கும் போது, அவர் எப்படிப் புனிதராக இருக்க முடியும் என்று மறு பாதி வியந்தது! இப்போது நீங்கள் சாய் ஆசிரமம், சாய் கோயில், சாய் தீப்பெட்டிகள், சாய் சித்திரங்கள், சாய் இது, சாய் அது என்று பலவற்றைக் காணலாம். எங்குச் சென்றாலும், எல்லா இடங்களிலும், நீங்கள் ஒரு சாய் கோயிலைக் காண முடியும். அவர் உயிருடன் இருந்தபோது அவரை சந்தேகித்த அதே மனிதர்களிடமிருந்து இவை அனைத்தும் உருவாயின!

(உபாஸனி) மஹாராஜ் ஷிர்டியில் கண்டோபா கோயிலில் தங்கியிருந்தார். மூன்று ஆண்டுகளாக, அவர் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் கடைப்பிடித்தார். சாய்பாபா யார் என்று அவருக்கு மட்டுமே தெரியும். மஹாராஜின் அருள், தூசி மீது விழுந்தால், அந்தத் தூசியே கடவுளாக மாறும் அளவுக்கு அவர் உயர்ந்தவர்! மஹாராஜ் அவ்வளவு உயர்ந்தவர். ஆனால் அவர் சாய்பாபாவிற்கு நேர்மாறாக இருந்தார். அவர் பணத்தை ஏற்றுக்கொள்வதில்லை, அதை வழங்குபவர்களை விரட்டுவது வழக்கம். காலப்போக்கில், மக்கள் அன்புடன் அளித்ததை அவர் ஏற்றுக்கொண்டார், இப்போது நீங்கள் (ஸாக்கோரியில்) உபாஸனிஸ்தானத்தையும், உபாஸனி நகரையும் பார்க்கிறீர்கள்.

மூன்றாவது பாபாஜான் - பிரபஞ்சத்தின் பேரரசர். அவர் ஒரு வேப்ப மரத்தின் கீழ் அமர்ந்து தூங்குவதே இல்லை. பெரும்பாலான மண்டலி அவரைப் பார்த்திருக்கிறார்கள். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டாலும், உடலில் சுருக்கங்கள் இருந்தபோதிலும், அவரது முகம் உற்சாகமாகவும் பிரகாசமாகவும் இருந்தது. வெயில், மழை, குளிர் எதையும் கண்டுகொள்ளாமல் அலட்சியமாக இருந்தார். அவர் பணத்தை ஏற்றுக் கொள்ளவோ, அதில் ஆர்வம் காட்டவோ இல்லை. அவருக்கு எந்தத் தேவையும் இல்லை, விருப்பமும் இல்லை. பட்டான் (PATHAN) மற்றும் பலூச்சி (BALUCHI) வீரர்கள் அவரை மிகவும் மதிக்கிறார்கள். ஓய்வுக்குப் பின்னர் அவர் கையில் ஒரு கோலுடன் எழுந்தால், அந்தக் கட்டுரம் வாய்ந்த ஆண்கள் அனைவரும் ஓடிவிடுவார்கள். அவர்தான் எனக்குப் பாதையைக் காண்பித்து,

ஒரே நொடியில் மூல முதலான எனது அசல் நிலையை எனக்கு வெளிப்படுத்தியவர்.

சாய்பாபா வற்புறுத்தி பணத்தைக் கோரினார், மஹாராஜ் அதில் அலட்சியமாக இருந்தார், ஒருவர் கொடுத்தாலும் பாபாஜான் அதை ஏற்க மறுத்தார்.

நாராயண் மஹாராஜ் குஸ்தாஜியின் உயரத்தில் குள்ளமாக இருந்தார், ஆனால் மெலிந்து காணப்பட்டார். அவர் எப்பொழுதும் அணிகலன்கள் மற்றும் மெல்லிய பட்டு ஆடைகள் அணிந்திருந்தார். அவர் ஒருபோதும் பணத்தை நேரடியாகக் கோரியது இல்லை, ஆனால் அவரால் ஈர்க்கப்பட்டவர்களிடமிருந்து பணம் கேட்பதற்கான மறைமுகமான வழியைக் கையாளும் விதத்தில் அவரைச் சுற்றியிருந்தவர்களிடம் பேசினார்.

தாஜுதீன் பாபா அனைத்து சூழ்நிலைகளிலும் முற்றிலும் அலட்சியமாக இருந்தார் - இப்போது ஆயிரக்கணக்கான மக்கள் அவரது சமாதிக்கு வருகின்றனர். நான் ஐந்து குருநாதர்களின் ஐந்து பண்புகளாலும் உருவானவன் என்பதை நீங்கள் உணர வேண்டும். அவர்கள் என்னை இப்பூவுலகில் கொண்டுவந்தனர்.

இப்போது, என்னைக் குறித்துக் கூறுவதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியம்; உங்கள் பணியில் உங்களுக்கு உதவியாக இருக்கும். மக்கள், பாபாவைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அவர்கள் அனைத்தையும் அறிந்திருக்க வேண்டும். டான் ஸ்டீவன்ஸிடமும் இது குறித்து கூறப்பட்டது. என்னை நேசிப்பவர்கள் என்னை நேசிப்பார்கள்; எனக்கு எதிராக இருப்பவர்களால் எனக்கு எந்த விதத்திலும் பாதகம் இல்லை. நான் எப்போதும் இருப்பதைப் போலவே இருப்பேன்.

என்னுடன் வாழும் மண்டலி 30 ஆண்டுகளுக்கும் மேலாக என்னுடன் இருக்கின்றனர். எனக்கும் பணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். நான் மௌனம் தொடங்கிய நாளிலிருந்து, ஏழைகளுக்கும் மஸ்துகளுக்கும் கொடுத்ததைத் தவிர, பணத்தைத் தொட்டதில்லை. நான் எப்போதும் பணத்தை என்னிடம் வைத்திருப்பதில்லை. என்னிடம் எதுவுமே இருப்பதில்லை. என்னிடம் அன்பு மட்டுமே உள்ளது. எனக்குப் பணம் அனுப்பும் அன்பர்களிடமிருந்து, நான் அதை அன்புடன் ஏற்றுக்கொள்கிறேன், எனது பணிக்காக அன்புடன் வழங்குகிறேன். எனக்குப் பணம் தேவை இல்லை. நான் பணம் கேட்டதுமில்லை. ஆனால் கடந்த பல வருடங்களாக மக்கள் இதை அனுப்புகிறார்கள். பணம் இவ்வண்ணம் என்னிடம் வருகிறது. எனது பெயரில் சுமார் ஒரு கோடி ரூபாய் கைமாறியதாக விஷ்ணு கூறுகிறார். பணமில்லாத போது, சப்பாத்தி-சட்னி சாப்பிட்டுத்தான் மண்டலி வாழ வேண்டும். பணம் இருக்கும் போது உணவு, ஆசிரமங்கள், மருத்துவமனைகள், புகலிடங்கள் அனைத்தும் இருக்கும்.

சில மண்டலி கேட்கிறார்கள், பாபா ஓரிடத்தில் ஒருவித ஆசிரமத்தை எழுப்பி, அடிக்கடி அதைத் தகர்த்தெறிவதற்கு பதிலாக, ஏன் அதை ஒரே

இடத்தில் நிரந்தரமாக நிறுவக்கூடாது? ஏனெனில் நான் இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டவன். எனக்கு நிரந்தரமான ஆசிரமம் எதுவும் இல்லை. எனது அன்பர்களின் ஒவ்வோர் இதயமும் எனது ஆசிரமம். எங்களிடம் பணம் இருக்கும்போது, எனது பணிக்குத் தேவையான ஏதாவது இருக்கும். இப்படியே பல வருடங்கள் ஓடிவிட்டன. இத்தனை வருடங்களாக எனது கைகள் வழியாக பணம் எப்படி பாய்ந்தது! இருக்கைக்கு அடியிலிருந்து இரண்டு லட்சங்களை வெளியே எடுக்கும் யோகிகளைப் போல் என்னிடம் எந்த அதிசயமும் இல்லை!

சில சமயங்களில் தேவைப்படும்போது மெஹர்ஜியிடம் அல்லது நரிமனிடம் பணம் கேட்பதுண்டு. சில சமயங்களில், நாராயண் மஹாராஜ் செய்தது போல், நான் எதிர்மறையாகச் சுற்றி வளைத்துக் கேட்பதையும் வழக்கமாகக் கொண்டேன். சில சமயங்களில், நான் கேட்காமலே தானாகவே வந்துவிடும். எவரோ, சில சமயங்களில், எனது காலடியில் ஒரு தொகையை வைக்கிறார்கள். சில சமயங்களில், கொடுப்பவர்களிடமிருந்தே தீவிரமான வேண்டுகோள்கள் இருந்தபோதிலும், நான் அதை ஏற்க மறுக்கிறேன். இன்று ஒரு சொத்து கூட எனது பெயரில் இல்லை - மெஹராபாத், பிம்பல்காவ்ம் சொத்துக்களும் இல்லை. இறுதி ஓய்விடத்தை மட்டும் எனது பெயரில் வைத்துள்ளேன்.

ஒருமுறை (1927இல்), இங்கு சிறுவர்கள், குடும்பங்கள், மண்டலி, தர்மசாலைகள், ஒரு மருத்துவமனை இவை அனைத்தும் நிறைந்த ஒரு பெரிய அமைப்பு இருந்தது. அனைவரும் பணிபுரிந்து வந்தனர். பின்னர் அனைத்தும் அகற்றப்பட்டு, டோக்கா கிராமத்திற்கு மாற்றப்பட்டது. அங்கே நான் உபவாசம் மேற்கொண்டேன். அந்த நேரத்தில், மூன்று அற்புதமான விஷயங்கள் நடந்தன. அஹமதுநகரைச் சேர்ந்த ஏழை மக்கள் டோக்காவிற்கு வந்து, மண்டலி வழங்கிய உணவுப் பொருட்களைப் பெற்றுச் சென்றனர். பலமுறை உபவாசம் கடைப்பிடித்திருக்கிறேன். மண்டலியில் ஒருவர் (பிளீடர்) பால் மட்டும் அருந்தி மூன்று வருடங்கள் ஒரே அறையில் இருந்தார். அவர் அறையை விட்டு வெளியே வரவோ, படிக்கவோ, எழுதவோ, எவருடனும் பேசவோ கூடாது. நானும் இரண்டு மூன்று மாதங்கள் நீர் மட்டுமே அருந்தியும், டோக்காவில் நான் 51 நாட்களும் உபவாசம் கடைப்பிடித்தேன். அதை நிறைவுசெய்து, பல நாட்கள் ஆரஞ்சு ரசம் பருகி வந்ததால், ஆசிரமத்து சிறுவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் எனக்கு கிருஷ்ணர் வேடமிட்டு, பல்லக்கில் ஏற்றிச் செல்ல விரும்பினர். எனது குடல்கள் மென்மையானவை, நான் மெல்லியதாக இருந்தேன். இருந்தாலும் முகத்தைக் கலகலப்பாக வைத்திருக்க வேண்டியதாயிற்று. ஏன்? நான் அவதார புருஷராக இருப்பதால்! ஆனால் இரண்டு மாதங்களாக, எனது வயிற்றில் இருந்த வலி (பல்லக்கில் சென்ற நாளிலிருந்து) என்னைப் பாடாகப்படுத்தியது.

ஜெயின் பிரிவைச் சார்ந்த ஒருவர், டோக்காவில் என்னை சந்திக்க வந்து, இறை உணர்வை அடையும் விருப்பத்தை என்னிடம் தெரிவித்தார். நான் கூறுவதைச் செய்வீர்களா என்று கேட்டேன். எனது காலடியில் சரணடையத் தயாராக இருப்பதாக அவர் பதிலளித்தார். என்னுடன் இருப்பவர்களின், குறிப்பாக சிறுவர்களின் பராமரிப்புக்காக அவர் ரூ.10,000 வழங்க முடியுமா என்று கேட்டேன். பல சாக்குப்போக்குகளை முன்வைத்தார். நான் அவரிடம், "எனது காலடியில் உயிரைத் துறக்கத் தயார் என்று கூறுகிறீர்கள், ஆனால் உங்களால் ரூ.10,000 வழங்க முடியாது!" என்று கூறினேன்.

ஒருமுறை, ஒரு யோகி அங்கு வந்து, அவருக்குக் கடவுள் வேண்டுமெனக் கூறவே, நான் அவரிடம் உணவு, தண்ணீர் எதுவும் எடுத்துக் கொள்ளாமல், ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து எனது அறிவுறுத்தல்களுக்காகக் காத்திருக்குமாறு கூறினேன். அவர் ஏழு நாட்கள் தங்கியிருந்து, எட்டாம் நாள் அங்கிருந்து ஓடிச் செல்வதை மண்டலி பார்த்தனர்.

பேச்சின் தலைப்பை மாற்றி பாபா கூறினார்:

ஆந்திராவில் மற்றும் பொதுவாக அனைத்து மையங்களிலும் ஊழியர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. எனக்கு அது குறித்து அனைத்தும் தெரியும். இந்த விஷயத்தில் நான் இறுதி முடிவு ஒன்றை எடுப்பேன். நவம்பர் 14ஆம் நாள் மதியம் ஏழைகளுக்கான நிகழ்ச்சி நடைபெறும்; 15ஆம் தேதி, மெஹராஸாத் விஜயம். நான் ஜலதோஷத்தால் அவதிப்படவில்லை என்றால், இரண்டு நிமிடங்களுக்கு தனித்தனி பேட்டி வழங்குவேன்; இல்லையேல், கூட்டு நேர்காணல்.

ஸாக்கோரியின் கோதாவரி, நான் கிருஷ்ணனாக இருந்தபோது யஷோதாவை நினைவூட்டுகிறார். கடந்த வாரம் வந்ததுபோல, கோதாவரி இந்த வாரமும் வரவிருக்கிறாரா என்று ஆதியிடம் (சீனியர்) விசாரிக்கக் கூறினேன். இந்த சகவாச நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, ஸாக்கோரியில் இரண்டு நாட்களைக் கழிக்க எனது மனம் விரும்புகிறது. நான் வரவேற்கப்படுவதாக கோதாவரி உறுதியளித்துள்ளார்.

பண விஷயத்திற்குத் திரும்பிய பாபா இவ்வாறு கூறினார்:

பணம் வரும்போதெல்லாம், அதை நான் சிறப்பான முறையில் பயன்படுத்துகிறேன். அதைப் பயன்படுத்துவது எப்படி? தமது அனைத்தையும் அர்ப்பணித்து, என்னை முழுவதுமாகச் சார்ந்து இருப்பவர்கள் பலர் உள்ளனர்; பல குடும்பங்களும் உள்ளன. மஸ்துகள், சாதுக்கள், ஏழைகள் மற்றும் பலருக்காக நான் செலவழிப்பதைத் தவிர, அவர்கள் அனைவரும் கடந்த பல ஆண்டுகளாக என்னை சார்ந்திருக்கிறார்கள். மண்டலியின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். போதுமான பணம் இருக்கும்போது, நான் அதை மஸ்துகள், ஏழைகள் மற்றும் பலவற்றிற்கு பயன்படுத்துகிறேன். இத்தனை வருடங்களாக பணம் எப்படி வந்தது, எப்படிப் போனது என்ற கணக்குவழக்குகள் எதுவும் வைக்கப்படவில்லை. இன்னும், நான்

யாருக்காகவும் பொறுப்பை ஏற்கவில்லை. நான் முற்றிலும் தனியாகவே இருக்கிறேன். பணம் வரும்போது எவருக்கும் அதை வழங்க வேண்டும் என்ற கண்டிப்பும் இல்லை. ஒவ்வொரு மாதமும், என்னை சார்ந்திருப்பவர்கள் உட்பட அனைவருக்கும், ரூ.8,000 முதல், ரூ.10,000 வரை செலவிடப்படுகிறது.

அமெரிக்காவில், எலிஸபெத் பேட்டர்ஸன் ரொக்கமாகவும், பொருளாகவும் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார். அவர் என்னை ஆழமாக நேசிக்கிறார், நானும் அவரை நேசிக்கிறேன்.

ஐந்நூறு ஏக்கர் நிலத்தை (மர்டில் பீச்சில்) எனது பெயருக்கு மாற்றியிருக்கிறார். இந்த நிலத்தில் பல பங்களாக்களும், பிற கட்டமைப்புகளும் உள்ளன. ஆனால் நான் எனது 'புது வாழ்வை'த் தொடங்குவதற்கு முன்னர், இவற்றையெல்லாம் வெவ்வேறு குழுக்களுக்கு வழங்கிவிட்டேன். கடவுளை நேசிக்கும் மேல்நிலை ஆத்மாக்களுக்கும், ஆன்மீகப் பாதையில் அடியெடுத்துச் செல்பவர்களுக்கும் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளேன்.

பாபா, அவரது 'புது வாழ்வு' மற்றும் அதில் எதிர்கொண்ட இடர்பாடுகளைப் பற்றியும் கூறி, மேலும் தொடர்ந்தார்:

சத்தாராவில் மேற்கொண்ட சமீபத்திய ஏகாந்தவாசம் நிறைவடைந்ததும், விஷ்ணு என்னிடம், 'அடுத்த மாத செலவுகள் என்னென்ன?' என வினவ, என் அன்பர்களையும் சேவகர்களையும் அழைத்து ஒரு கூட்டத்தை நடத்த நினைத்திருப்பதாக அவரிடம் கூறினேன். ஏகாந்தவாசத்திற்குப் பின்னர், இந்த சகவாச நிகழ்ச்சியை நடத்தும் திட்டத்தைப் பற்றி நான் நினைத்தேன். ஆனால் விஷ்ணு என்னிடம் கேட்டார், 'அடுத்த மாதம் எந்த ஏற்பாடும் இல்லாத பட்சத்தில், கூட்டத்திற்குத் தேவையானதை எப்படி வழங்க முடியும்?'

பின்னர் அனைத்து மண்டலிக்கும் எனது திட்டத்தைத் தெரிவித்ததும், தேர்ந்தெடுக்கப்பட்ட 20 நன்கொடையாளர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ரூ.1,500 வழங்கவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பலர் தங்கள் வசதிக்கேற்ப பங்களிக்க விருப்பம் தெரிவித்ததால் பட்டியலும் பெரிதாகிக்கொண்டே போனது. இதுவரை வசூலான 30,000 ரூபாயில், பெண்டுவிடம் வழங்கவிருக்கும் ரூ.20,000இல் சகவாச நிகழ்ச்சிகளுக்கான உணவு, தங்குமிடம், இதர சௌகரியங்களையும் கவனித்துக்கொள்ள வேண்டும்; மேலும் நான்கு ஏழைகளுக்கான திட்டங்களுக்கு ரூ.10,000 வழங்கப்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த ரூ.30000ஐ எட்டுவதற்கு பற்றாக்குறையாக இருந்த ரூ.5000ஐ டாக்டர் கனகதண்டி, குடும்ப ஸாஸ்திரிகள் இருவரும் மனதார வழங்கினர். அவர்கள் மேலும் உதவி வழங்கத் தயாராக இருந்தனர். அந்த வாய்ப்பை நான் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டேன், மேலும் சத்தாராவில் அடுத்த மாதச் செலவுக்குத் தேவையான ரூ.10,000ஐயும் அனுப்பி வைத்தனர். நான் அவர்களிடம் கேட்ட அனைத்தையும் வழங்கியதன் மூலம், அவர்கள் என் மீது

கொண்டுள்ள அன்பையும் கீழ்ப்படிதலையும் எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நேரத்தில், எனது பாக்கெட்டுகள் மீண்டும் காலியாகும் நிலையில், சாய்பாபா என் உடலில் புகுந்து இப்போது பேசுகிறார்!

அடுத்த ஒரு வருடத்திற்கான எனது திட்டத்தை நான் எடுத்துரைத்தேன். அதை வாக்குறுதியாக எடுத்துக்கொள்ளாதீர்கள். நான் ஒரு வாக்குறுதியையும் மீறவில்லை. 'விலகிச் செல்வது' என்றால் விலகிச் செல்வது என்று பொருள். நான் திரும்பி வரலாம். அற்புதங்கள் நிகழலாம். நான் எனது மௌனத்தைக் கலைக்கலாம். முழுச் சித்திரமும் என் கண் முன்னால் உள்ளது. பல ஆண்டுகளாக என்னை சார்ந்திருக்கும் அனைவருக்கும் நான் ஒரு வருடத்திற்குத் தேவையான ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு வழங்க வேண்டியது அவசியம். நான் எந்த பாரமும் இல்லாத மனதுடன் சுதந்திரமாகச் செல்ல விரும்புகிறேன். நான் 1956 பிப்ரவரி முதல், பதினான்கு மாதங்களுக்கான (1955 டிசம்பர் மற்றும் 1956, ஜனவரி உட்பட) ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதைக் குறித்து டான் ஸ்டீவன்ஸ் மேற்கில் வாழும் என் அன்பர்களிடமும் கூறவிருக்கிறார். அவர்களும் எனக்குப் பணம் அனுப்புவார்கள்.

இப்போது இங்கு இருப்பவர்கள், அவர்களால் முடிந்தால் அன்புடன் வழங்கலாம். முடியாதவர்களின் அன்பிற்கும் எனக்குமிடையே எந்த விதமான திரையும் இருக்காது. மேற்கிலிருந்தும் அன்பர்கள் அனுப்புவார்கள். குஜராத்தி குழுவிலிருந்தும் எதிர்பார்க்கலாம். தெலுங்கு குழுவினரும் தாராளமாக வழங்கலாம். காக்கா பாரியா பதினான்கு மாத ஏற்பாட்டிற்கான அனைத்து அன்பளிப்புத் தொகையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒருவரிடம் வழங்க எதுவும் இல்லை என்றால், குறைந்தபட்சம் ஒரு ரூபாயாவது வழங்குங்கள். இது எனது பணியில் உங்கள் பங்கைப் பிரதிபலிக்கும். அன்புடன் ஒரு ரூபாய் வழங்குவது, அது இல்லாத பட்சத்தில் ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு மேல் என்பேன்.

கேலி செய்யும் தோரணையில் பாபா சைகையால் தெரிவித்தார், "ஆனால் லட்சக்கணக்கில் கொடுக்கக்கூடியவர்கள் அவ்வாறு செய்யலாம்!"

"ரூ.100,000 யார் கொடுக்க முடியும்?" என்று எரச் உரத்த குரலில் கேட்டார்.

மதராஸ் ஏ.சி.எஸ்.சாரி, "ஏன் முடியாது?" என வினவினார்.

"காக்கா பாரியாவிடம் இப்போது எதுவும் கொடுக்க வேண்டாம்" என்று பாபா தொடர்ந்தார். "நீங்கள் உங்கள் இடங்களுக்குச் சென்று, அங்கிருந்து அனுப்பலாம். நன்கொடையாளர்களின் பட்டியலை காக்கா பராமரிப்பார். வீடு வீடாகச் சென்று யாசிக்க வேண்டாம். இதை நீங்கள் பிறரிடம் சொல்லலாம், ஆனால் அவர்களை வற்புறுத்த வேண்டாம். இங்கே நீங்கள் கேட்ட அனைத்தையும் வெளிப்படையாக விவரிக்கவும்.

"சகவாசத் திட்டங்களுக்கான ரசீதுகள் மற்றும் செலவுகள் பற்றிய அறிக்கையை பெண்டு வெளியிடுவார், மேலும் மீதமுள்ள தொகையை

**டாக்டர் கனகதண்டி மற்றும் குடும்ப ஸாஸ்திரிக்கு அனுப்ப வேண்டும். கணக்கு அறிக்கையின் நகல்களை இங்கு இருக்கும் அனைவருக்கும் அனுப்ப வேண்டும்.**”

ஆதி சீனியர், “ஹர்ஜீவன் லால் தனது பங்களிப்பை நிச்சயம் வழங்குவார்” என்றார்.

அதற்கு பாபா, “**அதுவும், இதர தொகைகளும் இன்னமும் வரவில்லை. கிடைக்கப் பெற்றதும் டாக்டர் கனகதண்டி, குடும்ப ஸாஸ்திரி இருவருக்கும் அனுப்ப வேண்டும்**” என்றார்.

பாபா திடீரென மண்டபத்தை விட்டு வெளியேறி, சுமார் ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர், அவர் திரும்பி வந்து, தொண்டையில் ஏற்பட்ட கரகரப்பு இருமலை விளைவிப்பதாக உணர்ந்ததால், அவர் தமது அறைக்குச் சென்றதைக் கூட்டத்திற்கு விளக்கினார்.

பாபா ஏழு நாள் உபவாசம் குறித்த விஷயத்தை முன்வைத்ததும், 20 பேர் எழுந்து நின்றனர். பாபா குறிப்பிட்டார், “**இந்தக் குழுவில் ஐந்துக்கும் மேற்பட்ட அன்பர்கள் உபவாசம் கடைப்பிடிக்கத் தயாராக உள்ளனர் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்த 20 பேரில் ஐவரை நான் தேர்ந்தெடுப்பேன், பிற அன்பர்கள் அதைக் குறித்து வருத்தப்பட வேண்டாம். உங்கள் அனைவரையும் நினைத்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். குடும்ப ஸாஸ்திரி உபவாசம் இருப்பதற்கு முன்னர் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏழு நாட்கள் முழு நேரமும் ஒரே அறையில் அடைக்கப்பட்டு, நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருப்பது எளிது. ஆதி சீனியர் ஒருமுறை 21 நாட்கள் நீர் அருந்தி உபவாசம் இருந்தார்.**”

கோடூரி கிருஷ்ணா ராவ், ஒய். ரங்கா ராவ், டாக்டர் கனகதண்டி, குடும்ப ஸாஸ்திரி, டி.மெஹர் பிரசாத் ஆகியோரை பாபா தேர்வு செய்தார், மேலும் தொடர்ந்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவதாகக் கூறினார். உபவாசத்திற்காகத் தேர்வு செய்யப்படாதவர்களுக்கு அவர் கூறியதாவது:

**கவலைப்படாதீர்கள். உபவாசம் இருப்பதன் விருப்பத்தைத் தெரிவித்ததன் மூலம், நீங்கள் உபவாசத்தை நிறைவு செய்ததாகப் பொருள்படும். நீங்கள் எழுந்து நின்ற போது, உங்கள் தீர்மானத்தில் நேர்மையாக இருந்தீர்கள், அதனால் வருத்தப்பட வேண்டாம்.**

**நான் அனைத்தும் அறிந்தவன். நான் எல்லையற்ற அறிவாற்றல் மிக்கவன், அதனால் மனதின் அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்டவன்; எனது வாழ்வின் ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்பட்டாலும், நான் நித்திய ஆனந்தத்தில் இருப்பவன். இது முற்றிலும் உண்மை. அதே சமயம், உங்களில் நானும் ஒருவன். முற்றிலும் எந்த வேறுபாடும் இல்லை. நீங்கள் அதை அனுபவிக்கும் அந்த கணமே, உங்கள் விழிப்புணர்வு நிலைத்திருக்கும்; அது எப்போதும் இருக்கும். நானும் பெரியவன் அல்ல, நீங்களும் சிறியவர் அல்ல. நாம் அனைவரும் ஒன்று.**

**நீங்கள் புனிதர்களை சந்திப்பதிலும், அவர்களின் சகவாசத்தில் இருந்து அவர்களுக்கு மரியாதை செலுத்துவதிலும் எனக்கு சிறிதளவும் ஆட்சேபனை இல்லை. அவர்கள் அனைவரும் என்னுள் நிலைகொண்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட நபர் மரியாதைக்குரிய பெரிய துறவி என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் ஏன் அவரை மதிக்கக்கூடாது?**

**நீங்கள் குழுக்களாகப் பிரிந்திருந்தாலும், எனக்கு நீங்கள் அனைவரும் ஒன்றுதான். ஆனால் நீங்கள் கடவுளை அறிய விரும்பினால், எனது மேலங்கியைக் கெட்டியாகப் பற்றிப் பிடிப்பதுதான் ஒரே தீர்வு. நீங்கள் கடவுளின் மீது அக்கறை கொண்டிருந்தால், கடவுளுடன் ஐக்கியமாகும் உண்மையான ஏக்கம் இருந்தால், என் ஆடையை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். ஆனால், உங்களுக்கு வேறு ஆசைகள் இருந்தால் - உங்கள் ஆரோக்கியம், செல்வம், குழந்தைகள் போன்றவை வேண்டும் என்றால் என்னிடம் வர வேண்டாம். உங்கள் ஆசைகளை பூர்த்தி செய்யும் பல மகான்கள் உள்ளனர்.**

**நான் ஷா ஸௌதாகர்** (ஈரானில், ஒரு வணிக இளவரசர்).

பாபா, அலோபாவிடம் ஹஃபீஸின் ஒரு குறிப்பிட்ட வசனத்தைப் படிக்கக் கூறி, அதை பின்வருமாறு விளக்கினார்:

**மூன்று வகையான வணிகர்கள் உள்ளனர்:**

1) **வணிகத்தை ஏகபோகமாகக் கொண்ட வணிக மாமன்னர்கள்;**
2) **மொத்த விற்பனையாளர்கள்;**
3) **சில்லறை வியாபாரிகள்.**

**உங்களுக்கு ஊசி போன்ற ஒரு சிறிய பொருள் தேவைப்பட்டால், நீங்கள் ஒரு சில்லறை வியாபாரியிடம் செல்கிறீர்கள், மொத்த விற்பனையாளரிடம் அல்ல, நிச்சயமாக ஒரு வணிக மாமன்னரிடம் அல்ல. எனவே உடல் மற்றும் பொருள் சார்ந்த ஆசைகளுக்காக என்னிடம் வருவதில் எந்த பயனும் இல்லை, ஏனெனில் வரம் வழங்குவது போன்ற முக்கியமற்ற விஷயங்களில் நான் ஈடுபடுவதில்லை.**

அப்போது மாலை ஐந்து மணி. பாபாவும் தெலுங்குக் குழுவினரும் எதிரே இருந்த கூடாரத்திற்கு நடந்து சென்றனர், அங்கு, அரன்காவ்ம் கிராம மக்கள் - ஆண்கள், பெண்கள், குழந்தைகள் - பாபாவை தரிசனம் செய்ய ஒன்றாகக் கூடியிருந்தனர். துனி நாள் ஆதலால் கூட்டம் அதிகமாக இருந்தது. அவர்கள் பஜனைகளும், கீர்த்தனைகளும் பாடி, பாபாவிற்கு மாலை அணிவித்து, தேங்காயுடன் தூபம் ஏற்றி வணங்கினர். பாபா சிறிது நேரம் மத்தளத்தை இசைத்து கிராம மக்களுடன் ஒன்றிணைந்தார்.

மாலை 5:40 மணிக்கு பாபா துனியின் அருகே அமர்ந்தார். மண்டலி மற்றும் சகவாச குழுவில் ஒவ்வொருவரும் வரிசையாக நின்று, எரச் வழங்கிய ஒரு சிறிய சந்தனக் குச்சியைப் பெற்றுக்கொண்ட வேளையில், பாபா ஒவ்வொருவரையும் தழுவி அல்லது முதுகில் லேசாகத் தட்டிக் கொடுத்த பின்பு,

சந்தனக் குச்சியை அவர்கள் கொழுந்துவிட்டு எரிந்த துனியின் நெருப்பில் எறிந்தனர்.

'**சந்தனம், அவர்கள் பிரதிஷ்டை செய்து** (பிராயச்சித்தம்) **சாம்பலாக்க விரும்பும் ஒரு குறிப்பிட்ட விருப்பத்தை பிரதிபலிக்க வேண்டும்**' என்று பாபா அவர்களுக்குக் காலையில் விளக்கினார்.

மாலை 6:00 மணிக்கு 'ஜெய்' கோஷங்களுக்கு மத்தியில் பாபா, எரச்சுடன் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். புறப்படுவதற்கு முன்பு, பாபா டான் ஸ்டீவன்ஸிடமிருந்து விடைபெற்றார்; அவர் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்லும் பயணத்திற்காக அடுத்த நாள் அதிகாலையில் புறப்பட இருந்தார். பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க இந்தியாவில், குறிப்பிடத்தக்க சில இடங்கள் - பஞ்ச்கணியில் அமைந்த டைகர் பள்ளத்தாக்கு குகை, அஜ்மீரில் மொய்னுதீன் கிஷ்தியின் சமாதி - போன்றவற்றை பார்வையிட்டார். ஃபிரான்சிஸ் பிராபஸோன் மாதம் முழுவதும் தங்குவதாகத் திட்டம். இத்துடன், இன்றைய தினம் தெலுங்கு குழுவுடனான முதல் நாள் சகவாச நிகழ்வுகள் நிறைவடைந்தன.

1955 நவம்பர் 13 ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு பாபா மெஹராபாத் வந்தடைந்தார். அவர் தமது அறையில், அரை மணி நேரம் மண்டலியுடன் நிகழ்த்திய உரையாடலுக்குப் பிறகு, தெலுங்கு குழுவினர் இருந்த மண்டபத்திற்கு வந்தார். அவர் உள்ளே நுழைந்ததும், கூட்டத்தில் சிலர் பாபாவிற்கு மாலை அணிவித்த வேளையில் பாபா கூறினார், "**நீங்கள் எனக்கு அன்புடன் மாலை அணிவிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் முதல் நாள், நீங்கள் அனைவரும் எனக்கு அணிவித்ததே போதுமானதாக இருந்தது. என்னிடம் இரண்டு கோட்டுகள் மட்டுமே உள்ளன, நான் அணிந்திருக்கும் இந்த இளஞ்சிவப்பு நிறத்தை நான் விரும்புகிறேன். இப்போது தினசரி மாலை அணிவிப்பதால் கோட்டில் கறை படிந்து கெட்டுப் போய்விட்டது, ஒரு நாள் மட்டும் அணிந்த பின்னர் அதைத் துவைத்தாக வேண்டும்.**"

நேற்றிரவு யார் தூங்கவில்லை என்று பாபா வினவியபோது, சிலர் எழுந்து நின்றனர்; அவர்களிடம் அதற்கான காரணத்தைக் கேட்க, பெரும்பாலான அன்பர்கள் சளி, இருமலால் அவதிப்படுவதாகத் தெரிய வந்தது. இந்தக் குழு, தங்கியிருந்த முழு வாரமும், நீலு தற்காலிக மருந்தகத்தில் மும்முரமாக இருந்தார். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு, எளிதில் ஜீரணமாகக்கூடிய சிறப்பு உணவை அவர் பரிந்துரைத்தார்; அவ்வாறே அவர்களுக்கு வழங்கப்பட்டாலும், அவர்கள் பாபாவின் பிரசாதம் என்று நினைத்து, சகவாச அன்பர்களுக்காகத் தயார் செய்த உணவையும் கேட்டு உண்டனர்!



துனி அருகில் பாபா
(BABA BY THE DHUNI)



மெஹராபாத் (MEHERABAD), நவம்பர் (NOVEMBER) **1955**



பாபாவின் அருகில்
கட்டா சுப்பா ராவ்
(KATTA SUBBA RAO
NEXT TO BABA)

குழுவில் ஒரு சகவாச அன்பர் தனக்குத் தூக்கம் வரவில்லை என்று பாபாவிடம் விளக்கி, "உங்கள் பெயரை பதினான்கு முறை மொழியுமாறு கூறினீர்கள், ஓய்வு பெறுவதற்கு முன்பு நான் அதை உச்சரித்தேன்; திருப்தியடையாததால், தொடர்ந்து மொழிய விரும்பினேன், அதனால் என்னால் தூங்க முடியவில்லை! அத்தகைய சூழ்நிலையில் நான் என்ன செய்ய வேண்டும்?" என வினவினார்.

சிரித்துக்கொண்டே பதிலளித்த பாபா, "**பதினான்கு முறைக்குக் குறைவாக மொழியாதீர்கள். நீங்கள் விரும்பினால் அதற்கு அதிகமாக உச்சரிக்கலாம்**" என்று கூறினார்.

ஆதி துபாஷ், பாபா குறிப்பிட்டதைப் போல, கச்சிதமான உடல் ஆரோக்கியத்துடன் இருந்தபோதிலும் அவருக்கு தூக்கம் இல்லை என்று கூறினார். "**தூக்கம் வரவில்லை என்றால் கவலைப்படாதீர்கள்**" என்று பாபா அறிவுறுத்தினார். "**நான் பதினைந்து நாட்கள் தொடர்ந்து தூங்குவதில்லை. என்னுடன் வாழும் சில மண்டலி கடிதம், கணக்கு போன்றவற்றுடன் பல தூக்கமில்லாத இரவுகளைக் கழிக்கின்றனர். மண்டலி அனைவரும் ரத்தினக் கற்கள். எரச்சுக்கு இணையாக எவரும் இல்லை. இப்படிக் கூறுவதை எரச் விரும்புவதில்லை; என்னைப் பொறுத்தவரை இது அவரில் ஒரு குறை என்று நான் கூறுவேன்.**

**நாங்கள் மஸ்த் மற்றும் பிற பயணங்கள் மேற்கொள்ளும் போது, வழக்கமான அல்லது சீரான உணவு, ஓய்வு இல்லாமல் 15 முதல் 20 நாட்களுக்கு, தொடர்ந்து பயணிக்கிறோம். எனவே உங்களுக்குத் தூக்கம் வரும்போது தூங்குங்கள். விழித்திருக்க முயற்சிக்காதீர்கள்; சிந்தனைகள் உங்களை தொந்தரவு செய்ய அனுமதிக்காதீர்கள். தூங்க முயற்சி செய்யுங்கள். இல்லையென்றால், கவலைப்படாமல் எனது பெயரை உச்சரியுங்கள்!**"

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**எனது பணி தொடர்பான சில கருத்துகளை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தற்போது அது மேற்கொள்ளப்படும் விதம் என் மனதிற்கு உகந்ததாக இல்லை.**" பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, எரச், குஜராத்திக் குழுவிடம் எடுத்துரைத்த ஒவ்வொரு விஷயத்தையும் கூறினார்.

இதற்குப் பிறகு, பாபா, டெல்லி, டெஹ்ரா டூன், மத்திய மற்றும் தென்னிந்தியாவில் வாழும் தமது பெண் அன்பர்களிடமிருந்து கடிதங்களும், தொலைத்தந்திகளும் வந்த வண்ணம் இருந்ததாகக் கூறினார்: "ஏன் இந்த பாரபட்சம்? நீங்கள் ஆண்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கிறீர்கள், பெண்களுக்கு அனுப்பவில்லை. ஏன் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனி ஏற்பாடுகள் செய்ய முடியாது?" பதிலுக்கு பாபா இவ்வாறு கூறினார்.

**என்னைப் பொறுத்தவரை ஆண், பெண் என எதுவும் இல்லை. நான் அனைத்திற்கும் அப்பாற்பட்டவன். ஆனால் ஆண், பெண் என்று வேறுபடுத்திப் பார்க்கும் போது, பெண்மணிகளுக்கும் ஏன் தரிசனத்திற்கான வாய்ப்பளிக்கக்**

கூடாது? சிக்கல் என்னவென்றால், பெண்மணிகள் தங்கள் குழந்தைகளுடன் வர விரும்பும் வேளையில், இயற்கையாகவே கணவர்மார்களும் பின்தொடர்ந்து வருவார்கள். எனவே, அது போன்ற ஒரு கூட்டம் கேள்விக்கு அப்பாற்பட்டது. பெண்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குடிசை கட்ட வேண்டும்!

நீங்கள் இப்போது இங்கே இருக்கும் போது, உங்கள் மனைவிமார்கள், குழந்தைகளையும் இதர விஷயங்களையும் கவனித்துக் கொள்கிறார்கள். அவர்கள் குழந்தைகளை இங்கு அழைத்து வருவதானால், இயல்பாகவே குழந்தைகள் மீது கவனம் செலுத்த வேண்டும், எனவே அது குழந்தைகளின் சகவாச நிகழ்ச்சியாக மாறும் தருவாயில், அவர்களுடன் நான் விளையாட வேண்டியதுதான்! இது தவிர, பயணம் செய்வதில் மிகுந்த சிரமம் உள்ளது. நீங்கள் இடர்பாடுகள், தங்குமிடம் மற்றும் உணவில் உள்ள அசௌகரியங்களைப் பொறுத்துக்கொள்ளலாம், ஆனால் பெண்மணிகளைப் பொறுத்தவரை அது வித்தியாசமானது.

பெண்மணிகளுக்கு சகவாசம் வழங்குவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் அதைப் பற்றி ஒரு கணம் யோசனை செய்தேன் - யோசனை மட்டுமே! வாக்குறுதி எதுவும் இல்லை! சகவாச நிகழ்ச்சிகள் நிறைவடைந்த பின்பு, டிசம்பரில் எனக்கு நேரம் இருந்தால், பெண்மணிகளுக்கு தரிசனம் வழங்க ஒரு நாள் மட்டும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வருவேன். மேற்கத்திய பெண்மணிகளை சந்திப்பது குறித்து, டான் ஸ்டீவன்ஸுக்கும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. பிப்ரவரி 15 முதல், நான் மண்டலியிடமிருந்து விலகி இருக்கப் போகிறேன். இது அனைத்தும் எனது பலவித ஏற்பாடுகளைப் பொறுத்தது. நான் மேற்கத்திய நாடுகளுக்குக் கூட செல்லாமல் இருக்கலாம். இந்தியாவில், நான் ஆந்திரா, ஹமிர்பூர், மத்தியப் பிரதேசம், மும்பை போன்ற நகரங்களுக்கு, ஒரு நாள் மட்டும், பெண்மணிகளுக்குப் பிரத்யேகமாக தரிசனம் வழங்கலாம். இது குறித்து முடிவு செய்யப்பட்டால், நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

நான் அனைவரையும் விட்டு விலகி இருக்கும் ஒரு வருடத்தில், பிரபஞ்சத்திற்காகவும் இந்த சகவாசத்திற்காகவும் நான் பெரிய வேலைகளைச் செய்ய வேண்டும். பெண்மணிகளுக்கான தரிசனம் மற்றும் பிற வேலைகளை, அந்தப் பெரிய வேலையுடன் ஒப்பிட முடியாது என்றாலும், எனது பக்தர்களின் அன்பு முக்கியமற்றதல்ல. அன்பு அதன் அளவில் மிகப்பெரியது. ஒரு வருட பணிக்காகப் புறப்படும் முன்பு, பல விஷயங்களை கவனிக்க வேண்டும். இருந்தாலும், என் அன்பர்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்து, ஆந்திராவில் இரண்டு நாட்களைக் கழிக்க விரும்புகிறேன் - ஒவ்வொரு நாளும் நீங்கள் தேர்ந்தெடுக்கும் இரண்டு மையங்களுக்காக நேரத்தை ஒதுக்க விரும்புகிறேன். இதை நீங்கள் வசதியாக நிர்வகிக்க முடிந்தால் அதைச் செய்யுங்கள்; இல்லையேல் கவலைப்பட வேண்டாம்.

காக்கிநாடாவைச் சேர்ந்த ஒருவர், “பாபா, நீங்கள் ஆந்திராவிற்கு வரும்போது தயவுசெய்து எனது காரைப் பயன்படுத்துங்கள்” என்று கேட்டுக் கொண்டார்.

பாபா பதிலளித்தார்:

**நான் வந்தால் கண்டிப்பாக உபயோகிப்பேன். நான் இப்போது இரண்டு கார்களைப் பயன்படுத்துகிறேன், ஒன்று மெஹர்ஜியிடமிருந்து வந்தது, மற்றொன்று நரிமனுடையது. என்னிடம் கார் இல்லாததால், எவரேனும் அவருடைய காரை என் வசம் வைத்தால், நான் அதைப் பயன்படுத்துகிறேன்.**

**நான் இந்தியாவின் தெற்கு பாகத்தை மிகவும் நேசிக்கிறேன்; அத்துடன் எனக்கு இருக்கும் தொடர்பை நீங்கள் புரிந்து கொள்ள முடியாது. நான் உங்களுடன் எங்கும் இருக்கிறேன். நடைமுறையில் சாத்தியமாக இருந்தால், இரண்டு மையங்களைத் தேர்ந்தெடுக்கவும் - ஒவ்வொரு மையத்திலும் 24 மணிநேர தரிசனம் வழங்குவேன். பெண்மணிகளுக்காக மட்டுமே, ஆண்கள் இல்லை. ஒவ்வோர் இடத்திலும், இந்த 24 மணி நேரத்திலும் குழந்தைகளுக்கென சிறிது நேரம் ஒதுக்கலாம். ஆனால் இந்த முறை வெகுஜன தரிசனம் என்பது கிடையாது - பெண் அன்பர்களுக்கு மட்டுமே. அவர்களும் பாபாவின் அன்பைப் பரப்பலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணிகள் எனது பணியைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் நான் பரிந்துரைக்கும் விஷயத்தில் சமரசம் செய்து கொள்ளாதீர்கள். வேண்டுமென்றே குழந்தைகளை அங்கு அழைக்க வேண்டாம். அது சிரமங்களை விளைவிக்கும். மேலும் இந்த இரண்டு நாட்களுக்கு எனது சௌகரியம், தூக்கம், ஓய்வு, உணவு போன்றவற்றைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.**

பாபா பின்னர் டாக்டர் தனபதி ராவிடம் அவரது நாடித்துடிப்பை உணருமாறு கேட்டுக்கொண்டார். அவர் அதைச் செய்து, சாதாரணமாக இருப்பதாகக் கூறினார்.

எரச், “பாபாவின் வெளிப்பாட்டில் சில மாற்றங்களை நீங்கள் கவனித்திருக்க வேண்டும். சில நேரங்களில் அது மிகவும் பிரகாசமாகவும் மகிழ்ச்சியாகவும், சில சமயங்களில் கவலை தோய்ந்து களைப்பாக இருப்பதையும் காணலாம். இது சில மனநிலைகளுடன் தொடர்புடையது, இது பாபாவின் போக்கில் அவ்வப்போது திடீரென மாறுகிறது” என்று தெரிவித்தார்.

**“உங்கள் அனைவருடனும் நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்”** என்று கூறி பாபா தொடர்ந்தார்:

**இந்த முழுப் படைப்பும் கற்பனையால் நிகழ்வது, மனதின் விளைவு. மனமே உங்களை பிணைக்கிறது, அதுவே உங்கள் இறுதி விடுதலைக்கும் வழிவகுக்கிறது. நீங்கள் என்றென்றும் நித்தியமாக சுதந்திரமானவர்கள். நீங்கள் எதற்கும் கட்டுண்டவர் அல்ல. நீங்கள் மாயையில் சிக்கிக் கொள்வதற்கு உங்கள் மனதே காரணமாகும்.**

இதை நீங்கள் புரிந்து கொள்ளலாம், ஆனால் அனுபவிக்க முடியாது. நீங்கள் உங்கள் மனதைத் தடுத்து நிறுத்தி, அதை வேரோடு களைய வேண்டும். நீங்கள் எனது உண்மை ரூபத்தைப் பார்த்தவுடன், அனைத்தும் மறைந்துவிடும்; பின்னர் உங்கள் சுய அளவிறுதியற்ற நிலையில் இருப்பதைக் காண்பீர்கள்.

அருள் என்றால் என்ன? ஒருவர் 100 சதவிகிதம் தயார் நிலைக்கு வந்து, பின்னர் அவரைக் கடவுளாக உணர்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; அது அருள் அல்ல. படுமோசமான பாவி ஒருவன், என் முன் இருக்கும் வேளையில், என்னில் எழும் திடீர் ஆர்வத்தால் நான் அவனை ஒரே நொடியில் இறைநிலையை அடையச் செய்ய முடியும். இதுவே அருள். என் அருள் யார் மீது விழுகிறதோ, அந்த நொடியில் அவர் நானாக மாறுகிறார். ஆனால் அருள் என்பது மிக மிக கடினம். நான் எப்போதும் அள்ளி வழங்கத் தயாராக இருக்கிறேன், ஆனால் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் எவரும் இல்லை. சூரியன் இப்போது தன் ஒளியை அனைத்து இடங்களிலும் பரவச்செய்கிறது. ஆனால் இங்கே, நாம் இந்தக் கூரையின் கீழ் இருக்கிறோம், எனவே அதன் கதிர்கள் நம்மை ஒளிரச் செய்ய முடியாது. நீங்களே அந்தக் கூரையை எழுப்பினீர்கள். எனவே அதைத் தகர்த்தெறியும் வேளையில், நீங்கள் ஒளியாகவும் சூரியனாகவும் இருப்பீர்கள். எனது கருணை தங்கு தடையின்றி சீராகப் பாய்கிறது, ஆனால் அகங்காரத்தின் இந்தக் 'கூரை' அதை அடையவிடாமல் தடுக்கிறது.

ஆன்மீகம், அன்பு, பணி போன்றவற்றைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம், மேலும் நீங்கள் இப்போது கேட்கும் அனைத்தும், புத்தகங்களில் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் உண்மைப்பொருளைப் பொறுத்தவரை, இவை அனைத்திலும் அதற்கென மதிப்பு எதுவும் இல்லை. 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகம் அதன் தனித்தன்மையில் ஈடு இணையற்றது, ஆனால் அதை ஒருபோதும் உண்மைப்பொருளுடன் ஒப்பிட முடியாது. இந்தப் 'படைப்பு' முழுவதும் எப்படி உருவானது என்று இதில் விளக்கப்பட்டுள்ளது. வேத நூல்களும் இதையே கூறுகின்றன.

என் அருள் உங்கள் மீது வீழ்ந்தால் நீங்கள் நானாக மாறுவீர்கள். ஆனால் அருளை அடைய வேண்டுமாயின் அதற்கான தருணம் வரவேண்டும். அனைத்திற்கும் மேலாக அருள் என்றால் என்ன? இது கொடுக்கல் வாங்கல் ஒப்பந்தம் அல்ல. உதாரணமாக, நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம், நான் உங்களை என்னைப் போலாக்க விரும்புகிறேன்; அது அருள்.

தீய எண்ணங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்னை மறந்துவிடக் கூடாது என்ற கவலையுடன் இருங்கள். உங்களால் முடிந்தவரை என்னை நினைவில்கொள்ள முயன்றால், எதுவும் உங்களைத் தொடாது.

இதையடுத்து, காலை, 9:15 மணிக்கு ஒரு சிறிய இடைவேளைக்குப் பிறகு, சகவாசிகள் மீண்டும் கூடிய வேளையில், குஜராத்தி குழுவினர் முன்னிலையில் பாபா கூறியது குறித்து, ராம்ஜூவின் எழுத்துப்பூர்வமான விளக்கங்கள் வாசிக்கப்பட்டன; தொடர்ந்து பாபா மேலும் சில விஷயங்களைத் தெளிவுபடுத்தினார்.

மதிய உணவுக்குப் பிறகு, மதியம் 1:25 மணிக்கு குழு கூடியதும், மல்லிகார்ஜுன ராவ் இயற்றிய பிரார்த்தனைக் கவிதையை வாசிக்க எம்.ராஜா முஹமது எழுந்தார். பாபா கேலி செய்தார், **"உங்கள் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்காத வகையில் இதைப் படியுங்கள். எனது முன்னிலையில் சிலரின் இதயம் படபடக்கிறது. எரச் விஷயத்தில், நான் அவரை ஓய்வெடுக்க அனுப்பினால், அவர் இடையே விழிக்க நேர்ந்தால், அவரது இதயம் கட்டுக்கடங்காமல் துடிக்கத் தொடங்குகிறது."**

ராஜா முஹமது, தெளிவான, தாழ்ந்த குரலில், பிரார்த்தனையை மொழிந்தார்; பின்னர் அதை பாபா விளக்கினார்:

**நீங்களே உங்களுக்கு முகத்திரையாக இருக்கிறீர்கள். அதை எப்படி அகற்றுவீர்கள்? முன்பு கூறியது போல், எனது பெயரை, குறையாமல் பதினான்கு முறை, நேர்மையாக உச்சரியுங்கள். மீண்டும் மீண்டும் 'பாபா, பாபா, பாபா!' என்று உச்சரிக்கும் போது, ஒரு நாள் முகத்திரை துண்டு துண்டாகக் கிழிக்கப்படும். நான் அதைச் செய்வேன். எவ்வளவுதான் தியானம் செய்தாலும், கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிந்து வழிபட்டாலும் - நான் அதை உங்களுக்கு வழங்கும் வரை, என் அன்பின் பரிசை நீங்கள் அடையப்பெற முடியாது; நான் கொடுக்கும் போது ஒரே நொடியில் முகத்திரை அகன்றுவிடும். என்னிடமிருந்து இந்த அன்பைப் பெறுவதற்கு யார் தகுதியானவர் என்பதை நான் அறிவேன். ஒரு நபர் அதை அடையப் பெறும்போது, 'ஆ' எனும் ஓசை கூட வெளியேறாத வகையில் அவரது உதடுகள் மூடப்படுகின்றன. ஒருவர் உணர்ச்சிவசப்பட்டு, அழுது, கடவுளின் பெயரை மீண்டும் உச்சரித்து, தனது உணர்வுகளை வெளிப்படுத்துவதானால், மக்கள் அவரை கடவுளின் நேசராக எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் அவர் கடவுளை நேசிப்பவர் அல்ல என்று என் அதிகாரத்துடன் சொல்கிறேன்.**

**என் அன்பின் பரிசைப் பெறாத வரை, நீங்கள் என்னை அறிய முடியாது. ஆனால் நீங்கள் என்னை அவதார புருஷராக ஏற்றுக்கொண்டால், எனது கட்டளைகளை நிறைவேற்றலாம்; இந்தக் கீழ்ப்படிதல், அன்பை விட மேலானது.**

**நான் நல்லவனாகவோ அல்லது தீயவனாகவோ இருக்கலாம், ஆனால் என்னை அவதார புருஷராக எடுத்துக் கொண்டால், எனக்குக் கீழ்ப்படியுங்கள். நான் அவதார புருஷர் எனும் நிலயைக் குறித்து, உங்களுக்கு சிறிதளவு சந்தேகம் இருந்தால் கூட, எனக்கு நீங்கள் தலைவணங்கி, மாலை அணிவித்து மரியாதை செய்வது, பாசாங்குத்தனத்தின் அடையாளமாக மட்டுமின்றி, உங்களை ஆழமான படுகுழியில் தள்ளி விடும்! இந்த**

எச்சரிக்கையை நான் உங்களுக்கு வழங்குவது, முதல் முறையல்ல; காலங்காலமாக இதையே வழங்கி வருகிறேன். “எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்” என்பதன் அர்த்தம் என்ன? எனக்குக் கீழ்ப்படிவதே!

நான் மௌனம் கடைப்பிடிப்பதற்கு முன்பு, மெஹராபாத்தில் ஒரு நபர் என்னிடம் வந்து, அழத் தொடங்கினார், “பாபா, என்னை இங்கேயே வைத்துக் கொள்ளுங்கள். அந்த நோக்கத்துடன் நான் வந்துள்ளேன். நான் உங்களுக்கு 100 சதவீதம் கீழ்ப்படிகிறேன்.”

அவருக்கு மனைவியும் குழந்தைகளும் இருந்தனர். நான் கட்டளையிட்டால் அவர் குழந்தையின் கழுத்தை வெட்டுவாரா என்று கேட்டேன். அவர் அதை ஏற்றுக்கொண்டார். அப்போது நான் அவரை நிர்வாணமாக ஊரைச் சுற்றி வரக் கூறினேன்.

அவர் பதிலளித்தார், “நான் அதை எப்படிச் செய்வது?”

நான் அவரிடம், “கீழ்ப்படிதலைப் பற்றிய ஒரு யோசனையை மட்டுமே நான் உங்களுக்குத் தருகிறேன் - அது எவ்வளவு கடினம். உங்கள் குழந்தையின் கழுத்தை வெட்டவோ அல்லது நிர்வாணமாக நடக்கவோ நான் உங்களுக்கு ஒருபோதும் உத்தரவிட மாட்டேன்” என்று கூறினேன்.

உங்களிடமிருந்து இந்த வகையான கீழ்ப்படிதலை மட்டுமே நான் விரும்புகிறேன். என் மீது உங்களுக்கு அன்பு இருந்தால், எனது பெயரை பதினான்கு முறைக்குக் குறையாமல், முழு மனதுடன், அன்புடன் மொழியுங்கள்.

நாளை, காலை 9:00 முதல் 10:00 மணி வரை ஏழைகளுக்கான நிகழ்ச்சியும், 10:00 முதல் 11:00 மணி வரை தனிப்பட்ட நேர்காணலும், மீண்டும் தொடர்ந்து மதியம் 1:00 முதல் 4:00 மணி வரையிலும் நடைபெறும். 15ஆம் தேதி, குறிப்பிட்ட நேரத்தில் - முழு எட்டு மணி நேரமும் நேர்காணல்கள் தொடரும். மாலை 4:00 முதல் 5:30 மணி வரை, சங்கீத கீர்த்தனை (புர்ரா கதா - தெலுங்கு பாடல்கள்) நிகழ்ச்சி நடைபெறும்.

இப்போது எனது பணியைக் குறித்த இந்தக் குழப்பத்தைத் தீர்க்க விரும்புகிறேன். இதையே அனைத்து குழுக்களிடமும் கூறுவேன்.

இந்தக் கட்டத்தில், திருமல ராவ் ஆங்கிலத்தில் ‘உண்மையான பணி’ (REAL WORK) என்ற தலைப்பில் பாபாவின் உரையை வாசித்து, அதே நேரத்தில் தெலுங்கில் மொழிபெயர்த்தார்:

நேர்மையான நோக்கத்துடனும் அன்புடனும் மேற்கொள்ளப்படும் பணி பாபாவின் பணியாகும், கடவுளின் அன்பின் நிமித்தம் இதைச் செய்கிறவர் எப்போதும் அவருடையவர்.

ஆனால் பாபாவிற்காக ஒருவர் செய்யும் மிகப்பெரிய பணி என்னவெனில், நேர்மை, அன்பு, பணிவு, தன்னலமற்ற சேவை ஆகியவற்றில் பாசாங்குத்தனத்தின் எந்த ஒரு தடயமும் இல்லாத வாழ்க்கையை

வாழ்வதாகும். பாபாவின் அன்பு, சமமாக அனைவருக்காகவும் எனும் போது, பாபாவின் அன்பர்கள் ஒவ்வொருவரும் இதைப் பிறர் தெரிந்துகொள்ளும் விதத்தில் திறமையாக செயல்படுவதற்கு, அவரது சொந்த வாழ்க்கையே ஒளிரும் உதாரணமாக இருக்க வேண்டும்; அதனால் அவரது அன்பு, பாபாவின் அன்பையும் உண்மைப்பொருளின் உண்மைத் தன்மையையும் பரப்புவதற்கான கருவியாக மாறும். அத்தகைய வாழ்க்கையும் அத்தகைய அன்பும் இன்றியமையாதது; ஒவ்வொரு சிந்தனை, சொல் மற்றும் செயலுக்குப் பின்னால் உண்மைப்பொருளின் அனைத்து சக்தியும் வியாபித்திருப்பதால், அவை மிக உயர்ந்த பொறுப்பை சுமக்கின்றன.

பாபா தொடர்ந்து கூறினார்:

எனது பணியில் ஈடுபடுபவர்கள், பிறருக்குக் கூறுவதைத் தமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். பப்பிராஜுவின் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் நல்ல உள்ளம் படைத்தவர், எனக்கு சேவை செய்யும் ஆர்வமுள்ளவர். அவர் இடம் விட்டு இடம் சென்று, எனது பெருமையைப் பற்றிய உரை நிகழ்த்துகிறார். 'மாயையான உலகைத் துறந்து, பாபாவை மட்டுமே நினைவில் கொள்ளுங்கள்!' இப்படிப் பல. பெருந்திரளான மக்கள் அவர் சொல்வதைக் கேட்டு, 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று கோஷமிட்டனர். அந்த நேரத்தில், ஒரு பேருந்து விபத்தில், அவரது முழு குடும்பமும் மறைந்ததாக ஒரு தொலைத்தந்தி வருகிறது என்று வைத்துக்கொள்வோம். தொலைத்தந்தி அவரை வந்தடைந்த அந்த கணத்தில், சற்று முன்னதாக, கூட்டத்தில் உலகைக் கைவிடுமாறு அறிவுறுத்திய பப்பிராஜு, தானே தடுமாறினார். அவரை அந்த நிலையில் பார்த்தவர்கள், என்ன நினைத்திருக்கக்கூடும்? உங்களது வார்த்தைகளுக்குப் பின்னால் சக்தி இல்லாதபோது, உங்கள் முகத்தைக் கூட்டத்தினரிடம் காட்டுவதால் என்ன பயன்? நீங்கள் பிரசாரம் செய்வதை நடைமுறைப்படுத்த முடியாவிட்டால் எதுவும் சொல்லாமல் இருப்பது நல்லது.

இந்தச் செய்தியால் பப்பிராஜு பாதிக்கப்படாமல் இருந்தால், மக்களால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, இவை அனைத்தும் மாயை என்று அவர் கூறுவது உண்மையில் அவருக்கு மாயை என்று நினைத்துக் கொள்வார்கள், இதனால் அவர்கள் பாபாவை நேசிக்கத் தொடங்குவார்கள்.

அவர் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாக வைத்துக்கொள்வோம், இப்போது மாயை மீதான பற்று குறைந்துவிட்டது என்று மக்களிடம் கூறுவதானால், அப்போது அவர் பாபாவின் பணியை நேர்மையான இதயத்துடனும் முழு மனதுடனும் செய்கிறார் என்று மக்கள் நம்புவார்கள்.

உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்: பப்பிராஜு கூறுகிறார், 'மெஹர் பாபா யுகத்தின் அவதார புருஷர். அவரை நேசியுங்கள், அவர் ஒருவரே அன்புக்குத் தகுதி வாய்ந்தவர். கோபமடையாதீர்கள், கோபத்தை விழுங்கக் கற்றுக்கொள்ளுங்கள்,' இதுபோன்ற பல. அந்த நேரத்தில், யாரோ

ஒருவர் அவரை அறைய, பப்பிராஜு உடனடியாக நிதானத்தை இழந்து, அன்பை மறந்து, பழிவாங்கத் துடிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; மக்கள் என்ன நினைப்பார்கள்? நீங்கள் கோப உணர்வுகளை அடையப் பெறுவீர்கள், ஆனால் அவற்றை வெளிப்படுத்தாதீர்கள். கோப உணர்வுகள் வராவிட்டால், உயிரற்ற ஜடப்பொருட்கள் போல் ஆகிவிடுவீர்கள். உங்கள் மனம் கோபம் அடைந்தாலும் உங்கள் இதயம் அதை அறியக்கூடாது. பப்பிராஜு நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றை, பிறருக்கு உபதேசம் செய்யக்கூடாது.

அறியாமையில் மூழ்கியிருக்கும் மக்களைத் திசைதிருப்புவது எளிது, ஆனால் நீங்கள் ஆயிரக்கணக்கில் மக்களை ஒன்று திரட்ட முயற்சி செய்தால் பாபாவிற்கு உதவுகிறீர்கள் என்று பொருள்படும்; எனது விருப்பம் இருந்தால் லட்சக்கணக்கான மக்களை நீங்கள் ஒன்றுதிரட்டலாம்.

நான் பப்பிராஜுவை ஒரு மரத்தின் கீழ் அமரச் சொல்கிறேன் என்று வைத்துக் கொள்வோம்; ரங்கா ராவ் மக்களிடம் சென்று, ஒரு துறவி மரத்தடியில் அமர்ந்திருப்பதாகத் தெரிவித்ததும், பப்பிராஜுவை தரிசனம் செய்ய ஆயிரக்கணக்கானோர் வந்து அவருக்கு மாலை அணிவிப்பதானால், இத்தகைய செயலை பாபாவின் பணி என்று கூற முடியுமா? தனிப்பட்ட முறையில், நான் பெரிய கூட்டத்தை விரும்பவில்லை. எனக்கு உண்மையான, நேர்மையான ஆன்மாக்கள் வேண்டும்.

பாபா, ஃபக்கீர் புவாவின் (FAKIR BUA) உதாரணத்தை எடுத்துரைத்தார்:

கீழ் மெஹராபாத்தில் இருந்த 'மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்' ஆசிரமத்தில், பூனாவைச் சேர்ந்த ஃபக்கீர் புவா என்ற ஒருவர் இருந்தார். ஒருமுறை பூனாவிலிருந்து ஒரு முஹமதியர் அவரைப் பார்க்க வந்தவர், ஓரிரு நாட்கள் இங்குத் தங்கியிருந்தார். மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் ஆசிரமம் கலைக்கப்பட்டதும், ஆசிரமவாசிகள் அனைவரும் அவரவர் இடங்களுக்கும், ஃபக்கீர் புவா பூனாவிற்கும் திருப்பி அனுப்பப்பட்டனர். தவறான வதந்திகள், ஒன்றும் அறியாதவர்களை ஒரு சூழலில் எவ்வாறு தொடர்புறச் செய்கிறது என்பதைப் பாருங்கள்! ஃபக்கீர் புவா முற்றிலும் வெறித்தனம் பிடித்தவராக இருந்தார். இந்தியா ஆன்மீக சூழல் நிறைந்த நாடு. ஃபக்கீர் புவா பூனாவிற்குத் திரும்பியபோது, அந்த முஸ்லிம் நபர், ஃபக்கீர் புவா என்னுடன் சில மாதங்கள் இருந்தார், அவர் என் ஆன்மீகப் பொறுப்பாளர் என்று வதந்தியைப் பரப்பினார்; ஏனெனில், ஃபக்கீர் புவா தனது விரல்களால் விசித்திரமான அடையாளங்களைச் செய்வதை அந்த முஸ்லிம் காண நேர்ந்தது. இந்த ஃபக்கீர் புவா, இன்று, அவரது ரசிகர்களின் கூட்டத்தைக் கொண்டுள்ளார், மேலும் அவர் ஒரு புனிதராகக் கருதப்படுகிறார், அதேசமயம் உண்மையில், அவர் ஒரு பைத்தியம்!

1925இல் பாபா மௌனத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கும் முன்னர், அவரிடம் வந்த விபூதியின் (VIBHUTI) உதாரணத்தையும் குறிப்பிட்டார்.

**விபூதி இங்கே தங்கி, நான் அறிவுறுத்தியதற்கு இணங்க ஜபம்** (கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிவது) **செய்து, விரதம் இருந்து வந்தார். சில நாட்களுக்குப் பின்னர், அவர், தான் வந்த இடத்திற்குத்** (நாசிக்) **திரும்பிச் சென்று, அவர் மெஹர் பாபாவின் பொறுப்பாளர், மேலும் அவரைப் பின்பற்றுபவர்கள் பலர் உள்ளனர் என்றும் அங்கு வாழும் மக்களிடம் கூறத் தொடங்கினார். மக்கள் அவருக்கு மிகுந்த மரியாதை அளித்தனர்.**

**இந்தச் செய்தி எனது செவிகளுக்கு வந்தது. இது அவருக்கு நல்லதல்ல என்பதால், அவருடைய நலன் கருதி, இவ்வாறு செய்வதை நிறுத்துமாறு அறிவுறுத்தி ஆதி சீனியரை அவரிடம் அனுப்பி வைத்தேன்; அவர் இணங்குவதற்குத் தயாராக இல்லை. பின்னர் அவர் ஒரு பெண்ணின் தொடர்பில் வந்த போது, அவர் கர்ப்பமான செய்தி அறிந்து, அவர் அனைத்தையும் விட்டுவிட்டு, என்னை நாடி வந்தார். அதற்குள் அவர் தொழுநோயாளியாகிவிட்டார். திரும்பி வந்ததும் நான் அவரை மன்னித்து, அரவணைத்து இங்கேயே இருக்கச் செய்தேன். நான் அவரை இந்தியா முழுவதும் கால்நடையாகப் பயணம் செய்து, உணவுக்காக யாசிக்கச் சொன்னேன்; நான் கூறியபடியே செய்து, திரும்பி வருவதற்குள், அவர் குணமடைந்தார். விபூதி இன்றும் எனது பணியைச் செய்து கொண்டிருக்கிறார்.**

**இந்தியாவில், தாடியுடன், மேலங்கி அணிந்து நடமாடும் மனிதர்களைக் கண்டால், மக்கள் அவர்களை வணங்குகிறார்கள். எனவே மக்கள் கூட்டத்தை வரவழைப்பது மிகவும் எளிது, ஆனால், அதனால் எந்த நன்மையும் இல்லை. ஒரு சில நேர்மையான நபர்களால் மக்கள் மத்தியில் எனது பணியை திறம்படச் செய்ய முடியும். அவர்களின் அன்பு மக்கள் பார்வையில் என்னை தலைசிறந்தவராகக் காண்பிக்கும்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **"உங்கள் சொந்த வாழ்க்கையே பிறருக்கு அன்பின் செய்தியாக இருக்கட்டும். இதன் மூலம் நீங்கள் எனது மகத்துவத்தை மக்களிடையே வெளிப்படுத்துவீர்கள்."**

ஆந்திர சமிதி (ANDHRA SAMITI) உறுப்பினர்களைத் தவிர இதர அனைவரையும் மண்டபத்தை விட்டு வெளியேறுமாறு பாபா கேட்டுக் கொண்டார். ஆந்திராவில் பாபாவின் பணியைச் செய்வதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டது, ஆனால் வழக்கம் போல் அவர்களில் சில சேவகர்களுக்கிடையே தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்தன. பாபா அவர்களிடம் இவ்வாறு கூறினார்:

**இந்த சந்தர்ப்பத்தில், நீங்கள் அனைவரும் கடந்த காலத்தை மறந்துவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்று உங்கள் இதயங்களை முழுமையாகத் திறக்கவும். எதையும் மறைக்காதீர்கள், எவருக்கும் அஞ்சாதீர்கள். எனது மகிமையை நினைத்துப் பாருங்கள். பாபா உங்கள் சம நிலைக்கு இறங்கி வந்துள்ளார். ராஜமுந்திரியில் நான் செய்த**

பணியைப் பற்றி விளக்கினேன், கே.டி.ஆர்.எம். (ஆந்திராவின் நான்கு முக்கியஸ்தர்கள்: குடும்ப ஸாஸ்திரி, தனபதி, ரங்கா ராவ், மல்லிகார்ஜுன ராவ்) குழுவைக் கலைத்து, மையங்களை நிறுவுவதற்கு எதிராக ஆலோசனைகளை வழங்கினேன். ஒவ்வோர் இதயமும் ஒரு பாபா மையம். அதன்பிறகு, பாபா பணிக்காக ஒரு மத்திய அலுவலகத்தைத் திறக்க நீங்கள் முடிவு செய்திருக்க வேண்டும். தவறான புரிதல்கள் ஏற்படுவது இயற்கையானது. அப்போது நான் ஏகாந்தவாசத்தில் இருந்தேன். மண்டலியில் யாரோ ஒருவர் இதைப்பற்றி கேள்விப்பட்டு, நான் ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வந்ததும், என்னிடம் கூற நேர்ந்தது. இப்போது, முதலில் நீங்கள் அனைவரும் உங்கள் கடந்த கால வேறுபாடுகளை மறந்துவிட வேண்டும் என்று விரும்புகிறேன். நான் சொல்வதைச் செய்யுங்கள்.

நீங்கள் முதலில் உங்களுக்குள் அன்பை உருவாக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பிறரைத் தவிர, நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்க முடியுமா? உங்களால் ஒருவரையொருவர் நேசிக்க முடியாவிட்டால், பிறர் மத்தியில் எனக்கான அன்பை உருவாக்க முடியாது. இது சாத்தியமற்றது. ஒரு நீண்ட ரயிலில் இரண்டு என்ஜின்கள் உள்ளன மற்றும் இங்கிருந்து தொலைதூர இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். என்ஜின்கள் ஒரே திசையில் இழுக்கப்படாவிட்டால் ரயில் இறுதி இலக்கை அடையாது. ஒன்று ஒரு திசையிலும் மற்றொன்று எதிர் திசையை நோக்கியும் இழுத்தால் ரயில் நகராது.

எனவே முதலில் உங்களுக்கிடையில் ஓர் அன்பான உறவை உறுதிசெய்யுங்கள் - பிறகு, பிறருடன் பேசுங்கள். இல்லை என்றால் பேசவே வேண்டாம். இப்போது சொல்லுங்கள் நீங்கள் ஒருவரையொருவர் நேசிப்பீர்களா? இல்லை என்றால் சமிதியை விட்டு வெளியேறுங்கள். இது கடினமானது, நடைமுறையில் சாத்தியமற்றது. நீங்கள் அனைவரும் பாபாவை நேசிக்கிறீர்கள், ஆனால் உங்கள் மனம் வேறுபட்டது. மனங்களின் சந்திப்பை எப்படி ஏற்படுத்துவது? உதாரணமாக, ஆந்திராவில் தனக்கு, பெரும் செல்வாக்கு இருப்பதாக தனபதி நினைக்கிறார். அவர் பாபாவை நேசிக்கிறார், இடம் விட்டு இடம் பயணம் செய்கிறார், எனக்குக் கீழ்ப்படிகிறார். 'இந்த முதியவருக்கு புத்தி இல்லை' என்று மல்லிகார்ஜுனா சொல்லலாம்! 'நான் பெரிய, செல்வாக்கு மிக்கவர்களுடன் பழகுகிறேன். பாபாவின் பணி எப்படிச் செய்யப்பட வேண்டும் என்பது எனக்குத் தெரியும்.' அப்போது தனபதி இது உண்மையல்ல என்று கூறுவார். இருவருமே தவறு என்று மாணிக்யால ராவ் சொல்வார்! அவர் இளமையாக இருக்கிறார், இந்த இரண்டு (தனபதி மற்றும் மல்லிகார்ஜுனா) வயதான, பழைய பாணியைக் கடைப்பிடிக்கும் நபர்களோடு ஒப்பிடுகையில், அவர் சிறப்பாகப் பணிபுரியும் திறன் படைத்தவர் என்பதை அறிவார். பண விவகாரங்களுக்கு யார் பொறுப்பு என்று தனபதி ராவ் கேட்பார். ரங்கா ராவ்? இல்லை!

தனபதி, பாபாவிடம், 'ரங்கா ராவின் குடும்பம் பசியால் வாடுவதால், பண விவகாரங்களில் அவரைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டாம்' என்று கேட்பதாக வைத்துக்கொள்ளுங்கள். 'அவரைப் பொறுப்பில் அமர்த்துவதால் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் உங்கள் மனமே உங்களை ஏமாற்றுவதற்கு இசைவானதாக இருக்கும்.' உங்களுடைய இத்தகைய நிலைப்பாட்டை விட்டு விடுங்கள். ஒருவரையொருவர் நேசித்து, ஒருவருக்கொருவர் அன்பாகப் பேசிப் பழகாவிட்டால், எனது சொந்த பணியை நானே செய்வேன். இந்த அடிப்படையில் நீங்கள் பணிபுரிவதானால், நான் மகிழ்ச்சி அடைவேன்; ஆனால் முதலில் உங்களுக்குள் அன்பை உருவாக்க முயற்சி செய்யுங்கள். வேறுபாடுகள் இல்லை என்றால், வேலை எதுவுமில்லை, ஆனால் தூய இதயத்துடன் இந்த வேறுபாடுகளை அகற்ற முயற்சிக்கவும். தனபதி உங்களிடம் ஒன்றைச் சொன்னதாக வைத்துக்கொள்வோம், வெளியளவில் நீங்கள் அதை ஒப்புக்கொள்கிறீர்கள்; ஆனால் நீங்கள் உண்மையில் சொல்ல விரும்பியதைச் சொல்ல உங்களுக்கு வாய்ப்பு இல்லை என்று நினைக்கிறீர்கள். இந்த மாதிரியான மனப்பாங்குடன் உருவாகும் சமரசத்தை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

இப்போது, இந்த நிபந்தனைகளுக்குள் பணிபுரிய நீங்கள் தயாரா என்று சொல்லுங்கள். அதாவது, முதலில் உங்களுக்குள் அன்பை உருவாக்க வேண்டும். பாபா ஒரு வருடம் வெளியே செல்கிறார் என்று வைத்துக்கொள்வோம், அவர் இல்லாத பட்சத்தில் நீங்கள் அன்பான சூழ்நிலையில் பணிபுரிய வேண்டும். அதன் பிறகு, நான் அதைப் பற்றிப் பார்த்துக்கொள்கிறேன். ஆனால், ஓராண்டு காலம், எந்தச் சண்டை சச்சரவும் இல்லாமல், அன்பாக உழைக்க வேண்டும். உங்களால் அதைச் செய்ய முடியுமா?

"முயற்சிப்போம் பாபா" என்றார் குடும்ப ஸாஸ்திரி.

கவனம் செலுத்துங்கள்! இதுவே தக்க தருணம். இதற்குப் பின்னர், எந்த வாய்ப்பும் வராது. 'பாபா பணி' என்றால், நீங்கள் அனைவரும், என்னவென்று நினைக்கிறீர்கள்? பாபா, அவதார புருஷர் என்று மத்தளம் கொட்டி பறைசாற்ற எவரையேனும் வெளியே அனுப்ப வேண்டுமா? அல்லது என்னுடைய நோக்கத்தைப் பிரச்சாரம் செய்ய வேறு ஏதேனும் வழி இருக்கிறதா? நீங்கள் பாபாவை நேசிக்கிறீர்கள் என்பதற்கு உங்கள் வாழ்க்கையே பிறருக்கு உதாரணமாக இருக்கட்டும். அப்போது, அது பிறரை ஈர்க்கும் வகையில் அமையும். எனது வாழ்க்கை முறை மற்றும் நான் வழங்கும் உரைகளைப் பற்றி பிறருக்குச் சொல்லுங்கள், ஆனால் ஒருபோதும் மிகைப்படுத்தாதீர்கள்! அற்புதங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பாபா அவதார புருஷர் என்கிறீர்கள், ஆனால் எவரேனும் உங்களை நம்ப மறுத்தால், சீற்றமடையவோ, கோபப்படவோ வேண்டாம். அன்புடன் அமைதியாக விளக்க முயற்சிக்கவும். சரியான

**ஆர்வமும் உற்சாகமும் இருந்தால் இதையெல்லாம் செய்யலாம். பிறகு நான் உங்கள் கால்களைக் கழுவுவேன்! அனைத்தையும் அன்புடன் செய்யுங்கள்.**

ரங்கா ராவ் உடனே, "நாங்கள் அதை மிகவும் நேர்மையாகவும், மேலும் அதிக முயற்சியுடனும் செய்வோம், குறிப்பாக நீங்கள் இல்லாத நேரத்தில்" என்றார்.

**"நான் ஒரு வருடம் வெளியே இருப்பேன். இதையே குஜராத்தி குழுவிற்கும், டான் ஸ்டீவன்ஸுக்கும் கூறினேன். நான் இல்லாத நேரத்தில், உங்கள் மனங்களை சுத்தமாக வைத்து, ஒருவரையொருவர் நேசிக்க முயற்சி செய்யுங்கள். நான் திரும்பி வந்ததும் அனைத்தையும் பார்த்துக் கொள்கிறேன்."**

திருமல ராவின் உதவி அவர்களுக்குத் தேவை என்று ரங்கா ராவ் கூறினார்.

அரசு உயர் பதவியில் பணிபுரியும் செல்வாக்கு மிக்க திருமல ராவ் இவ்வாறு பதிலளித்தார்: "மத்திய அமைப்புக்கு உதவிக்கரம் நீட்டும் நிலையில் நான் இல்லை. பாபா மீதான பக்தி, நீங்கள் அனைவரும் எனது நண்பர்கள் என்று கூறுகிறது, ஆனால் மத்திய அமைப்பிற்காக வேலை செய்ய எனக்கு நேரமில்லை. என் இதயம் எப்போதும் பாபாவின் காலடியில் இருக்கும். என்னால் என்ன செய்ய முடியுமோ, அதை நான் செய்வேன் - ஆனால் குழுவின் உறுப்பினராக அல்ல. எனினும், ஒரு கூட்டத்திற்காக அழைப்பதானால் நான் அதில் கலந்துகொள்வேன்."

பாபா அறிவுரை வழங்கினார், **"திருமல ராவை இது விஷயத்தில் பிணைக்காதீர்கள். அவர் சுதந்திரமாக இருக்கட்டும். அவர் விரும்பியபோது வருவார். கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், நீங்கள் அவருடைய ஆலோசனையைப் பெறலாம், அவருக்கு நேரம் இருந்தால், அவர் உங்களுக்கு உதவுவார். அவரை உங்கள் கூட்டங்களில் பங்கேற்க கட்டாயப்படுத்த வேண்டாம். சுருக்கமாகச் சொன்னால், அவர் மையத்தின் வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை."**

திருமல ராவ், "நான் உங்களுக்கு உதவுவேன்; ஆனால், யார் யார் என்ன செய்கிறார்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் ஒரு சாதாரண நபரைப் போல வந்து பணிபுரிவேன்; எனக்கு முன்னதாகவே தெரியப்படுத்தினால், கூட்டத்தில் கலந்துகொண்டு என்னால் இயன்ற ஆதரவை வழங்குவேன்."

விவாதத்தை நிறைவுசெய்த பாபா, **"நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கவும், நம்பவும் வேண்டும். பிறர் மீது அவநம்பிக்கை கொள்ளாதீர்கள். இது உங்களுக்கு ஒரு சிறிய விஷயம். இப்போது நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கவும், நம்பவும் தயாராக இருக்கிறீர்களா என்று கூறுங்கள்"** என்று அறிவுறுத்தினார்.

ரங்கா ராவ் அறிவித்தார், "நான் கைவிட்டுவிட்டேன்!"

தனபதி, “எங்களிடையே அன்பை உருவாக்க நான் உதவுவேன், தொடர்ந்து நாங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அன்பின் செய்தியைப் பரப்புவோம்” என்றார்.

பாபா ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகக் கேட்கவே, அனைவரும் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதாக உறுதியளித்தனர்.

தலைப்பை மாற்றி, பாபா இந்தக் கதையைக் கூறினார்:

**நான் டெஹ்ரா டூனில் இருந்தபோது, எம்.ஏ. பட்டம் பெற்ற ஒரு சுவாமி என்னைப் பார்க்க வந்தார். டெல்லி கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அவர் என் இதயத்தைக் கவர்ந்தார். என்னைப் பார்த்ததும் நான் சொன்னதைச் செய்வேன் என்றார். பின்னர் அவர், பாபா அன்பர்களை சந்தித்து, நான் அவரை எனது பொறுப்பாளராக நியமித்து விட்டதாகக் கூறி, எனது பெயரில், ஒருவரிடம் ரூ.500, மற்றொருவரிடம் ரூ.2,000 வசூல் செய்துள்ளார். இந்த இரண்டு அன்பர்களும் இதுவரை என்னை தரிசனம் செய்யவில்லை. அவர்களில் ஒருவர் ஆதிக்கு கடிதம் எழுதி, தரிசனம் கோரி, என் மீதான அன்பினால் என்ன நடந்தது என்பதை அவருக்கு விளக்கினார்!**

**முக்கிய விஷயம் அன்பை அடையப் பெறுவதும், அதைக் கொடுப்பதும் ஆகும். அனைத்தும் அன்பில் சங்கமமாகிறது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஒருவருக்கொருவர் அன்பில் நெருக்கமாக இருப்பது போல, நீங்களும் ஒரு குடும்பத்தைப் போல் ஒவ்வொருவருடனும் நெருக்கமாக இருக்கவேண்டும். ஒருவரையொருவர் நேசியுங்கள், பின்னர், ஒருவரையொருவர் நேசிக்கச் சொல்லுங்கள். உலகம் முழுவதும் உங்களுக்கு எதிராகச் சென்றாலும், வருந்தாதீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை உலகம் அறியாது. அதைக் கண்டு கொதிப்படைய வேண்டாம். ஒருபோதும் திகைப்படையவும் வேண்டாம். இங்கே ஒரு சில அன்பர்கள் மட்டுமே இருப்பதாகத் தோன்றுகிறது, ஆனால் நீங்கள் என்னை நேர்மையாகப் பின்பற்றினால் முழு உலகையும் மாற்றிவிடுவீர்கள்.**

**நான் ஒரு வருடம் வெளியே செல்ல இருக்கிறேன். என்னுடன் அல்லது எரச்சுடன் தொடர்பு கொள்ளாதீர்கள். ஆந்திராவை சேர்ந்த எவரும் ஆதியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல், ஆந்திரா மையம் மூலமாகத் தொடர்பு கொள்ள வேண்டும்.**

**எவரேனும் உங்களை அறைந்தால், அன்புடன் அவரது கையைப் பிடித்து அவரிடம், “பாபாவை நேசியுங்கள்!” என்று கூறுங்கள். ஆனால் பாபாவை எவரும் இந்த அளவுக்கு நேசிப்பதில்லை, என்னையும் சேர்த்து!**

இத்துடன் பாபா நிகழ்ச்சியை நிறைவுசெய்து, ஆந்திரா குழு அன்பர்களின் விருப்பத்திற்கு இணங்க, பாபாவுடன் அவர்களின் புகைப்படங்களை, பையா பாண்டே, பி. நாராயண ஸ்வாமி இருவரும் எடுத்தனர்.

தேநீருக்குப் பிறகு, மதியம் 3:10 மணிக்கு, குழு, மண்டபத்தில் பாபா முன் கூடியது. பாபா கேட்டுக்கொண்டதன் பேரில், குடும்ப ஸாஸ்திரி சந்திப்பின் போது, நடந்ததை மீண்டும் கூறினார். கட்டா சுப்பா ராவ் அதிருப்தியுடன் காணப்பட்டார், அப்போது பாபா குறிப்பிட்டார்: “**கட்டா சுப்பா ராவ் உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்! நான் ஏலூரில் இருந்தபோது, அவர் எனக்கு நன்றாக சேவை செய்தார், எனது சௌகரியங்கள், உணவு, தங்குமிடங்கள் மற்றும் மண்டலிக்காகவும் அனைத்து செலவுகளையும் செய்தார். அவரை உங்கள் ஆய்வுக் குழுவிலிருந்து எப்படி விலக்கி வைத்தீர்கள்?**”

தனபதி விளக்கினார், “நாங்கள் சேவகர்களை மட்டுமே விரும்புகிறோம், அன்பர்களை அல்ல. பணிக்காக நேரத்தையும் பணத்தையும் செலவு செய்யக்கூடியவர்களை மட்டுமே நாங்கள் தேர்ந்தெடுத்தோம்; இல்லையெனில், நாங்கள் செயல்பட முடியாது. பிறரைப் பற்றி நாங்கள் கவலைப்படுவதில்லை!”

பாபா கேட்டார், “**தனபதி, ‘நாம் பிறரைப் பற்றி கவலைப்படுவதில்லை’ என்பதன் அர்த்தம் என்னவென்று தெளிவாகச் சொல்லுங்கள்? இதை நீங்கள் உங்கள் ஆழ் இதயத்தில் இருந்தோ அல்லது எந்தத் தீய எண்ணத்துடனும் சொல்லவில்லை என்றும் எனக்குத் தெரியும். உங்களிடம் புதிய செயற்கைப் பற்கள் இருப்பதால், நீங்கள் தடுமாறுகிறீர்கள்!**”

தனபதி, “இல்லை பாபா, யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக நான் சொல்லவில்லை” என்றார்.

கட்டா சுப்பா ராவை அனைவரின் முன்னிலையிலும் எழுந்து நின்று, அவரது உள்ளத்தில் உள்ளதை வெளிப்படையாகத் தெரிவிக்கும்படி பாபா கேட்டுக் கொண்டார். அவர் கோபத்தில் வெடித்து கூறினார்: “நான் ஒரு சேவகராக இல்லாமல் இருக்கலாம், ஆனால் நான் ஒரு பாபா அன்பன்! எனக்கு பாபா மீது பக்தி இருக்கிறது, எனது தோட்டத்தில், அவர் அமர்ந்திருந்த இடத்தில் நான் ஒரு கோவிலை எழுப்பினேன். அங்கு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மக்கள் அவரை வணங்க வருகின்றனர். குழுவில் உறுப்பினராக இருந்ததன் மூலம் நான் ஏதாவது பங்களித்திருக்க முடியும் என்று நினைக்கிறேன். அது எப்போது உருவாக்கப்பட்டது என்பது கூட எனக்குத் தெரியாது! அவர்கள் என்னைக் குழுவில் இணையுமாறு கேட்கவுமில்லை. நான் ஒதுக்கிவைக்கப்பட்டதாக உணர்கிறேன். சமிதி குழு செயல்படும் விதத்தில் நான் அதிருப்தி அடைகிறேன்; மேலும் பாபா அன்பர்களிடையே ஒற்றுமை இல்லாததையும் பார்க்கிறேன்.”

பாபா, “**இதற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**” என்று ரங்கா ராவிடம் கேட்டார். ரங்கா ராவ் குற்றச்சாட்டை மறுத்து, பாபாவுடன் ஏதோ தனிப்பட்ட முறையில் பேச விரும்புவதாகக் கூறினார். சமிதி உறுப்பினர்களுக்கும் சுப்பா ராவிற்கும் இடையே காரசாரமான வாக்குவாதம் உருவானபோது பாபா குறுக்கிட்டார்:

“**என்னுடைய அன்பர்கள் ஒவ்வொருவரின் இதயமும் எனது சன்னதி என்றும், அவரே அதன் அர்ச்சகர் என்றும் நான் அனைவரிடமும் சொல்லி**

வருகிறேன். கட்டா சொல்வது உண்மை தான். அவர் என்னை நேசிப்பதாகக் கூறுகிறார், ஆனால் ஆன்மீகத்தை புரிந்து கொள்ளவில்லை. அவரும், அவரது குடும்பத்தினரும், பிறரும் என்னை வணங்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அதுவே என்னை நேசிக்கும் வழி. ஏலூரை சேர்ந்த பிற அன்பர்களும் என்னுடன் தொடர்புடையவர்களும், அவருடைய அன்பை அலட்சியப்படுத்துகிறார்கள். நான் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன், அது உங்கள் எல்லா சிரமங்களையும் தீர்க்கும்; இது, வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த அனைவருக்கும், மற்றும் குழு உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

“எனது பணிக்காக ஆந்திராவில் அமைக்கப்பட்ட சமிதியைப் பற்றி: முதலில், உறுப்பினர்களிடையே ஒருவருக்கு ஒருவர் அன்பு நிலவட்டும். அப்போது மட்டும்தான் அவர்கள் அன்பைப் பற்றி பிறரிடமும், பாபாவின் அன்பர்கள் இருக்கும் வெவ்வேறு இடங்களிலும் பேச வேண்டும்.

“முதலில், உங்களிடையேயும் உங்களுக்குள்ளும் அன்பை நிலைநிறுத்தி, பின்னர் அதைக் குறித்து பிறரிடம் பேசுங்கள். ஆந்திர சமிதிக்கு வெளியே இருக்கும் ஓர் உண்மையான அன்பர், குழுவில் இருப்பவரை விட மிகவும் பயனுள்ள பணியைச் செய்ய முடியும். ஒருவர் சமிதியில் உறுப்பினராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் என் மீதான அன்பு எனது பணியைச் செய்ய வைக்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட அன்பரும் இந்தப் பணியைச் செய்யலாம். ஓர் உறுப்பினர் மற்றொருவரை விட பெரியவர் என்ற எண்ணம் எதுவும் இருக்கக்கூடாது. உங்கள் இதயத்தில் பாபா இருக்கட்டும்.”

1956, பிப்ரவரி 15 முதல் நான் ஒரு வருடத்திற்கு ஏகாந்தவாசம் மேற்கொள்ள எங்கேனும் சென்றுவிடுவேன். ஒவ்வொரு சேவகரும் என்னை நேசிக்க வேண்டும், என் அன்பைப் பரப்ப வேண்டும். குறைந்தபட்சம் ஒரு வருடமாவது இதைச் செய்யுங்கள். அதன் பிறகு நான் பார்த்துக்கொள்வேன். ஆனால் கடிதப் பரிமாற்றம் இல்லை, எதுவும் இல்லை. நீங்கள் ஆதிக்கு எழுதலாம்.”

தனபதி உடனே, “எந்தவொரு கடிதமும் ஆந்திரா மெஹர் மண்டல் அலுவலகம் வழியாகச் செல்ல வேண்டும்” என்று பரிந்துரைத்தார்.

பாபா அவரைத் திருத்தினார், “என் அன்பர்களையும், அவர்களுக்கு என்மீதான அன்பையும் ஒழுக்கத்துடன் பிணைக்க முயற்சிக்காதீர்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர் அன்பை வெளிப்படுத்தும் வாய்ப்பு இருக்க வேண்டும்.

“நீங்கள் ஒரு பெண்ணை வெறித்தனமாக காதலிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் அவருக்கு ஒரு கடிதம் எழுதுகிறீர்கள், அது உங்கள் அன்பையும் ஆர்வத்தையும் முழுவதுமாக வெளிப்படுத்துகிறது; அது உங்கள் காதலியின் கைகளில் சென்றடையும் முன்னர் குடும்பத்தில் உள்ள மூத்தவர்களிடம் அதைக் காட்ட விரும்புவீர்களா?”

அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர், மல்லிகார்ஜுனா விளக்கினார், "டாக்டர் தனபதி கூறுவதன் அர்த்தம் என்னவென்றால், வீட்டு விவகாரங்கள் அல்லது தனிப்பட்ட விஷயங்களைத் தவிர, பாபா பணி மற்றும் சமிதியுடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு கடிதமும் எங்கள் அலுவலகம் வழியாகச் செல்ல வேண்டும். குறைந்தபட்சம் ஒரு நகலையேனும் குழுவிற்கு அனுப்ப வேண்டும்."

பாபா கூறினார்: "**ஆதிக்கு எழுத வேண்டுமானால் நேரடியாக எழுதலாம். ஆனால் ஆந்திரா மண்டல் விவகாரம் சம்பந்தப்பட்ட விஷயம் என்றால் அவர்களின் அலுவலகத்திற்கு ஒரு நகலை அனுப்புங்கள். எனக்குக் காதல் கடிதம் எழுதுவதாக இருந்தால் அவர்களுக்கு நகல் ஒன்றை அனுப்ப வேண்டிய தேவையில்லை. ஆனால் உங்கள் காதலைப் பற்றி எனக்கு ஏற்கனவே தெரியுமேயானால், எழுதி என்ன பயன்? நான் சொல்வது சரிதானே?**"

குடும்ப ஸாஸ்திரிகள் உடனே, "பாபா, தனபதி சொன்னதையெல்லாம் கை கழுவிவிட்டேன்" என்றார்.

பாபா பதிலளித்தார், "**நான் அவரை நன்றாகப் புரிந்துகொள்கிறேன், அவர் கூறியது பணியைப் பற்றியது, அன்பர்களைப் பற்றியது அல்ல.**"

கட்டா சுப்பா ராவ் குறை கூறி முறையிட்டார்: "பல சேவகர்கள் உள்ளனர், ஆனால் சமிதி உருவாக்கப்பட்டபோது, அனைவரையும் ஏன் அழைக்கவில்லை? ஏலூர், தாடேபள்ளிகுடம் போன்ற இடங்களிலிருந்து ஒரு சிலரை மட்டும் அழைத்தது ஏன்?"

தனபதி எதையோ கூற வந்த போது, பாபா இடையே குறுக்கிட்டு கூறினார், "**கடந்த ஒரு மணி நேரமாக உங்கள் நாக்கு சற்று சறுகி, கட்டாவைக் கலங்கடித்துவிட்டது! மீண்டும் அறியாமல் எதையாவது உச்சரித்தால், அது மேலும் தவறான புரிதலை உருவாக்கும்!**"

மல்லிகார்ஜுனா கூறுகையில், "சமிதி நிறுவும் போது, பாபா பணிக்காக நேரத்தை ஒதுக்கத் தயாராக இருந்தவர்கள் மற்றும் பிறருக்கு விளக்கிக் கூறும் வகையில் கல்வி அறிவு உள்ளவர்களையும் அழைக்க நினைத்தேன். கட்டாவிற்கு ஆங்கிலம் தெரியாது, முக்கியமாக அவருக்கு நேரமுமில்லை. ஆந்திரா முழுவதிலுமிருந்து அன்பர்களை வரவழைத்தோம், கட்டா சுப்பா ராவ் ஒரு பக்திமிக்க பாபா அன்பர், ஏலூரில் பாபாவின் பணியில் ஈடுபட்டுள்ளார் என்றும் எனக்குத் தெரியும், ஆனால் ஏலூர் மற்றும் பிற இடங்களிலிருந்து அனைவரையும் அழைக்க முடியாததால், ஒவ்வோர் இடத்திலிருந்தும் சிலர் அழைக்கப்பட்டனர்" என்று விவரித்தார்.

பாபா கூறினார், "**நீங்கள் கூறுவது உண்மையாக இருந்தால் பரவாயில்லை. அப்படியானால், கட்டா உங்களை ஆசீர்வதிக்க வேண்டும்!**"

மல்லிகார்ஜுனா ஆங்கிலத்தில் பேசியது கட்டா சுப்பா ராவிற்குப் புரியாததால், இதை அவர் பாபாவிடம் கூறவே, பாபா, மல்லிகார்ஜுனாவை தெலுங்கில் மீண்டும் எடுத்துரைக்குமாறு அறிவுறுத்தினார். டி.வி.எஸ். பிரசாத், பாபாவிடம், "சமிதி உருவானபோது, நானும் அங்கு இருந்தேன்.

எல்லாவற்றையும் அக்குவேறு ஆணிவேறாக அலசி தீர்வுகாணப்பட்டது. நான் அதற்கு சாட்சியாக இருந்தேன்" என்று கூறினார்.

குடும்ப ஸாஸ்திரி அப்போது, "இரண்டு சுப்பா ராவ்களும் நான் ஏதாவது கூற வேண்டுமென விரும்புகிறார்கள்" (சுப்பா ராவ் என்ற பெயரில் இருவர் இருந்தனர்) என்று கூறினார்.

கூட்டத்தில் ஒருவர் இடையே குறுக்கிட்டு, "நீங்கள் ஏற்கனவே எல்லாவற்றையும் விரிவாகக் கூறியுள்ளீர்கள், அதை நீங்கள் அவர்களிடம் சொல்ல வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்" என்றார்.

ஸாஸ்திரி பதிலளிக்க ஆயத்தமானபோது பாபா கூறினார்: "**கடந்த காலத்தை மறந்துவிட வேண்டும் என நான் இன்று சமிதி உறுப்பினர்களிடம் கூறினேன். எதிர்காலத்தில் அவர்கள் நல்லிணக்கத்துடனும் அன்புடனும் செயல்பட வேண்டும். உங்களுக்குள் அன்பு இருந்தால், நீங்கள் எனது பணியைப் பரப்புவீர்கள். இப்போது நீங்கள் கடந்த காலத்தை மீண்டும் அலசி ஆராய்கிறீர்கள், அதாவது எனது முதல் உத்தரவை மீறுகிறீர்கள் என்று அர்த்தம். கட்டா சுப்பா ராவின் அன்பைப் பற்றி எனக்குத் தெரியும். அவர் என் மீது அதீத பாசமுள்ளவர். அவர் எனக்காகவும், இதர அன்பர்களுக்காகவும் எதையேனும் செய்ய விரும்புகிறார். அவர் விரும்புவதைச் செய்ய அவருக்கு சுதந்திரத்தை வழங்கியதுபோல, குழுவும் அதன் விருப்பத்திற்கிணங்க எதையும் செய்ய அதற்கு சுதந்திரம் உண்டு.**"

கட்டாவை நோக்கி பாபா கூறினார்: "**நீங்கள் குழுவில் இல்லை என்றால், சமிதிக்கு வெளியில் இருந்து, உங்களால் செய்ய முடிந்த எனது பணி அனைத்தையும் செய்து காட்டுங்கள். குழுவின் மீது குறை காண்பானேன்? நீங்கள் விரும்புவதை ஏன் செய்யக்கூடாது? பாபாவின் அன்பை அதன் அங்கத்தினர்கள் மூலம் பரப்புவதற்கு இந்தக் குழு உருவாக்கப்பட்டது. அதற்கு அதன் வேலை இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட அன்பரும் அவரது வழியில் ஒரு சேவகர்.**

"**நீங்கள் அந்தப் பணியைச் செய்தால், குழுவை விட அதிகமாகச் செய்ய முடியும். இது உங்கள் பணியின் மீது நீங்கள் காட்டும் ஆர்வத்தையும், அன்பின் ஆழத்தையும் பொறுத்தது. தனிப்பட்ட சேவகர்களை விட, குழு உறுப்பினர்கள் பெரியவர்கள் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். தனிப்பட்ட சேவகர்கள், குழு உறுப்பினர்களின் நேர்மையில் நம்பிக்கையும், திருப்தியும் அடையவில்லை என்றால், அவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?**

**என்னைப் பொறுத்தவரை, அன்பும், பண்புள்ள இதயமும் இன்றியமையாதது, உலக அந்தஸ்து அல்ல. தலையும்** (அறிவு) **இதயமும்** (அன்பு) **சமநிலையில் இருந்தால், அது சிறந்ததாக இருக்கும், மேலும் தலை, இதயம், செல்வம் ஆகியவற்றின் கலவையாக இருந்தால் - அது உண்மையில் அதைவிட சிறந்த ஒன்றாக இருக்கும்!**" இத்துடன் விவாதம் முடிவுக்கு வந்தது.

பஜனை நிகழ்ச்சி ஆரம்பமானது, பாபா மத்தளத்தை இசைத்தார். காக்கிநாடாவைச் சேர்ந்த அன்பர் ஒருவர் நடனமாடத் தொடங்கினார்; முழு சூழலும் அன்பால் நிரம்பி வழிந்தது. எல்லா சண்டை சச்சரவுகளும் மறந்துபோயின; அனைத்து வாத விவாதங்களும் தீர்க்கப்பட்டன. "நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா!" என்று பாஸ்கர ராஜு பாடியதால் அனைவரும் நிம்மதி அடைந்தனர். பாபா பாடலுக்கு இசைந்தாற்போல மத்தளத்தை தாளத்துடன் வாசித்தார், அவரது இனிமையான புன்னகை ஒவ்வோர் இதயத்தையும் ஊடுருவிப் பாய்ந்தது.

இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும் பாபா, "**நாளை, ஏழைகளுக்கான நிகழ்ச்சியின் போது, ஒவ்வொருவரும் கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழியவேண்டும். நான் ஏழைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கும் எனது பணியில் மூழ்கியிருப்பேன்**" என்று கூறி அவர் மேலும், "**நான் ஒருவனே தலைவணங்குவதற்குத் தகுதியானவன்!**" என்றார்.

பாபா பின்பு மண்டபத்தை விட்டு வெளியேறி தனது அறைக்குச் சென்று, அங்கு அவர் பெண்டு, பாதிரி இருவருடன் அடுத்த நாள் நிகழ்ச்சியைப் பற்றி விவாதித்தார். அவர் வெளியே வந்ததும், மெஹராஸாத் புறப்படத் தயாராக நின்ற காரில் அமர்வதற்கு பதிலாக, அஹமதுநகரை நோக்கிச் செல்லும் சாலையில் நடக்கத் தொடங்கினார். அனைவரும் பின்தொடர்ந்த வேளையில், பாபா, ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தார். பாபாவின் வெளிப்பாடும், முகபாவனையும் தீவிரமானதாகவும், சுற்றுப்புறத்தை முற்றிலும் மறந்தது போலவும் மாறியது; அவர் தமது ஆன்மீகப் பணியில் தீவிரமாக ஆழ்ந்தார். அவரது விரல்கள் விறுவிறுப்பாக நகர்ந்து, நடனமாடுவது போல் அற்புதமாகத் தோற்றமளித்தன. அவதார புருஷரின் ஆன்மீக உள்பணி பிரபஞ்சம் முழுவதிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய அதே வேளையில், நமது பௌதீகக் கண்கள் அதன் வெளியளவிலான அலங்காரத் தோற்றத்தைப் பார்ப்பதில் மட்டுமே திருப்தி அடையும்.

சிறிது நேரம் கழித்து, மெதுவாக எழுந்து, பாபா காரில் சென்று அமைதியாக உள்ளே அமர்ந்தார். பின்னர் எரச் காரை ஓட்டிச் சென்றார், பாபாவின் மனநிலையைக் கருத்தில் கொண்டு ஒருவரும் 'ஜெய்' கோஷத்தை எழுப்பவில்லை. இருப்பினும், தெய்வீக மதுபானம் ஒவ்வோர் இதயத்திலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

1955 நவம்பர் 14 திங்கட்கிழமை (அந்த ஆண்டு தீபாவளி) காலை 7:30 மணிக்கு மெஹராபாத்தை வந்தடைந்த பாபா, பதினைந்து நிமிடங்கள் கழித்து மண்டபத்திற்குள் நுழைந்தார். காலை நிகழ்ச்சி தெலுங்கு அன்பர்களின் சில பக்தி பாடல்களுடன் ஆரம்பமானது.

காலம் இதை இவ்வாறு விவரித்தது: "பாபாவின் புன்னகையுடன் வெளிப்பட்ட கை அசைவுகளின் கதிர்கள் அனைவரின் ஆழ் இதயத்தையும்

ஒளிரச் செய்தபோது, தெய்வீக மதுபானம் கரைபுரண்டு ஓடியது. ஒவ்வோர் இதயமும் சில துளிகளை சுவைத்து மகிழ்ச்சியுடன் பாடியது."

திருமல ராவ் குழுவின் முன் சில வார்த்தைகளை மொழிய பாபாவின் அனுமதியைக் கோரினார். பாபா அவரைப் பேச அனுமதித்தார்: "இன்று (பிரதமர்) பண்டித் நேருவின் பிறந்தநாள். அவர் இந்தியாவின் மிகச் சிறந்த அரசியல் தலைவர், பொதுவாக மனிதகுலத்திற்கும், குறிப்பாக நமது தேசத்திற்கும் அவர் ஆற்றிவரும் இடைவிடாத சேவையை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை. முற்றிலும் நேர்மையானவர் மற்றும் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கிறார்.

"இந்தப் பிறந்தநாளில், உலகில் அமைதியைக் காப்பதற்கான அவரது முயற்சிகளில் பாபா, அவரது வழிகாட்டுதலுடனும், உள்ளார்ந்த உதவியுடனும் அவரை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்."

அதற்கு பதிலளித்த பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**"அன்புள்ள பண்டித்ஜியின் பிறந்தநாள் இன்று என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர் ஓர் அகில இந்திய மனிதர். அவர் மிகச் சிறந்த இதயம் படைத்தவர், புத்திசாலித்தனமும் ஆற்றலும் நிறைந்தவர். அவர் எதைச் செய்தாலும், முழு மனதுடன் செய்கிறார். என் அருளால் இந்தியா ஆன்மீகத்திலும், பொருள் வளத்திலும் செழிக்கும் என்று நீங்கள் கூறியதை எல்லாம் கேட்டேன். தலைவர்கள் ரத்தினங்கள். நேருவின் பிறந்தநாளுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள். அவரை நினைவு கூர்ந்ததில் மிக்க மகிழ்ச்சி. இந்தியாவில் ஒரு சில ரத்தினங்கள் மட்டுமே உள்ளன. காந்திஜி ஒப்பற்றவர்; பண்டித்ஜியும் அப்படித்தான்.**

**"இதையெல்லாம் நான் அறிவேன், மேலும், என்னைப் போல் ஒரு மனிதன் பிரபஞ்சம் முழுவதிலும் இல்லை - அதுவும், எனக்குத் தெரியும்! அவர்கள் அனைவரும் என் இதயத்தில் இருக்கிறார்கள். கற்பனை செய்து பாருங்கள், பண்டித்ஜிக்கு இன்று 66 வயதாகிறது, இன்னும் பணிபுரிவதற்கான ஆற்றல் அதிகம் உள்ளது. அவரது முழு மனமும் தேசத்தின் நன்மையில் மூழ்கியுள்ளது. நாம் அவரை எண்ணி பெருமைப்பட வேண்டும். எல்லா ஆற்றலும் என் வழியாக, என்னிடமிருந்து பாய்ந்தோடுகிறது. இது உண்மை."**

தனபதி உடனே, "பாபா, பண்டித்ஜிக்கு தமது ஆசீர்வாதங்களையும் வாழ்த்துகளையும் தொலைதந்தி மூலமாக அனுப்புமாறு திருமல ராவ் பரிந்துரைத்துள்ளார்" என்றார்.

பாபா அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை: **"அனுப்புவதற்கு ஒன்றுமில்லை. தொலைத்தந்தி அனுப்பினால் இன்று நான் இங்குக் கூறியதன் மதிப்பு வீணாகிவிடும். நான் எதைக் கூறினாலும், என் இதயத்திலிருந்து கூறுகிறேன்."**

தனபதியை நோக்கி பாபா தொடர்ந்தார், **"உங்கள் நாக்கு நழுவியதால், நேற்று நீங்கள் கூறிய அனைத்தும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சிக்கலை உருவாக்கியது. நான் நேருவைப் பற்றி கூறியவை அனைத்தும்**

**அவரைச் சென்றடையும். அவருக்குத் தொலைத்தந்தி அனுப்பினால், எனது சொற்களின் மதிப்பு குறைந்துவிடும்.”**

இதைத் தொடர்ந்து, காலை 8:30 முதல் 9:30 மணி வரை, குஜராத்தி குழுவினர் இருந்த போது நடந்ததைப் போலவே, ஏழைகளுக்கான நிகழ்ச்சி நடைபெற்றது. 250 வறியவர்கள் - ஆண்களும் பெண்களும் - தலா நான்கு ரூபாயை, பாபாவின் அன்புப் பரிசாகப் பெற்றுக் கொண்டனர்; பாபாவின் அறிவுறுத்தலின்படி, நிகழ்ச்சி முழுவதும் - அவதார புருஷராக வருகை தந்த பரமாத்மா, ஏழைகளின் கால்களைக் கழுவி தலைவணங்குவது வரை, சகவாசக் குழுவினர் ‘ஓம் பரபிரஹ்ம பரமாத்மா!’ என தொடர்ந்து மொழிந்து வந்தனர்.

ஏழைகளுக்கான நிகழ்ச்சி நிறைவடைந்த பின்பு, பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, கைக்கோபாத் அவர் முன் நின்று, மெல்லிய குரலில், கடவுளின் இந்த ஏழு நாமங்களை இரண்டு முறை திரும்பத் திரும்ப மொழிந்தார்: “யா அஹுரமஸ்தா, எஸ்தான், ஈஸாத், அல்லா, பரமாத்மா, சர்வவல்லமையுள்ள கடவுள், பர்வர்திகார்!” ஒவ்வொரு முறையும் கைக்கோபாத் ஒரு நாமத்தை மொழிந்தபோதும், அவரது கால்களில் பாபா தலை வைத்து வணங்கினார்.

பாபா சிறிது நேரம் அமைதியாக இருந்த அவ்வேளையில், அவரது விரல்கள் விரைவாக நகர்ந்தன. காலை 9:55 மணிக்கு மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்னர், ஏழைகளுடன் பணிபுரிந்த மேசையை அவரே சுத்தம் செய்தார். முந்தைய இரவில் தூங்காதவர்களைப் பற்றி பாபா கேட்டு தொடர்ந்து கூறினார்:

**இன்று நான் நேர்காணல் வழங்கும்போது, ஏழு நாட்கள் ஒரே அறையில் உபவாசம் இருந்து, இறை நாமத்தை மொழியும் ஐவர் குழு, முதலில் வர வேண்டும். ஐவரையும் தனித்தனியாக சந்திப்பேன். அவர்களைத் தொடர்ந்து, பிற அனைவரும் வரலாம்; அவர்களின் வரிசையை கே.டி.ஆர்.எம். முடிவு செய்யலாம்.**

**நவம்பர் 17ஆம் நாள், நான் வரப்போவதில்லை. அன்றைய தினம் நீங்களும் புறப்படுவீர்கள். சில கடிதங்களுக்கு பதில் எழுத வேண்டிய நிர்பந்தம்; மேலும், அடுத்த குழு வருவதற்கு முன்பு, சிறிது ஓய்வெடுக்கவும் விரும்புகிறேன். நீங்கள் செல்லும் போது, பாபாவை உடன் அழைத்துச் செல்லுங்கள். நான் உங்கள் அனைவரிலும் இருக்கிறேன், அதில் எந்த சந்தேகமும் இல்லை; இருந்தும் என்னை உங்களுடன் அழைத்துச் செல்வது உங்கள் விருப்பம்.**

**தெற்கு பகுதியில் பெண்மணிகள் திட்டம் பற்றி என்ன முடிவு செய்தீர்கள்?** (கொவ்வூர், விஜயவாடா என இரண்டு மையங்கள் தேர்வு செய்யப்பட்டிருந்தன.) **தென்பகுதிக்குச் சென்றால், இதர இடங்களுக்கும் செல்வேன். அதற்கு எனக்கு போதுமான நேரம் இருந்தால் நான் முடிவு செய்வேன். அதை நான் உங்களுக்குத் தெரிவிப்பேன்.**

**பதினொரு மணிக்கு, மதிய உணவுக்காக நேர்காணல்கள் நிறுத்தப்படும். ஒரு மணிக்கு, அவை மீண்டும் தொடரும். இதற்கிடையில், நீங்கள் விரும்பினால் ஓய்வெடுக்கலாம். தாடேபள்ளிகுடம், கொவ்வூர் அல்லது ஏலூர் - எந்தக் குழுவை நேர்காணலுக்கு முதலில் அனுப்ப வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இந்த நோக்கத்திற்காக நீங்கள் என்னிடம் வரும்போது, என் அன்பை அடையப் பெற உங்கள் இதயங்கள் இயன்றவரை சுத்தமாக இருக்க வேண்டும். நம் அனைவருக்கும் ஒரே மாதிரியான அம்சங்கள் உள்ளன - கண்கள், காதுகள், வாய், மூக்கு மற்றும் பல. இவை அனைத்தும் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உள்ளன, மேலும் அவை, அவற்றின் குறிப்பிட்ட கடமைகளைச் செய்கின்றன. ஒன்று மற்றொன்றை விட பெரியது என்று சொல்ல முடியாது. அதேபோல, நேர்காணலுக்கு எந்தக் குழு முதலில் வர வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்யலாம். பெரியது, சிறியது என்று எதுவும் இல்லை.**

மதிய உணவிற்குப் பின்னர், 1:00 மணியளவில், பாபா, வெவ்வேறு அன்பர்களை சந்திக்கத் தொடங்கினார். பாஸ்கர ராஜு புதிய நபர்களை பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார். ஒரு யாதவா (YADAVA, கிராமப்புற விவசாயி) பண்டித் ராஜைய்யா (PANDIT RAJEYYA), பாபா, பகவான் கிருஷ்ணரைப் போன்றவர் என்று நம்பி வந்திருந்தார். பாபா அவரிடம் இவ்வாறு உறுதியளித்தார்: "**நான் அவரே. என்னோடு இருந்த தொடர்பின் காரணமாக நீங்கள் வந்துள்ளீர்கள். உங்கள் வாழ்வின் கடைசி கணங்களில் நான் கிருஷ்ணராக தரிசனம் வழங்குவேன், ஆனால் அதை இறை-உணர்தல் என்று நினைக்க வேண்டாம்.**"

மேலுமொருவர் மந்த்ராஜுலா வெங்கடரத்தினம் (MANDRAJULU VENKATARATNAM), சலவைத் தொழிலாளி, அவரிடம், பாபா கூறினார், "**நாம் இருவரும் ஒரு வகையில் ஒன்றுதான் - நீங்கள் ஒரு சிலரின் அழுக்கை மட்டும் சுத்தம் செய்யும் அதே வேளையில், நான் முழு உலகத்தையும் பாவத்திலிருந்து தூய்மைப்படுத்துகிறேன்!**"

பாஸ்கர ராஜுவிடம் பாபா, "**எனக்காக நீங்கள் என்ன செய்ய முடியும்?**" என வினவினார்.

"பாபாவின் நோக்கத்திற்காக நான் வாழ்கிறேன், அதற்காக உயிரைத் துறக்கவும் தயாராக இருக்கிறேன்" என்று அவர் அறிவித்தார்.

"**நான் உங்களை ஒன்றுமில்லாதவனாக மாற்றுவேன்!**" பாபா பதிலளித்தார்.

நேர்காணல்கள் மாலை 4:00 மணி வரை நீடித்தன, தொடர்ந்து பாஸ்கரா, அவரது சகோதரர் ராமபத்ர ராஜு இருவரும் அவர்களின் கதாகாலட்சேபத்தை (புர்ரா கதா) நிகழ்த்தினர். பாபாவின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பாடல்-நடனம்-கதை, முன்னணி நடிகரான பரேபள்ளி சத்யத்தின் ஆழமான குரலில், எதிரொலிக்கும் விதத்தில் இருந்தது, பாபாவை மகிழ்வித்தது.

நாடகக் கலைஞர்கள், ஹஸ்ரத் பாபாஜான், மேர்வானுக்கு முத்தம் அளிக்கும் சம்பவத்தை விவரிக்கையில், பாபா அவர்களை ஒரு கணம் நிறுத்துமாறு சைகையால் தெரிவித்தார்: **"நீங்கள் பாபாஜானுடன் நிகழ்ந்த சம்பவத்தைச் சித்தரிக்கும் போது, அந்தத் தருணத்தில் அது நிகழ்ந்ததைப் போன்ற அனுபவத்தை நான் மீண்டும் அடையப் பெற்றேன். நீங்கள், நான் மேர்வானாக இருந்த ஆரம்பகாலத்தை எனக்கு நினைவூட்டினீர்கள். இப்போது, இந்தத் தருணத்தில், என்னில் நிலைகொண்டிருக்கும் இக்காலகட்டத்தின் ஐந்து சத்குருக்கள் உங்கள் கதாகாலட்சேபத்தைக் காண்கிறார்கள். இப்போது உங்கள் கதையைத் தொடருங்கள்."**

இந்த நாடகத்தின் பின்புலம் சுவாரஸ்யமானது. ஒரு நாள் இரவு, ராமபத்ர ராஜுவின் கனவில் பாபா தோன்றி கூறினார்: **"நீங்கள் எனக்காக செய்ய வேண்டியது இன்னும் பல உள்ளது."** ராமபத்ராவால் அது என்னவென்று புரிந்துகொள்ள முடியவில்லை, ஆனால், அதற்குப் பின்பு, மசூலிப்பட்டினத்திற்குச் (MASULIPATNAM) சென்றபோது, எம்.எஸ்.ஆர். ஸாஸ்திரி (M.S.R. SASTRI), பாபாவின் வாழ்க்கை மற்றும் போதனைகள் அடங்கிய கதாகாலட்சேபத்தைத் (புர்ரா கதா - BURRA KATHA) தயாரிக்கும்படி பரிந்துரைத்தார். இதையே, பாபா தனது கனவில் சுட்டிக் காட்டியதாக எடுத்துக் கொண்டு, ராமபத்ரா நாடகத்தை இயற்றியதோடு, ஒரு குழுவிற்குப் பயிற்சியும் வழங்கினார்.

நாடகத்திற்குப் பிறகு, பாபா தனது ஆரம்ப நாட்களை நினைவு கூர்ந்தார்: பாபாஜான், உபாஸனி மஹாராஜ், சாய்பாபா ஆகியோருடனான அவரது சந்திப்புகள், அவர் கடந்து வந்த கடினமான நாட்கள் மற்றும் இந்தப் பரிபூரண குருநாதர்கள் ஒவ்வொருவரும் அவரைப் பற்றி என்ன கூறினார்கள் என்பதையும் எடுத்துரைத்து இவ்வாறு முடித்தார்: **"இதை விரிவாக எடுத்துரைக்க விரும்பினால் அவ்வாறே செய்யுங்கள்; குறுகிய வடிவில் சொல்ல விரும்பினால், அப்படியே சொல்லுங்கள். ஆனால் சாய்பாபாவும் மஹாராஜும் இன்று இங்கே இருக்கிறார்கள்! நான் கூறியதற்கு அவர்கள் சாட்சி!"**

பாபா, கலைஞர்களைத் தழுவி, இவ்வாறு குறிப்பிட்டார் **"இன்று தீபாவளி மற்றும் நேருவின் பிறந்தநாள். எனது குழந்தைப் பருவத்தைப் பற்றிய இந்த நாடகத்தைப் பார்த்ததற்காகவும், என் அன்பர்கள் மத்தியில் இருப்பதாலும் நான் மிகுந்த அன்பால் நிறைந்துள்ளேன். என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க, மேலும் மேலும் என்னை நேசியுங்கள். உங்கள் ஒவ்வொருவரிலும் நான் இருக்கிறேன்!"**

பாபா, நாடகக் கலைஞர்களிடம் வலியுறுத்திக் கூறினார், **"நீங்கள் இங்குச் செய்ததைப் போல், இந்த நாடகத்தை வெவ்வேறு இடங்களில் அரங்கேற்றுங்கள், உங்கள் அன்பின் மூலம் மக்கள் என்னைப் பற்றி அறிந்து கொள்ளலாம்."**

மாலை சுமார் 5.30 மணியளவில் பாபா, மண்டபத்தை விட்டு வெளியே வந்தார். அவரது கார் வராண்டாவின் அருகில் காத்திருந்தது. புன்னகைத்தபடி,

அன்பர்களை நோக்கி, பாபா தமது கைகளை உயர்த்தி, பின்னர் உள்ளே அமர்ந்து மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார். மெஹராபாத்தின் ஒவ்வொரு துகள்களும் அவரது ஜெய் முழக்கங்களை எவ்வாறு எதிரொலித்தது என்பதை காலம் பதிவு செய்தது, எங்கும் மகிழ்ச்சி பரவியது.

1955 நவம்பர் 15 செவ்வாய் காலை 7:45 மணிக்கு பாபா, மெஹராபாத்திற்குத் திரும்பி வந்து, 8:10 மணிக்கு மண்டபத்திற்குள் நுழைந்தார். **"அடுத்த அரை மணி நேரத்தில், நாம் அனைவரும் எனது எதிர்கால சமாதிக்கும், வேறு சில இடங்களுக்கும் மரியாதை செலுத்துவதற்காக மேல்மலைக்குச் செல்வோம். காக்கிநாடா, கொட்டபேட்டா, கொவ்வூர் போன்ற வெவ்வேறு குழுக்களுடன் புகைப்படங்களையும் நாம் எடுப்போம். மீண்டும் கீழே வரும்போது, நேற்று நான் சந்திக்காதவர்களைப் பார்ப்பேன்."**

பெண்டு, பாதிரி, விஷ்ணு, நீலு, பாவ், ராம்ஜூ, அலோபா ஆகியோரை அழைத்துவரக் கூறி, பாபா அவர்களை அறிமுகப்படுத்தி, **"உங்களுக்கெல்லாம் பெண்டுவைத் தெரியும். மெஹராபாத்தில் சகவாச ஏற்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தையும் அவர் மேற்பார்வையிடுகிறார். பாதிரி மின்சாரம், தண்ணீர் போன்றவற்றின் விநியோகத்தை கவனிக்கும் பொறியியலாளர். அலோபா, பாவ் மற்றும் சிலர் பெண்டுவிற்கு உதவியாக இருக்கிறார்கள். ஆதி சீனியர் கடிதப் போக்குவரத்து, மற்றும் பல கடமைகளை கண்காணிக்கிறார். ஜால்பாய் நகைச்சுவை துணுக்குகளுடன் என்னை மகிழ்ச்சியாக இருக்கச் செய்கிறார். நீலு நோய்வாய்ப்பட்டவர்களை நேர்மையாக கவனித்து வருகிறார். நாளுக்கு நாள் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருக்கிறது. 'மாணிக்யால ராவின் இதயம் பலவீனமாக இருப்பதாகவும், நேற்று அவருக்கு மயக்கம் ஏற்பட்டதாகவும், நீலு அவரை ஓய்வெடுக்கக் கூறியும், அவர் காலை 4:00 மணிக்கு எழுந்ததாகவும்' இன்று நீலு என்னிடம் கூறினார்.**

மாணிக்யாலாவை நோக்கி பாபா, **"இந்த இளம் வயதிலேயே உயிரை விட வேண்டுமா, அல்லது இன்னும் பாபா பணியைச் செய்ய இந்த உடலில் உயிர்வாழ வேண்டுமா? உங்கள் உடலைக் கெடுக்க நினைத்தால் அது மறைந்துவிடும். உங்களுக்குப் பரிந்துரைக்கப்படும் மருந்தை பெண்டு ஏற்பாடு செய்வார். மேலும், நீலு இன்று, நாளை இரு தினமும் உங்களுக்கு ஊசி போடுவார். கவலைப்படாமல் நான் சொல்வதைச் செய்யுங்கள். நீலுவின் வழிமுறைகளைப் பின்பற்றி, உங்கள் ஆரோக்கியத்தை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள், நீங்கள் நலமாக இருப்பீர்கள்."**

அப்போது பாபா, **"நீங்கள் முட்டை சாப்பிடுவதுண்டா?"** என வினவினார்.

மாணிக்யாலாவின் சார்பில் தனபதி, "அவர் சுத்த சைவ உணவு உண்பவர்" என்று பதிலளித்தார்.



மெஹராபாத் ஏழைகளின் நிகழ்ச்சி, நவம்பர் **1955**
(MEHERABAD POOR PROGRAM NOVEMBER 1955)



மெஹராபாத் (MEHERABAD), நவம்பர் (NOVEMBER) **1955**

“**நீங்கள் தினமும் காலையில் ஒரு வேகவைக்காத முட்டையின் கலவையை உட்கொள்ள வேண்டும். நான் அறிவுறுத்தும்போது, அதை எடுத்துக்கொள்வதில் எந்தத் தீங்கும் இல்லை; ஆனால் மாமிசம் உண்ண வேண்டாம்**” என்று பாபா அவரைக் கிண்டல் செய்தார். “**முட்டையை பாலில் தேன் அல்லது சர்க்கரையுடன் கலந்து விழுங்கவும். முதலில் எனது பெயரை உச்சரித்து, பின்னர் அதை அருந்தவும்.**”

ஆலா சதிராஜு, பாஸ்கர ராஜு இவர்களின் உடல்நிலையும் சரியில்லாமல் இருந்ததால், பாபா அவர்களை மாணிக்யால ராவுடன் காரில் மேல்மலைக்கு அனுப்பி வைத்தார். பாபா தெலுங்கு குழுவினருடன் நடந்து சென்று, காலை 9:00 மணிக்கு மேல்மலையைச் சென்றடைந்தார். புகைப்படம் எடுப்பதில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் செலவிடப்பட்டது.

இது முடிந்ததும், பாபா, தமது எதிர்கால சமாதியை நோக்கி அனைவரையும் வழி நடத்தினார்; அன்பர்கள் அனைவரும் சிறிய குழுக்களாக உள்ளே நுழைந்தனர். எரச் குஜராத்திக் குழுவிடம் பாபா கூறியதை இவர்களுக்கும் விளக்கினார். நேரம் ஏறக்குறைய 10:45 ஆகிவிட்டதால், மெஹராபாத் மேல்மலையின் பிற இடங்களை அவர்களுக்குக் காண்பிக்க நேரம் போதவில்லை, ஆனால் தகரக் கொட்டகையின் கீழ் அமர்ந்து பாபா கூறினார், “**உங்கள் மத்தியில் பாபா இருப்பது உங்களுக்கு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம். சில ஆண்டுகளில் நான் எனது பௌதீக உடலை கைவிட்ட பின்னர், எனது சமாதி தரிசனத்திற்காக ஆயிரக்கணக்கானோர் இங்கு வருவார்கள்.**”

அனைவரும் இறங்கி வந்து, மதிய உணவை முடித்த பின்னர், 1:00 முதல் 3:30 மணி வரை, பாபா, தனிப்பட்ட மற்றும் கூட்டு நேர்காணல்களைத் தொடர்ந்தார். 3:30 மணியளவில், பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்ற மண்டபத்தில் அனைவரும் கூடினர். பாடல்களுக்கு இடையே, பாபா சில வேடிக்கையான கருத்துக்களை எடுத்துரைத்து, குழுவுடன் கேலி கிண்டலில் சுவாரஸ்யமாக நேரத்தைக் கழித்தார்.

ஒரு கட்டத்தில், அவர் கூட்டத்தில் ஒருவரைக் குறுக்கிட்டு இவ்வாறு குறிப்பிட்டார்: “‘**கடவுள் பேசுகிறார்**’ (GOD SPEAKS) **புத்தகத்தில் நான் எடுத்துரைக்காத ஒன்றை இப்போது நினைவு கூர்ந்தேன். நமது சுவாசம் இயற்கையானது, தானாகவே நிகழ்வது. நாம் மூச்சை உள்வாங்கும் போதும், வெளிவிடும் வேளையிலும், அதில் கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஆழ்ந்த தூக்கத்தில் கூட அது தாளம் தப்பாமல் தொடர்கிறது. அது நம்மில் ஒரு பகுதியாக இருந்து, அது நின்றவுடன், உடல் கைவிடப்படுகிறது.**

“**அதேபோல, கடவுள் நம்முடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர். அவர் நம்முடன் இருப்பது நமக்குத் தெரியாது. நாம் அன்பின் மூலம் அவரைக் கண்டுகொள்ள முயற்சிக்கும் போது, கடவுள் நமக்கு மிக மிக அருகாமையிலும் நமக்குள்ளும் இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். பல ஆண்டுகளாக என்னுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்கள் அதன் உண்மையான அர்த்தத்தில் என்னை**

**அறிந்துகொள்ளவில்லை - அதாவது, என்னுடன் ஐக்கியமாவதன் மூலம் தெரிந்துகொள்வது.**"

தெலுங்கு பக்தி பாடல்கள் சுமார் அரை மணி நேரம் தொடர்ந்தன. ஆதி அஹமதுநகரிலிருந்து சில பார்வையாளர்களை அழைத்து வந்தார், அவர்கள் பாபாவின் அருகில் சில நிமிடங்கள் அமர்ந்தனர். (வினூ கேர், அவரது மனைவி இருவரும் நாக்பூரிலிருந்து பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தனர்.) பாபா மீண்டும் தமது அறைக்குச் சென்று, அங்கு அவர் மாலை 5:45 மணி வரை நேர்காணல்களைத் தொடர்ந்தார், அதன் பின்னர் அவர் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

தெலுங்குக் குழு 1955 நவம்பர் 16 புதன்கிழமை அன்று காலை 7:30 மணிக்கு மெஹராஸாத்திற்குச் சென்றது. முந்தைய குஜராத்திக் குழுவைப் போலவே, அவர்களும் ஏகாந்தவாச மலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, வளாகத்தையும் பிற இடங்களையும் பார்வையிட்டனர்.

காலை 11:00 மணிக்கு மெஹராபாத்திற்குத் திரும்பி வந்த தெலுங்கு குழுவைப் பின்தொடர்ந்து, பாபா மதியம் 12:15 மணிக்கு வந்து சேர்ந்தார். அவர் முதலில் தமது அறைக்குச் சென்று, கூட்டத்திலிருந்து சில அன்பர்களை சந்தித்து, மதியம் 1:45 மணியளவில் மண்டபத்திற்கு வந்தார்; அங்கு, தேநீர் பரிமாறிய அடுத்த பதினைந்து நிமிடங்கள் பஜனை தொடர்ந்தது.

தனது மண்டலி உறுப்பினர்களை அறிமுகப்படுத்துமாறு குடும்ப ஸாஸ்திரி, பாபாவைக் கேட்டுக்கொண்ட இந்த யோசனை, பாபாவிற்கு ஏற்புடையதாக இல்லை என்றாலும், அவர் மண்டலியிடம், அவர்களின் பெயர் அழைக்கப்படும்போது, எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொண்டார், மேலும் அவர்களை பின்வருமாறு அறிமுகப்படுத்தினார்:

**குஸ்தாஜி பல ஆண்டுகளாக என்னுடன் இருக்கிறார். தொடக்கத்தில் அவர் சாய்பாபாவுடன் இருந்தார். மூன்று ஆண்டுகளாக, சரியான தூக்கமோ, உணவோ இல்லாமல், எலும்புக்கூடாக மாறினார். பின்னர் அவர் உபாஸனி மஹாராஜுடன் இருந்த வேளையிலும் பெரும் துன்பங்களுக்கு ஆளானார்.**

**கைக்கோபாத்: உங்கள் அனைவருக்கும் அவரைத் தெரியும். அவரைப் பற்றி நான் ஏற்கனவே உங்களிடம் கூறினேன்.**

**டான்: பதினாறு ஆண்டுகளாக அவர் என்னுடன் இருக்கிறார். ஆங்கில மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற மருத்துவர். போர் மூண்டபோது ராணுவத்தில் மேஜராகப் பணியாற்றினார். சம்பளத்தில் இருந்து மாதம் தோறும் எனக்குப் பணம் அனுப்பி வந்தார். போருக்குப் பின்னர், அவர் என்னுடன் மீண்டும் இணைந்தார். என்னுடன் முற்றிலும் ஒட்டிக்கொண்டார். ஆங்கிலேயர் ஒருவர் இங்கே தங்கி, நமது நிலைமைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வது கடினம், ஆனால் அவர் அதைச் செய்திருக்கிறார்.**

திடீரென பாபா நிறுத்தி, "**ஏன் இந்த தனிப்பட்ட மண்டலியின் அறிமுகம்? நீங்கள் எல்லாம் எனது மண்டலி இல்லையா? இது என்ன புதிய**

**விஷயம்? என்னுடன் இருக்க, நீண்ட, நெடிய தூரத்திலிருந்து நீங்கள் வரவில்லையா? நீங்கள் அனைவரும் என் அன்பர்கள் மற்றும் சேவகர்கள் இல்லையா? உங்களில் ஒவ்வொருவரும் உங்களை அறிமுகப்படுத்த முடியும்.**

**"கடந்த நான்கு ஆண்டுகளாக, இந்தக் காலணிகள் எனது காலில் உள்ளன, அவை நான் எங்குச் சென்றாலும் - குளியலறை, கழிப்பறை, பயணம் செய்யும் போது - இரவும் பகலும் என்னுடன் உள்ளன. அதன் தகுதியின் அடிப்படையில் நான் எனது காலணிகளைப் பெரிதுபடுத்துவதா? இருந்தாலும், சொல்கிறேன் கேளுங்கள்:**

**காக்கா பாரியா: அவரைப் பற்றி நீங்கள் அனைவரும் அறிவீர்கள். எனது விருப்பத்தின்படி அவர் தனது முகவரியை** (பங்களிப்பிற்காக) **உங்களோடு பகிர்ந்துள்ளார்.**

**பாதிரி: குழந்தை பருவத்திலிருந்தே அவர் என்னுடன் இருக்கிறார். அவர் ஒரு சகலகலா வல்லவர். அவரைப் பற்றி வேறு என்ன சொல்ல? தலை முதல் கால் வரை, அவரது உடல் பாபாவிற்குக் கீழ்ப்படியத் தயாராக உள்ளது.**

**பெண்டு, விஷ்ணு, ஜால்பாய்: அவர்களைப் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும்.**

**சத்ருகன் குமார்: அவர் டெஹ்ரா டூன் கிராமத்தைச் சேர்ந்தவர். முதல் தர கொள்ளைக்காரர்! அரசியல் காரணங்களுக்காக அவர் பல ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டார். உணர்ச்சிவசப்படும் இயல்புடையவர். வீதிகளில் மக்களை அடிப்பது உண்டு, என்றாலும், இங்கே அதைச் செய்வதில்லை! கடவுளை நம்பாதவர், நாத்திகராக இல்லாவிடிலும், அவர் ஒரு யதார்த்தவாதி. அவர் ஏழை, பணக்காரர் எவரைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. உலகில் எவருக்கும் கீழ்ப்படிய மாட்டேன் என்கிறார்; ஆனால் அவர் எனக்கு எப்படிக் கீழ்ப்படிகிறார் என்று அவருக்கே தெரியாது! அவர் எனது காலடியில் தலையை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறார். நான் கட்டளையிட்டால் மனைவியைத் துண்டு துண்டாக வெட்டவும் தயங்காதவர்.**

குமாரை அழைத்து, பாபாவுக்காக உயிரைத் துறப்பாரா என்று கேட்டார். குமார் சில நிமிடங்களுக்குப் பின்னர் 'ஆமாம்' என்றார்.

பாபா தொடர்ந்தார்:

**ஆதி சீனியர்: இவரைப் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும், மேலும் கூறுவதற்கு ஒன்றுமில்லை. கடந்த 30 ஆண்டுகளாக என்னுடன் இருக்கிறார்.**

**டாக்கே: 1924 முதல், அவர் என்னுடன் இருக்கிறார். அவருடைய அன்பு அப்படியே இருக்கிறது. அவரது ஆழ் இதயத்தில் பாபா யார் என்பதை அறிந்து, அவர் தைரியமாக மக்களிடம் அதைக் கூறுகிறார். அவர் தலை முதல் கால் வரை என்னை நேசிக்கிறார்.**

ஸவக் கொத்வால்: 1940 முதல், அவரும் அவரது குடும்பத்தினரும் எனக்காக தங்களை அர்ப்பணித்துள்ளனர். அவர்கள் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள். ஸவக் உண்மையில் எனக்குக் கீழ்ப்படிகிறார். சில நேரங்களில் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிகிறார்.

நரிமன்: பாபாவின் மீது அளப்பரிய பாசம் உள்ளவர். அவர், அவரது மனைவி (அர்னவாஸ்) இருவரின் அன்பும் ஒப்பற்றது. என் மீதான அவர்களின் அன்பை என்னால் விவரிக்க முடியாது. இது மிகவும் சிறப்பான வகையைச் சார்ந்தது. கடந்த பல வருடங்களாக அவர்கள் பாபாவை நேசிக்கிறார்கள். அவர்கள் வெளிப்படுத்துவது போன்ற அன்பு சாத்தியமற்றது.

மெஹர்ஜி: மற்றுமொரு ரத்தினம். சிறுவயதிலிருந்தே என்னுடன் இருக்கிறார். அவர் பாபாவின் அன்பு, கீழ்ப்படிதல் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றில் பல ஆண்டுகளைக் கடந்துவிட்டார். அவர் என்னை எப்படி நேசிக்கிறார் என்பதை வார்த்தைகளால் விவரிப்பது முடியாத காரியம்.

சிதுவை அறிமுகப்படுத்தி, பாபா அவரை நோக்கி கைகளைக் கூப்பினார். “சிதுஜி: நீங்கள் அவரைக் கல்வியறிவற்றவராகக் காண்பீர்கள். இருந்தாலும், கடந்த பல ஆண்டுகளாக அவர் எனக்குச் செய்த சேவையை விவரிக்க முடியாது. அவர் என்னுடன் இங்கேயே இருக்கிறார். அவரை விவரிக்க பல ஆண்டுகள் ஆகும்.

சகன்: இவரை உங்கள் அனைவருக்கும் தெரியும்.

அலோபா: சிறுவயதிலிருந்தே எனது தொடர்பில் இருப்பவர். அவருடைய அன்பு அதி தீவிரமானது. அவரது உடல், மனம், உள்ளம், அனைத்தும் பாபாவுக்கே.

பாவ்: எம்.ஏ. ,பி.எஸ்சி. பட்டம் பெற்றவர். அவர் கனவில் கூட, எனது பெயரைக் கத்துகிறார், இருப்பினும் அவருக்கு இது குறித்து எதுவும் தெரியாது. அவர் என் மீது கொண்ட அன்பு அவ்வளவு பெரியது.”

அப்போது பாபா கேட்டார், “மண்டலியின் அறிமுகம் குறித்த இந்தக் கோரிக்கையை யார் முன்வைத்தது? நீங்கள் இந்த மண்டலி உறுப்பினர்களை இங்கே பார்க்கிறீர்கள், ஆனால் சில ரத்தினங்கள் விடுபட்டுள்ளன. ஸரோஷ் போன்ற ஒரு மனிதனைப் பற்றி என்ன சொல்வது?”

சம்பந்தப்பட்ட ஆந்திரா அன்பர்கள், இந்தத் தலைப்பைக் குறிப்பிட்டு தவறிழைத்திருந்தால், அதற்கு பாபாவிடம் மன்னிப்புக் கோரினர்.

பாபா கூறினார்: “நான் அனைவரையும் மன்னிக்கிறேன்; உண்மையில், மன்னிக்க எதுவும் இல்லை. வெளி நாட்டிலும் மாணிக்கங்கள் உள்ளன. அமெரிக்காவில், எனக்காக அனைத்தையும் அர்ப்பணித்த என் அன்பர்கள் பலர் உள்ளனர். உங்களிடையேயும் மாணிக்கக் கற்கள் உள்ளன. டாக்டர். தனபதி ராவ் எனது பணிக்காக ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குச் சென்று, பயணத்தால் சிரமப்படுகிறார். குடும்ப ஸாஸ்திரி, ரங்கா ராவ் இருவரும் அவ்வண்ணமே எனது பணியைச் செய்கின்றனர்.

**"எனது பணியைச் செய்பவர்கள் அனைவரையும் நான் மண்டலி என்பேன். அவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டால், அது ஒரு தொகுப்பாக உருவெடுக்கும். ராம்ஜூ, கிஷன் ஸிங், நானா கேர், ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா போன்ற பலர் உள்ளனர்.**

**"நினைவில் கொள்ளுங்கள், என்னை நேசிப்பவர்கள் என்னுடையவர்கள், முழு உலகமும் என்னுடையது, எல்லாமே என்னுடையது, நீங்கள் அனைவரும் என்னுடையவர்கள், இது உங்கள் இதயத்தில் பொறிக்கப்பட வேண்டும். எல்லோரும் என்னுடையவர்கள், ஆனால் நான் அவர்களுடையவன் அல்ல; நான், என்னை நேசிப்பவர்களுக்காக இருக்கும் ஒருவன். அவர்கள் அருகில் இருந்தாலும் சரி, தொலைவில் இருந்தாலும் சரி, என்னை நேசிப்பவர்களுக்காக இருப்பவன் நான்."**

அந்த நாள் தெலுங்கு சகவாசத்தின் இறுதி நாளாகும்; மெஹராஸாத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, பாபா அன்பர்களிடம் வலியுறுத்திக் கூறினார்: **"நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் இப்போது பிம்பல்காவ்மிற்குச் செல்கிறேன், நீங்கள் உங்கள் இடங்களுக்குச் செல்கிறீர்கள். கவலைப்படாதீர்கள், பதட்டம் வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும். மகிழ்ச்சியுடன் செல்லுங்கள், மகிழ்ச்சியாக இருங்கள்."** பல அன்பர்களின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. பாபா மாலை 4.30 மணிக்கு புறப்பட்டுச் சென்றார்.

காலம் இதை இவ்வாறு பார்த்தது: 'அவர் விடைபெற்று சென்றபோது, அன்பர்களின் இதயங்கள் ஒரு கொடிய வலியை உணர்ந்ததால், இறை அன்பின் மதுபானம், கண்ணீரை வரவழைத்தது. அவர்களின் இதயங்கள் மேலும் அமைதியற்றதாக மாறியது; அவர்களின் கண்ணீர் அவரது மகிமையைப் போற்றியது."

அடுத்த நாள் காலை, ரயில் நிலையத்தை நோக்கி ஆந்திரா அன்பர்கள் பேருந்துகளில் செல்வதை காலம் பார்த்துக்கொண்டிருந்தது. அவர்கள் மகிழ்ச்சியாக இருக்க, தங்களால் இயன்றவரை முயற்சி செய்தாலும், அவர்களின் இதயங்கள் வலியால் நிறைந்திருந்தது, இது பாபாவின் நினைவின் ஊடகமாகத் திகழ்ந்தது. பாபாவின் 'ஜெய்' முழக்கத்திற்கு, காலம் செவி சாய்த்தது, ஆனால் இந்த முறை கண்ணீர் கலந்த தெய்வீக மதுபானத்தின் ஆதங்கமாக ஒலித்தது. "இறை அன்பின் மதுபானம் பரவசத்தையும் கண்ணீரையும் வரவழைக்கிறது" என்று காலம் கண்டுகொண்டது. "ஆந்திரா அன்பர்கள், தாகம் தணியும் வரை அருந்திவிட்டு, தங்கள் அன்பிற்குரியவரை பிரியும் வலியின் விலைமதிப்பற்ற பொக்கிஷத்தையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றனர்."



மெஹராஸாத் ஏகாந்தவாச மலை, நவம்பர் **1955**
(MEHERAZAD SECLUSION HILL NOVEMBER 1955)

# மெஹராபாத் சகவாசம் - ஹிந்தி

**(Meherabad Sahavas - Hindi)**

1955 நவம்பர் 17 முதல் ஹிந்தி பேசும் குழுவினரின் வருகைக்கான தீவிர ஏற்பாடுகள் தொடங்கின. மண்டபத்தை துடைத்து சுத்தம் செய்து, கம்பளத்தை தூசி தட்டி, போர்வைகளைத் துவைத்து, பந்தல்களில் கிருமிநாசினி மருந்து தெளிக்கப்பட்டது. வட இந்தியாவின் வழக்கமான உணவுகளைத் திட்டமிடுவதில் சகன் தீவிரமாகச் செயல்பட்டார். ஒவ்வொரு குழுவும் வெளியேறிய பின்னர், அடுத்த குழுவிற்காக அனைத்து பொருட்களையும் சுத்தம் செய்ய, முதுகெலும்பு உடையும் அளவுக்கு இரவும் பகலும் கடினமாக பணிபுரிய வேண்டியிருந்தது.

அனைத்தும் திட்டமிட்டபடி நடப்பதை உறுதி செய்ய, பாபா, நவம்பர் 18 காலை 8:45 மணியளவில் மெஹராபாத்திற்கு வந்தார். வழக்கம் போல, தொலைதூரத்திலிருந்து வந்த கார் ஹாரனின் ஒலி, மண்டலி மற்றும் அனைவருக்கும் பாபாவின் வருகையைக் குறித்த அடையாளமாக இருந்தது. ஆனாலும், அவர்கள் தங்கள் பணியில் மும்முரமாக இருந்ததால், பாபா மண்டபத்திற்கு வந்தபோது, மண்டலியில் பதினொன்று பேர் அங்கு இல்லை. பாபா மிகவும் கோபமடைந்தார். மண்டலியில் ஒவ்வொருவரையும் அழைத்து, அவர் வந்த வேளையில் ஏன் வரவில்லை என்று கேட்டதைத் தொடர்ந்து, வசை பாடல் தொடங்கியது: "**நான் மெஹராபாத்திற்கு வரும் வேளையில் ஒரு நிமிடமாவது உங்கள் முகத்தைக் காட்டாமல் இருக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா? வேண்டுமென்றே அதைச் செய்தவர்கள் தொழுநோயால் பாதிக்கப்படுவார்கள்!**"

பாபா, மெஹர்ஜியிடம், "**தொழுநோய்க்கான ஊசி மருந்துகளை மும்பையிலிருந்து வரவழைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவர்கள் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள்!**" என்றார்.

பெண்டு, பாதிரி, விஷ்ணு, பாவ், அலோபா ஆகியோரை மட்டும் தனியாக அழைத்து, பாபா அவர்களைக் கடுமையாகத் திட்டினார்: "**நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவரின் நிலையிலிருந்து, உங்களின் மற்றும் மானிடனின் நலனுக்காக, உங்கள் நிலைக்கு இறங்கி வந்துள்ளேன். கடவுளாகிய எனது சகவாசத்தில் எப்பொழுதும் நீங்கள் அலைந்து திரிந்தாலும், இன்னமும் உங்களுக்கு ஒழுக்கம் மற்றும் மரியாதையின் அடிப்படை விதிகள் தெரியவில்லை; நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள்? ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்பவர்கள், எனது தரிசனத்திற்காக வருகிறார்கள்; நீங்கள் என்னுடன் இருந்தபோதிலும், மிகவும் மரியாதையற்றவர்களாகவும் அலட்சியமாகவும் நடந்துகொள்கிறீர்கள்! அடுத்த முறை, நான் அத்தகைய நடத்தையை மன்னிக்க மாட்டேன். அதன் பிராயச்சித்தமாக, நான், எரச்**

**மற்றும் காக்கா எப்பொழுதும் உண்பது போல, தவறிழைத்தவர்கள் இன்று ஒரு முறை மட்டுமே உணவு உண்ண வேண்டும்.**"

எரச்சை நோக்கி பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**நாளை மறுநாள் ஹிந்தி குழுவினர் வரும் வேளையில், மண்டலியின் கீழ்ப்படியா தன்மை குறித்து அவர்களிடம் எடுத்துரைக்க எனக்கு நினைவூட்டுங்கள்.**"

பாதிரி வாதாடினார்: "பாபா, சகவாசம் தொடங்குவதற்கு முன்பு, நீங்கள் குறிப்பாக, எங்களை அழைத்தால் தவிர, எங்கள் பணியை விட்டுவிட்டு உங்களிடம் வர வேண்டாம் என்று அக்டோபர் 28 அன்று எங்களுக்கு அறிவுறுத்தினீர்கள். எனவே, எங்கள் பணிகளில் மும்முரமாக இருந்ததால், நாங்கள் வரவில்லை. நீங்கள் இப்போது கூறுவது அந்த அறிவுறுத்தல்களிலிருந்து மாறுபட்டதாக உள்ளது."

பாபா, எரச்சிடம், "**இது உண்மையா?**" என வினவினார்.

அதற்கு அவர், "ஒருவேளை நீங்கள் அப்படி ஓர் அறிவுறுத்தலை வழங்கியிருக்கலாம்" என்று பதிலளித்தார்.

மேலும் இது குறித்து விசாரித்த போது, அத்தகைய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன என்பது இறுதியில் ஊர்ஜிதமானது. பாபா உடனே, "**எல்லாவற்றிலும் வல்லவனாக இருந்தாலும், இந்த உபதேசத்தை நானே மறந்துவிட்டேன்**" என்று கூறி, சிந்தனையில் மூழ்கினார். அவரது தரப்பிலான இந்தக் குறைபாட்டிற்காக, பாபா அனைத்து மண்டலியின் சார்பாக குஸ்தாஜியிடம் தமது வலது காதைத் திருகுமாறு கட்டளையிட்டதும், அதை அவர் செய்தார்.

பாபா, டாக்டர் கனகதண்டியை அழைத்துப் பாராட்டினார், "**உங்கள் அன்பு அளப்பரியது என்று கேள்விப்பட்டேன். அதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.**"

கனகதண்டி பதிலளித்தார், "பாபா, உங்கள் மீதான என் அன்பு, எங்கள் தவறுக்காக எங்கள் அனைவரையும் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளத் தூண்டுகிறது."

பதினொரு மண்டலியும் உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்ற கட்டளையை பாபா ரத்து செய்து இவ்வாறு எடுத்துரைத்தார்: "**நான் அனைவரையும் மன்னித்து, குஸ்தாஜி எனது காதைக் கிள்ளியதன் மூலம் என்னை நானே தண்டித்துக்கொண்டேன்; ஆனால் தொடர்ந்து எனது கட்டளைகளை மீறினால் நான் நிச்சயமாகத் தண்டிப்பேன். இப்போது நான் கூறுகிறேன், நான் வரும் வேளையில் அனைத்தையும் விட்டுவிட்டு என்னிடம் விரைந்தோடி வாருங்கள், நீங்கள் அதைச் செய்யவில்லையென்றால், நான் உங்களை மன்னிக்க மாட்டேன்.**"



மெஹராபாத் (MEHERABAD), நவம்பர் (NOVEMBER) **1955**

மதிய உணவுக்குப் பிறகு, மண்டபத்தில் அனைத்து மண்டலியும் கூடியபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**குஜராத்தி குழுவினர் தங்கள் ஆரோக்கியமான, ஒளிரும் முகத்துடன் மும்பைக்குத் திரும்பிச் சென்ற போது, என்மீதான அவர்களின் அன்பு, புத்துயிர் பெற்றதாகவும், காஷ்மீரில் விடுமுறை நாட்களைக் கழித்து, திரும்பி வந்த மகிழ்ச்சி மற்றும் மன நிம்மதியை போல் உணர்வதாகவும், செய்தி எனது காதுகளை எட்டியது. நான் அளித்த விளக்கங்களைத் தவிர, அவர்கள் எனது சகவாசத்தில் இங்கே கலகலப்புடன், குதூகலமான நேரத்தைக் கொண்டிருந்ததால், அத்தகைய உணர்வை அவர்களால் வெளிப்படுத்த முடிந்தது.**"

கம்பளத்தை தூசி தட்டும் சமாச்சாரம் மறுபடியும் எழுந்தது. பாபா மண்டபத்தில் முன்னும் பின்னும் நடக்கும் போதெல்லாம், நுண்ணிய தூசி அவரது மூக்குக்குழலில் அழற்சியை ஏற்படுத்தியதாகப் புகார் கூறினார். அவர் பெண்டுவிடம், "**தினமும் கம்பளங்கள் தூசி தட்டப்படுகிறதா? அதை யார் கவனிக்கிறார்கள்?**" என்ற கேள்விகளுடன் ஏறக்குறைய ஒரு மணி நேரம் அதைக் குறித்த எரிச்சலூட்டும் மனநிலையில் இருந்தார்.

சிது, பாவ் கல்சூரி இருவரும் கம்பளத்தில் தூசி படிந்ததற்குக் காரணமானவர்கள் என்பதால், பாபா அவர்களைக் கடுமையாகக் கண்டித்து, கம்பளம் எவ்வாறு தூசி தட்டப்படுகிறது என்பதை அவருக்குக் காட்டுமாறு கோரினார். சிது, பல சேவகர்களின் உதவியுடன், அது எவ்வாறு செய்யப்பட்டது என்பதற்கான செயல்முறையை விளக்கினார். பாபா திருப்தியடையாதது, பெண்டுவை சீற்றமடையச் செய்தது. பின்னர் அவர் மீண்டும் கம்பளத்தை வெளியே எடுத்துச் சென்று முழு சக்தியுடன் தூசி தட்டியதை பாபா மூடிய ஜன்னல் வழியாகப் பார்த்தபடி நின்றார்.

ஃபிரான்ஸிஸ் பிராபஸோன் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார், ஏன் இந்த ஆர்ப்பாட்டம் என்று புலப்படவில்லை. பாபா விளக்கினார், "**நான் ஏன் கிட்டத்தட்ட ஒரு மணிநேரத்தை இந்த தூசிக்காக செலவழித்தேன்? நான் உண்மையில் இதை ஒரு சிறிய, அற்பமான விஷயம் என்று நினைத்திருந்தால், எனக்கும் ஒரு சாதாரண மனிதனுக்கும் இடையே எந்த வேறுபாடும் இருக்காது. எனது பணிக்காகத்தான் இது போன்ற சிறிய விஷயங்களில் நான் ஆழமாக ஈடுபடுவதில் உறுதியாக இருக்கிறேன். கம்பளத்தை தூசி தட்டுவது போன்ற இந்த வெளியளவிலான விவாதங்கள் அனைத்தும் பார்வைக்குத் தெளிவற்றதாக இருந்தாலும், உண்மையில் எனது உள் பணியுடன் தொடர்புடையவை.**"

பாபா, மண்டலி அனைவரும் திரும்பிச் சென்று, தத்தமது கடமைகளில் ஈடுபடுமாறு அறிவுறுத்தினார். அவர்களுக்கே தெரியாமல், பாபா, வெகுநேரம் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாவ், கூடாரத்திற்கு ஒரு வாளி நிரம்ப தண்ணீரை எடுத்துச் செல்வதைக் கண்டு, அவரை சைகையால் அழைத்து, "**என்ன செய்கிறீர்கள்?**" என்று கேட்டார்.

“பந்தலை சுத்தம் செய்து, சீராக்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது,” பாவ் பதிலளித்தார்.

**“பணியைக் கண்காணிக்கும் கடமையை நான் உங்களுக்கு வழங்கினேனா அல்லது நீங்களே ஒரு தொழிலாளியாக பணிபுரியச் சொன்னேனா?”** என பாபா கேட்டுக் கொண்டே, **“நீங்கள் அவர்களுடன் இணைந்து பணிபுரிந்தால், அவர்கள் உங்களை மதிக்கமாட்டார்கள் என்பது மட்டுமின்றி, நீங்கள் கூறும் பணியைச் செய்யாமல் இருந்தால், மொத்தத்தில் அது வேலையை பாதிக்கும். நிர்வாகத் துறையில் நீங்கள் எப்படி எம்.ஏ. பட்டம் பெற்றீர்கள்? உங்களுக்கு அதிகாரம், கட்டுப்பாடு குறித்து எதுவுமே தெரியாது!”** என்றார்.

மெஹராஸாத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, தேநீர் அருந்தும் வேளையில், பாபா வாழைப்பழங்களைக் கேட்டார்; ஆனால், கிட்டத்தட்ட ஒரு டஜன் கனிந்த வாழைப்பழங்கள் அங்கு இருந்தபோதிலும், சிது, தவறுதலாக சில கனியாத பழங்களைக் கொண்டு வந்தார். சிது தனது தவறை உடனடியாகப் புரிந்து கொண்டாலும், அது பாபாவைக் இவ்வாறு குறிப்பிடத் தூண்டியது: **“நான் எனது உடலைத் துறந்த அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர், ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து, எனது பாதங்கள் பதிந்த இந்த மெஹராபாத்தின் தூசியைக் கூட சேகரிப்பார்கள். அவர்கள் எனக்கு மரியாதை செலுத்துவார்கள். பயபக்தியுடன், தண்ணீரால் நீராடுவதற்கு பதிலாக, இந்த தூசியால் நீராடுமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்! ஆனால் உங்கள் மத்தியில் கடவுளே இங்கு உலாவுகிறார், அவருடன் நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள் என்ற உண்மை இன்னும் உங்கள் தலையில் நுழையவில்லை.”**

பாபா அன்று மதியம் 1:45 மணிக்கு மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

1955 நவம்பர் 19ஆம் நாள் மதியம், ஹிந்தி குழுவினர் அடங்கிய 164 அன்பர்களில் பெரும்பாலானோர் அஹமதுநகர் வந்தடைந்தனர். அவர்களின் மகிழ்ச்சி ஆரவாரமும், ‘மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்ற கோஷமும் மிகையாக இருந்ததால், ரயில் நிலையத்தை சுற்றியுள்ள மக்கள் அங்கு நடந்ததைப் பார்க்க வந்தனர். இந்தக் குழுவில் முக்கியமாக ஹமிர்பூர் மாவட்டம், கான்பூர், அலிகார் (ALIGARH), டெல்லி, டெஹ்ரா டூன், மத்திய மற்றும் வட இந்தியாவின் பிற இடங்களைச் சேர்ந்த அன்பர்களும் இருந்தனர். வட இந்திய ஹிந்தி ‘பறவைகள்’ உடனடியாக மெஹராபாத் தோட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. அந்தத் தோட்டம் பல்வேறு வகையான பறவைகளின் உறைவிடமாக இருந்தது; ஒவ்வொன்றும் வெவ்வேறு மொழியில் பாடினாலும், அவற்றின் பாடல்கள் வித்தியாசமாக இருந்தாலும், எல்லாவற்றிலும் பாய்ந்தோடிய தெய்வீக மதுபானம் ஒன்றேதான். மதுவிற்கு மொழி, மதம், பிரிவு அல்லது நாடு ஆகியவற்றுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அதனால்தான், மெஹராபாத்

தோட்டத்தில், அனைத்து பறவைகளும் தங்கள் உறைவிடத்தைக் கண்டுகொள்வதோடு அவற்றின் கூடுகளையும் கட்டுகின்றன.

1955 நவம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை காலை 7:15 மணியளவில் பாபா மெஹராபாத் வந்து சேர்ந்து, தமது அறையில் மண்டலியுடன் கலந்துரையாடினார். இருபது நிமிடங்களுக்குப் பின்னர், அவர் மண்டபத்திற்குள் நுழைந்ததும், 'ஜெய்' முழக்கங்களுடன் அன்பர்கள் மாலை அணிவிக்கத் தொடங்கினர். டெல்லியைச் சேர்ந்த கல்லூரி முதல்வர் நிரஞ்சன் ஸிங் மாலை எதையும் கொண்டு வராததால், பாபா தமது கழுத்திலிருந்த ஒன்றை எடுத்து, பாபாவின் கழுத்தில் அணிவிப்பதற்காக அவரிடம் கொடுத்தார்.

ஹெலன் கைகளில் மாலை, மலர்கள் ஏதுமின்றி அணுகியபோது, பாபா அவரை வரவேற்றார், "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? நான் உங்களைக் கடைசியாகப் பார்த்ததுபோல் அப்படியே இருக்கிறீர்கள்**." ஆனால் ஹெலன் மீண்டும் தனது இடத்திற்குத் திரும்பிச் செல்வதற்கு முன்பு, பாபா அவரை அழைத்து, "**எனக்கு மாலை அணிவித்தீர்களா?**" என்று கேட்டார். அவர் 'இல்லை' என பதிலளித்தபோது, பாபா அவரிடம் ஒரு மாலையைக் கொடுத்து, அணிவிக்குமாறு வலியுறுத்தினார். பூக்களைக் கொண்டு வராத பிற அன்பர்களுக்கும், அருகில் குவியலிலிருந்து மாலையை வழங்கி, அவருக்கு மாலை அணிவிக்குமாறு பாபா அறிவுறுத்தினார்.

ஆந்திரா குழுவினர் தங்கள் அன்பின் வெளிப்பாடுகளில் மிகுந்த ஆரவாரத்துடனும், பாபாவை அரவணைப்பதில் அதீத ஆர்வத்துடன் இருந்தது போலல்லாமல், ஹிந்தி குழுவினர் சீரான முறையில் மாலை அணிவித்த போது பாபா கூறினார், "**உங்கள் அன்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தெலுங்குக் குழுவைப் போல் என்னைத் தழுவி, நசுக்கி விடுவீர்கள் என்று நான் பயந்தேன். குஜராத்தி குழுவினர் எனக்கு மாலை அணிவித்தபோது, ஒரு மாலை எனது கண்ணை லேசாக காயப்படுத்தியது. ஆனால் நீங்கள் மிக்க கவனத்துடன் எனக்கு மாலை அணிவித்து என்னை மகிழச் செய்தீர்கள்**."

நௌரங்காவின் ஹீராலால், பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்கத் தயாராக நின்று கொண்டிருந்தார், ஆனால் பாபாவின் இந்த வார்த்தைகளைக் கேட்டு, அவரது யோசனையை நிராகரித்து விலகி நின்றார். ஒரு சிலர் அமைதியாக கண்ணீர் சிந்தினர்.

பாபா ஒவ்வொருவரையும் தழுவி, அரவணைப்புகளுக்கு இடையே நகைச்சுவையாகப் பேசினார். "**ஓ, நீங்கள் சவரம் செய்யவில்லையே!... ஆமாம்... நேற்றிரவு எத்தனை பூரி சாப்பிட்டீர்கள்?**" என்று கேட்டு புக்காரைக் கேலி செய்தார்.

புக்கார் அன்பாக பதிலளித்தார், "எனக்குச் சளி பிடித்திருப்பதால், பாபா, என்னால் பதினைந்து கூட சாப்பிட முடியவில்லை!"

பாபா சிரித்துக்கொண்டே கேலி செய்தார், "**பதினைந்துதானா? ஆனால் உங்களுக்கு ஜலதோஷம் என்று சொல்லவில்லையே! இப்போது நீங்கள் என்னைத் தழுவியதால், என்னையும் அது தொற்றிக்கொள்ளும்!**"

ராய்ஸாஹேப் ராமஷங்கரிடம், பாபா, "**நீங்கள் எப்போதும் போல் உருண்டு திரண்டு கொழு கொழுவென இருக்கிறீர்கள்!**" என்றார்.

டாக்டர். தௌலத் ஸிங் கண்கலங்கி அழுது கொண்டிருந்தார்; பாபா, டாக்டரின் தலையைத் தனது மடியில் சாய்த்துக் கொண்டார்.

பாபா, கௌரி ஷங்கர் வைத்யாவிடம் (ஒரு மருத்துவர்) அவரது நாடித்துடிப்பை உணரச் சொன்னார். "இது சாதாரணமாக உள்ளது, பாபா" என்று அவர் கூறினார்.

"**ஆனால் நான் ஐந்தே நிமிடங்களில் உடல்நிலை சரியில்லாமல் போய்விடுகிறேன், அடுத்த ஐந்து நிமிடங்களில் சரியாகிவிடுவேன். ஐந்தே நிமிடங்களில் நான் வயதாகிவிடுகிறேன், அடுத்த ஐந்து நிமிடங்களில் இளமையாகி விடுகிறேன். எனது முக பாவனைகள் எப்படி இத்தனை பிரகாசமாக மாறுகிறது என்பதை நீங்கள் காணும் அதே வேளையில், சில நிமிடங்களில் வயதாகி சோர்வடைந்த நிலையிலும், எதிர்மாறாகவும் இருக்கிறேன். எவ்விதமான இயற்கைப் பண்புகள் பாருங்கள்!**

பாபா அப்போது அனைவரிடமும் கூறினார்: "**இனிமேல் எனக்கு தினமும் மாலை அணிவிக்க வேண்டாம், இன்று, முதல் நாள் அணிவித்ததே போதுமானது.**"

குஸ்தாஜியின் சகோதரர் ஹோமி ஹன்ஸோட்டியாவிடம் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**மாலை சூட்டப்படும் இந்த உடல் ஐந்து சத்குருக்களுடையது. அவர்கள் சென்றுவிட்டாலும், இந்த உடலை அனைவருக்கும் மாலை அணிவிப்பதற்காக விட்டுச்சென்றார்கள்!**"

40 நிமிடங்களுக்குப் பிறகு, மலர் மாலைகளுக்குள் புதைந்த பாபா விடுவிக்கப்பட்டார்; அவரின் தலை முதல் பாதம் வரை, வாழ்த்தி வணங்கப்பட்ட சிலை போல, பூக்குவியல்களால் நிரம்பியிருந்தது.

பின்னர், அறிவிப்புப் பலகையில் வெளியிடப்பட்டிருந்த வழிமுறைகளைப் படித்தீர்களா என்று அனைவரையும் விசாரித்து, பாபா கூறினார்:

**ஒரே குடும்பம் போல் இங்கே இருங்கள்; என் அருகாமையில் இருந்து, எனது சகவாசத்தின் பயனை அடையப் பெறுங்கள். முற்றிலும் சுதந்திரமாகவும் சௌகரியமாகவும் இருங்கள், உங்கள் சொந்த இல்லத்தில் இருக்கிறீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் எல்லா பிரச்சினைகள் மற்றும் வீட்டுச் சூழலை மறந்துவிட்டு, இங்கு என்னுடன் இருப்பதை மட்டும் கவனத்தில் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளை நினைத்துக் கொண்டிருப்பதானால், நீங்கள் உங்கள் குடும்பத்தின் சகவாசத்தில் இருப்பீர்கள், பாபாவின் சகவாசத்தில் அல்ல. இயந்திரத்தனமாக என் முன்னால் உங்கள் கைகளைக் கூப்பி, வீட்டில் உடல்**

**நலம் சரியில்லாமல் இருக்கும் மனைவியை நினைத்துக் கொண்டிருப்பதானால், நீங்கள் என்னை அல்ல, உங்கள் மனைவியை வணங்குகிறீர்கள் என்று அர்த்தம். உண்ணுங்கள், அருந்துங்கள், தூங்குங்கள், மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும் இருங்கள், உங்களால் இயன்றவரை என் அன்பை சுவைத்துக்கொள்ளுங்கள்.**

**நான் உங்களிடம் மனமார, மிகையாக மதிய உணவை உண்ணுங்கள் என்று கூறும்போது, பாபாவிற்குக் கீழ்ப்படிந்து அவரை மகிழச்செய்ய, தன்னால் எவ்வளவு உண்ண முடியுமோ அவ்வளவு உண்ண வேண்டும் என்று புக்கார் நினைக்கிறார்! அவருடைய வயிறு மிகவும் பெரியது, எனவே அவர் எவ்வளவு உண்ண வேண்டும் என்று கற்பனை செய்து பாருங்கள்!**

பாபா தமது அறிவுரைகளைப் படிக்காதவர்களை எழுந்து நிற்கக் கோரினார். மூன்று நபர்கள் எழுந்து நின்றனர், அவர்களில் ஒருவர் பாபாவிற்கு மிகவும் பரிச்சயமானவர். பாபா அவரிடம், "**நீங்கள் பாவிற்கு உறவுக்காரர் இல்லையா?**" என்று கேட்டார்.

அதற்கு அந்த அன்பர், "அவர் எனது மைத்துனர்" என்றார். அவர் ரமாவின் சகோதரர், தீரஜ் பர்மார், மேலும் அவர் மெஹராபாத்தில் ஒரு மாதமாக நடந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகளில் உதவினார்.

பாபா அடுத்து நின்ற அன்பரிடம், "**உங்களுக்கு பாவ் என்ன உறவு?**" என வினவினார்.

அதற்கு அவர், "அவர் என் மாமா. நான் வீரேந்திர கல்சூரி" என்று பதிலளித்தார்.

மூன்றாவது அன்பரிடம் திரும்பிய பாபா, "**உங்களுக்கும் பாவ் உறவினர்தானே?**" என்று கேலி செய்தார்.

அந்த அன்பர் நேராக பாபாவை நோக்கி பதிலளித்தார், "நெருங்கிய உறவு. நான் தேஜ் ஸிங் ராத்தோர்." அவர் பாவின் மைத்துனரும் ஆவார்.

பாபா தனது சிரிப்பை அடக்க முடியாமல் மகிழ்ச்சியுடன் கூறினார், "**அறிக்கைகளை வாசிக்காத பாவின் இந்த மூன்று நெருங்கிய உறவினர்களைப் பாருங்கள்! அன்பர்கள் வந்ததும் அறிக்கைகளை வாசிக்கச் சொல்லும் கடமை பாவிற்கு வழங்கப்பட்டுள்ளது, அவரது சொந்த உறவினர்களுக்கு அவர் அதைச் சொல்ல மறந்துவிட்டார்.**"

மூவரும் ஒருமித்த குரலில், "அவர் எங்களிடம் கூறினார், நாங்கள், விளக்கப்படத்தைத் தவிர ஒவ்வொரு வரியையும் படித்தோம். எங்களால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று கூறினர்.

அதற்கு பாபா, "**அதைப் புரிந்துகொண்டவர் யார்?**" என்று கேட்டு, "**நீங்கள் மூவரும் அமருங்கள்**" என்று கூறினார்.

பாபா அடுத்ததாக உடல்நலம் குன்றியவர்களை எழுந்து நிற்கக் கோரினார். சிலர் எழுந்து நின்றதும் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆந்திரா அன்பர்களுக்கு இங்கு நிலவிய காலநிலை ஒத்துப் போகாததால், பலர் நோய்வாய்ப்பட்டனர். இருந்தாலும், அவர்கள்**

**மகிழ்ச்சியாக இருந்து, சகவாசத்தின் முழு நன்மையை அடையபெற்றனர். நீலுவிடமிருந்து மருந்தைப் பெற்றுக்கொண்டனர். அலோபதி மருத்துவத்தை விரும்புபவர்கள் நீலுவிடம் செல்லவும், ஹோமியோபதியை விரும்புபவர்கள் பாதிரியை அணுகவும். என் அன்பில் நோய்வாய்ப்பட்டு நொடிந்து போனவர்களுக்கு, நானே மருத்துவர்!**

பாபா தொடர்ந்தார்:

**குஜராத்தி குழு இங்கு இருந்தபோது, அறிவிப்புப் பலகையில் எழுதப்பட்ட நான்கு குறிப்புகளை நான் விளக்கியிருந்தேன் - அன்பு, கீழ்ப்படிதல், என் அன்பைப் பரப்புதல் மற்றும் என்னைச் சார்ந்தவர்களின் வெளியளவில் தோன்றும் பிணைப்புகள். தெலுங்கு குழுவினருக்கு சற்று வித்தியாசமான முறையில் இது பற்றி கூறப்பட்டது. அதையே உங்களுக்கும் மீண்டும் கூறுகிறேன். காலங்காலமாக நான் ஒரே விஷயத்தை, வெவ்வேறு வழிகளில் சொல்கிறேன். கல்வியறிவு இல்லாதவர்களும், நான் சொல்வதை கவனமாகக் கேட்பவர்களும் இதைப் புரிந்து கொள்வார்கள்.**

**நேற்று மாலை, திடீரென நான் எரச்சிடம் புதிதாக ஒன்றை எடுத்துரைத்தேன். கவனமாகக் கேட்க முயற்சி செய்யுங்கள். தூக்கம் வருபவர்கள், தூக்க மயக்கத்தில் இருப்பவர்கள் வெளியே சென்று பெஞ்சுகளில் அமர வேண்டும். விழிப்புடன் இருப்பவர்களும் என் அருகில் இருக்க விரும்புபவர்களும் இங்கேயே இருந்து கவனமாகக் கேட்க வேண்டும்.**

முந்தைய இரவில் தூங்க முடியாதவர்களை எழுந்து நிற்குமாறு பாபா கேட்டுக்கொண்ட போது, பலர் எழுந்து நின்றனர். சில அன்பர்கள் சளி, இருமல் காரணமாக தூங்க முடியவில்லை. அரிக்கும் தோலழற்சியால் ஹீராலால் தூங்க முடியவில்லை. பாபா அவரிடம் பாதிரியிடமிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும், பாபா மற்றும் பிற அன்பர்களிடமிருந்து சற்று தூரத்தைக் கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தினார், ஏனெனில் இது ஒரு தொற்று நோய்.

பாபா, நீலுவிடம் வேறு சில அன்பர்களுக்கு மருந்து வழங்கக் கூறினார், **"என்னை நினைத்து தூங்க முடியாதவர் குறைந்தது ஒருவராவது இருப்பார் என்று நான் நினைத்தேன், ஆனால் அந்த நோயால் அவதிப்படுபவர் எவரும் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது! சளி மற்றும் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் சிலரால் தூங்க முடியவில்லை. ஆனால் என்னை நினைத்து தூக்கம் வராதவர் உங்களில் ஒருவர் கூட இல்லை! எனக்கு என்ன அதிர்ஷ்டம் பாருங்கள்!"**

அன்பைப் பற்றி பாபா விளக்கமளித்தார்:

**அன்பைப் பற்றி நான் உங்களுக்கு எவ்வளவுதான் விளக்கினாலும், அது முழுமையாகப் புரியாது. அதைப் படித்து, கேட்டு, புரிந்து கொள்ளவும் முடியாது. ஆனாலும், நான் சொல்கிறேன். ஒவ்வொரு முறையும் நீங்கள் 'பாபா, உங்கள் அன்பை எங்களுக்குக் கொடுங்கள்' என்று கூறும்போது,**

‘என்னை, மேலும் மேலும் நேசியுங்கள்’ என்று நான் உங்களைக் கேட்கிறேன். அன்பு என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்த முயற்சிப்பேன்.

ஹாஃபீஸின் கூற்றுப்படி, வானுக்கும் பூமிக்கும் இடையே உள்ள அளவுக்கு அன்பு, புத்திசாலித்தனம் இரண்டிற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. அன்பை, அறிவால் புரிந்து கொள்ள முடியாது. புத்தியை, வேரோடு பிடுங்கி எறிவதன் மூலம் அன்பு அடையப்படுகிறது, அவ்வாறு செய்ய நீங்கள் உங்கள் இதயத்தைக் கையில் ஏந்திச் செல்ல வேண்டும். ஒருவர் மிகவும் புத்திசாலியாக இருக்கலாம், வேறொருவர் முற்றிலும் மந்தமாக இருக்கலாம். இருவரும் தங்கள் இதயங்களைக் கைகளில் ஏந்திச் சென்றால், கடவுளை நேசிக்க முடியும். இந்த விளக்கம் குஜராத்தி மற்றும் தெலுங்கு குழுக்களுக்கு வழங்கப்படவில்லை.

நிரஞ்சன் ஸிங் மிகவும் புத்திசாலி, அதே வேளையில் ஆதர்ஷ் (கரே) அவ்வாறு இல்லை என்றும் வைத்துக்கொள்வோம். ஆனால் இருவரின் இதயமும் அவரவர் கைகளில் இருந்தால், அவர்கள் கடவுளை நேசிக்க முடியும். ஒருவர் கல்வியறிவு பெற்றவராகவும், வேறொருவர் கல்வியறிவற்றவராக இருந்தாலும் - இருவரும் கடவுளை சமமாக நேசிக்க முடியும்.

ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்: ஆன்மீகம், அன்பு, கடவுள் இவற்றைப் பற்றி நான் உங்களுக்கு எவ்வளவுதான் விளக்கினாலும், நான் கூறுவதை உங்களால் அனுபவிக்க முடியாது. அறிவுப்பூர்வமாக மட்டுமே நீங்கள் அதைப் புரிந்துகொள்வீர்கள்.

‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தை, முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை படித்தால் அறிவுப்பூர்வமாக புரியும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, கடவுளை நேசிப்பது என்பது முற்றிலும் வேறுபட்டது; அன்பு என்றால் என்ன, நான் விளக்குகிறேன். ‘கடவுள் பேசுகிறார்’ புத்தகத்திற்கும், அன்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, ஆனால் கடவுள் என்றால் என்ன, கடவுளை எப்படி நேசிக்க முடியும் என்பதைத் தெளிவாகச் சித்தரிக்கிறது.

பிரபலமான அமெரிக்க எழுத்தாளரும், அறிஞருமான டபிள்யூ.ஒய். ஈவன்ஸ்-வென்ட்ஸுக்கு (W.Y.EVANS-WENTZ) ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தின் நகல், முன்கூட்டியே அனுப்பப்பட்டு, மதிப்புரை எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார். வென்ட்ஸ் எழுதிய ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: “‘கடவுள் பேசுகிறார்’ என்ற புத்தகத்தின் தனித்துவமும் முதன்மையான மதிப்பும்” என்ற தலைப்பில் இவ்வாறு எழுதியிருந்தார்:

“நாம் வாழும் இந்தக் காலத்திலோ அல்லது நமக்குத் தெரிந்த பண்டைய காலத்திலோ, ‘கடவுள் பேசுகிறார்’ என்ற புத்தகத்தில், உணர்வு நிலையைக் குறித்து மெஹர் பாபா விளக்கியிருப்பதைப் போல, வேறு எந்த ஆசிரியரும், இவ்வளவு நுணுக்கமாக, இதுகாறும் பகுத்தாய்வு செய்ததில்லை. மெஹர் பாபாவின் அறிவொளியூட்டும் இந்த நூல், இன்றுவரைக் கற்றறிந்த

**மொத்த ஞானத்துடன், மேலும் அதிக அளவில் சேர்ப்பதோடு, மனித குலத்தின் செழுமைக்கும் அளவிட முடியாத பங்களிப்பை அளிக்கிறது, ஏனெனில் ஆசியா கண்டத்தின் ரிஷி, முனிகள் கற்பிப்பது போல், அனைத்து செல்வங்களிலும் மிகவும் உள்ளார்ந்த மதிப்புமிக்கது மற்றும் அனைத்து உலக செல்வங்களையும் விட பெரியது, பரிபூரண இறை அறிவு.**

**“மெஹர் பாபாவின் ஞானம், பக்கம் 176இல் உள்ளதைப் போல, மிகச் சுருக்கமாக வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை: “எல்லையற்ற, நித்திய உண்மைப்பொருளை** (யதார்த்தத்தை) **புரிந்துகொள்வது, படைப்பின் மாயையில் வாழும் தனிப்பட்ட உயிரினங்களின் குறிக்கோள் அல்ல, ஏனெனில் உண்மைப்பொருளை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது; அது உணர்வுப்பூர்வமான அனுபவத்தால் மட்டுமே அடையப்படும்.”**

பாபா, குழுவிடம் ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தின் விமர்சனங்களைக் குறிப்பிட்டு தொடர்ந்தார்:

**‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்த பிறகு, நிரஞ்சன் ஸிங் மகிழ்ச்சியாக உணர்ந்தால், அவர் என்னை நேசிக்கத் தொடங்கும் வரை, நான் மகிழ்ச்சியாக உணர மாட்டேன். கவனமாகக் கேளுங்கள். புரியவில்லையென்றால் பரவாயில்லை. நான் கூறுவதைக் கேட்ட பின்னர், ஒரு சிலர் நான் விரும்பியபடி என்னை நேசிக்கத் தொடங்கலாம். ஆன்மீகப் பாதையில் செல்வது ஒரு வேடிக்கை விளையாட்டல்ல. மனம், உடல், உயிர் மூன்றையும் கைவிட்டுவிட்டு மண்ணோடு மண்ணாக, தூசி போல மாறுவதானால் மட்டுமே ஆன்மீகப் பாதையில் முன்னேற முடியும். இந்த ஆன்மீகப் பாதையைப் பற்றி பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. எனவே தூசியாக மாறுவதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதற்குப் பின்னர் அன்பைப் பற்றி பேசுவேன்.**

**கவனமாகக் கேளுங்கள்! மிகவும் முக்கியமல்லாத மூன்று விஷயங்கள் உள்ளன:**

1. **ஒன்று, எனக்கு மாலைகள் அணிவிப்பது;**
2. **இரண்டு, என்னை வணங்குவது;**
3. **மூன்று, எனக்கு பூஜை-ஆரத்தி செய்வது.**

**இவை, கடவுள் மீதான அன்பின் அடையாளங்கள் அல்ல.**

**ஆன்மீகப் பாதையில், எந்த சமரசத்திற்கும் இடமில்லாமல், மூன்று மிக முக்கியமான விஷயங்கள் உள்ளன. இவை**

1. **அன்பு**
2. **கீழ்ப்படிதல்**
3. **சரணாகதி**

**அன்பு தன்னளவில் பெரியது, ஆனால் அன்பை விட மேலானது கீழ்ப்படிதல், மேலும், கீழ்ப்படிதலை விட பெரியது முழுமையான சரணாகதி. அன்பு அன்பிற்குரியவரின் விருப்பத்தை நாடுகிறது.**

**கீழ்ப்படிதல் அன்பிற்குரியவரின் விருப்பத்தை நிறைவேற்றுகிறது. முழுமையாக சரணடைபவர் அன்பிற்குரியவரின் விருப்பத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கிறார். நேசிப்பவர் அன்பிற்குரியவரின் அன்பராக இருக்கிறார். ஏன்? ஏனெனில் அவர் அன்பிற்குரியவரை வெறுமனே நேசிக்கிறார். கீழ்ப்படிகிறவர் அன்பிற்குரியவரின் அடிமையாக இருக்கிறார். மனம், உடல் மற்றும் ஆன்மாவை அர்ப்பணிப்பவரின் வாழ்வில் அன்பிற்குரியவர் மட்டுமே இருக்கிறார்.**

**அன்பு என்பது மனிதனுக்குக் கடவுள் வழங்கும் பரிசு. ஒரு பரிபூரண குருநாதர் ஒருபோதும் அன்பைப் பரிசாக வழங்குவதில்லை. கீழ்ப்படிதல் என்பது குருநாதர் மனிதனுக்கு வழங்கும் பரிசு. சரணடைதல், மனிதன் குருநாதருக்கு வழங்கும் பரிசு.**

இந்த சொற்பொழிவுக்குப் பின்னர் 20 நிமிட இடைவேளை வழங்கப்பட்டது. பாபா அனைவரையும் இயற்கையின் அழைப்பிற்குச் சென்று வருமாறு கேட்டுக் கொண்டார். இதற்கிடையில், பாபா வராண்டாவில் முன்னும் பின்னுமாக நடக்கத் தொடங்கினார். ராம்ஹிர்தய திவாரியும் (RAMHIRDAYA TIWARI) நாக்பூரின் பி.எம். பட் (P.M. BHATT) என்பவரும் அருகில் வந்து நின்றனர். பாபா இருவரையும் தழுவிய வேளையில், திவாரி அழ ஆரம்பித்தார். அவர் தனது பேரன் காலமாகிவிட்டதாக பாபாவிடம் கூறினார். முன்பு, திவாரி, ஜால் கேரவாலாவின் கீழ் பணிபுரிந்து வந்தார்; பாபா அவரிடம், "**ஜால் கேரவாலா கூட காலமாகிவிட்டார்**" என்று பதிலளித்தார்.

பி.எம். பட் உரையாடலினிடையே, "பாபா, திவாரிக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இப்போது அவர் கண்காணிப்பாளர் பதவியிலிருந்து, மேலாண்மை இயக்குநராகிவிட்டார்" என்றார்.

திவாரி புன்னகைத்தார், பாபா உடனே, "**பாருங்கள், திவாரி ஒரு விஷயத்திற்காக அழுதார், மற்றொன்றில் மகிழ்ச்சியாக இருக்கிறார்.**" மேலும் அவரிடம், "**கவலைப்படாதீர்கள், நான் உங்களை மீண்டும் சந்திப்பேன்**" என்று உறுதியளித்தார்.

ஹிந்தி குழுவினர் மறுபடியும் கூடத்தில் கூடியபோது, நிரஞ்சன் ஸிங்கிடம் பாபா, எப்பொழுதும் அவரருகில் அமருமாறு அறிவுறுத்தினார், "**சுவருக்கு அருகில் அமர்ந்தால் தூங்கி விழுவீர்கள்**" என்று குறிப்பிட்டார்.

பாபா குழுவிடம், "**சளி, இருமல் இவற்றைக் குறித்து நான் அஞ்சுகிறேன், ஏனெனில் அவை தொற்றுநோயைப் பரப்புகின்றன.**" பாபாவிற்குச் சளி பிடிக்காதபடி ஆசிர்வதிக்குமாறு கைக்கோபாத்தைக் கேட்டுக்கொண்டதும், அவர் ஆசீர்வதித்தார்; பாபா உடனே, "**ஒவ்வொரு முறையும், கைக்கோபாத் 'உங்களுக்குச் சளி பிடிக்காது' என்ற ஒரே பதிலைத் தருகிறார்**" என்றார்.

தொடர்ந்து பாபா நீண்டதொரு சொற்பொழிவை வழங்கினார்:

**சளி, இருமல் என்ற தலைப்பைப் பற்றி பேசும் இந்த நேரத்தில், நான் மேலும் தொடர்வதற்கு முன்னால், குஜராத்தி மற்றும் தெலுங்கு**

குழுக்களுக்கு நான் கூறியதை, சில வார்த்தைகளில் விளக்குகிறேன். இந்தப் பௌதீகத் தளத்தில், மனித உடல் நோய் நொடிகளை சந்திப்பது இயற்கையானது. ஆனால் அன்பிற்குரியவரின் அன்பில் தன்னை இழக்கும்போது, உடல், நோயிலிருந்து விடுபடுகிறது. உள்ளத்தில் எரியும் அன்பின் நெருப்பு, எந்தவிதமான உடல் உபாதைகளையும் நடுநிலையாக்குகிறது. கடவுள் மீதான மஸ்துகளின் அன்புக்கு ஈடு இணையில்லை. அத்தகைய அன்பைக் கொண்டிருக்கும் மிக மிகச் சிலரின் உடல்கள் பாதிக்கப்படாமல் இருக்கும்.

இஸ்லாம்பூரில் தொண்டி புவா என்று அழைக்கப்படும் மஸ்த் ஒருவர் உள்ளார். அவரது உடல், அனைத்து காலநிலையிலும், ஆரோக்கியமாக உள்ளது, மேலும் அவர் திடகாத்திரமாக இருக்கிறார். அவர் குளிர், வெப்பம் மற்றும் மழையில் திறந்தவெளியில் இருந்தாலும், அவர் சுற்றுப்புற சூழலின் தாக்கத்திற்கு ஆளாகாமல் இருப்பதோடு, உணவைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. எப்போதாவது ஒரு குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்று அங்கேயே உண்ணுவதுண்டு. தெய்வீக அன்பின் நெருப்பு அவருள் எரிந்துகொண்டிருக்கிறது! மனதிற்கு உடலோடு எந்தத் தொடர்பும் இல்லை. அவர் தலை முதல் கால் வரை அன்பால் உறைந்துபோகிறார்.

நான் இதுவரை கூறியது கடவுளை நேசிப்பவர்களை பற்றி. யார் ஒருவர் கடவுளை உணர்ந்து, பௌதீக உணர்வு நிலையைத் திரும்பப் பெறாமல், பௌதீக உடலில் வாழ்கிறார்களோ, அவர்களுக்கு, அவர்களின் பௌதீக உடல் இருப்பதைப் பற்றிய உணர்வு இல்லாததால், எந்த நோயும் அவர்களை அண்டாது. இவர்கள் உண்மையான மஜ்ஜூப்கள். ஆனால் கடவுள் உணர்வை அடைந்த பிறகு, சாதாரண உணர்வு நிலைக்கு வந்து, மனிதர்களிடையே வாழ்பவர்களின் உடல்கள் சாதாரண மனிதர்களைப் போல் எல்லா வகையான நோய் நொடிகளுக்கும் ஆளாகின்றன.

இப்போது உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நான் அணிந்திருக்கும் சட்டையைப் போலவே, இந்த உடலும் ஒரு சட்டைதான் என்பதை நான் அறிவேன். இது வெறும் நம்பிக்கை அல்லது அறிவுப்பூர்வமாகத் தெரிந்து கொள்வது அல்ல; இந்த உடல் வெறும் சட்டை என்பது எனது தொடர் அனுபவம். இந்த அனுபவம் உங்களுக்கு இல்லை. எனது தொடர்ச்சியான, நித்திய அனுபவம் என்னவென்றால், நீங்கள் அனைவரும் நானே, நீங்கள் அனைவரும் என்னுள் இருக்கிறீர்கள். நான் உங்களிலும், பிரிக்கப்படாத விதத்தில் எல்லாவற்றிலும் இருக்கிறேன். இதை நான் எனது தெய்வீக அதிகாரத்தின் பேரில் கூறுகிறேன்.

இப்போது நாம் கைக்கோபாத்தை நோக்கித் திரும்புவோம். சில வேளைகளில், எனது தலையில் கையை வைத்து ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கைக்கோபாத் என்னை நேசிக்கிறார், என்னை அனுபவப்பூர்வமாக உணர்ந்து, பார்க்க விரும்பும்போதெல்லாம், என்னைப் பார்க்கிறார், 24 மணிநேரமும் எனது பெயரை உச்சரிக்கிறார், அவர் விரும்பும்

வேளையில், இருளில் ஒளியை உருவாக்கி, அதில் என் உருவத்தைக் காண்கிறார். இந்த அனுபவத்தோடு ஒப்பிடுகையில், இறை உணர்வு என்பது முற்றிலும் வேறுபட்ட விஷயம், வெகு தொலைவில் இருக்கும் ஒன்று. கைக்கோபாத் எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிட்டு, என்னிடம் சரணடைந்து விட்டார். எனது தலையில் கையை வைத்து ஆசீர்வதிக்கச் சொன்னால், அவர் தயங்குகிறார்; சில சமயங்களில் அழுது புலம்புகிறார், “பாபா, நீங்கள் யார் என்று எனக்குத் தெரியும், ஏன் என்னை இதையெல்லாம் செய்யச் சொல்கிறீர்கள்? நீங்கள் அனைத்தையும் உள்ளடக்கியவர். நான் எப்படி உங்களை ஆசீர்வதிக்க முடியும்?” அன்பைக் காட்டிலும் கீழ்ப்படிதல் மேலானது என்பதால், கீழ்ப்படிதலுடன் இருக்குமாறு நான் அவருக்குக் கட்டளையிடுகிறேன். அனைத்து ஆன்மீக அனுபவங்களோடும் பார்க்கையில், கீழ்ப்படிதல் என்பது அனைத்திலும் சிறப்பானது.

நீங்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மண்டலியும், அனைத்து உயிரினங்களும் கடவுள். ஏன்? என்னால் அதைப் புரிந்துகொள்ள முடிகிறது. முழு படைப்புக்கும் நானே பொறுப்பு. நான் இல்லை என்றால், எதுவும் இல்லை - நீங்கள் அனைவரும் இல்லை, அல்லது முழுப் படைப்பும் இல்லை.

உதாரணத்திற்கு நிரஞ்சன் ஸிங்கை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் இல்லை என்றால் அவருக்கு உலகம் எங்கே உளதாய் இருந்திருக்கும்? இவை அனைத்தும் உங்களோடும் உங்களுக்குள்ளும் உள்ளது. நிரஞ்சன் இந்தப் படைப்பைப் பார்க்கிறார் - இந்த முழுப் பிரபஞ்சத்தையும் - அது அவருக்குள் இருப்பதால் அதைப் பார்க்கிறார். நிரஞ்சன் ஸிங் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது, அவர் தனது உடல் அல்லது சுற்றுப்புறத்தை அறியாமல் இருக்கிறார். அப்போது இவையெல்லாம் எங்கே செல்கின்றன? நிரஞ்சன் ஸிங்கிற்கு இவை எதுவும் இல்லை. ஆனால் அவர் விழித்ததும், இந்த முழுப் படைப்பும் மீண்டும் அவருக்கு முன்னால் தென்படுகிறது, ஏனெனில் அனைத்தும் அவருக்குள், அவரோடு உள்ளது. இது உங்கள் அனைவருக்கும் பொருந்தும்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்போது, அனைத்திற்கும் அப்பாற்பட்ட (BEYOND BEYOND STATE OF GOD), கடவுளின் மூல முதலான அசல் நிலைக்குச் செல்கிறீர்கள். நீங்கள் படிப்படியாக விழித்தெழும் வேளையில், நீங்கள் முதலில் கனவு நிலையைக் கடந்து செல்கிறீர்கள், நீங்கள் முழுமையாக விழித்திருக்கும் வேளையில், நீங்கள் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள அனைத்தையும் உருவாக்குகிறீர்கள், மேலும் இந்த முழு நிகழ்வையும் மீண்டும் ஒருமுறை உணர்வுப்பூர்வமாக அறிந்து கொள்கிறீர்கள். ஆழ்ந்த தூக்கத்தில் நீங்கள் அனைத்தையும் உள்வாங்கி, விழித்தவுடன் அதை உருவாக்குகிறீர்கள், ஏனெனில் எல்லாமே உங்களுக்குள் உள்ளது. தினமும் நிரஞ்சன் ஸிங் கண்விழிக்கும்போது, இந்த உலகத்தைப் பார்க்கிறார், தூங்கும்போது உலகம் மறைந்துவிடும். ஆழ்ந்த தூக்கத்தில் நிரஞ்சன் ஸிங் முழுவதுமாக விழித்திருப்பது முற்றிலும்

**இன்றியமையாதது, பின்னர் எல்லா விஷயங்களுக்கும் முடிவு இருக்கும். இதுவே இறைவனின் பரிபூரண உணர்வு நிலை.**

**அனுதினமும், ஒவ்வொரு தனிமனிதனும், அனைத்திற்கும் அப்பாற்பட்ட** (பரபிரம்ம-பரமாத்மா, PARABRAHMA-PARAMATMA) **நிலைக்குள் நுழைந்தாலும், இதைக்குறித்த உணர்வு அவனுக்கு இல்லை. இது ஆழ்ந்து தூங்கும் நிலை மட்டுமே. அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் இருக்கும் கடவுள், தமது ஆழ்ந்த தூக்க நிலையிலிருந்து விழித்தெழும் வேளையில், அவர் இந்த உலகத்தைப் பார்க்கிறார், இருமைத்தன்மையை அனுபவிக்கிறார். ஒவ்வொரு தனிமனிதனும் ஐக்கியத்தைத் தேடி, ஆழ்ந்த தூக்கத்தின் போது அந்த நிலைக்குள் நுழைந்தாலும், அவர் அதை உணர்வுப்பூர்வமாக அனுபவிக்கத் தவறிவிடுகிறார்; மேலும் அவர் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழிக்கும் அந்த நேரத்தில், அவர் முன்னால் இருமைத்தன்மையைக் காண்கிறார். ஆகையால், மூல முதலான ஆழ்ந்த தூக்க நிலையில் இருக்கும் இறைவனுடனான ஐக்கியத்தை நீங்கள் உணர்வுப்பூர்வமாக அறிந்திருக்க வேண்டும், அப்போதுதான் இந்த இருமைத்தன்மை மறையும். ஆழ்ந்த தூக்கத்தில் முழுமையாக விழித்திருப்பது எவ்வளவு சாத்தியமற்றது என்று கற்பனை செய்து பாருங்கள்! இது கேலிக்குரியதாகத் தோன்றினாலும், அது உண்மைதான், மேலும் அத்தகைய நிலையை அடைவது சாத்தியம். ஆனால் யுகம் யுகமான காலச்சுழற்சிகளுக்குப் பின்னரே ஒருவர் அந்த நிலையை அடைகிறார் என்று கூறப்படுகிறது.**

பாபா, அலோபாவிடம் ஹ:ஃபீஸின் ஒரு வசனத்தைத் திரும்பத் திரும்ப மொழியுமாறு கேட்டுக்கொண்டார், இது கடவுளை நேசிப்பதில் ஏற்படும் சிரமங்களைப் பற்றியது. அலோபா அதை மொழிந்த பின்பு, பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

**ஹ:ஃபீஸின் கூற்றுப்படி, அன்பனாக மாறுவது நகைச்சுவையல்ல. நீங்கள் அவ்வாறு மாறிவிட்டால், வெறும் தூசியாகிவிடுவீர்கள், மேலும் லட்சக்கணக்கான அன்பர்களில் ஒருவரால் மட்டுமே, யுகம் யுகமாக வரும் காலச்சுழற்சிகளுக்குப் பின்னர், இந்த மாயையின் பிணைப்பிலிருந்து விடுபட முடியும்.**

**ஒருவர் மட்டும் ஏன்? ஏன் இவ்வளவு கஷ்டம்? கடவுள் எங்கும் வியாபித்திருப்பவர். அவர் எங்கும், எதிலும், எல்லோரிலும் இருக்கிறார். அது ஏன் சாத்தியமற்றது? அதற்கு நீங்களே காரணம். மனதில் எண்ணற்ற எண்ணங்கள் உள்ளன. மனதின் காரணமாக, எதையும் கற்பனை செய்கிறீர்கள். அது எப்படி இத்தனை எண்ணங்களை உருவாக்குகிறது என்று எனக்கே தெரியவில்லை! இது உங்களுக்குத் தெரியாமல் செயல்படுகிறது. மனதை நிறுத்துவது என்பது என்னிடமே உள்ளது. உங்கள் சுவாசத்தின் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சுவாசிப்பது இயற்கையானது என்பதால், நாம் அதில் கவனம் செலுத்துவதில்லை. தூங்கும் போதும், விழித்திருக்கும் வேளையிலும் சுவாசம் தொடர்கிறது, அது வாழ்வுக்கு**

இயற்கையானதாக இருப்பது போல், எண்ணங்களின் செயல்பாடும் இயற்கையானது.

உங்கள் சுவாசத்தைக் காட்டிலும், கடவுள் உங்களுக்கு அருகில் இருக்கிறார். ஆனால் உங்களுக்கு அது தெரியாது. நீங்கள் இப்போது சுவாசிக்கிறீர்கள். இது சாதாரணமானது, நிலையானது. ஆனால் நீங்கள் வேகமாக ஓடும்போது அல்லது மலை ஏறும்போது அல்லது கடினமான வேலைகளைச் செய்யும்போது சுவாசம் கடினமாகிறது. அப்போது நாம் சிரமப்பட்டு சுவாசிக்கிறோம் என்பதை உணர்ந்து அதை அறிந்து கொள்கிறோம். யாரோ ஒருவர் உங்கள் கழுத்தை நெரிக்க முயற்சிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; அப்போது சுவாசம் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியும். சுவாசம்தான் உயிர் என்று அப்போது புரியும்.

அன்பு, இரண்டு நிலைகளைக் கொண்டது: முதலாவது உணர்ச்சிகளைத் தூண்டுவது, உணர்ச்சி வயப்படுவது, துறவு மனப்பான்மை கொண்டது. அன்பிற்குரியவரைக் கண்டுகொள்ள முடியாத பட்சத்தில், அன்பன் பைத்தியமாகி, பிரிவின் வலியைத் தாங்க முடியாமல் தவிப்பது இரண்டாவது நிலை. அப்போது அவருக்குக் கடவுள்தான் உயிர்மூச்சு. அவர் இல்லாமல் அன்பனால் இருக்க முடியாது. அவருடன் ஐக்கியம் ஆகும் வரை, அன்பன் மூச்சுத் திணறுவது போல் உணர்கிறான். மிகவும் அழகான பெண் ஒருத்தியைக் காதலிக்கும் ஓர் ஆணின் நிலையை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் எப்பொழுதும் காதலியைப் பற்றி கனவு காண்கிறான், மேலும் தண்ணீரிலிருந்து வெளிவந்த மீனைப் போலத் தத்தளிக்கிறான். இப்படிப்பட்ட கதைகளை நாம் படித்திருக்கிறோம். இது சாதாரண மனித அன்பு மட்டுமே. ஆனால் கடவுளின் அன்பின் பரிசு மனிதனுக்கு வழங்கப்படும் போது, இந்த அன்பை அடையப்பெற்றவரின் அளவிறுதியற்ற அமைதியின்மையை, நாம் கற்பனை செய்து கூட பார்க்க இயலாது. ஆனாலும், இந்த அன்பின் காரணமாக, அவன் நரகத்தின் சித்திரவதைகளை அனுபவித்ததற்கான அறிகுறிகளை வெளிப்படுத்துவதில்லை.

கடவுளிடமிருந்து வெகு சிலருக்கு மட்டுமே இத்தகைய வெகுமதி கிடைப்பது ஏமாற்றத்தைத் தருவதாகச் சொல்வீர்கள். அன்பு, கீழ்ப்படிதல் இரண்டையும் எவர் ஒருவருக்கும் அளிக்கும் ஆற்றல் என்னிடம் உள்ளது. இந்த வெகுமதியை எப்படி அடையப்பெறுவது என்பதை, நாளை ஐந்து நிமிடத்தில் சொல்கிறேன். இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு நபருக்கும் அதை வழங்க நான் தயாராக இருக்கிறேன். இக்குறிப்பிட்ட காரணத்திற்காகவே உங்கள் அனைவரையும் இங்கு நான் அழைத்துள்ளேன். என்னிடமிருந்து இந்த வெகுமதியை அடையப்பெறும் அளவுக்கு துணிச்சல் உள்ளவர் யார் என்பதை நான் பார்ப்பேன்.

நாளை, ஐந்தே நிமிடங்களில், நீங்கள் அதை அடையப்பெறுவதற்குத் தகுதியானவரா என்பதை நீங்கள் அறிவீர்கள். வெகுமதியை வழங்குவதும் பெறுவதும் எளிதானது, ஆனால் அதே நேரத்தில் அது ஏறக்குறைய

**சாத்தியமற்றது. நாளை, ஐந்து நிமிடத்தில் விளக்குகிறேன். முக்கியமானது அவ்வளவுதான். ஆனால் உண்மைப்பொருளுக்கு முன்னால், இந்த விளக்கம், சொற்பொழிவு மற்றும் இதுபோன்ற பல, முக்கியமற்றதாக மறைந்துவிடும். எல்லாவற்றிற்கும் மேலாக, இதுவெல்லாம் ஒரு கனவு. நீங்கள் இதையெல்லாம் 'அனுபவித்தாலும்', உண்மையில் நீங்கள் கனவு காண்கிறீர்கள்.**

**உதாரணமாக, நிரஞ்சன் ஸிங் தூங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் ஒரு கனவைக் காண்கிறார். அந்தக் கனவில் எனக்கு முன்பாக இந்த ஹிந்தி குழுவினர் அமர்ந்திருப்பதையும், நான் சொற்பொழிவு வழங்குவதையும் அவர் காண்கிறார். பாபா, நிரஞ்சன் ஸிங்கிடம் கூறுகிறார், "எழுந்திரு, இது ஒரு கனவு!" ஆனால் கனவில், நிரஞ்சன் பாபாவிடம், "உங்களையும், இங்கு கூடியிருக்கும் அனைவரையும் எனது கண்களால் காணும்போது, இது எப்படிக் கனவாக இருக்க முடியும்?" என்று கேட்கிறார். ஆனால் சில மணி நேரங்களுக்குப் பின்னர், அவர் விழித்தெழும் வேளையில், அது உண்மையிலேயே ஒரு கனவு என்பதை அவர் அறிவார். அந்தக் கனவில் பாபா அவரிடம் இது ஒரு கனவு என்றும் கூறினார், இப்போது அவர் அதை ஒரு கனவாகவே காண்கிறார்! நிரஞ்சனின் அந்தக் கனவு, கனவிற்குள் வேறொரு கனவாக இருந்தது. இது ஒரு கனவு, ஆனால் நீங்கள் அதை உணரவில்லை! நீங்கள் விழித்திருக்கவில்லை. இங்கு நீங்கள் அனுபவிப்பதெல்லாம் கனவு. நீங்கள் விழித்தெழுந்ததும், அது ஒரு கனவு என்பதை நீங்கள் காண்பீர்கள், மேலும் இந்தக் கனவில் பாபாவும் இருக்கிறார்.**

**சிறுவனாக இருந்தபோது, நான் ஹாஃபீஸின் புத்தகங்களைப் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டினேன். ஹாஃபீஸ் கூறியதை இப்போது நான் நித்தியமாக அனுபவிக்கிறேன். இப்போது நான் அந்த அன்பிற்குரியவனாக இருக்கிறேன். யுகம் யுகமாக நான் உங்கள் மத்தியில் வருகிறேன். எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன். உலகம் ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும், நான் ஒருவனே உண்மைப்பொருளாக இருக்கிறேன்.**

உரையின் தலைப்பை மாற்றி, பாபா '**அகங்காரம்**' அல்லது '**நான் எனும் அகந்தை**'யைப் (EGO OR "I") பற்றி விளக்கினார்:

**இப்போது 'நான் எனும் அகந்தை'யைப் பற்றி. நீங்கள் 'நான்' என்று கூறுவதற்கும், நான் 'நான்' என்று கூறுவதற்கும் என்ன வித்தியாசம்? ஒருவர், அவர் கடவுள் என்பதை அறிவுபூர்வமாகப் புரிந்து கொள்ளலாம், ஆனால் அந்தப் புரிதல் அவருக்கு அவர் 'கடவுள்' என்ற 'திடமான நம்பிக்கை'யை அளிக்காது. அந்தத் 'திடமான நம்பிக்கை' இல்லாமல், ஒருவர் தன்னை கடவுள் என்று கூறினால், அது கடவுளால் மன்னிக்கப்படாத ஒரு பாவமாக இருக்கும்.**

**இது தொடர்பாக ஹாஃபீஸ் கூறியதாவது:**

**“உணர்ச்சிபூர்வமாக இறைப்பெருங் கடலின் ஆழத்தை அடைந்ததாக உணர்ந்தேன். ஆனால் நுரையை மட்டுமே நான் கையகப்படுத்திக் கொண்டேன்.”**

**நான் ஒருவனே உண்மைப்பொருளாக இருப்பவன். நான் ஆதிகாலப் புருஷன். உங்கள் ஒவ்வொருவரிலும் நான் இருக்கிறேன். எரச் என்பவர் எரச். அவர் எரச், எனவே, தன்னை எரச் என்று அழைக்கிறார்.**

**அதே போல, நானே ஆதிகாலப் புருஷன் என்று சொல்வதைத் தடுக்க முடியாது, ஏனெனில் நானே அவர். எரச் ‘கடவுள் பேசுகிறார்’ புத்தகத்தைப் படித்தால், அவர் கடவுள் என்பதை அறிந்து கொள்வார், ஆனால் இந்தப் புரிதல் அவருக்கு, கடவுள் என்ற அனுபவத்தைத் தராது.**

**அன்பு, அர்ப்பணம் இவற்றைக் குறித்து நாளை விளக்குகிறேன். உங்கள் குடும்ப நலன், ஆரோக்கியம், பணம் போன்றவற்றை நீங்கள் கேட்கக் கூடாது. இவற்றிற்காக, ஆசீர்வாதத்தை நீங்கள் என்னிடம் கேட்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று நினைக்க வேண்டாம். இதுபோன்ற விஷயங்களை எதிர்பார்க்காதீர்கள். அந்த எண்ணத்துடன் நீங்கள் வந்திருந்தால், உங்களால் அடையப்பெற்ற அனைத்தும், அது சிறிதளவானாலும், மறைந்துவிடும். இது போன்ற உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற துறவிகள், வாலிகள், மஹாத்மாக்கள் உள்ளனர். உங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்ய அவர்களிடம் செல்லுங்கள். ஆனால் உண்மைப்பொருளை நீங்கள் விரும்பினால், அதன் திறவுகோல் என்னிடம் உள்ளது.**

அதைத் தொடர்ந்து பாபா, இதற்கு முந்தைய தெலுங்கு குழுவிற்கு எடுத்துரைத்ததைப் போல, மூன்று வகையான வணிகர்களைப் பற்றி விளக்கினார் - **வணிகப் பேரரசன், மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லறை வியாபாரிகள்.**

ஹிந்தி குழுவினர் மதிய உணவிற்குச் செல்வதற்கு முன்னர், எரச், முந்தைய நாள் மாலை மெஹராஸாத்தில் ‘**தலை**’ மற்றும் ‘**தலைமுடி**’யைப் (THE HEAD AND THE HAIR ON THE HEAD) பற்றி பாபா எடுத்துரைத்ததை வாசித்தார்:

**கடவுள் அளவிறுதியற்ற உண்மைப்பொருள். அதே வேளையில் பிரபஞ்சம் அளவிறுதியற்ற மாயை. ஆனால் இரண்டும் ஒரே அர்த்தத்தில் அளவிறுதியற்றவை அல்ல. கடவுள் எல்லையற்ற ஏக இறைவன், மாயை என்பது எல்லையற்ற எண்ணிக்கையை உள்ளடக்கியது. கடவுள் எல்லையற்ற ஒருமைத்தன்மை; மாயை என்பது எல்லையற்ற இருமைத்தன்மையை உள்ளடக்கியது. கடவுள் எப்பொழுதும் உளதாயிருக்கிறார். மாயை என்பது எப்பொழுதும் இல்லாமல் இருப்பது. மாயை இருந்தாலும், இல்லாமல் இருந்தாலும், கடவுள் தொடக்கமும், முடிவும் இல்லாதவராக இருக்கிறார், அதே நேரத்தில் மாயை, மாயையில் ஒரு தொடக்கத்தைக் கொண்டு, மாயையில் முடிகிறது.**

**எல்லையற்ற மாயையில் எண்ணற்ற சூரியன்கள், நட்சத்திரங்கள், சந்திரன்கள், கோள்கள் மற்றும் உலகங்கள் உள்ளன. முழுப் படைப்பும்**

மாயையில் முடிவின்றி என்றென்றும் பரிணாமத்தில் வளர்ந்து கொண்டே செல்கிறது.

உதாரணத்திற்கு, ஒரே மண்டை ஓட்டின் மேல் வளரும் எண்ணிலடங்கா முடிகளைக் கொண்ட ஒரு மனிதனின் தலையை எடுத்துக் கொள்ளுங்கள். அனைத்து முடிகளும் அகற்றப்படும்போது, முடியின் வளர்ச்சி நின்றுவிடாது; முடிகள் மீண்டும் தோன்றி மீண்டும் தலையை மூடிவிடும். தலை வழுக்கையாக மாறினாலும், முடிகள்தான் மறையும்; தலை, தலையாகவே இருக்கும்.

ஒரு தலையுடன் ஒப்பிடும்போது, முடிகள், எண்ணிலடங்காமல் இருந்தாலும், அதற்கு எந்த மதிப்பும் இல்லை. அது தலையில் தோன்றி மறைந்தாலும், தலை அப்படியே, அதன் மதிப்பில் எந்த மாற்றமும் இல்லாமல் இருக்கும். தலைமுடியுடன் இணைக்கப்பட்ட மதிப்பு பெரும்பாலும் சிகை அலங்காரத்தைச் சார்ந்தது, அது பிறரை ஈர்ப்பதற்கான வழிமுறையாகவும், சுய திருப்திக்கான தூண்டுதலாகவும் இருக்கிறது.

அதுபோலவே, எண்ணற்ற தலைமுடிகள் கொண்ட தனி மனிதனின் தலையுடன் எல்லையற்ற எண்ணங்களை உருவாக்கும் தனிப்பட்ட மனதை ஒப்பிடலாம்.

தனிப்பட்ட மனம் எண்ணற்ற எண்ணங்களை உள்ளடக்கி, வெளிப்படுத்தும் மற்றும் உள்வாங்கும் திறன் படைத்தது. உண்மையில், அனைத்து சக்தியும், அனைத்து பொருட்களும் மனதின் விளைவே.

ஒரே உண்மைப்பொருளாகிய கடவுளின் அனைத்து முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள, இப்போது அவரை மனதுடன் ஒப்பிடுவோம், மேலும் தலைக்கு மேல் உள்ள முடியை படைப்போடு ஒப்பிடுவோம். தலையில் உள்ள முடியுடன் ஒப்பிடுகையில், மனம் மட்டுமே எண்ணற்ற மதிப்பு வாய்ந்தது என்பதை, உவமை உடனடியாகக் கூறுகிறது. அதுபோலவே, பிறரை ஈர்ப்பதற்கான வழிமுறையாகவும், சுய திருப்திக்கான தூண்டுதலாகவும் இருக்கும் முடியை ஒத்த வேறு எந்த மதிப்பும் இல்லாத படைப்பு முழுவதையும் ஒப்பிடும்போது, கடவுள் எல்லையற்ற மதிப்புமிக்கவர் என்று நான் சொல்கிறேன்.

இந்த விளக்கத்தை எரச் முடித்ததும், பாபா, வேடிக்கையாக, **“நேற்று மாலை, வழுக்கையாக மாறிக்கொண்டிருக்கும் குமாரின் தலையை நான் கவனிக்க நேர்ந்தபோது, இந்தக் கருத்துக்கள் நினைவுக்கு வந்தன”** என்று கூறினார்.

அனைவரும் மதிய உணவிற்குச் செல்வதற்கு முன்பு, பாபா கூறினார், **“எவரேனும் என்னை உண்மைப்பொருளான ஏக இறைவனாகப் பார்க்க விரும்பினால், அது அன்பின் மூலம் மட்டுமே முடியும். அந்த அன்பை என்னால் வழங்க முடியும், அதை அடையப்பெற விரும்புபவர் அதை ஏற்றுக்கொள்ளும் அளவுக்குத் தகுதியுடையவராக இருக்க வேண்டும். அதற்கு தைரியம் தேவை!”**

மதிய உணவுக்குப் பிறகு, மதியம் 12:50 மணிக்கு, தூங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்ப, பாபா, டாக்கேயை பந்தலுக்கு அனுப்பினார், ஒருமுறை விழித்தவுடன் மேலும் ஐந்து நிமிடம் தூங்கச் சொல்லிவிட்டு பந்தலுக்கு வருமாறு அறிவுறுத்தினார்.

சகவாசக் குழு ஒரு மணிக்கு மண்டபத்தில் மீண்டும் ஒன்று கூடியது; பாபா மத்தளத்தை இசைக்க, தக்வான் (DHAGWAN) கிராமத்தைச் சேர்ந்த விஷ்ணு ஷர்மா பஜனைப் பாடினார். பாபா, ஷர்மாவின் பாடலைப் பாராட்டி, மத்தளத்தைத் திருப்பிக் கொடுத்து, **“நான் இசைத்த இந்த மத்தளத்தை கவனமாக வைத்துக்கொள்ளுங்கள்”** என்று அறிவுறுத்தினார்.

அலஹாபாத்தைச் சேர்ந்த ஸ்ரீவஸ்தவா (SRIVASTAVA), தனது மேல் கோட்டுடன் அமர்ந்திருந்ததைப் பார்த்து, பாபா அவரிடம் **“ஏன் அதைவிட்டு விலக மனமில்லாமல் இருக்கிறீர்கள்? சகவாச நிகழ்ச்சிக்கு யாரோ ஒருவர், அவசரமாக வந்து செல்வது போல் அமர்ந்திருக்கிறீர்கள்?”** என்று கேட்டார்.

அதற்கு ஸ்ரீவஸ்தவா, “பேரரசர்களின் பேரசரான உங்கள் தர்பாரில் நான் அமர்ந்திருப்பதால், உங்கள் முன்னிலையில் அவ்வாறு செய்வது மரியாதையற்றதாக இருக்கும்! உங்கள் மீதான மரியாதைக்காக எனது கோட்டை அணிந்துள்ளேன்” என்று பதிலளித்தார்.

பாபா சிரித்துக்கொண்டே குறிப்பிட்டார்:

**இது உண்மைதான், ஆனால் வெகு சிலரே இதைப் பற்றி சிந்திக்கிறார்கள்! ஆன்மீகத்தில் மேல்நிலையை அடைந்தவர்கள் கூட என்னைப் பார்க்கவில்லை. நான் அந்த அளவுக்கு அளவிறுதியற்றவன், எனது சுய எல்லையற்ற தன்மையை நானே ஆழங்காண்பது மிகவும் கடினம், இருப்பினும் எங்கும் நான் ஒருவனே இருப்பதை உணர்கிறேன். நானே அந்த ஏக இறைவன், உங்களிலும் இருக்கிறேன்.**

**உண்மையில், நம்மிடையே எந்த வேறுபாடும் இல்லை. நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, நானும் அதுவாகவே இருக்கிறேன்; நான் ஏக இறைவன், நீங்களும் அவரே! ஆனால் இந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும் போது, நான் நிரந்தரமாக சுதந்திரமாக இருக்கிறேன், அதே வேளையில் உங்கள் அனைவரிடமும் நான் கட்டுண்டிருக்கிறேன். எனவே, நான் நித்தியமாக சுதந்திரமாகவும், அதாவது நித்திய ஆனந்தத்திலும், நித்திய துன்பத்திலும் பிணைக்கப்பட்டிருக்கிறேன் என்று சொல்கிறேன். ஒரு தீவிரமான விஷயத்தைக் குறித்து எளிதாகப் பேசிக்கொண்டிருக்கிறோம்.**

பாசாங்குத்தனத்தைக் குறிப்பிட்டு பாபா கூறினார்:

**பாசாங்குத்தனத்தின் சுவடு சிறிதளவும் இருக்கக்கூடாது. கடவுளால் மன்னிக்க முடியாத ஒரே பாவம்; இல்லாததை இருப்பது போலக் காட்டும் பாசாங்குத்தனம். ஒரு துரோகி, எவ்வளவு கேவலமானவனாக இருந்தாலும் சரி, தாழ்ந்தவனாக இருந்தாலும் சரி, பிறருடன் ஓர் அயோக்கியனாகக் கலந்து, அதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டால், அவன்**

**மன்னிக்கப்படலாம். அவன் நிஜமாகவே இருப்பது போல நடந்து கொண்டால், அது பாசாங்குத்தனம் அல்ல!**

**உலகில் இப்படிப்பட்ட ஏழு நயவஞ்சகர்கள் இருந்தனர், அவர்களில் மூன்று அல்லது நான்கு நபர்களை மண்டலி அறிவர். பாபா அவர்களை ஆசீர்வதித்ததாகவும், அவர்கள் எனது வாரிசுகள் என்றும் பறைசாற்றத் தொடங்கினர்; ஒவ்வொருவருக்கும் பெருமளவில் ஆதரவாளர்கள் இருந்தனர். அவர்கள் இப்போதெல்லாம் அத்தகைய கபடநாடகம் போடுவதில்லை. செல்வந்தர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் அவர்களிடம் சென்று மரியாதை செலுத்துவது வழக்கம்; அவர்களுக்கு மாலை அணிவித்து, தங்கள் காரில் சவாரிக்கு அழைத்துச் சென்று, பொதுவாக அவர்களை வணங்கினர். நான் அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, அவர்களை மன்னித்தேன். இப்போது அவர்கள் அதுபோன்ற பாசாங்குத்தனத்தில் ஈடுபடுவதில்லை.**

**நான் இதைக் கூறுவதன் நோக்கம், நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்றால், உங்கள் அன்பை, பிறரிடமிருந்து மறைக்க எந்தக் காரணமும் இல்லை. ஆனால் நீங்கள் என்னை நேசிக்கவில்லை என்றால், நீங்கள் நேசிக்கிறீர்கள் என்று பிறரிடம் பாசாங்கு செய்யாதீர்கள். நான் அவதார புருஷர் என்று நீங்கள் உணர்ந்தால், பிறரிடம் தைரியமாகச் சொல்லுங்கள், அப்படி இல்லை என்றால் பாசாங்கு செய்யாதீர்கள்.**

**நான் ஆதிகாலத்தவன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? "பாபா, நீங்கள் அப்படிக் கூறுகிறீர்கள், நாங்கள் உங்களை நம்புகிறோம்" என்று கூறுவீர்கள். நான் அவதார புருஷர் என்று என் அதிகாரத்தின் பேரில் சொல்கிறேன், ஆனால் நான்தான் அவதார புருஷர் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் அனைவரும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்று கோஷமிடுகிறீர்கள்! நான் தான் 'அவர்' என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் உங்களுக்கு எப்படித் தெரியும்?**

யார் ஒருவராலும் திருப்திகரமாக பதிலளிக்க முடியவில்லை, ஆனால் பலர் பாபாவின் மீதுள்ள நம்பிக்கை, அவர் அவதார புருஷர் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியதாகக் கூறினர். பதிலுக்கு பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**உங்கள் நம்பிக்கை தவறாக இருந்தாலும், நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்பதை என்னிடம் சொல்ல விரும்புகிறேன். உங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருங்கள். உங்கள் நேர்மையும், நாணயமுமான நம்பிக்கைகளை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். உங்கள் இதயத்தில் நீங்கள் எதை உணர்ந்தாலும், அதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். இல்லாததை இருப்பதுபோலக் காட்ட வேண்டாம். அதுவே மிக முக்கியமான விஷயம். கடவுள் பேசுகிறார்** (GOD SPEAKS) **புத்தகத்திலும் நான் ஒவ்வொரு விஷயத்தையும் விளக்கியிருக்கிறேன்.**

**நான் அவதார புருஷர் இல்லை என்று ஸ்ரீவஸ்தவா உணர்ந்து, நான் கடவுளின் அன்பன் என்று எடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை. அது**

**அப்படியே இருக்கட்டும்; அது போதுமானது. ஆனால் உங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருங்கள்.**

**நான் இறைநிலைக்குரிய தளத்தில் இருக்கும் வேளையில், வெவ்வேறு ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டவர்கள், என்னை, அவர்களின் குறிப்பிட்ட ஆன்மீகத் தளத்தைச் சேர்ந்தவர் என்று எடுத்துக்கொள்கிறார்கள். வேறொருவர் பாபா ஒரு சத்குரு, அவதார புருஷர் அல்ல என்று உணர்கிறார். நான் சத்குருவாகவும் இருக்கிறேன். நான் ஒரு மோசடிக்காரன் என்று சிலர் சொன்னாலும், அதுவும் நானேதான்! நீங்கள் என்னை எதுவாகக் கற்பனை செய்தாலும், நான் அதுவே என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

**பாசாங்குத்தனத்தைக் கடவுளால் ஒருபோதும் மன்னிக்க முடியாது என்பதால், இல்லாததை இருப்பதுபோலக் காட்டுவதன் மூலம், உங்கள் உணர்வுகளுக்கு ஒரு திருப்பத்தைக் கொடுக்காதீர்கள். நான், நீயாகிவிட்டேன், உன்னால் எதுவும் செய்ய முடியாது, ஆனால் நீ, நானாக மாற என்னால் உதவ முடியும். என்னில் அனைத்தையும் இழந்தவர்கள், தாம் இழந்த அனைத்தையும் என்னில் எப்போதும் காண்கிறார்கள்.**

**நான் மட்டுமே எல்லாமுமாக இருக்கிறேன். ஸ்ரீவஸ்தவா, பாபாவை அவதார புருஷர் என நினைப்பதானால், பாபாவை அவதார புருஷர் என நினைப்பதும் பாபாதான். அதே போலத்தான் மோசடியும். இந்தியாவில் பொதுவாக நிகழும் ஒன்று என்னவென்றால், காவி நிற ஆடைகளை அணிந்திருக்கும் ஒரு சாதுவை மக்கள் பார்த்ததும், அவரைச் சுற்றித் திரள்வார்கள். அவரை, ஒருவர் வணங்கத் தொடங்கினால், நூற்றுக்கணக்கானோர் அவரைப் பின்பற்றுவார்கள்.**

இந்தக் கட்டத்தில், பாபா, ஃபக்கீர் புவாவைப் (FAKIR BUA) பற்றிய கதையையும், அவர் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருந்த போதிலும், பூனாவில் அப்பாவி மக்கள் அவரை எப்படி மதிக்கத் தொடங்கினர் என்பதை மீண்டும் எடுத்துரைத்தார்.

**ஆன்மீகப் பாதை முற்றிலும் வேறுபட்டது. இது மிகவும் கடினமானது. ஆன்மீகப் பாதையில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும், மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒவ்வோர் அடியும் அகங்காரத்தை விரிவடையச் செய்கிறது. "நான் இப்போது மிகவும் முன்னேறிவிட்டேன், மக்கள் என்னைச் சுற்றித் திரண்டு, பலவற்றை எனக்காகக் கொண்டு வருவதோடு, அவர்கள் என்னை வணங்குவார்கள்!" இத்தகைய எண்ணங்கள் ஆன்மீக ஆர்வலரின் அகங்காரத்தை ஊட்டி வளர்த்து விரிவடையச் செய்கின்றன. அகங்காரம் தழைத்தோங்கும் வேளையில், மேலும் பல விஷயங்கள் நிகழத் தொடங்குகின்றன, இதன் விளைவாக அவரது வீழ்ச்சி ஏற்படுகிறது. என்னவாயிற்று என்று அவருக்குப் புலப்படுவதில்லை. எப்போதேனும் தன்னைச் சுற்றி, கூட்டத்தைக் கூட்டி, அவர்களை ஆசீர்வதிக்க**

முயற்சிக்கிறார். அவர் இறைநிலையை உணராதவர் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும், எனவே அவர் அப்படி இல்லை என்று தெரிந்த பின்னரும், அவரைச் சுற்றி கூட்டத்தைக் கூட்டுவதில் என்ன மகிழ்ச்சி இருக்கிறது! ஆன்மீக சக்திகள் ஏதுமின்றி, தான் ஒரு தனி மனிதன் மட்டுமே என்பதைத் தெரிந்து கொண்டால், என்ன இன்பத்தை அடையப்பெற முடியும்?

நித்திய பேரின்பம் இல்லாத நிலையில், ஆன்மீக ஆர்வலர் ஒருவர், இல்லாத ஒன்றை இருப்பது போல் எப்படிக் காட்டிக்கொள்ள முடியும்? இங்கு அமர்ந்திருக்கும் ஒவ்வொரு தனிமனிதரும் கூறுகிறார்: "'நான்' இங்கே அமர்ந்திருக்கிறேன், 'நான்' பணக்காரன், 'நான்' மகிழ்ச்சியாக இருக்கிறேன், 'நான்' மகிழ்ச்சியற்றவன்." எரச், அவர் எரச் என்கிறார். நிரஞ்சன், தான் நிரஞ்சன் என்கிறார். எரச் நலமாக இருப்பதாகக் கூறுவதுபோல, நிரஞ்சனும் அதையே கூறுகிறார். இவை அனைத்திற்கும் ஆணி வேர் (மூல காரணம்) 'நான்' எனும் அகங்காரம்.

இந்த 'நான்' ஒவ்வோர் அடியிலும் விரிவடைகிறது; இவ்வாறு விரிவடையும் தன்மை படைத்ததால், அவர் மேலும் விரிவடைவதை விரும்புகிறார். இவ்வண்ணம், 'நான்' தொடர்ந்து பெரிதாகிக் கொண்டே இருப்பதால், ஆன்மீகப் பாதையில் முன்னேறியவர்களின் அகங்காரமும் பெரிதாகிவிடுகிறது. 'நான்' இப்போது உச்சத்தை அடைந்து, தன்னை மேலும் வலுவாக உறுதிப்படுத்திக் கொள்கிறது. "'நான்' மக்களை ஆசீர்வதிக்க விரும்புகிறேன், 'நான்' ஒரு குழந்தைக்கான வரத்தை வழங்க விரும்புகிறேன்" இப்படிப் பல. இவ்வாறு 'நான்' விரிவடைந்துகொண்டே செல்கிறது.

ஆனால் இந்த 'நான்' எங்கிருந்து வந்தது? எரச் ஒரு குழந்தையாகப் பிறந்தபோது, அவருக்கு எந்த உணர்வும் இல்லை, எதுவும் தெரியாது. ஆனால் அவர் பிறந்த அடுத்த கணமே, அவரில் இருந்த 'நான்' அவரது தாயின் பாலுக்காக அழ ஆரம்பித்தது: "எனக்கு பால் வேண்டும்." எரச்சின் பிறப்பிலிருந்தே இந்த 'நான்' நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதனை உறுதிப்படுத்திக் கொள்கிறது; மேலும் நாட்கள் செல்லச் செல்ல, இது வளர்ந்து வருகிறது. வளர்ச்சி ஆரம்பமானதும் நாளுக்கு நாள் அது வலுவடைகிறது. ஆனால் 'நான்' என்பதில் சிக்கிக்கொண்ட எரச், எங்கிருந்து வந்தார், ஏன் வந்தார், எங்குச் செல்ல வேண்டும் என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்வதில்லை!

இந்த "நான்" என்பதன் ஆணி வேர் எங்கே? ஆரம்பத்தில், அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் எதுவும் இல்லை. 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தில் இதை விளக்கமாகக் காணலாம். திடீரென "'நான்' யார் என்று தெரிந்து கொள்ள வேண்டும்" என்ற திடீர் ஆர்வம் (தற்போக்கெண்ணம்) உருவானது. அந்த அசலான 'நான்' தான் இந்தத் தவறான 'நான்' அல்லது அகங்காரத்தின் ஆணி வேர்; மேலும், அந்த நேரம் முதல், அது "'நான்'-கடவுள்" என்ற அதன் அசல் நிலையுடன் ஐக்கியமாகும் வரை, அது

தொடர்ந்து கொண்டே இருக்கும். 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை அனைத்தும் விளக்கப்பட்டுள்ளன.

**நித்தியத்திற்கு ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை. ஆனால் இந்த 'நான்', கடவுளின் அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் எழுந்த திடீர் ஆர்வத்தின் காரணமாக உருவானது, மேலும் அது உணர்வுப்பூர்வமாக அதன் அசல் நிலையை அடையாத வரை, அது செயல்பாட்டில் இருக்கும். எனவே, ஒரு நபர் இறை-உணர்வை அடையாத வரை, மக்கள் முன்னால் தெய்வீகத்தைப் போலியாகக் காட்டுவது முதல் தர பாசாங்குத்தனம்.**

**இதுவரை நாம் 'பாசாங்குத்தனம்' பற்றி பேசினோம்; இப்போது நாம் அற்புதங்களுக்கு வருவோம். என்னை நேசிப்பவர்களுக்கும், எனது வழிகளை அறிய விரும்புபவர்களுக்கும் இது மிகவும் முக்கியமானது. நான், இந்த அதிசயத்தையும் அந்த அதிசயத்தையும் செய்ததாக கிழக்கு, மேற்கு மற்றும் உலகின் பிற பகுதிகளிலிருந்து எனக்குக் கடிதங்கள் வருகின்றன. ஆனால், நான் ஏற்கனவே அறிவித்துவிட்டேன், குஜராத்தி மற்றும் தெலுங்கு குழுக்களிடமும் இதைக் கூறினேன், நான் உங்களிடையே வந்ததிலிருந்து இதுவரை அற்புதம் எதையும் செய்யவில்லை. நான் எனது மௌனத்தைக் கைவிடும்போது, அதுவே எனது முதல் மற்றும் கடைசி அதிசயமாக இருக்கும்.**

**காலாதி காலத்திற்கு முன்பு, நான் செய்த ஒரே பெரிய அதிசயம், என்னிலிருந்து வெளிவந்த இந்த முழுப் படைப்பு எனும் அதிசயம் ஆகும். நான் எனது மௌனத்தைக் கலைத்துப் பேசும் போது, மேலும் ஓர் அதிசயத்தை நிகழ்த்துவேன்.**

**மக்கள் அற்புதங்களைப் பற்றி எனக்கு எழுதுகிறார்கள். அவ்வாறு நடந்தால், அவர்கள் என் மீது கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் அன்பே அதற்குக் காரணம். ராம்தாஸ் கீர்த்தனை செய்து கொண்டிருந்த வேளையில், ஒரு சிறுமியை உயிர்த்தெழச் செய்தது குறித்து, கேஷவ் நிகம் எனக்கு எழுதியிருந்தார். ராம்தாஸ் என் மீது கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் அன்பின் காரணமாக, குழந்தை மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது சாத்தியம்; ஆனால் அது நான் செய்த அதிசயம் அல்ல.**

கேஷவ், ராம்தாஸ் இருவரிடமும் பாபா முழு சம்பவத்தையும் சகவாச குழுவிற்கு விவரிக்கும்படி கேட்டுக்கொண்டார். பாபா, ராம்தாஸுக்கு அறிவுரை வழங்கினார்:

**ராம்தாஸ், நான் கூறுவதைக் கேளுங்கள். அந்தக் குழந்தை மீண்டும் உயிர் பெற்றதன் காரணம் நான் புரிந்த அற்புதம் அல்ல. என் மீதான உங்கள் அன்பு அந்த சிறுமியை மீண்டும் உயிரோடு கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அது முக்கியமல்ல. இது ஒன்றும் பெரிய விஷயமும் இல்லை! ஆனால் நீங்கள், என் மீதான அன்பில் இறப்பது மிகவும் சிறப்பாக இருக்கும்! இதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இனிமேலாவது கவனமாக இருங்கள். உங்களுடைய 'நான்' உங்களை மீற விடாமல் பார்த்துக்**

**கொள்ளுங்கள். திரள்திரளான கூட்டம் உங்களை சூழ்ந்திருக்கலாம், ஒருமுறை நீங்கள் அதில் சிக்கிக்கொண்டால், உங்கள் வீழ்ச்சி நிச்சயம். அப்படிச் செய்தால் அது உங்களை சின்னாபின்னமாக்கிவிடும்.**

பாபா, நிரஞ்சன் ஸிங் பக்கம் திரும்பி, "**நான் உங்களை ஒரு மணி நேரம் ஓய்வெடுக்கச் சொன்னேன், இங்கே நீங்கள் கொட்டாவி விடுகிறீர்கள்! நான் உங்களை மிகவும் நேசிப்பதால், உங்களைக் கிண்டல் செய்ய விரும்புகிறேன்**" என்று வேடிக்கையாகக் கூறினார்.

மறைந்த குழந்தையை உயிர்த்தெழச் செய்ததற்கு நேர்மாறாக, பாபா மீண்டும் நோஸர் தாதாசாஞ்சியின் விமான விபத்தை விவரித்து, "**கடைசி நேரத்தில் எனது பெயரை உதட்டில் வைத்து, உயிரைத் துறப்பவர்கள் என்னிடம் வருவார்கள்**" என்று மீண்டும் வலியுறுத்தினார்.

பாபா மீண்டும் நோஸரின் தந்தை நௌரோஜி மற்றும் மும்பையில் வாழும் அவரது முழுக் குடும்பத்தின் அன்பைப் பற்றி குறிப்பிட்டார்:

**நௌரோஜியின் மனைவி இறந்துவிட்டார், அவருடைய இளைய மகன்** (தெஹம்தன்) **காலமானார், சமீபத்தில் நோஸர் விமான விபத்தில் உயிரைத் துறந்தார் - ஒவ்வொருவரும் எனது பெயரை இறுதி நேரத்தில் உச்சரித்தனர். முழுக் குடும்பமும்** (நிதி ரீதியாக) **நோஸரை நம்பியிருந்தது. இப்போது அவர்களின் அன்பைப் பாருங்கள்! எது நடந்தாலும் அது பாபாவின் விருப்பப்படியே நடக்கும் என்பதை அவர்கள் அறிந்திருப்பதால், நோஸரின் மரணத்தை அவர்கள் மனதில் கொள்ளவில்லை. அவரது மரணத்தில் எவரும் பெரிய அளவில் உணர்ச்சிவசப்படவில்லை, அத்தகைய அன்பு என்னைத் தொடுகிறது. அதிசயங்களைப் பற்றி பேசுவதானால், இது ஓர் அதிசயம்!**

**நோஸரைப் பற்றி, என் முன்னால் இரண்டு விஷயங்கள் இருந்தன. அவரது விமானம் கீழே விழுந்துவிட்டதாக முதலில் செய்தி வந்தபோது, நோஸரின் உடலைக் கண்டுகொள்ள முடியாததால், நோஸரை நான் உயிரைத் துறக்க விடமாட்டேன் என்று குடும்பத்தினர் நம்பினர். மறுபுறம், எனக்கு முன்னால் இருந்த உண்மை என்னவென்றால் முழுக் குடும்பமும் என் மீது கொண்டிருந்த அன்பு.**

**அவர்கள் எனக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார்கள்; ஐந்து நாட்களுக்குள் நோஸரின் உடல் மீட்கப்பட்டால், அதை மெஹராபாத்திற்கு அனுப்ப வேண்டும் என்று நான் தகவல் தெரிவித்தேன். நௌரோஜி, அவரது மகன்கள் தாரா, ஹோமா மற்றும் மகள்கள் அர்னவாஸ், ரோடா, நர்கிஸ் ஆகியோரின் அன்பை சோதிக்க விரும்பினேன். ஒரு வாரத்திற்குப் பின்னர், ஓர் ஏரியில் விமானமும், உடலும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த சோக சம்பவம் நிகழ்ந்த வேளையில், நான் ஒரு மாற்றத்திற்காக பூனாவில் இருந்தேன். ஆனால் இங்கே நிகழ்ந்த அதிசயம், நோஸரை இழந்தவர்களின் அன்பும், எனது விருப்பத்திற்கு அவர்கள் அமைதியாக அடிபணிவதும் ஆகும். நான் ஏகாந்தவாசத்திற்கு பின்னர் ஓய்வெடுக்கும் வேளையில் என்னை**

**தொந்தரவு செய்ததற்காக, குடும்பத்தினர் அனைவரும் வருந்தியதே உண்மையான அதிசயம்.**

அப்போது பாபா, ஹமிர்பூர் பயணத்தின் போது பார்வையற்ற சிறுவன் ஒருவனைப் பார்த்து, '**அவனுக்குக் கண்பார்வை வழங்க வேண்டும்**' என்ற திடீர் ஆர்வம் எழுந்த சம்பவத்தைக் குறிப்பிட்டார். முடிவில், பாபா, "**நான் உங்களுக்குச் சொல்கிறேன், நான் அவதார புருஷர், நான் எப்படிப் பேசுகிறேன் பாருங்கள்! இதையெல்லாம் நான் சொல்லியிருக்கக் கூடாது. மனமிரங்கி வருந்தியிருக்க வேண்டும்!**" மேலும் பாபா வருத்தத்தைத் தெரிவிப்பது போல, தனது கன்னங்களை லேசாக அறைந்தார்.

பெண்மணிகளுக்கான சகவாசத் திட்டத்தைக் குறித்து பாபா தொடர்ந்தார்:

**நான் குஜராத்தி மற்றும் தெலுங்கு குழுக்களிடம் இதைப் பற்றிப் பேசியுள்ளேன்; மேலும், உங்களுடன் விவாதித்து உடனடியாக ஒரு முடிவெடுக்க விரும்புகிறேன். அமெரிக்காவில் வாழும் எனது அன்பர்கள், 'சில நாட்கள் மட்டுமே இருந்தாலும் நான் அவர்களை, அங்கே பார்க்க வேண்டும்' என்று டான் ஸ்டீவன்ஸ் மூலம், எனக்கு அழுத்தமான செய்தி ஒன்றை அனுப்பியுள்ளனர். எனக்கு நேரமில்லை என்று பதிலளித்தேன். என்னைப் பொறுத்த வரை, ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லை. அன்பிருக்கும் இடத்திற்கு நான் செல்கிறேன். நான் விரும்பினால், ஐந்தே நிமிடங்களில் ஒரு பெரிய கூட்டத்தை என்னால் திரட்ட முடியும்; ஆனால் கூட்டத்தால் சூழப்பட்டிருப்பதில் எந்த மகத்துவமும் இல்லை.**

**பெண்மணிகளுக்கான சகவாசத்திற்கு உங்களால் முடிந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள், ஆனால் எனது பைகள் காலியாக இருப்பதை நினைவில் கொள்ளுங்கள், பயணம் மற்றும் தங்குமிடத்திற்கான செலவுகளை நீங்களே சமாளிக்க வேண்டும்; மண்டலியில் ஐந்து முதல் ஏழு பேரை நான் என்னுடன் அழைத்து வருகிறேன். ஆனால் எந்த சூழ்நிலையிலும் ஆண்கள் இந்த சகவாசத்தில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டுமே நடத்தப்படுவதாக இருக்கும். நான் பயணம் செய்தால், நான் அழைக்கப்பட்ட எல்லா இடங்களுக்கும் செல்வேன்.**

நிரஞ்சன் ஸிங், "டெல்லியில் எனது கல்லூரிக்கு வருவீர்களா? அனைத்து மாணவர்களும் உங்களை நேசிக்கிறார்கள்" என வினவினார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**பத்து நிமிடங்களுக்கு மட்டும்**" என்றார்.

பாபா தனது பெயரில் செய்யப்பட்ட பணியைக் குறித்து கூறினார்:

**ஒவ்வொரு முறையும், என்னை மேலும் மேலும் நேசிக்கவும், எனது அன்பைப் பற்றி பிறரிடம் எடுத்துரைக்கவும், நான் உங்களிடம் கூறிக்கொண்டிருக்கிறேன். இன்று, என் அன்பைப் பற்றி பிறரிடம் கூறுவதற்கு**

**முன்னர், 'உங்கள் இதயங்களுக்குள் ஆராய்ந்து, நீங்கள் என்னை நேசிக்கத் தகுதியானவரா இல்லையா?' என்பதைத் தீர்மானியுங்கள்.**

**உதாரணத்திற்காக, பாபு ராம்பிரசாத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் மெஹர் பாபாவின் அன்பைப் பற்றி மக்களிடம் கூறுகிறார்: 'பாபா, அவதார புருஷர், அனைத்தும் அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது, எல்லா சூழ்நிலைகளிலும் நாம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். பாபா மட்டுமே உண்மையானவர், பிற அனைத்தும் மாயை. அவருடைய விருப்பமின்றி ஒரு மரத்தின் இலைகள் கூட அசையாது. அவரை நேசிப்பது வாழ்க்கையில் நமது கடமை.' திடீரென அவருக்கு ஒரு தொலைத்தந்தி வருகிறது, அதில் அவரது வீட்டிலிருந்து ரூ.10,000 திருடப்பட்ட செய்தி தெரிவிக்கப்படுகிறது. அதை நினைத்து, பாபு ராம்பிரசாத் கதறி, புலம்பி, துயரத்தின் அனைத்து அறிகுறிகளையும் வெளிப்படுத்தினால், அவரை சூழ்ந்துள்ள மக்கள் மீது அது என்ன விளைவை ஏற்படுத்தும்? பாபாவின் அன்பை அவர்கள் உணர்வார்களா? பாபு ராம்பிரசாத் சொன்னதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு என்று நினைக்க மாட்டார்களா? அவரே மாயையில் மாட்டிக் கொண்டு, எல்லாமே மாயை என்று மக்களுக்குச் சொல்கிறார்! ஆனால், அதற்கு மாறாக, அந்தச் செய்தி பாபுவை கலக்கமின்றி அசையாமல் இருக்கச் செய்தால், ஆம், பாபா மீது அவருக்கு உண்மையான அன்பு இருப்பதாக மக்கள் உணர்வார்கள்!**

**உங்களில் எவரேனும் எந்த பாதகமான சூழ்நிலையையும் சந்திக்கும் போது, அது போன்ற பிரதிகூலமான செய்திகளைக் கண்டு கவலைப்படாமல், என் அன்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால், ஆயிரக்கணக்கானோர் பாபாவை நேசிக்கத் தொடங்குவார்கள். உங்கள் வாழ்க்கையே பிறருக்கு என் அன்பின் செய்தியாக இருக்கும். நேர்மையும், நாணயமுமான அன்பர் ஒருவர் ஆயிரக்கணக்கான அன்பர்களை உருவாக்க முடியும்!**

தேநீர் இடைவேளைக்குப் பிறகு, குழுவில் பலர், பய்யா பாண்டேயிடமிருந்து பாபாவின் புகைப்படங்களை வாங்கியதை கவனித்த பாபா, **"எனது புகைப்படங்களோடு, நீங்கள் இங்கிருந்து உங்கள் இல்லங்களுக்குப் புறப்படும்போது, என்னையும் உங்கள் இதயங்களில் எடுத்துச் செல்ல வேண்டும்"** என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து பாபா, இதற்கு முன்னர் இரண்டு குழுக்களுடன் செய்ததைப் போலவே, மண்டலி மற்றும் அவரைச் சார்ந்திருக்கும் குடும்பங்களைக் குறித்து பேசினார். மண்டலி மற்றும் பிறரின், ஆண்டு முழுவதும், அன்றாடச் செலவுகளுக்காக அவர்களின் வசதிக்கேற்ப எந்தத் தொகையை வழங்க முடியுமோ, அதை அவர்கள் பாபாவின் உலகளாவிய பணியில் பங்குகொள்ளும் விதத்தில் வழங்கலாம் என்று அவர் விளக்கினார்; ஆனால் பணத்தை வழங்க முடியாவிட்டால் அவர்கள் கவலைப்பட வேண்டிய தேவையில்லை. ஒரு ரூபாய் கூட வழங்கலாம் ஆனால் வீடு வீடாகச் சென்று

வசூல் செய்யக்கூடாது. **"நான் என் மீதான பாரத்தைக் குறைக்க விரும்புகிறேன், மேலும் எனது விருப்பத்திற்கு மாறாக சேகரிக்கப்பட்ட நன்கொடைகளை நீங்கள் அனைவரும் என் மீது சுமத்த வேண்டாம்"** என்று அவர் கூறினார்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"என்னைப் பொறுத்த வரை, பணத்திற்கு எந்த மதிப்பும் இல்லை. பணம் ஒரு திரையை உருவாக்குகிறது அல்லது அதை கிழித்துவிடுகிறது!"**

பாபா ஐந்து பரிபூரண குருநாதர்கள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட குணாதிசயங்களைப் பற்றி பேசினார்; மேலும் ஆரம்பகால மெஹராபாத் நாட்களில் நிகழ்ந்த இந்த சம்பவத்தை விவரித்தார்:

**அந்த நாட்களில், குஸ்தாஜி சரக்கு அறையின் பொறுப்பாளராக இருந்தபோது, ஏழைகளுக்கு தானியங்கள் விநியோகம் செய்தார். அஹமதுநகர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வந்த ஏராளமான ஏழை மக்களுக்கு தானியம் வழங்கப்பட்டது.**

**அஹமதுநகரில் வாழ்ந்த ஒரு முதியவர் அவ்வப்போது வந்து என்னிடம் கூறினார்: 'பாபா, என்னுடைய அனைத்தையும் உங்கள் காலடியில் வைக்க விரும்புகிறேன்.'**

**நான் பதிலளித்தேன், "இதுவரை, இதுபோன்ற அர்ப்பணிப்புடன் வந்த ஒரு தனி நபரை நான் சந்திக்கவில்லை! இது அற்புதம்!"**

**அவருக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்டேன். "ஏழு குழந்தைகள், ஒரு மனைவி!" என்றார்.**

**"நீங்கள் என்ன அர்ப்பணம் செய்ய விரும்புகிறீர்கள்? உங்களிடம் பணம் இருக்கிறதா?" என்று கேட்டேன்.**

**அவர் பதிலளித்தார், "என்னிடம் பணம் இல்லை, ஆனால் நான் எனது முழுக் குடும்பத்தையும் உங்கள் காலடியில் அர்ப்பணிக்கிறேன், தயவுசெய்து எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்."**

**அவருடைய பதிலைக் கேட்டு நான் மிகையாக சிரித்தேன். அத்தகைய அர்ப்பணிப்பு குறித்த கருத்தே எனக்குக் கிடையாது! அவர் எனக்கு ஒரு புதிய வகையான அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டினார்.**

வாக்குறுதிகளைக் குறித்து பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"காலாதி காலத்திலிருந்து, நான் வாக்குறுதிகளை வழங்கி வருகிறேன், மீறவும் செய்கிறேன்; ஆனால் இதுவரை, ஒரு வாக்குறுதியையும் மீறவில்லை என்பதை நான் உங்களுக்கு உண்மையாகச் சொல்கிறேன்!"**

அப்போது பாபா, **"இன்றைக்கு இது போதும் என்று வாஸ் தேவ் கெய்ன் எனது காதில் கிசுகிசுக்கிறார், எனவே நான் மாலை 5:00 மணிக்கு மெஹராஸாத் செல்ல வேண்டும்"** என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

அனைவரும் சிரித்தனர், பாபா பத்து நிமிடங்களுக்கு ஓய்வு எடுத்த பின்பு, குழு மீண்டும் மண்டபத்திற்குள் நுழைந்ததும், சிறிது நேரம் பஜனைகள் பாடப்பட்டன, அதைத் தொடர்ந்து பாபா கூறினார்:

**நாளை உங்களுடன் ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டு, 'அன்பின் பரிசு' என்றால் என்ன என்பதை விளக்குவேன். அன்பைப் புரிந்து கொண்டவர் யார் என்று சோதிக்கப் போகிறேன். இந்தப் பரிசுக்குத் தகுதியானவர் யார் என்று நான் பார்ப்பேன். நான் உங்களிடம் செய்யச் சொல்வதை, உங்களால் செய்ய முடியவில்லை என்றால் பரவாயில்லை. அதை அடையப் பெறுவதற்கு நீங்கள் தகுதியற்றவர் என்று உணர்ந்தால், கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு தைரியம் இல்லையென்றால், உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் இருக்கும்போது, நான் எப்படி தைரியமின்றி இருக்க முடியும்! மேலும், ஒரு பரிகாரம் உள்ளது. உயிரைத் துறக்கும் நேரத்தில், என்னை நீங்கள் நினைவுகூர்ந்தால், என்னிடம் வருவீர்கள்.**

கயா பிரசாத் கரே, "அந்த நேரத்தில் நாங்கள் உணர்வுடன் இருந்தால், உங்கள் பெயரை நினைவில் கொள்ளலாம்" என்றார்.

பாபா விளக்கினார்:

**அந்த நேரத்தில் நினைவின் உணர்வைத் தக்க வைக்க, நீங்கள் இந்த நேரத்திலிருந்தே என்னை நினைவில்கொள்ளத் தொடங்க வேண்டும்! நான் தொடர்ந்து எனது பெயரை நினைவில் கொள்கிறேன். அதேபோல, நீங்களும் ஒவ்வொரு கணமும் எனது பெயரைத் தொடர்ந்து உச்சரிக்க வேண்டும். உயிர் வாழும் வேளையில் உங்களால் அதைச் செய்ய முடியாவிடில், உயிரைத் துறக்கும் நேரத்தில் அதை நினைவில் கொள்ளுங்கள்! உங்களுக்கு, அனைத்து பிணைப்புகளிலிருந்தும் உங்களை விடுவிப்பதற்கான ஒரே வழி இதுதான்.**

**விஷ்ணு** (ஹமிர்பூர், தக்வான் கிராமத்தைச் சேர்ந்தவர்), **உங்கள் கடந்த பிறவியில் உங்களுக்கு எத்தனை குழந்தைகள் இருந்தனர் தெரியுமா? நீங்கள் மறந்துவிட்டீர்கள். நீங்கள் எத்தனை முறை பிறந்தீர்கள், எத்தனை குடும்பங்களுடன் வாழ்ந்தீர்கள்! நீங்கள் இதையெல்லாம் மறந்துவிட்டீர்கள், ஆனால் அவர்களுடனான பிணைப்புகள் இன்னும் உங்களிடம் உள்ளன; நீங்கள் புதிய குடும்ப உறவுகளை உருவாக்குவதன் மூலம், மேலும் மேலும் பிணைப்புகளை உருவாக்குகிறீர்கள்! இந்த அடிமைத்தனத்திலிருந்து எனது பெயர் மட்டுமே உங்களை விடுவிக்க முடியும்.**

**ஒருவர் பிறக்கிறார், ஒருவர் இறக்கிறார் என்று கூறுவதெல்லாம் வெறும் வெற்றுப்பேச்சு. இதெல்லாம் கடந்து போகும் நிகழ்ச்சி. திரைப்படம் போலத்தான் இதுவும். இந்த நேரத்தில், நம் கண் முன்னே இருப்பதை, நாம் பார்க்கிறோம்; அது இல்லாத போது மறந்து விடுகிறோம். பிறப்பு, இறப்பு, உடல், உருவம், தந்தை, தாய், மகன், மகள் என எதுவும் இல்லை. ஆனால் இந்தக் கதை எதுவும் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் கட்டுண்டவர்களாக**

**இருக்கிறீர்கள். உலகம் முழுவதையும் அதன் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்க எனது பெயரை மட்டும் திரும்பத் திரும்ப உச்சரித்தால் போதும்.**

**நான் என் உடலைக் கைவிட்ட அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர், உலகில் என்ன அற்புதமான மாற்றங்கள் நிகழ்கின்றன, எத்தனை பேர் எனது பெயரை நினைவில் கொள்வார்கள் என்பதைக் கண்டுகொள்வீர்கள். எனது பெயரில், தங்கள் உயிரையே தியாகம் செய்பவர்கள் ஆயிரக்கணக்கானோர் இருப்பார்கள். ஆனால், நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் பாருங்கள், நான் உங்கள் மத்தியில் இருப்பதும், நீங்கள் என் முன்னால் அமர்ந்திருப்பதும், அனைத்தும் அதிவிரைவில் மறைந்து போகும் இவ்வேளையில், எனது பெயரைத் தவறாமல் நினைவில் கொள்ளுங்கள் என்று நான் சொல்வதும் எவ்வளவு பெரிய விஷயம்! 60 ஆண்டுகளுக்குப் பின்னர் எனது பெயரை உச்சரிக்குமாறு உங்களுக்குச் சொல்ல எவரும் இங்கு இருக்க மாட்டார்கள்.**

**பாலை சூடாக்கும் போது, அது கொதித்து பாத்திரத்தில் நிரம்பி வழிகிறது. ஆனால் என் அன்பில் நீங்கள் கொதிக்கத் தொடங்கும் போது, நீங்கள் உள்ளேயே கொதிக்க வேண்டும், வெளியே காட்டுவதற்காக பால் போலப் பொங்கி வழியக்கூடாது. அன்பு என்பது எவரிடமும் எடுத்துரைக்கவோ வெளிப்படுத்தவோ கூடிய விஷயம் அல்ல. இது சிந்தாமல் சிதறாமல் காக்கப்பட வேண்டிய பரம ரகசியம்.**

பேச்சின் தலைப்பை மாற்றி, பாபா தமது ஆந்திர சேவகர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டையும், அவர் எப்படி அதற்கு ஒரு தீர்வை கொண்டு வந்தார் என்பதையும் விளக்கினார். அதைத் தொடர்ந்து பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, தக்வான் கிராமத்தின் விஷ்ணு மேலும் சில பக்திப் பாடல்களைப் பாடினார். நிகழ்ச்சியின் போது, பாபாவின் பார்வையில் இருந்து கதிர்கள் ஒவ்வோர் அன்பரின் இதயத்தையும் தொட்ட அந்த அனுபவம் அவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. “இறை அன்பிற்குரியவர் அவரது அன்பின் ஆனந்தப் பெருங்கடலில் அனைவரையும் ஒன்றிணைப்பது போல் இருந்தது!” என்று காலம் பறைசாற்றியது.

பாபா மண்டபத்தை விட்டு வெளியேறி, காரில் அமராமல், சாலையில் சிறிது தூரம் நடந்து சென்று, அமைதியாக ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தார். அவரது விரல்கள் நடனமாடத் தொடங்கின, மேலும் அவர் சகவாச குழுவின் பாரத்தை தன்மீது எடுத்துக்கொள்வது போலத் தோற்றமளித்தார். சிறிது நேரத்தில், மாலை 5:20 மணிக்கு, பாபா எழுந்து நின்று, காரில் தனது இருக்கையில் அமர்ந்து மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார். அன்பர்கள் அருகில் நின்று அனைத்தையும் உற்று நோக்கி, இறை மனிதனின் மதுபானத்தில் மூழ்கி, உரையாடலைத் தொடர்ந்தனர்.

அடுத்த நாள், திங்கட்கிழமை, 1955 நவம்பர் 21, காலை 7:30 மணிக்கு பாபா, மெஹராபாத் வந்தார். அவரது அறைக்குச் சென்று, உடனடியாக அவர்,

இரவில் வயிற்றுப்போக்கால் அவதிப்பட்ட நிரஞ்சன் ஸிங்கைப் பார்க்கச் சென்ற வேளையில், குளுக்கோஸ் கலந்த தண்ணீர், பழரசம், மாலையில் ஒரு கப் பால் உட்கொள்ளுமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார். "**விரைவில் நீங்கள் குணமடைவீர்கள்**" என்று உறுதியளித்தார்.

பாபா, மீண்டும் தமது அறைக்குச் சென்று, மண்டலியுடன் பல்வேறு விஷயங்களை விவாதித்து, காலை 8:20 மணிக்கு மண்டபத்திற்குள் நுழைந்த அவர், தூங்காதவர்களை எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டார். ஸ்ரீபத் ஸஹாய் எழுந்து நின்றதும் பாபா அவரிடம், "**நீங்கள் ஏன் தூங்கவில்லை?**" என வினவினார். முந்தைய நாள் இரவு சற்று அதிகமாக சாப்பிட்டேன் என்று பதிலளித்தார். பாபா நகைச்சுவையாகப் புக்காரை நோக்கி, "**உங்கள் நிழல் அவர் மீது விழுந்ததா?**" என்று கேட்டார்.

மாத்ர தத்தா ஸாஸ்திரியாலும் தூங்க முடியவில்லை. அவர் கிருஷ்ணரின் அவதாரத்தைப் புகழ்ந்து ஒரு சமஸ்கிருத ஸ்லோகத்தை மொழிந்தார், பின்பு தாங்கொணா வலியால் அழுதுகொண்டே தனது பாவங்களுக்காக பாபாவிடம் மன்னிப்புக் கோரினார். பாபா அவரை அழைத்து அன்புடன் அணைத்துக் கொண்டார்.

பாபா அவருக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தபோது, ஒருவர் மாத்ர ஸாஸ்திரியைப் பற்றி கூறினார், "அவர் உள்ளளவில் ஏதோ உணர்வில் இருந்ததால் அவருக்குத் தூக்கம் வரவில்லை."

பாபா, ஸாஸ்திரிக்கு விளக்கினார்:

**பயப்படாதீர்கள் ஸாஸ்திரிஜி. எதுவும் சொல்ல வேண்டிய தேவையில்லை. நான் அவதார புருஷன் என்றால் எனக்கு அனைத்தும் தெரியும். அதற்காகவே நான் வந்துள்ளேன், அதை நான் வழங்க முடியும். மன்னிக்கப்படுவோருக்கு அது மிக உயர்ந்த விஷயம். "நான் உங்களை மன்னிக்கிறேன், நான் உங்களை மன்னிக்கிறேன்" என்று கிறிஸ்து அடிக்கடி கூறினார். சிலர் இதை அவருடைய பிரசாதமாகக் கருதினர்; ஆனால், பொதுவாக மக்களால் அவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை.**

**நான் அவதார புருஷராக இருந்தால் அனைத்தும் மன்னிக்கப்படும். நான் அவராக இல்லை என்றால், என்னிடம் மன்னிப்பு கேட்பதால் என்ன பயன்? உண்மையில், மன்னிக்க எதுவும் இல்லை. நல்லது, தீயது என்று எதுவும் இல்லை. உங்கள் பிணைப்புகள் காரணமாக, நீங்கள் அதை அப்படி எடுத்துக்கொள்கிறீர்கள். இந்த அடிமைத்தனத்தில் நன்மையும் உண்டு தீமையும் உண்டு; ஆனால் இறுதியில் எல்லாம் பூஜ்ஜியம். மாயா உங்களுக்காக இருக்கிறாள், எனக்காக அல்ல.**

**நான் எதையாவது மன்னித்துவிட்டேன் என்று நிரஞ்சன் ஸிங்கிடம் கூறுவதானால், அதன் அர்த்தம் என்ன? ஒரு பொருளின் அடிமைத்தனத்திலிருந்து நான் அவரை விடுவித்தேன் என்று அர்த்தம். எது மன்னிக்கப்படுகிறதோ அது மாயாவின் பிணைப்பு. மன்னிப்பது எனக்கு**

**பெரிய விஷயமில்லை. ஆனால் எதுவுமே இல்லாதபோது யாரை மன்னிப்பது, எதை மன்னிப்பது**!

**நான் உங்களை மன்னிக்கிறேன் என்று கூறும் வேளையில், என்ன நடக்கும்**? **அப்போது, இருமைத்தன்மையில் உள்ள உங்கள் பிணைப்புகள் தளர்ந்துவிடும்; மன்னிக்க நேரம் எடுக்காது. வைக்கோல் குவித்து வைக்கப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒரு நெருப்புக் குச்சியின் உதவியுடன் குவியலை எரிய விட்டால் என்னவாகும்**? **எந்த நேரத்திலும் அது எரிந்து சாம்பலாகிவிடும். இந்தக் குவியல் என்ன**? **வெறும் வைக்கோல்** (அதாவது மனப்படிவங்கள்)! **எனவே என்னைப் பொறுத்தவரை, நீங்கள் குவித்து வைத்துள்ள அசுத்தமாகிய பாவங்களை எரித்து சாம்பலாக்க எனக்கு நேரமாகாது. இறை மன்னிப்பு அவற்றை சிறிது நேரத்தில் எரித்துவிடும்.**

**எனவே, நான் உங்களை மன்னிக்கிறேன், ஸாஸ்திரிஜி. எண்ணங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். எப்பொழுதும் எனது பெயரை மொழியுங்கள். எந்த எண்ணமும் வரட்டும்; வருந்த வேண்டாம், ஆனால் எனது பெயரைத் தொடர்ந்து உச்சரியுங்கள்.**

**இதற்கு முன்னர் இரண்டு மூன்று முறை மண்டலிக்கு நான் விளக்கினேன்; நான் இன்று உங்களுக்கும் விளக்குகிறேன். இது ஒரு நல்ல உதாரணம். கொசுக்கள் கடித்தால், உங்களுக்கு மலேரியா வரும். கொசுக்கள் கடிப்பதைத் தடுக்க, நீங்கள் ஒரு கொசுவலையைப் பயன்படுத்துகிறீர்கள். இருந்தபோதிலும், கொசுக்கள் வெளியே ரீங்காரமிட்டு, உங்களைக் கடிக்கத் தயாராக உள்ளன. ஆனால் கொசுவலை, உங்களைக் கடிக்காமல் காப்பாற்றுகிறது, அதன் விளைவாக, நீங்கள் மலேரியா நோயால் பாதிக்கப்படுவதில்லை. இப்போது, கொசுக்கள் என்பது உங்கள் எண்ணங்கள், கொசுவலை - பழையது, புதியது, நல்லது, கெட்டது எதுவானாலும், அது எனது பெயர், மேலும், என்னுடனான தொடர்பு, சகவாசத்திற்கு சமம். நீங்கள் கொசுவலைக்குள் இருக்கும்போது** (பாபாவின் பெயரை உச்சரிக்கும் போது) **வெளியே ரீங்காரமிடும் கொசுக் கூட்டங்கள்** (உங்கள் நல்ல, தீய எண்ணங்கள்) **உங்களை அண்ட முடியாது. நீங்கள் மலேரியாவிலிருந்து** (பிணைப்புகளிலிருந்து) **காப்பாற்றப்படுவீர்கள். எனவே எப்பொழுதும் பாபாவின் பெயரையே நினைவில் கொள்ளுங்கள், உங்களுக்கு என்ன எண்ணங்கள் இருந்தாலும் அவற்றைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.**

மெஹர் பாபாவின் அவதாரத்தைப் பற்றி ஸாஸ்திரிக்கு ஒரு சந்தேகம் எழுந்தது, அது அவரது மனதைத் தொந்தரவு செய்தது. அதைக் குறித்து பாபாவிடம் கூறாமலேயே, அவர் மன்னிப்புக்காக வேண்டிக்கொண்டார்; பாபா எந்த விளக்கமும் கேட்காமல் எல்லாவற்றையும் தீர்த்து வைத்தார். இந்த சம்பவம் ஸாஸ்திரிக்கு பாபா மீதான நம்பிக்கையை மேலும் வேரூன்றச் செய்தது.

அதற்குப் பிறகு, பாபா சிறிது நேரம் சிரித்துக்கொண்டே அமைதியாக இருந்தார். பின்னர் அவர் கூறினார்:

**இப்போது நான் உங்களுக்கு கொடுக்க விரும்பும் அன்பின் பரிசைப் பற்றி ஐந்து நிமிடங்களில் சொல்கிறேன். இன்று காலை 2:00 மணிக்கு எனக்கு மீண்டும் ஞாபகம் வந்தது. உணர்ச்சிவசப்பட்டு உடனடியாக எழுந்து நிற்க வேண்டாம், ஆனால் நான் விரும்பும் வாழ்க்கையை நீங்கள் வாழ முடியுமா என்று முதலில் உங்கள் மனசாட்சியைக் கேளுங்கள். நேர்மையாக நீங்கள் அதைச் செய்ய முடியும் என்று நினைத்தால், அத்தகைய வாழ்க்கையை வாழுங்கள். ஆனால் உங்கள் அகந்தை அதைச் சொல்லவிடாமல் தடுக்க வேண்டாம்.**

**அத்தகைய வாழ்க்கையை உங்களால் வாழ முடியாவிட்டால், கவலைப்பட வேண்டாம். இது மிகவும் எளிதானது; ஆனால் இது மிகவும் எளிதானது என்பதால், மிகவும் கடினம்! நீங்கள் செய்தால், மிகவும் நல்லது; இல்லையேல் இந்த அன்பின் பரிசு, தக்க தருணத்தில் உங்களுக்கு வழங்குவதற்காக மட்டுமே என்னிடம் இருக்கும்.**

**இப்போது கவனமாகக் கேளுங்கள். நான் சொல்லப் போவதை அவசரப்படாமல் சரியாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். முடிந்தால், அதைச் செய்யுங்கள்; இல்லையேல் செய்யாதீர்கள்: ஆனால் முடியாததை முடிந்தது போலக் காட்டி, "நான் அதைச் செய்வேன்... நான் அதைச் செய்ய வல்லவன்" என்று கூறாதீர்கள்.**

**எதிர்வரும் பிப்ரவரி 15ஆம் தேதி முதல், ஒரு வருடம் நான் வெளியே செல்லவிருக்கிறேன். பிப்ரவரி 15 முதல் ஒரு வருடத்திற்கு, ஒவ்வொரு நாளும் (நள்ளிரவில்) எனது பெயரை, ஒரு நாள் 14 முறையும், மறுநாள் 28 முறையும் - மீண்டும் மூன்றாவது நாளில் 14 முறையும், நான்காவது நாளில் 28 முறையும், மேலும் - 14 மற்றும் 28, 14 மற்றும் 28 முறை மொழிய வேண்டும் - ஒரு முறை கூட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மொழிய வேண்டாம். மேலும் இந்த 24 மணிநேரத்தில், எனது பெயரை ஒருபோதும் (ஒருவர் கேட்கும் விதத்தில்) உச்சரிக்காதீர்கள்! இதுவே அன்பின் காணிக்கை எனப்படும். சாதாரண உரையாடலின் போது, நீங்கள் யாரிடமாவது என்னைப் பற்றி பேச வேண்டியிருந்தால், நீங்கள் எனது பெயரை உச்சரிக்கலாம், ஆனால் நோயால் அவதிப்படும்போது, விபத்து அல்லது நல்லது கெட்டது நிகழும் போது 'பாபா' என்று உச்சரிக்கக் கூடாது. சரியாக நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு, ஒரு நொடி இங்கும் அங்கும் பிசகாமல், துல்லியமாக நினைவில் கொள்ளுங்கள்!**

**24 மணி நேரத்திலும், எனது பெயரை உச்சரிக்காமல் இருப்பதில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் எவ்வளவு அதிகமாக நினைவில் கொள்வீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் அதிலிருந்து நழுவுவதற்கான ஆபத்து உள்ளது. எவரேனும் உங்களை வலுக்கட்டாயமாக தாக்கினால், எனது பெயர் வாய்தவறி தெரியாமல் வந்துவிட்டால், உங்கள்**

**முயற்சியில் நீங்கள் தோல்வியுற்றீர்கள் என்று அர்த்தம். எனவே மிக மிக கவனமாக இருங்கள். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். இப்போது நீங்கள் அதை உங்களால் முடிந்தவரை சிறப்பாகக் கண்காணிக்க வேண்டும்.**

ஆதர்ஷ் கரே உடனே, "நாங்கள் எங்கள் தந்தையை 'பாபா' என்று அழைக்கிறோம், அந்த வார்த்தையை நாங்கள் பயன்படுத்தக் கூடாது என்றால், நாங்கள் என்ன சொல்லி அழைக்க வேண்டும்?"

**"அப்படியானால், நீங்கள் அவரை பாபா என்று, தந்தை எனும் அர்த்தத்தில் அழைக்கலாம், என்னை அல்ல. ஆனால் அந்த நேரத்தில், நீங்கள் என்னைப் பற்றி நினைக்கக்கூடாது."**

நிரஞ்சன் ஸிங்கிடம் பாபா கேட்டார், **"உலகில் எவரேனும் இதைச் செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?"**

"ஒருவேளை," அவர் பதிலளித்தார்.

பாபா சிரித்தார், அப்போது ஒருவர் கேட்டார், "நேரம் பார்க்க கடிகாரம் இல்லை என்றால், என்ன செய்ய வேண்டும்?"

**"அப்படியானால், ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அல்லது நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு கழிப்பறைக்குச் செல்ல வேண்டியிருந்தால் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்! அது கடினம். 24 மணி நேரமும் நீங்கள் என்னை நினைவில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று நான் சொன்னால், அது மிகவும் கடினம். நிச்சயமாக நீங்கள் என்னை நினைவில் கொள்வீர்கள்!"** என்று பாபா பதிலளித்தார்.

ஸ்ரீவஸ்தவா உடனே கூறினார், "ஆனால் நீங்கள் முட்களை சிதற விடக்கூடாது!" - அதாவது, சிரமங்களை உருவாக்கக் கூடாது.

**"நான் ஏன் முட்களை சிதறடிக்க வேண்டும்?"** என்று பாபா கேட்டார். **"ஒரே ஒரு விஷயம் என்னவெனில்** (நள்ளிரவில் திரும்பத் திரும்ப மொழிந்த பின்னர்), **எஞ்சியுள்ள 24 மணிநேரங்களில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."**

ஸ்ரீவஸ்தவா, "நீங்கள் எங்களை தோல்வியடையச் செய்வீர்கள், பாபா!" என்று கருத்துரைத்தார்.

நிரஞ்சன் ஸிங் மேலும் கூறினார், "கடந்த முறை, எனது நண்பர் ஹரிசந்த் ஸிங் உங்கள் தரிசனத்திற்கு வந்தபோது, ஒவ்வொரு நள்ளிரவிலும் ஐந்து நிமிடங்களுக்கு உங்கள் பெயரை உச்சரிக்கக் கூறினீர்கள். பின்னர் அவர், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஐந்து நிமிடங்களுக்கு பாபாவின் பெயரை உச்சரிப்பது கடினம், ஆனால் நாள் முழுவதும் அதைச் செய்வது அவருக்கு எளிதாக இருந்தது" என்று என்னிடம் கூறினார்.

பாபா பதிலளித்தார், **"24 மணி நேரமும் விழிப்புடன் இருப்பது எவ்வளவு கடினம்! ஓர் இரவில் 14 முறையும், மறுநாள் 28 முறையும் எனது பெயரை மொழிந்தால் போதும்; அதற்கு மேல், என்னை நினைவில் வைத்துக்**

**கொள்ளாமல் கவனமாக இருக்க வேண்டும். எவரேனும் இதற்குக் கீழ்ப்படிந்தால், அவர் அன்பைப் பரிசாகப் பெறுவார்!"**

இந்த அறிக்கை சகவாசக் குழுவை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது, மேலும் பாபா விளக்கினார்:

**ஆன்மீகப் பாதையில், வெளியளவிலான துறவு தேவையற்றது. உலகில் வாழுங்கள், உங்களுக்கு நெருக்கமானவர்கள் மற்றும் அன்பானவர்களுக்கான உங்கள் கடமையைச் செய்யுங்கள். ஆனால் பற்றற்ற விதத்தில் அவற்றில் ஈடுபடுங்கள். அதற்கு, எனது பெயரை எப்போதும், அவ்வப்போது நினைவில்கொள்ள வேண்டும். இது முடியாவிட்டால், குறைந்தபட்சம் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பும், காலையில் எழுந்திருக்கும் போதும் நினைவில் கொள்ளுங்கள். பேரிடர் நேர்ந்தால் அழுது புலம்பவேண்டாம், ஆனால் எனது விருப்பத்திற்கு சரணடைந்து அமைதியாக அதை சமாளிக்க முயற்சி செய்யுங்கள்.**

**உலகம், மனைவி, குழந்தைகள், சொத்து, சுகம் போன்றவற்றைத் துறப்பதால் எந்த பயனும் இல்லை. மனதைத் துறப்பதுதான் ஒரே தேவை. வயிற்றைப் பட்டினி போடாதீர்கள், மனதைப் பட்டினி போடுங்கள்! வெளியளவிலான துறவில் உங்கள் மனதை உங்களுடன் எடுத்துச் செல்கிறீர்கள், மேலும் உங்கள் குடும்பம், செல்வம் மற்றும் பலவற்றைப் பற்றிய எண்ணங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கிறீர்கள்.**

**பிப்ரவரி 15ஆம் நாளிலிருந்து மூன்று அல்லது நான்கு மண்டலியை என்னுடன் அழைத்துச் செல்வேன், பிற அனைவரையும் விட்டுச் செல்வேன். நான் எல்லா எண்ணங்களையும் - மண்டலி, உங்களை மற்றும் பிறரைப் பற்றிய எல்லா எண்ணங்களையும் விட்டுவிடுவேன்.**

பாபா, தௌலத் ஸிங்கிடம் 'கிரந்த் ஸாஹேப்' (GRANTH SAHEB, சீக்கியர்களின் புனித நூல்) நூலிலிருந்து பிரபலமான வசனத்தை வாசிக்கச் சொன்னார். அவர் "உயர்ந்தவர்களில் உயர்ந்தவர், இறைவன்" பற்றி சில வரிகளைப் பாடிய வேளையில், பாபா "**இதைக் கேட்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது**" என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து, முந்தைய இரு மொழிக் குழுக்களைப் போலவே, பாபா ஏழு நாள் உபவாசம் குறித்த விஷயத்தைத் தொட்டு, அதைச் செய்யத் தயாராக இருந்தவர்களை எழுந்து நிற்குமாறு கோரினார். பல அன்பர்கள் முன்வந்தனர். புக்காரைப் பார்த்து பாபா, "**நீங்கள் மிகவும் பருமனாக இருப்பதால், தேர்ந்தெடுக்கப்படுகிறீர்கள்!**" என்றார்.

ஹக்குமத் ராய் கபிலிடம், பாபா, "**நீங்களும் மிக்க பலசாலியாக உள்ளீர்கள்! சரி, நீங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள்**" என்று குறிப்பிட்டார்.

டெஹ்ரா டூனின் விரீந்தர் ஸிங்கைத் தேர்ந்தெடுத்து, பாபா இவ்வாறு கூறினார், "**சில சீக்கியர்களை நான் எப்படிக் கண்டுகொண்டேன் என்று**

**பாருங்கள்! உங்களால் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்! குருநானக் எனக்குப் பிரியமானவர்; அதே நானக் இன்று உலகில் இருக்கிறார்!"**

மெஹர்தாஸ் (ராம்தாஸ்) மற்றும் குஞ்ச் பிஹாரி (KUNJ BEHARI) ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர், எனவே ஹிந்தி குழுவிலிருந்து ஐந்து பேர் 1956 பிப்ரவரி 15 முதல் ஏழு நாட்கள், நீர் மட்டுமே அருந்தி, உபவாசம் கடைப்பிடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்படாத இதர அன்பர்கள் கவலைப்பட வேண்டாம் என்று பாபா உறுதியளித்தார். ஏனெனில் அவர்களது மனமார்ந்த விருப்பத்தைத் தெரிவித்ததன் மூலம் அவர்கள் ஏற்கனவே உபவாசம் இருந்ததாகப் பொருள்படும்.

உபவாசம் மேற்கொள்ள இருந்தவர்களை நோக்கி பாபா கூறினார்:

**மேலும் அதிக வழிமுறைகளை நாளை வழங்குகிறேன். உபவாசத்திற்குப் பின்னர், ஆன்மீக ரீதியில் பாதையில் முன்னேறிவிட்டதாக நினைக்காதீர்கள்! ஒருமுறை ஆந்திராவில் ஒருவரை 40 நாட்கள் உபவாசம் இருக்கச் செய்தேன். அதன் பின்னர் அவர் சில உள் அனுபவங்களை அடையப்பெற நேர்ந்ததால், மக்கள் அவருக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்துவதை அனுமதிக்கத் தொடங்கினார். அவர் தனது அனுபவத்தைப் பற்றி அவர்களிடம் கூறி வந்ததால், மக்கள் அவரை நோக்கி வெகுவாக ஈர்க்கப்பட்டனர்.**

**உபவாசம் அல்லது வேறு எதையும் பற்றிய எனது அறிவுரைகள், வெளியளவில் எளிதாகத் தோன்றினாலும், நடைமுறையில் கடைப்பிடிப்பது கடினம். அமெரிக்காவில் இந்த உபவாச மோகம் ஆரம்பித்ததிலிருந்து சாதனைகளை முறியடிப்பதாகப் பெருமை கொள்கிறார்கள்!**

**உபவாசம் அன்பை அதிகரிக்காது. இரண்டிற்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை. எல்லா துறவுகளும், தவங்களும், கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது போன்ற அனைத்தும், நான் அறிவுறுத்தும் இந்த உபவாசத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. எனவே, நான் உங்களை உபவாசம் கடைப்பிடிக்க அறிவுறுத்தாத வரை, நீங்கள் ஏன் உபவாசம் மேற்கொள்ள வேண்டும்? நீங்கள் சுயமாக உபவாசம் கடைப்பிடிக்க விரும்பினால், உங்கள் வயிறு நிறைந்திருந்தாலும், மனம் பட்டினியால் தவிக்கும் விதத்தில் உபவாசம் இருங்கள்! இதுவே சிறந்த உபவாசமாகும்.**

பாபா தனது அன்பின் பரிசைக் குறிப்பிட்டு, மீண்டும் கூறினார்:

**அன்பைப் பொறுத்தவரை எதையும், எப்பொழுதும் கேட்க வேண்டிய தேவை இராது.**

**நீங்கள் நள்ளிரவில் அமர்ந்திருக்கும் போது, முதல் நாள் இரவில் 'பாபா, பாபா' என்று 14 முறையும், இரண்டாவது இரவில் 28 முறையும், ஒரு வருடத்திற்கு மாற்றி மாற்றி மொழியுங்கள். எந்த எண்ணம் வந்தாலும், உங்களை அத்துடன் பிணைத்து விடாதீர்கள், ஆனால் 14 முறை மற்றும் 28 முறை நாமத்தை உச்சரிக்கும் ஒரே ஒரு பிணைப்பிற்கு மட்டும்**

சரணடையுங்கள். கடினமாக இருந்தாலும், அது சாத்தியம். பாவ் அதைச் செய்ய விரும்பினால், அவர் தோல்வியடைவார், ஏனெனில் ஆழ்ந்த தூக்கத்தில் கூட அவரை அறியாமலே எனது பெயரைக் கூறுகிறார்! இது அவருடைய பழக்கம்.

(பாபாவின் நாமத்தை உச்சரிக்கத் தயாராக இருக்கும்) உங்களுக்கு இது கடினம், ஏனெனில் எஞ்சிய 24 மணி நேரமும் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்; அவ்வாறு இருக்கும் வேளையில், நள்ளிரவில் குறிப்பிட்ட எண்ணிக்கையைத் தவிர, பாபாவின் நாமம் உங்கள் உதடுகளிலிருந்து வெளிவரக்கூடாது. இதன் அர்த்தம் என்னவென்றால், ஒவ்வொரு கணமும் உங்கள் எண்ணங்களில் என்னை வைத்திருப்பீர்கள்.

நீங்கள் இதைச் செய்வீர்கள் என்று நான் சொல்ல வேண்டிய தேவை இல்லை. நான் உங்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று நீங்கள் கூறுவதானால், உங்களால் அதைச் செய்ய முடியாதது போன்ற பிம்பத்தை அது தோற்றுவிக்கும் அல்லது என்னை நேசிப்பதற்கான உங்கள் தகுதியை நீங்களே சந்தேகிப்பதாகத் தோன்றும்.

அன்பு என்பது அதைப் பற்றிய எதையும் வாய்விட்டுச் சொல்லவோ அல்லது வெளிப்படுத்தவோ முடியாத ஒரு விஷயம்; அது அனுபவிப்பதற்காக மட்டுமே! உங்களால் என்னை நேசிக்க முடியாது என்று நினைக்காதீர்கள். ஒரு நள்ளிரவில் என் பெயரை மொழிய மறந்துவிட்டால், நிறுத்திவிடாமல், அடுத்த இரவிலிருந்து அதைத் தொடர வேண்டும்.

உங்களால் இதைச் செய்ய முடியாவிட்டால், ஒவ்வோர் இரவும் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பும், தினமும் காலையில் எழுந்ததும் என்னை மனதார நினைத்துக் கொள்ளுங்கள், உங்கள் நல்லது, தீயது அனைத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள். இதைச் செய்யும்போது, அனைத்தும் பாபாவினுடையது, அதனால் அது அவருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது என்ற புரிதல் வேண்டும். மனம் மற்றும் அதன் செயல்பாடு பற்றி 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தில் நான் தெளிவாக விளக்கியுள்ளேன், அதைப் படித்த பின்பு, நான் என்ன சொல்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

'ஒன்றுமே' இல்லாத இடத்தில், யார் நல்லவர், யார் கெட்டவர்? எங்கும் நிறைந்தவரும், எல்லாம் அறிந்தவருமான கடவுள் மட்டுமே இருக்கிறார். அவர் உங்களிலும் இருக்கிறார். அளவிறுதியற்ற கருணையின் சிகரம் அவர். அவருக்கு எல்லாம் தெரியும். உங்கள் எண்ணங்கள் அனைத்தையும் அவர் அறிவார். 50 ஆண்டுகளுக்குப் பிறகு நீங்கள் என்ன நினைப்பீர்கள் என்பதும் அவருக்குத் தெரியும்; அவர் சர்வ வல்லமையுள்ளவர் என்பதால், அவர் ஏன் உங்கள் எண்ணங்களைத் தடுத்து நிறுத்தவில்லை? அவருடைய சக்தியைப் பயன்படுத்தி உங்கள் எண்ணங்களைத் தடுத்து நிறுத்துவது குறித்த கேள்விக்கு இடம் எங்கே? ஆழ்ந்து சிந்தித்தால், நல்லது, தீயது அனைத்தையும் செய்பவன் நான் மட்டுமே என்பது புலப்படும்!

**இருப்பினும், இந்தச் சிக்கல்களை வரவேற்பதற்கு பதிலாக, ஒன்றே ஒன்றைச் செய்யுங்கள்: அனைத்தையும் தள்ளி வைத்துவிட்டு, நான் கூறுவதை மட்டும் செய்யுங்கள்! உங்கள் குடும்பத்தை கவனித்து, உங்கள் அன்றாட கடமைகளை நிறைவேற்றுங்கள்; ஆனால் அவர்களுடன் பிணைந்திருக்காதீர்கள், இயன்றவரை எப்பொழுதும் என்னை நினைவில் கொள்ளுங்கள். இதன் மூலம் நீங்கள் மாயையில் ஆழமாகச் சிக்கிக்கொள்ள மாட்டீர்கள்.**

**நான் உங்களுக்குச் சொல்வதை எல்லாம் நினைவில் கொள்ளுங்கள். நல்லது, தீயது என்று வேறுபடுத்திப் பார்க்காதீர்கள்; நீங்கள் நல்லவர், பிறர் தீயவர் என்று நினைக்காதீர்கள். மக்கள் உங்களை இழிவுபடுத்தினால், அவதூறாக நடத்தினால், கவலைப்பட வேண்டாம்; என்னை நினைவுகூருங்கள். பிறருடைய மகிழ்ச்சியில் மகிழ்ச்சியாக இருங்கள், துன்பம் அல்லது துயரத்தில் இருப்பவர்களிடம் அனுதாபம் காட்டுங்கள். அப்போதுதான் நீங்கள் என்னை மகிழச் செய்வீர்கள்.**

**நீங்கள் கோபமடைந்தால், அதை வெளிப்படுத்தாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் நல்லவர் என்றும் பிறரொருவர் தீயவர் என்றும் நீங்கள் நம்பினால், அவரை உங்களைப் போல மாற்ற முயற்சி செய்யுங்கள். ஆனால் அதை அன்புடன் செய்யுங்கள்! நீங்கள் வசதி படைத்தவராக இருந்தால், ஏழைகளுக்கு உணவளித்து, அவர்களுக்கு உதவுங்கள். உங்கள் குழந்தை அல்லது நெருங்கிய ஒருவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அல்லது ஏதேனும் சிரமத்தை சந்திக்கும்போது, நீங்கள் அவர்களுக்காக எப்படி உணருகிறீர்களோ, அதே வழியில், வேறொருவர் குழந்தைக்காக அல்லது வேறொருவருக்காக அன்பாக உணருங்கள். மகிழ்ச்சி மற்றும் செல்வத்தின் பலன்களை நீங்கள் அனுபவிப்பது போல, பிறரும் அனுபவிக்கட்டும். நீங்கள் பிறருக்கான உங்கள் உணர்வை உயர்த்தி, அதற்கேற்ப செயல்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். அந்த ஒற்றுமையில் நான் அனைவருடனும் ஒன்றாக இருக்கிறேன்.**

தமது பக்தர்கள், மேல்நிலையை அடைந்த பிற மஹான்கள், மஹாத்மாக்கள் மற்றும் புனிதர்களிடம் செல்வதைக் குறிப்பிட்டு, பாபா இவ்வாறு விளக்கினார்:

**அப்படிப்பட்ட உண்மையான மேல்நிலை ஆத்மாக்களுக்கு நீங்கள் மரியாதை செலுத்துவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை; ஆனால் வேண்டுமென்றே எந்த நோக்கத்துடனும் அவர்களிடம் செல்ல வேண்டாம். நான் எங்கும், எல்லோரிலும், எல்லாவற்றிலும் இருக்கிறேன். அப்படியானால் மதிப்புக்குரிய மகத்தான ஆன்மாக்களிடம் செல்வதில் என்ன தீங்கு இருக்க முடியும்? உங்களை விட உயர்ந்தவர்களை நீங்கள் மதிக்க வேண்டும், நீங்கள் விரும்பினால் மஹாத்மாக்களை சந்திக்கலாம். ஆனால்**

**அவர்களிடம் செல்ல வேண்டியது அவசியம் என்ற எண்ணத்தில் அவர்களிடம் செல்லாதீர்கள்.**

**டாக்டர் தேஷ்முக் எனது மிகவும் கற்றறிந்த அன்பர். நான் மஸ்துகளிடம் சென்று அவர்களை வணங்குவதைப் பார்த்து, அவர் அதையே செய்யத் தொடங்கினார். அவர் ஒரு மஸ்தைத் தோளில் தாங்கி, அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவருக்கு சேவைபுரியும் அளவுக்கு அது சென்றது. இதனால் அவருக்கும் அவரது மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நான் அவரிடம் என்ன கூறினேன் என்று தேஷ்முக்கின் மனைவி யோசிக்க ஆரம்பித்தார். அதைக் கேள்விப்பட்டதும், நான் இருவரையும் அழைத்து தேஷ்முக்கிடம் கூறினேன், ஒருவர் பொழுதுபோக்கிற்காகவோ, நேரத்தை கழிப்பதற்காகவோ, அல்லது நாடகம் பார்க்கச் செல்வது போலவோ, மஹாத்மாக்கள் அல்லது மஸ்துகளிடம் செல்லலாம். ஆன்மீக நோக்கத்துடன் நீங்கள் எந்த மஹான்களிடம், மஹாத்மாக்களிடம் அல்லது மஸ்துகளிடம் சென்றாலும் அது என்னைப் பாதிக்காது; ஆனால் நீங்கள் இறை உணர்வை அடையப்பெற விரும்பினால், எனது மேலங்கியைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ள வேண்டும்! வேறு வழியில்லை.**

ஒருவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார்: “நான் மோதிவாலா பாபாவை அடிக்கடி சந்திக்கச் செல்கிறேன், நீங்கள் என்னை மெஹராபாத்திற்கு அழைக்கும் போது அவருடன் இருக்கும்படி அவர் என்னிடம் கேட்டுக்கொண்டால், நான் என்ன செய்ய வேண்டும்?”

**நீங்கள் அவருடன் இருந்தால், சிக்கல்களை உருவாக்குவீர்கள்.**

**நான் இல்லாத நேரத்தில் எனது மண்டலி எவரிடமும் செல்வதை அனுமதிக்காததற்கு இதுவே காரணம். எப்போதேனும், ஒரு மஸ்த், அவர் ஒப்புக்கொள்ள முடியாத ஒன்றைச் செய்யும்படி மண்டலியிடம் கேட்கலாம். உதாரணமாக, நான், மண்டலி உறுப்பினர்களிடம் உபவாசத்தைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தினேன், அவர்களில் ஒருவர் ஒரு துறவியிடம் சென்றால், தற்போக்கான மனநிலையில் இருந்த துறவி, அவருடன் உணவில் பங்கெடுக்குமாறு கூறுவதானால், மண்டலி என்ன செய்ய வேண்டும்? அவருடன் உணவில் பங்கெடுத்தால், எனது கட்டளையை மீறுவதாகும்; மேலும் அவர் வழங்கியதை ஏற்காததன் மூலம், துறவி அவமதிக்கப்படுகிறார். அத்தகைய சூழ்நிலையில், எனது கட்டளையை மீறாமல், துறவியின் விருப்பத்தை நீங்கள் மதிக்க வேண்டும். எனவே, மோதிவாலா பாபா நள்ளிரவில் உங்களை அழைத்தால் - நீங்கள் எனது பெயரை உச்சரிக்கும்போது - உங்கள் குருநாதரின் விருப்பப்படி, நீங்கள் வேறு எங்கேனும் செல்ல வேண்டும் என்பதை அவரிடம் சொல்லுங்கள். நான் பிரபஞ்சத்தின் இறைவன் என்பதை நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்!**

பாபாவின் தூண்டுதலின் பேரில், நாசிக் நகரில் வாழும் ஒரு வாலி (முஸ்லிம் துறவி) பற்றிய சம்பவத்தை எரச் எடுத்துரைத்தார். பாபா, நாசிக்கில் தங்கியிருந்த மண்டலியிடம் ஒரு நாள் உபவாசம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார். வாலி, மண்டலியில் ஒருவரை பிரசாதத்துடன் அணுகி, அதை உண்ணுமாறு வற்புறுத்திய வேளையில், அதை அவர் உண்டார். இதனால் வருத்தமடைந்த பாபா, '**அவர்களுக்கு வாலி பிரசாதம் வழங்கும் போதெல்லாம், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும், ஆனால் உண்ணக்கூடாது**' என்று அவர் மண்டலிக்கு அறிவுறுத்தினார்.

பாபா, "**எனவே, நீங்கள் எனது கட்டளைக்கு உட்பட்டவராக இருந்தால், ஆன்மீகத்தில் மேல்நிலையை அடைந்த புனிதர்களாக இருந்தாலும், அவர்களை அணுகுவதில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்**" என்று கூறி முடித்தார்.

பாபா காலை 9:30 மணிக்கு சிறிது ஓய்வு நேரத்தை அனுமதித்து, அன்பர்களின் கூடாரங்களுக்குச் சென்று ஏற்பாடுகள் அனைத்தையும் ஆய்வு செய்தார்; உணவைக் குறித்து விசாரித்து, கேஷவ் நிகமிடம் '**அவர்களின் உணவு தொடர்பாக ஏதேனும் குறை இருந்தால், அதை, பெண்டுவின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு**' அறிவுறுத்தினார். "**ஆனால், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப உணவைத் தயாரிக்கும்படி நீங்கள் அவரிடம் கோர வேண்டும் என்று அர்த்தம் இல்லை,**" என்று பாபா கிண்டல் செய்தார், "**அது அவரை நிலைகுலையச் செய்யும்!**"

வாஸ் தேவ் கெய்னின் மாமனாரிடம், "**நீங்கள் இங்கு வந்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்**" என்று பாபா கூறினார்.

குழு 10:10 மணிக்கு மண்டபத்தில் மீண்டும் கூடியது; கனியின் சகோதரர் அப்துர் ரஹ்மான் இரண்டு கஸல்களைப் பாடினார், பாபா இதைப் பெரிதும் விரும்பினார். மாத்ர தத்தா ஸாஸ்திரி மீண்டும் உணர்ச்சிவசப்பட்டு எழுந்து நின்று கைதட்டி பாடத் தொடங்கினார். முதலில் எவரும் அவருடன் கைதட்டவில்லை, ஆனால் பாபா அவருடன் இணைந்ததும், அன்பர்கள் அனைவரும் அதைப் பின்பற்றினர். மண்டபம் மிகுந்த ஆரவாரத்துடன் எதிரொலித்தது, தெய்வீக மதுபானம் இசைத்த தாளத்தில் காலம் களிப்புற்றது. ஸாஸ்திரி நடனமாடத் தொடங்கினார், அவருடன் குஞ்ச் பிஹாரியும் இணைந்தார். சிறிது நேரத்தில், பாபா இசை நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு, "**என்னை எப்படி நேசிக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரிந்தால், உங்கள் வாழ்வின் நிலையே மாறிவிடும். உங்கள் வாழ்க்கை தெய்வீக சுதந்திரம் எனும் தன்னுரிமையில் முடிந்துவிடும்; ஆனால் அது அவ்வளவு எளிதானது அல்ல!**"

பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சில சகவாச அன்பர்கள் நகைச்சுவை துணுக்குகளை எடுத்துரைத்தனர்; பதினொரு மணிக்கு அனைவரும்

மதிய உணவிற்குச் சென்றனர். பாபாவும் அவருடைய உணவை முடித்து, பந்தலை நோக்கி நடந்து, சமையலறைக்குள் நுழையும் வேளையில், பாபா ஒரு கல் படி தளர்வாக இருந்ததைக் கண்டு, சேவகர்களை அழைத்து, "**நீங்கள் இதை கவனிக்கவில்லையா? எவரேனும் கீழே விழுந்து கால் உடைந்தால், அது எனது சகவாசிகளுக்கு இடையூறை விளைவிக்கும். யாரோ ஒருவர் வழுக்கி கைகால்களை இழப்பதை விட, இதனை சீராக்கத் தேவையான சிறிதளவு பணத்தை இழப்பது நல்லது**!" என்றதும் உடனடியாக, பழுதடைந்த கல் சரி செய்யப்பட்டது.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா, கேஷவ் மற்றும் ஹமிர்பூர் சேவகர்களை மண்டபத்தில் சந்தித்தார். அவர், முன்பு தெலுங்கு குழுவிற்கு விளக்கியது போல, பாபாவின் பெயரில் அவரது பணியை எவ்வாறு செய்வது என்பதை விளக்கினார். பாபாவின் கை அடையாளங்கள் மற்றும் சைகைகள் பற்றிய எரச்சின் ஆங்கில மொழியிலான விளக்கங்களை கேஷவ் ஹிந்தியில் மொழிபெயர்த்தார்.

தேநீருக்குப் பிறகு, பிற்பகல் 3:00 மணிக்கு மண்டபத்தில் அனைவரும் ஒன்று திரண்டனர், அங்கு பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, தக்வானின் விஷ்ணு பஜனை பாடினார். புக்காரை நோக்கி பாபா, "**உங்களுக்கு** (பாடும்) **குரல் வளம் உள்ளதா?**" என வினவினார்.

"என்னால் பேச முடியும், ஆகையால் குரல் கண்டிப்பாக இருக்க வேண்டும்!" என்றதும்… எல்லோரும் சிரித்தனர், பாபா கேட்டார், "**உங்களுக்கு என்ன வகையான குரல் இருக்கிறது?**"

புக்கார், "அதைப் பிறரின் தீர்வுக்கு விட்டுவிடுகிறேன்" என்றார்.

பாபா அவரிடம் ஒரு பாடலைப் பாடுமாறு கேட்டுக்கொண்டதும், அவர் மென்மையான, இனிய தொனியில் அதை முயற்சித்தார். பாபா உடனே, "**இவ்வளவு பெரிய உடலுக்கு என்ன ஒரு சிறிய குரல்! உங்கள் குரலை உங்களால் மட்டுமே கேட்க முடியும்!**" என்றார்.

சிரித்துக்கொண்டே பாபா மேலும் கூறினார், "**நான் உங்களை கேலி செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன், புக்கார்!**"

தக்வான் கிராமத்தின் விஷ்ணு மேலுமொரு பாடலைப் பாடத் தொடங்கினார்; ஆனால் அவர் அதை முடிப்பதற்குள், டெல்லியைச் சேர்ந்த மோகன் லால் ஷர்மாவும் இணைந்து உணர்ச்சிவசப்பட்ட தொனியில் பாடத் தொடங்கினார். அவர் பாடி முடித்ததும், பாபா, கிஷன் ஸிங்கிடம் பாடுமாறு கேட்டுக்கொண்டார்; அவர் உரத்த குரலில் பாடினார்: "சிவனின் படைப்பாற்றல் சின்னமாகக் கருதும் லிங்கவுருவிலிருந்து மேர்வான் வெளிவந்தார்! ஜெய் மெஹர் பாபா, ஜெய் மேர்வான்!" அவரது உரத்த குரல் ஒலி 200 கெஜங்களுக்கு மேல் சென்றது, ஒட்டுமொத்த மண்டபமும் சிரிப்பொலியில் அதிர்ந்தது. பாபாவும் சிரித்துக் கொண்டிருந்தார்.

பாபா, வாஸ் தேவ் கெய்னைப் பாட அழைத்தார், ஆனால் அவருக்குத் தொண்டை வலி என்ற சாக்குப்போக்கில் அவர் தப்பித்தார். பாபா உடனே நினைவு கூர்ந்தார், "**மன்ஸில்-எ-மீமில், ஒரு பார்சி சிறுவன் அசாதாரணமான**

**திறமை படைத்த பாடகனாக இருந்தான். ஒரே பிரச்சினை என்னவென்றால், பாடச் சொன்னால் பதட்டமாகி, இருமலால் தடுமாறத் தொடங்கிவிடுவான். ஆனால் ஒருமுறை ஆரம்பித்தால், அவன் தங்குதடையின்றி விரைந்து பாயும் வெள்ளம் போலப் பாடுவது வழக்கம்.**"

பாபா, ஹீராலாலிடம், "**உங்களது உடல் அரிப்பு எப்படி உள்ளது? பாதிரியின் மருந்தை உட்கொண்டீர்களா?**" என வினவினார்.

அதற்கு ஹீராலால், "நான் அதை எடுத்துக் கொண்டேன், ஆனால், நான் மிகவும் மோசமாக, அசௌகரியமாக உணர்கிறேன்" என்றார்.

"**எந்த விதமான அசௌகரியத்தை நீங்கள் உணர்கிறீர்கள்?**"

அதற்கு ஹீராலால், "எனக்குத் உறுதியாகத் தெரியவில்லை, ஆனால் என்னால் ஹமிர்பூருக்குத் திரும்பிச் செல்ல முடியாது" என்று பதிலளித்தார்.

பாபா கேலி செய்தார், "**நீங்கள் இங்கேயே இருக்கப் போகிறீர்கள் என்ற எண்ணமே என்னை அமைதியிழக்கச் செய்கிறது! உங்கள் அரிப்பும், இந்தப் புதிய உபாதையும் மறைவதை நான் பார்க்க வேண்டும். குணமடைந்ததும், நீங்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டும்.**"

"குணமானாலும், இல்லையென்றாலும் எனக்கு பாபா மட்டுமே வேண்டும்; நான் உங்களை தினமும் பார்க்க முடியும் என்ற எண்ணத்தில் இங்கேயே இருப்பேன்" என்றார் ஹீராலால்.

"**அப்படியானால், உங்கள் அரிப்பும், தோலழற்சியும் உங்களை விட்டு விலகாது, ஆனால் அது 'உள்ளே' பரவும்! உங்களுக்கு உடல் மற்றும் மன அரிப்பும், தோலழற்சியும் இருக்கும்!**" என்று பாபா கேலி செய்தார்.

"அது வெளியிலோ அல்லது உள்ளிலோ இருக்கட்டும், எதுவாயினும் நான் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல மாட்டேன்!"

பாபா, பாதிரியை நோக்கி சைகையால் தெரிவித்தார், "**கடவுளின் நிமித்தம், அவர் விரைவில் குணமடைய ஏதாவது மருந்து கொடுங்கள்!**"

ஹீராலால், "எனக்கு வீடு செல்ல மருந்து தேவையில்லை" என்றார்.

"**கவலைப்படாதீர்கள், உங்கள் நோய்க்கு உரிய மருந்து என்னிடம் உள்ளது**" என்று உறுதியளித்த பாபா உட்பட அனைவரும் சிரித்தனர்.

பிற்பகல் 3:50 மணிக்கு, பாபா, கிராமவாசிகளின் அழைப்பிற்கு இணங்கி, ஹிந்தி குழுவினரை தன்னுடன் அரன்காவ்ம் கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். நிரஞ்சன் ஸிங் மற்றும் பிற உடல்நலம் குன்றிய அல்லது வயதான அன்பர்கள் ஆதியின் காரில் அழைத்துச் செல்லப்பட்டனர், பாபாவும் குழுவும் வெகுதூரம் நடந்து சென்றனர். அங்கு பாபா முதன்முதலில் 400 ஆண்டுகளுக்கு முன்னர் உயிருடன் சமாதி அடைந்த இந்து சத்குரு 'புவாஜி புவா'வின் (BUAJI BUA) பழைய ஆலயத்திற்குள் நுழைந்தார். அவரது ஆலயம் 'சிறிய பண்டர்பூர்' (DAKHTA -LITTLE - PANDARPUR) என்று அழைக்கப்பட்டது. பெண்மணிகள் மலர் மாலைகளுடனும், ஆரத்தி நிகழ்த்தி, பாபாவிற்கு அர்ச்சனை செய்து வரவேற்றனர். அனைத்து திசைகளிலிருந்தும் பெண்மணிகள் ஓடி வந்து பாபாவின் பாதங்களில்

வணங்கினர்; பாதங்களைத் தொடுவது தடை செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் அதைக் கேட்காமல், பாபாவின் பாதங்களில் விழுந்தனர். பாபா, புவாஜி புவாவின் சமாதிக்கு அருகில் அமர்ந்த வேளையில், பெண்மணிகள் அவருக்கு மாலை அணிவிக்க, சகவாசக் குழுவினருக்கு உரையாற்றிய பாபா, "**அரன்காவ்ம் மக்கள் வறியவர்களாக இருந்தாலும், அவர்கள் என் மீது கொண்ட அன்பு அளப்பரியது. என் அன்பர்களின் சில குடும்பங்களை நான் இன்று சந்திக்கிறேன்.**"

ஒரு பெரிய கூட்டம் ஒன்று திரள, கிராமத்தில் பல வீடுகளுக்கு, ஒரு பெரிய ஊர்வலமாக, பாபா அழைத்துச் செல்லப்பட்டார். கிராமவாசிகள் உலோகத் தட்டுகளாலான இசைக்கருவிகளை இசைத்து (LEZIM, FINGER-BELLS AND SYMBALS) நடனமாடிய வேளையில், எங்கும் தூசி கிளம்பியது. ஒவ்வோர் இல்லத்திலும் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, அவருக்கு மாலை அணிவிக்கப்பட்டது; சிறிய குடிசைகளிலும் பாபா சிரித்துக்கொண்டே அமர்ந்திருந்தார். அவர் குழந்தைகளை அரவணைத்து அவர்களின் பெற்றோர் மற்றும் பெரியவர்கள் ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் மாணவர்களாக இருந்த காலத்தை நினைவுபடுத்தினார்.

அரன்காவ்ம் அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்த பின்பு, பாபா, குடும்ப குவாட்டர்ஸில் வாழ்ந்த வாலு, சிதுவின் மனைவி ராதா, பாகு (BHAGU), ஜங்க்ளே, முக்தா மற்றும் அவர்களது குழந்தைகளையும் சந்தித்தார். மெஹராபாத்தில் சகவாச கூட்டம் நடந்துகொண்டிருந்ததால், முஹமது மற்றும் அலி ஷா மஸ்துகள் அங்குத் தங்க வைக்கப்பட்டனர். பாபா இரண்டு மஸ்துகளையும் சந்தித்த வேளையில், முஹமது மஸ்த், பாபாவைக் கையால் பற்றிக்கொண்டு, "தாதா, என்னை சத்தாராவிற்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றார்.

முஹமது உணவு உண்ணாமல் இருப்பதை பெண்டு பாபாவிடம் தெரிவித்தார்.

முஹமது உடனே, "நான் உணவு உண்கிறேன் தாதா; பெண்டு பொய் சொல்கிறார்!" என்ற மஸ்தின் பேச்சைக் கேட்டு பாபா சிரித்தார்.

மாலை சுமார் 5:30 மணியளவில் பாபா சகவாசக் குழுவுடன் மெஹராபாத் திரும்பிச் சென்றார். நிரஞ்சன் ஸிங்கின் உடல்நிலை குறித்து விசாரித்த பாபா, பாதிரியின் சிகிச்சையை தொடருமாறு அறிவுறுத்தினார். பாபா, பின்னர் அவரது அறைக்குச் சென்று, மும்பையிலிருந்து வந்த நரிமனுடன் பல விஷயங்களைக் குறித்து விவாதித்தார். மும்பை அன்பர்கள் அனைவரும் ஒரு வார சகவாச நிகழ்ச்சிகளால் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக நரிமன், பாபாவிடம் தெரிவித்தார். அவர்கள் பாபாவின் அன்பை உள்வாங்கிக் கொண்டதாகவும், அந்த அன்பின் மதுபோதையின் தாக்கம் இன்னும் தணியவில்லை என்றும் கூறிக்கொண்டிருந்தார்.

மாலை 6:00 மணியளவில், எரச் காரை அறையின் அருகே கொண்டு வரவே, பாபா, 'ஜெய்' முழக்கங்களுக்கு மத்தியில் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்!

அடுத்த நாள், 1955 நவம்பர் 22, செவ்வாய்க்கிழமை காலை, 7:40 மணிக்கு மெஹராபாத் வந்த பாபா, பெண்டு, பாதிரி, விஷ்ணு ஆகியோருடன் ஒரு மணி நேரம் தனது அறையில் நடந்த உரையாடலுக்குப் பிறகு, மண்டபத்திற்கு வந்தார். வழக்கம் போல, முந்தைய நாள் இரவு தூங்காதவர்களை எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டார். சிலர் எழுந்து நின்று தங்கள் தூக்கமின்மைக்கு பல்வேறு காரணங்களை எடுத்துரைத்தனர். பாபா அவர்களுக்கு அறிவுரை வழங்கினார், **"உங்களால் தூங்க முடியவில்லை என்றால், கவலைப்பட வேண்டாம். இரண்டு அல்லது மூன்று மணிநேரம் தூங்கினால் கூட போதுமானது. தூங்க முயற்சி செய்யுங்கள், தேவையற்ற எண்ணங்களால் அதை விரட்டாதீர்கள். ஆனால் உங்கள் முயற்சிகள் இருந்தும் உங்களால் தூங்க முடியவில்லை என்றால், கவலைப்பட வேண்டாம்."**

வாஸ் தேவ் கெய்ன், உடல் நலம் இல்லாமல் இருந்த நிரஞ்சன் ஸிங்கை கவனித்துக் கொண்டதால், அவர் தூங்கவில்லை என்று கூறியதும் பாபா அவரைத் தழுவினார்.

ராய்ஸாஹேப் ராமஷங்கர், "நேற்றிரவு எனது தலை வெட்டப்பட்டதாக நான் கனவு கண்டேன்; இருந்தும், நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்!" என்றார்.

பாபா உடனே, **"விழித்திருக்கும் நிலையில் தலையில்லாமல், உயிருடன் இருந்தால், அது மிகச் சிறந்த விஷயம்!"** என்று கூறி புன்னகைத்தார்.

தக்வான் கிராமத்தின் விஷ்ணு கூறினார், "நேற்று இரவு நானும் கனவு கண்டேன். நான் பஜனை பாடிக்கொண்டிருந்த போது, பாபாவும் அவரைப் பின்தொடர்ந்து வந்தவர்களும் கீழே விழுவதைக் கண்டு நான் பயந்தேன்; ஆனால் உடனடியாக, பாபா தனது நாற்காலியில் மண்டபத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டேன்."

பாபா, **"என்னுடன் பிற அன்பர்கள் விழுந்ததை நீங்கள் பார்த்தது நல்லது. ஆனால் நான் எழும்பும்போது அனைவருடனும் எழுவேன். நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது அனைவரும் எழுவார்கள். இது உண்மை"** என்று குறிப்பிட்டார்.

மேலும் ஓர் அன்பர், "நேற்று இரவு, அரன்காவ்ம் கிராமத்துக் காட்சிகள் எனது கண் முன்னே தோன்றியதால் என்னால் தூங்க முடியவில்லை. அதில் நீங்கள், அனைவரின் மீதும் அன்பு மழையைப் பொழிவதைக் கண்டேன்" என்றார்.

தொடர்ந்து அன்பர் ஒருவர் அவருக்குத் தூக்கம் வரவில்லை என்றும், முழு நேரமும் பாபாவின் சித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் கூறினார். அதற்கு பாபா பதிலளித்தார், **"உங்களுக்குத் தூக்கம் வந்தால் தூங்குங்கள்; இல்லையேல், எனது புகைப்படத்தைத் தொடர்ந்து பாருங்கள்.**

**என்னால் தூங்க முடியாத போது, உலகில் வாழும் எனது குழந்தைகளின் சித்திரங்களையும், எனது சொந்த சித்திரத்தையும் எல்லா இடங்களிலும் பார்க்கிறேன்.”**

அவர் மேலும் கூறினார், “**அமெரிக்காவில், நீலு மூன்று மாதங்கள் தூங்கவில்லை, ஏனெனில், இரவு முழுவதும் அவர் எனது காவலனாகப் பணிபுரிந்தார். மேலும், அவர் பகலில் தூங்க அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அவரால் தூங்க முடியவில்லை. இருப்பினும், அவர் நல்ல ஆரோக்கியமாகக் காணப்பட்டார். நீங்கள் அனைவரும் காலங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள், இப்போது நான் உங்களை எழுப்ப வந்துள்ளேன்!”**

அன்றைய தினம் ஏழைகளுக்கான நிகழ்ச்சி நடைபெறவிருந்தது, மேலும் ஆதர்ஷ் கரே கூறினார், “ராமரின் காலத்தில் ஒரு படகோட்டி ராமரின் பாதங்களைக் கழுவி பூஜை செய்தார். ஒருவேளை இந்த அவதார காலத்தில், பாபா அந்தப் படகோட்டியைத் தேடிக்கொண்டிருக்கிறார். அவர் ஏழை ஆதலால் அவருக்கு சேவைபுரியும் வாய்ப்பை நாடுகிறார்!”

பாபா பதிலளித்தார்:

**உங்கள் யூகம் சரியானது; ஆனால் நான், ஏன் இதைச் செய்கிறேன் என்ற எனது விளக்கமும் உண்மைதான். நான் மஸ்துகளுக்கு சேவை செய்கிறேன், ஏனெனில் அவர்கள் என் உடலின் பல்வேறு உறுப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். சிலர் இடது கை, சிலர் வலது; சிலர் எனது மூக்கு, சிலர் எனது காது; மேலும் ஒவ்வோர் உறுப்பும் எனது பணிக்கு பயனுள்ளதாகவும், முக்கியமானதாகவும் உள்ளது. ஆரம்பத்திலிருந்தே, நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர்களில் தாழ்ந்தவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்! நான் இறை அன்பின் கடல், நான் உங்களுக்கு அன்பை வழங்கி, உங்களிடமிருந்து அன்பை ஏற்றுக்கொள்கிறேன். நான் உங்களுடனும் இருக்கிறேன். அன்பன், அன்பிற்குரியவன் இருவரும் ஒன்றே. இறுதியில்** (இறை உணர்வை அடைந்த பின்னர்) **என்னை நேசிப்பதன் மூலம், நீங்கள் உங்களை மட்டுமே நேசித்தீர்கள் என்பதைக் கண்டுகொள்வீர்கள்.**

**அவதார புருஷருக்கும், சத்குருக்களுக்கும் இடையேயான வேறுபாட்டை ‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்திலும், குஜராத்தி குழுவிற்கும் விளக்கியுள்ளேன். ‘அவதார புருஷர் பூமியில் இறங்கிவரும் போது இறை-மனிதனாக மாறுகிறார்’ என்று அப்போது சொன்னேன். ‘மனிதனாக இருக்கும் சத்குரு கடவுளாக** (மனித-கடவுளாக) **மாறுகிறார்.’**

**நான், நீங்கள் அனைவருமாகவும் அனைத்துமாகவும் இருப்பதால், அவதார புருஷர் பிறந்துவிட்டார் என்று உலகம் கூறுகிறது. உண்மையில், சத்குருக்கள் என்னை பூமியில் கொண்டுவருகிறார்கள். பௌதீகத் தளத்தில், சம்பந்தப்பட்ட உயிரினங்களின் உணர்வு நிலைக்கு ஏற்ப, நான் வித்தியாசமாகப் பார்க்கப்படுகிறேன். நான் எறும்பு வடிவில் எறும்புகளோடும், மனிதர்கள் உருவில் மனிதர்களோடும் ஒன்றாக**

இருக்கிறேன். நான் இந்த பூமியில் வரும் வேளையில், நான் எல்லாமாக ஆகிறேன்.

இன்று ஏழைகளின் கால்களைக் கழுவும் போது, நான் ஏழைகளில் மிகவும் ஏழ்மையானவனாக இருப்பேன்; பாபாவின் நாமத்தை உச்சரித்தால் அனைத்தும் பூஜ்யமாகிவிடும். எனவே நீங்கள் உங்கள் மதக் கோட்பாடுகளின் படி இறை நாமத்தை உச்சரிக்க வேண்டும். நீங்கள் ராம் அல்லது கிருஷ்ணா என்று உச்சரித்தாலும் எந்த பாதகமும் இராது, ஏனெனில் நான் அவர்களே! ஏழைகளுடனான எனது பணி முடிந்ததும், நான் என்னவாக இருந்தேனோ அவ்வாறே இருப்பேன். நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன். உண்மைப்பொருள் எப்பொழுதும் உண்மையாகவே இருக்கும். உண்மைப்பொருளை மறைக்கவோ மாற்றவோ முடியாது. உண்மைப்பொருளைக் குறித்து பேசும்போது சமரசம் செய்து கொள்ள மாட்டோம். உண்மைப்பொருளை நீங்கள் உண்மைப்பொருள் மூலமாகவே அணுக வேண்டும்: இதில் கண்ணாமூச்சி விளையாட்டு எதுவும் இல்லை.

ஒரு நாள், நான் கூறுவது முற்றிலும் உண்மை என்பதை நீங்கள் அறிவீர்கள்; அந்த அனுபவத்திலிருந்து, இதுவரை எதுவும் நடந்ததில்லை, எதுவும் நடக்கவில்லை, எதுவும் நடக்காது என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்! நித்தியத்தில், நேரம் என்று ஒன்று இல்லை. 600 ஆண்டுகளுக்கு முன்னர் என்ன இருந்தது? அதற்கு முன்னர், அதற்கும் முன்னர் என்ன இருந்தது? கடவுள் இருந்தார், நீங்கள் இருந்தீர்கள், கடவுள் இருக்கிறார், நீங்கள் இருக்கிறீர்கள்!

இதை உங்கள் மனதாலும் அதன் எல்லையற்ற எண்ணங்களாலும் நீங்கள் புரிந்து கொள்ள முடியாது. நீங்கள் எவ்வளவு தூரம் கற்பனை செய்ய முடியும்? கற்பனை எல்லையற்றது, முடிவு இல்லாத இடத்தில் நித்தியம் உள்ளது. நேரம் என்று எதுவும் இல்லை. கடவுள் எப்பொழுதும் இருந்திருக்கிறார். அவர் எப்பொழுதும் இருக்கிறார். இது காலாதி காலமாகவே நடந்து கொண்டிருக்கிறது, அதற்கு கடந்த காலம், நிகழ்காலம் அல்லது எதிர்காலம் என்று எதுவும் இல்லை. கடந்த காலத்தில் நடந்தது எதுவும் நடக்காதது போல நிகழ்காலத்தில் இருக்கிறது! நிகழ்காலத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை, இது ஆரம்பம் இல்லாத ஆரம்பகாலத்திலிருந்தே தொடர்கிறது. இதைப் புரிந்துகொள்வது கடினம், ஏனெனில் இது அறிவுக்கு அப்பாற்பட்டது.

ஏழைகளுக்கான நிகழ்ச்சி காலை 8:45 மணிக்குத் தொடங்கி, ஒரு மணி நேரம் நீடித்தது. 250 ஏழை ஆண்களும் பெண்களும் அழைத்து வரப்பட்டனர்; வழக்கம் போல, பாபா அவர்களின் கால்களைக் கழுவி, ஒவ்வொருவருக்கும் நான்கு ரூபாய் வழங்கினார். நிகழ்ச்சியின் போது, சகவாசக் குழுவில் உள்ள இந்துக்கள் 'பரபிரம்ம பரமாத்மா!' என்றும் முஸ்லிம்கள் 'அல்லாஹு அக்பர்!'

என்றும் மொழிந்தனர். இந்த முறையும் பாபா, ஏழைகளுக்கான நிகழ்ச்சிக்காகப் பயன்படுத்திய மேசை மற்றும் பிற பொருட்களை அவரே கழுவி சுத்தம் செய்தார். அவர் அதை அவ்வாறு செய்த போது, அருகில் நின்று கொண்டிருந்த ஒரு சிறுவனையும் மேசைமீது நிற்க வைத்து, அவனுடைய கால்களையும் பாபா கழுவி சுத்தம் செய்தார். பின்னர் அவர் மேசையை தண்ணீரில் நன்கு கழுவி, ஏழைகளின் கால்களைத் துடைத்த துண்டுகளை நெருப்பிலிட்டு எரிக்குமாறு பெண்டுவிற்கு அறிவுறுத்தினார். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களில் பலர் கண் பார்வையற்றவர்கள், ஒருவர் தொழுநோயாளி.

நிகழ்ச்சியை நிறைவு செய்து பாபா தமது அறைக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஸ்ரீவஸ்தவாவைத் தழுவி, **"நான் குளிர்ச்சியாக உணரும்போது, நான் ஒருவரைத் தழுவுகிறேன்"** என்று கேலி செய்தார்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா மண்டபத்திற்குள் நுழைந்தார். அப்துர் ரஹ்மான் சில கஸல்களைப் பாடினார், அதன் பின்னர் அனைவரும் மதிய உணவிற்குச் சென்றனர்.

மதிய வேளையில், தனிநபர் மற்றும் சகவாசக் குழுவின் நேர்காணல் நடந்தது. பாபா, வாஸ் தேவ் கெய்னிடம் வலியுறுத்தி கூறினார்: **"இந்த அன்பும், உண்மையும், நேர்மையும் உங்களிடமிருந்து ஒரு படிகத்தைப் போலப் பிரதிபலிக்கும் விதத்தில் உங்கள் வாழ்க்கையை வாழுங்கள், இதனால் நீங்கள் ஒரு வார்த்தையும் பேசாமலே, மக்கள் என்னைப் பற்றி அறிந்து கொள்வார்கள்."**

ரமா கல்சூரியின் சகோதரர் தீரஜ், பாபாவால் அழைக்கப்பட்டார். பாபா அவரிடம் ரமா மற்றும் குழந்தைகளைப் பற்றி கேட்டார், **"பாவ் எப்பொழுதும் என்னுடன் இருக்கிறார், எனவே ரமா, ஷீலா, மெஹர்நாத் மூவரையும் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள், அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இப்போது இந்தக் குழுவுடன் உங்கள் இல்லத்திற்குச் செல்லலாம்"** என்றார். தீரஜ் ஒரு மாத காலம் மெஹராபாத்தில் சேவகர்களில் ஒருவராக பணிபுரிய அழைக்கப்பட்டிருந்தார், ஆனால் பாபாவின் அறிவுறுத்தல்படி அவர் வீடு திரும்பினார். ஒரு வாரத்திற்குப் பிறகு, திடீரென குடும்பத்தில் ஏற்பட்ட அவசர சூழ்நிலை காரணமாக, அவர் ஏன் முன்கூட்டியே திருப்பி அனுப்பப்பட்டார் என்பதை அவர் புரிந்துகொண்டார்.

நேர்காணல் முடிந்ததும், மாலை 5:00 மணிக்கு பாபா மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மறுநாள் 1955 நவம்பர் 23 புதன்கிழமை, பாபா, காலை 7:30 மணிக்கு மெஹராபாத் வந்தவர், தமது அறையில் அரை மணி நேரம் மண்டலியை சந்தித்து, பின்பு மண்டபத்திற்குள் நுழைந்தார். வழக்கம் போல, முந்தைய நாள் இரவு தூங்க முடியாமல் போனவர்களை எழுந்து நிற்கக் கோரி, காரணத்தை வினவினார். பிரீத்தம் ஸிங் (PRITAM SINGH) உடனே, "பாபா, நீங்கள் என்னை தூங்க அனுமதிக்கவில்லை! பாபா, இரவு முழுவதும் விழித்திருக்கும் போது, நான்

எப்படித் தூங்க முடியும்?” இதைக் கேட்ட மகிழ்ச்சியில் அவர் பிரீத்தம் ஸிங்கைத் தழுவினார்.

பால் கிஷன் பக்ஷியின் (BAL KISAN BAKHSHI) மகன் லால், பாபாவிடம் “நீங்கள் டெஹ்ரா டூனில் இருந்தபோது நாங்கள் அனுபவித்த இன்பகரமான காலங்களை நினைவுகூர்ந்தேன், அதனால் என்னால் தூங்க முடியவில்லை” என்று கூறிக்கொண்டே கண்கலங்கி அழுதார்; பாபா அவரையும் தழுவினார்.

நவம்பர் 25ஆம் தேதிக்கு பதிலாக 24ஆம் தேதி மெஹராபாத்திலிருந்து புறப்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதால், தூக்கம் கலைந்ததாக ஒருவர் கூறினார்: “மிகவும் சிரமப்பட்டு, 25ஆம் தேதி வரை பாபாவுடன் தங்குவதற்காக (அவரது வேலையிலிருந்து) விடுப்பு எடுத்து வந்துள்ளேன். ஒரு நாள் முன்னதாகவே புறப்பட வேண்டும் என்ற எண்ணம் எனது தூக்கத்தைப் பறித்துவிட்டது.”

பாபா அவரிடம் கூறினார், “**நீங்கள் 25ஆம் தேதி வரை இங்குத் தங்கலாம், ஆனால் நான் அன்றைய தினம் இங்கு வரமாட்டேன், இந்தக் குழு புறப்படுவதற்கும், அடுத்த குழு வருவதற்கும் இடையில் நான் இதர விஷயங்களை கவனிக்க வேண்டும். இப்போது நீங்கள் ஏற்கனவே தூக்கமின்றி ஓர் இரவைக் கழித்துவிட்டதால், உங்கள் எண்ணத்தில் அது 25ஆம் தேதியை என்னுடன் கழித்ததற்கு சமம் என்று எடுத்துக்கொள்ளலாம்.**”

நானக் சந்த், “உண்மையில், நான் நன்றாக தூங்கினேன், ஆனால் பாபாவின் அரவணைப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எழுந்து நின்றேன்!” என்றதும் அனைவரும் சிரித்தனர், பாபா அவரைத் தழுவினார்.

ஆதர்ஷ் கரே, பாபாவை நினைத்துக் கொண்டிருந்ததால் தூங்க முடியவில்லை என்று தெரிவித்தார். அவரது தந்தை கயா பிரசாத்திடமும் பாபா, “**நீங்கள் தூங்கினீர்களா?**” என்று கேட்டதற்கு அவர், “நான் நன்றாக தூங்கினேன். ஆதர்ஷின் அமைதியின்மையால் என்னால் தூங்க முடிந்தது!” என்றார்.

முந்தைய நாள் தனிப்பட்ட நேர்காணல்களின் போது, ஆதர்ஷ் கரே, பாபாவுடன் தங்குவதற்கான தனது தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்திய வேளையில், அவரது மனைவி மற்றும் குழந்தைகளை யார் கவனிப்பார் என்று பாபா விசாரித்தார். ஆதர்ஷின் தந்தையார் தனது மகனின் ஆர்வத்தில் மிக்க மகிழ்ச்சியடைந்து, அவரது குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். பாபா மறுநாள் அதை முடிவு செய்வதாக பதிலளித்தார், எனவே பாபா தன்னை ஏற்றுக்கொள்வாரா இல்லையா என்று இரவு முழுவதும் ஆதர்ஷ் யோசித்துக் கொண்டிருந்தார்.

பாபா, ஆதர்ஷுடனான தனது நேர்காணலின் விவரங்களை வெளிப்படுத்தி, சகவாச குழுவிற்கு அறிவித்தார், “**கயா பிரசாத் போன்ற ஆயிரத்தில் ஒருவர், என்மீது கொண்ட அன்பால் தனது சொந்த மகனை எனக்காக அர்ப்பணிக்கிறார், நான் அவரை எண்ணி மிக்க**

**மகிழ்ச்சியடைகிறேன்.**" பிப்ரவரி 15 முதல் ஆதர்ஷ், ஒரு வருடம் பாபாவுடன் தங்க அனுமதிக்கப்பட்டார், ஆனால் இந்த வாக்குறுதியளிக்கப்பட்ட 'ஒரு வருடம்' ஒரு மாதமாக எப்படி குறைக்கப்பட்டது என்பதை வாசகர்கள் பின்பு காண்பார்கள்.

அவர், ஒரு வருடம் இல்லாத நேரத்தில், அவருடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று பாபா சகவாசக் குழுவிற்கு அறிவுறுத்தினார். நள்ளிரவில் இறை நாமத்தை மீண்டும் மீண்டும் மொழிவது குறித்து பாபா கூறியதாவது:

**நீங்கள் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும். பிப்ரவரி 15ஆம் தேதி முதல் சரியாக ஒரு வருடத்திற்கு, எனது பெயரை 14 மற்றும் 28 முறை, ஒன்று விட்டு ஒன்றாக ஒவ்வொரு நள்ளிரவிலும் மொழிவதன் நோக்கத்தை, என்னை ஆழமாக நேசிக்கும் தேவ தேவதைகளாலும் புரிந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு நாளும் 100,000 முறை எனது பெயரை உச்சரிப்பது எளிது, ஆனால் எனது அறிவுறுத்தலின் படி 14 மற்றும் 28 முறை மட்டுமே உச்சரிப்பது மிகவும் கடினம் - ஏனெனில், எஞ்சியுள்ள நேரத்தில், எனது பெயரை** (சத்தமாக) **உச்சரிக்காமல், கவனமாக இருக்க வேண்டியது அவசியம். இந்த உத்தரவு உங்களுக்கு வழங்கப்பட்டதன் காரணம், நாளின் 24 மணி நேரங்களிலும் என்னை நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை மட்டுமே, குறிப்பிட்ட எண்ணிக்கையில் சத்தமாக மொழிவது மட்டும் கேட்கும்.**

அன்பர் ஒருவர் குறுக்கிட்டு, "அது உங்கள் அருளால் மட்டுமே முடியும்" என்றார்.

பாபா கூறினார்:

**என் அருள் குறித்து உங்களுக்கு எதுவும் தெரியாது! நான் எஃகு போல கடினமானவன், நான் என் அருளைப் பொழிவது, அதைத் தேடுபவரின் அன்பின் ஆழத்தைப் பொறுத்தது. ஒருவர் என்னிடமிருந்து அருளை அடையப்பெற வேண்டும்! இந்தக் கூரையின் கீழ் அமர்ந்து சூரியனை நோக்கி, இங்கே அதன் கதிர்களை வீசி வெப்பத்தை வழங்கச் சொன்னால், அது எப்படி சாத்தியமாகும்? முதல் முதலில் கூரையை அகற்றுவது முக்கியம்!**

**ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உள்ளளவில் உங்கள் உள்ளத்தில், 24 மணி நேரத்தில் எனது பெயரை எத்தனை முறை வேண்டுமானாலும் உச்சரிக்கலாம்; ஆனால் சத்தமாக, வெளியே கேட்கும் விதத்தில் 'பாபா, பாபா' என்று குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட எண்ணிக்கையில் அறிவுறுத்தப்பட்டபடி மட்டுமே மொழிய வேண்டும். மேலும் ஒரு விஷயம் என்னவென்றால், 'அச்சு வார்க்கப்பட்டது'** ('தி டை இஸ் காஸ்ட் - THE DIE IS CAST) **எனும் வாழ்க்கைச் சுற்றறிக்கை எண். 25ஐ என்னை நினைவில்கொண்டு வாசிக்க வேண்டும். நான் ஆந்திரா பெண்மணிகளுக்கு எனது சகவாசத்தை வழங்கினேன், டெல்லிக்கு வரவில்லை என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், நான் எந்த வகையிலும் பிணைக்கப்படவில்லை. இப்போது இங்கே 'இருள்**

**நிறைந்துள்ளது' என்று சொன்னால், சிறிதும் தயக்கமின்றி அதை ஒப்புக்கொள்ள வேண்டும்!**

**சரணடைவது என்பது மிகவும் கடினமான ஒன்று. என்னால், நானே அதைச் செய்ய முடியாது! அவதார புருஷராக பூமியில் இறங்கி வருவது எளிதானது, ஆனால் மனம், உடல் மற்றும் ஆன்மாவை சரணடையச் செய்வது சாத்தியமற்றது! ஹாஃபீஸ் கூறுகிறார்: "குருநாதர் என்ன சொன்னாலும், சற்றும் சிந்திக்காமல் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளுங்கள்." நான் நாளை உங்கள் இல்லத்திற்கு வருவேன் என்று சொல்லி, வராமல் இருந்து, மீண்டும் அதே வாக்குறுதியை வழங்கி, வராமல் இருந்து - இதையே நான் தொடர்ந்து செய்தால் - நீங்கள் அதைப் பற்றி சிந்திக்கவே கூடாது. உங்கள் மனதில் இது குறித்து சிறிதும் சந்தேகம் வரக்கூடாது. ஆனால் இந்த மனித மனதை யார் நம்புவது?**

**ஹாஃபீஸ் கூறுகிறார்: "உங்களால், அதைப் புரிந்து கொள்ள முடியாது, ஒரு குருநாதரிடமிருந்து நீங்கள் கேட்கும் உண்மைகளை ஒருபோதும் பொய் என்று சொல்லாதீர்கள்." ஒரு சத்குரு எதைச் சொன்னாலும், அவர் என்ன சொல்கிறார் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. எனவே, நீங்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், அவர் பொய் சொல்கிறார் என்ற முடிவுக்கு வந்துவிடாதீர்கள். பரிபூரண குருநாதர் பொய் சொல்கிறார் என்று நீங்கள் சொன்னால், அவர் சொல்வதை உங்களால் புரிந்து கொள்ள முடியாததால், நீங்களே பொய் சொல்கிறீர்கள் என்று பொருளாகிவிடும்.**

**சகவாசத்தை நிறைவு செய்து, இங்கிருந்து நீங்கள் அனைவரும் நேரடியாகத் தத்தமது இல்லங்களுக்குச் செல்ல வேண்டும். வழியில் புனித யாத்திரைகளுக்காக உங்கள் பயணத்தை நிறுத்தாதீர்கள். என்னிடம் வருவதே மிகவும் கடினம்; எனவே, நீங்கள் செல்லும்போது, நேரடியாக உங்கள் இல்லங்களுக்குச் செல்லுங்கள். நீங்கள் அதைச் செய்யவில்லை என்றால், அரை மனதோடு நீங்கள் என்னிடம் வந்ததாக அர்த்தம். அதாவது, நீங்கள் எனக்காக மட்டும் இங்கு வரவில்லை என்று பொருள்படும்.**

ஒரு காலத்தில் மிகவும் பிரபலமான, செல்வாக்கு மிக்க டாக்டர் தௌலத் ஸிங்கின் உதாரணத்தை பாபா மேற்கோள் காட்டினார். ஆனால், அவர் கடினமான காலங்களை எதிர்கொண்டாலும், பாபா மீதான அவரது அன்பு குறையவில்லை. அவர் பாபாவின் சித்தத்தில் முழு நம்பிக்கை கொண்டிருந்ததோடு அனைத்து சூழ்நிலைகளிலும் திருப்தி அடைந்தார்.

காலை 8:45 மணிக்கு, பாபா, ஹிந்தி சகவாசக் குழுவை மெஹராபாத் மேல்மலைக்கு அழைத்துச் சென்றார், மேலும் அவர்களுக்கு முன் வந்த இதர குழுக்களுக்குக் காண்பித்த அதே இடங்கள் இவர்களுக்கும் காட்டப்பட்டன. பாபாவுடன் வெவ்வேறு குழுக்களின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. காலை 10:00 மணிக்குத் திரும்பி வந்ததும், பாபா தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார், அது மாலை 5:00 மணி வரை தொடர்ந்தது. புறப்படும்போது, ஸ்ரீபத் ஸஹாய்

பாபாவின் முன்னிலையில் ஒரு கவிதையை வாசித்தார், அதன் பின்னர், அவரது 'ஜெய்' கோஷங்களுக்கு மத்தியில், பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

1955 நவம்பர் 24ஆம் தேதி காலை, சகவாசக் குழுவும், பெரும்பாலான மண்டலியும் மெஹராஸாத்திற்குச் சென்றனர், அங்கு பாபா குழுவின் உடல்நலம் குறித்து விசாரித்து, உடல்நலம் குன்றியவர்கள், நீலு அல்லது பாதிரியைக் கலந்து ஆலோசிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்; மேலும் பாபா அவர்களுக்கு பைதூலின் மருந்தை தமது முன்னிலையில் வழங்கச் செய்தார்.

மஹாராஷ்டிராவின் மேல்நிலை துறவியான காட்கே மஹாராஜைப் பற்றி பாபா பேசினார். காட்கே மஹாராஜ் அப்போது அஹமதுநகர் வந்து அக்பர் அச்சகத்தில் தங்கியிருந்தார். ஆதி சீனியர், அன்று காலை அவரை சந்தித்த பின்பு, மெஹராஸாத் வந்தார். காட்கே மஹாராஜ், பாபாவை நாசிக் நகருக்கு வருமாறு அழைத்ததாக ஆதி, பாபாவிடம் கூறினார். காட்கே மஹாராஜ் ஆதியிடம் கூறியதாவது: "நான் ஒரு சின்னஞ்சிறு குருவி போல, பாபா ஓர் அற்புதமான சூரியனைப் போன்றவர். பாபா நாசிக் வந்து தரிசனம் வழங்க வேண்டும் என்று விரும்புகிறேன். நான் ஒரு அறிவிலி, பாபா எல்லாம் அறிந்தவர்!"

பாபா, ஆதியிடம், "**நான் நாசிக் செல்ல முடியாது என்று காட்கே மஹாராஜிடம் கூறுங்கள், ஏனெனில் நான் ஒரு வருடம் ஏகாந்தவாசம் மேற்கொள்ள வேண்டும். ஆனால் மஹாராஜ் எனது ஏகாந்தவாச வேளையிலும் என்னை வந்து பார்க்க முடியும்**" என்று அவரிடம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார். (உண்மையில், காட்கே மஹாராஜ், பாபாவிடம் நித்தியமாக 'வந்திணைந்தார்' - சிறிது காலத்திற்குப் பிறகு, காட்கே மஹாராஜ் தனது பௌதீக உடலைத் துறந்தார்.)

ஹிந்தி சகவாசக் குழு அன்பர்கள் மெஹராஸாத்தில் அனைத்து இடங்களுக்கும், ஏகாந்தவாச மலைக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். பாபா ஏழு மா மரக்கன்றுகளைச் சுட்டிக் காட்டி, அதன் விதைகளை அவருக்கு மதராஸில் வாழ்ந்த ஒரு மஸ்த் வழங்கியதாகத் தெரிவித்தார்.

மஸ்துகளைப் பற்றி பாபா கூறியதாவது: "**இறை அன்பில் உடல் உணர்வை இழப்பவர்கள் மஸ்துகள் என்று அழைக்கப்படுகின்றனர். நான் அவர்களை மிகவும் நேசிக்கிறேன். அவர்கள் மீதான என் அன்பு, ஒரு தாய் குழந்தைகள் மீது காட்டும் பாசம் போன்றது. ஒரு தாய் தனது குழந்தைகளை கவனித்து, அன்புடன் மலம், சிறுநீர் அனைத்தையும் சுத்தம் செய்கிறாள். அவர்களை எந்நேரமும் நினைவில் கொள்கிறாள். நானும், மஸ்துகளுக்கு ஒரு தாயைப் போல் இருக்கிறேன், மேலும் அவர்கள் மீது முழு அக்கறையும் சிந்தனையும் கொண்டிருக்கிறேன்.**"

அதைத் தொடர்ந்து சகவாசக் குழு மெஹராபாத் திரும்பிச் சென்றது. காலை 11:00 மணியளவில் பாபாவும் மெஹராபாத் வந்து, அங்கேயே மதிய

உணவை உண்டார். ஔரங்காபாத் நகரிலிருந்து அழைக்கப்பட்ட கவாலி இசை குழுவினர், பிற்பகல் 2:30 மணிக்கு தொடங்கிய நிகழ்ச்சி, மூன்றரை மணி நேரம் நீடித்தது. பாபா, மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார், மேலும் கஸல்களில் சில வரிகளின் அர்த்தத்தை இடையிடையே விளக்கினார்.

காலம் இதை இவ்வாறு பதிவு செய்தது: “மொத்த சூழலும் இறை போதையில் மூழ்கியது, ஒவ்வோர் அன்பரும், அனைத்தையும் மறந்து, அன்பிற்குரியவரை பார்த்துக் கொண்டிருந்தார். அவரது கண்களின் ஒளி அன்பர்களின் இதயங்களை ஊடுருவி, இருளை அகற்றியது. அனைவரும் மகிழ்ச்சி பொங்க, பேரின்ப மழையில் தங்களை நனைத்தனர்.”

இந்த நேரத்தில், அலோபாவால் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், அவர் எழுந்து நடனமாடத் தொடங்கினார். ஒரு சில மண்டலி அவரை மண்டபத்திலிருந்து வேறு ஓர் அறைக்கு அழைத்துச் சென்றனர், அங்கு பாவ் கல்சூரி அவரைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்.

மாலை 6:30 மணிக்கு கவாலி நிகழ்ச்சி நிறைவடைந்ததும், இசைக் கலைஞர்கள் புறப்பட்டுச் சென்றனர். பாபாவின் கோட் அவரது கழுத்தில் அணியப்பட்ட பல மாலைகளால் அழுக்குப் படிந்து காணப்பட்டது. எரச் மாலைகளை அகற்ற, பாபா மேல்கோட்டைக் கழற்றினார். எரச் வேறு கோட் ஒன்றைக் கொண்டு வந்தார், பாபா அதை அணிந்துகொண்டிருந்த வேளையில், அவர் தமக்குள்ளேயே லயிக்கப்பட்டு, சிறிது நேரம் சுற்றுப்புறத்தை மறந்த நிலையில் இருந்தார். அவரது விரல்கள், அவர் மட்டுமே செவிமடுக்கும் இசைக்கு இசைந்தாற்போல நடனமாடியதைத் தவிர, அவரது உடலில் எந்த அசைவுமில்லை. சூழல் அமைதியாக இருந்தது. அங்கிருந்த அனைவரும் தீவிரத் தன்மையை வெளிப்படுத்த, ஆழ்ந்த அமைதி நிலவியது. பாபா தமது எல்லையற்ற இதயத்தில் ஒவ்வொரு தனிப்பட்ட இதயத்திற்கும் இடம் ஒன்றை ஒதுக்கி, ஒவ்வொருவரையும் பிரிக்க முடியாமல் தம்முடன் பிணைத்து வைத்திருப்பது போலத் தோன்றியது.

சட்டென்று எழுந்து பாபா வாசலை நோக்கி நடந்தார். அங்கிருந்து, ஏழு அடிகள் பின்வாங்கி நாற்காலியை நோக்கி நகர்ந்து, மீண்டும் ஏழு அடிகள் வாசலை நோக்கி நடந்தார். மண்டபத்தை விட்டு வெளியே வந்து, அவர் கூட்டத்தை ஆய்வு செய்தது போல், அவருடைய பார்வை அன்பின் பரிசை வழங்கி, அனைவரையும் கண்கலங்கி அழ வைத்தது. அந்த நாள் ஹிந்தி குழுவிற்கு சகவாசத்தின் இறுதி நாள், அன்பிற்குரியவரின் பார்வை அவர்களின் இதயங்களைப் பிளந்தது. எதுவும் கூறாமல், பாபா காரில் அமர்ந்த போது, அன்பர்களின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க ‘ஆதிகால புருஷர்’, ‘தெய்வீக அன்பானவர்’ என்று போற்றிப் புகழப்பட்டார். பாபா உடனடியாக மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்; சகவாச அன்பர்கள் அனுபவித்த வலியால் மெஹராபாத்தின் மண் ஈரமானது. தொலைதூரத்தில் அவரது கார் வேகமாகச் சென்றபோது பிரிவின் வேதனை ஒவ்வோர் இதயத்திலும் துடிக்கத் தொடங்கியது.

பெண்டு, பாவ், விஷ்ணு, கோஹியார், நானா கேர், பால் நாத்து மற்றும் பலர், சகவாசக் குழுவை பேருந்து மற்றும் ரயில் நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மும்முரமாக இருந்தனர்; ஆனால் கடந்த ஐந்து நாட்களாக, பாபாவின் சகவாசத்தில் அனுபவித்த மகிழ்ச்சிக்குப் பின்னர், அவருடைய பிரிவின் சோகம் ஒவ்வொரு கண்ணிலும் கண்ணீரை வரவழைத்தது. சோகத்தில் மூழ்கியவர்கள் பேருந்துகளில் இருக்கையில் அமர முடியாமல் சிரமப்பட்டனர். பாபாவை உள்ளூர நினைத்துக்கொண்டே, கண்ணீருடன் மெஹராபாத்தை விட்டு வெளியேறினர். ஆனால் அவர்களின் பிரிவின் கண்ணீரில் அவரது சகவாசத்தின் மகிழ்ச்சி கலந்திருந்தது, மேலும் இந்த மகிழ்ச்சியும் துக்கமும் இணைந்த பொக்கிஷத்துடன் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

மறுநாள் காலையில் பல அன்பர்கள் புறப்பட இருந்தனர்; மெஹராஸாத் சென்றடைந்ததும், பாபா, எரச்சை மெஹராபாத்திற்கு, ஒரு செய்தியுடன் அனுப்பி வைத்தார். மெஹராபாத்தில் அன்று இரவு தங்கிய அன்பர்களுக்கு, இறை மனிதனால் வழங்கப்பட்ட இந்தச் செய்தியை எரச் வாசித்தார்:

**மகிழ்ச்சியான மனதுடன், குதூகலம் பொங்கும் இதயத்துடன் என் அன்பை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்; பயணத்தின் போதும், உங்கள் இல்லத்திலும் நான் இருப்பதை நீங்கள் உணர வேண்டும். அன்பான வாழ்க்கை வாழவேண்டும், அந்த அன்பில் எனக்காக வாழ்ந்து சாகவேண்டும்.**

ரயில் நிலையத்திற்கு விரைந்த எரச், தட்டச்சு செய்த செய்தியை புறப்பட இருந்த அனைத்து அன்பர்களுக்கும் வழங்கினார்.



**மெஹராபாத் ஏழைகளின் நிகழ்ச்சி, நவம்பர் 1955**
(MEHERABAD POOR PROGRAM NOVEMBER 1955)



**ஏகாந்தவாச மலை மேல் ஏறும் காட்சி 1955**
(WALKING UP SECLUSION HILL**,** 1955)



மெஹராபாத் (MEHERABAD), **23** நவம்பர் (NOVEMBER) **1955**

# மெஹராபாத் சகவாசம் - மராட்டி

(**Meherabad Sahavas – Marathi**)

1955 நவம்பர் 25 ஆம் நாள், முழு ஹிந்தி குழுவும் புறப்பட்டுச் செல்லவே, மராட்டி குழு வருவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இந்த நான்காவது மற்றும் இறுதி சகவாச நிகழ்வில் பங்கெடுத்த அன்பர்களின் எண்ணிக்கை 200ஐயும் தாண்டியது. அன்றைய தினம் பாபா மெஹராபாத்திற்கு வந்து, பெண்டு மற்றும் பிற மண்டலியுடன் சகவாசிகளின் தங்கும் வசதிகளை அதிகரிப்பது குறித்து விவாதித்தார். பாபாவின் அறைக்கு முன்னால், மேலும் ஒரு பந்தல் எழுப்பப்பட்டது, அதில் சில அன்பர்களுக்கு இடமளிக்குமாறு பாபா, பெண்டுவிடம் அறிவுறுத்தினார்.

நவம்பர் 26ஆம் நாள், சகவாச ஏற்பாடுகளை பார்க்க பாபா, பெண் மண்டலியை அழைத்து வந்தார். அவர்கள் மெஹராஸாத்திற்குத் திரும்பிய பின்பு, கீழ் மெஹராபாத்தில் மதியம் 2:00 முதல் 5:00 வரை நடந்த குல்தாபாத் கவாலி பாடகர்களின் இசை நிகழ்ச்சியில் பாபா கலந்து கொண்டார். பாடகர்களுக்கு நல்ல குரல் வளம் இருந்தது, மேலும் பாபா அவர்களின் நடிப்பை மிகவும் ரசித்தார்.

27ஆம் தேதி பிற்பகலில், 213 மராட்டி குழு உறுப்பினர்களில் கிட்டத்தட்ட அனைவரும் வந்துவிட்டனர். மெஹராபாத் தோட்டம் மீண்டும் பறவைகளால் சூழப்பட்டிருந்தது, அவற்றின் இனிமையான கீதம் இசைக்கத் தொடங்கியது. அன்பர்களை மெஹராபாத்திற்கு அழைத்து வரும் பேருந்துகள் அதிகாலை 2:00 மணி வரை அங்கும் இங்கும் தொடர்ந்து பயணித்தன, மேலும் அனைவருக்கும் கூடாரங்களில் ஒழுங்காக இடமளிக்கப்படுவதைக் கண்காணிக்க மண்டலி விழித்திருந்தனர். இதுவே கடைசி, மிகப்பெரிய குழுவாக இருந்ததால், மராட்டி மொழி பேசாத பல அன்பர்களும் சகவாசத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

பாபா 1955 நவம்பர் 28 திங்கட்கிழமை காலை 7:15 மணிக்கு மெஹராஸாத்திலிருந்து வந்து நேராக தமது அறைக்குச் சென்று, மண்டலியுடன் ஏற்பாடுகளைக் குறித்து விவாதித்தார். இதற்கிடையில், சகவாசக் குழுவினர் மலர் மாலைகளை கைகளில் ஏந்திய வண்ணம் வராண்டாவில் ஒன்றுதிரண்டனர். பாபா, தமது அறையிலிருந்து வெளியே வந்ததும், "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்ற இடிமுழக்கம் காற்றில் ஒலித்தது. பாபா மண்டபத்திற்குள் நுழைந்தார். அனைவரும் அவருக்கு மாலை அணிவிக்கத் தொடங்கினர்; ஆனால் ஹிந்தி மற்றும் தெலுங்கு குழுக்களைப் போல, மராட்டி சகவாசக் குழு ஒழுங்காக இல்லை, ஏனெனில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட அன்பர்கள் அவருக்கு மாலை அணிவிக்க முன்னோக்கி விரைந்தனர்.

பாபாவின் பாதங்களைத் தொடுவது கண்டிப்பான உத்தரவுடன் தடைசெய்யப்பட்டிருந்தது, ஆனால் நடைமுறையில் எவராலும் அதைச் செய்யாமல் கட்டுப்படுத்த முடியவில்லை. பாபா, அவர்கள் அருகில் வந்தபோது ஒவ்வொருவரிடமும் நகைச்சுவையாகப் பேசினார். டாக்டர் தேஷ்முக் அவருக்கு மாலை அணிவிக்கும்போது சற்று அசட்டுத்தனமாக நடந்துகொண்டார்; எனவே பாபா, "**அவர் ஒரு தத்துவப் பேரறிஞர், இன்னும் அவருக்கு சரியாக மாலை அணிவிக்கத் தெரியவில்லை**" என்று குறிப்பிட்டார். பாபா, தேஷ்முக்கிடம் மீண்டும் மாலை அணிவிக்குமாறு சைகையால் தெரிவிக்கவே, இந்த முறை அவர் அதை சரியாகச் செய்தார்.

கரக்பூரைச் (KHARAGPUR) சேர்ந்த டாக்டர் ஜி.எஸ்.என். மூர்த்தி முதன்முறையாக மெஹராபாத்திற்கு வந்திருந்தார்; தேஷ்முக் அவருக்கு, எப்பாடு பட்டேனும் சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு தொலைத்தந்தி அனுப்பிய பின்னரே அவர் வந்தார். மூர்த்தி மலர் மாலை வாங்கி வராததால், அதை எண்ணி வருந்தினார். பாபா அவரிடம், "**கவலைப்படாதீர்கள். என் உயிரூட்டம் மிக்க மாலையாக மாறுங்கள். என்னுடன் வாழும் உண்மையான மாலையாக மாற நான் உங்களுக்கு உதவுவேன்**" என்றார்.

காடேக்கர் மிகப் பெரிய மாலை ஒன்றைக் கொண்டு வந்திருந்தார், பாபா விளையாட்டுத்தனமாகக் கேட்டார், "**உங்களுக்கு என் மீது இரக்கமே இல்லையா? இவ்வளவு பெரிய சுமையால் எனது கழுத்தை எடைபோட விரும்புகிறீர்கள்!**" பாபா அதன் விலையைக் கேட்டார், அவர் பத்து ரூபாய் என்றதும் அனைவரும் சிரித்தனர்.

மாலை அணிவிக்கத் தொடங்கியதும், பாபா அவரது பாதங்களை நீட்டி, அவற்றை ஒரு வெண் போர்வையால் மறைத்து, பின்னர் அதைச் சுட்டிக்காட்டி, தம்மை அணுகிய அன்பர்களிடம், "**உங்கள் மாலைகளை இங்கே, மிகவும் பிரியமான ஒருவரின் சமாதியில் வைப்பது போல வைக்கவும்**" என்று கேட்டுக்கொண்டார்.

பாபாவிற்கு மாலை அணிவிக்க மௌனி புவா அவர் முன் சென்றார். பாபா, முன்னர் அவரிடம் மௌனம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார்; அதைத் தொடர்ந்து சத்தாராவில், அவர் முன்னிலையில் மௌனத்தைக் கைவிடுமாறு கட்டளையிட்டார். ஆனால் அந்த நேரத்தில் மௌனத்தைக் கலைத்து, மௌனி புவா மீண்டும் அதைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். பாபா அவரிடம் 'பரபிரம்ம பரமாத்மா' என்ற வார்த்தைகளை மொழிந்து, அன்று முதல் பேசத் தொடங்குமாறு மீண்டும் அறிவுறுத்தினார்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு தன்னைப் பார்க்க வந்த ஒருவரை, பாபா அன்புடன் தழுவிக் கொண்டார். இது, டெல்லியைச் சேர்ந்த புர்ஜர் ஏ. காய் (BURJOR A. GAI) என்பவரை, பாபாவின் அரவணைப்பைப் பெறுவதற்காக அவரை அணுகத் தூண்டியது; அப்போது பாபா அவருக்கு அறிவுரை கூறினார், "**நீங்கள் அவ்வாறு செய்திருக்க வேண்டாம், ஏனெனில், நீங்கள் பார்ப்பது போல நான் பிற அன்பர்களைத் தழுவவில்லை.**"

அப்துல் மஜித் கான் (ABDUL MAJID KHAN) பாபாவை அணுகி, ஒரு பெரிய கூடை நிரம்ப பூக்களை அவர் முன் வைத்தபோது, பாபா விசாரித்தார், "**ஏன் இப்படி நலிந்து, மெலிந்து, நோயுற்றவர் போல் இருக்கிறீர்கள்? ஒருவேளை என் மீதுள்ள அன்பின் காரணமாக இருக்கலாம்!**" அப்துல் கான் நோய்வாய்ப்பட்டிருந்ததாக பதிலளித்தார்.

ஒவ்வோர் அன்பரும் முடிப்பதற்குள் பாபாவின் மடியில் மாலைகள் மலை போலக் குவிந்திருந்தன; வாமன் ஸப்னிஸை அழைத்த பாபா, "**நீங்கள் ஒரு விளையாட்டு வீரர், எனவே இந்த மாலைகளின் குவியலை அகற்றுங்கள்!**" என்றதும், வாமன் அவ்வாறே செய்து அவற்றை வராண்டாவில் குவித்தார்.

அப்போது பாபா சகவாச அன்பர்களிடம் கூறினார்:

**உங்களுக்கு இங்கே ஐந்து நாட்கள் உள்ளன. இங்கு எனது சகவாசத்தில், உங்கள் இல்லங்களில் இருப்பது போல சுதந்திரமாக இருங்கள். உங்களுக்கு அழவேண்டுமானால் உள்ளூர அழுங்கள்; வெளியளவில் ஒரு புன்னகை நிறைந்த முகத்துடன் இருங்கள். எனக்கு மாலை அணிவித்து நாளை நேரத்தை வீணாக்காதீர்கள். பணத்தை வீணாக்கி, மாலைகளால் பாரத்தை சுமக்க வைக்காதீர்கள்.**

**என்னிடம் இரண்டு இளஞ்சிவப்பு நிற கோட்டுகள் மட்டுமே உள்ளன, இது ஏற்கனவே உங்கள் மாலைகளால் பாழாகிப்போனது. அவை நீண்ட காலம் நீடிக்காது. ஒவ்வொரு முறையும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று கோஷமிட வேண்டாம். அப்படிச் செய்வதால் என்ன பயன்? அதை நீங்கள் மட்டுமே கேட்கும் விதத்தில் உங்கள் உள்ளத்தின் உள்ளே கத்துங்கள். பிறர் அதைக் கேட்கவேண்டாம்.**

**இன்றும் நாளையும் வெவ்வேறு கோணங்களில் அமைந்த நான்கு தலைப்புகள் குறித்து சில விளக்கங்களை வழங்குகிறேன். இதே விஷயங்களை குஜராத்தி, தெலுங்கு, ஹிந்தி குழுக்களுக்கு விளக்கியிருக்கிறேன். முதல் இரண்டு நாட்களை இத்தகைய விளக்கங்களில் கழிப்போம். நாம் அவசரப்பட மாட்டோம், மெதுவாகத் தொடருவோம்.**

**மிகவும் கவனமாகக் கேளுங்கள். ஒரு விளக்கம் சிறியதாக இருந்தாலும் சரி, பெரியதாக இருந்தாலும் சரி, சீரான கவனத்துடன் கேளுங்கள். நான் சொல்வதை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களால் புரிந்துகொள்ள முடியாவிடில், குறைந்தபட்சம் கவனமாகக் கேளுங்கள். நான் சொல்வதைக் கேட்பது ஒருபோதும் வீண் போகாது. இன்று, பல வருடங்கள் கழித்து, அல்லது சில பிறவிகளுக்குப் பிறகும் நான் சொல்வதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்! நான் கேலி கிண்டல் செய்யலாம், தீவிரமாக இருக்கலாம், ஆனால் கவனமாக இருங்கள்.**

பாபா ஸாக்கோரியின் யஷ்வந்த் ராவிடம், "**நான் கூறுவதை நீங்கள் கேட்கிறீர்களா?**" என வினவியதும்...

"ஆம், நான் கேட்கிறேன் பாபா" என்றார்.

அவரை அறிமுகப்படுத்திய பாபா, "**யஷ்வந்த் ராவ் எனது பழைய தோழர்**" என்று குறிப்பிட்டு, தொடர்ந்தார்:

**எனது சகவாசத்தில் நீங்கள் என்னுடன் இருக்கும் ஐந்து நாட்களும், உங்கள் கவலைகள் அனைத்தையும் மறந்துவிட வேண்டும். நீங்கள் வாழ்ந்து கொண்டிருந்த சூழ்நிலையை அங்கேயே விட்டுவிடுங்கள், அது இருந்த இடத்திலேயே இருக்கட்டும். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் இங்கே இருங்கள். நான் எங்குச் சென்றாலும் என்னைப் பின்தொடருங்கள். உங்களால் அதைச் செய்ய முடியாவிட்டால், உடலளவில் இங்கே இருந்தாலும், மனதளவில் நீங்கள் எப்போதும் உங்கள் பழைய சூழ்நிலையில் இருப்பீர்கள்.**

பாபாவின் சைகைகளை எரச் ஆங்கிலத்தில் எடுத்துரைத்ததை, டாக்கே மராட்டியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். ஆங்கிலம் மற்றும் மராட்டியைத் தவிர வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பு தேவையா என்று பாபா வினவிய வேளையில், அதன் தேவையை எவரும் சுட்டிக்காட்டவில்லை.

**சுற்றி வளைத்து பேசாமல், நேராக முக்கிய தலைப்புக்கு வருகிறேன். ஆன்மீகப் பாதையைப் புரிந்துகொள்வது ஒருவருக்கு மிகவும் கடினம்; ஆன்மீகப் பாதையில் பயணிப்பது அதைவிட கடினம். இந்தப் பாதையைப் பற்றி நீங்கள் கேட்கவும், புரிந்துகொள்ளவும் விரும்பினால், அதைப் பற்றி எழுதப்பட்ட தொகுப்புகள் பல உள்ளன. நீங்கள் துறவிகள் மற்றும் சாதுக்களிடம் சென்று அவர்களின் விளக்கங்களைக் கேட்கலாம். ஆனால் ஆன்மீகப் பாதை புத்திசாலித்தனத்திற்கும், மன புரிதலுக்கும், மனதிற்கும் அப்பாற்பட்டது.**

**'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **என்ற புத்தகம், இதை ஆரம்பம் முதல் இறுதி வரை விவரிக்கிறது. முதல் வார்த்தையிலிருந்து கடைசி வரை படிக்கும் எவருக்கும் மனதளவில் புரியும், ஆனால் அதன் மூலம் அவர் கடவுளாகிவிட்டார் அல்லது கடவுளைப் பற்றிப் பிடித்துவிட்டார் என்று அர்த்தமல்ல.**

**வாசித்தல், கேட்டல்** (விளக்கங்கள்), **பிரார்த்தனை, ஜபம், தவம், சாதனா போன்றவை ஒருவரை ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைக்கச் செய்யாது. இந்த வழிமுறைகளால், நம்மை விடுவிப்பதற்கு பதிலாக, நாம் மேலும் மேலும் பிணைக்கப்படுகிறோம். இதை நான் எனது சொந்த அதிகாரத்தின் பேரில் சொல்கிறேன். நீங்கள் காலவரையற்ற உபவாசம் இருக்கலாம், நீங்கள் தலைகீழாக தொங்கலாம், உங்கள் மண்டையை கற்களால் உடைக்கலாம், ஆனால் அவை உங்களை ஒருபோதும் ஆன்மீகப் பாதைக்கு அழைத்துச் செல்லாது.**

**உங்களுக்கு ஒன்றை விளக்குகிறேன். ஒருவர் உண்ணுவதை நிறுத்திவிடுவதாக வைத்துக்கொள்வோம். இதுவே பிணைப்புகளை உருவாக்கும், ஏனெனில் மனம் இன்னமும் இயங்கும் வேளையில் மனப்படிவங்கள் உருவாக்கப்படுகின்றன. எதைச் செய்தாலும் - தூங்குவது,**

விழித்திருப்பது, நகர்வது, ஓடுவது, சுவாசிப்பது - அனைத்தும் மனப்படிவங்களை உருவாக்குகின்றன. மனப்படிவங்களின் இந்தச் சிக்கல் எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கும். அதிலிருந்து நீங்கள் விடுபடுவது சாத்தியமில்லை! ஆனால் நீங்கள் எப்படி உங்களை விடுவிக்க முடியும் என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

சுயமாக உருவாக்கப்பட்ட இந்தப் பிணைப்புகளுக்கு மூன்று உபாயங்கள் உள்ளன. இங்குள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும், முழு உலகமும் 'நான்' எனும் அகந்தை இருப்பதாலேயே உளதாயிருக்கிறது. 'நான்' இருப்பதால், முழு உலகமும் இருக்கிறது. 'டாக்கே' இருப்பதால், உலகம் முழுவதும் (அவருக்காக) இருக்கிறது. நம்மால்தான் உலகம் இருக்கிறது. நாம் ஆழ்ந்த தூக்கத்தில் நுழையும் போது, நம்மைப் பற்றியோ, இந்த உலகத்தைப் பற்றியோ அல்லது வேறு எதையும் பற்றியோ நமக்கு எந்த உணர்வும் இருக்காது. இப்போது, நான் இங்கே இருக்கிறேன். நீங்கள் அனைவரும் இங்கு இருப்பதற்கு நான் இருப்பதுதான் காரணம். 'டாக்கே' இல்லாதிருந்தால், இந்த விஷயங்கள் எதுவும் அவருக்கு இருந்திருக்காது.

மனப்படிவங்களின் இந்தச் சிக்கலிலிருந்து நம்மை எப்படி விடுவிப்பது? நான் உளதாயிருக்கிறேன் என்ற உணர்வின் மூலமாகவும், நான் இருப்பதன் காரணமாகவும் இந்த முழுப் பிரபஞ்சமும் நிலைகொண்டிருக்கிறது. என்றென்றும் நாம் அனைவரும் ஒரே கடவுள். ஒவ்வொரு நாளும், நாம் ஆழ்ந்த தூக்க நிலைக்குள் நுழையும் போதும் (ஆழ்ந்த தூக்க நிலை என்பது மூலமுதலான ஏக இறைவனின் அசல் நிலை, அந்த நிலையில் எந்த ஒரு நபருக்கும் தன்னைத் தவிர வேறு எதுவும் இல்லை) அதில் அவர் அவருக்கே தெரியாத மயக்க நிலையில் இருக்கிறார். நாம் விழித்தெழும் போது, மனதின் மூலம், நாம் மீண்டும் இந்த இருமைத்தன்மையை உணர்ந்து கொள்கிறோம், ஏனெனில் மனப்படிவங்கள் நம்மைத் தட்டி எழுப்புகின்றன. மீண்டும் நாம் நமது அசல் நிலைக்குத் திரும்பிச் செல்கிறோம், மீண்டும் இந்தக் (மாயாவின்) கூண்டில் நம்மைக் காண்கிறோம். தினசரி நாம் நமது அசல் நிலைக்குச் சென்றாலும், அதைக் குறித்து நமக்கு எதுவும் தெரியாது, மீண்டும் இந்த இருமைத்தன்மையை அறிந்து அரவணைத்துக் கொள்கிறோம்.

இப்போது நமக்குத் தேவையானது என்னவென்றால், நாம் எப்பொழுதும் முழுமையாக, திறந்த கண்களுடன் நமது ஆழ்ந்த தூக்கத்தின் மூல முதலான அசல் நிலையில் விழிப்புடன் இருக்க வேண்டும், அப்போது நாம் ஒருமைத் தன்மையை மட்டுமே அனுபவிப்போம், மேலும் நாம் கடவுள் என்பதை அறிவோம். ஆனால் அது முற்றிலும் சாத்தியமற்றது. ஏன்? ஏனெனில் நம்முடன் 'நான்' எனும் அகங்காரம் உள்ளது.

நம் வாழ்வுக்கு ஆதாரமாக இருக்கும் சுய மூச்சை விட கடவுள் நம் வாழ்வின் உயிராக, அளவிறுதியற்ற அளவுக்கு இன்றியமையாதவராக இருக்கிறார்.

உங்கள் மூச்சு உங்கள் உயிர். சுவாசம் நாம் வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது, நமது சுவாசம் நின்றவுடன், நாம் உயிரற்றவராகி விடுகிறோம். இதிலடங்கிய வேடிக்கையைப் பாருங்கள். நீங்கள் அனைவரும் சுவாசிக்கிறீர்கள். ஆனால் உங்கள் சுவாசத்தைப் பற்றி நீங்கள் ஒருபோதும் சிந்திக்க மாட்டீர்கள். ஆழ்ந்த தூக்கத்தின் அசல் நிலையிலும் கூட, நீங்கள் சுவாசிக்கிறீர்கள் ஆனால் உங்களுக்கு அது தெரியாது. இது நாம் உயிர் வாழ மிகவும் இன்றியமையாதது, இருந்தும், அதை நினைவில் கொள்ள வேண்டிய தேவை எதுவும் இல்லை.

பாபா கேலி செய்தார், "நாம் இதை விரைவில் முடிக்கவில்லை என்றால், உங்களில் சிலர் கொட்டாவி விட்டு, அசல் நிலைக்குச் சென்றுவிடுவீர்கள்!"

மேலும் விளக்கி, பாபா தொடர்ந்தார்:

நாம் முயற்சி செய்யும்போதுதான் நாம் சுவாசிப்பது நமக்குத் தெரியும். அப்போதுதான் நமது சுவாசம் நாம் உயிர் வாழ எவ்வளவு இன்றியமையாதது என்பதை அறிந்து கொள்கிறோம். உங்கள் சுவாசத்துடன் ஒப்பிடும்போது, கடவுள் உங்களுடன் அதைவிட எல்லையற்ற அளவுக்கு அருகாமையில் இருக்கிறார்! நாம் சுவாசிப்பதை அறியாமல் இருக்கும் போது, நமக்கு மிக அருகில் இருக்கும் கடவுளை நாம் எப்படி உணர முடியும்? ஒருவர் நீரில் மூழ்கும் போது, அவர் தனது சுவாசத்தை அறிந்து கொள்கிறார். அதுபோல, கடவுளை அனுபவிக்க, இறைப்பெருங் கடலில் மூழ்க வேண்டும்! நாம் பல விஷயங்களைப் பற்றி பேசுகிறோம், அவற்றைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறோம்; ஆனால் நமது உண்மையாக உளதாயிருப்பதை உணர்ந்து கொள்ள, நாம் இறை அன்பின் ஆழ் கடலில் மூழ்க வேண்டும்!

பல ஆண்டுகளுக்கு முன்னர், சிறப்பாக உடையணிந்த ஒரு மனிதர் என்னிடம் வந்தார் - அப்போது நான் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த இரண்டாவது புகைப்படத்தில் இருந்தது போன்ற தோன்றத்தில் இருந்தேன் - அவர் 40 ஆண்டுகளாகக் கடவுளைத் தேடி அலைவதாகவும், புனிதர்கள் அவரை வழிநடத்தியபடி அனைத்தையும் செய்ததாகவும் என்னிடம் கூறினார், ஆனால் இன்னும் கடவுளைக் காண முடியவில்லை. அவர் எனக்குக் கீழ்ப்படிந்தால் அவருக்கு இறை ஞானம் கிடைக்கும் என்று கூறினேன். அவர் இவ்வாறு பதிலளித்தார், "கீழ்ப்படிதலா? எனது தலையை வெட்டி உங்கள் காலடியில் வைக்கவும் நான் தயாராக இருக்கிறேன்!"

'இதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். தலையை துண்டிக்க வேண்டிய தேவையில்லை, ஆனால் அஹமதுநகர் தெருக்களில் நிர்வாணமாகத் அலைந்து திரிய வேண்டும்' என்று நான் கூறினேன். "நான் அந்த நகரில் வாழ்பவன், பலருக்கு என்னைத் தெரியும் என்பதால், இது மிகவும் கடினம். நான் ஒரு நல்ல பதவியில் இருக்கிறேன். நீங்கள் சொல்வது போல செய்வது எப்படி சாத்தியம்?" என்று கேட்டார்.

எனவே, தலையைத் துண்டிப்பது எளிது, எனக்குக் கீழ்ப்படிவது எவ்வளவு கடினம் என்று சிந்தித்துப் பாருங்கள்! அன்பு, கீழ்ப்படிதல், சரணாகதி இவற்றைப் பற்றி பின்பு விளக்குகிறேன்.

அற்புதங்களைக் குறித்து உங்கள் கண்களைத் திறக்க விரும்புகிறேன். ஆன்மீகப் பாதையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது மிகவும் கடினம், உண்மையில் ஆன்மீகப் பாதையில் இருப்பவர்களை அறிவது இன்னும் கடினம்.

இந்தியாவில், காவி நிற மேலங்கியுடன் உடையணிந்து, தாடியும் நீண்ட தலைமுடியுடன் கூடிய ஒரு மனிதனைக் கண்டால், மக்கள் அவரை வணங்கி, மரியாதை செலுத்த விரைகின்றனர்; அதைக் கண்டு பிறரும், குறிப்பாக, செல்வந்தர்களும், புத்திசிகாமணிகளும் அவர்களைப் பின்பற்றுவது வழக்கம்.

உணர்வுக்கு ஏழு ஆன்மீகத் தளங்கள் உள்ளன. நீங்கள் முதல் ஆன்மீகத் தளத்தில் அடியெடுத்து வைக்கும்போது, உங்கள் உடலின் உணர்வை (சுயநினைவை) இழக்கிறீர்கள். இங்கு நீங்கள் அருமையான காட்சிகளைக் காண்கிறீர்கள், இனிமையான இசையைக் கேட்கிறீர்கள், அற்புதமான வாசனையை நுகர்கிறீர்கள். நீங்கள் இயல்பாகவே பைத்தியமாகி விடுகிறீர்கள்! இவ்வாறு, ஒருவர் ஒரு தளத்திலிருந்து அடுத்த ஆன்மீகத் தளத்திற்கு முன்னேறிச் செல்லும் பாதையில், ஒரு மனிதர் படுக்கையிலிருந்து எழும்புவதற்கு முன்பு போர்வையை ஒருபுறம் தூக்கி எறிவது போலவே, ஒருவரின் சுயநினைவை இழக்கிறார். இவ்வாறு, ஆன்மீகப் பாதையில் செல்பவன் முற்றிலும் பைத்தியமாகிறான்! அப்படிப்பட்ட ஒருவனை பைத்தியக்காரன் என்று மக்கள் நினைக்கிறார்கள். ஒரு மருத்துவரின் பார்வையில், ரங்கோலே முற்றிலும் பைத்தியம் பிடித்தவர் என்று வைத்துக்கொள்வோம், அதே வேளையில், ஸரோஷ் பைத்தியமாகத் தோன்றினாலும், அவர் உண்மையில் ஆன்மீகப் பாதையில் முன்னேறி பயணிக்கிறார். ஸரோஷுக்கு உடல் உணர்வு இல்லை; அவர் உண்பதுமில்லை, உறங்குவதுமில்லை. ஆனால் வெளியளவில், ஸரோஷ், ரங்கோலே இருவரும் பைத்தியமாகத் தோற்றமளிக்கிறார்கள். அப்படியானால், வினூ அவர்களிடையே உள்ள வித்தியாசத்தை எப்படிக் கண்டுகொள்ள முடியும்?

பாபா மனநிலை பாதிக்கப்பட்ட ஃபக்கீர் புவாவின் கதையை மீண்டும் கூறினார்:

ஆரம்பத்தில், இங்கே மெஹராபாத்தில், ஒரு பள்ளிக்கூடம், மருத்துவமனை, மஸ்த் ஆசிரமம் இப்படிப் பல இருந்தன. பைத்தியக்கார ஆசிரமத்தில், பிற அனைவருடன் ஒப்பிடுகையில் ஃபக்கீர் புவா என்று அழைக்கப்பட்ட ஒருவர் மிகவும் பைத்தியமாக இருந்தார். பூனாவைச் சேர்ந்த டைபாலி (TYEBALI) என்பவர் இங்குப் பணிபுரிந்து வந்தார். மஸ்த் ஆசிரமம் கலைக்கப்பட்ட பின்னர், ஃபக்கீர் புவா மீண்டும் பூனாவிற்கு அனுப்பப்பட்டார்.

**என்னைப் போலவே அவருக்கும் விரல்களை அதிரவைக்கும் பழக்கம் இருந்தது. ஃபக்கீர் புவா எனது பொறுப்பாளர் என்ற வதந்தியை பரப்பினார் டைபாலி! அதைப் பற்றி கேள்விப்பட்ட பூனாவில் பலர் அவரை அணுகி தரிசனம் செய்யத் தொடங்கினர்.**

பி.என். லிம்கர் (P.N. LIMKAR) எனும் அன்பர் எழுந்து நின்று, "ஃபக்கீர் புவாவை தரிசனம் செய்பவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர் இப்போது காலமாகிவிட்டார்" என்று உறுதிப்படுத்தினார்.

பாபா தொடர்ந்தார்:

**ஃபக்கீர் புவா தனது சுற்றுப்புற சூழல்களை மறந்து, முற்றிலும் பைத்தியமாக இருந்தார். அவர் ஆன்மீகப் பாதையில் பயணிக்கவுமில்லை, பைத்தியம் பிடித்தவர் போல நடிக்கவுமில்லை. மக்கள் ஏன் தன்னிடம் வந்து மரியாதை செய்கிறார்கள் என்பது அவருக்கு சற்றும் புரியவில்லை. ஆனால் இப்போது, கபடநாடகத்திற்கு எதிராக நான் உங்களை எச்சரிக்கிறேன், ஏனெனில் ஒரு நயவஞ்சகனாக இருந்து, இல்லாததை இருப்பது போல பாசாங்கு செய்வது பாவத்திலும் பாவம்.**

**நயவஞ்சகர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தங்களைச் சுற்றி ஒரு ஆன்மீக குருவைப் போன்ற ஒரு சூழலை உருவாக்குகின்றனர். எனவே இயல்பாகவே அவர்கள் தங்களை நோக்கி கூட்டத்தை ஈர்க்கிறார்கள். பரமாத்மா இரக்கமுள்ளவர், அனைவரையும் மன்னிக்கிறார், ஆனால் நயவஞ்சகர்களை மட்டும் மன்னிப்பதில்லை! நீங்கள் நல்லவராகவோ அல்லது தீயவராகவோ இருக்கலாம், ஆனால் நீங்கள் உள்ளொன்று வைத்து புறமொன்று காட்டாதீர்கள்.**

**என்னை நேசிப்பவர்கள், நான் அவதார புருஷன், ஆதிகாலத்தவன் என்று உணர்வதானால், அதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்று நான் எப்பொழுதும் சொல்கிறேன். ஆனால் அதைக் குறித்து உங்கள் மனதில் சிறிதளவு சந்தேகம் இருந்தாலும், பாபா, அவதார புருஷர் என்பதை நீங்கள் உணரவில்லை என்று சொல்லுங்கள். நான் ஒரு மோசடிக்காரன் என்று நீங்கள் நினைத்தால், அவ்வாறே சொல்லுங்கள். நான் ஆதிகாலப் புருஷன், நீங்கள் என்ன சொன்னாலும் அது என்னைப் பாதிக்காது. முழு உலகமும் எனக்குத் தலை வணங்கினாலும் அல்லது என்னை எதிர்த்தாலும், அது எனக்கு ஒன்றுதான். நான் பாராட்டுகளாலும், அவதூறுகளாலும் பாதிக்கப்படுவதில்லை.**

**அப்துல் மஜித்! பாபா, அவதார புருஷர் என்று நீங்கள் உணராவிட்டால், அவர் அவதார புருஷர் என்று மக்களிடம் சொல்லாதீர்கள். நீங்கள் என்னைப் பற்றி உங்கள் சொந்த ஊரில், "பாபா அவதார புருஷர், ஒரே உண்மைப்பொருளாக இருப்பவர், பிற அனைத்தும் மாயை" என்று சொல்லும் அந்த நேரத்தில், உங்கள் மனைவி உயிரிழந்ததைத் தெரிவிக்கும் தொலைத்தந்தி வரவே, நீங்கள் அழுது, புலம்பி மார்பில் அடிக்கத் தொடங்கினால், பார்வையாளர்கள் என்ன நினைப்பார்கள்? உங்கள்**

**அறிவுரையிலிருந்து மாறுபட்டு நடந்துகொள்வதையும், நீங்கள் மாயை என்று அழைக்கும் அனைத்தையும் நினைத்து அல்லல்படுவதையும் அவர்கள் கண்டுகொள்வார்கள்! நீங்கள் நடைமுறைப்படுத்தாததைப் பற்றி நீங்களே உரை நிகழ்த்துகிறீர்கள். நான் கூறுவதை நீங்கள் கடைப்பிடித்தால் மட்டுமே என்னைப் பற்றி மக்களிடம் கூற உங்களுக்கு உரிமை உண்டு!**

அப்துல் மஜித் கான் உடனே, "பாபா, நீங்கள் அவதார புருஷர் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது, அந்த நம்பிக்கையின் பக்கபலத்தில் உங்களைப் பற்றி நான் மக்களுக்குக் கூறுகிறேன்" என்று அறிவித்தார்.

அதற்கு பாபா, **"எனக்குத் தெரியும். என் மீது உங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது, நான் உங்களை நேசிக்கிறேன். நீங்கள் எனது ரத்தினக் கல்"** என்று பதிலளித்தார்.

பதினைந்து நிமிட இடைவேளைக்குப் பின்னர், அனைவரும் காலை 9:35 மணிக்கு மீண்டும் ஒன்று திரண்டனர். மண்டபத்தில், பாபா தமது உரையைத் தொடர்ந்தார்:

**நான் ஆதிகாலத்தவன் எனும்போது, நான் உங்கள் அனைவரிலும், அனைத்திலும் இருக்கிறேன், நான் ஒருவரே இருக்கிறேன் - என்னுடைய இந்த 'நான்', எரச் கூறும் 'நான்' என்ற வார்த்தையிலிருந்து வேறுபட்டது. இப்போது, இயற்கையாகவே எழும் கேள்வி என்னவெனில், ஆதிகாலத்தவன் கூறும் 'நான்' என்ற வார்த்தைக்கும், பிற அனைவரும் மொழியும் 'நான்' என்ற சொல்லுக்கும் என்ன வித்தியாசம்? ஆதிகாலப் புருஷனாக இருக்கும் நான் வேறு என்ன சொல்ல முடியும்! மேலும், 'நான் ஒரு மனிதன், நான் எரச்' என்பதைத் தவிர எரச் வேறு என்ன கூற முடியும்! நானே ஆதிகாலத்தவன் என்று அறிவிப்பதைத் தவிர, வேறு எதுவும் சொல்வதற்கில்லை. நான் அப்படிச் சொல்வது இயற்கையானது! எனது 'நான்' எல்லையற்ற, பிரிக்க முடியாத உண்மைப்பொருளின் மொத்த உருவம். உங்களின் 'நான்' வரையறுக்கப்பட்ட, இருமைத்தன்மை நிறைந்த பொய்யும், போலியுமான ஒன்று!**

**'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்த பின்பு, நீங்கள் கடவுள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள், ஆனால் இந்தப் புரிதல் உங்களை கடவுள் என்று கூறும் அதிகாரத்தை உங்களுக்கு வழங்காது. புத்தகத்தில், இது குறித்த தெளிவான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற உண்மைகள் இதுவரை வெளிவந்ததில்லை. மேலும் வினூ அதைப் படிக்கும் போது, தான் கடவுள் என்பதைத் தெரிந்து கொள்வார், ஆனால் 'நான் கடவுள்' என்று பறைசாற்றும் அதிகாரம் அவருக்கு இருக்காது. அதற்கு, என்னைப் போன்ற அனுபவம் அவருக்குத் தேவை; அவர் தன்னை ஒரு மனிதனாக இப்போது அறிந்து கொள்வது போல!**

**ரிஷிகளும் முனிவர்களும் எனது சகவாசத்திற்காக ஏங்குகிறார்கள். நீங்கள் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். நான் ஆதிகாலத்தவன்.**

**அனைத்து இடங்களிலும் நான் ஒருவனே இருக்கிறேன். உங்கள் அனைவரிலும் நான் இருக்கிறேன், என்னைத் தவிர வேறு எவரும் இல்லை.**

அற்புதங்களைக் குறித்து, பாபா, முந்தைய மூன்று குழுக்களுக்கும் விளக்கியதை மீண்டும் எடுத்துரைத்தார்:

**இப்போது நாம் அற்புதங்களைப் பற்றிப் பேசுவோம். வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த அன்பர்களிடமிருந்து கடிதங்கள் வந்த வண்ணம் உள்ளன: "நாங்கள் பாபாவை இங்கு உடல் ரீதியாகப் பார்த்தோம்… பாபாவின் அருளால் எனது உயிரிழந்த குழந்தையின் உயிர் மீட்டெடுக்கப்பட்டது… பாபாவின் பார்வையால் எங்கள் வணிகம் செழித்தது… இப்படிப் பல."**

**அவர்களுக்கு, நான் கூறுகிறேன்: எனக்கும், அற்புதங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆன்மீகம் அல்லது அன்பின் பாதைக்கு அற்புதங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. காலங்காலமாக நான் எந்த அற்புதத்தையும் நிகழ்த்தியதில்லை. இது போன்ற நிகழ்வுகள் பக்தரின் அளப்பரிய அன்பு மற்றும் நம்பிக்கையின் மூலம் நிகழலாம், ஆனால் அதற்கு பாபா தான் பொறுப்பு என்று அர்த்தம் இல்லை. நான் ஆதிகாலத்தவன். யுகம் யுகமாக நான் உங்கள் மத்தியில் வருகிறேன். என்னுடைய முதல் பெரிய அதிசயம் இந்த முழுப் படைப்பாகும், இரண்டாவது அதிசயம் நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது நிகழும். இதற்கிடையில், நான் நிகழ்த்தியதாகக் கூறப்படும் அனைத்து அற்புதங்களும் என்னுடையவை அல்ல.**

துறவிகள், சாது சன்னியாசிகள் பிறரின் உலக ஆசைகளை நிறைவேற்றுவது குறித்து, பாபா, பிற குழுக்களுக்கு வழங்கியதைப் போலவே விரிவான விளக்கங்களை அளித்து, மேலும் கூறியதாவது:

**வணிக இளவரசரிடம்** (ஷா சௌதாகர் - SHAH SAUDAGAR) **எவரேனும் ஊசி ஒன்றை வாங்க அணுகினால், அது கேலிக்குரியதாக இருக்கும், ஏனெனில் அவர் ஒரு பெரிய வியாபாரி. மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வணிகம் செய்வதில்லை. எனவே நீங்கள் ஒரு சில்லறை விற்பனையாளரிடம் செல்ல வேண்டும்.**

**உங்களிடமிருந்து நான் விரும்புவது உங்கள் அன்பு ஒன்றைத்தான்; இதை நான் எப்பொழுதும் சொல்லி வருகிறேன். ஆனால், முதலில் எனது அன்பின் பரிசை நான் உங்களுக்கு வழங்க வேண்டும்; இல்லையெனில், நீங்கள் எப்படி என்னை நேசிக்க முடியும்! என்னை நேசிப்பது வேடிக்கை விளையாட்டு அல்ல. ஆன்மீகப் பாதை மற்றும் அதன் முதல் படி குறித்து பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இறுதியில், ஒருவர் இறை உணர்வுடன் அவருடனான ஐக்கியத்தை அடையப்பெற, யுகம் யுகமாக காலச் சுழற்சிகள் தேவைப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இந்த உலகில், கடவுளின் உண்மையான அன்பர்கள்** (மர்த்-இ-குதா - MARD-E-KHUDA) **உள்ளனர். அவர்கள் உண்மையில் அன்பிற்குரியவரின் கால் தூசியாக மாறியவர்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒரு லட்சம் அன்பர்களில்**

ஒருவர் மட்டுமே, பல கால சுழற்சிக்குப் பின்னர், இறைநிலையை எய்துகிறார்.

ஆரத்தி, பூஜை, மாலை அணிவித்தல் அல்லது பிற பாரம்பரிய வழிபாட்டு முறைகளால் அன்பை உருவாக்க முடியாது. ஹஃபீஸ் கூறுகிறார்:

"சடங்கு, சம்பிரதாயங்கள், முறைசார்ந்த பொது நிகழ்ச்சிகள் மூலம் அன்பை உருவாக்க முடியாது.

அப்படிப்பட்ட எதுவும் அன்பை உருவாக்குவதில்லை. இதை அன்பின் பரிசாக அடையப்பெற வேண்டும்."

அன்பின் பரிசு என்றால் என்ன? எனது யதார்த்தத்தின், உண்மைப்பொருளின் ஒரு சிறு பாகத்தை உங்களுக்கு அருளுவதில் நான் மகிழ்ச்சி அடையவேண்டும். அது உங்களில் அன்பின் நெருப்பைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யும். வினூ, ஒரு பெண்ணை இதுவரை பார்த்ததில்லை என்று வைத்துக்கொள்வோம், இருப்பினும் அவர் பெண்கள், காதல் மற்றும் பலவற்றைப் பற்றி படித்திருக்கிறார். அவர் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டார், ஆனால் பார்க்கவில்லை. தற்செயலாக ஓர் அழகான பெண், நேருக்கு நேர் வந்தால், அவரது நிலை என்னவாகும்? அவர் அழகைத் தழுவிக்கொள்ள ஆசைப்படுகிறார், ஏங்குகிறார்; அவருடைய ஆசை நிறைவேறாமல் இருக்கும் வரை, அது அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

கைக்கோபாத்தின் உயர்ந்த அனுபவங்களைப் பற்றி பாபா மராட்டி குழுவிடம் எடுத்துரைத்தார்:

கைக்கோபாத் என்னை நேசிப்பது இயற்கையானது, ஏனெனில் அவருக்கு சில அனுபவங்கள் உள்ளன, நான் எனது கடைக்கண் பார்வையைப் பரிசாக வழங்கினாலொழிய, என்னை நேசிக்க வேண்டும் என்று நான் உங்களிடம் அவ்வப்போது கூறிக்கொண்டிருந்தாலும், அந்த அன்பை உங்களால் அடையப்பெற முடியாது. இதையெல்லாம் நான் திரும்பத் திரும்ப, காலங்காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்த வரத்தை நான் உங்களுக்கு வழங்கினாலொழிய, உங்களால் என்னை நேசிக்க முடியாது.

அன்பை விட மேலானது கீழ்ப்படிதல்; அந்த இரண்டையும் விட மிகச் சிறந்தது சரணடைதல்; அதாவது உடல், மனம், ஆன்மா அனைத்தையும் குருநாதரின் பாதங்களில் முழுமையாக அர்ப்பணிப்பது. இந்த விஷயத்தில் எழுதப்பட்ட புத்தகத் தொகுப்புகள் பல உள்ளன, ஆனால் நான் விரும்பியபடி எவரும் என்னிடம் சரணடையவில்லை. நீங்கள் அனைத்தையும் அர்ப்பணிக்கிறீர்கள், ஆனால் உங்கள் மனதின் மீது உங்களுக்கு கட்டுப்பாடு இல்லாததால், நீங்கள் சரணடைய முடியாது. உங்கள் மனம் சரணடைந்த அடுத்த கணமே இந்த முழு நாடகமும் மறைந்து விடும்!

அன்பு, கீழ்ப்படிதல், சரணடைதல் இவற்றிற்கு இடையேயான வேறுபாடு என்னவென்றால், அன்பு, அன்பானவரின் விருப்பத்தை நாடுகிறது;

கீழ்ப்படிதல், அன்பானவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறது; அதே வேளையில் சரணடைதல் அன்பானவரின் விருப்பத்திற்கு அடிபணிகிறது. அன்பு என்பது மனிதனுக்கு கடவுள் கொடுத்த பரிசு; கீழ்ப்படிதல் சத்குரு மனிதனுக்கு அளித்த பரிசு; சரணாகதி என்பது சத்குருவிற்கு மனிதன் வழங்கும் பரிசு.

இப்போது நாம் அத்தகைய உயர்ந்த விஷயங்களைப் பற்றி பேசுகிறோம். இந்த உயர்ந்த விஷயங்களையெல்லாம் நான் உங்களுக்கு விளக்குகிறேன், ஆனால் இவை அனைத்தும் மேலோட்டமானவை. ஏன்? ஏனெனில் நான் சொல்வதை நானே உங்கள் காதுகளில் கேட்கிறேன். என்னில் நான் என்றென்றும் சுதந்திரமாக இருக்கிறேன்; நான் நித்தியமாக உங்களில் கட்டுண்டிருக்கிறேன். நான் மட்டுமே இருக்கிறேன், 'நீங்கள்' என்று எதுவும் இல்லை. எங்கும் நான் மட்டுமே இருக்கிறேன். உங்களில், நான் கட்டுண்டிருக்கிறேன். நீங்கள் என் முன் அமர்ந்திருக்கிறீர்கள், உங்கள் கண்களால் என்னைப் பார்க்கிறீர்கள், வெட்டவெளியில் வண்ணமயமான வடிவமைப்புகள், பயிர்கள், குன்றுகள் எனப் பலவற்றைப் பார்க்கிறீர்கள். நீங்கள் அனைவரும் கனவு காண்கிறீர்கள் என்று நான் சொல்கிறேன். ஆனால் நீங்கள் அதை நம்பவில்லை!

ஸரோஷ் இரவில் தூங்கச் செல்லும் வேளையில், நான் உங்களுக்குச் சொல்லும் அனைத்து விஷயங்களைப் பற்றியும் கனவு காண்கிறார் என்று வைத்துக்கொள்வோம். ஆனால், இது கனவு என்று நான் அவரது கனவில் சொன்னாலும், அவரால் அதை நம்ப முடியாமல் நிஜம் என்று எடுத்துக்கொள்கிறார்! அவர் விழித்தெழுந்ததும், உண்மையில் அது ஒரு கனவு என்று தானாகவே தெரியும். இதேபோல், நீங்கள் அனைவரும் இப்போது கனவு காண்கிறீர்கள் - ஒரு நீண்ட, உலகு சார்ந்த கனவு. காலங்காலமாக, நீங்கள் இந்தக் கனவைக் கனவாகவே காண்கிறீர்கள்; அதில், நீங்கள் எண்ணற்ற பிறவிகள், குடும்பங்கள் மற்றும் இறப்புகளுக்கு ஆளாகிறீர்கள். ஆனால் நீங்கள் இந்தக் கனவை நிஜம் என்று எடுத்துக்கொள்கிறீர்கள்! இந்தக் கனவிலிருந்து நீங்கள் விழித்தெழும் போது, அதாவது, நீங்கள் கடவுளை உணரும்போது, நீங்கள் எப்போதுமே கனவு காண்கிறீர்கள் என்பதையும், இப்போது நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் உண்மை என்பதையும் தானாகவே அறிந்துகொள்வீர்கள்.

மொத்தத்தில், இதுவரை 93 விஷயங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன. நாம் சில விஷயங்களைத் தவிர்ப்போம். நீங்கள் எனது நெருங்கிய சகவாசத்தை அனுபவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தத் தலைவலியை இன்றே முடித்துவிட்டு, நாளையிலிருந்து சுதந்திரமாக இருப்போம். எண்ணற்ற விஷயங்கள் இருந்தாலும், இறுதியில் அனைத்தும் பூஜ்ஜியம். நான் ஒருவனே உண்மைப்பொருள், நீங்கள் என்னை நேசித்தால் மட்டுமே என்னைக் கண்டுகொள்வீர்கள். இந்த நிலை மனதின் எல்லைக்கும், புத்திக்கும் அப்பாற்பட்டது. இந்த உண்மையை நான் வெவ்வேறு வழிகளில்

**உங்களுக்கு விளக்க முயற்சிக்கிறேன், ஆனால் அதனால் எந்த பயனும் இல்லை. நீங்கள் என்னை நேசிக்காத வரை, என்னை ஒருபோதும் கண்டுகொள்ள மாட்டீர்கள். என்னை எப்படி நேசிப்பது? அதைப் பற்றி நாம் பார்ப்போம். யாருக்கு என்னை நேசிக்கும் அளவுக்கு துணிச்சல் உள்ளது என்று பார்ப்போம். இதே விஷயங்களை குஜராத்தி, தெலுங்கு மற்றும் ஹிந்தி குழுக்களுக்கு விளக்கியுள்ளேன்; இந்தக் குழுவிலிருந்து யார் என்னிடமிருந்து இந்தப் பரிசைப் பெற முன்வருகிறார்கள் என்பதை இப்போது பார்ப்போம்.**

பாபா சூரியனை உதாரணம் காட்டினார், அதன் கதிர்கள் எங்கும் விழுகின்றன, ஆனால், அறையை மூடிக்கொண்டு அதன் உள்ளே இருப்பவர் சூரியனின் கதிர்களால் பயனடைவதில்லை. அதேபோல, மனக் குடையின் கீழ் தங்களைத் தாங்களே பாதுகாப்பாக வைத்துக்கொள்பவர்கள், எப்போதும் இருந்துகொண்டிருக்கும் பாபாவின் அருள் மழையை அடையப் பெறுவதில்லை.

பின்னர் அவர் கூறினார்: **எனது உண்மை நிலையை பாபாஜான் எவ்வாறு எனக்கு உணர்த்தினார், அதை அடையப்பெற்றதும் நான் எப்படி உணர்ந்தேன், உபாஸனி மஹாராஜ் என்னை எப்படி சாதாரண உலக உணர்வுக்குக் கொண்டுவந்தார் - இவற்றையெல்லாம் நீங்கள் கேட்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.**

**ஸாக்கோரியின் யஷ்வந்த் ராவ், (ஷாந்தாராம்) டிப்னிஸ், நஸர்வான் பரூச்சா ஆகியோரைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். கோதாவரி மாய் ஸாக்கோரியில் இருக்கிறார். அவருக்கு இருக்கும் இதயம் உலகில் எவருக்கும் இல்லை! அவருடைய இதயத் தூய்மைக்கு நிகர் வேறு எவரும் இல்லை. இன்னும், இறை-உணர்தல் என்பது வேறு விஷயம். நான் அவரது இதயத்தின் தரத்தைப் பற்றி பேசுகிறேன். குஜராத்தி குழு இங்கே இருந்தபோது, கோதாவரி மெஹராபாத்திற்கு வந்திருந்தார். நான் கிருஷ்ணனாக இருந்தபோது அவர் யஷோதா** (கிருஷ்ணனின் வளர்ப்புத் தாய்) **என்று அவரிடம் கூறினேன். சகவாச நிகழ்ச்சிகளுக்குப் பிறகு நான் ஸாக்கோரிக்குச் சென்று சில நாட்கள் அங்கே தங்குவேன், ஆனால் அவரே எனது உணவைத் தயார் செய்ய வேண்டும், அதனால் நான் எனது முழுமையான ஓய்வை அனுபவிக்கலாம் என்றும் அவரிடம் கூறினேன். நான் இவ்வாறு கூறியதைக் கேட்டு, அவர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். ஆனால் நான் அங்கு செல்ல விரும்பிய இவ்வேளையில், அவர் தனது நிகழ்ச்சிக்காக சூரத் சென்றிருக்கிறார்.**

**ஜனவரி மாதத்தில் குறைந்தது ஏழு நாட்களுக்கு நான் ஸாக்கோரிக்கு வருவதானால் மகிழ்ச்சியாக இருக்கும் என்று கோதாவரி, யஷ்வந்த் ராவ் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். ஏற்கனவே திட்டமிட்டதற்கு இணங்க, எனக்கு சேவை செய்ய இயலாமல் போனதற்கு அவர் வருத்தம் தெரிவித்திருந்தார்; ஆனால், அவர் பாபாவின் தாயாக இருப்பதால், குழந்தையாகிய பாபா, தாய் சொல்வதைக் கேட்டு அவரை**

**மகிழ்விக்க வேண்டும் என்று கூறியிருந்தார்! அவருடைய கடிதத்தை அடையப்பெற்றதில் நான் மகிழ்ச்சியடைந்தேன், ஆனால் ஜனவரியில் எனக்கு நேரம் இராது, ஏனெனில் நான் வெவ்வேறு இடங்களில் பெண்மணிகளுக்கு எனது சகவாசத்தை வழங்க உறுதியளித்துள்ளேன். ஆனால் கோதாவரியின் கடிதம் என்னை சிந்தனைக்குள் ஆழ்த்தியது: 'நான் பெண்மணிகளுக்கு சகவாசம் வழங்குவதா அல்லது யஷோதாவின் சகவாசத்தில் இருப்பதா?'**

பாபா, விஷ்ணுவிடம் கோதாவரியின் கடிதத்தை மராட்டியில் படிக்கச் சொன்னார், அவர் அதைச் செய்தவுடன், பாபா தொடர்ந்து கூறினார்:

**கோதாவரி மாய்க்கு இருக்கும் இதயம், உலகில் எவருக்கும் இல்லை என்று நான் ஏன் சொன்னேன்? முதலாவதாக, அவரிடம் அகந்தையின் ஒரு சுவடு கூட இல்லை. என்னைத் தவிர வேறு எவருக்கும் இது தெரியாது, அகந்தை இல்லாதது ஒரு நகைச்சுவையல்ல. தலை முதல் கால் வரை அவர் அன்பால் நிறைந்தவர். இதுவும் நகைச்சுவையல்ல!**

**மஹாராஜ் பரிபூரணமானவர். கோதாவரியுடனான அவரது கடந்தகால தொடர்பு குறித்து அவருக்குத் தெரியும். அது நிகழ்கால தொடர்பால் நிகழ்ந்தது அல்ல; கடந்த கால இணைப்பு. நான் சொல்வது உண்மை; நான் கிருஷ்ணனாக இருந்தபோது அவர் யஷோதாவாக இருந்தார். 'இப்போது, ஸாக்கோரிக்கு செல்வதா அல்லது இந்தியாவின் பல்வேறு இடங்களில் வாழும் பெண் அன்பர்களுக்கு சகவாசம் வழங்குவதா' என்ற இக்கட்டான நிலையில் நான் இருக்கிறேன். நான் எவரையும் பார்க்காமல் ஒரு வருடம் ஏகாந்தவாசம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதால் அவர்கள் சகவாசத்தில் ஆர்வமாக உள்ளனர்.**

யஷ்வந்த் ராவிடம் பாபா குறிப்பிட்டார், "**தத்தாஜி** (TATAJI, கோதாவரியின் புனைப்பெயர்) **சூரத்திலிருந்து திரும்பியதும், நான் ஸாக்கோரியில் இரண்டு நாட்கள் தங்குவேன், நான் தேதிகளை நிர்ணயிக்கிறேன்; அவர் தயார் செய்த உணவை உண்ணுவதில் மகிழ்ச்சி அடைவேன் என்று எழுதுங்கள்.**"

பாபாவை நாக்பூருக்கு அழைத்துச் சென்று, அங்கு வாழும் பெண் அன்பர்களுக்கு சகவாசம் வழங்க டாக்டர் தேஷ்முக் ஆர்வமாக இருந்தார். ஒரு மாதமாக அவர் மெஹராபாத்தில் இருந்ததால், இதர குழுக்களுடன் என்ன கூறப்பட்டது என்பது அவருக்குத் தெரியும்.

பாபா, தேஷ்முக் மற்றும் சகவாச குழுவிற்கு இவ்வாறு தெரிவித்தார்:

**காலங்காலமாக வாக்குறுதிகளை வழங்குவதை நான் வழக்கமாக கொண்டிருக்கிறேன், ஆனால் நான் அவற்றை மறந்து விடுகிறேன். இருந்தும், இது வரை, நான் ஒரு வாக்குறுதியையும் மீறவில்லை! எனவே தேஷ்முக், நாக்பூர் பெண் அன்பர்களுக்கு வழங்கும் சகவாசத்திற்காக தேதி, நேரத்தை நிர்ணயித்து என்னை பிணைக்க வேண்டாம். தேஷ்முக் இங்கு வந்ததிலிருந்தே மண்டலியை, வெறித்தனமாகத் துரத்திக்கொண்டிருக்கிறார்!**

**என்னை நாக்பூருக்கு அழைத்துச் சென்று, பெண் அன்பர்களுக்கு சகவாசம் வழங்குவது மட்டுமல்லாமல், நாக்பூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் அனைத்து பேராசிரியர்களையும் சந்திக்க வேண்டும் என்றும் அவர் என்னிடம் அடிக்கடி கூறுகிறார்! நாக்பூர் திட்டத்தை மீண்டும் குறிப்பிட வேண்டாம் என்று அவருக்கு உத்தரவிட்டுள்ளேன். இந்த சகவாசத்திற்குப் பிறகு, நான் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. நேரம் இருந்தால் நாக்பூர் சென்று பெண்மணிகளுக்கு சகவாசம் வழங்குவேன்.**

மதிய உணவுக்காக, பதினொரு மணிக்கு இடைவேளை இருந்தது. மதியம் 1:00 மணி வரை ஓய்வெடுக்குமாறு குழுவிற்கு பாபா ஏற்கனவே அறிவித்திருந்தாலும், மதுசூதனன், பிரதாப் மற்றும் பூனா பஜனை மண்டலியின் இசை நிகழ்ச்சியில் பங்கெடுக்க 12:30 மணிக்கு பாபா அனைவரையும் அழைத்தார். பஜனை நிகழ்ச்சி தொடங்கும் முன், ஜபல்பூரைச் சேர்ந்த ஸுலூ மெஷ்ராம் (SULOO MESHRAM), பாபாவின் முன்னால் ஒரு பாடலைப் பாட அனுமதி கோரினார். பாபா அனுமதித்ததும், அவர் பாட்டு, பேச்சு இரண்டும் இல்லாத ஒருவித சோகமான குரலில் தொடங்கினார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அவரைத் தடுத்து, வேடிக்கையாகக் குறிப்பிட்டார், **“எனக்கு இரவிலோ அல்லது வேறு எந்த நேரத்திலோ தூங்கிவிழும் பழக்கம் இல்லையென்றாலும், உங்கள் ரீங்காரம் எனக்கு நிச்சயமாகத் தூக்கத்தை உண்டாக்கும், மேலும் இங்கிருக்கும் அனைவருக்கும் அது தொற்று நோய் போல பரவும் என்பதால் மண்டபத்தில் ஏற்கனவே கொட்டாவி விடுபவர்கள் மயங்கிவிடுவார்கள், கொட்டாவி விடாதவர்கள் அதைத் தொடங்குவார்கள். நல்லதொரு பாடலை எழுதியிருக்கிறீர்கள்.. நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள்.. ஆனால் நீங்கள் பாடும் போது எனக்கு தூக்கம் வருகிறது என்று நினைக்காதீர்கள்; உங்கள் குரல் என்னை சோம்பலை உணரச் செய்கிறது! நான் ஒரு முறை தூங்கினால், முழுப் பிரபஞ்சமும் தூங்கும்!”**

ருஸ்தம் காக்கா, பாபா விரும்பிக் கேட்கும் ‘கோவர்தன் கிர்தாரி’ (GOVARDHAN GIRDHARI) பாடலைப் பாடினார், மேலும் அவர் பாடிய ஒரு பாடலைத் தொடர்ந்து, பஜனை நிகழ்ச்சி ஆரம்பமானது.

மதியம் 1:00 மணியளவில், பாபா தனது அறைக்குச் சென்று, பூனாவின் ஜெகந்நாத் மஹாராஜை (JAGANNATH MAHARAJ) சந்தித்தார், அவர் மேலும் இரண்டு நபர்களுடன் பாபாவைப் பார்க்க வந்தார். ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் அவர் மண்டபத்திற்குத் திரும்பியபோது, பாபா கூறினார்:

**இப்போது, அனைவரும் உங்கள் கண்களை அகலத் திறந்து கொள்ளுங்கள், தூங்கி விழாதீர்கள்! நீங்கள் தூங்கி விழ நேர்ந்தாலும், உங்கள் செவிகளாவது திறந்திருக்கட்டும். நான் சொல்லப்போவது மிகவும் முக்கியமானது, எதிர்காலத்தில் இத்தகைய வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். நான் எனது பௌதீக உடலைத் துறந்த பின்னர், இந்த இடத்தின்**

தூசியை முத்தமிடுவதற்காக, லட்சக்கணக்கான (நூறாயிரக்கணக்கான) மக்கள் இங்கு வருவார்கள். ஆனால் இப்போது, நான் உடல் ரீதியாக உங்கள் மத்தியில் இருக்கும்போது, இந்த வாய்ப்பை நீங்கள் சிறப்பாகப் பயன்படுத்தி, நான் சொல்வதைக் கேட்க முயற்சி செய்யுங்கள். காலங்காலமாக, நான் அதே விஷயங்களை மீண்டும் சொல்கிறேன். நான் என் உடலைத் துறந்த அடுத்த கணமே, மக்கள் எனக்காகத் தங்கள் உயிரைக் கொடுக்க முன்வருவார்கள். நான் இந்த உடலைத் துறக்கும்போது, லட்சக்கணக்கான மக்கள் வருவார்கள்; நான் எனது பௌதீக உடலில் உங்களிடையே இருக்கும்போது, வெகு சிலரே என்னை நேசிக்கிறார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும், இதுவே நடக்கும்.

நான் வெகுஜன தரிசனத்திற்காக வெளியே செல்லும் வேளையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு செய்தது போல், ஆயிரக்கணக்கானோர் என்னை தரிசனம் செய்ய வருகின்றனர். ஆனால், அதனால் எனக்கு என்ன பயன்? பெரிய அளவிலான மக்கள் கூட்டம் எனக்கு வேண்டாம். நான் உயர்ந்தவன் என்றால் கூட்டம் கூடுவதில் மகத்துவம் இல்லை! எனக்காக உங்களில் சிறிதளவு அன்பு இருந்தால் கூட போதுமானது! அது என்னை மகிழ்விக்கும்.

நான் என்னவாக இருந்தாலும் அது, சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், பாபாஜான், தாஜுதீன் பாபா, நாராயண் மஹாராஜ் ஆகிய ஐந்து பரிபூரண குருநாதர்களால் ஆனவன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அனுபவத்தில், ஐவரும் ஏக இறைவனாக இருந்தாலும், அவர்கள் தங்கள் வழிகளிலும், பழக்கவழக்கங்களிலும், நடத்தையிலும், உடை உடுத்தும் விதத்திலும் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறார்கள்.

இப்போது என் மனதில் தோன்றிய ஒன்றைச் சொல்கிறேன். பல வருடங்களுக்கு முன்பு நான் முதன்முறையாக இங்கிலாந்து சென்றபோது, காந்திஜி என்னுடன் ஒரே கப்பலில் பயணம் செய்தார். அவர் ஒரு நல்ல ஆன்மா, அவரைப் போல் எவரும் இல்லை. யாருடைய இதயமும் அவரைப் போல் அத்தனை அருமையாக இல்லை. கராச்சியின் மேயர் ஜாம்ஷெட் மேத்தா, காந்தி என்னை சந்திக்க வேண்டும் என்று தொலைத்தந்தி அனுப்பி இருந்தார். ஒரு நாள் காந்தி என் அறைக்கு வந்து கதவைத் தட்டினார். அவருடன், அவரது செயலாளர் மஹாதேவ் தேசாய் என்பவரும் இருந்தார். என்னுடன் ருஸ்தம், சாஞ்சி இருவரும் இருந்தனர்.

கதவைத் திறந்து காந்தி உள்ளே நுழைந்ததும், அவர் கூறினார், “பாபா, எனக்கு ஜாம்ஷெட் மேத்தாவிடமிருந்து தொலைத்தந்தி வந்ததால் நான் வந்துள்ளேன், நானாக வந்திருக்க மாட்டேன், நான் உங்களை ஐந்து நிமிடம் பார்த்துவிட்டு செல்கிறேன்.” நான் அவரை அமருமாறு கூறினேன். நான் அப்போது எழுத்துப்பலகையைப் பயன்படுத்தி வந்தேன், அவருடைய முதல் வருகையின் போது, அவர் என்னுடன் மூன்று மணி நேரம் இருந்தார்.

காந்தி, அவரது சிரமங்களைப் பற்றிய கேள்விகளை எழுப்பினார், நான் விளக்கினேன். அவர் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தார். ஒவ்வோர் அரை மணி நேரமும், அறைக்கு வெளியே இருந்த மஹாதேவ், "பாபு, புறப்பட நேரமாகிவிட்டது" என்று அவருக்கு நினைவூட்டினார். மேலும் ஒவ்வொரு முறையும், "சற்று பொறுமையாக இருங்கள்" என்று காந்தி பதிலளித்தார். என்னால் அவர் வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

இந்த முதல் வருகைக்குப் பின்னர், அவர் புறப்பட ஆயத்தமானபோது நான் அவரைத் தழுவினேன். இரண்டாவது நாள், அவர் மறுபடியும் என் அறைக்கு வந்தார். மீண்டும், அவர் நீண்ட நேரம் தங்கினார். மூன்று நாட்கள் தவறாமல் வந்தார். இரண்டாம் நாள், எழுத்துப்பலகை வழியாக பல விஷயங்களை அவரிடம் விளக்கினேன். அவர் ஒரு கட்டத்தில் குறுக்கிட்டு, "பாபா, நீங்கள் பேச வேண்டிய நேரம் இது, உலகம் உங்கள் வார்த்தையைக் கேட்கலாம். நீங்கள் மிகவும் உயர்ந்தவர் என்பதை நான் உள்ளூர உணர்கிறேன். உபாஸனி மஹாராஜைப் பற்றி நான் அவ்வாறு உணரவில்லை" என்று கூறினார்.

ஏன் என்று நான் கேட்டபோது, காந்தி பதிலளித்தார், "நான் அவரிடம் சென்ற வேளையில், அவர் இடுப்பில் ஒரு கோணிப்பையை மட்டுமே உடையாக அணிந்திருந்தார். என்னைப் பார்த்ததும், அவர் அதைக் களைந்து, தன்னை வெளிப்படுத்தி, என்னைக் குறிப்பிட்டு, 'உலகில் எவ்வளவு பெரியவராக, புகழ் பெற்றவராக அவர் இருந்தாலும், அவரோடு எனக்கு ஆக வேண்டியது என்ன?' என்று கூறினார்."

மஹாத்மா காந்தியைப் பற்றி தொடர்ந்து பாபா வெளிப்படுத்தினார்:

நான் மிகவும் உயர்ந்தவர் என்று அவர் உண்மையிலேயே உணர்ந்திருந்தால், அவர் என்னைக் குறித்த மகத்துவத்தின் வலிமையின் அடிப்படையில், மஹாராஜ் ஒரு பரிபூரண குருநாதர் என்று நான் சொன்னபோது, அவர் என்னை நம்ப வேண்டும் என்று நான் காந்தியிடம் கூறினேன். இந்தியாவில் காந்திஜியின் இதயத்தைப் போன்ற இதயம் படைத்தவர் வேறு எவரும் இல்லை. தலை முதல் கால் வரை, அவர் இந்திய தேசத்திற்காக இருந்தார். ஆனால் அவர் கூறினார்: "பாபா, உபாஸனி மஹாராஜ் எப்படி சத்குருவாக இருக்க முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; அவரைப் பற்றி நீங்கள் கூறுவதில் என்னால் ஒருபோதும் திருப்தி அடைய முடியாது."

நான் சொன்னேன்: "நீங்கள் என்னை உயர்ந்தவராகக் கண்டுகொண்டால், நான் திருப்தி அடைகிறேன். ஆனால் நீங்கள் திருப்தி அடைந்தாலும் இல்லாவிட்டாலும், நீங்கள் உயர்ந்தவர் என்று கருதும் ஒருவரை நீங்கள் நம்ப வேண்டும்." அவர் பதிலளிக்காமல், சிறிது நேரம் கழித்து, நான் ஏன் எனது மௌனத்தைக் கலைக்கவில்லை, ஏன் எழுத்துப்பலகையைப் பயன்படுத்துகிறேன் என வினவினார். "உங்கள்

மௌனத்தைக் கலைத்து, நீங்கள் சொல்ல வேண்டியதை உலகுக்குச் சொல்லுங்கள்" என்று அவர் வலியுறுத்தினார்.

மூன்றாம் நாள், "பாபா, நான் உங்களுடன் ஓர் இரவு தங்க விரும்புகிறேன்" என்றார். ருஸ்தத்திடம் என்னை அவரது அறைக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார், அதனால் நான் அவருடன் ஓர் இரவைக் கழிக்க முடியும். அவர் இதயத்தைப் பாருங்கள்! புறப்படுவதற்கு முன்னர், அவர் என்னிடம் கூறினார்: "பாபா, நீங்கள் ஆதிகாலத்தவர் என்று கூறி, உங்கள் மகத்துவத்தை உறுதிப்படுத்துகிறீர்கள்; இருக்கலாம். ஆனால் நீங்கள் ஏன் காதி தொப்பி மற்றும் ஆடை அணியவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்?" நான் சிரித்துக்கொண்டே அவரைத் தழுவி சில வார்த்தைகளில் விளக்கினேன்.

அதற்குப் பிறகு, சாஞ்சி, காந்தியுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார், அவர் அடிக்கடி காந்தியை சந்தித்து வந்தார். அத்தகைய ஒரு சந்திப்பின் போது, காந்தி, சாஞ்சியிடம் அவர் பாபாவைப் போல செய்ய முயற்சிப்பதாகவும், ஒவ்வோர் ஏழாவது நாளிலும் (அவரது மௌன நாட்களின் போது) எழுத்துப்பலகையைப் பயன்படுத்துவதாகவும் கூறினார்.

அதே பயணத்தின் போது, ஷௌகத் அலி எனது அறையைக் கடந்து சென்றவர், காந்தி சென்ற பின்னர், உள்ளே வந்தார். அவர் ருஸ்தத்திடம் எனது கையை முத்தமிட விரும்புவதாகக் கூறினார். பின்னர் அவர் அதைச் செய்து, ஒரு சிறிய நாற்காலியில் அமர முயன்ற போது, அது அவரது எடை தாங்காமல் உடைந்து தரையில் விழுந்தது. நான், ருஸ்தம், சாஞ்சி மூவரும் அவருக்கு உதவ முயன்றோம். இது ஒரு விசித்திரமான காட்சி, பின்னர் அதைப் பற்றி நாங்கள் பேசி நன்றாக சிரித்தோம்.

இப்போது மீண்டும், ஐந்து பரிபூரண குருநாதர்களின் வழிகள், முறைகள், பழக்கவழக்கங்கள் பற்றி: இறை அனுபவத்தில் ஐவரும் ஒன்றாக இருந்தனர், ஆனால் அவர்களின் வழிகள் வேறுபட்டவை என்று நான் உங்களுக்குச் சொன்னேன். எனது வழிகளும் பழக்கவழக்கங்களும் ஐவரின் கலவையாகும். எப்படி என்று சொல்கிறேன். உதாரணத்திற்கு சாய்பாபாவை எடுத்துக்கொள்ளுங்கள். அவர் உயிரைத் துறந்த அந்த நேரத்தில் குஸ்தாஜி அவருடன் இருந்தார். அவர் ஷிர்டியில் தனது ஆசிரமத்தில் தங்கியிருந்தார். அன்று அவரிடம் வெகு சிலரே சென்றனர், இன்று ஷிரிடியில் நாம் காணும் கூட்டம் அன்று இல்லை. அவர் ஒரு புகைக்குழாயை உறிஞ்சி, தன் அருகில் இருப்பவர்களுக்கும் அதை உறிஞ்சக் கொடுத்தார். எவரேனும் அவரை அணுகும் போதெல்லாம், பணம் கேட்டு வாங்கி, அங்கு வாழ்ந்து வந்த பர்ரா பாபா என்ற ஒரு தடித்த நபரிடம் ஒப்படைப்பார். நாக்பூரைச் சேர்ந்த பணக்கார பக்தரான புட்டி ஸாஹேப் (BUTY SAHEB), சாய்பாபாவிடம் சென்றபோது, சாய் அவரிடம் ரூ.1,000 கேட்டதை, புட்டி ஸாஹேப் உடனடியாகக் கொடுத்தார். ஆன்மீகம் பற்றிய பேச்சு எதுவும் இல்லை. சாய்பாபாவின் ஆரத்தி ஒருநாளில் ஐந்து முறை நிகழ்த்தப்பட்டு வந்தது. ஒரு

நாள் மசூதியிலும், மறு நாள் சமாதியிலும், மூன்றாம் நாள் சிறிய குடிசையிலும் தூங்குவது வழக்கம்.

உபாஸனி மஹாராஜுக்கு வெவ்வேறு வழிகள் இருந்தன. சாய்பாபா புகைக்குழலை ஊதிக்கொண்டு மக்களிடம் பணம் கேட்பதை வழக்கமாகக் கொண்டிருந்த வேளையில், உபாஸனி மஹாராஜ் ஒரு சிறிய கோவிலில் அமர்ந்திருந்தார்; மூன்று ஆண்டுகளாக, அவர் ஒரு வாய் உணவைக் கூட சுவைக்கவில்லை. அவரது இருக்கைக்குக் கீழே தேள்கள் குடியிருந்தன, அறை முழுவதும் தூசி நிறைந்திருந்தது. அவர் இயல்பான உணர்வு நிலைக்குத் திரும்பியதும், மக்கள் அவரிடம் செல்லத் தொடங்கினர். அப்போது, பணம் கொடுத்தவர்களை விரட்டி துரத்துவது வழக்கம். ஆனால், பின்னர் அவர் கேட்காமலே எவரேனும் பணம் கொடுத்தால், அதை ஏற்றுக்கொண்டார். நான் அவருடன் இருந்ததால் அவருடைய பழக்கவழக்கங்களை நான் அறிவேன். மக்கள் வழங்கிய பணத்தில் கோயில்கள், கட்டிடங்கள் எழுப்பவே, உபாஸனி நகர் உருவானது. மஹாராஜ் குப்பை குவியல் மீது அமர்ந்திருப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார், அதற்கு முன்னர் அவர் (கழிவறை) துப்புரவு தொழிலாளர்களுடன் தங்கி இருந்தார்.

உபாஸனி நகர் உருவான பின்னர், இந்துக்கள் அங்கு வரத் தொடங்கியதால் இந்து சூழல் உருவானது, (வெவ்வேறு சாதியை சார்ந்தவர்களுக்கு) தனித்தனி சமையலறைகள் போன்றவை அமைக்கப்பட்டன. ஆனால் உள்ளளவில் ஒற்றுமை நிலவியது, அதை நான் மஹாராஜிடம் உணர்ந்தேன். இரவும் பகலும், நான் அவருடன், பல நாட்கள், பல மாதங்கள் ஒன்றாக இருந்தேன். அந்த நேரத்தில், மஹாராஜுடன் எனக்கு இருந்த நெருங்கிய தொடர்பைக் கண்டு, சில இந்துக்கள் பொறாமை கொண்டனர். துர்காபாயும் அப்போது அங்கு இருந்தார்; அவர் மஹாராஜையும் என்னையும் நேசித்தார். ஒருமுறை நான் மஹாராஜுடன் இருந்தபோது அவர், தனது மண்டலி அனைவரையும் அழைத்து அவர்களிடம், "நான் எனது 'பொக்கிஷத்தையும்' அதன் 'திறவுகோலை'யும் மேர்வானிடம் ஒப்படைத்துவிட்டேன். இத்தனை ஆண்டுகளாக நீங்கள் என்னைப் பின்பற்றி வருகிறீர்கள். இப்போது மேர்வானை நேசித்து அவரைப் பின்பற்றுங்கள். எனது பொக்கிஷத்தின் கருவூலம் காலியாக உள்ளது" என்றார்.

நீங்கள் அனைவரும் இதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இதன் மூலம் நீங்கள் பரிபூரண குருநாதர்களின் வழிகளையும் முறைகளையும் புரிந்து கொள்ள முடியும். இந்த ஐந்து குருநாதர்களும் இப்போது இங்கேயே இருக்கிறார்கள், என்னை விட்டுச் செல்லவில்லை. அவர்கள் எப்படி மறைந்து போக முடியும்? அவர்கள் ஐவரின் மூலமாகவும் நான் பேசுவதைப் போல, நான் இப்போது உங்களுக்குச் சொல்வதை அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கே இருக்கிறார்கள்.

ஓர் இரவு நான் மஹாராஜுடன் ஒரு சிறிய எண்ணெய் விளக்கு இருந்த அறையில் இருந்தேன். திடீரென மஹாராஜ் என்னை நோக்கி, “மேர்வான், நீயே அவதார புருஷர்!” என்றார்.

பின்னர், ஸாக்கோரியின் சூழ்நிலை முற்றிலும் மாறியது. இந்துக்கள் சாதி வேறுபாடுகளை உருவாக்கினர். துர்காபாய் வேறு இடத்தில் தங்கத் தொடங்கினார். மஹாராஜ் அவ்வப்போது எனக்கு எதிராக பேச ஆரம்பித்தார். சிக்கல்கள் உருவாயின, மேலும் இந்துக்களின் ஆதிக்கம் வலுவாகி அவர்களின் செல்வாக்கு பெருகியது. அவரது உடலைக் கைவிடுவதற்கு முன்பு, மஹாராஜ் என்னை சந்தித்தார், நாங்கள் இருவரும் ஒன்றாக இருந்தோம். ஆனால் அது வேறு விஷயம்.

இப்போது பாபாஜானைப் பற்றி சில வார்த்தைகளில் விளக்குகிறேன் கேளுங்கள்.

அவர் பேரரசர். ஒரு வேப்ப மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார். அவர் எனது நெற்றியில் முத்தமிட்டபோது, நான் ஆதிகாலத்தவன் என்ற அசல் அனுபவம் எனக்கு இருந்தது. சாய்பாபா பணம் வசூலித்தார். உபாஸனி மஹாராஜ், ஒருவர் சுய விருப்பத்துடன் அதை வழங்கும்போது ஏற்றுக்கொண்டார். பாபாஜான் அதைக் கேட்டதே இல்லை. எவரேனும் வழங்க முன்வந்தால் விரட்டித் துரத்தினார்! அனைத்து மதத்தினரும் - இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஸொராஸ்ட்ரியர்கள் - அவரை நம்பினர்.

இப்போது நாராயண் மஹாராஜைப் பற்றி: அவர் உயரம் குறைந்தவராக இருந்தார்; விலையுயர்ந்த ரத்தினங்களை அணிந்து, பட்டு உடுத்தினார். நேரடியாகப் பணம் கேட்காவிடிலும், மக்கள் புரிந்துகொண்டு அவருக்குக் கொடுக்கும் வகையில் மறைமுகமாகக் கேட்பது வழக்கம். அவருக்கு அருகில் இந்து சமய சூழல் நிலவியது. சாய்பாபாவிற்கு வழக்கமான ஆசிரமம் இல்லை. பாபாஜானின் ஆசிரமம் வேப்ப மரத்தின் கீழ் அவரது இருக்கையாக இருந்தது, மேலும் நாராயண் மஹாராஜ், கேட்காவ்ம் கிராமத்தில் அவருடன் இந்து மக்கள் கூட்டத்தைக் கொண்டிருந்தார்.

இப்போது தாஜுதீன் பாபாவைப் பற்றி: தாஜுதீன் யாரென்று உங்களுக்குத் தெரியாது; எனக்குத் தெரியும். அவர் தாஜ் (மகுடம்)! பணத்தில் அவருக்கு விருப்பமில்லை, எவரேனும் கொடுத்தாலும் பொருட்படுத்துவதில்லை. அதைத் தன்னுடன் இருப்பவர்களுக்காக செலவிடுவது வழக்கம். இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் அனைவரும் அவரை வணங்கினர்; இன்றும், அனைத்து மத சூழலும் அங்கு நிலவுகிறது.

ஐந்து சத்குருக்களின் காரணமாக நான் இங்கு வந்துள்ளேன். நான் விவரிக்கும் ஐவரின் எல்லா பண்புகளும் என்னுள் உள்ளன. அவர்கள் மூன்று விஷயங்களைச் சார்ந்திருக்கிறார்கள் - பணம், ஆசிரமம் மற்றும்

அவர்களைச் சுற்றியுள்ள வகுப்புவாத உணர்வு. நான் மூன்றையும் ஒட்டுமொத்தமாகக் கையாளுகிறேன்.

பாபா, திடீரென அங்கிருந்த முழுக் குழுவையும் எழுந்து நிற்கச் சொல்லி, மீண்டும் அமருமாறு அறிவுறுத்தி விளக்கினார்: "நான் இரண்டு காரணங்களுக்காக இதை உங்களிடம் செய்யச் சொன்னேன். முதலாவதாக, ஐந்து குருநாதர்களுக்கு மரியாதை செலுத்துவது; இரண்டாவதாக, உங்களில் சிலர் எழுந்து நிற்பதன் மூலம் கால்களை நீட்டி இளைப்பாற ஒரு வாய்ப்பை அளிப்பது!"

அதைத் தொடர்ந்து பாபா அவரைப் பற்றி கூறினார்:

ஆரம்ப காலத்தில், பூனாவின் புறநகர்ப் பகுதியில் ஒரு சிறிய குடிசையில் தங்கியிருந்தேன். பின்னர் அங்கிருந்து, எனது இந்து, முஸ்லிம், பார்சி அன்பர்கள் 40 பேருடன் நடைப்பயணமாக மும்பைக்குப் புறப்பட்டேன். என்னிடம் பணம் எதுவும் இல்லாததை ருஸ்தத்திற்குத் தெரிவித்து, அவர் எனக்கு சிறிதளவு பணம் கடன் கொடுத்தால், அவர் பலன் அடைவார் என்று கூறினேன். நான் பணம் கேட்கும்போதெல்லாம், எல்லா விஷயங்களையும் விளக்கிக் கூறி, பின்னர் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.

மும்பையில், நாங்கள் தாதரில் மன்ஸில்-எ-மீம் என்ற பழைய கட்டிடத்தில் இருப்பிடத்தை அமைத்தோம். சதாஷிவ், புவாஸாஹேப், மாஸாஜி, ருஸ்தம், ஆதி, பெண்டு, ஸரோஷ், குஸ்தாஜி, விஷ்ணு இன்னும் சில மண்டலி என்னுடன் இருந்தனர்.

நான் மாஸாஜியிடம் நெய்யில் சமைத்த நல்ல உணவை தயார் செய்யுமாறு கேட்டிருந்தேன், அதனால் மண்டலி மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும். என்ன நடந்தாலும் பரிமாறப்பட்ட அனைத்தையும் உண்ண வேண்டும் என்று அனைவருக்கும் எனது அறிவுறுத்தல்கள் இருந்தன. எனது மனநிலை தொடர்ந்து மாறிக்கொண்டே இருந்தது. நான் சீற்றத்தில் அனைவரையும் அறைவதும், நல்ல மனநிலையில் இருக்கும்போது, அவர்களை அணைப்பதும் அவ்வப்போது நிகழ்ந்தது. ஒரு நாள் மண்டலியிடம் எனது பின் முதுகில் அழுத்தி தள்ளுமாறு அறிவுறுத்தினேன். 40 பேரும் தங்கள் முழு பலத்தையும் ஒன்று சேர்த்து முயன்றனர், ஆனால் அவர்களால் என்னை ஓர் அங்குலம் கூட அசைக்க முடியவில்லை.

அங்கு இருந்த டாக்டர் கனி, என்னை மகிழ்ச்சியாக வைத்திருந்தார். ஒரு நாள் அவர் கூறினார்: "பாபா, எங்களுக்கு நெய் வேண்டாம். சட்னி மற்றும் ரொட்டியில் திருப்தி அடைவோம், உங்கள் மனநிலை மாறுவது எங்களுக்கு ஆபத்தான அறிகுறியாகும்!"

காலப்போக்கில், அனைத்து பணமும் செலவழிக்கப்பட்டது. முன்ஷி ரஹீம் என்னை மிகவும் நேசித்தார். அவர் மன்ஸில்-எ-மீமுக்கு வருவது வழக்கம். ஒருமுறை, அவர் வந்தபோது, கனவில் அவர் என்னைக் கண்டதாகவும், அவர் மறந்துவிட்ட ஒன்றைப் பற்றி நான் அவருக்கு

அறிவுறுத்தியதாகவும் கூறினார். அவர் மறந்துவிட்டாலும், நான் அவருக்கு நினைவூட்டுவேன் என்று அவரிடம் கூறினேன். எனக்குப் பணம் தேவை என்றேன். அவர் அதைக் கொண்டு வந்தார், சிறிது நேரத்தில் அதுவும் செலவழிக்கப்பட்டது.

எனவே நாங்கள் மன்ஸில்-ஏ-மீமிலிருந்து புறப்பட்டு அரன்காவ்ம் கிராமத்திற்கு (மெஹராபாத்) வந்தோம். அந்தக் காலத்தில் இங்கு ஒன்றும் இல்லை, மரத்தின் கீழ் தங்கியிருந்தோம். அதற்குப் பிறகு, கோரிக்கைகள் விடுத்ததன் பேரில், மறைமுக குறிப்புகள் மூலமாகவும், நன்கொடைகள் மூலமாகவும், பணம் வரத் தொடங்கியது. சில காலத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம், பிரேம் ஆசிரமம், மருத்துவமனை போன்ற பலவற்றை நிறுவியதன் மூலம் ஒரு குடியிருப்பு உருவானது. நான் மாவு அரைப்பதையும், தொழுநோயாளிகளை நீராட்டுவதையும், ஹரிஜன குழந்தைகளின் ஆடைகளைத் துவைப்பதையும், அவர்களின் கழிவறைகளை சுத்தம் செய்வதையும் அன்றாட வழக்கமாகக் கொண்டேன். சாதி, மத வேறுபாடுகள் எதுவும் இல்லை, அனைவரும் எனக்கு சமம்.

பின்னர் அனைத்து பண வருகையும் தானாகவே நின்றதால், எல்லா நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டன. பணம் மீண்டும் வரத் தொடங்கியது, நாங்கள் டோக்கா கிராமத்திற்கு இடம்பெயர்ந்தோம். அங்கேயும் ஒரு பள்ளிக்கூடம் மற்றும் பிரேம் ஆசிரமம் தொடர்ந்தது, ஆனால் விரைவில் பணம் வருவது நின்றுவிடவே, அனைத்தும் மறுபடியும் மூடப்பட்டது. அப்போது நான் பாபாஜானைப் போல் இருந்தேன்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, நான் மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்தேன். அங்கு வாழும் என் அன்பர்கள், எனது பணியில் எனக்கு உதவினர். மேற்கத்திய அன்பர்கள் என்னை மிகவும் நேசிக்கின்றனர். அவர்கள் எனது பெயரில் 500 ஏக்கர் நிலத்தை (மர்டில் பீச் மையம்) கையகப்படுத்தி, எனக்கென தனிக் குடியிருப்புகளை அமைத்து, எனது பெயரில் சிறந்த கட்டிடங்களை எழுப்பினர். இப்படி, பணம் வந்த வண்ணம் இருந்ததால் மெஹராபாத், மெஹராஸாத், பெல்காவ்ம் உள்ளிட்ட பல இடங்களில் எனது பெயரில் சில கட்டிடங்கள் உருவாயின. ஆனால் இவை அனைத்தும் எனது மனநிலையைப் பொறுத்தது, ஏனெனில் நான் ஐந்து பரிபூரண குருநாதர்களின் பண்புகளைக் கொண்டுள்ளேன்.

ஒரு நாள் (1949இல்), நான் இங்கே எனது வசதிமிக்க அன்பர்களின் கூட்டத்தைக் கூட்டி, எனது பெயரில் எதுவும் வைக்கக் கூடாது என்று அவர்களுக்குத் தெரிவித்தேன். மெஹராபாத், மெஹர்ஜியின் பெயரிலும், மெஹராஸாத், நரிமனின் பெயரிலும் மாற்றப்பட்டது. அமெரிக்காவில் இருந்த சொத்துக்களுக்காக தனியுரிமைப் பத்திரம் என்ற முறையில் ஒரு சாசனம் வரையப்பட்டு, அது கடவுளின் அன்பர்களின் பெயர்களில் வைக்கப்பட்டது. என்னைச் சார்ந்து இருப்பவர்களுக்கு சிறிது தொகைகளை

**வழங்கிவிட்டு, நான் 'புது வாழ்வு'க்குள் நுழைந்தேன். நான் யாசித்து வாழ்ந்து வந்த எனது புது வாழ்வைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.**

**ஆரம்ப காலத்திலிருந்தே, இந்த மாயா எனது கழுத்தில் உங்கள் அனைவருடனும் தொங்கிக்கொண்டிருக்கிறது, அந்தக் குறிப்பிட்ட காரணத்திற்காக நான் உங்கள் மத்தியில் மீண்டும் மீண்டும் வர வேண்டியதாகிறது. எனவே, எனது புது வாழ்வில் நான் வெளியே சென்றாலும், உங்கள் அனைவருக்காகவும் நான் மீண்டும் வர வேண்டியிருந்தது. அப்போது என்னைச் சார்ந்திருந்தவர்கள், மண்டலி, அனைவரும் என் அருகில் வந்து என்னுடன் தங்கத் தொடங்கினர். பணம் இருக்கும் போது, நான் அதை அனைவருக்கும் தேவைக்கேற்ப வழங்கினேன்.**

**இதையெல்லாம் கேட்ட பின்பு, யார் என்னை அவதார புருஷர், உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்று அழைக்கிறார்கள் பார்ப்போம்! உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர், இரண்டும் நானே!**

பாபா விஷ்ணுவை அழைத்து, ஒவ்வொரு மாதமும் தேவைப்படும் தொகையைக் குறித்து அவரிடம் கேட்டார். செலவுக்கு மாதம் ரூ.10,000 தேவை என்றார் விஷ்ணு.

பாபா தொடர்ந்தார்:

**நான் மௌனம் கடைப்பிடித்த நாளிலிருந்து, நான் பணத்தைத் தொட்டதில்லை. மஸ்துகள் மற்றும் ஏழைகளுக்குக் கொடுக்கும்போது மட்டுமே, அவர்களை வணங்கி, பணத்தை வழங்குகிறேன். விஷ்ணு பொருளாளர்; பணம் அவரிடம் சென்று அவர் கைவழியாகச் செல்கிறது. நான் சத்தாராவில் ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்னர், ஒரு நாள் விஷ்ணு என்னிடம் வந்து, "பாபா, நீங்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறீர்கள், என்னிடம் பணமில்லை. எதிர்வரும் மாதத்திற்கான செலவுகள் என்னகுவாம்?" என்று கேள்வி எழுப்பினார்.**

**நான் அவரிடம், "கவலைப்படாதீர்கள். பணம் வந்து சேரும். நான் எனது ஏகாந்தவாசத்தை நிறைவு செய்யட்டும்; பிறகு பார்ப்போம்" என்று கூறினேன்.**

**நான் மூன்று மாதங்கள் ஏகாந்தவாசம் மேற்கொண்டேன், அது முடிந்ததும் விஷ்ணு மீண்டும் என்னிடம் பணத்திற்காக வந்தார். அப்போது நான் அவரிடம், "அதை மறந்துவிடுங்கள். என்னிடம் ஒரு திட்டம் இருக்கிறது. நான் ஒரு வருடத்திற்கு, கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறேன். ஆனால் அதற்கு முன்பு, நான் என் அன்பர்களுக்கு, நான்கு குழுக்களாக, ஒவ்வொரு குழுவிலும் 50 பேரை உள்ளடக்கிய எனது சகவாசத்தை வழங்கப் போகிறேன்" என்று கூறினேன்.**

**பெண்டுவை அழைத்து, சகவாசத்திற்குத் தேவைப்படும் தோராயமான செலவுகள் குறித்து விசாரித்தேன். ரூ.30,000 என்றார். நான் அவரிடம், "நம்மிடம் பணம் இல்லை. அடுத்த மாத செலவுக்கும் பணம் தேவை, உங்களுக்கு வேறு ரூ.30,000 வேண்டும்!" என்றேன்.**

பெண்டு பதிலளித்தார், "எல்லோரையும் நல்ல உணவுடன், சௌகரியமாக வைத்திருக்க விரும்புகிறீர்கள். பணம் இல்லாமல் இது எப்படி சாத்தியம்?"

எனவே வேண்டிய தொகையை சேகரிக்க, 20 பேரை தேர்வு செய்து, தலா ரூ.1,500 அனுப்புமாறு கடிதம் அனுப்பப்பட்டது. சிலர் உடனடியாகப் பணத்தை அனுப்பினர், சிலரால் வழங்க முடியவில்லை, சிலர் தங்களால் இயன்றதைக் கொடுத்தனர்.

மேலும் பத்து நபர்களுக்கு வேறொரு கடிதம் அனுப்பப்பட்டது, ஆனால் இடையில் ஒரு விசித்திரமான சம்பவம் நடந்தது. ஆந்திராவைச் சேர்ந்த டாக்டர் கனகதண்டி சூர்யநாராயணா, தேவையான மொத்தத் தொகையை வழங்க விருப்பம் தெரிவித்து, தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார். ரூ.15,000 பற்றாக்குறையாக இருந்ததால், அதை அனுப்ப அவருக்குத் தகவல் தரப்பட்டது. இதற்கிடையில் ரூ.25000 வசூல் செய்யப்பட்டு ரூ.5000 மட்டுமே பற்றாக்குறை என்ற நிலை ஏற்பட்டது. அப்போது பணப் பற்றாக்குறை ரூ. 5000 மட்டுமே என்பதை அவருக்குத் தெரிவித்தாலும், எந்த நிபந்தனையும் இன்றி மேலும் ரூ.10,000 அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டது. டாக்டர் கனகதண்டி உடனடியாக ரூ.15,000 அனுப்பி வைத்தார். எனவே அந்தத் தொகையை, பாபாவை சார்ந்திருப்பவர்களின் பயன்பாட்டுக்காக ஒதுக்கி வைக்குமாறு விஷ்ணுவிடம் அறிவுறுத்தினேன்.

இந்த உலகத்தின் மதிப்பற்ற தன்மையை உங்கள் மனதில் பதிய வைக்க விரும்புகிறேன். இது அனைத்தும் பூஜ்ஜியம் - அழகு, பணம், பதவி எல்லாமே பூஜ்ஜியம்.

எனவே நான் பெண்டுவிடம் இருக்கும் ரூ.30000த்திலிருந்து ரூ.10,000 ஏழைகளுக்கான நிகழ்ச்சிக்காக ஒதுக்கி வைக்குமாறு கூறினேன். ஆனால், சகவாசத்தில் கலந்துகொள்ளும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், எனக்கு ரூ.2,000 மட்டுமே அவரால் தர முடிந்தது. ஏழைகளின் நிகழ்ச்சிக்காக, ஒவ்வொரு குழுவும் தங்கியிருந்த போது, எனக்கு மேலும் ரூ.4,000 தேவைப்பட்டது. அப்போது மும்பையைச் சேர்ந்த அன்பர் ஒருவர் ரூ.1,000 அனுப்பிவைத்தார். ஏன் அனுப்பினார் என்பது வேறு கதை. ஆந்திராவின் வரவேற்புக் குழு ரூ.1,000 வழங்கியது, இவ்வாறு ஏழைகளுக்கான நிகழ்ச்சிக்காக ரூ.4,000 வசூலிக்கப்பட்டது. மூன்று முறை இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. நாளை மறுநாள் நடக்கவிருப்பது கடைசி நிகழ்ச்சியாகும்.

அதற்குப் பிறகு விஷ்ணு மீண்டும் என்னை அணுகி, 'பாபா, 1956 பிப்ரவரி 15 முதல் நீங்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறீர்கள், மேலும் உங்களைச் சார்ந்திருப்பவர்களின் செலவுகளை எப்படி சந்திப்பது? ஜனவரி முதல் பதினான்கு மாதங்களுக்கு, மாதம் ரூ.10,000 வீதம் ரூ.140,000 தேவைப்படும்' என்று கூறினார். கவலைப்படாதீர்கள், எல்லாம் சீராகிவிடும் என்று சொன்னேன்.

**அமெரிக்காவிலிருந்து, டான் ஸ்டீவன்ஸ் குஜராத்தி சகவாசத்தின் போது வந்திருந்தார். எதிர்வரும் எனது ஏகாந்தவாசம் மற்றும் என்னைச் சார்ந்திருப்பவர்களைப் பற்றி நான் அவரிடம் தெரிவித்தேன்; மேலும் அவர் திரும்பிச் சென்றதும், எனது அமெரிக்க அன்பர்களிடம் இதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டேன்; அவர்கள் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும். தற்போது அவர் அமெரிக்கா சென்றுள்ளார். இந்த விஷயம் குஜராத்தி குழுவினருக்குத் தெரிய வந்ததும், அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்வதாகக் கூறினர். தெலுங்கு குழுவினர் புத்திசாலிகள், தகுதியானவர்கள், அன்பானவர்கள். ஆந்திராவில் பெரும்பாலானோர் என் அன்பால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அங்குள்ள குழந்தைகள் எனது பெயரை உதட்டில் உச்சரித்துக்கொண்டே பள்ளிக்குச் செல்கிறார்கள், பெண்கள் தங்கள் அன்றாட பணிகளில் ஈடுபடும்போதும் எனது பெயரை நினைவில் கொள்கிறார்கள்.**

**ஆந்திராவைச் சேர்ந்த மூன்று அல்லது நான்கு லட்சாதிபதிகள் எனது பணிக்கு உதவுவதாக உறுதியளித்தனர். இதைக் கேட்டதும், காக்காவிடம் அவரது முகவரியை தட்டச்சு செய்து வழங்குமாறு அறிவுறுத்தினேன்; அதனால் அவர்களால் இயன்றதை அனுப்பலாம் என்றும் கூறினேன். பணம் வரும்; அது வந்துகொண்டிருக்கும்.**

**பிப்ரவரி 15 முதல் நான் உங்களிடமிருந்து விலகி இருக்கும்போது, யார் தைரியமானவர்கள் என்று பார்ப்பேன் - பணத்தின் கண்ணோட்டத்தில் அல்ல, மாறாக என் அன்பைப் அடையப் பெறுவதற்கான அடிப்படையில்! இது வரை பணம் வந்தது, அது வரும். பணம் வரும், பணம் போகும், ஆனால் நான் எப்போதும் ஏழையாகவே (ஃபக்கீர்) இருப்பேன்!**

இதை மராட்டியில் மொழிபெயர்க்கும் போது, டாக்கே 'ஃபக்கீர்' என்ற வார்த்தைக்கு 'சாது' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். பாபா உடனே குறுக்கிட்டு, **"நான் விரும்பாத இரண்டு வார்த்தைகள்: ஒன்று 'சாது'** (அனைத்தும் துறந்தவன்) **மற்றொன்று 'புத்து'** (புத்தியற்றவன், மூடன்).

**"நான் ஒருவனே நேசிக்கப்படுவதற்கு தகுதியானவன், நான் இதை எனது தெய்வீக அதிகாரத்தின் பேரில் சொல்கிறேன். உங்களால் என்னை நேசிக்க முடியாவிட்டால், கவலைப்படாதீர்கள். குறைந்தபட்சம் உங்கள் உடலைக் கைவிடுவதற்கு சற்று முன்னர் என்னை நினைவுகூர்ந்து, எனது பெயரை மொழியுங்கள், அப்போது நீங்கள் என்னிடம் வருவீர்கள்."**

ஹர்ஜீவன் லால் கொண்டு வந்த ரூ. 2,500, அத்துடன், சகவாசம் நிறைவடைந்த பின்பு, கையில் எஞ்சியிருக்கும் பணத்தையும் சேர்த்து, டாக்டர் கனகதண்டிக்கு அனுப்பிவிடுமாறு பாபா, பெண்டுவிற்கு அறிவுறுத்தினார். மேலும் சகவாசத்தில் பங்கேற்றவர்கள் அனைவருக்கும் வரவு செலவு கணக்கின் அறிக்கையை அஞ்சல் மூலம் அனுப்புமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

வானிலையில் ஏற்பட்ட மாற்றம் குறித்து பாபா குறிப்பிட்டார்: **"குஜராத்தி குழுவினர் இங்கு வந்த வேளையில் குளிர் அதிகமாக இருந்தது.**

**தெலுங்கு அன்பர்கள் தங்கியிருந்த போதும் குளிர் அதிகமாகத்தான் இருந்தது; அவர்கள் அனைவரும் சளி, இருமலால் பாதிக்கப்பட்டனர், ஆயினும்கூட, எனது சகவாசத்தில் மகிழ்ச்சியாக இருந்தனர். ஹிந்தி குழுவினர் இருந்த நேரத்தில், குளிர் லேசாக இருந்தது. இப்போது நீங்கள் அனைவரும் வியர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். வானிலை திடீரென மாறிவிட்டது. ஏன்? காரணம் எனக்குத் தெரியும். என் மீதான உங்கள் அன்பு மிகவும் தீவிரமானது, உள்ளே எரியும் அன்பின் நெருப்பு உங்களை வியர்க்கச் செய்கிறது!"**

சகவாசக் குழுவினர் மதியம் 3:00 மணியளவில் தேநீர் அருந்தச் சென்றனர். அதைத் தொடர்ந்து பாபா, பிரசாதம் வழங்க முன் வராண்டாவில் அமர்ந்தார். நானா கேரின் உறவினர், ராஜா மஞ்சர் ஷா கேர், நாக்பூரிலிருந்து கொண்டு வந்த ஆரஞ்சுப் பழங்களை, பாபா, முழுக் குழுவையும் தன் முன் நிற்க வைத்து, ஒவ்வொருவரையும் நோக்கி அதை வீசினார். இடதுபுறம் பார்த்துக்கொண்டே, பாபா ஆரஞ்சு பழங்களை வலதுபுறமாகவும், எப்போதாவது அவருக்கு முன்னாலும் வீசியதைத் தவறாமல் பிடிக்கும் ஆர்வத்தில், ஒவ்வொருவரும் விழிப்புடன் இருந்தனர். பழம் கீழே விழுந்தால், அதைத் திருப்பி பாபாவிடம் கொடுக்க, அவர் அதை மீண்டும் வீசி எறிந்தார். ஒரே சிரிப்பு ஆரவாரமும், வேடிக்கையுமாக இருந்தது; அனைவரும் பிரசாதத்தை விரும்பினர்.

இந்தூரைச் சேர்ந்த மஸ்த்-துறவி, விஷந்தாஸ் மஹாராஜ், ஆரஞ்சு பழத்தைக் கையகப்படுத்த தவறியதால், அது கீழே தரையில் விழுந்தது. கீழே விழுந்த பழத்தைத் திரும்பப் பெற்று, பாபா அதை மீண்டும் எறிந்தார். இம்முறை அவர் அதைப் பிடித்ததில், பாபாவிற்கு மிக்க மகிழ்ச்சி.

இருப்பினும், மஞ்சர் ஷா மிகச் சிறந்த 'பிரசாதத்தை' அடையப்பெற்றார். பாபா அவரை நோக்கி வீசிய ஆரஞ்சு பழம், அவரது கண்ணைக் காயப்படுத்தியதால் சிவந்து போனது. ஆனால் மஞ்சர் ஷா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார், பாபா அவரை மிகவும் நேசித்தார்.

பிற்பகல் சுமார் 3:45 மணிக்கு, பாபா அனைவரும் கூடியிருந்த மண்டபத்திற்குள் நுழைந்தார். பூனாவிலிருந்து மிதிவண்டியில் (75 மைல் தூரம்) பயணம் செய்து வந்த மூன்று பேருக்குத் தரிசனம் வழங்க, பெண்டு பாபாவிடம் அனுமதி கோரினார். பாபா அவர்களுக்கு தரிசனம் வழங்கினார்.

அப்துல் மஜித் கான் ஈரமான ரோஜாக்களாலான பெரிய மாலை ஒன்றை பாபாவின் கழுத்தில் அணிவித்தார், பாபா, "**இந்த மலர்மாலை எனக்குச் சளியை வரவழைக்கும்**" என்று நகைச்சுவையாகக் கூறினார். இது, இங்கிலாந்தில் பாபாவைப் புகைப்படம் எடுப்பதற்காக அவரது மேலங்கியில் குளிரில் வெளியே நிற்க வைத்த சம்பவத்தை நினைவூட்டியது. நடந்ததை விவரித்த பாபா, அப்துல் கானைப் பார்த்து இருமலை வரவழைத்து புன்னகைத்தார். அவர் ஒரு ரோஜா இதழை உண்ணக் கொடுத்து, பின்னர் இவ்வாறு கூறினார்:

நான் எல்லா நிலையிலும் இருக்கிறேன். நான் எனது காலடியில் படிந்துள்ள தூசியின் நிலையிலும் இருக்கிறேன். ஒவ்வொருவரும் என்னை அவரவர் நிலையில் இருப்பதாக அனுபவத்தில் உணர்கிறார்கள். நான் இங்கு உடல் ரீதியாக இருப்பதால், உங்கள் பௌதீகக் கண்களால் நீங்கள் என்னை இங்குப் பார்க்கிறீர்கள். அதே போல, வெவ்வேறு ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருப்பவர்கள், என்னை தங்கள் குறிப்பிட்ட ஆன்மீகத் தளத்தைச் சேர்ந்தவர் என்று எடுத்துக்கொள்கிறார்கள். மனிதன், இறைநிலையை அடையும் போது, அவன் தன் உடல் உணர்வை முற்றிலும் இழந்து விடுகிறான். அவனுக்குத் தனது மூன்று உடல்கள் - பௌதீக உடல், சூட்சும (பிராண) உடல், ஆழ் மன உடலைப் பற்றிய எந்த உணர்வும் இராது. அந்த நிலையில், வெப்பம், குளிர், மழை, நோய் எதுவும் அவனைப் பாதிக்காது. ஆனால் அவன் சாதாரண உணர்வுநிலைக்கு வந்ததும், அவனது உடல் அனைத்து மாற்றங்களுக்கும், சளி, இருமல் மற்றும் பிற நோய்களுக்கும் ஆளாகிவிடும். இது வரை, இந்த சகவாச மாதத்தில் எனக்கு சளியும், இருமலும் வரவில்லை, அதனால்தான் இன்று காலை உங்களிடம் மாலை அணிவிக்க வேண்டாம் என்று சொன்னேன். ஒருமுறை சாய்பாபா அம்மை நோயால் 40 நாட்கள் அவதிப்பட்டார்.

'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் பற்றி பாபா விளக்கி, மேலும் கூறினார்:

கவனமாகக் கேளுங்கள். முற்றிலும் எதுவும் இல்லாதபோது, கடவுளின் அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில், நான் கூட இல்லை, 'கடவுள் ஒருவரே' என்ற அம்சமும் இல்லை.

அந்த நிலை ஆழ்ந்த தூக்கத்தின் நிலையைப் போலவே இருந்தது. அதை 'ஒன்றுமில்லை' என்று கூட விவரிக்க முடியாது. அது கடவுளின் 'கடவுள் உளதாயிருக்கிறார்' (GOD IS) என்ற நிலை. திடீரென, கடவுளுக்கு ஓர் இனம்புரியாத ஆர்வம் (WHIM, LAHAR, தற்போக்கெண்ணம்) உருவானது. இந்தத் திடீர் ஆர்வம் எங்கிருந்து வந்தது? நாம் இப்போது இதனுள் நுழைய வேண்டாம். இது ஏற்கனவே 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. நான் ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிடுவேன்.

திடீர் ஆர்வத்தின் (தற்போக்கெண்ணத்தின்) தோற்றம் தென்றல் போல் இருந்தது. அதிலிருந்து, முதலில் எல்லையற்ற இறைப்பெருங்கடலில் அதிர்வு (சலனம்) ஏற்பட்டது; இரண்டாவதாக, அலைகள் உருவாயின; மூன்றாவதாக, குமிழ்கள். இந்தத் தென்றல் வீசியதன் வாசத்தில் ஒரே நேரத்தில் மூன்று விஷயங்கள் நிகழ்ந்தன:

ஒன்று: உணர்வு

இரண்டு: "நான் யார்?" என்ற வினா

மூன்று: ஒன்றுமில்லாமல் இருக்கும் மெய்மை நிலை.

மறைந்திருந்த இம்மூன்றும், திடீர் ஆர்வத்தின் தொடக்கத்துடன் வெளிப்பட்டன. கடவுள் 'நான் யார்?' என்ற கேள்வியுடன், ஆனால்

**'ஒன்றுமில்லாத' மாயையான உணர்வுடன், வாயு, கல், கனிமம், உலோகம், காய்கறிகள், புழுக்கள், ஊர்வன, மீன், கோழி, விலங்கு, ஆண் மற்றும் பெண் ஆகியவற்றில் எதுவுமே இல்லை என்பதை உணர்ந்தார். அவர் உணர்வுப்பூர்வமாக தன்னை உணர்ந்தபோது, இதெல்லாம் ஒன்றுமில்லை என்பதை அவர் கண்டுகொண்டார். "நான்-கடவுள்" நிலையின் உணர்வைத் தவிர வேறு எதுவும் தோன்றவில்லை. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருந்து நித்தியமாகத் தொடரும்.**

**அதைத் தெளிவுபடுத்த, இந்த மண்டபத்தை ஒரு பெரிய, எல்லையற்ற கடலாக எடுத்துக் கொள்ளுங்கள்; அது எல்லையற்றது. நாம் அனைவரும் கடலின் துளிகள், கடலின் ஓர் அங்கம். இப்போது எரச்** (அவரது உடல்) **என்பதன் பொருள் அவர் கடலின் குமிழி, நாம் அனைவரும் பிற குமிழ்கள். ஆனால் கடலின் துளி, தன்னை கடலாக பார்க்காமல், ஒரு துளியாகவே பார்க்கிறது. அது கடல் என்று அதற்குத் தெரியாது.**

பாபா எடுத்துரைத்த '**தலையும், தலை முடியும்**' (THE HEAD AND THE HAIR) என்ற தலைப்பிலான சொற்பொழிவு எரச்சால் வாசிக்கப்பட்டது, அதை டாக்கே மராட்டியில் மொழிபெயர்த்தார்.

பாபா உரையைத் தொடர்ந்தார்:

**அன்பைப் பற்றி நான் நாளை உங்களுக்குச் சொல்கிறேன் - என்னை எப்படி நேசிப்பது, எனக்குக் கீழ்ப்படிவது மற்றும் என்னிடம் சரணடைவது எப்படி என்பதை விளக்குகிறேன்.**

**பிப்ரவரி 15 முதல் ஏழு நாட்கள், தண்ணீர் மட்டுமே அருந்தி, உபவாசம் மேற்கொள்ள உங்களில் ஐந்து பேர் தேவை. முந்தைய மூன்று குழுக்களிலிருந்து மொத்தம் 15 அன்பர்களைத் தேர்ந்தெடுத்துள்ளேன். நாளை, உங்கள் குழுவிலிருந்து ஐவரைத் தேர்ந்தெடுப்பேன். அனைவரும் முன்வர வேண்டாம். ஏழு நாட்கள் தண்ணீர் அருந்தி உபவாசம் இருப்பது எளிது. சில மண்டலி 40 நாட்கள் வரை இது போன்ற உபவாசத்தில் பங்கெடுத்துள்ளனர். மேற்கத்திய நாடுகளில் உபவாசம் குறித்த சாதனைகளை முறியடிக்கும் மோகம் தீவிரமடைந்துள்ளது.**

**உண்மையான சிரமம் எனது உத்தரவில் உள்ளது. உபவாசத்தை மேற்கொள்பவர்கள் ஏழு நாட்கள் தூங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது, தொடர்ந்து எனது பெயரை உச்சரிக்க வேண்டும். இது ஒரு வேடிக்கை விளையாட்டு என்று நினைக்காதீர்கள். எனவே உணர்ச்சிவசப்பட்டு மட்டும் எழுந்து நிற்காதீர்கள்.**

எரச் பெண்மணிகளுக்காக முன்மொழியப்பட்ட சகவாச நிகழ்ச்சிகளை விவரித்தார். தொடர்ந்து பாபா கூறினார்:

**இங்கு அழைப்பதானால், மகளிர் ஒவ்வொருவரும் குறைந்தது மூன்று குழந்தைகளையாவது உடன் அழைத்து வரும் அபாயம் உள்ளது, மேலும் ஒவ்வொரு கணவரும் அவருடன் வர வாய்ப்புள்ளது. பின்னர்**

**ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிசை வீடுகள் அமைக்கப்பட வேண்டும், இறுதியில், நான் கணவன்-மனைவியை தனித்தனியாக தங்க வைத்தால், குழந்தைகளைப் பராமரிக்கும் சுமை பாபா மீது விழும். எனவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட வெவ்வேறு இடங்களுக்குச் செல்வதுதான் நடைமுறை வழி என்ற முடிவுக்கு வந்தோம்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

**என்னுடைய ஒவ்வோர் அன்பரும், ஒவ்வொரு மூச்சிலும் எனது பெயரை உச்சரிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். திரும்பத் திரும்ப உச்சரிப்பது, தொடர்ச்சியாக இருக்க வேண்டும், ஆழ்ந்த தூக்கத்தில் கூட அது உங்கள் சுவாசத்தைப் போலவே தொடர வேண்டும். அப்போது எனது ஒரு சிறிய பார்வையை அனுபவிக்கும் வாய்ப்பு உள்ளது. எனது பெயரை மீண்டும் மொழியும் போது, எண்ணங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அவற்றைத் தடுத்து நிறுத்தவும் வேண்டாம், ஏனெனில் நீங்கள் எனது பெயரைத் திரும்பத் திரும்ப மொழியும் போது, அந்த எண்ணங்கள் - நல்லது, தீயது - எதுவாக இருந்தாலும் உங்களைப் பிணைக்காது.**

கொசுவலைக்குள் இருக்கும் வேளையில், கொசுக்கள் வெளியே ரீங்காரம் செய்வது போன்ற உவமையை பாபா மறுபடியும் எடுத்துரைத்தார்.

**அதே போல், எண்ணங்கள் மனதில் 'ஓசை' எழுப்பும் வேளையில், நீங்கள், பாபாவின் பெயரை உச்சரிக்கும் 'வலையில்' இருங்கள். எனது பெயரைத் தொடர்ந்து, திரும்பத் திரும்ப மொழியுங்கள், உங்கள் உடலின் சுயநினைவை நீங்கள் இழந்தால் கூட, எனது நாமத்தை உச்சரித்துக்கொண்டே இருப்பீர்கள், ஏனெனில் நான் உங்களுள் நீங்களாகவே மாறுகிறேன். என்னில் நீங்கள் உங்களை முழுமையாக இழக்கிறீர்கள். உங்களால் அதைச் செய்ய முடியாவிடில், உயிரைத் துறப்பதற்கு ஒரு கணம் முன்னர் எனது பெயரை உச்சரித்தால் கூட போதுமானது. அப்போது நீங்கள் என்னிடம் வருவீர்கள். ஆனால், அதற்காக நீங்கள், இந்த நேரத்திலிருந்தே என்னை நினைவில் கொள்ளாவிடில், கடைசி நேரத்தில் என்னை எப்படி நினைவுகூர முடியும்**!

ருஸ்தம் காக்கா, மதுசூதனன் இருவரும் சில பாடல்களைப் பாடினர், அதற்குப் பிறகு, பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட எழுந்து நின்றார். அவர் துனியை நோக்கி நடந்து, அங்கிருந்து முந்தைய குழுக்கள் இருந்தபோது அவர் அமர்ந்திருந்த மரத்தின் கீழ் சென்றார். குமார் உடனே தனது கம்பளிச்சட்டையைத் தரையில் விரித்தார், ஆனால் பாபா தூசியின் மீது அமர்ந்தார். ஓய்வின்றி வேகமாக நகர்ந்த விரல்களைத் தவிர, பாபா, முழுமையான அமைதியுடன் காணப்பட்டார்.

அவர் காரில் அமர்ந்ததும், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' முழக்கங்களுக்கு மத்தியில், மாலை 5:05 மணிக்கு மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஒவ்வொரு நாளும் அவர் சென்ற பின்பு, மும்பையைச்

சேர்ந்த வி.ஏ. காமத் மற்றும் பலர் நகைச்சுவைக் கதைகளால் கூட்டத்தை மகிழ்ச்சியாக வைத்திருந்தனர்.

1955 நவம்பர் 29, செவ்வாய்க் கிழமை காலை 7:25 மணிக்கு பாபா, மெஹராபாத் வந்தார். பெண்டு, பாதிரி, விஷ்ணு, பாவ் ஆகியோருடன் குழுவின் ஏற்பாடுகளைப் பற்றி விவாதித்த பின்னர், 8:10 மணிக்கு பாபா மண்டபத்திற்குள் நுழைந்தார். உள்ளே நுழைந்ததும், அப்துல் மஜித் கானிடம் பாபா கூறினார், **“நேற்று நீங்கள் எனக்கு மாலை அணிவித்ததிலிருந்து ஒரே தும்மலும், இருமலும் வருகிறது!”**

சகவாச குழுவிற்குத் தொடர்ந்து உரையாற்றுகையில், பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**குஜராத்தி, தெலுங்கு மற்றும் ஹிந்தி குழுக்களின் தினசரி வழக்கம் என்னவென்றால், தினமும் காலையில் முந்தைய இரவு அவர்கள் எப்படித் தூங்கினார்கள், நன்றாகத் தூங்கவில்லை என்றால் ஏன் என்று கேட்பதை வழக்கமாகக் கொண்டேன். அப்போது நான் அவர்களின் உடல்நிலை பற்றி, பொதுவாக விசாரித்தேன். நேற்று, நாம் அந்த வழக்கத்தைத் தவறவிட்டோம். இரவு முழுவதும் தூங்காதவர்களை எழுந்து நிற்கச் சொன்னபோது, அவர்கள் அண்டை வீட்டாரின் காரணங்களையும், அனுபவங்களையும், கனவுகளையும், இருமல், சளி, குறட்டை போன்றவற்றையும் கூறினர். ஹிந்தி குழு மிகவும் நன்றாக இருந்தது. ஒருவர் எழுந்திருப்பதைக் கண்டால், பிறரும் எழுந்து நின்று, தங்கள் அனுபவங்களை எடுத்துரைத்தனர். நான் அவர்களுக்கு செவிமடுத்து, அவர்களை அரவணைத்து, ஆறுதல் கூறினேன். இந்தக் குழுவில் ஒருவர் எழுந்து நின்ற வேளையில், தூங்காததற்கான காரணம் கேட்டபோது, என் அரவணைப்புக்காக எழுந்து நின்றேன் என்றார்! ஆதலால் பயப்பட வேண்டாம். உங்களில் எவரேனும் தூங்க முடியாவிட்டால் எழுந்து நிற்கவும்.**

மராட்டி குழுவைச் சேர்ந்த நான்கு பேர் எழுந்து நின்றனர். அப்போது பாபாவே எழுந்து நின்று, நேற்றிரவு அவராலும் தூங்க முடியவில்லை என்று அறிவித்தார்! அவர் நான்கு பேரிடமும் தூங்காததற்கான காரணங்களைக் கேட்டார், டாக்டர் ரானடே, “நான் இரவு முழுவதும் உங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன்” என்றார். பாபா அவரைத் தழுவினார்.

அஹமதுநகரைச் சேர்ந்த எம்.டபிள்யூ. ஜோக்லேகர் (M.W. JOGLEKAR) கூறுகையில், “முன்பு நான் நாத்திகனாக இருந்தேன், ஆனால், அதன் பின்னர் ஒரு குறிப்பிட்ட கோவிலில் குடிகொண்ட ஒரு தேவியை வழிபடத் தொடங்கினேன். நேற்றிரவு உங்களை நினைவுகூர முயற்சித்தேன், ஆனால் தேவியைப் பற்றிய எண்ணங்கள் எப்பொழுதும் எனது சிந்தனையில் ஊடுருவிக்கொண்டே இருந்தன” என்று தெரிவித்தார்.

அதற்கு பாபா, "**அந்த தேவியை நினைவில் கொள்ளுங்கள். நானும் அவரேதான். உங்கள் தேவியை நினைவுகூருவதன் மூலம் நீங்கள் என்னை நினைவில் கொள்கிறீர்கள்**" என்று பதிலளித்தார்.

டாக்டர் மூர்த்தி கூறினார், "பாபா, நீங்கள் என்னை நிர்வாணமாக அலையச் சொன்னதாக நான் கனவு கண்டேன், ஆனால் என்னால் அதைச் செய்ய முடியவில்லை. பின்னர் என்னை ஒரு கிணற்றில் குதிக்கச் சொன்னீர்கள், நான் குதித்தேன். இது, எனது கனவைக் கலைத்த போது, நான் படுக்கையில் படுத்திருந்ததைக் கண்டேன்."

பாபா, "**கிணற்றில் குதிக்காதீர்கள், எனது இறை அன்பின் கடலில் குதியுங்கள்!**" என்றார்.

பாபா, மஞ்சர் ஷாவை அழைத்து, அவரது கண் எப்படி இருக்கிறது என்று கேட்டார், ஆனால் அவர் பதிலளிப்பதற்குள், லிம்கர் அவரது நுணுக்கமான துணுக்குத்தனத்தால் குறுக்கிட்டார். பாபா உடனடியாக அவரைக் கடிந்துகொண்டார்: "**எல்லாவற்றிற்கும் ஒரு நேரமும் இடமும் உள்ளது, சுற்றுப்புற சூழலையும், எனது மனநிலையையும், நிலவும் சூழ்நிலையையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. நீங்கள் கழிப்பறைக்குச் செல்லும் அதே நேரத்தில் உண்பீர்களா? அல்லது உணவு வேளையில் நீங்கள் மலம் கழிக்கிறீர்களா? நான் தீவிரமாக இருக்கும்போது, நீங்களும் அதே தீவிரத்துடன் இருக்க வேண்டும். வேடிக்கை, நகைச்சுவை வேளையில் அதே விளையாட்டுத்தனத்துடன் இருக்க வேண்டும். ஒவ்வொன்றும் அதற்குரிய சரியான நேரத்தில் செய்யப்பட வேண்டும்.**"

வாமன் ஸப்னிஸ் சுவரில் சாய்ந்துகொண்டு நிற்பதைக் கண்டு பாபா, "**ஏன் இவ்வண்ணம் நிற்கிறீர்கள்? நேற்று இரவு தூங்கவில்லையா?**" என வினவினார்.

அவர் நன்றாகத் தூங்கினார் என்று பதிலளித்ததும், பாபா, அவரைப் பற்றிய சில தகவல்களைக் குழுவிற்கு வெளிப்படுத்தினார்: "**பிரேம் ஆசிரம காலத்திலிருந்தே ஸப்னிஸ் எனது தொடர்பில் இருந்தார். அவர் ஒரு விளையாட்டு வீரராகவும், மிகவும் வலிமை மிக்கவராகவும், ஆசிரம சிறுவர்களுக்கு அருகில் இரவுக் காவலர்களில் ஒருவராகவும் இருந்தார். அவர் சிறுவர்களின் தேவைகளை கவனித்துக் கொள்வதும், அவர்கள் தூங்கிய பிறகு தூங்கச் சென்று, அவர்கள் விழிப்பதற்குள் எழுந்திருப்பதையும் பழக்கமாகக் கொண்டார்; அவர் தூங்குகிறாரா என்பதை கவனிக்க நானே அவரைக் கண்காணித்து வந்தேன்; அவர் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார், நான் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் சிறுவர்கள் தங்கும் அறையைச் சுற்றிச் சுற்றி வந்தேன், சிறுவர்களின் போர்வைகள் அங்கும் இங்கும் விலகி இருந்தால் அவற்றை சரிசெய்தேன்; நான் அவர்களுக்கு ஒரு தாயைப் போல் இருந்தேன்.**"

தூங்காமல் இருந்தவர்களை பாபா தழுவி உபவாசத்தைப் பற்றி விளக்கினார்.

சகவாசத்திற்காக இங்கு வந்தவர்கள் உபவாசம் மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. உபவாசம் இருப்பவர்களுக்கான சிறப்பு உணவு அல்லது பழரசம் ஏற்பாடு செய்வதில் பெண்டு பைத்தியம் பிடித்தவர் போலாகிவிடுகிறார். நான் ஆதிகாலத்தவனாக இருக்கும்போது, எனது முன்னிலையில் உபவாசம் இருப்பதால் என்ன பயன்? நீங்கள் உங்கள் இல்லங்களுக்குச் செல்லும்போது, உங்கள் வழக்கத்தைப் பின்பற்றுங்கள். தேவையானது உடலின் உபவாசம் அல்ல, மனதின் உபவாசம். உங்கள் மனதை பட்டினி போடுங்கள், உங்கள் வயிற்றை அல்ல.

உங்களால் என்னை நேசிக்க முடியாவிட்டால், வேறு ஒரு மாற்று வழி இருக்கிறது. தன்னலமின்றி பிறருக்கு சேவை செய்ய முயற்சி செய்யுங்கள். உங்களிடம் ஒரு தானியத்தின் அளவு கூட அன்பு இல்லை என்றாலும், கவலைப்படாதீர்கள். தன்னலமற்ற சேவை செய்யுங்கள். நான் எல்லாவற்றிலும் இருக்கிறேன்; பிறருக்கு சேவை செய்வது எனக்கு சேவை செய்வதாகும். தன்னலமற்ற சேவை என்பது இந்த நாட்களில் மிகவும் சாதாரண சொல்லாகிவிட்டது. அதன் அர்த்தம் என்ன? வாமன் ஸப்னிஸுக்குக் குழந்தைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர் அவர்களுக்காக சம்பாதித்து, அவர்களின் நலன், உடல்நலம், கல்வி ஆகியவற்றை கவனித்துக்கொள்கிறார். அவரிடம் நல்ல வசதி உள்ளது. வீதியில் பட்டினியால் வாடும், நிர்வாணமாக அலைந்து திரியும் இதர ஏழை குழந்தைகளும் உள்ளனர். ஸப்னிஸ் அவர்களைத் தனது சொந்தக் குழந்தைகளாகக் கருதி, தனது குழந்தைகளின் மீதான அதே அக்கறையைக் கொண்டிருந்தால், அவர் தன்னலமற்ற சேவையைச் செய்பவராகக் கருதப்படுவார். சுயநலமின்மையின் அர்த்தம், சுயநல நோக்கம் இல்லாமல் இருப்பது. பெயர், புகழைப் பற்றிய சிந்தனையோ, ஆன்மீக முன்னேற்றத்திற்கான ஆசையோ இருக்கக் கூடாது.

உங்களில் 'நான்' எனும் எண்ணம் இருக்கும் வரை, தன்னலமற்ற சேவை சாத்தியமற்றது. 'நான்', 'எனது' எனும் சுயத்தின் ஒரு சாயலும் இருக்கக்கூடாது. ஆனால் இது சாத்தியமற்றது. அத்தகைய எண்ணங்களைத் தடுப்பது இயலாத ஒன்று. பரவாயில்லை. உங்கள் சுயத்தைப் பற்றி சிந்திக்காமல், உங்களால் முடிந்த சேவையைச் செய்ய முயற்சி செய்யுங்கள், அது எனக்கான சேவையாக இருக்கும்.

மதிய உணவுக்குப் பிறகு, 1:00 மணிக்கு, குழுக்கள் மற்றும் குழுவின் தனிநபர்களுக்கான நேர்காணல்கள் திட்டமிடப்பட்டிருந்தன. **"நீங்கள் நேர்காணலுக்காக என் அறைக்கு வரும்போது, நான் கூறுவதைக் கேளுங்கள், உங்கள் இடர்பாடுகளை என்னிடம் சொல்லத் தொடங்காதீர்கள். நான் உங்களிடம் கேட்டால் மட்டுமே பதில் சொல்லுங்கள். உங்கள் ஆன்மீகம் தொடர்பான சிக்கல்களை நீங்கள் என்னிடம் சொல்லலாம், ஆனால் சுருக்கமாக. நான் சந்திக்க வேண்டிய பல குழுக்கள் மற்றும்**

**தனிநபர்கள் உள்ளனர். நேர்காணல்கள் நாளையும் தொடரும், இன்று விடுபட்டவர்களுக்கு என்னைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும்.**"

வாசலில் நின்றுகொண்டிருந்த மாதவ் ராவ் மிஸாலை பாபா கடிந்து கொண்டார், "**நீங்கள் இங்கு வந்திருப்பது என்னுடனான சகவாசத்திற்காகவா அல்லது பிறரின் சகவாசத்திற்காகவா? அல்லது வெற்றிலை, புகையிலை, சிகரெட்டைப் பற்றி நினைக்கிறீர்களா? நீங்கள் எனது பழங்கால அன்பர், வாருங்கள், வந்து உள்ளே அமருங்கள்.**"

சகவாசக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கேட்டார், "பாபா, மனதைப் பட்டினி போடுவதன் அர்த்தம் என்ன? நான் சிந்திக்காமல் இருக்க முயற்சித்தாலும், எண்ணங்கள் வருகின்றன!"

பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இப்படி, சிறு சிறு கேள்விகள் வரத் தொடங்கினால் விளக்கங்களுக்கு முடிவே இராது. மனதின் உபவாசம் என்றால் என்ன? எந்த எண்ணமும் இல்லாமல் இருப்பது. இது சாத்தியமற்றது; ஆனால், உங்களால் முடிந்தவரை, அடிக்கடி, என்னை நினைவில் கொள்ளுங்கள், பின்னர் உங்கள் மனம் எதைப் பற்றி யோசிப்பது என்று குழப்பமடையாது. நீங்கள் என்னை தொடர்ந்து நினைவு கொள்வதன் மூலமோ அல்லது எனது பெயரை உச்சரிப்பதன் மூலமோ உங்கள் மனதை என்னிடம் விட்டுவிடுகிறீர்கள், அப்போது மனதிற்கு ஊட்டுவதற்கென சொல்லும் அளவுக்கு உணவு** (எண்ணங்கள்) **இருக்காது. என்னைப் பற்றிய எண்ணங்கள் உங்கள் மனதில் இருக்கும் பிற எல்லா எண்ணங்களையும் முறியடிக்கும்.**

**வயிற்றைப் பட்டினி போட வேண்டிய தேவை இல்லை. உங்கள் ஆரோக்கியத்திற்காக இதைச் செய்யலாம், ஆனால் ஆன்மீகக் காரணங்களுக்காக அல்ல. சீரான இடைவெளியில் உணவு உண்பதை வழக்கமாக கொண்டுள்ளோம். ஒரு சில விதிவிலக்குகள் தவிர, பசிக்கும் போது நம் வயிறு உணவுக்காக ஏங்குகிறது, இருப்பினும் நாம் வேறு சில வேலைகளில் மூழ்கியிருக்கலாம். ஆனால் மனதை ஏதோ ஒரு வேலையில், முழு முனைப்புடன் ஈடுபடுத்தும்போது, வயிறு திருப்தியாக இருக்கும். உணவுக்கு நேரம் வரும்போது கடிகாரத்தைப் பார்ப்பது நமது இயல்பு. நாம் வேண்டுமென்றே உபவாசம் மேற்கொள்வோம் என்றால், உபவாசம் நிறைவடையும் நேரம் வந்துவிட்டதா என்று பார்க்க நமது கண்கள் தொடர்ந்து கடிகாரத்தில் இருக்கும். அத்தகைய உபவாசத்தால், பிணைப்புகள் வலுவடைகின்றன.**

**நான் உங்களை உபவாசம் மேற்கொள்ள கூறுவதானால் அது வேறு. ஏழு நாட்கள் தண்ணீர் அருந்தி உபவாசம் கடைப்பிடிக்க, யார் தயாராக இருக்கிறார்கள் என்று நான் பார்ப்பேன். நீங்கள் சாய்ந்து படுக்கவோ, தூங்கவோ செய்யாமல், தரையில் அமர்ந்து, தொடர்ந்து எனது பெயரை உச்சரிக்க வேண்டும். இதைச் செய்யத் தயாராக இருப்பவர்கள் இப்போது எழுந்து நிற்கலாம்.**

22 அன்பர்கள் எழுந்து நின்றபோது, அதில் உள்ள கஷ்டங்களைப் பற்றி பாபா அவர்களை எச்சரித்தார்: "**நான் கூறுவதை நீங்கள் சிந்தித்துப் பார்த்தால், அது எளிதல்ல என்பதைப் புரிந்துகொள்வீர்கள். ஏழு பகலும் இரவும் தொடர்ந்து எனது பெயரைத் திரும்பத் திரும்ப மொழிவதை ஒப்பிடுகையில், தண்ணீர் மட்டுமே அருந்தி ஓர் அறையில் மௌனம் காப்பது எளிது.**"

பாபா பின்வரும் ஐந்து நபர்களைத் தேர்ந்தெடுத்தார்: ஷோலாபூரைச் சேர்ந்த ஆர்.எம். சக்ரபாணி (R.M. CHAKRAPANI), ஸாவ்னேரின் மோதி ஜெகன் பட்டேல் (MOTI JAGAN PATEL) & மோதிதேவ் கிர்பால் ரஹாட்டே (MOTIDEV KIRPAL RAHATE), பூனாவைச் சேர்ந்த விஷ்ணு டி. சவான் (VISHNU D, CHAVAN) மற்றும் அஹமதுநகரின் நர்ஹரி வி. முலே மாஸ்டர் (NARHARI V.MULEY MASTER). பாபா, பிற அனைவரையும் அமருமாறு சைகையால் தெரிவித்து கூறினார்: "**நீங்கள் எழுந்து நின்றதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதுவே பெரிய விஷயம். நான் தேர்ந்தெடுக்காதவர்கள் ஏன் தேர்வு செய்யப்படவில்லை என்று கேள்வி கேட்க வேண்டாம். அவர்களின் தைரியத்தைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.**"

பாபா தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவரையும் மதியம் 1:00 மணிக்கு, முதலில் தனது அறைக்கு வருமாறு கூறினார், அப்போது அவர்களுக்கு உபவாசம் குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். தனிப்பட்ட நேர்காணல்களுக்காக, பாபா போ:ஃபலி, மதுசூதனன் இருவரையும் தனித்தனி குழுக்களாகப் பிரிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு குழுவின் வருகையையும் ரயில் ரீதியாக மேற்பார்வையிடும் நோக்கத்தில், விஷ்ணு ஏற்கனவே ஒரு பட்டியலைத் தொகுத்திருந்தார். பாபா அவருடைய சமயோசித திறமையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். போ:ஃபலி பிளீடர் 110 பேரை ஸாவ்னேரிலிருந்து அழைத்து வந்திருந்தார், இது ஒரு நகரத்திலிருந்து வந்திருந்த மிகப்பெரிய குழுவாகும்.

பாபா அப்போது விளக்கினார்:

**சில நேரங்களில் நான் பிறரை வணங்குவதும், சில தருணங்களில் பிறரை, என்னை வணங்க அனுமதிப்பதும் ஒன்றல்ல. சில சமயங்களில், நான் வணங்கப்படும் போது, நானே அதே நேரத்தில் என்னை வழிபடுகிறேன், அப்போது, இரண்டும் ஒரே விஷயமாக இருக்கும்.**

பிரார்த்தனை (PRAYER), ஆராதனை (SUPPLICATION) போன்ற மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகளை பாபா விரும்பவில்லை, ஆனால், பக்தி (DEVOTION) என்ற வார்த்தையை வழிபாட்டிற்கு இணையாகத் தேர்ந்தெடுத்தார்.

**அரன்காவ்ம் கிராம மக்கள் மிகவும் ஏழைகள், என் மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளனர். நான் முதலில் இங்கு வந்தபோது, அவர்களில் பெரும்பாலோர் சிறு குழந்தைகள் மற்றும் இளைஞர்கள். இப்போது அவர்கள் வளர்ந்து குழந்தைகளின் தாய், தந்தையராக இருக்கின்றனர். ஒவ்வோர் ஏழைகளுக்கான நிகழ்ச்சிக்கும் கிராமத்திலிருந்து 250 பேரை தேர்வு செய்ய பெண்டுவிடம் கூறினேன். நாளை நடப்பது நான்காவது ஏழைகளுக்கான திட்டம். மூன்றாவது நிகழ்ச்சி நடந்த அடுத்த நாள், அவர்கள் என்னை**

**அரன்காவ்ம் கிராமத்திற்கு வரவழைத்து வணங்கினர். இந்த நேரத்தில், அவர்கள் என்னைப் பல்லக்கில் அல்லது தோள்களில் மெஹராபாத்திலிருந்து அரன்காவ்ம் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினர். ஆனால் நான் அங்கு நடந்து செல்ல முடிவு செய்திருப்பதாகவும், அது எனது இரண்டாவது வருகை என்றும் அவர்களிடம் தெரிவித்தேன்.**

**நாளை காலை, நான் ஏழைகளுக்கான நிகழ்ச்சியில் பணிபுரியும் போது, நீங்கள் அனைவரும் பந்தல் அருகே காத்திருக்க வேண்டும். அந்த நேரத்தில், 'பரபிரம்ம பரமாத்மா' என்று பணி முடிவுறும் வரை, மீண்டும் மீண்டும் மொழியவேண்டும். இதற்கு ஒரு மணிநேரம் அல்லது இன்னும் சிறிது நேரம் ஆகலாம். 'பாபா' என்று மொழியாமல் 'பரபிரம்ம பரமாத்மா' என்று உச்சரிக்கவும். நிகழ்ச்சி நிறுவடைந்த பிறகு, நீங்கள் எனது பெயரை மொழியலாம். மேலும் எல்லா சூழ்நிலைகளிலும் எனது பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது சிறந்தது. ஏழை நிகழ்ச்சியில் ஈடுபடும்போது, நான் ஏழைகளில் ஏழையாகி விடுகிறேன், எனவே 'பாபா' என்று திரும்பத் திரும்ப மொழியாதீர்கள், ஏனெனில் நான் ஏழைகளில் மிகவும் ஏழை, எனது பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதில் பயனில்லை!**

பதினைந்து நிமிட இடைவேளைக்குப் பிறகு, காலை 9:30 மணிக்கு, முழு மராட்டி குழுவும் மண்டபத்தில் மீண்டும் கூடியது. பாபாவின் வலது கையில் ஏற்பட்ட சிறிய வெட்டுக்காயம் குறித்து ஒருவர் பாபாவிடம் கேட்டதற்கு, அவர் பதிலளித்தார், **"நான் கடைசியாக அரன்காவ்ம் கிராமத்திற்கு விஜயம் செய்தபோது, ஒருவரின் விரல் நகம் தவறி எனது தோலைத் துளைத்தது."**

ராய்பூரைச் சேர்ந்த அம்பிகா சரண் ஷுக்லாவை (AMBIKA CHARAN SHUKLA) பாபா அழைக்க, அவர் மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்பு, பாபா அவரைப் பற்றி பேசத் தொடங்கினார். பாபாவின் சைகைகளைப் புரிந்துகொள்வதில் எரச்சுக்கு சற்று சிரமம் இருந்தது, ஆனால் இறுதியாக பாபா கூற விரும்பியதைத் தெரிவிக்க முடிந்தது: **"நான் எங்கும் எதிலும் நிறைந்திருப்பதை, நான் எப்பொழுதும் அனுபவிக்கிறேன். நேற்று, அம்பிகா சரண் மண்டபத்தின் வலது மூலையில் அமர்ந்திருந்ததைப் பார்த்தேன். மதியம் அவரை மண்டபத்திற்கு வெளியே கண்டேன். இன்று காலை அவர் மண்டபத்தின் இடது மூலையில் இருந்தார்; இப்போது அவர் அதன் பின்னால் இருக்கிறார்! ஷுக்லாவும் எல்லா இடங்களிலும் இருக்கிறாரா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!"**

ஷுக்லாவுடன் பிற அனைவரும் சிரித்தனர். அப்போது பர்ஸி (BARSI) நகரின் எல்.கே. கரந்திக்கர் (L.K. KARANDIKAR), துக்காராமின் பஜனை ஒன்றை இனிமையாகப் பாடினார். திகம்பர் காடேக்கர் எழுந்து நின்று பாபாவின் புகைப்படத்தை எடுக்க, பாபா, **"நீங்கள் அதி புத்திசாலி!"** என்றார்.

இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா குழுவிற்கு உரை நிகழ்த்தினார்:

**1956 பிப்ரவரி 15 முதல், நான் ஒரு வருடம் வெளியே செல்ல உள்ளேன். ஏன், எங்கே, எதற்காக, எனக்கு மட்டுமே தெரியும். ஒரு**

வருடத்திற்கு நான் எனது அன்பர்கள், மண்டலி மற்றும் என்னைச் சார்ந்திருப்பவர்களை சந்திக்க மாட்டேன். இருப்பினும், நான்கு அல்லது ஐந்து மண்டலியை என்னுடன் அழைத்துச் செல்லலாம். நான் தரிசனம் அல்லது சகவாசம் வழங்க வெளியே செல்லவில்லை. நான் எனது தொடர்பைத் துண்டித்து, என் அருகில் இருப்பவர்களிடமிருந்து விலகி இருப்பேன். எவரும் என்னுடனோ எரச்சுடனோ தொடர்பு கொள்ளக் கூடாது. எதையேனும் தெரிவிக்க விரும்புபவர்கள் ஆதி சீனியருக்கு எழுதலாம்.

அன்பெனும் பரிசைப் பற்றி இப்போது பேசுவோம். இது மிகவும் அரிதானது, அதை ஒருவர் மிக அரிதாகவே அடையப் பெறுகிறார். 1956, பிப்ரவரி 15 முதல், ஒரு வருடத்திற்கு நான் சொல்லும் அனைத்திற்கும் கீழ்ப்படிவதானால், இந்த அன்பை அடையப் பெறுவதற்கு நீங்கள் தகுதியுடையவராக இருப்பீர்கள். இது மிகவும் எளிதானது, அதே நேரத்தில் நான் சொல்வது போல் செய்வது மிகவும் கடினம். அதைச் செய்யக்கூடிய ஒருவர் இருக்கலாம். முந்தைய மூன்று குழுக்களிடமும் இதையே சொல்லியிருக்கிறேன். இப்போது நான் கூறுவதைக் கேட்கும்போது, இது மிக மிக எளிதானது என்று நீங்கள் நினைப்பீர்கள்; ஆனால் ஒரு வருடத்திற்கு அதை செயல்படுத்துவது சாத்தியமில்லை.

பிப்ரவரி 15 முதல், சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு, எனது பெயரை ஓர் இரவு 14 முறையும், அடுத்த இரவு 28 முறையும், ஒரு வருடத்திற்கு மாற்றி மாற்றி மொழியுங்கள். ஆனால், இதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், என்ன நடந்தாலும், நீங்கள் மரணப் படுக்கையில் இருந்தாலும் கூட, மீண்டும் மீண்டும், இரவில் எனது பெயரை உச்சரிக்கத் தவறாதீர்கள். அப்படிச் செய்தால், என் அன்பின் பரிசைப் பெறுவது உங்களுக்கு எளிதாக இருக்கும். அந்த நேரத்தில், நீங்கள் கழிப்பறைக்குச் செல்ல விரும்பினாலும், நீங்கள் எனது பெயரை மீண்டும் மீண்டும் மொழிவதை நிறுத்தக்கூடாது. இரவு 11:00 மணிக்கு ஒரு தேள் உங்களைக் கொட்டுகிறது என்று வைத்துக்கொள்வோம், இருந்தாலும் நள்ளிரவு 12:00 மணிக்கு நீங்கள் எனது பெயரை மொழிய வேண்டும் - நீங்கள் அதை மீண்டும் செய்ய வேண்டிய கட்டாயம். நாள் முழுவதும், எனது பெயரை சத்தமாக உச்சரிக்கக் கூடாது. உள்ளளவில் நீங்கள் விரும்பியதைச் செய்யலாம், ஆனால் அது உங்கள் உதடுகளிலிருந்து தப்பிவிடக்கூடாது. 365 நாட்களும் ஒவ்வொரு மணிநேரமும் நிமிடமும், நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், அதனால் உங்கள் வார்த்தைகள் வெளிவராமல் இருக்கும், எனது வழிமுறைகளை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்.

இப்போது யார் என் அன்பைப் பரிசாகப் பெறத் தயாராகவும் தைரியமாகவும் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். இது முற்றிலும் சாத்தியமற்றது, இன்னும் யார் அதைச் செய்யத் துணிகிறார்கள் என்று பார்ப்போம். இந்தப் பரிசை வழங்க நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்!

**பாபாவின் அன்பைப் பற்றி மக்களிடம் தொடர்ந்து சொல்லுங்கள். என்னை நேசித்துக் கொண்டே இருங்கள். டாக்டர் தேஷ்முக்கைப் பாருங்கள். பெண்மணிகளுக்கான சகவாசத்தைப் பற்றி அவர் எனக்கு நினைவூட்டாத நாளே இல்லை. எனவே சகவாசத் திட்டம் எனது பெண் அன்பர்களுக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் மட்டுமே - வெளி நபர்களுக்கு அல்ல என்பதை நான் திரும்பத் திரும்பக் கூறுவது இயல்பானது.**

**ஆந்திராவிலிருந்து நேற்று ஒரு கடிதம் வந்தது. என் அன்பர்கள் தாடேபள்ளிகுடத்தில் ஒரு கூட்டத்தை நிகழ்த்தி, பெண்மணிகளுக்கான எனது சகவாசத்தை முடிவு செய்தனர். ஆதிக்கு அந்த விவரங்களை பின்னர் அனுப்ப உள்ளனர். பிப்ரவரி மாதத்தின் மத்தியிலிருந்து ஒரு வருடத்திற்கு நான் வெளியே சென்றாக வேண்டும்.**

**இப்போது ஒன்றரை மாதங்கள் மட்டுமே உள்ளன, அதில் நான் என்னைத் சார்ந்திருப்பவர்களுக்குத் தேவையான அனைத்தையும் ஏற்பாடு செய்ய வேண்டும், கிழக்கு மற்றும் மேற்கிலிருந்து வந்த கடிதங்களுக்கு பதில் அனுப்ப வேண்டும் மற்றும் இரண்டு நாட்கள் ஸாக்கோரிக்குச் செல்ல வேண்டும். ஆந்திரா, ஹமிர்பூர் அல்லது கொல்கத்தா செல்ல எங்கே நேரம் உள்ளது?**

**எதுவாயினும், தேஷ்முக் ஒரு திட்டத்தை வரையட்டும், நான் பின்னர் அதைப் பார்த்துக்கொள்கிறேன். முதல் விஷயம் என்னவென்றால், இந்த சகவாச நிகழ்ச்சியைக் குறித்து நான் ஒருவருக்கும் வாக்குறுதி அளிக்கவில்லை, நான் முடிவு செய்தால், நானே தேதிகளை நிர்ணயிப்பேன். நாக்பூருக்கு நான் ஒரு தேதியை வழங்கி, மூன்று நாட்கள் அங்கேயே தங்க வேண்டும் என்று தேஷ்முக் பிடிவாதமாக இருக்கிறார்.**

தேஷ்முக் உடனே குறுக்கிட்டு, "பாபாவின் தரிசனத்திற்கு பெண்மணிகளுக்கும் உரிமை உண்டு, மேலும் அவர்களுக்கு அவரது சகவாசத்தை மறுப்பது சுயநலமாக இருக்கும்" என்றார்.

பாபா உடனடியாக மறுமொழி கூறினார்: **"தேஷ்முக் அவரது குடும்பம் எனது சகவாசத்தை அடையப்பெற வேண்டும் என்ற ஆவலுடன் இருக்கிறார்! நான் இதை இவ்வாறு செய்வேன். நான் தேஷ்முக்கை ஆறு முறை அரவணைப்பேன், அவர் திரும்பிச் சென்றதும் முதல் ஐந்து அரவணைப்புகளை அவரது மனைவி மற்றும் நான்கு குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். ஆறாவது தழுவல் தேஷ்முக்கிற்காக இருக்க வேண்டும். ஆனால் நான் உங்கள் அனைவரையும் ஆறு முறை அரவணைப்பேன் என்று எதிர்பார்க்காதீர்கள்! இறுதியாக நான் பெண்மணிகளுக்கான சகவாசத்திற்குச் செல்ல முடிவு செய்தால், நான் ஒரு நாள் நாக்பூருக்கு செல்வேன் - ஆனால் தரிசனம் வேறு எவருக்கும் இல்லை, செய்தித்தாள்களில் விளம்பரமும் இல்லை.**

**"தேஷ்முக் நான் சொல்வதைக் கேட்கிறீர்களா?"**

டிசம்பர் இறுதியில் நாக்பூரில் நடைபெறவிருக்கும் தத்துவ மாநாட்டில் (PHILOSOPHICAL CONFERENCE) பாபா கலந்து கொள்ள வேண்டும் என்று தேஷ்முக் சில நாட்களுக்கு முன்பு வற்புறுத்தியதைக் குறிப்பிட்டு, பாபா அவருக்கு நினைவூட்டினார்: **"நான் தத்துவவாதிகள் மற்றும் பிரபலமானவர்களுக்காக இல்லை! இந்த மாநாட்டின் மூலம் பிற தொடர்புகள் இருக்கும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால் நான் என் அன்பர்களுக்காக இருக்கிறேன்."**

தேஷ்முக் அப்போது, "உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன் பாபா" என்றார்.

**"ஸாவ்னேர் நாக்பூருடன் இணைக்கப்பட்டுள்ளது, ஆனால் இதர இடங்களில் இல்லை"** என்று பாபா பதிலளித்தார்.

ஸுலூ மெஷ்ராம், "ஜபல்பூருக்கு வருவேன் என்று நீங்கள் உறுதியளிக்கவில்லையா?" என்று கேட்டார்.

பாபா, "நான் நாக்பூருக்குச் சென்றால், வழியில் ஒரு நாள் உங்களை அங்கே சந்திப்பேன்" என்றார்.

மூன்று முன்னாள் சகவாசக் குழுக்களுக்கு அவர் அறிவுறுத்தியதைக் குறித்து பாபா கூறினார்:

**பிற மூன்று குழுக்களுக்கு நான் கூறிய மேலுமொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இங்கிருந்து புறப்படும்போது, நீங்கள் அனைவரும் நேரடியாக உங்கள் சொந்த இடங்களுக்கு என்னையும் அழைத்துச் செல்ல வேண்டும். நீங்கள் வணிகம் மற்றும் பலவற்றிற்காக, வேறு ஏதேனும் இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தால், பின்னர் அதைச் செய்யலாம். நீங்கள் இதைச் செய்யாவிடில், அது 50 சதவிகிதம் சகவாசத்திற்காகவும், 50 சதவிகிதம் வணிகம் மற்றும் பிற விவகாரங்களுக்காக மட்டுமே இருக்கும். வழியில் எங்கேனும் நின்று நிதானமாகச் செல்லாமல் பாபாவை அழைத்துக்கொண்டு நேராக வீட்டிற்குச் செல்ல வேண்டும்.**

இதை மராட்டியில் மொழி பெயர்க்கும் போது, டாக்கே, "பண்டர்பூர், ஷிர்டி அல்லது ஸாக்கோரி போன்ற வேறு இடங்களுக்கு நீங்கள் செல்லக்கூடாது" என்று கூறினார். இந்தத் தேவையற்ற வார்த்தைகளால் பாபா சற்றே சீற்றமடைந்தார், மேலும் டாக்கேயின் நாக்கு தவறிவிட்டதன் காரணமாக, பாபா, தமது முடிவில் திருத்தத்தை கொண்டுவந்து, மேலே குறிப்பிட்ட மூன்று ஸ்தலங்களில் ஏதேனும் ஒன்றை தரிசிக்க விரும்புவோர், அதை தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

**நீங்கள் அங்குச் செல்ல விரும்பினால், செல்லலாம்; ஆனால் வேண்டுமென்றே செல்ல வேண்டாம். நீங்கள் எங்கும் செல்வதை நான் விரும்பவில்லை, ஏனெனில் நீங்கள் இங்கு வருவது ஒரு புனித யாத்திரையை விட மகத்துவம் வாய்ந்தது. ஆனால் டாக்கே இந்தத் தவறான புரிதலை உருவாக்கியதால், ஷிர்டி, ஸாக்கோரி அல்லது பண்டர்பூருக்கு செல்ல விரும்புபவர்கள் செல்லலாம்.**

**நான் சொல்வதில், அங்கும் இங்கும் என மொழிபெயர்ப்பில் ஒரு தவறான வார்த்தை வித்தியாசத்தை ஏற்படுத்துவது, எந்த அளவுக்குத் தவறான புரிதலையும் உருவாக்குகிறது என்பதைப் பாருங்கள்!**

பாபா, டாக்கே சொன்னதை மீண்டும் மொழிபெயர்க்குமாறு கேட்டுக்கொண்டார், ஆனால் அவர் செய்த பிழை காரணமாக, அவர் கண்களிலிருந்து நீர் வழிந்தது, அவரால் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. பாபா, அப்போது பால் நாத்துவின் நண்பரான வி.ஜே. கேரிடம் மராட்டி பதிப்பை வழங்குமாறு கூறினார்.

அன்பர்கள் நேரடியாக அவரவர் இல்லத்திற்குச் செல்ல வேண்டும் என்று பாபா தனது விருப்பத்தைத் திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார், மேலும், **“எல்லா இடங்களும் என்னுடையவை. நான் உங்களை மன்னிக்கிறேன், டாக்கேயின் தவறுக்காகவும் மன்னிக்கிறேன். புனித யாத்திரையின் போது வணிகப் பயணம் விரும்பத்தக்கதல்ல. நீங்கள் ஷிர்டிக்கு வேறொரு பயணத்தை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால், உங்கள் அன்பின் நிமித்தம், ஸாக்கோரி, பண்டர்பூர் போன்ற இடங்களுக்கு, உங்கள் இல்லங்களைச் சென்றடைந்த பின்பு பயணம் செய்யலாம்.”**

டாக்கேயை அழைத்து, பாபா, அவரைத் தழுவினார்.

இந்தத் தெளிவான, திட்டவட்டமான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், சிலர் எழுந்து நின்று நேரடியாக வீட்டிற்குச் செல்வதில் உள்ள சிரமங்களை விளக்கினர், பாபா கூறினார்:

**தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம், ஆனால் இறுதி முடிவு உங்கள் கைகளில் உள்ளது. நான் சொல்ல விரும்பியதைச் சொல்லிவிட்டேன். ஆந்திராவைச் சேர்ந்த கட்டா சுப்பா ராவ், தெலுங்கு குழுவுடன் இங்கு வந்திருந்தார், இங்கு இருந்தபோது அவருக்கு நான்கு தொலைத்தந்திகள் மற்றும் அவசர தொலைபேசி அழைப்பு ஒன்றும் வந்தது, அவர் வேலை விஷயமாக மும்பைக்குச் செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார். என்ன செய்வது என்று என்னிடம் கேட்டார். அவர் என்னைப் பின்பற்ற விரும்பினால், முதலில் அவரது இல்லத்திற்குச் செல்லவும், பின்பு மும்பைக்குச் செல்லுமாறும் நான் அறிவுறுத்தினேன், அவர் கீழ்ப்படிந்தார். உங்கள் பிரச்சினைகளையும் சிரமங்களையும் குறைக்க நான் வரவில்லை. அவை முக்கியமற்றவை.**

எவ்வாறாயினும், தனது குடும்பத்தைத் தன்னுடன் அழைத்துச் செல்வதற்காக ஒரு மனிதன் தனது வழியிலிருந்து விலகிச் செல்ல பாபா அனுமதித்தார்.

**இப்போது ஒன்று மட்டுமே உள்ளது: பாபா பணியை செய்வது எப்படி? முந்தைய மூன்று குழுக்களில் உள்ள அன்பர்கள் பல ஆண்டுகளாக எனது அன்பையும் செய்தியையும் பரப்பும் பணியைச் செய்து வருகின்றனர்.**

**'உண்மையான பணி'யின் அர்த்தத்தை நான் அவர்களுக்கு விளக்கினேன்; முதலில் ராஜமுந்திரியில் மிக விரிவான விளக்கமளித்தேன், ஒரு சிறு புத்தகமும் அச்சிடப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் என் அன்பைப் பரப்புவதற்காக உழைத்தாலும், அவர்களுக்குள் வேறுபாடுகள் இருந்தன, அதை நான் மீண்டும் தெளிவுபடுத்த வேண்டியிருந்தது.**

**நான் மட்டுமே எனது பணியைச் செய்கிறேன்; வேறு எவராலும் எப்படிச் செய்ய முடியும்? சேவகர்கள் தங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, தங்களுக்குள் அன்பை உருவாக்காத வரை, எனது அன்பின் செய்தியை பிறரிடையே பரப்ப முடியாது என்று நான் அவர்களிடம் கூறினேன். தங்களுக்குள் அன்பு இல்லாத போது, என் அன்பைப் பற்றி பிறரிடம் கூறுவது சுத்த பாசாங்குத்தனம். என் மீதான உங்களின் சுய அன்பே பிற அனைவருக்கும் என் அன்பின் செய்தியாக இருக்கட்டும்.**

ஸாவ்னேருக்கு அருகில் வாழும் ஓர் ஏழை கிராமவாசி எழுந்து நின்று கேட்டார், "பாபா, நான் நள்ளிரவில் உங்கள் நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்க விரும்புகிறேன், ஆனால் என்னிடம் கைக்கடிகாரம் இல்லை, உண்மையில், முழு கிராமத்திலும் ஒரு கடிகாரம் கூட இல்லை. நள்ளிரவு என்பதை எப்படித் தெரிந்துகொள்வது?"

பாபா, போ:ஃபலியிடம், "**இது உண்மையா?**" என வினவினார்.

போ:ஃபலி அதற்கு, "ஆம், பாபா, அவருடைய கிராமம் காட்டின் நடுப்பகுதியில் உள்ளது, அங்கு எவரிடமும் கைக்கடிகாரம் அல்லது கடிகாரம் இல்லை" என்றார்.

பாபா அந்த நபருக்கு ஒரு கடிகாரத்தைத் தருவதாக உறுதியளித்தார், அடுத்த நாள் அதை அவருக்கு நினைவூட்டுமாறு கூறினார். அதன்பின், காலை 10:40 மணிக்கு, பூனா பஜன் மண்டலி மற்றும் ருஸ்தம் காக்கா பாடல்கள் பாடிய போது, பாபா பாராட்டினார். ருஸ்தம் காக்கா பாடிக்கொண்டிருந்தபோது, தப்லா இசைக்கலைஞர் சரியாக இசைக்காததால், பாபா தனது கால்களில் தட்டி, முறையாகத் தாளமிட உதவினார்.

11:00 மணியளவில், பாபா தமது அறைக்குச் சென்ற வேளையில், சகவாசக் குழு மதிய உணவுக்காக வெளியேறினர். பிற்பகல் 12:30 மணிக்கு, நேர்காணலைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா முழுக் குழுவையும் மண்டபத்திற்கு அழைத்தார், அங்கு அவர் கடவுளைத் தேடி அலையும் மூன்று வகையான ஆர்வலர்களைப் பற்றி ஐந்து நிமிடங்களுக்கு விளக்கினார். பாபா அழைத்தபோது, குழுவில் சிலர் மதிய உணவை முடித்த அந்த நேரத்தில், சிலர் உண்டுகொண்டும், மேலும் சிலர் உண்ணவும் காத்திருந்தனர்.

அவர்களை இரண்டு வரிசைகளில் அமர வைத்து, நடுவில் அமர்ந்து, பாபா கூறினார்: "**மூன்று வகையான ஆர்வலர்களைப் பற்றி விளக்குவதற்காக நான் உங்களை அழைத்தேன், நான் உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் மட்டுமே விளக்குவேன். மதிய உணவு உண்டவர்கள் மற்றும் அழைக்கப்பட்டவர்கள், நேர்காணலுக்குப் பிறகு சென்று ஓய்வெடுக்கலாம்,**

**நான் அழைத்தால் வரத் தயாராக இருக்க வேண்டும். உணவில் தடங்கல் ஏற்பட்டிருந்தால் மீண்டும் உண்ண வேண்டும், இன்னும் உணவு உண்ணாதவர்கள் உண்ணலாம்."**

தொடர்ந்து பாபா விளக்கினார்:

**இறைவனைத் தேடும் மூன்று வகையான ஆர்வலர்கள் உள்ளனர். முதல் வகை கடவுள் தனக்குள் இருக்கிறார், அவரை அகத்தில் காண வேண்டும் என்று கூறுகிறார்கள், "நான் எப்பாடுபட்டேனும் அவரைப் பார்த்தாக வேண்டும், எனவே நான் எனது முயற்சிகளைத் தொடர்வேன்." அவரது முயற்சியில், அவர் எண்ணற்ற கஷ்டங்களையும் சிரமங்களையும் சந்தித்தாக வேண்டும். ஆனால் இந்த வகையைச் சார்ந்த ஆர்வலருக்கு இரண்டாவது வகையைச் சார்ந்தவர்கள் காட்டும் அளவுக்குத் துணிச்சலும் தைரியமும் இல்லை. இறுதி இலக்கை அடைய அவருக்கு பல யுகங்கள் தேவைப்படும் அதே வேளையில், பயணிக்கும் பாதை துன்பங்களும் தடைகளும் நிறைந்ததாக இருக்கும்.**

**இரண்டாவது வகை, கடவுள் தனக்குள் இருக்கிறார் என்கிறார். அவருக்கு குருநாதர் தேவை இல்லை. எப்பாடுபட்டேனும், கடவுளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். தலைகுப்புற விழுந்து தன்னை மூழ்கடிக்கும் துணிவு அவருக்கு உண்டு.**

**மூன்றாவது வகை கடவுள் தனக்குள் இருப்பதாக நம்புகிறார், மேலும் அவருக்கு அளப்பரிய தைரியம் உள்ளது. தைரியம் என்றால் என்ன? கண்களை மூடிக்கொண்டு, குருநாதருக்குக் கீழ்ப்படிவதற்கு அவர் தயாராக இருக்கிறார். தன்னைப் பற்றிய சிந்தனையே இல்லாத அளவுக்குத் துணிச்சல் மிக்கவர்.**

மண்டபத்தில் எதிரெதிரே அமர்ந்திருந்த இரு குழுக்களிடையே நடந்து சென்று பாபா தொடர்ந்து கூறினார்:

**இதை மிகக் குறுகிய கால்வாயாக எடுத்துக் கொள்ளுங்கள், அதில் கொதிக்கும் நீர் பெருகி, பாய்ந்தோடுகிறது. இறை நாட்டம் மிக்க ஆர்வலர் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்குக் கடக்க வேண்டும். முதல் வகையைச் சார்ந்தவர்களுக்கு தைரியம் இல்லாததால், அவர் கரையின் நீண்ட, நெடிய தூரம் முழுவதும் நடந்து நகர்ந்து கொண்டே இருக்கிறார். பல யுகங்களுக்குப் பின்னர், அவர் எதிர்க் கரையை அடையும் போது, அவர் குறுகிய கால்வாயில் பெருகி ஓடும் கொதிக்கும் நீரைத் தவிர, நடைமுறையில் கடப்பதற்கு எந்த தூரமும் இல்லை என்பதைக் கண்டுகொள்கிறார்.**

**இது உண்மையிலும் உண்மை.**

**இரண்டாவது வகையைச் சார்ந்தவர், முதலாமவர் நீண்ட தூரம் கடந்து சென்ற சிரமத்தைத் தாங்கிக் கொள்ளும் வகை அல்ல. கொதிக்கும் நீரில் தலைகுப்புற மூழ்கி தன்னை முழுவதுமாக கரைத்துக் கொள்கிறார்.**

**மூன்றாவது வகையினர் மிகுந்த தைரியமும், துணிச்சலும் கொண்டவர்கள்; நீச்சல் தெரிந்தவர்கள். எதிர்க் கரையிலிருந்து வந்த**

**குருநாதர் தனது கரத்தை நீட்டி, அவரைத் தன் பக்கம் இழுத்துச் செல்லும் வகையில் உதவுகிறார். குருநாதர் மீதான தைரியம் மற்றும் நம்பிக்கையின் காரணமாக, அவர் கண்களை மூடிக்கொண்டே குருநாதரின் உதவியை ஏற்றுக்கொண்டு கடந்து செல்கிறார்.**

இந்த விளக்கத்திற்குப் பிறகு, மதிய உணவு உண்ணாதவர்கள் எழுந்துச் சென்றனர். மதியம் 1:00 மணிக்கு மண்டபத்தில் தொடங்கிய தனிப்பட்ட மற்றும் குழு நேர்காணல் மாலை 5:15 மணி வரை நீடித்தது. மண்டபத்தை விட்டு வெளியேறிய பாபா, சகவாசக் குழுவினருடன் அஹமதுநகரை நோக்கிச் செல்லும் சாலையில் வேகமாக நடந்து சென்று, சாலையோரம் இருந்த மரத்தின்கீழ் அமர்ந்தார்.

காடேக்கர் ஆர்த்தியை பாடி முடித்ததும், பாபா எழுந்து நிற்க, அப்துல் மஜித் கானின் உதவியை நாடினார். பாபாவின் கையைப் பிடித்து அவரைத் தூக்க முயன்ற போது, பாபாவை நோக்கி கீழே விழ இருந்தவர் மயிரிழையில் தப்பினார். பாபா காரை நோக்கிச் சென்ற வேளையில், அதன் அருகில் நின்று கொண்டிருந்த குஸ்தாஜியை, அவர் இருக்கையில் அமர்வதற்கு முன்பு, மூன்று முறை பார்த்தார். கார் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டதும், சகவாசக் குழு அவரைப் பாராட்டி குரல் எழுப்பியது.

1955 நவம்பர் 30 புதன்கிழமை, பாபா மெஹராஸாத்திலிருந்து காலை 7:30 மணிக்கு வந்தார். தோட்டக்காரர் ஒருவர் மண்டபத்தில் இருந்த பாபாவின் நீள் இருக்கையை ஒரு சிறிய படகு போல பூக்களால் அலங்கரித்து, தலைக்கு மேல் பூக்களால் வரைந்த குடை ஒன்றைத் தொங்கவிட்டிருந்தார். மாதவ் ராவ் மிஸாலின் மருமகனும் பாபாவுக்காக கிரீடம் ஒன்றை வடிவமைத்தார்.

மண்டலியுடன் சிறிது நேரம் தனது அறையில் உரையாடி, பாபா வெளியே வந்த வேளையில், மாதவ் ராவின் மருமகன் அவருக்கு மாலை அணிவித்து கிரீடத்தைத் தலையில் சூட்டினார். பாபாவின் அற்புதமான தோற்றத்தில், அவர் கிருஷ்ணரின் ஓவியங்களைப் போல் இருந்தார். டாக்டர் தேஷ்முக் தனது கேமராவை எடுத்துவந்து பல்வேறு கோணங்களில் புகைப்படம் எடுத்தார். மண்டபத்தில் நுழைந்த பாபா, கிரீடத்தை ரம்மியமான கோணத்தில் சாய்த்து, **"நான் எப்படித் தோற்றமளிக்கிறேன்?"** என்று கேட்டார். மலர் கிரீடத்தில் அவரைப் பார்த்து அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தேஷ்முக் புகைப்படங்களை எடுத்துக்கொண்டே சென்ற போது பாபா குறிப்பிட்டார், **"ஆந்திராவில் தேஷ்முக் கிட்டத்தட்ட 50 புகைப்படங்களை எடுத்தார். இறுதியில், அவரது கேமராவில் புகைப்படச் சுருள் இல்லாதைக் கண்டுபிடித்தார்!"**

பாபா, **"நேற்றிரவு யார் தூங்கவில்லை?"** என்ற கேள்வியை எழுப்பினார்.

மௌனி புவா அவரது மௌன சபதத்தைக் கைவிடுமாறு பாபா அறிவுறுத்தியதன் காரணமாகத் தூங்கவில்லை என்று ஒப்புக்கொண்டார்.

பாபா அவரிடம், "**நான் சொல்வதைச் செய்யும் வரை, நீங்கள் மௌனம் காத்தாலும், இல்லையென்றாலும் எல்லாம் ஒன்றுதான். எனவே நீங்கள் சிறிதும் கவலைப்படாமல், என்னுடைய வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்**" என்று உறுதியளித்தார்.

ஸுலூ மெஷ்ராம் எழுந்து நின்று கூறினார்: "நேற்று மாலை, நான் எனது சுற்றுப்புறத்தைப் பற்றி ஏறக்குறைய உணர்வின்றி இருந்தேன்; கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம், என்னைக் குளியலறையில் அடைத்து வைத்திருந்தேன். கடவுளிடமிருந்து இனிமையான தென்றல் என்னைக் கடந்து செல்வதை உணர்ந்தேன்; நான் பிறப்பு, இறப்புக்கு அப்பால் இருப்பதை உணர்ந்தேன். மெஹராபாத் சகவாச நிகழ்ச்சிக்கான பாபாவின் அழைப்பிற்கு பதிலளிக்கும் விதத்தில், நான் எனது குடும்பத்தையும், மரணப்படுக்கையில் இருந்த குழந்தையையும் முற்றிலும் மறந்துவிட்டேன். குழந்தை உயிருடன் உள்ளதா, இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. நான் மேலும் சில இனிமையான இசையைக் கேட்கவும், வாசனையை நுகரவும் செய்கிறேன்; நேற்று, நான் எனது கண்களுக்கு முன்னால் அற்புதமான ஒளியைக் கண்டேன், அதனால்தான் என்னால் தூங்க முடியவில்லை."

பாபா, சைகையால் ஸுலூவிடம் அமருமாறு அறிவுறுத்தி, கருத்துத் தெரிவித்தார்: "**ஸுலூ கூறுவது உண்மைதான்.** 1938 **ஏப்ரல் மாதத்தில், பதினான்கு வயது இளைஞனாக எனது தொடர்பில் வந்த அந்த நாளிலிருந்து, என் மீதான அன்பு அதிகரித்தது. என்னைப் பற்றி இயற்றியுள்ள பல பாடல்கள் ஒரு புத்தக வடிவில் வெளிவந்துள்ளது.**"

ஆனால், பாபா அவருக்கு உபதேசம் வழங்கினார்: "**உங்கள் அனுபவம் எதுவாக இருந்தாலும், அதைக் குறித்து பிறருக்குச் சொல்ல வேண்டிய தேவையில்லை! மிகவும் கவனமாகக் கேளுங்கள். இந்த சம்பவங்களை எடுத்துரைக்கும் வேளையில், அவை அகங்காரத்தைத் தூண்டிவிடுவது, உங்களுக்குக் கூட தெரியாது. 'இந்தக் காட்சியைக் கண்டேன், மிகவும் அற்புதமாக இருந்தது, நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தேன்...' இவை அனைத்தும் அகங்காரத்தை விரிவடையச் செய்யும்!**

"**அன்பு இருந்தால், அதை உங்கள் உதடுகளிலிருந்து நழுவ விடுவதானால், நீங்கள் அதை வீணடிக்கிறீர்கள்! அதை வார்த்தைகளில் வெளிப்படுத்தினால், அதை அழித்துவிடுகிறீர்கள்! நீங்கள் என்னை உண்மையிலேயே நேசிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள் - அந்த அன்பை உங்களுக்குள் பூட்டி வைக்க வேண்டும். வெளிவர அனுமதித்தால் அது அவமானத்திற்கு சமம்! நானாக உங்களிடம் கேட்டால், நீங்கள் விளக்கலாம், ஆனால் நீங்களாக அதைக் குறித்து பேச வேண்டாம்.**

"**நாம் நீண்ட நெடிய தூரம் செல்ல வேண்டும். 'மலையின் சிகரத்தை' எட்டவேண்டும். இறுதி இலக்கை அடையும் அவர்களின் முயற்சிகளில், ரிஷிகளும் முனிகளும் கூட அகங்காரத்தின் வெளிப்பாடுகளால் வீழ்வது சகஜம். எனக்கு உங்கள் மீது பிரியம், ஸுலூ. நீங்கள் எளிமையானவர்,**

**தூய்மையான, அப்பாவி இதயம் படைத்தவர். என்னை மேலும் மேலும் நேசியுங்கள், ஆனால் உங்கள் குடும்பத்தை விட்டு வெளியேறாதீர்கள். உங்கள் ஆரம்ப கால அமைதி குலைந்தால் கூட வருத்தப்பட வேண்டாம்.**"

மேலும் ஒருவர் எடுத்துரைத்தார்: "எனது கனவில், பாபா வன்முறை உணர்ச்சி வேகத்தில் இருப்பதைக் கண்டேன், அவர் என்னைப் பிடித்து காடேக்கரின் வயிற்றை நோக்கித் தள்ளினார், தொடர்ந்து காடேக்கரும் என்னை பாபாவின் மீது வீசினார். உடனடியாக கனவு கலைந்து நான் எழுந்தேன், மீண்டும் தூக்கம் வராமல் இருந்தேன்."

பாபா கேலி செய்தார், "**ஒரு விஷயம் என்னை மகிழச் செய்தது. கனவில் கூட நான் உங்களை காடேக்கரின் வயிற்றை நோக்கி வீசியதில் மகிழ்ச்சி அடைகிறேன்!**"

முந்தைய இரவில் அவரைக் கனவில் கண்ட மூன்று அல்லது நான்கு பேரை பாபா அரவணைத்துக் கூறினார்: "**நீங்கள் காணும் கனவுகள், நீங்கள் என்னைக் கனவில் காண்பது, நான் உங்களுக்கு அறிவுரைகளை வழங்குவது, இவை அனைத்திற்கும், இந்த சூழலில் என்னுடன் இருப்பதன் மூலம் உருவான அன்பு மற்றும் நம்பிக்கையால் விளைந்த உங்கள் மனப்படிவங்களே காரணம். எனவே, பாபா உயர்ந்தவர் என்பதால், உங்கள் கனவில் அவர் தம்மைக் காட்டுகிறார் என்று நினைக்காதீர்கள்! இந்த நீண்ட, நெடிய, அடிக்கடி வரும் மாயை எனும் கனவிலிருந்து உங்களை எழுப்ப நான் வந்துள்ளேன். உங்களுக்காக மேலும் அதிக கனவுகளை உருவாக்க அல்ல!**

"**இன்னுமொரு விஷயம்: தாதா மஹாராஜ், துனிவாலா பாபா மற்றும் பிறரை சிலர் குருவாக ஏற்றுக்கொண்டதில், எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அவர்களின் பெயர்களை நீங்கள் திரும்பத் திரும்ப உச்சரிக்கலாம். நானே அனைவரிலும் இருக்கும்போது, நான் ஏன் மறுத்துப் பேச வேண்டும்? நேற்று நிகழ்ந்த தனிப்பட்ட நேர்காணல்களின் போது, மூன்று அல்லது நான்கு பேர், அவர்கள் தங்கள் குருவின் பெயரை உச்சரிப்பதை நிறுத்திவிட்டு, பாபாவின் பெயரை உச்சரிக்கலாமா என்ற கேள்வியை எழுப்பினர். நான் கூறுகிறேன், அதனால் எந்த பயனும் இல்லை, நீங்கள் கடவுளின் பெயரை அல்லது வேறு எவருடைய பெயரை மொழிந்தாலும், நான் அங்கே இருக்கிறேன், பாபாவே பாபாவாக இருப்பது பௌதீக உடலளவில் மட்டுமல்ல!**

"**உங்களுக்கு உண்மையிலேயே கடவுள் வேண்டுமென்றால், நீங்கள் கடவுளைத் தேடுவதானால், எனது மேலங்கியைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வதே ஒரே வழி. வேறு எந்த வழியுமில்லை!**"

ஏழைகளுக்கான நிகழ்ச்சி தொடங்கவிருந்தது; பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**நான் ஏழைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கத் தொடங்கும் தருணத்தில், கடவுளின் பெயரை மொழிந்து, அந்த நிகழ்ச்சி நிறைவடையும் வரை, அதைத் தொடர வேண்டும்.**"

250 ஏழை ஆண்களும் பெண்களும் கூடியிருந்த பந்தலுக்கு பாபா நடந்து சென்றார். காலை, 8:30 மணிக்குத் தொடங்கிய நிகழ்ச்சியில் பாபா ஒவ்வொருவரின் கால்களையும் கழுவி, துண்டால் துடைத்து, கால்களில் தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் நான்கு ரூபாய் அன்புப் பரிசாக வழங்கினார். “பரபிரம்ம பரமாத்மா, அஹுரமஸ்தா, அல்லா ஹு அக்பர், எஸ்தான்” என அமைதியாக மொழிந்தது, மொத்த சூழலையும் அதிர்வலைகளால் வியாபிக்கச் செய்தது. அதே நேரத்தில் இறை மனிதன் ஏழைகளில் ஏழையாக தம்மை பாவித்து அவர்களின் கால்களில் தலைவணங்கினார்.

நீலுவை அழைத்த பாபா, ‘பரபிரம்ம பரமாத்மா’ என்று மெல்லிய குரலில் திரும்பத் திரும்ப மொழியுமாறு அறிவுறுத்தினார், மொத்த குழுவும் அவருடன் இணைந்தது. இதேபோல், அப்துல் மஜித் கான் ‘அல்லா ஹு அக்பர்’, ஹோமி ஹன்ஸோட்டியா ‘அஹுரமஸ்தா’ என்று மொழியவும் அழைக்கப்பட்டனர்.

ஏழைகளுக்கு மத்தியில் சத்ய மாங் நின்று கொண்டிருந்தார்; அவருடைய முறை வந்தபோது, மீண்டும் விழாவில் குறுக்கிட்டு, ஒரு சீர்திருத்த குற்றவாளியாக அவரது வரலாற்றுக் கதையை விவரித்தார். பாபாவின் முன் நின்ற சத்ய மாங் கண்கலங்கி அழத் தொடங்கினார்; அவரது கண்ணீர் பாபாவின் மீது அவருக்கு இருந்த அன்பையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்தியது.

காலை 9:30 மணியளவில், ஏழைகளுடனான பணியை நிறைவு செய்து, பாபா துனியை நோக்கிச் சென்ற வேளையில், அங்கு பக்கத்து ஊர் கிராம மக்கள் தரிசனத்திற்காக ஒன்று திரண்டனர். பாபா அவர்கள் மத்தியில் ஐந்து நிமிடங்கள் இருந்து, பின்னர் ஐந்து பெரிய பிரசாதத் தட்டுகளை ஆசீர்வதித்து மண்டபத்திற்குத் திரும்பிச் சென்றார். பெண்டு, பாதிரி இருவரும் பிரசாதம் விநியோகிக்க, கிராம மக்கள், மெஹர் பாபாவின் ஜெய் முழக்கங்களுக்கு மத்தியில் கலைந்து சென்றனர்!

மண்டபத்தில், ருஸ்தம் காக்கா, தத்து மெஹந்தர்கே இருவரும் பாடிய கஸல் பாடல்களை பாபாவும், சகவாச அன்பர்களும் பாராட்டினர். ருஸ்தம் காக்கா அதைத் தொடர்ந்து தனது நாசி வழியாக ஷெஹ்னாய் (கிளாரினெட் போன்ற கருவி) இசைக் கருவியை வாசிக்கத் தொடங்கினார்; அவரது ஐந்து நிமிட நிகழ்ச்சி மிகவும் வேடிக்கையாக இருந்தது. அப்துல் மஜித் கான் உருது மொழியில் அப்துர் ரஹ்மானின் பாணியில், இசைவான சைகைகள் மற்றும் முகமூடிகளுடன் ஒரு பாடலைப் பாடினார்.

மேலும் அவரது பாவனையும், நடிப்பும் (அவர் பதட்டமாக இருந்தாலும்) பாபாவை மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கச் செய்தது.



மெஹராபாத், நவம்பர் **1955**
(MEHERABAD**,** NOVEMBER 1955)



மெஹராபாத் ஏழைகளின் நிகழ்ச்சி, நவம்பர் **1955**
(MEHERABAD POOR PROGRAM NOVEMBER 1955)



மெஹராபாத், **1** டிசம்பர் **1955**
(MEHERABAD**,** 1 DECEMBER 1955)

முந்தைய நாள் உறுதியளித்ததற்கு இணங்க, பாபா, ஸாவ்னேருக்கு அருகாமையில் வாழ்ந்த ஏழை கிராமவாசிக்கு, அலாரம் கடிகாரம் ஒன்றை வழங்கினார், 1956 பிப்ரவரி 15ஆம் தேதி தொடங்கி, ஒவ்வொரு நாளும் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு, 365 நாட்களுக்கு, சரியாக 14 மற்றும் 28 முறை மாற்றி மாற்றி நாமம் மொழிவதைத் (பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது) தொடர வேண்டும் என்பதை மீண்டும் விளக்குமாறு போ:ஃபலியிடம் கூறினார்.

இதைத் தொடர்ந்து, மதிய உணவிற்குச் சென்ற சகவாசக் குழுவினர், பின்பு மண்டபத்தில் மீண்டும் கூடினர். மதுசூதனன், ருஸ்தம் காக்கா இருவரும் பிற்பகல் 3:45 மணி வரை இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்தனர், அதன்பின், மண்டபத்திற்குள் நுழைந்த பாபா, ஐந்து நிமிடங்கள் அலங்கரிக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தார். மீண்டும் மலர் கிரீடத்தை அணிந்துகொண்டு, சில நிமிடங்கள் மண்டபத்திற்குள் நடந்தார். தேஷ்முக் தனது கேமராவைத் தேடி ஓடி, திரும்பி வரும் வழியில், தடுக்கி விழுந்தார்.

நான்கு மணியளவில், பாபா முழு சகவாசக் குழுவுடன் அரன்காவ்ம் கிராமத்தை நோக்கி பாதயாத்திரையைத் தொடங்கினார். அங்கு அவருக்கு, கிராம மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பாபா முதலில் 'புவாஜி புவா'வின் சமாதிக்குச் சென்றபோது, கோயில் அர்ச்சகர், ஏழை எளியவர்களின் இல்லங்களை கருணையுடன் அருளியமைக்கு நன்றி தெரிவித்து, ஒரு சிறு உரை நிகழ்த்தினார். அர்ச்சகர், 1920 ஆண்டுகளில் அவர்களுடனான பாபாவின் ஆரம்பகால பணிகளையும், கிராமத்தினர் மீது அவர் பொழிந்த அன்பையும் நினைவு கூர்ந்தார்.

கிராம மக்களின் அருகாமையில் தங்கியிருப்பதன் மூலம் அவர் வழங்கிய சிறப்பான பங்களிப்பையும், ஆசீர்வாதத்தையும் அர்ச்சகர் பாராட்டினார். சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, டஜன் கணக்கான மலர் மாலைகளால் முழுவதுமாக மூழ்கடிக்கப்பட்டு, விரைவில் வியர்வையில் நனைந்தார். எரச், தொடர்ந்து பாபாவின் கழுத்திலிருந்த மாலைகளை அகற்றி, பாபாவின் முகத்தையும் புருவத்தையும் துடைத்துக் கொண்டிருந்தார். தேஷ்முக்கின் மகன் பிரபோத், ஒரு புத்தகத்தை வைத்து விசிறத் தொடங்கியபோது, சளி பிடிக்கும் என்று கூறி, பாபா அவரைத் தடுத்து நிறுத்தினார்.

பாபாவின் மராட்டி ஆரத்தியை காடேக்கர் (தேஷ்முக்கால் இயற்றப்பட்டது) பாடிய பின்பு, பாபா கிராமத்தில் ஒவ்வோர் இல்லத்திற்கும் விஜயம் செய்து, அருள் மழையைப் பொழிந்தார். ஆண் பெண் ஒவ்வொருவரும் பாபாவின் பாதங்களிலிருந்து தூசியை எடுத்து நெற்றியில் திருநீறு அணிய முயன்றனர்; பெண்மணிகள் தங்கள் சின்னஞ் சிறு குழந்தைகளையும் சிறுவர்களையும் இழுத்து அவரது பாதங்களில் அடிபணிய வைத்தனர். 'அன்று காலையில் பாபா ஏழைகளின் கால்களைக் கழுவி வழிபடுவராக இருந்தார், இப்போது அவர் வழிபடப்படுகிறார்!' ஒவ்வொரு வீட்டிலும் காடேக்கர் பாபாவின் ஆரத்தியைத் திரும்பத் திரும்ப நிகழ்த்தினார்.

கிராமவாசிகளின் ஏழ்மையை அம்பிகா சரண் ஸுக்லாவிடம் சுட்டிக் காட்டிய பாபா, "**பொருள் ரீதியாக அவர்கள் மிகவும் ஏழைகள், ஆனால் என் அன்பில் அவர்கள் உண்மையில் செல்வந்தர்கள்!**" கிராம மக்கள் தங்கள் குடிசைகளை சுத்தம் செய்து, சிலவற்றை அலங்கரித்தனர்; பாபா இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக வீடு வீடாக, குறுகிய, தூசி நிறைந்த பாதைகள் வழியாகச் சென்றார். ஆனால் பாபா, அவர்களின் அன்பின் நிமித்தம், தூசியை சற்றும் பொருட்படுத்தாமல், அவர் கிராமத்து மக்களிடையே ஒருவராக அனைவருடனும் வேடிக்கை கலந்த தொனியில் உரையாடி சிரித்து மகிழ்ந்தார்.

தொடர்ந்து பாபா குடும்ப குடியிருப்புக்கு நடந்து சென்று, அங்கு வாழ்ந்த பெண்மணிகள் அவருக்காக நிகழ்த்திய கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்து, மெஹராபாத் திரும்புவதற்கு முன்பு, மஸ்த் அலி ஷா, முஹமது ஆகியோரை சந்தித்தார்.

சகவாசக் குழு புறப்படுவதற்கு முன்னர், அன்பர்களின் தொண்டையில் தொற்று ஏற்படாமல் இருக்க, பாபா ஒவ்வொருவரிடமும் முகம், கை கால்களைக் கழுவி, நீர் அருந்தும் முன் வாயை நன்றாக சுத்தம் செய்யுமாறு அறிவுறுத்தினார். மேலும், மறுநாள் காலையில் முகம் கழுவும் முன்பு சூடான உப்பு நீரில் வாய் கொப்பளிக்குமாறும் அறிவுறுத்தினார். மாலைப்பொழுது 6:30 மணியைக் கடந்துவிட்டது. பாபா காரில் தன் இருக்கையில் அமர்ந்ததும், வெகுவான கோஷங்களுக்கு மத்தியில் மெஹராஸாத்திற்கு புறப்பட்டுச் சென்றார்.

அன்று மதியம், டாக்டர் மூர்த்தி, அவருக்கு பூனாவில் அவசர வேலை இருப்பதாகக் கூறி, வெளியேற பாபாவிடம் அனுமதி கோரினார். பாபா உடனே, "**சகவாச நிகழ்ச்சி நிறைவுறும் வரை உங்களால் இருக்க முடியாதா?**" என்று கேட்டார்.

அவர் கூறியது உண்மையல்ல என்றாலும், "இல்லை, தீவிர நோய்வாய்ப்பட்ட எனது தந்தையின் நண்பரைப் பார்க்க வேண்டும்" என்று மூர்த்தி பதிலளித்தார்.

பாபா அவரை வெளியேற அனுமதித்து, "**செல்லுங்கள், ஆனால் இனி இங்கு ஒருபோதும் திரும்பி வர வேண்டாம்**" என்று கூறினார்.

பல தடங்கல் மற்றும் தாமதங்களுக்குப் பிறகு, மூர்த்தி அன்று நள்ளிரவில் பூனாவை வந்தடைந்தபோது, அவரது தந்தையின் நண்பரின் வீடு பூட்டியிருப்பதையும், சுற்றிலும் எவரும் இல்லாததையும் கண்டு வியந்தார். பூனாவில் அவருக்கு வேறு எவரையும் தெரியாது. அவர் பாபாவிடம் கூறிய ஒரு பொய்யின் விளைவாக, இரவை ரயில் நிலைய நடைமேடையில் கழிக்க வேண்டியிருந்தது. அடுத்த நாள், அவர் மும்பைக்குச் சென்றபோது, அங்கிருந்த அவருடைய ஒரே நண்பர் கோமாவில் மயக்க நிலையில் இருந்ததைக் காண நேர்ந்தது. பின்னர் அவர் கரக்பூர் நகரில் தனது இல்லத்திற்குத் திரும்ப முடிவு செய்து, ரயில் பயணச்சீட்டை வாங்கினார். ஆனால், ரயில் நிலையத்தில் அவரது டிக்கெட் மற்றும் பணப்பை கொள்ளயர்களால் அபகரிக்கப்பட்டது. அவரிடம்

வெறும் ரூ.15 மட்டுமே இருந்தது. விரக்தியடைந்த அவர், அஹமதுநகருக்குப் பயணச்சீட்டை வாங்கிவிட்டு மெஹராபாத் திரும்பி வந்தார். பாபா அவரைப் பார்த்ததும், "**இனி இங்கு ஒருபோதும் வரவேண்டாம் என்று சொன்னேன். எதற்காக வந்தீர்கள்? உடனே சென்றுவிடுங்கள், நீங்கள் ஒரு பொய்யர்**" என்றார்.

பாபாவின் மனநிலை திடீரென மாறியது. அவர் மூர்த்தியை அணைத்து முத்தமிட்டு, "**நான் கடவுள் என்பதில் ஒரு போதும் சந்தேகம் வேண்டாம். நான் உங்களை மன்னிக்கிறேன். அனைத்தும் நான் அறிவேன்**" என்று மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

பாபாவிடம் பொய் சொல்வது குறித்து, மூர்த்தி கடினமான பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டார்; ஆனால் அந்த சம்பவம், பாபாவின் மீது அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கையை ஏற்படுத்தி, பாபாவின் பாதங்களில் தலை வணங்கச் செய்தது.

1955 டிசம்பர் 1 வியாழன் காலை 7:30 மணிக்கு பாபா மெஹராபாத் வந்தார். வழக்கம் போல, பாபா முதலில் மண்டலியை தமது அறையில் சந்தித்து, அவர் சமீபத்தில் மெஹராஸாத்தில் நடந்த நகைச்சுவையான சம்பவம் ஒன்றை எடுத்துரைத்தார். ஆண் மண்டலிக்கு உணவு தயார் செய்ய, அஹமதுநகரைச் சேர்ந்த ஒரு கோவானிய கிறிஸ்தவ சமையல்காரர் பணியமர்த்தப்பட்டார். பாபா அவரை தினமும் அழைத்து, அவரது உடல்நிலை, குடும்பம் மற்றும் பலவற்றைக் கேட்பது வழக்கம். மிகவும் கண்டிப்பான காக்கா பாரியா, மெஹராஸாத்தில் மேலாளராக இருந்தார், சமையல்காரர் அவரைக் கண்டு அஞ்சி நடுங்கினார். ஒரு நாள் பாபா சமையல்காரரை அழைத்து, "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**" என வினவினார்.

"மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்," என்று பதிலளித்தவர் தொடர்ந்து, "உங்களோடு வாழ்வதே தனி மகிழ்ச்சி; நாளுக்கு நாள் நான் உங்களைப் புரிந்துகொள்கிறேன். உங்களைப் பார்த்த முதல் நாளே ஒரு புனிதராக எடுத்துக் கொண்டேன்; அடுத்த நாள், எனது குருநாதராகப் பார்த்தேன்; இப்போது நான் உங்களைக் கடவுளாகக் கருதுகிறேன். ஆனால், எனது புத்தி (தலை) காக்காவின் கையில் இருப்பதால், நான் முதலில் அவரை வணங்க வேண்டும், பின்னர் உங்களை வணங்க வேண்டும்!"

இதையெல்லாம் அந்த சமையல்காரர் ஆர்வமூட்டும் உற்சாகமான சைகைகளுடன் கூடிய பாவனையில் வெளிப்படுத்தியதைப் பார்த்து எரச், காக்கா, பைதூல், கிருஷ்ணா, குஸ்தாஜி, குமார் போன்ற மெஹராஸாத் மண்டலியைப் போலவே, பாபாவும் மனமுவந்து சிரித்தார். அன்று முதல், பாபா சமையல்காரரை அழைத்து, அவர் முன்னிலையில் ஏதாவது தலைப்பைக் கொண்டு வந்து, அவருடைய பதிலைக் கேட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது வழக்கம்.

ஒரு நாள் பாபா அவரை அழைத்துக் கேட்டார், “**உங்கள் உள்ளம் நல்ல உள்ளம், ஆனால் உங்கள் நடத்தை?**”

பதிலுக்கு சமையற்காரர் அவரது கைக்குட்டையை எடுத்து விளக்கினார், “இது என்னுடையது. ஏன்? ஏனெனில் அதற்காக நான் பணம் செலுத்தினேன். அதுபோல, நான் ஒரு பெண்ணுடன் தூங்கும்போது, அதற்கு நான் பணம் செலுத்துகிறேன். அதில் பாவம் எங்கே இருக்கிறது? நீங்கள் கடவுள், நீங்களே சொல்லுங்கள். நான் பணம் கொடுக்கிறேன், அதில் பாவம் எங்கே உள்ளது?”

இதைக் கேட்டு பாபா சிரித்தார், சிரித்துக்கொண்டே இருந்தார்.

பாபா பின்னர் அறையை விட்டு வெளியேறி மண்டபத்திற்குச் சென்றார்; அங்கு, பூனா பஜன் மண்டலி ‘விழித்தெழு! ஓ எழுந்திரு! அவதார புருஷர் வந்துவிட்டார்!’ (AWAKE! O WAKE UP! THE AVATAR HAS COME!) என்ற பாடல் வரிகளைப் பாடத் தொடங்கிய போது, பாபா கூறினார், “**நேற்றிரவு நீங்கள் எப்படித் தூங்கினீர்கள் என்று நான் இன்னும் கேட்கவில்லை என்பதை இந்தப் பாடல் எனக்கு நினைவூட்டுகிறது.**”

நாசிக் நகரின் பழைய பக்தரும், உபாஸனி மஹாராஜின் சகோதரரின் மகனுமான எஸ்.என். குல்கர்னி (S.N. KULKARNI) எழுந்து நின்று, “நேற்றிரவு எனது கனவில் நான் பாபாவிடம் கேட்ட சில கேள்விகளுக்கு அவர் பதில் எதுவும் வழங்கவில்லை. நான் மிகவும் ஏமாற்றமடைந்தேன், ஆனால் நான் விழித்தபோது மிகுந்த அமைதியுடன், மகிழ்ச்சியாக உணர்ந்தேன்.” அவரை அழைத்து பாபா அணைத்துக் கொண்டார், குல்கர்னி மௌனமாக அவர் தோளில் சாய்ந்து அழுதார்.

வினோபா பாவே (VINOBA BHAVE) நன்கு அறியப்பட்ட சமூகத் தலைவர். பாவேயின் உறவினர் ஏ.வி. பாவே (ஆசிரியர்) எழுந்து நின்று, “நான் தூங்கினேனா அல்லது விழித்திருந்தேனா என்று எனக்குத் தெரியவில்லை…” என்றார்.

பாபா கேலி செய்யும் முக பாவனையுடன் புன்னகைத்து இடையே, “**அப்படியானால், நீங்கள் இப்போது ஆழ்ந்த தூக்கத்தில் விழித்திருக்கும், அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலைக்கு வந்துவிட்டீர்கள்!**” என்று குறிப்பிட்ட வேளையில் அனைவரும் சிரித்தனர், பாபா அவரைத் தழுவிக்கொண்டார்.

பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க மதுசூதனன் பாடலை மீண்டும் தொடங்கினார். பாபா, “**அனைவரும் விழித்துக்கொண்டனர்!**” என்று நகைச்சுவையாகக் கூறினார்.

காலை 8:05 மணிக்கு, பாபா மண்டபத்தை விட்டு வெளியே வந்தபோது, அவருக்காக ஒரு பெரிய கூட்டம் காத்திருந்தது. பாபாவின் தரிசனத்திற்காக 30 மைல் தொலைவில் அமைந்த ‘கூப் பாள்வனி’ (KUP BHALWANI) என்ற கிராமத்திலிருந்து, பல ஆண்களையும் பெண்களையும் காளை வண்டிகளில் விபூதி அழைத்து வந்தார். மேல்மலை சென்று திரும்பும் வரை, அவர்கள் கைகால்களைக் கழுவி, உணவு உண்டு, ஓய்வெடுக்குமாறு பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

பாபா மெஹராபாத் மேல்மலை மீது ஏறத் தொடங்கியதும், சகவாசக் குழு அவரைப் பின் தொடர்ந்தது; அவர் செல்லும் வழியில் இருபுறமும் கூழாங்கற்களை வீசினார். நாக்பூரைச் சேர்ந்த ஸ்ரீமந்த் ஜி.ஜி. புட்டி (G.G. BUTY, புட்டி ஸாஹேப்பின் மகன்) காலணிகளைத் தவறவிட்டதால், வெறுங்காலுடன் நடந்து கொண்டிருந்தார். இதை கவனித்த பாபா, அக்கறையுடன் சிறுவனிடம் கேட்டதும், குமார், தனது காலணிகளைக் கழற்றி புட்டியிடம் கொடுத்தது பாபாவை மகிழ்வித்தது.

சில கணங்களுக்கு, பாபா தன்னுள் சிந்தனையில் ஆழ்ந்திருக்க, அவரது கைகள் வெவ்வேறு திசைகளில் வேகமாக நகர்ந்தன. மேல்மலையை அடைந்ததும், முந்தைய குழுக்களுடனான நிகழ்வுகளைப் போலல்லாமல், பாபா அனைவரையும் நேராக அவரது சமாதிக்கு அழைத்துச் சென்றார்; மேலும் அறிவுறுத்தியபடி, பாபாவின் எதிர்கால சமாதியின் முக்கியத்துவத்தை, டாக்கே மராட்டியில் சில வார்த்தைகளில் விளக்கினார். ஒவ்வொரு நபரும் பாபாவை பார்த்தபடியே சமாதியை தரிசனம் செய்தனர். அனைவரும் தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்த பின்பு, பாபா தாமே சமாதியின் கதவைப் பூட்டினார்.

அஹமதுநகரிலிருந்து புகைப்படக் கலைஞரான பைய்யா பாண்டே அழைக்கப்பட்டார், மேலும் அவர் வெவ்வேறு சிறு குழுக்களுடன் பாபாவின் 20 காட்சிகளைப் புகைப்படம் எடுத்தார். தொடர்ந்து, பாபா அவர்களை மெஹர் ரிட்ரீட் கட்டிடத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு, தகரக் கொட்டகையின் கீழ், அனைவரும் ஒரு கம்பளத்தின் மீது அமர்ந்தனர்; பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்து, பிரேம் ஆசிரமம், சமாதியில் ஏகாந்தவாசம் மேற்கொண்ட சம்பவம், ஆரம்ப நாட்களில் மெஹராபாத்தின் பிற நடவடிக்கைகள் பற்றி அவர்களிடம் கூறினார். இறுதியில், பாபா, **"உங்களை நானே எனது இறுதி ஸ்தலத்திற்கு அழைத்து வந்தது, உங்கள் மாபெரும் பாக்கியம். 60 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த இடம் உலக யாத்திரீகர்களின் மையமாக இருக்கும்"** என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, காலை 9:30 மணிக்கு, குழுவுடன் இணைந்து, பாபா கீழ் மெஹராபாத்திற்குத் திரும்பிச் சென்று, அவர் துனிக்கு அருகில் காத்திருந்த கூப் பாள்வனி கிராமவாசிகளை சந்தித்தார். அவர்களில் ஒரு தொழுநோயாளியை பாபா துனிக்கு அருகில் அமருமாறு கூறி, அவரிடம் சென்று பாபா தலையில் கை வைத்து ஆசிகளை வழங்கினார். பாபா பந்தலில் அமர்ந்தபோது, கூப் பாள்வனி கிராம மக்கள் அவரை தரிசனம் செய்து பஜனை பாடத் தொடங்கினர்.

மணி பதினொன்றைத் தாண்டியதால், பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க அனைவரும் மதிய உணவிற்குச் சென்றனர். மதியம் 12:30 மணியளவில், உணவுக்குப் பின்பு, பாபா இதுவரை நேர்காணல் வழங்காதவர்களுக்கு, தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கத் தொடங்கினார். இது பிற்பகல் 2:15 வரை நீடித்தது, அப்போது, குழுவை மண்டபத்திற்கு வரவழைக்கும் மணியோசை கேட்டது.

ஒரு பாடல் முடிந்ததும், பாபா அவர்களைத் தன்னுடன் துனிக்கு வருமாறு கேட்டுக் கொண்டார், அங்கு பாபா, கிராம மக்களுக்கும், சகவாசக் குழு

மற்றும் மண்டலி அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். பாபாவின் கைகளிலிருந்து பிரசாதத்தை அடையப்பெறும் வாய்ப்பைத் தவறவிடாமல் கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தினார். காலையில் சிலர் மெஹராபாத் மேல்மலை வளாகத்தைப் பார்க்கச் சென்றதால், சமாதிக்குள் செல்லும் வாய்ப்பைத் தவறவிட்டனர்.

பிற்பகல் 2:40 மணியளவில், துனியிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்த கிணற்றருகில், ஒரு மரத்தின் கீழ் நின்று, பாபா பிரசாதம் வழங்கினார். யஷ்வந்த் ராவ் பாபாவிடம் கொடுத்த பிரசாதத்தை, முதலில் கிராமத்து பெண்களுக்கும், தொடர்ந்து கிராமத்து ஆண்களுக்கும், கடைசியாக சகவாச குழு மற்றும் மண்டலிக்கு வழங்கினார். பிரசாதம் விநியோகிக்கும்போது, பாபா தீவிரமான மனநிலையில் இருந்து, அனைவரிடமும் பிரசாதத்தை அங்கேயே உண்ணுமாறும், அதை வீட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார். ஒவ்வொருவருக்கும் இரண்டு லட்டுகள் வழங்கப்பட்டன. குஸ்தாஜிக்கு, பாபா மூன்று லட்டுகளைக் கொடுத்து, அவரது தலையைத் தொட்டார். மதியம் 3:10 மணியளவில், தேநீர் அருந்தி, குழுவை மண்டபத்திற்குள் வருமாறு அறிவுறுத்தினார்.

பாபா மண்டபத்திற்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, சாலையோரத்தில் ஒரு மரத்தின் கீழ் பல ஏழைகள் அமர்ந்திருந்ததைக் கண்டு, பாபா, எஞ்சியிருந்த இனிப்புப் பண்டங்களை எடுத்துச் சென்று, ஒவ்வொருவருக்கும் மூன்று லட்டுகளை வழங்கினார். ஏழைகளில் சிலர் பார்வையற்றவர்களாகவும், ஊனமுற்றவர்களாகவும் பலவீனமாகவும் இருந்தனர்.

பிற்பகல் 3:25 மணிக்கு, சகவாசக் குழுவினர் மண்டபத்தில் கூடினர். பாபா அற்புதமான மனநிலையில் காணப்பட்டார். அவர்கள் உள்ளே நுழைந்ததும், மண்டபத்தில் மிக வேகமாக முன்னும் பின்னுமாக, ஒரு பக்கத்திலிருந்து மறுபுறம் நடந்து கொண்டிருந்தார், சில சமயங்களில் தெற்கு பக்கத்தில் அமைந்த ஜன்னலில் சிறிது நேரம் நின்று, தனது வேக நடையை மீண்டும் தொடர்ந்தார்; பின்னர் அமர்ந்தாலும், அவர் ஒரு தீவிர சிந்தனையில் ஆழ்ந்து, சுற்றுப்புறத்தை மறந்தவர்போலத் தென்பட்டார். காலம் இதை இவ்வாறு வர்ணித்தது: "அவரது விரல்கள் நடனமாடின; அப்போது, அமைதியான பாடல் ஒன்று உருவாகி, அங்கிருந்த அனைவரின் இதயங்களையும் தொட்டது. சூழல் தீவிரமாக மாறிய அந்த நேரத்தில், தெய்வீக மதுபானம் அதன் தாக்கத்தைத் தணித்தது."

3:45 மணிக்கு, மண்டபம் நிரம்பி வழிந்தது, மறுபடியும் பஜனை ஆரம்பமானது. ருஸ்தம் காக்கா அஹமதுநகரிலிருந்து ஒரு பாடகரை அழைத்து வந்திருந்தார்; பாபா, இசை நிகழ்ச்சியில் மகிழ்ச்சியடைந்ததாகத் தோன்றினாலும், அவர் வழக்கத்திற்கு மாறான மனநிலையில் காணப்பட்டார். அவர் பாடலின் சில வரிகளை விளக்கினார், ஆனால் அவரது 'மனம்' அதன் மேற்பரப்பை விட, ஆழ் கடலில் அதிகமாக மூழ்கியதுபோலத் தோன்றியது. திடீரென, மாலை 4:30 மணிக்கு, பாபா, **"இப்போது என்னை மெஹராஸாத் செல்ல**

**அனுமதிப்பீர்களா?**" என்று கேட்க, "இல்லை!" எனும் ஒருமித்த குரல், பாபாவின் முகத்தில் புன்னகையை வரவழைத்தது, அவரும் அதீத ஆர்வத்துடன் காணப்பட்டார்.

ஸாக்கோரியைச் சேர்ந்த நஸர்வான் பரூச்சா கால்களை உயர்த்தி அமர்ந்திருந்தார், பாபா அவரைப் பார்த்து, "**தயக்கம் வேண்டாம், உங்களுக்கு சௌகரியமாக இல்லை என்றால் உங்கள் கால்களைத் தயங்காமல் நீட்டுங்கள். நீங்கள் வசதியாக அமர்ந்து, சாவகாசமாக உணருங்கள். நான் எங்கும் இருக்கிறேன்; நீங்கள் வெட்கப்பட வேண்டாம்!**" இதை எடுத்துரைக்கும் போது, எரச் கவனக்குறைவாக பரூச்சாவைக் குறிக்கும் வகையில், வயதானவர் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் ("வயதானவர்கள் சாவகாசமாக, நிம்மதியாக இருக்க வேண்டும்..." என்று கூறினார்) அதைத் தொடர்ந்து, பாபா, "**அவர் வயதானவர் அல்ல, இளைஞர்!**" என்று கூறி, பரூச்சாவிடம், "**உங்களுக்கு வயதாகிவிட்டதா?**" என வினவியதும், பரூச்சா, "இல்லை, பாபா!" என்றார். பரூச்சா வயதில் முன்னேறிச் செல்வதால், கூட்டம் சிரிப்பு ஆரவாரம் செய்தது. அந்த சிரிப்புக்கு இடையே பாபா, எரச்சின் தவறுக்காக அவர் காதைத் திருகினார்.

மாலை 5:00 மணிக்கு, பாபா கூறினார்: "**அனைவரும் நாளை காலை எட்டு மணிக்கு மெஹராஸாத்திற்கு வர வேண்டும், அப்போது நான், குறிப்பாக 'மனோ நாஷ்' காலகட்டத்தில், பலமுறை ஏகாந்தவாசம் மேற்கொண்ட மலையின் மீது உங்களை அழைத்துச் செல்ல முடியும். மலை சற்று செங்குத்தானதாக இருப்பதால், பலவீனமானவர்கள் மற்றும் வயதானவர்கள் என்னுடன் நடக்க, நான் மெதுவாகச் செல்வேன் - நான் பரூச்சாவிற்கு உதவுவேன்! உங்களில் இளைஞர்கள் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் திறமையைக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் வேகநடை போடவேண்டாம், ஏனெனில் சிதறிக்கிடக்கும் தளர்வான கூழாங்கற்கள் மீது கால்கள் நழுவக்கூடும். ஆனால் உங்களில் எவரேனும் என்னுடன் மலை ஏறும் வேகத்தைக் காட்ட விரும்பினால், நான் தயாராக இருக்கிறேன்! நான் எவரையும் விஞ்சிவிடுவேன்!**"

அனைவரும் சிரித்தனர். மண்டபத்தை விட்டு வெளியேறிய பாபா, சாலையில் சிறிது தூரம் நடந்து சென்று ஒரு மரத்தின் கீழ் தரையில் அமர்ந்தார். முழுக் குழுவும் அவரை சூழ்ந்து கொண்டது; காடேக்கர் ஆரத்தி நிகழ்த்த, அனைவரும் அதில் பங்கேற்றனர். பாபா தமது கரங்களைக் கூப்பி வணங்கி மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

மராட்டி சகவாசக் குழு, 1955 டிசம்பர் 2 வெள்ளிக்கிழமை காலை மெஹராஸாத்திற்குச் சென்றது; மேலும் உறுதியளித்தபடி, பாபா அவர்களை ஏகாந்தவாச மலைக்கு அழைத்துச் சென்று, அவர் முந்தைய குழுக்களுடன் செய்ததைப் போலவே, இதர குறிப்பிடத்தக்க இடங்களையும் அவர்களுக்குக் காட்டினார். குழு, சுமார் 11:00 மணியளவில் மெஹராபாத் திரும்பியது, பாபா ஒரு

மணி நேரம் கடந்து, நண்பகலில் வந்தார். அவர் வந்தபோது, அனைவரும் மதிய உணவு உண்டு கொண்டிருக்கவே, பாபா சாப்பாட்டுப் பந்தலுக்குள் நுழைந்து, அவர்களுடன் கலந்துரையாடி, அனைவரும் நிறைவாக உண்ணும்படி சைகையால் தெரிவித்தார். சில நகைச்சுவை துணுக்குகளைப் பரிமாறிவிட்டு, சமையலறைக்குச் சென்ற பாபா, அங்கு அவர் ஒரு மாத காலமாக, தினமும் 200 பேருக்கு உணவு வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஷஹஸ்த்ரபுத்தே மற்றும் அவரது ஊழியர்களைப் பாராட்டினார்.

ஒரு கட்டத்தில், பாபா, வாணலி ஒன்றை எடுத்து தேஷ்முக்கின் தலை மேல் வைத்து, "**ஒரு நாள் சீனர்கள் இந்தியாவிற்குள் நுழைவார்கள். இந்த வாணலி உங்களை குண்டுகளிலிருந்து பாதுகாக்கும்**!" (இதற்குச் செவிமடுத்தவர்கள் பாபாவின் கருத்தை இலகுவாக எடுத்துக் கொண்டனர், ஆனால் 1962இல் சீனர்கள் இந்தியாவை ஆக்கிரமித்தபோது, அந்த நிகழ்வுக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பே பாபா ஏதோ ஒரு வகையில் இந்தியாவைப் பாதுகாக்கப் பணிபுரிந்திருக்கலாம் என்பதை உணர்ந்தனர்.)

டிசம்பர் 2 சகவாசத்தின் இறுதி நாளாகும், பாபா, சமையல் பணியாட்களிடம் விடைபெற்று, ஒவ்வொருவரையும் தழுவி, அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். சகனும் கடுமையாக உழைத்தார். இரவு 8:00 மணிக்கு படுக்கைக்குச் சென்று, நள்ளிரவில் எழுந்து, சகவாசக் குழுவிற்கான காலை உணவைத் தயார் செய்யத் தொடங்கவே, அது காலை 5:00 மணிக்குத் தயாராகிவிடும். அவர் நாள் முழுவதும் சமையலில் ஈடுபட்டிருந்ததால், தொடர்ந்து ஒரு மாதத்திற்கு ஒரு நாளைக்கு நான்கு மணி நேரத்திற்கும் மேலாக ஓய்வெடுக்கவில்லை.

மதியம் 12:30 மணியளவில், மராட்டி குழுவினர் மண்டபத்தில் கூடியிருந்தனர், பாபா, காடேக்கரிடம், "**எவ்வளவு சாப்பிட்டீர்கள்**?" என்று கேட்டார்.

"மிகக் குறைவாக" என்று காடேக்கர் பதிலளித்தார்.

பாபா உடனே, "**ஆனால் நீங்கள் எட்டு பூரிகள், ஒரு தட்டில் பருப்பு, சாதம், இரண்டு கிண்ணம் நிறைய ஸ்ரீகண்ட், மற்றும் ஒரு தட்டில் பஜ்ஜிகள் போன்றவற்றை எடுத்துக்கொண்டதை நான் பார்த்தேன்**!" என்றார்.

எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தனர், லிம்கர் இடைமறித்து, "காடேக்கர் பதினாறு பூரிகளை உண்டார், பாபா. நான் அவற்றை எண்ணினேன்!" என்று கூறினார்.

இதனால், சிறிது நேரம் வேடிக்கையும் நல்ல நகைச்சுவையும் நிரம்பிய சூழலாக இருந்தது. பஜனை பாடல்கள் தொடர்ந்தன, மேலும் ஒரு மணி நேர இசை நிகழ்ச்சிக்கு பிறகு, பலர் தூங்கி விழுவதைக் காண முடிந்தது. எனவே மதியம் 1:50 மணிக்கு, பாபா குழுவினரிடம், "**பதினைந்து நிமிடங்கள் ஓய்வெடுத்து, மீண்டும் வந்து நீங்கள் இப்போது அமர்ந்திருக்கும் இடத்திலேயே அமருங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

குழுவினர் கலைந்து சென்றதும், பாபா மேற்கு வராண்டாவில் இருந்த மண்டலியுடன் உரையாடினார். சரியாக பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பெரும்பாலான சகவாச அன்பர்களைப் போலவே அவரும் மண்டபத்திற்குள் நுழைந்தபோது, அவர்கள் ஏற்கனவே அமர்ந்திருந்த இடத்தைக் கண்டறிவது கடினமாக இருந்தது. தேஷ்முக்கிற்கு அவர் எங்கு அமர்ந்திருந்தார் என்பது நினைவில் இல்லை. குழப்பம் ஒரு சிறந்த கேளிக்கையாக அமைந்தது, பாபா அதை மிகவும் ரசித்தார்.

ஆனால் விரைவில் அவரது மனநிலை மாறியது, ஏனெனில் நாக்பூரைச் சேர்ந்த பி.எல். ஷெர்லேக்கர் (B.L. SHERLEKAR), பாபாவின் அனுமதியின்றி, அவரது மனைவியிடம் மஸ்த் குத்தாவாலாவை (MAST KUTTAWALA) அழைத்து வரக் கூறியதும், அவர்கள் அன்று காலை மெஹராபாத் வந்தனர். பாபா அவரது சகவாச நிகழ்ச்சியினிடையே இந்த இடையூறுகளால் மகிழ்ச்சியாக இல்லை. மஸ்த் அரன்காவ்ம் கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் சுற்றியுள்ள அனைத்து கிராமத்து நாய்களையும் ஒன்றுதிரட்டினார். பின்னர், அவரது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், மெஹராபாத்திலிருந்து நாய்களுக்கு உணவு மற்றும் பால் அனுப்பப்பட்டது, அவற்றிற்கு உணவளித்த பிறகு, மஸ்த், அவராகவே மெஹராபாத்திற்கு வந்து, பின்னர் அஹமதுநகருக்குச் சென்று அங்கிருந்த வெறி நாய்கள் மற்றும் பசுக்களுக்கு உணவளிக்க விரும்புவதாகக் கூறினார், இது பாபாவை மேலும் மோசமான மனநிலையில் ஆழ்த்தியது.

பிற்பகல் 2:30 மணியளவில், தேநீருக்கான இடைவெளி நேரத்தில், பாபா தமது அறையில் குத்தாவாலா மற்றும் ஷெர்லேக்கரைக் குறித்து என்ன செய்வது என விவாதித்தார். பின்னர், அவர்கள் அனைவரையும் அஹமதுநகருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது, மேலும் ஷெர்லேக்கருக்கு அவர்களின் செலவுக்காக ரூ.30 வழங்கப்பட்டது.

அதன்பிறகு, பாபா மீண்டும் மண்டபத்திற்குள் நுழைந்து, அண்மையில் காலமான காக் ஸாஹேப் எழுதிய கஸலை மதுசூதனன் அவரது பஜனைக் குழுவினருடன் பாடியதைக் கேட்டார். பின்னர் அவர் சகவாசக் குழுவிற்கு இவ்வாறு உரையாற்றினார்: “**மஸ்த் குத்தாவாலா பாபாவிற்கு உண்மையில் சுய உணர்வு இல்லை, மேலும் அவரது அனைத்து செயல்பாடுகளும் தானாகவே நிகழ்கின்றன. நாக்பூரில் அவரைப் பின்பற்றுபவர்கள் ஏராளமான பேர் உள்ளனர்.**”

மஸ்த் அலி ஷா மற்றும் முஹமதைப் பற்றி பாபா கூறுகையில்:

**இவர்களைப் போல் உலகில் பலர் இல்லை. ஆனால் ஆன்மீகப் பாதையில் இவர்களை விட மேல்நிலையை அடைந்த ஆன்மாக்கள் பலர் உள்ளனர். இந்த இரண்டு மஸ்துகளும் என் அன்பில் மூழ்கி, எனது விரல்களில் ரத்தினங்கள் போல ஜொலிக்கின்றனர். ஆன்மீகப் பாதையில், படிப்படியாக ஒருவர் தனது பௌதீக உணர்வை இழக்கிறார். முதல் ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஒரு நபர், சாதாரண பௌதீக உலகைப் பற்றிய**

**விழிப்புணர்வு இல்லாத அளவுக்கு மயங்கிய நிலையில் இருக்கிறார். அடுத்து வரும் அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் இதே நிலைதான். ஆன்மீகப் பாதையில் தொடர்ந்து அடையப்பெறும் முன்னேற்றத்துடன், ஒருவர் ஏழாவது ஆன்மீகத் தளத்தை அடையும் வேளையில், அவர் தனது பௌதீக, சூட்சும மற்றும் ஆழ்மன உணர்வை இழந்துவிடுகிறார்; இப்படி, இறைநிலையை எய்துகிறார். இறை உணர்வுக்குப் பின்னர், உடலைத் துறக்காவிடில் மஜ்ஜூப்** (பால்-உன்மந்த்-பிஷாஷ் - BAL-UNMANT-BISHASH) **என அழைக்கப்படும் நிலையை எய்துகிறார். இந்த நிலையை அடைவது வேடிக்கை விளையாட்டல்ல. முதல் ஆன்மீகத் தளத்தில், ஒருவர் தனது பௌதீக உடல் உணர்வை இழந்து பைத்தியக்காரனைப் போல நடந்து கொள்கிறார்.**

**உலகப் பைத்தியக்காரனைப் பொறுத்தவரை, உலகப் பைத்தியக்காரனையும் ஆன்மீகப் பைத்திய-மஸ்தையும் வேறுபடுத்துவது கடினம்; மேலும் ஆன்மீகப் பைத்திய-மஸ்த் எந்த ஆன்மீகத் தளத்தைச் சார்ந்தவர் - முதல் ஆன்மீகத் தளம் அல்லது இரண்டாவது ஆன்மீகத் தளம் அல்லது மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது அல்லது ஏழாவது ஆன்மீகத் தளம் என்பதைப் புரிந்துகொள்வது இன்னும் கடினம். இவர்களைப் போன்ற லட்சக்கணக்கான இறைநிலையை (ஏழாவது ஆன்மீகத் தளம்) எட்டிய ஆத்மாக்களில் ஒருவர், சாதாரண உணர்வு நிலையை (பௌதீக, சூட்சும மற்றும் ஆழ்மன) அடையப்பெறுகிறார்; பின்னர் அவர் சத்குரு என அழைக்கப்படுகிறார். அதே நேரத்தில், அவர் உங்கள் அனைவருக்கும் இணையான நிலையில் இருக்கிறார். அவர் உங்களைப் போலவே இருக்கும் அதே வேளையில், அனைத்து நிலைகளிலும் அதீத உணர்வு நிலையில்** (SUPERCONSCIOUS STATE) **இருக்கிறார்.**

பாபா அரிதாகவே அன்பர்களைத் தனது ஆரத்தியை நிகழ்த்த அனுமதித்தார், ஆனால் அன்று மாலை 4:15 மணிக்கு, மதுசூதனன் சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இசையமைத்த ஹிந்தி ஆரத்தியை (திவ்ய சனாதன…DIVYA SANATANA) அனுமதித்தார். சகவாசக் குழுவைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, பாபா அரன்காவ்ம் கிராமத்தின் அருகில் அமைந்த குடும்பக் குடியிருப்பில் மஸ்த் அலி ஷா மற்றும் முஹமதைப் பார்க்கச் சென்றார்.

ஒரு மரத்தின் கீழ் தூசி நிறைந்த தரையில் அமர்ந்து, பாபா, காடேக்கரிடம் மராட்டி ஆரத்தியை நிகழ்த்தக் கோரி, பின்னர் அவரிடம் குஜராத்தி ஆர்த்தியைத் தொடர்ந்து மொழியுமாறு கூறினார். மண்டபத்திற்கு வெளியே பாபாவைப் பின்தொடர்ந்து சென்றவர்களில் பெரும்பாலான அன்பர்களைப் போலவே, வெறுங்காலுடன் நடந்ததால் காடேக்கரால் அதை சரியாகப் பாட முடியவில்லை. வயல்கள் மற்றும் தரிசு நிலங்களில் முட்கள், கூர்மையான புல் ஆகியவை சிதறிக்கிடந்ததால், அவை கால்களைத் துளைத்தன; காடேக்கர் நிற்க முடியாமல் சிரமப்பட்டார். பாபா அந்த முட்களை அகற்ற வாய்ப்பளிக்காமல்

ஒன்றன் பின் ஒன்றாக ஆரத்தியை கேட்டுக்கொண்டிருந்த வேளையில், இரண்டாவது ஆரத்தியின் போது அவர் சிரமப்படுவதையும் தடுமாறுவதையும் மிகவும் ரசித்ததாகத் தோன்றியது. பாபா உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறி, ஒரு வயல்வெளியைக் கடந்து, வேறொரு மரத்தின் கீழ் அமர்ந்தார். சகவாசக் குழு நடக்கும்போது அதிக முட்களை அப்புறப்படுத்தினாலும், இவை அனைத்தும் அவர்களுக்கு அன்பின் நினைவாக இருந்தன, ஏனெனில் அவர்கள் விரைவில் மெஹராபாத்திலிருந்து புறப்படத் தயாராக இருந்தனர் மற்றும் முட்கள் தங்கள் அன்பான இறைவனை நினைவுகூரும் ஒரு வழியாக அமைந்தது.

மிகுந்த சிரமத்துடன், காடேக்கர் குஜராத்தி ஆர்த்தியைப் பாடி முடித்த அவ்வேளையில், பாபா, சகவாசக் குழுவிற்கு வலியுறுத்தி கூறினார்: "**என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள், எப்பொழுதும் உங்களுடன் என்னை வைத்துக் கொள்ளுங்கள்!**" பலர் கண்ணீர் சிந்தினர், ஒவ்வொருவர் மீதும் பாபா தமது இறுதிப் பார்வையை சுழற்றி, காரில் அமர்ந்தார், அது மாலை 4:45 மணிக்கு மெஹராஸாத்தை நோக்கி விரைந்தது.

உள்ளம் நெகிழ்ந்த சகவாசக் குழு, பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்த காரை சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றது. அனைவரும் புறப்படுவதற்கான ஆயத்தத்தைத் தொடங்குமாறு மண்டலி அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியிருந்தது. அவர்களை ரயில் நிலையத்திற்கு ஏற்றிச் செல்ல பேருந்துகள் தயாராகிக் கொண்டிருந்தன. தெய்வீக அன்பானவரிடமிருந்து பிரிந்து செல்லும் வருத்தத்தில் அவர்கள் இரவு உணவை உண்ணாமலேயே செல்ல வேண்டியிருந்தது. மராட்டி சகவாசக் குழுவில் பெரும்பாலானோர் அன்றும், சிலர் மறுநாள் காலையிலும் புறப்பட்டுச் சென்றனர்.

பாபா மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: "**இதுபோன்ற சகவாசக் குழுவை நான் மீண்டும் சந்திக்க மாட்டேன். அவர்களின் பிரிவின் சோகத்தைக் காண்பது மிகவும் கடினம்.**"

இதற்கிடையில், மஸ்த் குத்தாவாலா அஹமதுநகரிலிருந்து மெஹராபாத்திற்கு மீண்டும் அழைத்து வரப்பட்டார்; அவரது புதிய 'செல்லப்பிராணிகளுக்கு' பால் மற்றும் உணவு வழங்கப்பட்டது.

1955 டிசம்பர் 3 சனிக்கிழமையன்று பாபா மெஹராபாத்திற்கு வருவதாகத் திட்டம் இல்லை என்றாலும், அவர் குத்தாவாலா மஸ்தை சந்திக்க, காலை 8:00 மணிக்கு வந்தார். மஸ்த், பாபாவுக்காகக் காத்திருந்தார், பாபாவைத் தனது அறையில் பார்த்ததும், சாஷ்டாங்கமாக அவர் பாதங்களில் விழுந்தார். பாபா அவரைத் தூக்கி அவர் அருகில் அமர வைத்து தழுவியபோது, வயதான மஸ்த் அழுதார். நண்பகல் ரயிலில் நாக்பூருக்கு அவரைத் திரும்ப அழைத்துச் செல்லும்படி பாபா, ஷெர்லேக்கருக்கு அறிவுறுத்தினார்.

பாபா, குத்தாவாலாவைப் பற்றி குறிப்பிட்டார், "**இந்த மஸ்த் கடவுளுடன் ஐக்கியமாக ஏங்கிக்கொண்டிருக்கிறார், அவருடைய தீவிர அமைதியற்ற தன்மையைக் கண்டு நான் அவரைப் பார்க்க வந்தேன்.**"

சுமார் 10:15 மணியளவில், பாபா மண்டபத்திற்குள் நுழைந்தார். சகவாசக் குழுவில் ஒரு சிலர் இன்னும் அங்கேயே இருந்தனர். பாபா, காடேக்கரிடம், "**ஏன் நேற்று நீங்கள் செல்லவில்லை?**" என வினவினார்.

அதற்கு காடேக்கர், "நான் இன்று செல்கிறேன்" என்றார். (உண்மையில், அவர் அதிகாலையில் ரயில் நிலையத்திற்குச் சென்றிருந்தார், ஆனால் பாபா மெஹராபாத் வந்ததைக் கேள்விப்பட்டதும் அவர் திரும்பி வந்தார்.)

"**நேற்று எனது ஆரத்தியை நிகழ்த்தும் போது, உங்கள் கவனம் ஆரத்தியில் இருந்ததா? அல்லது உங்கள் கால்களில் இருந்த முட்கள் மீது இருந்ததா?**"

"ஆரத்தி" என்றார் காடேக்கர்.

பாபா, கரங்களைக் கூப்பி, காடேக்கருக்கு நமஸ்காரம் செலுத்தினார். பாபாவின் மனநிலையைப் பயன்படுத்தி, காடேக்கர் வேறொரு விஷயத்தை எடுத்துரைத்தார்: "எனக்கு இப்போது 51 வயதாகிறது, எனது ஓய்வூதியத்துடன் நான் ஓய்வு பெற இன்னும் நான்கு ஆண்டுகள் உள்ளன. நான் உடனடியாக பணியிலிருந்து விலகி உங்களுடன் இணைய விரும்புகிறேன்."

பாபா இவ்வாறு பதிலளித்தார், "1957 **பிப்ரவரி** 15 **வரை, எனக்குக் கீழ்ப்படியுங்கள்; அதன் பின்னர், என்றென்றும் என்னுடன் இருக்கும் விதத்தில் நான் உங்களை அழைக்கிறேன்.**" பாபாவின் வார்த்தைகள் உண்மையானதை அன்பர்கள் பின்பு காண்பார்கள் - ஆனால் அதை காடேக்கர் கற்பனை செய்திருக்க முடியாது.

மதிய உணவுக்குப் பின்னர், அனைவரும் மண்டபத்திற்கு அழைக்கப்பட்டனர். சகவாசக் குழுவில் ஒரு சிலர் மதியம் ரயில்களில் புறப்பட்டுச் சென்றனர். பாபா சில நகைச்சுவையான சம்பவங்களுக்கு செவிமடுத்து, பின்பு மன்ஸில்-எ-மீமில் அவர் மண்டலியை கடுமையாக நடத்திய நாட்களையும், அவர்கள் அவரைப் பார்த்து எவ்வளவு பயந்து நடுங்கி இருந்ததையும் நினைவு கூர்ந்தார். "**அது மிகவும் மகிழ்ச்சியான நாட்கள்!**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

மதியம் 12:30 மணிக்கு தேநீர் அருந்துவதற்காக மண்டபத்திலிருந்து செல்லும் முன், பாபா கூறினார், "**நான் இரண்டு தேக்கரண்டி தேநீர் அருந்த பதினைந்து நிமிடங்கள் எடுக்கும்! முன்பு, நான் தேநீர் மற்றும் புகையிலையோடு வெற்றிலையும் உண்டு வாழ்ந்தேன், ஆனால் இப்போது நான் அவற்றை நிறுத்திவிட்டேன்.**"

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**இன்று பிற்பகல் புறப்படுபவர்கள் எனது அறைக்கு வந்து பிரியாவிடையுடன் எனது அரவணைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; அதன் பின்னர் என்னிடம் ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது.**"

மதியம் 1:30 மணிக்கு, பாபா மண்டலியை அழைத்தார். நானா கேர், நரிமன், மெஹர்ஜி, கிஷன் ஸிங், கோஹியார், ரங்கோலே, பால் நாத்து, பங்க்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த அன்பர்கள் அனைவரும் ஒருமாதத்திற்கு முன்னதாகவே, குறிப்பாக சகவாச ஏற்பாடுகளில் உதவுவதற்காக மெஹராபாத்திற்கு வந்திருந்தனர். பாபா ஒவ்வொருவரையும் ஆரத்தழுவி, ஃபெராமுக்கு ஒரு சிறப்பு அரவணைப்பை வழங்கினார், அவர் சகவாச நாட்குறிப்பை எழுதிக்கொண்டதோடு, தட்டச்சு செய்து மேலும், மெஹராபாத்தில் அலுவலக வேலைகளில் ஆதி சீனியருக்கு உதவியாக இருந்தார்.

பாபா, தானாகவே முன்வந்த சேவகர்களின் பணியால் மகிழ்ச்சியடைந்து ஒவ்வொருவரையும் தழுவினார். அடுத்த நாள் அவர்கள் தத்தமது இல்லங்களுக்குச் செல்லவிருந்தனர். அரன்காவ்ம் தொழிலாளர்கள் திரும்பிச் செல்வதற்கு முன்னால், பாபா அவர்களைப் பாராட்டி அரவணைத்தார்.

ஃபிரான்சிஸ் பிராபஸோன் நவம்பர் 1ஆம் தேதி முதல் மெஹராபாத்தில் தங்கியிருந்து, தெய்வீக மதுபானத்தைப் பெருமளவில் அருந்திக் கொண்டிருந்தார். ஆந்திரா சுற்றுப்பயணத்திற்குப் பின்னர், 'இறை மனிதனுடன் பயணம்' (JOURNEY WITH GOD) என்ற தலைப்பில் அவரது அனுபவத்தை விவரித்தார். இப்போது பாபா அவரை மீண்டும் ஆஸ்திரேலியாவிற்குச் திரும்பிச் சென்று, சகவாச நிகழ்வுகளைக் குறித்த விளக்கங்களை எழுதுமாறு அறிவுறுத்தினார், அது 'இறை மனிதனுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) என்ற புத்தமாக உருவெடுத்தது. பிராபஸோன் டிசம்பர் 7ஆம் நாள் மெஹராபாத்திலிருந்து புறப்பட்டு, ஆஸ்திரேலியா திரும்பும் முன்பு மும்பையில் ஒரு வாரம் தங்கினார்.

மராட்டி சகவாசக் குழு புறப்பட்டுச் சென்ற பிறகு, பாபா தினமும் மெஹராஸாத்திலிருந்து மெஹராபாத்திற்கு வரத் தொடங்கினார்; மேலும் அங்குள்ள பணி அனைத்தையும் விரைவில் முடிக்குமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார். 11ஆம் தேதி சத்தாராவிற்குத் திரும்புவதாக நிர்ணயிக்கப்பட்டு, பந்தல்களைப் பிரித்து, அப்பகுதியை சீர்படுத்தி, பாத்திரங்களை சுத்தம் செய்து, வாடகை கட்டில், மெத்தை, போர்வைகளைத் திருப்பித் தருவது போன்ற பணிகள் முழுவீச்சில் நடந்தன. பாவ் கல்சூரியும் பிற அன்பர்களும் இந்தப் பணியை மேற்பார்வையிட்டனர், விஷ்ணுவும் ராம்ஜூவும் கணக்கு வழக்குகளை கவனித்துக் கொண்ட வேளையில், பெண்டு, பாதிரி இருவரும் அனைத்தையும் மேற்பார்வையிட்டனர்.

1955 டிசம்பர் 5 திங்கட்கிழமை அன்று பெண்மணிகளுக்கான சகவாச நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப்பாளர்களுக்கு தொலைத்தந்திகள் (டிசம்பர் 2ஆம் நாள் பாபாவால் எடுத்துரைக்கப்பட்டது) அனுப்பப்பட்டன:

**பெண்மணிகளுக்கான சகவாச நிகழ்ச்சிக்காக ஏறக்குறைய 20 இடங்களுக்குச் செல்வது என்பது தீர்மானிக்க முடியாத ஒன்று, ஏனெனில் நான் வெளியே செல்லவிருக்கும் ஓராண்டுக்குத் தேவையான ஏற்பாடுகள்**

**இன்னும் நிறைவடையவில்லை; அதற்காகத் தேவைப்படும் (நிதி) ஒதுக்கீடு இன்னும் உறுதி செய்யப்படவில்லை. டிசம்பர் இறுதிக்குள் முன் ஏற்பாடுகள் அனைத்தும் செய்ய முடிந்தால், ஜனவரி மாதத்தில் சகவாச நிகழ்ச்சிகள் சாத்தியமாகும். நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டால், கவலைப்பட வேண்டாம், ஆனால் அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய எனது செய்தியை பரப்ப தீவிரமாக உழைக்கவும். நிகழ்ச்சிகள் ரத்துசெய்யப்பட்டாலும் இல்லாவிட்டாலும், என்னுடைய சகவாசிகள் அனைவருக்கும் என் அன்பின் மூலம் தெரிவிக்கப்பட்ட அனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இதைத் தெரிவிக்கவும்.**

அவரது குஜராத்தி, தெலுங்கு, ஹிந்தி மற்றும் மராட்டி அன்பர்களுக்கு, மெஹர் பாபாவின் சகவாசத்தில் கழித்த நாட்கள் மகிழ்ச்சியான, அற்புதமான வாரமாக இருந்தது. ஆனால், பாபாவைப் பொறுத்தவரை, மணிக்கணக்கில் தரிசனம் வழங்கி, நூற்றுக்கணக்கான தனிப்பட்ட நேர்காணல்களில் பங்கெடுத்து, இத்தனை நாட்கள் சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டது, ஒரு களைப்பான பணியாக இருந்தது - ஏனெனில், அவருடைய அன்பின் மழையால், அவரது அரவணைப்பில் வந்த அனைவரின் நல்ல மற்றும் தீய மனப்படிவங்களை தம்மீது எடுத்துக் கொண்டார். இந்த சகவாச நிகழ்ச்சிகள் அவரது அன்பர்களுக்கு அளப்பரிய ஆனந்தத்தை அளித்த அதே வேளையில், அன்பான பாபாவிற்கு மாபெரும் துன்பத்தை அளித்தன. நான்கு சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்களுக்குத் தெரியாமலேயே, ஒவ்வோர் இரவு முழுவதும், பாபா அமைதியின்றி காணப்பட்டார்.

அவரை கவனித்தவர்களுக்கு, அவரது உடலின் ஒவ்வொரு திசுக்களும் துன்பம் நிறைந்ததாகத் தோன்றியது. ஆயினும், பாபா மெஹராபாத்திற்கு வரும் வேளையில் ஒளிரும் முகத்துடன் மகிழ்ச்சியாக காணப்பட்டார் என்பதால், அவரது அருகாமையில் இருப்பவர்களைத் தவிர வேறு எவருக்கும் இதைப் பற்றி சிறிதும் தெரியாது.

காலம் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு எடுத்துரைத்தது: “பாபா, அவரது சகவாசத்தை மக்களுக்கு வழங்குவது, அதுவும் ஒரு முழு மாதத்திற்கு, என்பது சிலுவையில் அறையப்படுவதற்கு நிகரானது. 1955ஆம் ஆண்டின் மெஹராபாத் சகவாச நிகழ்ச்சி உண்மையிலேயே ஒரு வரலாற்று நிகழ்வு மட்டுமின்றி அவதார புருஷரின் எல்லையற்ற கருணை மற்றும் அன்பின் முக்கிய எடுத்துக்காட்டு. இதில் கலந்துகொண்டவர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்!”

மெஹர்ஜி மேற்கத்திய நாடுகளில் வாழும் அன்பர்களுக்கு மிகவும் பொருத்தமான முறையில் எழுதியிருந்தார்: “இவ்வளவு நீண்ட காலத்திற்கு, பாபா, இத்தனை பேருக்கு இந்த அளவுக்கு வழங்கியதில்லை.”

நான்கு சகவாச நிகழ்ச்சிகளின் போது, ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஃபெராம், கிஷன் ஸிங் இருவரும் பாபாவின் வார்த்தைகளைப் பதிவு செய்து கொண்டிருந்தனர்; பின்னர் அதை ராம்ஜூ தொகுத்து 'கடவுளின் சகவாசம்' (THE COMPANY OF GOD) என்ற தலைப்பில் ஒரு சிறு புத்தகமாக எழுதினார். டான் ஸ்டீவன்ஸும், 'மானிடனே கேளுங்கள்' (LISTEN, HUMANITY) என்ற புத்தகத்தில் இந்தக் கருப்பொருளைப் பயன்படுத்தினார். ஒரு மாத கால நிகழ்ச்சியை சுருக்கமாக ராம்ஜூ வர்ணித்தார்:

கடவுள் மட்டுமே கடவுளுடன் தோழமை உணர்வுடன் பழக முடியும், ஆனால் பாபா மிகவும் சுதந்திரமாகவும் முழுநிறைவுடனும் வழங்கிய சகவாச காலகட்டத்தில், அழைக்கப்பட்ட அனைவருக்கும் வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும், அதிலிருந்து மிகப்பெரிய பங்கைப் பெறவும், பாபா செய்யாதது எதுவுமில்லை. நான்கு வெவ்வேறு குழுக்களின் நடுவில், பாபா அமர்ந்து பணிபுரிந்தார், விளையாடினார், வணங்கினார், செவிமடுத்தார், பிரார்த்தனை செய்தார், நடந்தார், 'பேசினார்' அத்துடன், அரிதான தருணங்களில் தம்மைத் தானாக, இயற்கையாக வழிபட அனுமதித்தார்... இருந்தும் ஒவ்வொரு வாரமும் இதர வாரத்திலிருந்து வேறுபட்டது, வித்தியாசமானது.

சகவாச வாரங்களைப் பற்றிய ஒவ்வொரு சிறிய விஷயமும், பெரிய ஏற்பாடுகளும் பாபாவின் தனிப்பட்ட கவனத்தைப் பெறாமலில்லை. அவர் முழு ஏற்பாடுகளுக்கான மிகச்சிறிய விஷயங்களைக் குறித்த அறிவுறுத்தல்களை வழங்கவில்லை, ஆனால் அவ்வப்போது தனிப்பட்ட முறையில் அவற்றை சரிபார்த்தார், மேலும் தேவையான இடங்களில் தனது சொந்த மேற்பார்வையின் கீழ், வேண்டிய அனைத்தையும் நிறைவேற்றினார்.

தாராளமாக கலந்து, இணைபிரியாமல் இருந்து, நகர்ந்து, அமர்ந்து தமது சகவாச வாழ்க்கை வாழ்பவர்களுடன், பாபா, தமது ஒப்பற்ற, உயிர்துடிப்பு மிக்க சைகைகள் மூலம் எடுத்துரைத்தது, சிறிய பேச்சு மற்றும் பொதுவான உரையாடல் வடிவத்தில் இருந்தது. அவர் எந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்திலும், ஒரே நேரத்தில் சில நிமிடங்களுக்கு மேல் ஒட்டிக்கொண்டதில்லை. அவர் அன்பைப் பற்றி விளக்கத் தொடங்கிய அடுத்த கணம், சளி மற்றும் இருமல் விஷயத்திற்குத் தாவி விடுவதைக் காண முடிந்தது. இடையிடையே, அவர் தமது சுய வாழ்வைப் பற்றிய சில சுவாரஸ்யமான சம்பவங்களை நினைவுகூருவதும், உடனடியாக அன்பின் தலைப்புக்குத் திரும்பிச் செல்வதும், அது முடிவடையும் முன்னரே, எவரிடமாவது கதை சொல்லச் சொல்வதும் இடைவிடாமல் தொடர்ந்தது.


அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதைத் தீவிரமாக கவனிக்குமாறு, அங்கிருந்த அனைவருக்கும் கடுமையான எச்சரிக்கையை விடுத்த அடுத்த சில நிமிடங்களில், அவர் அனைவரையும் சிரிப்பு ஆரவாரத்தில் மூழ்கச் செய்தார். ஒரு குழுவில் சற்றே உணர்ச்சி தோய்ந்த ஒருவரை கண்ணீருடன் போராடச் செய்வதும், ஒத்திசைவின்றி திணறடிக்கச் செய்வதும் பாபாவின் சிறுபிள்ளை விளையாட்டாக இருந்தது.

அனைத்து சகவாச நிகழ்வுடனும், பாபா ஒவ்வொரு குழுவிற்கு முன்பும், ஒவ்வொரு வாரமும், முக்கியமான எந்த ஒரு விஷயத்தையும் தவறவிடாமல், அதே தலைப்புகளையும் பாடங்களையும் திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார்; ஆனால் அவர் எப்பொழுதும் வித்தியாசமான முறையில், வெவ்வேறு வார்த்தைகளில், வெவ்வேறு சூழல்களில் அவ்வாறு செய்தார். 'அன்பு', 'கீழ்ப்படிதல்', 'சரணாகதி' போன்ற வார்த்தைகள், வெறும் வார்த்தைகளாக இல்லாமல், அவற்றை வாழும் அளவிற்கு பாபாவால் விளக்கப்பட்டது என்பதுதான் நிதர்சனம். அவர் அவற்றை உயிரோட்டம் மிக்க பொருட்களாக ஒலிக்கச் செய்தார்: வாழ்ந்தவை, வாழக்கூடியவை மற்றும் வாழ வேண்டியவை. அவர் விஷயங்களைத் தெளிவுற விளக்கினாலும், அதே மூச்சில், அவை விளக்க முடியாதவை என்று எடுத்துரைப்பது வழக்கம்.

சகவாச நிகழ்வுகளின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இறுதியில், அது பாபாவின் சகவாசம் என்று அவரது வாழ்நாள் முழுவதும் நிரூபிக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவிற்கும், பாபாவின் சகவாசத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே இருந்தபோதிலும், பாபா, அவரது சிறுவயது முதல் தற்போது 'சேவகத்தில் லாவகம்' (MASTERY IN SERVITUDE) என்ற அடிப்படை கொள்கையில் தேர்ச்சி பெறுவது வரை மற்றும் அவரது இறுதி மூச்சு வரை தமது வாழ்க்கையைப் பற்றிய ஒவ்வொரு யோசனையையும் வழங்க முடிந்தது... பாபா அவருடன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தவர்கள் மற்றும் அவரைப் பற்றி நன்கு அறிந்தவர்களைப் போலவே, அனைவரையும் உருவாக்கினார்.

ஒரு சிலரால் அல்லது பலரால், செல்வந்தர்கள் மற்றும் ஏழைகள், வயதானவர்கள், இளைஞர்கள், வலிமையான, ஆரோக்கியமான, பலவீனமான மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள், கல்வியறிவு உடையவர், கல்வியறிவற்றவர், கல்வியாளர்கள் மற்றும் அறிவுஜீவிகள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கைவினைஞர்கள், கலைஞர்கள், வாராந்திர சபைகளில் கலந்துகொண்ட கவிஞர்கள், எழுத்தாளர்கள், துறவிகள், இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், சீக்கியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், பங்கேற்றவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக மனிதகுலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

உண்மையான அர்த்தத்தில் சகவாசம் என்பது சாதாரண, அப்பட்டமான மனித இனத்துடன் பரிபூரண, நிர்வாண தெய்வீகத்தின் ஓர் அற்புதமான சங்கமம். இது வரம்பற்ற தெய்வீகம் வரம்புக்குள்ளான மானிடனுடன் கூடும் கூட்டம் அல்லது 'மேளா' என்று கூறலாம். 'பலவீனங்கள்' தங்கள் 'பலத்தில்' மூழ்கிய தருணங்களைக் கொண்டிருக்க, இது கடவுளின் ஒரே அற்புதமாகிய முழுப் படைப்பையும் உருவாக்கியது. அனைத்து பாவ புண்ணியங்களும் தற்போதைக்கு ஒன்றுமில்லாத நிலையை எண்ணி வெட்கப்பட்டன... எல்லையில்லா வாழ்வின் இறைப்பெருங்கடலாக, இறைவன் ஒவ்வோர் உயிரையும் பிரிக்க முடியாத ஒரு முழுமையுடன் இணைக்கிறார் என்பதை ஒருவர் உணரக்கூடிய தருணங்களாக இருந்தன...



**ஏகாந்தவாச மலை** (SECLUSION HILL)**, 1955**



கடவுளை

நேசியுங்கள்,

அப்போது,

உங்கள்

சுயமே

கடவுள்

என்பதைக் கண்டு

கொள்வீர்கள்.



-அவதார் மெஹர் பாபா